
வல்லத்து
இளவரசி
விக்கிரமன்

# வல்லத்து இளவரசி

கலைமாமணி விக்கிரமன்

# என்னுரை

இன்றைய சமூக நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் வருங்காலத்தில் சரித்திரச் சான்றுகளாக மாறிவிடுகின்றன. உப்புச் சத்தியாக்கிரகமும், காந்தி மகானின் அறப்போரும், நேருஜியின் சமாதானத் தூதும், லால்பகதூர் சாஸ்திரி ருஷ்ய நாட்டிற்குச் சென்று அங்கே உயிர் துறந்ததும், சீனப் படையெடுப்பும், வங்கத்தில் நடந்த அரசியல் மாற்றங்களும், அறிஞர் அண்ணாவின் மறைவு குறித்து லட்சோப லட்ச மக்கள் துயரத்தில் ஆழ்ந்ததும் இன்று மறக்க முடியாத வரலாற்று நிகழ்ச்சிகளாகி விட்டன.

அதே போன்று தமிழகத்தில் அரசாண்ட முடியுடை மூவேந்தர்கள் காலந்தொட்டு நேற்றைய ஆங்கிலேயர் ஆட்சி வரை நடை பெற்றவற்றை வரலாற்று மதிப்போடு நோக்குகிறோம்.

வரலாற்றுக் களஞ்சியத்தை, பழங்காலச் சம்பவங்களை ஆவலுடன், உணர்ச்சியுடன் படிக்க யாருக்குத்தான் தோன்றாது? பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அரச குடும்பத்து ஏற்றத் தாழ்வுகளையும், காதல் போர்களையும், வளர்ச்சி - அழிவுகளையும், இப்போது படிக்கும்போது, அச்சம்பவங்கள் ஏதோ நம் கண் எதிரே நடைபெறுவன போன்ற பிரமை நமக்கு ஏற்படும்.

விஜயநகரப் பேரரசர்களின் பிரதிநிதிகளாய்த் தமிழகத்தில் ஆட்சிப் புரியத் தொடங்கிய நாயக்க மன்னர்கள் மதுரையையும், தஞ்சையையும் தலைநகர்களாகக் கொண்டிருந்தனர். இரு அரசர்களும் தங்களுக்குள் விரோத மனப்பான்மையை வளர்த்துக் கொண்டனர். அவர்களுள் மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கரும், தஞ்சையை ஆண்ட விஜயரகுநாத நாயக்கரும் பெரும் விரோதம் கொண்டிருந்தனர். சொக்கநாத

# பதிப்புரை

சரித்திர எழுத்துகளால் சரித்திரம் படைத்த, முதுபெரும் எழுத்தாளர் விக்கிரமன் அவர்களின் இந்த 'வல்லத்து இளவரசி'யை வாசிக்கும்போது தமிழகத்தில் வேரூன்றி இருந்த விஜய நகரப் பேரரசு நம் கண்முன்னே ஜீவசித்திரமாக விரிகிறது. மண்ணையும் பெண்ணையும் மையம் கொண்டு எத்தனை யுத்தங்களால் சிவந்திருக்கிறது நமது தமிழகம் என்று வியப்பு மேலிடுகிறது.

சரித்திரக் கதைகள் இன்றைய இலக்கியச் சூழலில் வாசகர்களுக்கு அன்னியமாகிவிட்டதுபோல் தோன்றினாலும் இந்த வசீகரமான வரலாற்றுப் படைப்பு அழுத்தமாக நமது சிந்தையில் பதிகிறது. எளிமையும் கம்பீரமுமான, தனித்துவமிக்கத் தமிழ் நடையில், நூறாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களைச் சிற்பங்களின் நுட்பங்களுடன் தத்ரூபமாக வடித்திருக்கிறார் விக்கிரமன் அவர்கள்.

காலங்களின் பிரளயத்தில் கபளீகரமானது போக எஞ்சிய சரித்திர நினைவுச் சின்னங்களாக தமிழகமெங்கும் வீற்றிருக்கும் அரிய கலைநுட்பம் வாய்ந்த ஆலயங்கள், சிலைகள், சிற்பங்கள் போன்று கம்பீரமான தமிழ் இலக்கியத்தின் சாட்சியமாக, காலங்களைக் கடந்து விக்கிரமன் அவர்களின் இந்நாவல் விளங்கும் என்ற பெருமிதத்துடன் இப்படைப்பை வெளியிடுகிறேன்.

மகிழ்வுடன்,

**எஸ்.ஆர். சுவாமிநாதன்**

நாயக்கர், தஞ்சை மன்னரின் மகள் மோகனாங்கியை மணக்க விரும்பினார். ஆனால், தஞ்சை மன்னர் அதற்கு இசையவில்லை. கடைசியில் இரண்டு மன்னர்களிடையே போர் ஏற்படுகிறது. போரில் தஞ்சை மன்னர் தோல்வியுறுகிறார். தஞ்சை மாளிகையையும் அவர் தானே அழித்து உயிர் விடுகிறார். இவை வரலாற்று நிகழ்ச்சிகள். வரலாற்று நிகழ்ச்சிகளை அப்படியே கூறுவது சரித்திரப் பாடப் புத்தகம். வரலாற்று நிகழ்ச்சிகளோடு கற்பனை கலந்து எழுதுவது வரலாற்றுப் புதினம்.

வரலாற்றுப் புதினத்தில் எழுதுபவரின் கற்பனை முக்கிய இடம் வகிக்கிறது. அரச குடும்பத்தவர்கள் மட்டுமே பாத்திரங்களாக விளங்குவதில்லை. மன்னருக்கு உதவும் அமைச்சர், தளபதி, விசுவாசமுள்ள படையாட்கள், காவல்காரர்கள், பணிப்பெண்கள், துரோக உள்ளம் படைத்தவர் தொழில் புரிபவர்கள் என்று பல கதைப் பாத்திரங்கள் கதை வளர உறுதுணையாக இருப்பார்கள். வரலாற்று உண்மை நிகழ்ச்சிகளுக்கு மாறுபடாமல் கற்பனையைக் கலந்து எழுதும்போது ஓர் சுவையான வரலாற்றுப் புதினம் உருவாகிறது.

'வல்லத்து இளவரசி'யை அவ்வாறே உருவாக்கினேன்.

பஞ்சு பழமையானது. அதிலிருந்து நூற்கப்பட்ட நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையின் அழுத்தம், தெளிவு, நேர்த்தி இவற்றிற்கு நான் பொறுப்பு.

மோகனாங்கி கதாபாத்திரத்தை எழுதும்போது நான் பாத்திரத்தோடு பாத்திரமாக ஒன்றிவிடுவேன். கதையின் தலைவராக சொக்க நாதர் திகழலாம். ஆனால், துணைப் பாத்திரங்களாகத் திகழ்பவர்கள் இந்த நாவலில் முக்கிய இடம் வகிப்பதைக் காணலாம்.

தமிழ் அன்பர்கள் இந்தப் புதினத்தை ஆதரிப்பர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

# வல்லத்து இளவரசி

## 1. மதுரையினின்று வருகிறேன்

முருகன் திருக்கோயில் கொண்டிருக்கும் சுவாமி மலையில் பங்குனி உத்திரத் திருநாள். அந்தச் சிறிய ஊர் விழாக் கோலம் கொண்டிருந்தது. திருவிழாவைக் காண அருகிலிருந்த பல ஊர்களிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெள்ளம் போல் திரண்டு வந்து கொண்டிருந்தனர்.

வித விதமான கடைகளும், கடைகளில் பண்டம் விற்பவர் இடும் விசித்திர ஒலியும் எங்கும் நிறைந்திருந்தன. பொய்க்கால் குதிரை ஆட்டமும், பாவைக் கூத்தும், ஜால வித்தையும் மக்களை மகிழ்விக்க ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தன. மா, பலா, வாழை எனும் முக்கனி விற்கும் கடைகளும் பல வண்ணத் துணிகள் விற்கும் கடைகளும் எங்கும் நிறைந்து, நடப்பவர்களுக்குக் கூட இடம் இன்றி வீதியை அடைத்துக் கொண்டிருந்தன.

வெள்ளை நிறத்தவர்களான டச்சுக்காரர்கள் தங்கள் நாட்டுப் பண்டங்களைக் கொடுத்து அதற்குப் பதில் மிளகு, இலவங்கம், ஏலம், பாக்கு போன்ற வாசனைப் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சை முண்டாசு கட்டிய ஆசாமிகள் சிலர் உரத்த குரலில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தனர்.

வெயிலின் கடுமை அதிகமாகத் தானிருந்தது. ஆங்காங்கே சிறுசிறு ஓலைப் பந்தல்கள் போட்டு தாகத்துக்கு நீர் மோரும், பானகமும் வழங்கிக் கொண்டிருந்தார்கள் சில தர்மசீலர்கள்.

கோயிலில் முழங்கிக் கொண்டிருந்த எக்காளத்திற்கும் நாதஸ்வரத்திற்கும் மேலாக, 'வேல், வேல்! வீர வேல்! வெற்றி வேல்! சூரவேல்!' என்ற பக்தி கோஷங்களும், 'முருகா! முருகா!' என்ற பரவச ஒலியும் கலந்து எழுந்து கொண்டிருந்தன. காவடியைச் சுமந்து வந்த பக்தர்கள் ஆவேச நிலையில் ஆடி ஆடிக் கண்ணீர் மல்கக் கோயிலுக்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

பற்பல ஊர்களிலிருந்தும் மக்கள் சாரி சாரியாக வந்து கொண்டே இருந்தனர், ஆடவரும், பெண்டிரும், பாலகருமாக. அவர்கள் முகத்தில் களிப்பும், பெருவகையும் குடிகொண்டிருந்தன. அவர்கள் நிலத்தை நம்பி வாழ்பவர்கள். நிலம் ஒருபோதும் அவர்களை ஏமாற்றியதில்லை. கிடைத்ததைக் கொண்டு அவர்கள் அமைதியாக வாழ முயன்றனர் என்றாலும் அவர்களை வறுமை பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தது. தேர்த் திருவிழா என்றவுடன் அவர்கள் கலக்கம் மறந்து புதுமையான உணர்வுடன் குதூகலமாகக் கூடினர். தலையில் வேப்ப எண்ணெய் நிறையத் தடவி இழைய இழைய வாரியிருந்தனர். முகத்திலே மஞ்சள் பூசி, அதிலே பெரிய குங்குமப் பொட்டு இட்டிருந்தனர். எடுத்து முடிந்த கூந்தலில் கட்டு மல்லிகை மலர் குலுங்கியது. பெண்கள் சூடியிருந்த மலரின் மணமும் புதுப் புடைவையின் சரசரப்பும், வேப்பெண்ணெய் வாசனையும் ஒன்று கலந்து ஒரு கதம்ப மணத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தன.

அந்த ஜனக் கூட்டத்தின் நடுவே மிகுந்த பிரயாசையோடு அந்த இளைஞன் குதிரை மீது வரவேண்டியிருந்தது. குதிரை சில சமயங்களில் மக்கள் ஆரவாரத்தைக் கண்டு மிரண்டது. அப்படியும் இப்படியும் திரும்பிப் பலமாகக் கனைத்தது. கால்களை உயரத் தூக்கிப் பயமுறுத்தியது.

"ஏய்யா! கூட்டத்திலே ஜனங்க மிரளுவாங்களில்லே? இறங்கித்தான் போயேன்!" என்று குரல் கொடுத்தான் ஒருவன். அதுவும் சரியாகத்தான் தோன்றியது அந்த இளைஞனுக்கு. குதிரையினின்று கீழே குதித்துக் குதிரையை நடத்திக் கொண்டு கூட்டத்தினின்று மெல்ல மெல்ல விலகித் தனி இடத்துக்கு அவன் வந்து விட்டான்.

அவனைக் களைப்பு ஆட்கொண்டது. நா வறண்டு விட்டது. ஒரு வாய் தண்ணீர் குடிக்கத் துடித்தான். இங்கு எங்கோதான் ஆற்றங்கரை இருக்க வேண்டும் என்று எண்ணிய அவன், வழி கேட்டுக் கொண்டு காவிரி ஆற்றங்கரையை அடைந்தான். ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு குடும்பம் குடும்பமாகத் தாங்கள் கொண்டு வந்த ஆகாரத்தை உண்டு கொண்டிருந்தனர் விழாக் காண வந்த வெளியூர்க்காரர்கள்.

குதிரையை மரக்கிளை ஒன்றில் கட்டிவிட்டு, காவிரி ஆற்றில் இறங்கி முகத்தில் இரண்டு கை குளிர்ந்த நீரைத் தெளித்துக் கொண்ட பிறகுதான் அவனுக்குத் தெம்பு பிறந்தது. சுற்று முற்றும் நோக்கினான் அவன். அப்போதுதான் கரையில் குதிரை கட்டப்பட்டிருந்த இடத்தருகே கிழவர் ஒருவரும், இளம் பெண் ஒருத்தியும் மெல்ல வந்து உட்காருவது தெரிந்தது.

அந்தப் பெண் தலையிலிருந்து கூடையை மெல்ல இறக்கி வைத்தாள்.

இளைஞன் தலைப்பாகையை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டே மரத்தடியை நோக்கி நடந்தான். கிழவர் எதிரே அந்த இளம் பெண் குறுத்து வாழை இலையைப் போட்டுக் கூடையிலிருந்த கலயத்தினின்று சோறெடுத்து வைப்பது அவன் பசியை மேலும் அதிகரிக்கச் செய்தது. "இன்னும் திருக்குடந்தை எவ்வளவு தொலைவோ?" என்ற சோர்வு நினைவுடன் அவன் மரத்தடியில் போய் அமர்ந்தான். பசியும் களைப்பும், குளிர் நிழலும், வீசும் காற்றும் அவனைக் கண்ணயரச் செய்து விட்டன. அதிக நேரம் உறங்கியிருக்க மாட்டான். யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான். கிழவர் அவனருகே நின்று கொண்டிருந்தார். அந்த இளம் மங்கை சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தாள். "தம்பி! பகலிலேயே உறங்குகிறாயே? யாராவது திருடிக் கொண்டு போனால்கூடத் தெரியாது போலிருக்கிறதே? அயலூரரோ?" என்று கேட்டார்.

கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்த இளைஞன் மெல்ல நகைத்து, "என்னை அறியாமல் உறங்கி விட்டேன் ஐயா! கும்பகோணத்துக்கு இன்னும் அதிகத் தொலைவிருக்கிறதோ?" என்று கேட்டான். கேள்வியை அவரை நோக்கிக் கேட்டானே தவிர, பார்வை அந்தப் பாவையின் பேரில் சென்றது.

கிழவன் தன் பேத்தியின் பக்கம் திரும்பி, "நான் அப்பவே சொல்லவில்லையா? அயலூர்க்காரர் போல் தோன்றுகிறதென்று" என்று கூறி வாலிபனை நோக்கி, "தம்பிக்கு இந்த ஊரில்லையா?" என்று கேட்டார் கிழவர்.

"ஆமாம் பெரியவரே! அயலூர்தான். உச்சிப் பொழுதிற்குள் குடந்தை கும்பேச்வரர் ஆலயத்தருகே வந்து சேருவதாகச் சொல்லியிருந்தேன்" என்று மெல்ல இழுத்தான்.

"தெரிகிறது! தெரிகிறது! உச்சிப் பொழுது கழிந்து விட்டது. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அப்படித் தானே?... பசி மயக்கம் தம்பியின் கண்ணை இழுத்து விட்டது, அப்படித்தானே..." என்று

சொல்லியவாறு தன் பேத்தியை நோக்கி, "வடிவு! நான் அப்பவே சொல்லவில்லையா? தம்பி பசிக் களைப்பால் மயங்கி விழுந்திருக்கிறான் என்று... நல்ல வேளையாக நான் கொஞ்சம் சோறு மீதி வைத்தேன். உம்; தம்பிக்குச் சோறு போடு. பசிக்குப் போதாதாயின் மோரைத் தாராளமாகக் கொடு" என்றார்.

இளைஞனுக்கு ஆச்சரியமாயிருந்தது. குறிப்பறிந்து உணவளிக்கும் அந்தக் கிழவரையும் அவரருகே மௌனமாய் உயிர் பெற்ற சிலை போல் நிற்கும் அவர் பேத்தியையும் ஒரு முறை நோக்கினான். 'வடிவு... வடிவு' என்று அவர் அவளைப் பெயரிட்டு அழைத்தார். பெயருக்கேற்ற அழகிய வடிவுதான்!

"என்ன தம்பி! அப்படி ஆச்சரியத்துடன் பார்க்கிறாய்? இது சோழநாடு தம்பி, சோழ நாடு! 'சோழ நாடு சோறுடைத்து' என்று உனக்குத் தெரியாதா? நீ இடைக்கழி நாட்டிலிருந்து வருகிறயா? அதுதான் இப்படிச் சுறுசுறுப்பல்லாமல பார்க்கிறாய். 'பசி' என்று கேட்கும் முன்னே உணவு அளிப்பதுதான் சோழ நாட்டுப் பண்பு!" என்று பேசிக் கொண்டே தன் பேத்தி வடிவிடமிருந்து சோற்றுக் கலயத்தை வாங்கி, "தம்பி, இந்தக் கலயத்தில் கொஞ்சம்தான் சோறிருக்கிறது. ஆனால் நிறைய மோரிருக்கிறது. ஓரளவுக்கு உன் பசி தீர்ந்து விடுமில்லையா?" என்றார். அந்த நிலையில் ஒரு கவளம் சோறுகூட அவனுக்கு அமுதமாக இருந்தது.

அவனுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையில் காலையில் சிறிது நேரத்தை அதிகமாகக் கழித்து விட்டான். மதுரையினின்று புறப்பட்டது முதல் அதுவரையில் எல்லாம் இட்டப்படியேதான் நடந்து வந்தது. குதிரையை மாற்றிக் கொள்ளும் இடங்களிலும் எந்தவிதக் கஷ்டமுமில்லாமல் மாற்றுக் குதிரை கிடைத்தது. வயிற்றுக்கும் வஞ்சனையின்றி உணவு கிடைத்துக் கொண்டுதான் வந்தது. திருச்சிராப்பள்ளியில் மட்டும் தாமதமாகாதிருந்தால்...

"என்ன தம்பி, யோசிக்கிறாய்...? அப்படியே கலயத்திலிருந்து எடுத்துச் சாப்பிடு..." என்று கூறிவிட்டுப் பேத்தியை நோக்கி, "வடிவு, தம்பி ரொம்பவும் கூச்சப்படுகிறது இல்லே? வயிறு விஷயத்தில் அதெல்லாம் சரிப்படுமா?" என்றார் கிழவர் தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தவாறு.

இளைஞன், வடிவின் முகத்தையே நோக்கினான். அவள் சிரிக்கும் பொழுது அவள் கன்னம் குழிந்தது. பல்வரிசை முல்லை மொக்கைப் போல் அழகாய்த் தெரிந்தது. கண்டாங்கிச் சேலையை அவள் முழங்காலுக்கு மேல் எடுத்துச் செருகியிருந்தாள். கணுக்காலும் காலுக்கு

மேலே வாளிப்பான முழங்கால்களும், அவளது வனப்பைப் புலப்படுத்தின. கறுப்பு நிறத்திலும் முகத்திலே தனிக் கவர்ச்சி இருந்தது. தலையை அள்ளிச் செருகியிருந்தது, கூந்தலின் செழுமையைக் காட்டியது. அதற்குப் போட்டியாக அவளது கச்சைகளையும் மீறி அவளது பருவ எழில் பொங்கி நின்றது. திருப்பரங் குன்றத்துத் தடாகத்தில் பூக்கும் நிலையிலிருக்கும் தாமரை மொக்கை அவனுக்கு நினைவு படுத்தியது.

ஒருவாய்ச் சோறு அவன் தொண்டைக்குள் சென்றதும் விக்கல் எடுத்தது. தொண்டையில் உணவு சிக்கிக் கொண்டது.

“தம்பியை ஊரில் யாரோ நினைத்துக் கொள்கிறார்கள். வடிவு ஓடிப்போய் தண்ணி கொண்டா!” என்று பரபரப்புடன் பேசினார் கிழவர்.

வடிவு விரைந்து செல்லும் போதும் குலுங்கும் அவள் பின் அழகை அவனால் ரசிக்க முடியாமல் இந்த விக்கல் படாதபாடு படுத்துகிறதே!

“தம்பி மெதுவாகவே சாப்பிடலாமே! ஹூம்! எனக்கு ஒன்றும் அவசரமில்லை” என்ற கிழவர், “கடையை என் மகன் பார்த்துக் கொள்ளுவான். இரவெல்லாம் கண் முழிச்ச களைப்பு வேறு” என்று கூறும் வார்த்தை அவனை மேலும் திணற அடித்தது. வடிவு கலயத்தில் தண்ணீரோடு வந்து விட்டாள்.

ஒரு வாய்த் தண்ணீர் குடித்த பிறகு அடுத்த கவளத்தை வாயில் போட்டுக் கொள்வதற்கு முன்பு தானும் ஏதாவது பேச வேண்டும் என்ற எண்ணத்தில், “உங்களுக்கு எந்த விதத்தில் நன்றி சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை, பெரியவரே” என்றான் முத்துக்குமரன். உண்மையில் அவனுக்கு வார்த்தை வராமல் வடிவின் வனப்பு திணற அடித்தது.

“நன்றி எதற்குத் தம்பி? ஹூம்! தம்பி தம்பி! என்ற கூறுகிறேனே - உன் பெயர் என்ன தம்பி?” என்று கிழவர் வெற்றிலையை மென்றுகொண்டே கேட்டார்.

“என் பெயர்...!” என்று கூறிவிட்டு ஒருகணம் தாமதித்தவன், “என் பெயர் முத்துக்குமரன்” என்றான். வேறு பெயரை மாற்றிச் சொல்ல அவனுக்கு மனம் வரவில்லை.

“முத்துக்குமரன்... எங்கப்பன் முருகபிரானின் பெயர். இதோ மலை மேல் உட்கார்ந்திருக்கிறாரே சாமிநாதன், அவனும் முத்துக்குமரன்தான். இதுபோலக் கோயிலை எட்டுக் திக்கிலும் காண முடியுமா?” என்று கூறிப் பெருமூச்சுவிட்டார் கிழவர்.

முத்துக்குமரன், வடிவைக் கடைக்கண்ணால் பார்த்தபடியே, “பெரியவர், காவிரிக் கரையைத் தாண்டியது கிடையாது

போலிருக்கிறது. குன்றின் மேல் குடிகொண்டிருக்கும் பழனி யாண்டியைப் பார்த்ததேயில்லையா? திருப்பரங்குன்றத்திலே தெய்வ யானையுடன் முருக பிரானின் திருக்கோலம் இன்றைக்கெல்லாம் பார்க்கலாமே! இதே திருவிழாவிற்கு இதைப்போல் பத்து மடங்கு கூட்டம் வரும்" என்று உற்சாகமாகப் பேசினான் முத்துக்குமரன்.

உற்சாகத்தில், கிழவர் முகம் மாறி வருவதை அவன் கவனிக்கவில்லை. வெள்ளி இழைபோல் நரைத்திருந்த கிழவரின் மீசை துடித்தது வடிவுக்குத் தெரிந்து விட்டது, தன் தாத்தாவுக்குக் கோபம் வருகிறதென்று.

"தம்பி நிறுத்து! நீ தெற்கத்தி ஆளோ? அதுதான் அந்தப் பகுதிகளை ரொம்பவும் புகழ்கிறாய். நீ எங்கிருந்து வருகிறாய்? உன் ஊர் எது?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

முத்துக் குமரனுக்கு அப்போதும் புரியவில்லை.

"சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர்களின் தலைநகரிலிருந்து வருகிறேன். வானத்தை எட்டும் கோபுரங்கள் கொண்ட மீனாட்சியம்மன் கோயில் உள்ள ஊரிலிருந்து வருகிறேன்" என்று உற்சாகமாகப் பேசத் தொடங்கினான்.

"ஹும்..." என்று கிழவர் சீறினார்.

"மதுரையிலிருந்தா?..." என்று அவர் கேட்பது சிங்க கர்ஜனை போலிருந்தது.

"ஆமாம்; மதுரை மாநகரிலிருந்து முத்தும், பவழமும் நிறைந்த பாண்டிய நாட்டின் தலைநகரிலிருந்து" - இதைக் கூறும்போது முத்துக்குமாரனுக்குப் பெருமை பிடிபடவில்லை. அவனுடைய தலைவர் சொல்லியனுப்பியிருந்தவை நினைவில் வரவில்லை. "எந்தச் சமயத்திலும் பொறுமையை இழக்காதே! எந்தச் சமயத்திலும் நீ மதுரை ஒற்றன் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளாதே!" என்ற தாரக மந்திரங்களை அவன் மறந்துதான் போயிருக்க வேண்டும். இல்லாவிடில் மதுரையின் பெருமையை இப்படிக் கோபுரம் போல் அடுக்கிக் கொண்டே போவானா?

'தம்பி' என்று இதுவரையில் அழைத்த கிழவர் சீற்றத்துடன், "ஏய், நிறுத்து! மதுரையினின்று வருகிறாயா? வேலைக்கார அரசரின் ஊரிலிருந்து வருகிறாயா? எங்கள் ஊரைத் தாழ்த்திப் பேசுகிறாயே! உனக்குப் பசிக்குச் சோறா?" என்று கூறி அவன் கையிலிருந்த கலயத்தை வெடுக்கென்று பறித்து, "வடிவு, வா போவோம், நல்ல வேளை! விரோதி நாட்டிலிருந்து வந்த ஒருவனுக்கு உதவினோம் என்ற கெட்ட பெயர் ஏற்படாது தப்பினோம், வா வா! பசியால் இவன் துடிக்கட்டும்!"

எனக் கூறித் தன் பேத்தி வடிவின் கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு பரபரவென்று அங்கிருந்து அகன்றார்.

முத்துக்குமரன் எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்றவனாக அவர்கள் போகும் திசையை நோக்கிய வாறிருந்தான்.

## 2. சோதிடர் மகள்

கிழவனும், வடிவும் செல்லும் திசையையே பார்த்தவாறு முத்துக்குமரன் திகைப்படைந்தவனாய் அமர்ந்திருந்தான். "கைக்கு எட்டிய கவளம் வாய்க்குச் செல்லும் முன்பு இப்படி ஒரு ஏமாற்றமா? ஹூம்" என்று நினைக்கும்போது அழுவதா, சிரிப்பதா என்று கூட அவனுக்குத் தோன்றவில்லை. மதுரையினின்று அவன் புறப்பட்ட போது வைகைக் கரை சோதிடர் சொன்னது அவனுக்கு நினைவுக்கு வந்தது. "வடக்கே போகிறாய், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகலாம்!" என்றுகூறி வழி அனுப்பினாரே, ஒரு வேளை இன்று நடந்த சாப்பாட்டு விஷயத்தைப் பற்றித்தான் அவர் அப்படிச் சொல்லியிருப்பாரோ என்று எண்ணியபோது, அவன் புறப்பட்ட அன்று நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

மதுரை நகரில் கிழக்கு ஆவணி மூல வீதியில் சிறு வீட்டில் அவன் வசித்தாலும் அவனுக்குப் பெரும் பதவிப் பொறுப்புகள் இருந்தன. மதுரை நாயக அரசரின் நேர் பார்வையில் அவருக்குக் கீழ் இயங்கும் ஒற்றர் வீரர்களுள் அவனும் ஒருவன். அவனுடைய தந்தை போர்க்களத்திலே கொல்லப்பட்டார். அவன் தாயின் பெரும் துயரை மாற்ற அவன் ஒருவன்தான் ஆறுதலாக இருந்து வந்தான். கம்பீரமான தோற்றம். வீரத்தைப் புலப்படுத்த இப்போதுதான் அரும்பி வரும் மீசை, பரந்த மார்பு, கருத்த மேனி. தன் மகனைக் காணும்போதெல்லாம் தாய்க்கு மகிழ்ச்சிதான் என்றாலும், இறந்து போன தன் கணவனை நினைத்துத் துக்கப்படுவாள். மகன் எதிரே துயரத்தைப் புலப்படுத்தாவிடினும், முத்துக்குமரன் தாயின் முகவாட்டத்தைப் புரிந்து கொள்வான்.

"அம்மா, நீங்கள் கண்கலங்குவதைப் பார்க்கும்போது எனக்கு வேதனையாக இருக்கிறதம்மா! தங்களுக்கு என்ன கஷ்டம் என்று சொல்லுங்கள். அதைத் தீர்க்க உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறேன்..." என்று முத்துக்குமரன் கூறும்போது தாய் அவனை அன்புடன் முதுகைத் தடவி, "மகனே, நீ தியாகம் செய்து உன்னைப் பலிகொடுத்த பிறகு, என் கலக்கம் தீர்ந்தால் பின் நான் எதற்காக வாழ வேண்டும்?" என்று கூறி, "நீ தீர்க்க ஆயுளுடன் வாழ்வது ஒன்றுதான் என் துயரத்தைப் போக்கவல்லது. உன்

அப்பாவைப் போல் போர் - சண்டை என்று உயிரைப் போக்கிக் கொள்ள முற்படாமல் இருந்தாலே போதும்" என்று கண்களில் நீர்மல்கக் கூறுவாள்.

"அம்மா, போர் என்றால் பயந்து வீட்டுக்குள்ளேயே பதுங்கிக் கொள்ள முடியுமா? நாட்டைக் காப்பதற்கு ஈட்டியை மார்பிலே தாங்குவதுதானே வீரர்க்கழகு. போர் முரசம் கேட்டவுடன் தன் வீட்டினர் அனைவரும் களத்திலே மாண்டிருக்கத் தன் ஒரே மகனை - பால் மணம் மாறாப் பாலகனை - தலைவிசிப் பொட்டிட்டு வேல் கை கொடுத்துப் போர்க்களம் அனுப்பிய தாய்க்குலம் வாழ்ந்த பூமி இதம்மா, தாங்கள் இப்படிப் புத்திர பாசம் பிடித்துப் பேசலாமா?"

முத்துக்குமரனின் இந்தச் சொற்களால் தாயின் மனத்திலே திருப்தி ஏற்பட்டுவிடவில்லை. என்றாலும் மேலுக்குப் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, "என்னவோ அப்பா நான் சொன்னேன். புத்திர பாசந்தான்! குலவிளக்காக வாழும் ஒரே மகன் என்னும் வாஞ்சைதான் அப்படிப் பேசத் தூண்டியது. எப்படியோ பார்த்துப் பிழையப்பா!" என்று மெல்லக் கூறிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மதுரைச் சிங்காதனத்தில் அப்போதுதான் ஏறியமர்ந்த சொக்கநாத நாயகரது படையில் நாற்பதினாயிரம் போர் வீரர்கள் இருந்தனர். சொக்கநாத நாயகர் இளவயதினராயிருந்தபோது ஆட்சிப் பொறுப்பு முழுவதும் பிரதானியிடமிருந்தது. அவரது கொடுங்கோல் ஆட்சியையும், நாட்டையே அபகரித்து விட வேண்டுமென்னும் சதித் திட்டத்தையும் அறிந்து கொண்ட சொக்கநாதர், அவரையும் அவருக்குப் பக்கபலமாக இருந்தவர்களையும் சிறையிலடைத்து விட்டு ஆட்சிப் பொறுப்பைத் தானே நேரிடையாக ஏற்றுக் கொண்டவுடன் படைபலத்தைப் பெருக்குவதில் முனைந்தார். வடக்கே திருச்சிராப் பள்ளியிலின்று, தெற்கே குமரி வரையில் படை திரட்டும் பணி வேகமாக நடைபெற்றது. முத்துக்குமரனும் படையில் சேர முன் வந்தான். முத்துக்குமரனின் தந்தையை சொக்கநாதர் அறிவார். முத்துக் குமரன் படையிலே சேர முன் வந்தது கேட்டு மகிழ்ந்தார். கிட்டத் தட்ட இருவரும் சம வயதுடையவராயிருப்பர். முத்துக்குமரன் லாகவமாக வாள் சுழற்றுவதையும், குதிரை ஏறுவதையும், குறி தவறாமல் வேல் வீசுவதையும் கண்டு சொக்கநாதர் பிரமிப்பே அடைந்தார் எனலாம். அவனது திறமையைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அவனை ஒற்றர் படையில் சேர்த்தார்.

ஒற்றர் படைத் தலைவர் மார்த்தாண்டவர்மன் முத்துக் குமரனிடம் பெரும்பொறுப்பொன்றை ஒப்படைத்தார். தஞ்சைக்குச் சென்று

அங்குள்ள படைப்பலம், கோட்டைக் காவல், மக்களின் எண்ணம் இவற்றையெல்லாம் அறிந்து வரும்படி முத்துக்குமரனுக்கு உத்தரவிட்டு வெளியூரில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் தெரியப்படுத்தி யிருந்தார். குறிப்பாகக் கும்பகோணத்தில் கும்பேச்வர சுவாமி கோயில் அருகே பூ வியாபாரம் செய்யும் சுந்தரமூர்த்தியைச் சந்திக்குமாறு கூறியிருந்தார். எக்காரணம் கொண்டும் தன்னை இன்னாரெனக் காட்டிக் கொள்ளக்கூடாது எனக் கண்டிப்பாக உத்தரவும் பிறப்பித்திருந்தார்.

முத்துக்குமரன் தலைவர் கூறியவற்றைக் கவனமாகக் கேட்டு விடைபெற்றுக் கொண்டு நேரே வைகைக்கரைச் சோதிடர் வீட்டிற்குச் சென்றான். சோதிடர் ஜடாவல்லவர் முத்துக்குமரனின் குடும்ப நண்பர். முத்துக்குமரன் அவர் வீட்டிற்குச் சென்றபோது அவர் வாயிற் திண்ணையிலமர்ந்து சுவடிகளைப் பிரித்து ஏதோ ஒரு பாடலைப் பாடி, வந்திருக்கும் ஒருவருக்கு விளக்கிக் கொண்டிருந்தார். முத்துக்குமரனைக் கண்டவுடன், "வா தம்பி, வா தம்பி! உன்னைத்தான் சற்று முன்பு நினைத்தேன். வீட்டிலே இடியாப்பம் செய்தோம். உனக்குப் பிடிக்குமென்று கமலத்தாச்சி சொன்னது. உனக்குத்தான் ஓய்ச்சல் ஒழிவில்லாத வேலை. நீ எங்கே வரப் போகிறாய்? நாமே எடுத்துக் கொண்டு வரலாம்னு நெனச்சேன். உள்ளே போ, கொஞ்சம் பலகாரம் சாப்பிட்டு வா. நான் இவங்களுக்கு ஒரு பலன் பார்த்துச் சொல்லிவிட்டு வருகிறேன்..." என்று கூறி உள் பக்கம் நோக்கி, "ஆச்சி, ஆச்சி, யார் வந்திருக்கிறார் பார்" என்றார்.

ஜடாவல்லவரின் தங்கை கமலத்தாச்சிக்குக் காது சற்று மந்தம். அவள் கிணற்றங்கரையில் தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தாள். முத்துக்குமரன் தாழ்வாரத்தில் வந்து நின்றான். தந்தையின் குரல் கேட்டுக் கூடத்தில் பூத்தொடுத்துக் கொண்டிருந்த பூங்கோதை பரபரப்புடன் எழுந்து, "வாங்க, வாங்க. இப்படி இருங்க.." என்று கூறிவிட்டுத் துள்ளிக் குதித்துக் கொண்டு தன் அத்தையை அழைக்கக் கிணற்றங்கரைப் பக்கம் ஓடினாள்.

பெண்கள் நிமிடத்திற்கு நிமிடம் எப்படி வளர்ந்து விடுகிறார்கள் என்று வியப்புடன் அவள் செல்லும் பின்னழகைப் பார்த்து முணுமுணுத்தான். வாரிச் செருகியிருந்த கூந்தலில் ஒரே ஒரு செம்பருத்திப் பூவைச் சூடியிருந்தாள். போகும் வேகத்தில் மேல் தாவணியையும் மீறி அந்தப் பட்டுக் கச்சையின் கட்டுப்பாட்டையும் மீறித் திமிர்ந்து நின்ற வடிவம் அவனைப் பிரமிக்க வைத்தது. பூங்கோதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வனப்புடன் வளர்கிறாள் என்பது அவனுக்குப் புரியாமலில்லை.

அத்தையுடன் அவள் திரும்பி வரும்போது குனிந்த தலையுடனும் அத்தைக்குப் பின்னால் மறைந்து மறைந்து வந்து சமையலறைக்குள் ஓடிப் புகுந்து கொண்டாள். ஆனால், கதவின் ஓரத்தில் ஒரே ஒரு விழி மட்டும் தெரியும்படியாக முத்துக்குமரனை நோக்கியவாறிருந்தாள். அவள் அவனைக் கண்டு ரசிக்கலாம். அவனோ அவள் எழிலைக் காண ஏங்கித் தவம் செய்ய வேண்டும்! ஏனிப்படி அவள் சோதனை செய்கிறாள்?

"தம்பியை எங்கே இந்தப் பக்கம் காணவே காணோம். உன்னைத்தான் இன்று நினைத்தேன். ஆயுசு நூறு. உனக்குப் பிடித்தமான இடியாப்பம் செய்திருந்தேன். பூங்கோதை! தட்டிலே கொண்டு வாம்மா - என்ன உள்ளுக்குள்ளே போய் அடைஞ்சிட்டே... ஓகோகோ... வெட்கமோ... இன்னிக்கு இப்படித்தான் வெட்கப்படுவே. நாளைக்கு?..." என்று சொல்லி வந்த அத்தையை ஓடோடி வந்து தன் பட்டுக்கரத்தால் அவள் வாயைப் பொத்தி, "அத்தை நீங்கள் எப்பவுமே இப்படித்தான்" என்று பொய்க் கோபம் கோபித்தாள்.

அவள் குனிந்து அத்தையின் வாயைப் பொத்தியதிலும் ஒரு நளினம்; குனிந்து அவள் நின்றபோது மெல்லிய மேலாடையின் சரிவில் அவளது அழகை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்த அங்கங்கள் அவன் உள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்தின. முன்பு கண்டதை விட அந்த இரு கன்னங்களின்தான் எத்தனை செழுமை? தேன் மலர் போன்ற இதழ்கள் அவை; வெட்கத்தால் துடிதுடிப்பதிலும் தனி அழகு.

தோள்கள்! இப்போதுதான் அவன் கண்கள் இமைக்காமல் பார்க்க நேர்ந்தது. 'வேயுறு தோளினாள்' என்று கவிஞர் வர்ணித்திருப்பதைக் கேட்டிருக்கிறான். மூங்கில், மூங்கில் என்கிறார்களே அதற்கு ஒப்புவமை கூறலாமா அந்த வாளிப்பான தோள்களை?

வெளியே ஜடாவல்லவர், சோதிடம் கேட்க வந்தவரிடம் கூறுகிறார்: "தம்பீ, என் குடும்ப நண்பரின் மகன். அவன் அப்பா பெரும் வீரர். வீரர் மகன் மட்டும் லேசானவனா? தம்பி வாள் சுழற்றினால் விரோதிகள் அஞ்சி ஓடுவர். நம்ம மகாராஜா சொக்கநாதர் பட்டமேறியவுடன் தம்பிக்குப் பொறுப்பான வேலை கொடுத் திருக்கார்" என்று பெருமையுடன் கூறியது அவன் காதில் வீழ்ந்தது. ஆருடம் கேட்க வந்தவர் அதை விட்டு விட்டு முத்துக்குமரனுக்குக் கிடைத்த பதவியைப் பற்றியும், அவன் ஒற்றர் படையில் ஆற்றும் பணிகளைப் பற்றியும் ஆவலுடையவரானார்.

"ஓகோ! தம்பிக்கு அவ்வளவு மதிப்பா ராஜசபையில்?" என்று ஆவலுடன் கேட்பது போல் செய்தி அறிய முற்பட்டார். முத்துக்குமரன் ஒற்றர்ப்படையில் வேலை செய்கிறான், அந்த நிமித்தமாக வேறு

ஊருக்குச் செல்லப் போகிறான் என்பதையும் மெல்லக் கேட்டறிந்து கொண்டார்.

ஜடாவல்லவருக்கு அவற்றைப் பற்றிச் சொல்வதில் பெரு மகிழ்ச்சி. "முத்துக்குமரன் தன் வீட்டு மருமகப் பிள்ளையாக வரப்போகிறான்" என்று சொல்லிக் கொள்வதில் அவருக்குத் தனிப்பெருமை. முத்துக்குமரனுக்கோ கூடத்தில் இருப்புக் கொள்ளவில்லை. கூடத்தைவிட்டு வாசல் திண்ணைக்குச் சென்று ஜடாவல்லபரின் வாயை மூடி, "ராஜாங்க ரகசியங்களை வெளியே சொல்லாதீர்கள்" என்று சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை.

ஆருடம் கேட்க வந்தவர் திடீரென பரபரப்புடன் எழுந்தார். "நான் இன்னொரு நாளைக்கு வருகிறேன். உங்களுக்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள்" எனக் கூறிக்கொண்டு விடைபெற்றுச் சென்றார்.

ஜடாவல்லவர் உள்ளே விரைந்தார். அவரை 'மாமா' என்றுதான் முத்துக்குமரன் அழைப்பது வழக்கம். "மாமா! இப்படி வருகிறவர்க ளிடமெல்லாம் நான் ஒற்றர் படையைச் சேர்ந்தவன் என்று சொல்லாதீங்க. இரகசியமாக இருக்க வேண்டியதை அம்பலப் படுத்தலாமா? நான் இப்போது வந்தது உங்களிடம் சொல்லிக் கொண்டு வடக்கே போவதற்குத்தான். அது பரம இரகசியமாக இருக்க வேண்டும். அதை வருபவர் போகிறவர்களிடம் சொல்லாதீங்க" என்றான்.

"தம்பி, தம்பி வடக்கே போகிறாயா? ரொம்பத் தொலைவா? எப்போ வருவாய்? இந்தச் சித்திரையிலேயே கல்யாணத்தை நடத்திடலாம்னு பார்த்தேன். கல்யாணத்தை முடித்துக் கொண்டு போகக்கூடாதா?" என்று ஜடாவல்லவர் கேட்டார்.

"அவசர வேலையாக நான் போகிறேன் - கல்யாணமா?" என்று முத்துக்குமரன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். "நான் இங்கே ஒரு கணம் கூடத் தாமதிக்கவே முடியாது. உடனே புறப்படுமாறு தலைவர் கட்டளை. வீட்டிலே தாயாரிடம் சொல்லிக் கொள்வதற்கு முன்பு தங்களிடம் சொல்லி விடைபெற்றுக் கொள்ள வந்தேன். நல்லாசி கூறி அனுப்புங்கள்" என்று சொல்லி வணங்கினான் முத்துக்குமரன்.

கதவின் மறைவில் தெரியும் பூங்கோதையின் முகத்திலே ஏக்கம் ததும்பி நின்றது. "தம்பி அப்போ திரும்பி எப்போ வரும்?" என்றார் கவலை நிறைந்த குரலில். முத்துக்குமரன் சிரித்தவாற. "உங்கள் சோதிடம் என் பயணத்தைப் பற்றி என்ன சொல்கிறது எனப் பாருங்கள்" என்றான்.

"இன்றே பயணமா? உன் ராசியின்படி இன்று புறப்பட்டால் கைக்கெட்டியது வாய்க்கு எட்டாதே. ஹும். ஆமாம்; ஆமாம்; உன்

வருங்காலத்தைப் பற்றிச் சுவடியில் நான் பார்க்கவில்லையே. ஹூம்... இதோ பார்த்து விடுகிறேன். நீ அண்ணியிடம் பேசிக் கொண்டிரு" என்று கூறிச் சுவடி இருக்கும் அறைக்குள் நுழைந்தார் ஜடாவல்லவர்.

இதுதான் சமயமென்று முத்துக்குமரன் புறப்பட்டான். பூங்கோதையின் காதில் மட்டும் விழும் வண்ணம், "நான் போய் வருகிறேன். என் வேலைகள் முடிந்தவுடன் விரைந்து வந்து விடுகிறேன்" என்று கூறினான். பூங்கோதை ஏதோ கூற வாயெடுத்தாள். பேச்சு வரவில்லை. அவன் சென்ற பிறகு வேகமாக வாயிலுக்கு ஓடிவந்து அவன் போகும் திசையையே நோக்கினாள். அவள் கண்களில் ஏனோ கண்ணீர் திரையிட்டு நின்றது. வீட்டிற்குச் சென்ற முத்துக்குமரன் தாயிடம் விடைபெறும்போது அவன் தாய்க்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவள் உள்ளம் வேதனையால் நிறைந்தது. மகனிடம் தன் வேதனையைத் தெரிவித்தால் கோபமடைவான் என்பதை உணர்ந்திருந்ததால் முகத்திலே சந்தோஷத்தை வரவழைத்துக் கொண்டு, "மகனே, ஜாக்கிரதையாகப் போய் வெற்றியுடன் திரும்பி வா" என்று மெல்லக் கூறினாள். முத்துக்குமரன் உள்ளத்துக்குத் தாயின் வேதனை புரியாமலில்லை. அதனால் தாயை வணங்கி எழுந்து, "அம்மா உன் வேதனை எனக்குத் தெரியாமலில்லை. நான் செல்லும் இந்தப் பயணத்தில் எனக்கு வெற்றி கிடைத்தால் பெரும பதவி எல்லாம் கிடைக்கும். விரைவிலேயே திரும்பி வருவேன்" என்றான். கண்ணீருக்கிடையே முறுவல் பூத்து வழியனுப்பினாள் தாய்.

இவை நடந்த ஒரு வாரம் கழித்து இவற்றையெல்லாம் காவேரிக்கரையில் அமர்ந்தவாறு யோசனை செய்து கொண்டிருந்த முத்துக்குமரனுக்குப் பசியை விட, ஏமாற்றமே அதிகமாயிருந்தது. வடிவு கலயத்திலிருந்து சோற்றை எடுத்துக் கொடுத்ததும், அப்போது அவள் விழிகளில் தெரிந்த நளினமும், தந்தை கட்டளையிட்டவுடன் அவள் அவருடன் விரைந்து சென்ற அழகும், ஒருமுறை திரும்பிப் பார்த்தபோது அந்த முகத்தில் தெரிந்த ஒருவிதக் கெஞ்சலும் அவனை வேறு ஏதும் சிந்திக்க வழியில்லாதவாறு செய்தன.

இப்படியே உட்கார்ந்திருப்பதில் என்ன பயன் என்று முத்துக்குமரன் மெல்ல எழுந்து குதிரையையும் அவிழ்த்துக் கொண்டு நடந்து சென்றான். செல்லும்போது அவனால் சற்று முன்பு நிகழ்ந்தவற்றை மறக்க முடியவில்லை. 'அந்தக் கிழவருக்குத்தான் மதுரைக்காரர் மேல் ஏன் அவ்வளவுக் கோபம்? கோபம் - வெறுப்பு இவற்றை உணவிலா காட்ட வேண்டும்? சோழவள நாட்டில் தான தருமங்களுக்குப் பஞ்சம் இல்லை என்பார்கள். இவர் செய்ததோ மனித தர்மத்திற்கு விரோதமாக இருக்கிறதே! உம்... நாம் செய்த மகத்தான தவறு ஊரைப் பற்றிச்

சொன்னது. ஒரு விதத்தில் இதுவும் நமக்கொரு நல்ல படிப்பினையைத் தெரிவித்திருக்கின்றது. மதுரையிலிருந்து வருபவர் பேரில் இவ்வளவு வெறுப்பு என்றால், மதுரை மன்னர் மீது இன்னும் எவ்வளவு வெறுப்பு இருக்கும்? ஹூம்... தஞ்சை அரசருக்கு இந்தக் கிழவர் வேண்டியவராக இருக்கலாம். நாம் இன்னார் என்று தெரிவித்திராமல் இருந்திருந்தால் ஒருவேளை கிழவர் மூலமே பல முக்கிய செய்தியை அறிந்திருக்கலாம். ஒற்றனுக்கு உண்டான இரகசிய விதியைக் கடைப்பிடிக்காததற்கு ஏற்பட்ட தண்டனை இது' - என எண்ணினான்.

ஆற்றங்கரையோரமாகச் சிறிது தொலைவு சென்றவுடன் ஒரு மண்டபம் தெரிந்தது. அதனருகே ஒரு பெண், "ஐயா! ஐயா!" என்றழைப்பது கேட்டது. 'வேறு எவரையாவது இருக்கும்' என்ற எண்ணத்தினால் திரும்பிப் பார்க்காமல் சென்ற அவன் செவியில் மீண்டும், "உங்களைத்தான் ஐயா!" என்ற குரல் விழுந்தது.

முத்துக்குமரன் சற்று நின்றான். மண்டபத்துத் தூணோரத்தில் சற்று முன்பு கண்ட அதே மங்கை நின்று கொண்டிருந்தாள்.

பண்பு தெரியாதவர்கள் அழைத்தவுடன் போவதா என்ற வைராக்கியத்துடன் முத்துக்குமரன் மீண்டும் செல்லத் திரும்பினான்.

"ஐயா! கோபமாக இருக்கும் உங்களுக்கு. இப்படி வாருங்கள். சோறு பழம் எல்லாம் இருக்கிறது. என் பாட்டனார் குணம் உங்களுக்குத் தெரியாது. அவர் செய்தது பெரும் தவறுதான். பசியோடு தங்களைத் தவிக்கவிட எனக்கு மனமில்லை. தயவு செய்து இப்படி வந்து உட்கார்ந்து கொண்டு சாப்பிடுங்கள்" என்றாள்.

முத்துக்குமரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பசியோ காதடைக்கிறது. ஆனால் கோபமோ, அதற்குச் சளைக்காமல் இருக்கிறது. 'போவதா வேண்டாமா? என யோசித்துக் கொண்டிருந்தான். ஒருவேளை தன்னை மதுரைக்காரன் என்று தெரிந்து கொண்டவுடன் தன்னிடம் துப்பு ஏதாவது அறிய அந்தக் கிழவர் மீண்டும் தன் பேத்தியை அனுப்பியிருக்கலாம் என எண்ணினான்.

# 3. சபைக்கு வந்த செய்தி

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் வழக்கத்தைவிட அதிக பரபரப்பு இருந்தது. மன்னர் 'சொக்கநாத நாயகர் சுவாமி தரிசனத்திற்காக வரப்போவதை அறிந்து அவரைக் காண மண்டபத்தில் கூடியிருந்தவரும், கிடைத்த இடத்தில் நெருக்கி அடித்துக் கொண்டு நின்றவர்களுமாகக் கலகலப்பு மிகுதியிருந்தது. சொக்கநாத நாயகர் மதுரை அரியணையிலேறிப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவருக்குப் பதினான்கு வயதுதான்.

அப்போதெல்லாம் அவர் வெள்ளிக் கிழமை தோறும் அங்கயற்கண்ணி அம்மையைத் தவறாது தரிசனம் செய்து கொண்டிருந்தார். அதுபோல் இப்போது அவரால் செய்ய இயலவில்லை. இடையே அவரை அரண்மனையை விட்டு வெளியே வராதவாறு தளவாயும், பிரதானியும், ராயசமும் செய்திருந்தனர். அவரைக் 'குழந்தை, குழந்தை' என்று வெளியே இருப்பவர்களுக்குக் கூறித் தாங்களே நாட்டை ஆளும் பொறுப்பை மேற்கொண்டிருந்தனர். சொக்கநாத நாயகரும் அவர்கள் கூறுவதைக் கேட்டு நடந்து வந்தார். ஆனால், அவர் மிகவும் நம்பிக்கை கொண்டிருந்த அந்த மூவரும் பல சூழ்ச்சிகளைச் செய்து கொண்டிருந்தனர்.

செஞ்சி மீது படையெடுத்துச் செல்லுமாறு தளபதி லிங்கம நாயகனிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். செஞ்சி ஒரு காலத்தில் மதுரை நாயகர் ஆட்சியின் கீழ் இருந்தது. பீஜப்பூர் சுல்தான் திடீரெனத் தாக்கி அதைத் தம் வசமாக்கிக் கொண்டார். மீண்டும் அதை மதுரை நாட்டோடு சேர்க்கத்தான் படையெடுப்பு என்று பொது மக்களை நம்புமாறு பிரதானியும்* ராயசமும்* செய்தனர்.

தளபதி லிங்கம நாயகன் வீரம் மிகுந்தவன். அஞ்சா நெஞ்சன். மதுரை நாயக்க மன்னர்களுக்குப் போர்க்களத்திலே வெற்றி பல தேடித் தந்தவன். அவன் வீரத்தைக் கண்டு இளைஞரான சொக்கநாதர் மயங்கினார். ஆனால், அவன் பசுத்தோல் போர்த்த புலியாக இருப்பான் என்று அவர் நினைக்கவில்லை. அவனுடன் நாற்பதாயிரம் போர் வீரர்கள் சென்றனர். லிங்கமன் படை யெடுத்துச் சென்ற சமயத்தில் பொதுமக்கள் கவனம் வேறுபக்கம் இருக்கும் போது சொக்கநாதரையே கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வது பிரதானியின் நோக்கமாயிருந்தது. அந்தப் பயங்கரச் சூழ்ச்சி, சொக்கநாதருக்கு இரகசியமாகத் தெரிய வந்தவுடன் அவர் ஒரு கணம்கூடத் தாமதிக்காமல் ராயசத்தையும் பிரதானியையும் சிறைப்படுத்தினார்.

அரசரின் இந்த நடவடிக்கையை அறிந்த மதுரை நகரமே திடுக்கிட்டது. சூழ்ச்சிக்காரர்கள் நோக்கம் பொதுமக்களுக்குத் தெரிய வந்தபோது இளைஞரான அரசரின் துணிவைப் பாராட்டினார்கள். அந்தப் பரபரப்பான செய்தியில் மக்கள் ஆழ்ந்திருக்கையில்தான் சொக்கநாதர் மீனாட்சியம்மன் கோயிலுக்கு வரப்போகும் செய்தி அறிந்து கோயிலில் எள் போட்டால் விழ இடமின்றிக் கூடினர். கோயிலில் சுவாமி தரிசனத்திற்குப் பிறகு கொலுமண்டபத்தில் வீற்றிருக்கப் போகிறார் என்ற செய்தி அறிந்த மக்கள் அங்கும் விரைந்தனர்.

---

* பிரதானி - முதல் அமைச்சர், * ராயசம் - காரியதரிசியைப் போல் பதவி வகிப்பவர். அரசர் சொல்வதை உடனே குறித்துக் கொள்வார்.

மீனாட்சி அம்மையின் சந்நிதானத்தில் சொக்கநாதர் மெய்மறந்து நின்று கொண்டிருந்தார். அன்று அவர் புது மனிதராகவே விளங்கினார். சூழ்ச்சிக்காரர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிய மீனாட்சித் தாயின் கருணையை எண்ணிப் போற்றிக் கொண்டிருந்தார். பிறகு ஆலவாய் அழகரையும் வணங்கிவிட்டுப் பட்டத்து யானையின் மீது அம்பாரியில் அமர்ந்து கொலு மண்டபம் நோக்கிப் புறப்பட்டார்.

மேல் திசையில் கதிரவன் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்தான். செந்நிறவானம், போர்க்களத்தில் தேங்கி நிற்கும் குருதியை அவர் சிந்தையில் படரச் செய்தது. வீதியின் இருபுறமும் வாழ்த்தொலி கூறி நின்ற மக்களின் ஆரவாரம் அவர் உள்ளத்தில் புதுத் தெம்பையூட்டின. பரந்து விரிந்திருந்த இந்த நாட்டைத் தன்னால் ஆளமுடியும் என்னும் நம்பிக்கையும் அவருள்ளத்தில் திடமாக எழுந்தது. அவருக்கு உறுதுணையாக இதுவரை நாடு கடத்தப்பட்டிருந்தவர்கள் வந்து சேர்ந்துவிட்டனர்.

கொலுமண்டபத்தின் வாயிலில் ஜனக்கூட்டம் 'ஜே, ஜே' என்று நிறைந்திருந்தது. அவர்கள் இளம் வயதினரான தங்கள் அரசரின் பெருமைகளைக் குறித்துப் பேசிய வண்ணமிருந்தனர். அவரை மணக்கப் போகும் மாதரசி யாராயிருக்கலாம் என்ற விவாதத்திலும் சிலர் ஈடுபட்டிருந்தனர். கொலுமண்டபத்திற்குச் செல்லும் பாதையின் முகப்பிலே இருந்த கூண்டு மண்டபத்தின் உயர்ந்த மாடத்தில் வீற்றிருந்த இன்னிசை வாத்தியக் கோஷ்டியினர் பதினெட்டு வித இசைக் கருவிகளினின்று ஒலி எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

கொலுமண்டபத்திற்குச் சொர்க்க விலாசம் என்ற பெயரும் உண்டு. அப்படிப்பட்ட பெயருக்கு ஏற்றபடி சுவர்க்கக் கொலுமண்டபம் போலவே அது அழகிய அலங்கார அமைப்புடன் விளங்கியது. தூண்கள் பிரம்மாண்டமாக வானளாவி நின்றன. மேல் விதானத்தை நிமிர்ந்து நோக்கினால் கண்ணுக்கெட்டிய உயரம் வரை அதன் கூரை புலப்படாதது போல் அவ்வளவு உயரமாக விளங்கியது. எட்டுப் பேர் கைகோத்து நின்று தழுவினால் கூட எட்டாத சுற்றளவு கொண்ட பெரும் தூண்கள். அவை வழவழப்பான சுண்ணாம்பு கொண்டு பூசப் பட்டிருந்தன. தரையிலே இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப் பட்டிருந்தன. அந்தப்புரத்துப் பெண்டிர் மறைவாக நின்று சபை நடவடிக்கைகளைக் காணும் வகையில், மேல்மாடத்துத் தாழ்வாரம் உருவாக்கிக் கட்டப்பட்டிருந்தது.

அரசர் அமரும் அரியணை விலை மதிப்பற்றது. வைரத்தாலும், கோமேதக வைடூரியங்களாலும் இழைக்கப்பட்டுப் பலவித அழகிய வேலைப்பாட்டுடன் தந்தத்தால் அமைக்கப்பட்டிருந்த அந்தச் சிங்காதனம். சிங்காதனம் அமைந்த பீடத்தின் கீழே பலநாட்டுச்

சிற்றரசர்கள் வந்து வணங்கித் தங்கள் காணிக் கைகளைச் சமர்ப்பிக்கும் வகையில் விசாலமான கூடம் இருந்தது. அருகே பிரதானியும், மற்றும் மந்திரிகளும், ராயசமும், தளவாயும், பண்டித சிரோன்மணிகளும், இராச சோதிடரும், பேரறிஞர்களும் அமர்வதற்கு இருக்கைகள் பளபளப்பாக விளங்கின.

சுவர்க்க விலாசம் எனும் அந்த மண்டபத்தின் மேலே தங்கக் கலசம் தகதகவெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதற்கும் மேலே மீன் உருவம் பொறிக்கப்பட்ட கொடி கம்பீரமாக அசைந்தாடிக் கொண்டிருந்தது. பாண்டியர்களைப் போலவே தாங்களும் புகழ் அடையவேண்டும் எனும் ஆசை, நாயக்க மன்னர்களுக்கு இருந்ததால் தங்களுடைய சக்கரவர்த்தியான விஜயநகரப் பேரரசரின் கொடியான வராகக் கொடியைக் கொள்ளாமல் மீன் கொடியைச் சின்னமாகக் கொண்டிருந்தனர் நாயக்கமன்னர்கள். பாண்டியநாட்டு ஆணி முத்தாலாகிய விலை மதிப்பற்ற மாலை அரசர் கழுத்தில் திகழ்ந்தது. கொலு மண்டபத்திற்கு வரும் வழியில் பழ மரங்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன. மண்டபத்தின் அருகே நறுமண மலர்கள் பல நிறைந்த நந்தவனம் விளங்கியது.

சொக்கநாதர் ஏறிவந்த யானை கம்பீரமாக அசைந்தாடிக் கொண்டு வந்து கொலு மண்டபத்தின் முன் நின்றது. தீவர்த்தி பிடித்திருந்த வீரர்கள் வீர வணக்கம் செய்து தீவர்த்திகளைப் பலவிதக் கோணங்களில் சுழற்றிப் பலவிதக் கோலம் காட்டித் திறமையைப் புலப்படுத்தினர். ஆரத்தி ஏந்திய அழகிகள் பலர் விழிக்கணையை அரசர் மேல் எறிந்த வண்ணம் தங்கள் அழகுச் சின்னம் அதிர ஆடிப் பாடினர். அவர்கள் அணிந்திருந்த மெல்லிய ஆடையின் கவர்ச்சியைக் காண முடியாமல் பலர் கண்களை மூடிக் கொண்டனர். கம்பீரமாக அந்தக் கந்துக மதக்கரி மெல்லக் குனிந்தது. சொக்கநாதர் துள்ளிக் குதித்து இறங்கி, மிடுக்குடன் கொலு மண்டபத்திற்குள் நுழைந்தார். முரசு அதிர்ந்தது. வாத்தியங்கள் ஒலித்தன. அதிர்வேட்டின் சப்தம் இடிபோன்று பன்முறை முழங்கியது.

சொக்கநாதர் அரியணையை ஒருமுறை வணங்கினார். சுவரின் இருபுறங்களிலும் மிகமிகப் பெரிதாகத் தீட்டப்பட்டிருந்த தன் மூதாதையர்களான முத்து வீரப்பருக்கும் திருமலை நாயக்கருக்கும் வணக்கம் செலுத்தி விட்டுச் சிங்காதனத்தில் ஏறி அமர்ந்தார்.

சபையிலே மல்லர்கள் வந்து தங்கள் திறமைகளைக் காட்டினர். வாட்போர் வீரர்கள் தங்கள் வலிமையைக் காட்டினர். ஆடலழகிகள் தங்கள் கலைத் திறமையுடன் பருவ வாளிப்பையும் புலப்படுத்தினர். தெலுங்குப் பண்டிதர்கள் வாழ்த்துப் பாடினர். தமிழ்ப் புலவர்கள் 'போற்றி போற்றி' எனக் கவிதை இசைத்தனர். சொக்கநாதர் மலர்ந்த

முகத்துடன் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டு ரசித்தார். வடமொழிப் புலவர் ஒருவர் அரியணையின் இடது புறம் காலியாக இருப்பதைச் சுட்டிக்காட்டி அரசரது சம பாகமாக ஆகும்பேறு எந்த நல்லாளுக்குக் கிடைக்கப் போகிறதோ எனக் கேள்விக் கேட்டுச் விரைவாக நாட்டு மக்களுக்கு ஓர் அரசி கிடைக்க வேண்டும் என ஆண்டவனைத் துதிப்பதாகப் பாடியபோது, சபையில் உள்ளவர்கள் ஆமோதித்துக் கையொலி எழுப்பினர். சொக்கநாதர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இன்பக் கனவுகளின் ரேகையும் மின்னல் போல் தோன்றி மறையாமலில்லை.

நாட்டு நலனை முறைப்படி விசாரித்துவிட்டுப் பரிசுப் பொருள்களை வழங்கிச் சபையை முடிக்கும் தருணத்தில் சேவகனொருவன் விரைந்து வந்து பிரதானியிடம் முத்திரையிடப்பட்ட நிருபமொன்றைக் கொடுத்து வணங்கி நின்றான். பிரதானியும் அதைப் பெற்று முத்திரையை நீக்கிப் படித்துப் பார்த்துவிட்டு அதைக் கொண்டு வந்த சேவகனைச் செல்லும்படி சைகை செய்து விட்டு அரசரிடம் அதைக் கொடுத்தார்.

சபையில் சற்று முன்பு இருந்த கலகலப்பு இல்லை. அமைதி குடிகொண்டிருந்தது. அந்த நிருபத்தில் உள்ள செய்தி என்னவாக இருக்குமோ என்ற ஆவல் அனைவர் உள்ளத்திலும் நிறைந்திருந்தது. நிருபத்தைப் படித்த பிறகும் சொக்கநாதர் முகத்தில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை.

அரசர் எழுந்து சென்று விட்டார் என்றால் சபை கலைந்து விட்டது என்பது பொருள். அதைப் போல் சொக்கநாதர் அரியணையை விட்டு எழுந்தார். ராயசம், பிரதானி, தளவாய், பொக்கிஷ அதிகாரி இவர்களை மட்டும் தன்னுடன் மந்திராலோசனை சபைக்கு வருமாறு கூறிவிட்டு அரசர் சபை மண்டபத்தை விட்டு விரைந்து சென்றார்.

நிருபத்தில் கண்டிருக்கும் செய்தி என்னவாயிருக்கும் என்பதே ஒவ்வொருவர் மனத்திலும் கேள்வியாய் எழுந்து நின்றது.

# 4. அழைப்பும் மறுப்பும்

மந்திராலோசனைக் கூடத்திற்குள் சொக்கநாதரைப் பின்தொடர்ந்து அதோ ஒருவர் பின் ஒருவராக நுழைகிறார்கள். அரசர் கம்பீரமாக நடந்து செல்கிறார். அவரது ஒரு கரம் உடைவாளின் மேல் இருந்தது.

நடையிலே பெரும் நடவடிக்கையை எடுக்கப் போகும் கம்பீரம் இருந்தது. அவரைத் தொடர்ந்து தளவாய் வேங்கட கிருஷ்ணப்ப நாயகர் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டே சென்றார்.

ராயசம் ரகுவீரர் ஏதோ சிந்தித்தவாரே சென்றார். பிரதானி கோவிந்தப்பய்யர் ஏதும் சலனமின்றி நடந்தார். கருவூல நிர்வாகி சின்னத்தம்பி முதலியார் கவலை நிறைந்தவராய்ச் சென்றார்.

மந்திராலோசனைச் சபை மிகவும் இரகசியமான இடம். கட்டுக்காவல் மிகவும் அதிகம். மிகவும் முக்கியமான விஷயங்கள் அங்குதான் தீர்மானிக்கப்படும்.

பிரதானி கோவிந்தப்பய்யரும், தளபதி வேங்கட கிருஷ்ணப்ப நாயகரும், ராயசம் ரகுவீரரும் அந்த இடத்துக்கு வருவது அதுதான் முதல் தடவை.

அவ்வளவு உயர்ந்த பதவி தங்களுக்குக் கிடைக்கும் என்று கனவில் கூட அவர்கள் நினைக்கவில்லை.

சொக்கநாத நாயகர் இளம் வயதினராயிருப்பதால் அவருக்கு அவ்வப்போது நல்லுரைகளை வழங்கி வருவார் கோவிந்தப்பய்யர். போர்த் திறமைகள் புலப்படுமாறு செய்வார் வேங்கட கிருஷ்ணப்பர். ராயசமாக அப்போது இருப்பவரோ அரண்மனையில் சாதாரணப் பதவி வகித்து வந்தவர்.

ஆனால், ராஜ விசுவாசமுள்ளவர்கள். மதுரை நாயகவம்சத்தினர் மற்ற எந்த வம்சத்தினருக்கும் தாழ்ந்து விடக் கூடாது என்பதில் மிகவும் கவலையுள்ளவர்களாக இருந்தனர்.

ஆனால், அவர்கள் அரசரை அதிகம் சந்திக்காதபடி அப்போது பிரதானியாய் இருந்தவரும், தளவாயாக இருந்தவரும், ராயசமும் தடுத்து வந்தனர்.

அவர்கள் மூவரும் ஒன்றுகூடி பெரும் சதியொன்றைச் செய்யத் திட்டமிட்டனர். அரசரை வெளியே சென்று ஒருவருடனும் பழக விடாமல் ஏதாவது காரணம் கூறித் தடுத்து வந்தனர். பொது மக்கள் இதை அறியாமல் இருப்பதற்காக வடக்கே செஞ்சி நகரின் மீது படையெடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

லிங்கம நாயகர் சிறந்த வீரர். அவர் தலைமையின் கீழ் நாற்பதாயிரம் வீரர்கள் செஞ்சி நோக்கி அணிவகுத்துச் சென்றனர்.

மூன்று மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், செலவுக்கு ஏராளமான பணம் இவை அனைத்துடனும் லிங்கமர் சென்றார்.

மக்கள் கவனம் சண்டையைப் பற்றியே இருந்ததால் பிரதானியும், ராயசமும் சேர்ந்து செய்யும் சதியைப் பற்றி நினைக்கவில்லை.

ஆனால், வேங்கட கிருஷ்ணப்ப நாயகருக்கு ஏதோ சிறிது சந்தேகம் ஏற்படவே, சொக்கநாதரை அவர் எச்சரித்தார். பிரதானி, ராயசம் முதலானோர் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்குமாறு கூறினார்.

சொக்கநாதர் இளைஞராக இருந்தாலும் கூர்மையான அறிவுடையவராக விளங்கினார். அவர் ஒவ்வொன்றுக்கும் கேள்வி கேட்கத் தொடங்கவே பிரதானியும் ராயசமும் தங்கள் சதித்திட்டம் வெளிப்பட்டுவிடப் போகிறதே என்று கவலை கொண்டனர்.

மன்னர் சந்தேகிப்பதற்குக் காரணமே வேங்கட கிருஷ்ணப்பரும் கோவிந்தப்பய்யரும்தான் என்று கூறி அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார்கள். சொக்கநாதரை வெளியே எங்கும் செல்லாமலும் இரகசியமாகக் காவல் காத்தனர்.

வடக்கே சென்ற லிங்கம நாயகர் முனைந்து போரிட்டிருந்தால் நொடியில் செஞ்சிக் கோட்டையைப் பிடித்திருக்கலாம். ஆனால் ஏனோ அவர் படைகளை மெல்ல நடத்திச் சென்று கொண்டிருந்தார். மேலும் மேலும் செலவுக்குப் பணம் கேட்டுக் கடிதம் மதுரைக்கு வந்து கொண்டிருந்தது. சொக்கநாதர் இதைக் கடுமையாக ஆட்சேபித்துப் பிரதானியைக் கடிந்து கொண்டார்.

தங்களுடைய திட்டங்கள் ஏதும் நடைபெறாது போய் விடும்போல் தோன்றுகிறதே என்ற கவலை பிரதானிக்கும் ராயசத்துக்கும் தோன்றவே சொக்கநாதரைத் தீர்த்து கட்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தனர்.

அவர்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை மறைந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த வேலைக்காரி, சின்னத்தம்பி முதலியாரிடம் தெரிவிக்கவே, அவர் ஓடோடிச் சென்று சொக்கநாதரை எச்சரித்தார். அதே கணத்தில் பிரதானியையும் ராயசத்தையும் சிறையிலிடுமாறு துணிந்து கட்டளையிட்டார் சொக்கநாதர். அவர் உள்ளத்தில் அதுவரை இருந்து வந்த சிறியவன் என்ற எண்ணம் மறைந்தது. நாட்டு நிர்வாகத்தை நேரிடையே தானே கவனிக்க வேண்டும் எனும் துடிதுடிப்புப் பிறந்தது. தனக்கு மிகவும் வேண்டியவராயிருந்த கோவிந்தப்பய்யரையும், வேங்கட கிருஷ்ணப்பரையும் உடனே வரவழைத்து முறையே பிரதானியாகவும், தளவாயாகவும் நியமித்துக் கொண்டார்.

சொக்கநாதரின் இந்த நடவடிக்கையை அறிந்து மக்கள் வியந்து பாராட்டினர். அதே பேச்சாக நகரமெங்கும் ஒலித்தபோதுதான் சொக்கநாதர் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு விஜயம் செய்ததும், முதன் முறையாகக் கொலுமண்டபத்திற்கு வந்து அமர்ந்ததும். அப்போதுதான் வெளிநாட்டிலிருந்து ஒற்றன் அனுப்பியிருந்த திருபம் சொக்கநாதருக்குச் சற்றுக் கவலையை அளித்தாலும், கலக்கத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் மந்திராலோசனை சபைக்கு விரைந்தார்.

அந்த நிருபத்தில் கண்டிருந்த செய்தி சாதாரணச் செய்தியன்று. சிறையிலடைக்கப்பட்ட பழைய பிரதானியும் ராயசமும் வடக்கே சென்றிருந்த லிங்கமனுக்கு அவசர அவசரமாகச் செய்தி அனுப்பி யிருந்தார்கள். "செஞ்சிப் படையெடுப்பை உடனே நிறுத்திவிட்டுப் படைகளுடன் மதுரையை முற்றுகையிடவும்" என்று அவர்கள் அனுப்பிய ஓலை லிங்கமனுக்குக் கிடைத்தது. உடனே அவர் தன் நிலையை உணர்ந்தார். தனது சகாக்கள் சிறையிலடைக்கப்பட்டு, ஆட்சிப் பொறுப்பை சொக்கநாதரே ஏற்றுக் கொண்டது கேட்டுத் திடுக்கிட்டார். தன் திட்டத்தையே மாற்றிக் கொள்ள முடிவு செய்தார். செஞ்சிக்கோட்டையின் அதிபதியாக இருந்த ஏகோஜிக்கு ரகசியமாகக் கடிதம் ஒன்று அனுப்பினார். தாக்க வந்துள்ளவரே கோட்டைக்குடையவனுக்குக் கடிதம் எழுதுவது விசித்திரமாகத்தான் இருந்தது. என்றாலும் லிங்கமனின் மூளை பல விதத்தில் வேலை செய்தது. ஏகோஜிக்கு அவர் என்ன சொல்லி அனுப்பினார் என்பது மட்டும் தெரியவில்லை. தஞ்சைப் பகுதியில் இருந்த மதுரை ஒற்றர்களால் அவ்வளவே தெரிவிக்க முடிந்தது.

சொக்கநாத நாயகருக்கு வடக்கே சென்றிருந்த லிங்கமனைப் பற்றிய கவலை ஏதும் தோன்றவில்லை. சிறையில் அடைபட்ட பிறகும் சதிகாரர்கள் மேலும் தொல்லை கொடுக்கிறார்களே என்று சீறினார். அவருடைய கோபத்தின் எல்லை பயங்கரத் தண்டனையாக வெளிப்பட்டது.

உடனே "அவர்களுடைய விழிகளைப் பறிக்கச் செய்யுங்கள்" என்று கர்ஜித்தார்.

சபையில் மௌனம் நிலவியது. "ஆமாம்! சதிகாரர்களுக்கும் கொடியவர்களுக்கும் இப்படிப் பயங்கரத் தண்டனை தந்தால்தான் மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும். இப்போதே ஆணை அனுப்பித் தண்டனையை நிறைவேற்றுங்கள்" என்றார்.

சொக்கநாதர் முகத்தில் இருந்த கடுமையும் கோபமும் அருகிலிருந்தவர்களையும் நடுங்க வைத்தன. பிறகு அவர் சற்றுச் சாந்தமடைந்து பிரதானியை நோக்கி, "ஐயா, தங்கள் அபிப்ராயம் என்னவோ?" என்று கேட்டார்.

கோவிந்தப்பய்யர் மெல்ல தன் சகாக்களை ஒரு முறை நோக்கியவாறு, "தங்கள் உத்தரவு சரியானதுதான். மேலும் நாம் சும்மாயிராமல் லிங்கமரையும் கைது செய்ய உத்தரவிடுவோம். செஞ்சிக்கோட்டை ஏகோஜிக்கு அவர் இரகசியத் தூதனை அனுப்பியிருக்கிறார் என்றால் ஏதோ பயங்கரத் திட்டம் நடைபெற இருப்பதாகத் தெரிகிறது. தஞ்சை விஜயராகவரிடமும் லிங்கமன்

செல்லக்கூடும். எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து மதுரையைத் தாக்க முயலலாம்" என்றார்.

தளவாய் வேங்கட கிருஷ்ணப்பர் தன் மீசையை முறுக்கிக் கொண்டு, "இப்போதே நான் புறப்படுகிறேன்" என்று முழங்கினார். பொக்கிஷத் தலைவர் சின்னத்தம்பி முதலியார், "பொக்கிஷம் பாதி காலியாகி விட்டது. மேலும் படைகள் வடக்கே இருக்குமானால் செலவுக்குப் பணம் அனுப்ப வழியே இல்லை. பாளையக்காரர்களிடமிருந்து கப்பப் பணமும் சரிவர வரவில்லை. அதனால் உடனே படைகளைத் திரும்பப் பெறுவதுதான் சரி" என்றார்.

சொக்கநாதர் சிறிது நேரம் மௌனமாகயிருந்தார். பிறகு முகத்தில் புன்னகை தவழச் சொன்னார்: "லிங்கமரை நான் மிகவும் நேசித்தேன். அவருடைய வாள் வீசும் திறமையில் மயங்கினேன். அவரது தலைமையின் கீழ் நாலு திக்கும் படைகளை அனுப்பி வெற்றிக் கொடி நாட்ட விரும்பினேன். இப்படி அவர் செய்வார் என நான் நினைக்கவில்லை" என்று கூறி நிறுத்தினார். பிறகு, "லிங்கமர் ஏன் ஏகோஜிக்குத் தூதுவனை அனுப்பினார் என்பதை அறிய வேண்டுவது மிகவும் முக்கியம். மேலும் படை வீரர்களை இங்கே திரும்பவும் வரவழைப்பதால் என்ன பலன்? அவர்கள் திரும்பி வருவதற்கான செலவையும் கொடுக்க வேண்டும். நாற்பதாயிரம் வீரர்கள் மதுரைக்கு வந்தால் அவர்கள் சாப்பாட்டுக்கு நாம்தானே வழி செய்தாக வேண்டும். எங்கிருந்தாலும் செலவு ஒன்றுதானே" என்றார்.

சொக்கநாதர் கூறுவதும் சரியாகத்தான் பட்டது. சொக்கநாதர் சற்று நேரம் மௌனமாயிருந்தார். கண்களை மூடிக் கொண்டு ஏதோ யோசித்தார். அப்போது சின்னத்தம்பி முதலியார், "இப்போது படைகளிடம் மூன்று மாத உணவுப் பொருள்கள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்துகிறோம். அந்தச் செலவு மிச்சம் தானே?" என்றார்.

கண்ணை மூடியபடியே இருந்த சொக்கநாதர், "அந்தப் படைகள் தம்மிடம் உள்ள பண்டபங்களைத் திரும்பவும் இங்கே கொண்டு வருவார்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டார். "பிறகு அந்தப் பண்டங்களும் செலவாகி வீரர்களும் சுமையாக இங்கு வந்து சேர்ந்து, பொக்கிஷத்தில் பணமில்லாவிட்டால் சின்னத் தம்பி முதலியார்தான் மிகவும் தவிப்பார். வரி வசூலைத் துரிதப்படுத்துவார். எல்லோரும் சொக்கநாதர் பொல்லாதவர் என்பார்கள். வீண் கலவரம் ஏற்படும்" என்றார்.

சொக்கநாதர் மனத்தில் இருப்பது என்னவென்று புரிந்து கொள்ள அங்கிருந்தவர்களால் இயலவில்லை. பிரதானியும், தளபதியும், ராயசமும், பொக்கிஷத் தலைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

திடீரெனக் கண்களைத் திறந்த சொக்கநாதர், "ஒற்றர் படைத் தலைவர் மார்த்தாண்ட வர்மர் மதுரையில் இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"ஆமாம், இருக்கிறார்" என்ற பதில் தளபதியிடமிருந்து கிடைத்தது.

"நாளைக் காலையிலேயே என்னை வந்து சந்திக்கச் சொல்லுங்கள்" என்று சொக்கநாதர் கட்டளையிட்டார்.

மறுநாள் அதிகாலையிலேயே மார்த்தாண்ட வர்மர் வந்தார். அவரிடம் ஏதோ பேசினார் அரசர். சிறிது நேரம் கழித்து மார்த்தாண்டவர்மர் முத்துக்குமரனை அழைத்து வந்தார். முத்துக்குமரனையும் சொக்கநாதர் அறிவார். வடக்கே உளவறியச் செல்ல அவன் ஏற்றவன்தான் என்ற திருப்தியும் அரசருக்கு ஏற்பட்டது. முத்துக்குமரன் செய்ய வேண்டிய காரியங்களை மார்த்தாண்டவர்மன் விளக்கமாகக் கூறவே, முத்துக்குமரன் உடனே புறப்பட ஆயத்தமானான்.

அயல்நாடு போவதால் குடும்ப நண்பர் சோதிடரிடமும், தாயிடமும் கூறிவிட்டு அவன் புறப்பட்ட செயலே மார்த்தாண்டவர்மனின் கட்டளையை மீறியதாகும். அதற்கும் மேலாகச் சுவாமிமலை ஆற்றங்கரையில் கிழவரிடம் தாம் எங்கிருந்து வருகிறோம் என்பதைத் தெரிவித்தது மிக மிகத் தவறானது என்பதை முத்துக் குமரன் உணராததில்லை.

அதனால், அந்த மண்டபத்துத் தூண் அருகே நின்று கன்னழகி வடிவு தன்னை மீண்டும் அழைத்துப் பசி தீர்க்க உணவுடன் நின்றாலும், அவன் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவளுடைய மதுரமான குரல் காதில் விழாதது போல் நேர் வழியே செல்லலானான்.

# 5. இளவரசி மோகனாங்கி

தஞ்சையினின்று வல்லம் கோட்டையை நோக்கிச் செல்லும் சாலையில் அரச குடும்பத்துச் சிவிகை சென்று கொண்டிருந்தது. கோடை காலத்தின் ஆரம்ப நாட்களாதலால் காலை வேளையிலேயே வெயிலின் கடுமை ஆரம்பமாகி விட்டது. சமீப காலமாக அதிக மழை பெய்யாததால் சாலையில் இரு புறங்களிலுமுள்ள மரங்கள் பசுமை குன்றி நின்றிருந்தன. வேப்பமரங்களில் பசுமை இலைகளை விட மஞ்சள் நிறமும், பழுப்பு நிறமும் கொண்ட இலைகளே நிறைந்திருந்தன. வயல்களும் உழுது பயிரிடப்படாமல் வெறும் கட்டாந் தரையாகவே காட்சியளித்தன. அடிக்கடி தஞ்சை மீது

படையெடுத்து வரும் வடநாட்டு முஸ்லிம் மன்னர்களின் படைகளின் தாக்குதல்களுக்கு முதன் முதலில் ஆளாகும் இடம் அந்தப் பகுதிதானாதலால் மக்கள் அங்கே வசிப்பதற்கு அஞ்சி தஞ்சைக் கோட்டைக்குள்ளோ, அல்லது வல்லம் கோட்டைக் குள்ளோ வசிப்பதையே பெரிதும் விரும்பினர். இதனால் தஞ்சையினின்று வல்லம் கோட்டைக்குச் செல்லும் பகுதியின் இடையே மனிதர்கள் வசிக்கும் குடியிருப்புக்களை காண்பது அரிதாய் இருந்தது.

ஆனால் தஞ்சையினின்று குதிரை மீது படை வீரர்கள் அவ்வப்போது வல்லத்திற்குச் சென்ற வண்ணமாயிருப்பார்கள். உணவுப் பொருள்களைக் கோட்டைக்கு ஏற்றிச் செல்லும் பாரவண்டிகள் சென்று கொண்டே இருக்கும். அங்கொருவர் இங்கொருவராகத் தலையில் ஏதாவது கூடையில் பொருள்களுடன் நடந்து கொண்டிருப்பார்கள்.

அந்தச் சாலையில் அரச குடும்பத்துச் சிவிகை வருகிறதென்றால் அது வருவதற்கு முன்பு நான்கு குதிரை வீரர்கள் கையிலே ஏந்திய ஈட்டியுடன் செல்வர். சிவிகையின் பின்புறம் நான்கு குதிரை வீரர்கள் வருவர். சிவிகையைச் சுமந்து செல்லும் ஆட்கள் போடும் 'ஹோ! ஹோ!' என்ற ஒலியுடன், குதிரைக் குளம்படி சத்தம் தவிர வேற ஏதுமற்ற அந்தச் சாலையில் சில சமயம் காற்று 'வீர்! வீர்!' என்று வீசும்போது எழும் ஒலி சற்று அச்சத்தை அளிக்கும்.

அன்று அந்தச் சாலையில் சிவிகையில் இளவரசி மோகனாங்கி தன் தோழியுடன் சென்று கொண்டிருந்தாள். வல்லத்திலிருக்கும் தன் அத்தை ரங்கமாதேவியைக் காண்பதற்காக, அவள் மாதத்தில் ஒரு தடவை வல்லம் செல்லத் தவறமாட்டாள்.

தன் தாயை விட அத்தை இடம் மோகனாங்கிக்கு அன்பு அதிகம்.

ரங்கமாதேவி தஞ்சை மன்னர் விஜயராகவ நாயகரின் மூத்த சகோதரி எனினும் இன்னும் வயது அதிகமானவளைப் போல் இல்லாமல் பத்து வயது குறைந்தவளாகவே காட்சியளிப்பாள். திருமணமே செய்து கொள்ளாமல் கன்னியாகவே அவள் அதுவரை காலத்தைத் தள்ளிவிட்டதால் முதுமையின் தளர்ச்சி அவளை ஏதும் செய்யவில்லை என்று எல்லோரும் பேசிக் கொள்வர்.

ரங்கமாதேவி சிரிக்கச் சிரிக்கப் பேசுவாள். சிறு சிறு கதைகள் சொல்வாள். மோகனாங்கிக்கு அத்தையோடு எப்பொழுதுமே இருக்க வேண்டும் போல் தோன்றும். தஞ்சைக்கே வந்து விடுமாறு மோகனாங்கி தன் அத்தையை ஒவ்வொரு முறையும் கூப்பிடுவாள்.

"கண்ணே! மோகனாங்கி! ஒவ்வொரு முறையும் ஆசையுடன் தான் அழைக்கிறாய். நான் அங்கே வராமல் இருப்பதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. வேளை வரும்போது நானே வருகிறேன்.

அதுவரையில் உனக்கு எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுதெல்லாம் வல்லத்துக்கு வந்துவிட்டுப் போ!'' என்பாள்.

“தஞ்சைக்கு வராததற்கு என்ன காரணம் அத்தை?'' என்று மோகனாங்கி கேட்பாள்.

“காரணம் சொன்னால் உனக்கு இப்போது புரியாது. குழந்தாய்! சமயம் வரும்போது சொல்கிறேன்'' என்று ரங்கமாதேவி சிரித்துக் கொண்டே கூறுவாள். அவள் சிரிக்கும்போது கன்னம் குழியும். கருமையிலே சிறிது நரை கண்டுள்ள புருவங்கள் நெருங்கி ஒன்று சேரும்.

அத்தையின் அந்தத் தோற்றத்தையே மோகனாங்கி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பாள். தன் தந்தையைப் போலவே, அச்சில் வார்த்தெடுத்தது போன்ற வடிவத்துடன் இருக்கும் அத்தையின் ஒவ்வொரு அங்க அசைவும் தன் தந்தையுடையதைப் போலவே தோன்றி அவளுக்கு ஆச்சரியத்தை அளிக்கும்.

சோழப் பேரரசர்கள் வீற்றிருந்து ஆட்சி புரிந்த தஞ்சை மாநகர் காலப்போக்கில் விஜயநகரப் பேரரசின் பிரதிநிதிகளான நாயக அரசர்களின் இருப்பிடமாக மாறியது. தஞ்சையிலிருந்த சோழநாட்டுப் பகுதிகளை நாயக அரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.

அவர்களுள் சேவப்ப நாயகர் பரம்பரையில் வந்தவர்தான் விஜயராகவ நாயகர். அவரது மகள் மோகனாங்கி.

இளவரசி மோகனாங்கியின் மீது தஞ்சை மன்னர் விஜய ராகவருக்கு அளவு கடந்த அன்பு. காலையில் மகளை ஒரு முறை காணாவிடில் அன்றைய பொழுது அவருக்கு என்னவோ போல இருக்கும். அதனால் வல்லத்திற்குத் தன் சகோதரியைக் காணச் செல்லும் தன் மகள் மோகனாங்கியைச் சென்றவுடனேயே திரும்பி விடுமாறு வற்புறுத்துவார்.

“இல்லை, இல்லை, இன்று நான் வல்லத்திலேயேதான் தங்கியிருக்கப் போகிறேன். அத்தை இன்று இரவு எனக்கு நல்லதொரு கதை சொல்வதாகப் போன வாரம் நான் சென்ற போதே சொல்லி இருக்கிறாள்'' என்று மோகனாங்கி அன்று புறப்படும்போதே கூறினாள்.

“ரங்கா!'' என்று மெல்ல அழைத்து, மோகனாங்கியை அணைத்து மெல்லத் தடவிக் கொடுத்து, “கண்ணே! இன்று நீ எப்படியும் பொழுது சாய்வதற்குள் திரும்பிவிட வேண்டும்'' என்றார்.

மோகனாங்கி பொய்க் கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, “ஆமாம், அப்பா! தங்களுக்கு எப்போதும் இதே பேச்சுத்தான். நான் இன்று வல்லத்தில்தான் இருக்கப் போகிறேன்'' என்றாள்.

விஜயராகவர் தன் மகளின் கருநாகம் போன்ற கூந்தலை ஒரு முறை தடவிவிட்டு, "மோகனா! இன்று ஒரு நாள் அத்தையைப் பார்க்காமலேதான் இருந்தால் என்ன? கதை கேட்பதற்காக வல்லம் போக வேண்டுமா? ஆஸ்தானத்தில் உள்ள பண்டிதர்களிடம் சொல்லி நல்ல நல்ல கதைகளாகத் தினம் தினம் சொல்லச் சொல்லுகிறேன். இன்று ரங்கராஜம்மா ஒரே மூச்சில் நூறு செய்யுட்களை இயற்றித் தன் திறமையைப் புலப்படுத்தப் போகிறாள். அதற்காக வசந்த மண்டபத்திற்கு முக்கிய மானவர்களை அழைத்திருக்கிறேன். நீ கட்டாயம் வர வேண்டும் என்பதற்காகத்தான் வல்லம் போய் உடனே திரும்பி வந்து விட வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். வசந்த மண்டபத்திற்குப் பெரிய பெரிய பண்டிதர்கள் வரப்போகிறார்கள். சங்கித விற்பன்னர் வேங்கடமகி வரப்போகிறார். நீ அந்தச் சமயத்தில் இருக்க வேண்டாமா? நீ சங்கீதத்தில் மகா மேதையாக வேண்டும் என நான் கனவு காண்கிறேன்...!" என்று விஜயராகவர் சொல்லிக் கொண்டே போகும் போது மோகனாங்கியின் கவனம் அவர் சொல்வதில் செல்லவில்லை.

"ரங்கராஜம்மா! ரங்கராஜம்மா!" என்றே அவளுடைய வாய் முணுமுணுத்தது. 'ஒரே சமயத்தில் - இல்லை ஒரே மூச்சில் நூறு செய்யுள் இயற்றும் தகுதி வாய்ந்த மகா மேதை என்று தந்தை வர்ணிக்கும் ரங்கராஜம்மாவும், தான் அன்று கண்ட மங்கையும் ஒருவர்தாமோ?' என்று மோகனாங்கி சிந்தித்தாள்.

"என்ன யோசிக்கிறாய் மோகனா?" என்று விஜயராகவர் அவள் உள்ளத்திலிருப்பதைக் கூர்ந்து கண்டறிபவர் போல் நோக்கியவாறு கேட்டார். மோகனாங்கி தன் தந்தையை ஒருமுறை உற்றுப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டு, "அப்பா, நான் வித்வத் சபைக் கூட்டத்துக்கு வரத்தான் வேண்டுமா? பல ஆடவர்கள் கூடும் இடத்திற்கு நான் வரலாமா?" என்று கேட்டாள்.

விஜயராகவர் கடகடவென்று நகைத்து, "தாராளமாக வரலாம். நீ வரவேண்டும் என்பதற்காகத்தானே வசந்த மண்டபத்திலே வித்வத் சபையை ஏற்பாடு செய்தேன்" என்றார்.

"பொதுவாக காலை வேளையில்தானே பண்டிதர்கள் கூடுவார்கள்? கலை விற்பன்னர்கள் தங்கள் திறமையைச் சபா மண்டபத்தில்தானே புலப்படுத்துவார்கள்? இப்படித் தங்களுக்கே ஏகாந்தமாக விளங்கும் வசந்த மண்டபத்திற்கு இதுவரை எவரையுமே அழைத்ததில்லையே? - அதிலும் பெண்ணாகிய நான் வரலாமா என்பதற்காகக் கேட்டேன்" என்ற மெல்லக் கேட்டாள்.

"ஓகோ! இதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தாயா? வசந்த மண்டபத்திற்கு ரங்கராஜம்மா வரப்போகிறாள். முதலில்

பண்டிதர்கள் சபையில் அவள் தன் திறமையைப் புலப்படுத்திவிட்டுப் பிறகு சபா மண்டபத்திற்கு வந்து அரங்கேற்றுவதாகக் கூறியிருக்கிறாள். அதனால்தான்..." என்று கூறிய அரசர் விஜயராகவர் தன் மகள் முகத்தை மீண்டும் ஒருமுறை கூர்ந்து நோக்கினார்.

தந்தையின் பார்வை தன் இதயத்தில் இருப்பதை அறிந்து கொள்ள முயல்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட மோகனாங்கி மெல்ல எழுந்து, "சரி, அப்படியே சாயுங்காலத்திற்குள் வந்து விடுகிறேன் அப்பா!" என்று மெல்லக் கூறினாள்.

மகள் புறப்பட்டவுடன் விஜயராகவர் அவளை அழைத்து, "மோகனா, உன் அத்தையிடம் இன்று இரவு பண்டிதர்கள் இங்கே கூடுவதைப் பற்றி ஏதும் சொல்ல வேண்டாம்" என்றார்.

"ஏனப்பா? உடனே ஏன் திரும்புகிறாய், என்று அத்தை கேட்டால் என்ன சொல்வது?"

"நான் கட்டளையிட்டுவிட்டேன் என்று சொல்லு."

"அத்தை தவறாக நினைக்கமாட்டார்களா ?"

"என்னைப்பற்றி எவ்வளவோ தவறாக நினைத்துக் கொண்டிருப்பது போல் இதுவும் ஒன்றாக இருக்கட்டும்."

"ஏனப்பா, அத்தையையும் இங்கே அழைத்து வரட்டுமா?" என்று மகள் கேட்டவுடன் விஜயராகவர் முகம் மாறியது. அது கறுத்தது. கோபத்தின் சின்னம் மெல்லத் தோன்றியது. படபடப்பு மிகுந்து காணப்பட்டது. பரபரப்பான குரலில், "வேண்டாம், வேண்டாம்! உன் அத்தையைக் கூப்பிடாதே. இன்று வசந்த மண்டப நிகழ்ச்சியைப் பற்றியும். அவளிடம் சொல்லவேண்டாம். அவளுக்கு அதெல்லாம் பிடிக்காது" என்றார்.

பிறகு தன் படபடப்பும் கோபமும் வெளியே புலப்படாமல் இருப்பதற்காக, "மோகனா, இன்று நீ வல்லத்திற்குப் போகவேண்டாமே? போய்விட்டு உடனே திரும்புவதென்றால் களைத்துப் போய்விடுவாய்" என்று கூறினார். பிறகு, "ஆமாம், இன்று நீ போக வேண்டாம்" என்று கண்டிப்பான குரலில் கூறிவிட்டு விருட்டென்று எழுந்து போய்விட்டார். மகள் தன் சொல்லை மீறிச் செல்லமாட்டாள் என்ற எண்ணம்.

ஆனால், விஜயராகவர் ஸ்ரீரங்கத்திற்குச் சுவாமி தரிசனத்திற்குப் புறப்பட்டவுடன் மோகனாங்கி வல்லத்தை நோக்கிக் கிளம்பிவிட்டாள். தந்தையின் கட்டளையை மீறிச் செல்லுகிறோமென்ற அச்சமிருந்தாலும் அத்தை ரங்கம்மாதேவியிடம் அன்று இரவு கூடப் போகும் பண்டிதர்கள் கூட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்ற ஆவல் நிறைந்திருந்தது.

வல்லத்துச் சாலையில் அரச குடும்பத்துச் சிவிகையைச் சுமப்பவர்கள் விரைந்து சென்றனர். வல்லத்தை அடைந்ததும் மோகனாங்கியைக் கோட்டை வாயிலிலேயே ரங்கமாதேவி வரவேற்றது மோகனாங்கிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எங்கே நீ இன்று வராமல் போய்விடுவாயோ, என்று கவலைப்பட்டேன். இன்று முக்கியமான செய்தியொன்று உனக்குச் சொல்லப் போகிறேன்" என்றாள்.

"நான் வராமலிருப்பேனா ? நானும் ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போகிறேன்" என்று கூறி நகைத்தாள் மோகனாங்கி.

## 6. அந்தரங்க அறை மர்மம்

மோகனாங்கியை அழைத்துக் கொண்டு ரங்கமாதேவி மாளிகைக்குள் சென்றாள். அந்தப் பிரம்மாண்டமான மாளிகையில் ஏராளமான அறைகள் இருந்தன. நடுவே பெரிய கூடம், சங்கீதக் கச்சேரிகளை நடத்துவதற்கு வசதியாக அமைந்திருந்தது. இரண்டொரு பணிப் பெண்களையும் காவல்காரர்கள் சிலரையும் தவிர, அந்த மாளிகையில் ஜன நடமாட்டமே இல்லை. ஆனால் கோட்டைக்குள் அந்த மாளிகையைத் தவிர, கோட்டைத் தளபதி வசிக்கும் இடமும், குதிரை லாயமும், யானைக் கொட்டிலும், நெற் களஞ்சியமும், உணவுப் பொருள்கள் சேகரித்து வைக்கும் கிடங்கும், கோட்டைக் காவலர் வசிக்கும் வீடுகளுமாகச் சிறு ஊரைப் போலவே காட்சியளித்தது.

கோட்டையின் உயரமான மதிலின் நான்கு திசைகளிலும் பெரிய பெரிய பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. பீரங்கிகளில் வைத்து வெடிப்பதற்கு வெடி மருந்து சேமித்து வைக்கும் கிடங்கு கோட்டையின் மத்தியில் பலத்த காவலுடன் விளங்கியது.

ரங்கமாதேவியின் சயன அறை அலங்கார விசித்திரங்களுடன் காட்சியளித்தது. அறையின் நடுவே பஞ்சணை மஞ்சம். சுவரில் இத்தாலி நாட்டு ஓவியர்கள் எழுதிய சிங்காரிகளின் சித்திரங்கள் மனத்தை மயக்கும் வகையில் காட்சியளித்தன. கட்டிலுக்கு அருகே அகலமான முக்காலி ஒன்றில் பெரிய வெள்ளித் தாம்பாளத்தில் பழ வகைகள் இருந்தன. உயரமான கூஜா ஒன்று சித்திர வேலைப்பாடுடன் இருந்தது. அதில் பருகுவதற்குப் பால் எப்போதும் தயாராக இருந்தது. குளுமையாக எப்போதும் காற்று வரும் வகையில் சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மோகனாங்கி இதுவரை அந்த அறையைக் கண்டதில்லை. இதற்கு முன்பெல்லாம் அத்தையுடன் பேசிக்கொண்டிருக்கும் போது

நடுக்கூடத்திலேயே அமர்ந்திருப்பாள். இல்லாவிடில் மேல் மாடத்தில் கிளிக்கூண்டிற்கு அருகே செல்வாள். அதற்கும் மேலே சென்று புறாக்கள் கூட்டம் கூட்டமாக அடைபட்டிருக்கும் பொந்தின் அருகே நின்று, புறாக்கள் "பக்கூம் பக்கூம்" என்று ஒலி எழுப்பிக் கொண்டிருப்பதையும், தலையைச் சாய்த்து அவை பார்க்கும் அழகையும், ஒன்றோடொன்று அலகால் கோதிக் கொண்டு கொஞ்சி விளையாடும் அதிசயத்தையும் பார்த்து மகிழ்வாள். அப்போதுகூட அவள் அத்தையின் சயன அறையைக் கண்டதில்லை. அப்படி ஒன்று இருப்பதாகவும் அவளுக்குத் தெரியாது.

அன்று ரங்கமாதேவி, இளவரசி மோகனாங்கியை இரண்டாவது மாடிக்கு அழைத்துச் சென்று வேலைப்பாடமைந்த கதவொன்றைத் திறந்தாள். மோகனாங்கி அந்த அறையைக் கண்டு பிரமிப்படைந்தாள்.

"அத்தே!" என்று ஆச்சரியக் குரல், அவள் கண்டத்தினின்று வெளியே வந்தது.

"என்ன, மோகனா? ஏன் இப்படிப் பிரமித்து நின்று விட்டாய்?"

"இப்படி ஓர் அழகான அறை இருப்பதே எனக்கு இதுவரையில் தெரியாது அத்தை! இது யாருடைய படுக்கை அறை?"

"இவ்வளவு காலமாக நான் உனக்குச் சொல்லவில்லை. ஆனால், எப்போதாவது சொல்ல வேண்டிய காலம் வரும் என்று காத்திருந்தேன்."

"அந்தக் காலம் இன்று வந்துவிட்டதா, அத்தை?" என்று கேட்ட மோகனா அறையிலுள்ள பொருள்களைச் சுற்றிப் பார்த்து ஒருவித சந்தேகத்துடன் அத்தையை நோக்கி, "இந்த அறையிலா அத்தை நீங்கள் படுத்துக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏன்? உனக்குச் சந்தேகம் வந்துவிட்டது? இந்த அறையில்தான், இதே மஞ்சத்தில்தான்" என்றாள்.

"தங்களுக்குப் பயமாயிருக்காதா?"

"எனக்கு ஏன் பயம்? இந்தக் கோட்டையைப் போன்ற மிகப் பத்திரமான இடம் இந்த ராஜ்யத்திலேயே இல்லை. தஞ்சை கோட்டையை விட வல்லத்துக் கோட்டைதான் பலம் பொருந்தியது. நீ பிறந்ததுகூட இந்தக் கோட்டையில்தான்! அதனால்தான் உனக்கு 'வல்லத்து இளவரசி' என்ற பெயரிட்டழைக்கிறார்கள்!"

அத்தை ரங்கமாதேவி இவ்வாறு கூறியவண்ணம் கட்டிலில் அமர்ந்தாள். அருகே மோகனாங்கியும் உட்கார்ந்து கொண்டாள்.

மாதுளைப் பழத்திலிருந்து ஒவ்வொரு முத்தாக எடுத்து மோகனாங்கியின் கையில் கொடுத்த ரங்கமாதேவி, "இந்த மாதுளை

முத்துக்கள் இரத்தினக் கற்கள் போலிருக்கின்றன இல்லையா மோகனா? தினமும் இரண்டு பழங்கள் சாப்பிட்டால் உடலும் இந்த நிறத்தை அடையுமாம்!" என்று கூறி மெல்ல நகைத்தாள்.

"அதனால்தான் ரங்கமாதேவியின் மேனி இன்றளவும் பளபளப்பாக இருக்கிறது போலும்" என்று மோகனாங்கி நினைத்துக் கொண்டாள்.

"மோகனா, பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிரு. நான் வேலைக்காரியிடம் உனக்கு வேண்டிய பதார்த்தங்களையும் வியஞ்சனங்களையும் தயாரிக்கச் சொல்லி விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். புறப்பட்டவளை மோகனா அழைத்து, "அத்தை, நான் பகல் உணவுக்கே தஞ்சைக்குப் போய் விடுகிறேன். ஸ்ரீரங்கத்திலிருந்து தந்தை வருவதற்குள் திரும்பி விடுவதுதான் நல்லது" என்று கூறினாள்.

"ஏன் மோகனா அப்படி? இன்று நான் உனக்குப் பல முக்கியமான விஷயங்களைச் சொல்ல இருக்கிறேனே" என்று வியப்பு மேலிடக் கூறினாள் ரங்கமாதேவி. "இல்லே அத்தே! நான் இங்கு வருவது அப்பாவுக்குத் தெரியாது. என்னைப் போகக் கூடாது என்று கட்டளையிட்டார்" என்று மோகனா வருத்தத்துடன் சொன்னாள்.

நெற்றியைச் சுருக்கிக் கொண்டு தனது கூர்மையான விழியை மோகனா'வின் மீது பதித்தவளாக ரங்கமாதேவி சற்று அழுத்தமான குரலிலேயே கேட்டாள்: "ஓகோ, அப்படியா? உன் அப்பா அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாரா? என்னிடம் நீ வருவதைத் தடுக்கும் அளவுக்கு என்மீது அவருக்கு அவ்வளவு வெறுப்பு போலிருக்கிறது! இருக்கட்டும்; இருக்கட்டும். நான் சொல்கிறேன். நீ போக வேண்டாம். உன் தந்தை ஊருக்கு, நாட்டுக்கு அரசர். எனக்கு அரசர் அல்லர். உனக்கும்தான் அப்படி. நீ இளவரசி - தெரியுமா? இன்று இரவும் இங்கேயே இருந்து நாளைக்குச் சூரியோதயத்திற்கு முன்பு புறப்பட்டுச் சென்று விடலாம்."

"அத்தை, அத்தை! அப்பாவுக்கு உங்கள்மேல் எந்த விரோதமுமில்லை. அதனால் போக வேண்டாம் என்றும் சொல்லவில்லை. இன்று ரங்கராஜம்மா என்னும் பண்டிதை ஒரே மூச்சில் நூறு பாடல்களை இயற்றப் போகிறாளாம். என்னையும் இருக்குமாறு சொன்னார். எனக்கு ஏனோ விருப்பம் இல்லை. வல்லத்திற்குப் போவதாகச் சொன்னேன். போகக் கூடாது என்று சொல்லிவிட்டார்" என்றாள் மோகனா.

"ரங்கராஜம்மாவா" என்று வியப்புடன் கேட்ட ரங்கமாதேவி சிறிது நேரம் மௌனமாயிருந்தாள்.

பிறகு "ரங்கராஜம்மாவின் பாடல்களின் அரங்கேற்றத் திற்காகவா உன்னை வருமாறு சொன்னார்? ஊஹூம், நீ நிச்சயம் போகக்கூடாது. உன் வருங்காலத்தை உத்தேசித்தாவது நீ போகவே கூடாது" என்றாள்.

"ஏன்?" என்று கேட்பதற்கு மோகனா முயன்றாள். அத்தையின் அந்தச் சமய முகபாவம் ஏதும் பேசுவதற்கு இயலாமல் செய்து விட்டது. அதற்குள் அத்தையும் பகல் உணவு ஏற்பாடு செய்வதற்குச் சென்று விட்டாள்.

மோகனாவுக்கு ஏதும் புரியவில்லை. அன்று இரவு வசந்த மண்டபத்தில் நடக்கப் போகும் நிகழ்ச்சியைப் பற்றி அத்தையிடம் சொல்லக்கூடாது என்று தந்தை முதலில் கட்டளை இட்டது அவள் நினைவுக்கு வந்தது.

"ஐயோ சொல்லிவிட்டோமே, ஏதாவது தவறான விளைவுகள் ஏற்படுமோ?" என்று அஞ்சினாள். இன்று முக்கியமான செய்தி ஒன்றைச் சொல்வதாக அத்தை கூறியதும், இதுவரையில் அவள் எதிர்பார்த்திராத சயன அறைக்கு அழைத்துச் சென்றதும், என் வருங்காலத்தை உத்தேசித்தாவது இரவு நிகழ்ச்சிக்கு வசந்த மண்டபத்திற்குச் செல்லக் கூடாது என்று அத்தை கூறியதும் மாறி மாறி அவள் மனத்தில் தோன்றி அவளைக் குழம்பச் செய்தன. சிறிது நேரம் மோகனாவுக்கு ஏதுமே தோன்றவில்லை.

• • •

"மிகவும் ருசியான சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்து விட்டேன் மோகனா!" என்று கூறிக் கொண்டே ரங்கமா தேவி வந்தாள். மோகனாவின் அருகிலே உட்கார்ந்து கொண்டு அவள் தலைக்கேசத்தை வருடியவாறு, "தஞ்சை அரண்மனையில் வேலைக்காரிகள் ஏதாவது, வேலை செய்கிறார்களா, இல்லையா? உன் தலையை யார் வாருகிறார்கள்? அந்தக் கிழக் கோட்டான்தானே? எப்படிச் சிக்குப் பிடித்திருக்கிறது என்று பார்த்தாயா?" என்று சொல்லிக் கொண்டே அவள் தலைப்பின்னலை அவிழ்த்து வாசனைத் தைலத்தைத் தடவிக் கொண்டே சீப்பை எடுத்து மெல்ல வாரலானாள். வாரிக் கொண்டே அவள் பேசினாள்:

"மோகனா, உன் தாயாரும் உன்னைச் சரிவரக் கவனிப்பதில்லை. நீயும் ஒரு பெண்தானே உன் தாய்க்கு? அப்படி இருக்கும்போது உன் நலனை அவள் கவனிக்க வேண்டாமா? ரங்கராஜம்மா தஞ்சை மாளிகையை மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொள்வதை உன் தாயார் பார்த்துக் கொண்டிருக்கலாமா? என்னைக் கண்டால்தான் உன் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. நான் உன் தந்தைக்கு ஏதோ

இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொடுத்துச் சூழ்ச்சி செய்வதாக என் மீது குற்றம் சாட்டினாள். உன் தாயாரை நான் கொலை செய்ய எத்தனித்ததாக அபாண்டமாகக் குற்றம் சாட்டினாள். எனக்குத் தஞ்சை அரண்மனையில் என்ன வேலை? அப்படியெல்லாம் நான் சூழ்ச்சி மனப்பான்மையுடன் இருந்திருந்தால் உன்மீது இவ்வளவு வாஞ்சையாக இருப்பேனா? இன்னும் சொல்லப் போனால் உன்னுடைய நலன்தான் என்னுடைய நலன் என்னும் நம்பிக்கையில் நான் இருக்கிறேன். நான் உனக்குச் செய்ய எண்ணி இருக்கும் பல நன்மைகளை உனக்கு எடுத்துச் சொன்னால் அப்போதுதான் நீ உன் அத்தையைப் பற்றி அறிவாய்."

அத்தை சொல்லிவரும் ஒவ்வொரு வார்த்தையையும் மோகனாவுக்கு வியப்பை அளித்தன. வேதனையையும் அளித்தன. புதிய புதிய உண்மைகள் வெளிப்பட்ட வண்ணமாக இருப்பது அவளுக்குச் சற்று நடுக்கத்தை அளித்தன. கதை சொல்லப் போவதாகக் கூறிவிட்டு அத்தை குடும்ப விஷயங்களெல்லாம் சொல்கிறாளே? எதற்காகத் தன்னிடம் சொல்கிறாள் என்றும் கவலைப்படலானாள் மோகனா. தாய்க்கு நான் ஒரே ஒரு மகள்தானாம். அப்படியென்றால் என் சகோதரன் மன்னார்தாசன் உண்மையிலேயே என் சகோதரனில்லையா? அம்மாவுக்கும் அத்தைக்கும் எதற்காகத் தகராறு ஏற்பட்டது? அம்மாவுக்கு அத்தையைப் பிடிக்கவில்லை என்றால், நான் அடிக்கடி வல்லத்துக்குச் சென்று வருவதை ஏன் அனுமதிக்கிறாள்? என்பன போன்ற விஷயங்கள் அவள் மனத்தில் பெரும் பிரச்சினையைக் கிளப்பிவிட்டன. அத்தை கூறி வருபவை எதையும் தன் மனத்தில் வைத்துக் கொள்ளாதவள் போல் மோகனா நடித்து, "அத்தை, எனக்கு ஏதோ கதை சொல்லப்போகிறேன், மிகவும் முக்கியமான கதை சொல்லப் போகிறேன், என்று சொல்லிவிட்டு வேறு ஏதோ சொல்கிறீர்களே" என்றாள்.

"முக்கியமான கதைதானே மோகனா! நான் சொல்பவை எல்லாம் கதைதான். கதை என்பது என்ன? நடந்த சம்பவங்கள்தாம் கதைகள். கதைகளைப் போல்தான் வீட்டிலும், நாட்டிலும் சம்பவங்கள் நடைபெறும். மோகனா, நீ இன்னும் சிறு பெண் அல்லள். வல்லத்து இளவரசியாக இன்று விளங்கும் நீ, நாளைக்கு வேறு ஒரு நாட்டின் மகாராணியாக விளங்க வேண்டியவள். நீ கவனமாகப் பரிசீலித்து ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டும். நான் இன்று சொல்லப் போவது கதையாக இருந்தாலும், நடந்த சம்பவங்களாக இருந்தாலும் நடக்கப் போகிறவையாக இருந்தாலும் நீ கவனமாக அவற்றைக் கேட்க வேண்டும். தஞ்சாவூருக்கு ஏதோ ஒரு ஆபத்து காத்திருப்பதாக என் மனசில் ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டே இருக்கிறது. அப்படி

நடைபெறாமல் குலதெய்வம் ராஜமன்னார்தான் காப்பாற்ற வேண்டும்" என்றாள். பிறகு பெருமூச்சு விட்டவாறு எழுந்து, "மோகனா சாப்பாடு ஆயத்தமாகி விட்டதை அறிவிக்க அதோ பணிப்பெண் வருகிறாள். நான் இன்னும் ஸ்நானம் செய்யவில்லை. குளித்துவிட்டு ஆராதனையை முடித்துக் கொண்டு வருகிறேன். அதுவரையில் நீ இங்கேயே இரு" என்று கூறிக் குளிக்கும் அறையை நோக்கிச் சென்றாள்.

உச்சி வேளையை அறிவிக்கக் கோட்டை வாசலில் "டாண் டாண்" என்று மணியை அடிக்கும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து எங்கிருந்தோ 'கிணு கிணு' வென்று பூசை மணி வெகு அருகே ஒலிப்பது போல் கேட்டது. சயன அறைக்கு அடுத்தாற்போல் வேறு அறைகள் இல்லை. பின் எப்படி ஒலி அவ்வளவு அருகே ஒலிப்பது போல் கேட்கிறது? என்று எண்ணிய மோகனாங்கி சயன அறையை விட்டு வெளியே வந்தாள், சுற்று முற்றும் பார்த்தாள். ஒன்றும் புலப்படவில்லை. மீண்டும் சயன அறைக்குள் சென்றாள். பஞ்சணை மஞ்சத்தைச் சுற்றி வந்தாள். அறையின் மூலையில் இருந்த ஒரு பூந்தொட்டிக்கருகே வரும்போதுதான் மணியோசை தெளிவாகக் கேட்டது. பூந்தொட்டிக்கருகே எட்டிப் பார்த்தபோது கீழேயுள்ள அறையில் நடப்பவை முழுவதும் தெரிந்தது. பெரிய ரங்கநாதர் பாம்பணையில் பள்ளி கொண்டிருப்பது போன்ற ஓவியம் திரைச்சீலையில் எழுதப்பட்டது சட்டம் போட்டு நடு அறையில் வைக்கப்பட்டிருந்தது. அருகே கிருஷ்ண விக்ரகம் ஒன்று அழகுற விளங்கியது. படத்திற்கு அருகே பெரிய பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

தீப, தூப கற்பூரம் காட்டிவிட்டு ரங்கமாதேவி வணங்கிவிட்டுப் பெரிய பெட்டிகளுக்கு அருகே வந்தாள். அதைத் திறந்தாள். பெட்டியிலே ஏராளமான பொன் ஆபரணங்கள் நிறைந்திருந்தன. அவற்றில் பலவற்றைத் தேடிவிட்டுக் கடைசியில் பதக்கம் வைத்த ஓர் இரத்தின மாலையை எடுத்துக் கொண்டு பெட்டியை மூடிவிட்டாள்.

மோகனாவுக்கு எல்லாம் வியப்பாகவே இருந்தது. பூசை அறையில் இருந்த நகைப் பெட்டிகளும், அந்த அறைக்குச் செல்வதற்கு வழி, வெளியே எவரும் அறியாமல் இருப்பதும் ஆச்சரியத்தை அளித்தன. அந்த ரங்கநாதர் வீற்றிருக்கும் அந்தரங்க அறையில் இன்னும் என்னென்ன மர்மம் இருக்குமோ என்று மோகனாங்கி நினைக்கும்போது அவள் உடல் நடுங்கியது. இன்னும் சில விநாடிகளில் அத்தை வந்து விடுவாள். தான் அந்தரங்க அறையைப் பற்றி அறிந்ததாக காட்டிக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்த வல்லத்து இளவரசி மோகனாங்கி ஒன்றும் தெரியாதவள் போல் மீண்டும் மஞ்சத்தில் வந்து அமர்ந்து விட்டாள்.

# 7. வலையும் தூண்டிலும்

காவேரிக்கரை மண்டபத்தைக் கடந்து முத்துக்குமரன் வெகுதூரம் சென்று விட்டான். வடிவின் கண் வீச்சில் நல்ல வேளையாக நாம் சிக்கவில்லை என்ற மனத்திருப்தியுடன் அவன் சென்றான். பசி காதை அடைத்தது. இன்னும் கொஞ்ச தூரம் சமாளித்துக் கொண்டு சென்றால் குடந்தை கும்பேச்வரர் கோயிலை அடைந்து விடலாம் என்ற எண்ணத்தில் அவன் குதிரையைத் தட்டிவிட்டான்.

கும்பேச்வரர் கோயிலருகே உள்ள பூக்கடைக்காரரைச் சந்திக்குமாறு மார்த்தாண்ட வர்மர் சொல்லி அனுப்பியிருந்தார். கோயிலில் பூக்கடை வைத்திருக்கும் பூக்கடைக்காரர் பொன்னுரங்கம் மதுரை நாயக அரசர்களுக்கு மிகவும் வேண்டியவர். தஞ்சையினின்று மதுரைக்கு அவ்வப்போது அரசியல் விவகாரங்களைச் சேகரித்து அனுப்பும் பெரிய வேலையை அவர் செய்து வந்தார். சோழ நாட்டில் அவருக்குத் தெரியாதவர்களே இல்லை எனலாம். செஞ்சிக் கோட்டையை லிங்கமநாயகர் முற்றுகையிட வந்து வீணே காலதாமதப் படுத்துவதையும் செஞ்சிக்கோட்டை ஏகோஜிக்குத் தூது அனுப்பியிருப்பதையும் மதுரைக்கு ஒரு சேவகன் மூலம் செய்தி அனுப்பியவரும் அவரேதான். அதனால் மேற்கொண்டு விவரம் அறிந்து மதுரைக்குத் தெரிவிக்க முத்துக்குமரனை மார்த்தாண்ட வர்மர் அனுப்பினார், பூக்கார பொன்னுரங்கத்திடம்.

குடந்தையின் எல்லையை முத்துக்குமரன் அடையும் போது, உச்சி வானிலிருந்து கதிரவன் மெல்ல இறங்கும் போதாகிவிட்டது. மதுரையைத் தவிர வேறு நகரைப் பார்த்தறியாத முத்துக்குமரனுக்குக் குடந்தையின் கலகலப்பு அதிசயமாயிருந்தது. நடுப்பகல் வேளையிலும், கொளுத்தும் வெயிலில் சுறுசுறுப்பாக மக்கள் தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். 'கடக் கடக்' என்று தறியில் ஊடும் பாவும் செல்வதால் ஏற்படும் ஓசை வீடுகளிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது. சில வீடுகளிலிருந்து தாங்கள் நெய்த புடைவைகள் சில கொண்ட மூட்டையை எடுத்துக்கொண்டு வீதியில் வெயிலையும் பொருட்படுத்தாமல் சிலர் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் பேசும் பாஷை தமிழிலிருந்து மாறுபட்டதாக இருந்தது.

அந்த மொழியின் ஒலி முத்துக்குமரனும் அறிந்தது தான். மதுரையில் அம்மொழி பேசும் வகுப்பினர் பலர் முத்துக்குமரனுக்கு நண்பர்கள்.

வடக்கே சௌராஷ்டிர நாட்டினின்று மதுரையில் குடியேறி ஆடைகள் நெய்யும் தொழிலிலும், அவற்றிற்கு விதவித வண்ணச் சாயம் தோய்க்கும் தொழிலிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

அவர்களுடைய பாஷையில் பேசினால் அவர்கள் சந்தோஷப்பட்டு முத்துக்குமரனுடைய பசியைப் போக்க உடனே வழி செய்திருப்பார்கள்.

ஆனால், அவனுக்கே இயற்கையாக இருந்த கூச்சம் அப்படிச் செய்வதைத் தடுத்தது.

"கும்பேச்வரர் கோயில் எங்கே இருக்கிறது?" என்று விசாரித்துக் கொண்டு முத்துக்குமரன் அக்கோயிலை அடைந்தான். ஒரு பூக்கடை மட்டும் அங்கு இருந்தால் எளிதில் அவன் பொன்னுரங்கம் கடை எது என்று கண்டிருப்பான். கோபுர வாயிற்படியருகே பல பூக்கடைகள் இருந்தன. அதனால் அவன் ஒரு குறிப்பிட்ட கடையில் விசாரிக்குமாறு நேர்ந்தது.

"அதோ அந்தக் கடைதான்" என்று ஒருவர் சுட்டிக் காட்டி, "இன்று பொன்னுரங்கம் கடையைத் திறக்க வில்லையே, சுவாமி மலையில் வியாபாரம் நன்றாக நடக்குமென்று அங்கே போய்விட்டார். சாயங்காலம்தான் வருவார்" என்றார்.

முத்துக்குமரனுக்கு 'பக்'கென்றது. மாலை வரையில் அவனுடைய கதி? குதிரையைப் பிடித்துக்கொண்டு அவன் அப்படியே அயர்ந்து நின்றுவிட்டான்.

'சரி இப்படியே இருந்தால் மயங்கி விழுந்து விடவேண்டியதுதான். எங்காவது ஒரு கவளம் சோறு கிடைக்குமா என்று பார்ப்போம்' என்ற எண்ணத்தில் மெல்ல நடந்தான்.

ஓரிடத்தில் ஒரு வீட்டிலிருந்து ஏராளமாகச் சாப்பிட்ட எச்சில் இலை வெளியே வந்து விழுந்து கொண்டிருந்தது. எச்சில் இலைகள் வெளியே கிடந்ததில் நாய்களும் பிச்சைக்காரர்களும் போட்டி போட்டுக் கொண்டு அவற்றில் ஏதாவது மீதி இருக்கிறதா என்று பார்க்க முனைந்து கொண்டிருந்தனர். அதுவோ சத்திரம். நாள்தோறும் வருபவர்களுக்கு ஒருவேளைச் சாப்பாடு உச்சி வேளையில் அங்கே போடுவார்கள். மன்னர் விஜயராகவர் நாள்தோறும் தன் ஆட்சியின் கீழுள்ள முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு உணவு அளித்து வருவதைத் தனது தரும காரியங்களுள் முக்கியமானதாகக் கொண்டிருந்தார். அந்த முறையில் பல இடங்களில் சத்திரங்கள் கட்டி வைத்திருந்தார். முத்துக்குமரன் அப்போது கண்டது அவ்வகைச் சத்திரங்களுள் ஒன்றுதான்.

முத்துக்குமரன் சத்திரத்திற்குள் துணிந்து நுழைந்தான். உடலெங்கும் புழுதி படிந்திருந்தது. வியர்த்துக் கொட்டியிருந்தது. களைப்பு முகத்தில் தாண்டவமாடியது.

எதிரே இரண்டு பேர் ஓர் அண்டாவைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்தனர். அவர்களைப் பார்த்து முத்துக்குமரன்,

"ஐயா, சாப்பாடு எங்கே போடுகிறார்கள்?" என்று கேட்டான். அவன் குரல் கம்மியிருந்தது.

அண்டாத் தூக்கிகள் அவன் பேச்சுக்கு மதிப்பு வைக்காமலேயே, "சாப்பாடு ஆகிவிட்டது. நாளைக்குத் தான்" என்று சொல்லிக் கொண்டே விரைந்தனர். முத்துக்குமரனுக்குக் கோபம் பொங்கியது. ஆனால், அடக்கிக் கொண்டு சத்திரத்தின் பின்கட்டிற்குள் நுழைந்தான்.

வேலைக்காரி குழம்பும் ரசமும் கலந்து ஒரு வாளியில் கொட்டி அதில் சாதத்தைப் போட்டு ஓர் அகப்பையால் கலந்து கொண்டிருந்தாள். இரண்டும் கலந்த ஒருவித மணம் முத்துக்குமரன் நாசியைத் துளைத்தது. அவனது பசியை மேலும் அதிகரிக்க வைத்தது. இதுவரை அவன் அடக்கி வைத்திருந்த பொறுமையையும் பொங்கி எழச் செய்தது.

வாளியிடம் விரைந்த முத்துக்குமரன் ஒரு கணப்பொழுதுதில் இரண்டு கைகளால் முடியும் அளவுக்கு வாரி எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான். பரபரப்பும் ஆவலும் மிகுந்து அவன் சாப்பிடும் வேகத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனாள் அந்த வேலைக்காரி.

முத்துக்குமரன் பசி ஓர் அளவுக்குத் தீர்ந்தவுடன் வேலைக்காரியை நிமிர்ந்து பார்த்தான். அப்படிப் பார்க்க அவனுக்கே வெட்கமாக இருந்தது. "ஐயாவுக்கு ரொம்பப் பசி போலிருக்கு. வெகுதூரம் நடந்து வராப் போல இருக்கு" என்று அவள் பரிதாப உணர்ச்சியுடன் கேட்டாள். ஆனால், தன்னைப் பற்றி அவள் அறிய முற்படுவதாகவே அவன் நினைத்து, "இல்லை... இல்லை... அதெல்லாம் இல்லை... பசி... பசி அவ்வளவு தான்" என்று குழறிக் கொண்டே சொல்லி, "மன்னிச்சிக்கோ அம்மா. உங்களைக் கேட்காமலேயே நான் சோற்றை எடுத்துக் கொண்டு விட்டேன்" என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினான்.

"அதனாலென்னங்க... பசியோட வரவங்களுக்குச் சோறு போடத்தானே இந்தச் சத்திரம் இருக்கு. ஆனா வாடிக்கையா தினமும் இங்கேயே சாப்பிடுவதை வழக்கமாகச் சிலர் வைச்சிருக்காங்க. ராஜா அதையெல்லாம் எங்கே கவனிக்கிறாங்க" என்றாள்.

வேலைக்காரி இவ்வளவு தூரம் கவனித்து வைத்திருப்பது முத்துக்குமரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளிடம் பேச்சுக் கொடுத்தால் தஞ்சாவூரைப் பற்றி இன்னும் விவரம் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் 'ஏதோ, தஞ்சாவூர் ராஜா நல்ல மனுஷர் போலிருக்கு. தினமும் இப்படிச் சோறு போட விடுதி கட்டியிருக்காரே" என்றான்.

"அவரு குணம் இந்த விஷயத்திலெல்லாம் நல்லது தான். இங்கே மட்டும்தானா இப்படி, தஞ்சாவூரிலேயே தினந்தோறும்

பன்னிரண்டாயிரம் பேருக்குச் சோறு போடறாங்க. காலையிலேயே பொழுது பொறப்படுங்காட்டியும் சிரங்கம் போயி சாமியைக் கும்பிட்டுவிட்டு வந்துதான் சாப்பிடறாங்க. அத்தோடு பன்னிரண்டாயிரம் பேரும் சாப்பிட்டுட்டாங்களான்னு தெரிஞ்சாத் தான் அவங்க சாப்பிடுவாங்க" என்றாள்.

முத்துக்குமரன் ரொம்பவும் சுவாரசியமாகக் கேட்பவன் போல் நடித்து, மன்னரைப் பாராட்டுவதாகப் புலப்படுத்திக் கொண்டு, "அவ்வளவு பெரிய பக்திமானா, தர்மசிந்தனையுள்ளவரா? ரொம்ப நாள் வாழ வேண்டும். நல்ல புள்ளை குட்டிகளைப் பெத்துக்கிட்டு நல்ல வம்சம் விளங்குமாறு வாழ வேண்டும்" என்றான்.

"மகாராஜா பல காலம் வாழ்வாரு. அவருடைய குணத்துக்காக. ஆனால், அவரு புள்ளே இருக்குதே யுவராசா மன்னார், அது கொணந்தான் நல்லாத் தோணலே, பெண் பிள்ளைங்களெப் பாத்தா பல்லை இளிக்கிற யுவராசா இப்பவே இப்படின்னா நாளைக்கி ராசாவானப்புறம் எப்படியோன்னு சனங்களுக்குக் கவலை" என்றாள் அந்த வேலைக்காரி.

"ஓகோ, அப்படியா! நல்ல ராஜாவுக்கு ஒரு கோடாலிக்காம்புப் பிள்ளைன்னு சொல்லு. ஹூம்... அப்படித்தான் உலகத்திலே இருக்குது."

"மகாராஜா இவரைத் திருத்தறதில்லையா?" என்றான் முத்துக்குமரன்.

வேலைக்காரி இப்படியும் அப்படியுமாகப் பார்த்து விட்டு, "பெரிய இடத்து வம்பு நமக்கெதுக்கு. இங்கேயே மடப்பள்ளி ஆளுங்களுக்கு என்னைக் கண்டா முந்நியே புடிக்கல்லே. இப்ப ஒண்ணுன்னா ரெண்டு சொல்லிக் கொடுத்துடுவாங்க. மகாராஜா எங்கே கவனிக்கிறாங்க? அவனவன் இஷ்டப்படி நடக்கிறதுக்கு விட்டுடறாங்க. ராயசம் வெங்கண்ணா இருக்காரே தெரியுமா?" என்று வேலைக்காரி கேட்டுவிட்டுச் சற்று நிறுத்தினாள்.

யாரோ புதிதாக வந்திருக்கும் ஆளிடம் இப்படியெல்லாம் பேசுகிறோமே என்று அவள் நினைக்கவேயில்லை. அவளுக்கு ஏதோ ஒருவித ஆத்திரம். அதைக்கொட்டித் தீர்க்க இப்போது சந்தர்ப்பம் கிடைத்து விட்டது!

ராயசம் வெங்கண்ணாவை முத்துக்குமரனுக்கு எப்படித் தெரியும்? 'தெரியும்' என்று சொன்னால் வெங்கண்ணாவைப் பற்றியும் அவனது குணாதிசயங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள முடியாமற் போய் விடும். வெங்கண்ணாவைத் தெரியாது என்று சொன்னாலோ, இந்த நாட்டிற்கே புதிய ஆசாமி என்று தன்னை அவள் நினைத்துக்

கொள்வாள். 'என்ன சொல்வது?' என்று ஒரு கணம் முத்துக்குமரன் யோசித்தான்.

"ஓகோ, வெங்கண்ணாவா? அப்படியா!" என்றான்.

"என்னய்யா, வெங்கண்ணாவைப் பத்தி சொன்னாக்க உடனேயே நீங்க சபிக்க வேண்டாமா? அந்தப் பொல்லாத ஆளைப்பத்தி உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறதே. ஆமாம், உங்களுக்கு இந்த ஊரில்லை போலிருக்கிறது. ரொம்பத் தூரம் நடந்து வந்திருக்காப் போலே இருக்குது. ஆமாம்; ஐயாவுக்கு எந்த ஊரு?" என்று கேட்டாள்.

'ஆகா! அவள் எதைக் கேட்கக் கூடாது என்று நினைத்தோமோ அதை அவள் கேட்டுவிட்டாள். என்ன சொல்வது?' என்று சிந்தித்துவிட்டு முத்துக்குமரன் மெல்ல நகைத்து, "ஆமாம்! ஆமாம்! எப்படி அவ்வளவு சரியாகக் கேட்டு விட்டாய்? எனக்கு இந்த ஊரில்லைதான். ஆனால், என் அப்பா தஞ்சாவூர் அரண்மனையில் வேலை செய்கிறார். நான் சிறுபிள்ளையாய் இருக்கும் போதே எங்கம்மா அப்பாவிடம் கோபிச்சுக்கிட்டு செஞ்சிக்குத் தன் தாய் வீட்டிற்குப் போய்விட்டாள். இவ்வளவு நாளா நான் என் அப்பாவைப் பார்த்ததே கிடையாது. நானா ஆளாகி வளர்ந்து அப்பாவைப் பார்க்கணும்னு தஞ்சாவூருக்குப் புறப்பட்டுட்டேன். வரவழியிலே வவுத்துக்கு ஏதும் கிடைக்கல்லே. பசி காதை அடைச்சுது. நல்ல வேளையா நீ சோறு போட்டே. இல்லே, இல்லே உன்கிட்டேயிருந்து கேட்காமெ எடுத்துச் சாப்பிட்டுட்டேன்... ஹி... ஹி" என்றான் முத்துக்குமரன்.

அந்த வேலைக்காரிக்கு அப்படியொன்றும் அதிக வயதாகி விடவில்லை. இருபதுக்குள்ளேதான்! ஆனால், அவள் தோற்றம் வயதைச் சற்று அதிகமாகக் காட்டியது. முத்துக்குமரன் பேசும்போது அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். இளம் மீசையும், பரந்த மார்பும் 'பளி'ச்சென்று முத்துப்போல் சிரிக்கும்போது ஒளிவீசும் பல் வரிசையும் அவளை ஏனோ கிறங்க வைத்தன. முதலில் முத்துக்குமரன் தன்னை 'நீங்கள், தாங்கள்... அம்மா,' என்றெல்லாம் அழைத்துப் பேசியது அவளுக்குப் பிடிக்கவில்லை. பிறகு அவன் ஏக வசனத்தில் பேச ஆரம்பித்தவுடன் தான் அவள் மனம் சமாதான மடைந்தது. ஏதோ இருவரிடையேயும் நெருக்கம் ஏற்பட்டுவிட்டது போல் உணர்வு அவளுக்குத் தோன்றியது. அவனுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றியது.

அவளுக்கு விவரம் தெரியாத வயதிலேயே கலியாணம் ஆகிவிட்டது. ஆனால் அவள் புருஷன் எங்கேயோ போய் விட்டான். பருவம் அடைந்த பிறகும் அவள் கணவன் வரவில்லை. அவள் முகம்

கூட அவளுக்கு மறந்து விட்டது. வயதான பாட்டி ஒருத்தி தான் அவளுக்கு ஆதரவு! அவள் அந்தச் சத்திரத்தில் பல காலமாக வேலைக்கு இருந்தவள். இப்போது அவள் பேத்தி - முருகாயி - சத்திரத்து வேலையைக் கவனித்துக் கொண்டு அங்கேயே புழக்கடைப் பக்கத்தில் சிறு குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்து வந்தாள். குணம் ஒரு மாதிரிதான்! அவள் என்ன செய்வாள்? சூழ்நிலையும் காலமும் அப்படிச் செய்துவிட்டன. ஹூம்! இப்போது முத்துக்குமரனைப் பார்த்தவுடன் அவள் மனத்தில் ஒரு விதச் சலனம் ஏற்பட்டது.

- "வெங்கண்ணாவைப் பற்றிச் சொன்னேனா?" என்று முருகாயி முத்துக்குமரனிடம் மெல்ல நெருங்கி வந்து மெதுவான குரலில் பேசுவது போல் ஆரம்பித்தாள்.

"இல்லை, சொல்லவில்லையே!" என்று கூறிச் சிரித்தான் முத்துக்குமரன்.

"ஐயோ, இப்படி நின்னுக்கிட்டே பேசினா காலு நோவாதா. அதோ என் குடிசை! அங்கேயே போயி ஒக்காந்துக்கிட்டுப் பேசுவோம். இனிமே பொளுது விடிஞ்சுதான் நீ தஞ்சாவூருக்குப் போவணும்!" என்று முருகாயி தன் வலையில் அவனை இழுப்பதற்குத் தூண்டிலை வீசினாள்.

முத்துக்குமரனுக்குப் பல செய்திகளை அவளிடமிருந்து அறிய வேண்டும் என்று தோன்றியது. அப்படி அறிவதற்காக அவளுடன் அவளுடைய குடிசையை நோக்கிச் சென்றான்.

## 8. மீண்டும் அவள்

முத்துக்குமரனுக்கு இதுபோல் வெளியூர்களில் ஒற்றர் வேலை செய்வது புதிது. அனுபவம் இனிமேல் தான் ஏற்படவேண்டும். ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நொடியும் என்ன நேருமோ, என்று அவனுக்குத் தெரியாது. அந்தந்தச் சமயத்தில் நேருவதைப் புத்திசாலித்தனத்தினால் சமாளிக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருப்பது விந்தையான அனுபவம்.

முருகாயியை அவன் முன்பின் அறியமாட்டான். சத்திரத்திற்குள் அகோர பசியுடன் நுழைந்ததும், முருகாயி தன் உபயோகத்துக்காக குழம்பு, ரசம் இவற்றைக் கலந்து கதம்பச் சாப்பாட்டைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது, தான் அதைப் பறித்துச் சாப்பிட்டதும், அவள் அதற்குக் கோபப்படாமல் இன்முகத்துடன் பேசியதும் அவனுக்கு வியப்பை அளித்தன.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் பேச்சில் குழைவு ஏற்படுவதையும், அடிக்கொரு தடவை அவள் விழிகளைச் சுழற்றுவதையும், களுக்கென்று சிரிப்பதையும் கண்ட முத்துக்குமரனுக்குச் சற்றுச் சந்தேகம் தோன்றியது.

ஒருவேளை சித்தம் கொஞ்சம் கலங்கியவளாக இருப்பாளோ என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. எப்படியிருந்தாலும் முருகாயி பல செய்திகளை அறிந்து வைத்தவளாக இருக்கிறாள். சத்திரத்துக்கு வரும் பலர் பேசுவதை அறிந்து விஷயங்களைக் கிரகித்துக் கொண்டிருக்கிறாள். அதனால் தனக்கு வேண்டிய துப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தினால் அவளுடைய சேஷ்டைகளுக்கு ஏதும் மறுப்புச் சொல்லாமல் பின் தொடர்ந்தான்.

சூரியன் மேற்குத் திசையில் வேகமாய் இறங்கிக் கொண்டிருந்தான். சத்திரத்தின் பின்புறத்தில் தோட்டம் விசாலமாக இருந்தது. ஏராளமான தென்னை மரங்களும், மாமரங்களும் நிறைந்திருந்தன. பெரிய துரவு இருந்தது. அதில் ஏற்றம் போடப்பட்டிருந்தது. ஆனால், அந்த ஏற்றத்தைச் சமீப காலத்தில் யாரும் உபயோகித்ததாகத் தெரியவில்லை. அதனால் ஏற்ற நீர் ஓடிவரும் கால்வாய் தூர்ந்துபோய்க் காணப்பட்டது. எங்கும் புதர் மண்டிக் கிடந்தது. பத்து பதினைந்து மூங்கில் மரங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு மூலையில் வளர்ந்திருந்தன. அவற்றின் காய்ந்த இலைச் சருகுகள் கீழே விழுந்து மேடிட்டுக் கிடந்தன.. அதன்மீது ஓர் ஓணான் ஓடும்போது 'சரசர'என்று ஒலி ஏற்பட்டது.

குடிசைக்குச் செல்ல ஒற்றையடிப் பாதை இருந்தது. அதன் வழியே முருகாயியும் முத்துக்குமரனும் சென்றனர். முத்துக்குமரன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். சத்திரத்துப் புழக்கடை வழியாக ஒரு வேலைக்காரக் கிழவன் ஏதோ குப்பைக் கூடையைக் கொட்டிவிட்டுச் சென்றான்.

முருகாயியின் குடிசை சிறியதாக இருந்தாலும் உள்ளே எல்லாம் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு கயிற்றுக் கட்டில் இருந்தது. பார்த்தால் ஏழையைப் போல் தோன்றும் முருகாயி சேர்த்து வைத்திருக்கும் பண்டங்கள் அவள் வறுமை நிலையைப் புலப்படுத்த வில்லை. முருகாயி ஒரு வேடதாரி என்ற முடிவுக்கு முத்துக்குமரன் வந்து விட்டான். அவளிடம் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும் என்றும் எண்ணினான். அப்போதே அங்கிருந்து போய்விடலாமா? அவனைத் தடுப்பவர்கள் யாருமில்லை. ஆனால் தஞ்சை மன்னரின் ராயசமாக விளங்கும் வெங்கண்ணாவைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது என்ற எண்ணத்தில் அவன் முருகாயியின் குடிசைக்குள் நுழைந்து அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தான்.

அந்த வெயில் வேளையில் குடிசைக்குள் இருப்பது குளுகுளுவென்றிருந்தது. 'அப்பாடா' என்று கூறிக் கொண்டே தலைப்பாகையைக் கழற்றினான் முத்துக்குமரன்.

"உம், வெங்கண்ணா ரொம்பவும் நல்லவர் என்றா சொன்னாய்" என்று முத்துக்குமரனே பேச்சைத் தொடங்கினான். அவனுக்குப் பயம்; எங்கே எந்தச் செய்தியையும் சொல்லாமல் அவள் தன் விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றிக் கொண்டு விடப்போகிறாளோ என்று.

முருகாயி அவனை ஒருமுறை உற்றுப் பார்த்தாள். பிறகு "வெங்கண்ணா நல்லவரென்று நான் எங்கே சொன்னேன்? அவன் ஏதோ சூழ்ச்சிகள் செய்கிறான். அடிக்கடி இந்த சத்திரத்திற்கு வருகிறான். இந்தச் சத்திரத்துத் தலைவரிடம் ஏதோ கொடுத்துவிட்டுப் போகிறான். செஞ்சியிலிருந்து ஆட்கள் வருகிறார்கள். அவர்கள் ஏதோ கொடுக்கிறார்கள். எல்லாம் மர்மமாகவே இருக்கிறது" என்று கூறி அவனருகே மிகவும் பழக்கப்பட்டவள் போல் உட்கார்ந்தாள். அவனது மேல் அங்கியைத் தொட்டு, "அடடா, இதென்ன தெப்பமாக நனைந்திருக்கிறது?. கழற்றுங்கள், கழற்றுங்கள்" என்றாள்.

அதுவும் சரியென்றே பட்டது முத்துக்குமரனுக்கு. மேல் அங்கியைக் கழற்றிக் கொண்டே, "இந்தச் சத்திரத்திற்கு வருபவர்கள் எல்லாம், சூழ்ச்சிக்காரர்கள் என்று சொல்லிவிட முடியுமா? இதோ நான் கூடத்தான் வந்திருக்கிறேன்" என்றான் முத்துக்குமரன்.

முருகாயி நகைத்தாள். "அப்படிச் சொல்வேனா என் ராசாவை" என்று கூறி மெல்ல அவன் மேல் சாய்ந்தாள். முத்துக்குமரன் திடுக்கிட்டு, "என்ன இது, ஏதோ நீ கூப்பிட்டே. வெங்கண்ணாவைப் பற்றிச் சொல்கிறாயே என்று நான் இங்கே வந்தால் இப்படிச் செய்கிறாயே எங்கம்மாவுக்குத் தெரிந்தால் ஊக்கும்..." என்று கட்டிலை விட்டு எழுந்த முத்துக்குமரன் கரத்தைப் பிடித்து உட்காரச் சொல்லி, "கோவிச்சுக்காதே என் ராசா! உன்னை என் குடிசைக்கு ஏன் அழைத்தேன் தெரியுமா" என்று குழைந்தாள்.

"தெரியாது."

"உன்னிடம் நான் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறேன் தெரியுமா?"

"தெரியாதே."

"நீ திடீரெனச் சத்திரத்திற்குள் நுழைந்து வாணலியிலிருந்து சோற்றை எடுத்ததற்கு இன்னொருத்தராக இருந்து விட்டால் நான் சும்மா இருக்க மாட்டேன். நீ செய்ததற்கு நான் ஏன் வாயை மூடிக் கொண்டிருந்தேன் தெரியுமா?"

"தெரியாது! தெரியாது! தெரிந்திருந்தால் நான் இங்கே வந்திருப்பேனா?" என்று முத்துக்குமரன் கூறினான்.

“உம்மேல எனக்கு ஏனோ ஒரு வித...”

“ஒரு வித...”

“ஆமாம், போ... உனக்கு நான் எல்லாத்தையும் சொல்லித் தானாகணுமா? நீ சின்னப்புள்ளையா?” முருகாயி பொய்க் கோபமும், சிணுங்கலும் கொண்டு பேசினாள்.

முருகாயியின் பேச்சில் மாறுதல் ஏற்படுவதைக் கவனித்த முத்துக்குமரன், “நான் எங்கம்மாவுக்குச் சின்னப்பிள்ளைதான். எவ்வளவு நாட்கள் சின்னப் புள்ளையா இருக்குறதுன்னுதான் எங்கப்பாவைத் தேடிப் புடிச்சு அங்கே பொழைக்கப் போன்னு அம்மா அனுப்பினாங்க. நானும் இதுவரைக்கும் பொம்பளைங்க பக்கத்திலேகூட வந்தது கிடையாது. ஆமாம்!” என்றான்.

அவனது களங்கமற்ற பேச்சில் நம்பிக்கை கொண்ட முருகாயி, “தஞ்சாவூருக்குப் போறேங்கறே. ஒலகம் அறிஞ்சாத்தானே நல்லது...” என்றாள்.

“அதற்காகத்தான் நான் தஞ்சாவூரைப் பற்றியும், தஞ்சாவூர் மகாராஜாவைப் பற்றியும், வெங்கண்ணாவைப் பற்றியும் கேட்கிறேன். ரொம்பப் பேரு பொல்லாதவங்க இருந்தா அங்கே எதுக்குப் போறது?” என்று முத்துக்குமரனும் தன் குரலை மாற்றிக் கொண்டு குழைந்தான்.

முருகாயி காரணமில்லாமல் சிரித்தாள். “தஞ்சாவூரிலே இருக்கறவங்க அத்தனை பேரும் பொல்லாதவங்க இல்லே. மகாராசாவுக்குக் கடவுள் பக்தி அதிகம். பக்தி நிறைஞ்ச மனுஷனைப் பார்த்தா அவருக்கு ரொம்பவும் பிடிக்கும். வெங்கண்ணா அந்தக் குணத்தை வைத்துக் கொண்டு தனக்குச் சௌகரியம் செய்து கொள்கிறான்”.

“உனக்கு ரொம்ப ரொம்ப விஷயமெல்லாம் தெரிஞ்சிருக்கே!” என்று கூறிக்கொண்டே முத்துக்குமரன் மெல்ல அவளை நெருங்கினான்.

“இந்த முருகாயிக்குத் தெரியாம வடக்கேயும் தெற்கேயும் ஒரு சமாச்சாரமும் போவாது” என்று முருகாயி பெருமையுடன் சொல்லிக் கொண்டாள்.

“மகாராஜா உன்னிடம் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாரா?” என்று முத்துக்குமரன் சொல்லி சிரித்தான்.

“அடி ஆத்தே! மகாராசா பார்வை என்மேல் விழுந்து விட்டா நான் இப்படியா இருப்பேன். அதில்லே சங்கதி. சத்திரத்துக்கு வரும் மிகவும் முக்கியமான பேருங்க ரகசியமா பேசுவதற்கு இங்கே வந்துடுவாங்க. நான் குடிசைக்கு வெளியே இருப்பேன். அவுங்க பேசறது எல்லாம்

எனக்குப் புரியும். சில பேர் தெலுங்குலே பேசுவாங்க. எனக்குத் தெலுங்கு நன்னாத் தெரியும்."

"நீ மகா கெட்டிக்காரி. நான் உன்னைச் சந்தித்ததிலே ரொம்பவும் சந்தோஷம்."

"ரொம்பவும் புகழாதீங்க. உங்களைப் பார்த்தவுடனே எனக்கு மனசிலே இத்தினி நாளா இல்லாத ஒரு பிரியம், பொறந்துட்டது. அதனாலதான் உங்ககிட்டே இதெல்லாம் சொல்றேன்" என்றாள் முருகாயி.

முத்துக்குமரனுக்குக் களைப்பு மேலிட்டுத் தூக்கம் வந்தது. வாசலில் குதிரை கட்டப்பட்டிருப்பதும் அதற்குத் தீனி இதுவரையில் கொடுக்காததும் அவன் நினைவுக்கு வந்தன. பூக்கடை பொன்னுரங்கத்தைச் சந்திக்க வேண்டும் என்பதையும் அவன் மறக்கவில்லை. முத்துக்குமரன் கொட்டாவி விடுவதைப் பார்த்த முருகாயி, "அப்படியே சற்றுக் கண்ணயரு. மீதி ராவுக்குப் பார்த்துக் கொள்ளலாம்" என்றாள்.

"வெளியே குதிரை இருக்குது. அதுவும் என்னைப் போலக் களைச்சிருக்கும்" என்று கூறிச் சிரித்தான் முத்து.

"அடடா... சொல்லவேயில்லியே? வாயில்லாச் சீவன் வாடுமே... இதோ போயி தண்ணிகாட்டி, தீனி போட்டுட்டு வரேன். நீங்க இப்படியே தூங்குங்க" என்றாள் முருகாயி.

முத்துக்குமரன் கண்களைத் தூக்கம் ஆட்கொண்டு தன் வசமாக்கியது. எவ்வளவு நேரம் தன்னை மறந்து தூங்கினானோ அவனுக்கே தெரியாது. தூக்கம் ஓரளவுக்குக் கலைந்து விழிப்பு வந்த சமயம் வெளியே யாரோ பேசும் குரல் கேட்டது. ஒரு குரல் முருகாயியினுடையது. மற்றொன்று சற்றுக் கட்டைக் குரல். அது ஆண் குரலாயிருக்க வேண்டும்.

"நல்ல வேளையாச் சொன்னீங்களே! இப்பவே தஞ்சாவூருக்குப் போவதற்கு ஏற்ற ஆசாமி இருக்கிறார்" - இது முருகாயியின் குரல்.

"நம்பிக்கை வாய்ந்தவரா?" - இது கட்டைக் குரல்.

"நம்பிக்கை இல்லாதவராக இருந்தா சேர்க்கவே மாட்டேனே, உங்களுக்குத் தெரியாதா? சற்று ஒரு மாதிரியா நடந்து கொண்டால்தான்... என் விஷயம் உங்களுக்குத் தெரியுமே" - முருகாயி அழுத்தந் திருத்தமாகப் பேசினாள்.

"தஞ்சாவூருக்கு அந்த ஆள் போவானா?"

"செஞ்சியிலிருந்து வருகிறாராம். தஞ்சாவூரிலே அவங்க அப்பா இருக்கிறார்களாம். அவுங்களைப் பார்த்ததேயில்லையாம். அவர்களைத்

தேடித்தான் போகிறாராம். முதல் பார்வையிலேயே ஆளு ரொம்ப நல்லவர் என்கிறது தெரிஞ்சிட்டுது!"

"ஓகோ, அதனாலேதான் பகல் வேளையிலே குடிசைக்குக் கூட்டி வந்துவிட்டாயா? நானுந்தான் இத்தனை வருஷமா இருக்கேனே... ஒரு நாளைக்காவது என்னைக் கூப்பிட்டிருக்கியா? எவ்வளவு சௌகரியம் செஞ்சு தர்ரேன், ஒரு தடவை தொட்டுப் பேசக்கூடச் சம்மதிக்க மாட்டேங்கிறியே, உம்; நான் என்ன வாலிபப் பையனா? கிழவனைக் கண்டா யாருக்குப் பிடிக்கும்..." என்றது கட்டைக்குரல்.

"சரிதான், உங்க பழைய பாடத்தை நிறுத்திவிட்டு விஷயத்துக்கு வாங்க. வந்த காரியத்தைச் சொல்லுங்க..." என்று கண்டிப்பாய்ப் பேசினாள் முருகாயி.

"கோவிச்சுக்காதே முருகாயி. செஞ்சியிலிருந்து ஓலை எடுத்துக்கிட்டு ஒரு ஆசாமி வந்திருக்கான். அவனுக்குக் குதிரை ஏறவும் தெரியாது. தஞ்சாவூருக்கு வழியும் தெரியாது. அந்த அழகிலே மதுரைக்கு வேறு போவணுமாம். வெங்கண்ணாவுக்குத்தான் கடிதம் கொண்டாந்திருக்கானாம். ரொம்பவும் முக்கியமான செய்தியாம்..."

"முக்கியமான செய்தியை வேறே ஒருத்தரிடம் கொடுக்கிற ஆளு யாரய்யா? அவரு மொகத்தைப் பார்க்கணும். நெனைச்சவங்க கிட்டே சமாசாரத்தைச் சொல்லி அனுப்பறவங்களும் புத்திசாலி. அதைக் கொண்டு வந்தவனும் புத்திசாலி. அதைச் சொல்ல வந்தீங்களே நீங்க ரொம்ப ரொம்ப...?"

"மொதல்லே சொன்னியே முருகாயி உன் குடிசைக்கு வந்திருக்கிற ஆளு நம்பிக்கையானவன்னு; தஞ்சாவூருக்கு அவன்கிட்டே எந்த விஷயத்தையும் சொல்லியனுப்பலாம்னு; இப்ப என்னடான்னா, செய்தி அனுப்பிச்சவனை, கொண்டாந்த என்னை ஒரு மாதிரியாப் பேசறியே. அப்படி ஒருத்தரும் முட்டாளுங்க இல்லே. செஞ்சியிலே என் சொந்தக்காரரு சொல்லித்தான் அந்த ஆளு வந்திருக்கான். என்னைத்தான் தஞ்சாவூருக்குப் போவச் சொல்றான். நீயே சொல்லு, என்னாலே முடியுமான்னு...?"

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவியது. பிறகு, "சரி, சரி. குடிசைக்குள்ளே அந்த மனுசரு நல்லா ஒறங்கறாரு. அவரு எழுந்திருக்கட்டும். உங்க ஆசாமியையும் கூட்டியாங்க. அதோடு ராவுக்கு ரெண்டு எலைச் சோறு கொடுத்தனுப்புங்க" என்று முருகாயி சற்றுக் கண்டிப்பான குரலில் கூறினாள்.

"ஓகோ, இங்கே கொடுத்தனுப்பணுமா? சரிதான் மவராசி" என்று கூறிவிட்டுச் சத்திரத்துத் தலைவர் சென்று விட்டார். முருகாயி குடிசைக்குள் நுழைந்து சற்று நேரம் முத்துக்குமரன் முகத்தையே

பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, பிறகு அவனை மெல்லத் தட்டி எழுப்பி, "என்னய்யா, கும்பகர்ணனைப் போலத் தூங்கறீங்க இப்படி? வெளக்கு ஏத்தற சமயமாச்சே" என்றாள். திடுக்கிட்டு எழுந்த முத்துக்குமரன் முருகாயியை நோக்கிப் பரபரப்புடன், "விளக்கு வெச்சுட்டுதா? அடடா... கோயிலுக்கெல்லாம் போயி சாமி கும்பிடணும்னு நெனச்சேன்!" என்றான்.

"முகம் கழுவிக்கிட்டு கோயிலுக்குப் போய் வாங்க. உங்களுக்கு ஓர் அதிர்ஷ்டம் காத்துக்கிட்டிருக்குது" என்றாள் முருகாயி.

அவர்கள் பேசிக் கொண்டதைத் தான் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளாமலேயே, "அதிர்ஷ்டம்! ஆகா உன்னைப் பார்த்ததே பெரிய அதிர்ஷ்டந்தான்" என்று கூறி மேல் அங்கியை எடுத்து அணிந்து கொண்டான். முருகாயி அவன் பேச்சுக் குழைவில் மயங்கிப்போய், அவன் மேல் மெல்லச் சாய்ந்து, "நான் உனக்காக ஒரு நல்ல வேலை சம்பாதிச்சிருக்கேன். எனக்கு என்னாத் தருவே?" என்றாள்.

முத்துக்குமரனுக்கு அவள் ஸ்பரிசம் ஏதோ கசந்தது. அதிலே மென்மை இல்லை. வேதனையாகவும் இருந்தது. 'இது என்ன பெண் ஜன்மம்' என்று எண்ணிக்கொண்டு மெல்ல அவள் கரத்தை நகர்த்தி, "நான் என்ன தர முடியும்? நானோ ஏழை. இனிமேலேதான் வாழ்க்கைக்கே வழி செய்துகிட்டாகணும். என்னைப் போயி கேக்கிறியே..." என்றான்.

முருகாயி ஒன்றும் பேசவில்லை. மெல்லிய குரலில், "உன்னிடம் பணம் காசு கேட்கவில்லே. ஆனா தர்ரதுக்கு உன்கிட்டே இருக்கிறது. தஞ்சாவூருக்குப் போயிட்டு வந்தப்புறம் நீ இங்கேயே தங்கியிருப்பாயா? என்னா...?" என்றவுடன் முத்துக்குமரன் பேசவில்லை. செஞ்சியினின்றும் தஞ்சைக்குச் செல்லும் கடிதத்தைக் காண வேண்டும் எனும் ஆவல் அவனுள்ளத்தில் இருந்தது. ஆனால் முருகாயி கேட்கும் உறுதியோ நியாயமற்றதாக இருக்கிறது. திடீரென முன்பின் அறியாத வாலிபன் ஒருவனைப் பார்த்து அவள் இவ்வாறு பேசுவது முறையாக அவனுக்குத் தோன்றவில்லை. அவள் கோரிக்கைக்கு இணங்காவிடில் தஞ்சைக்குத் தன்னை அவள் அனுப்ப மாட்டாள். செஞ்சிச் செய்தி மிக முக்கியமானதாகத் தோன்றியதால் எப்படியாவது அதை அறிய வேண்டும் என்று முடிவு செய்தான். பூக்கடைப் பொன்னுரங்கத்தை சந்தித்துவிட்டு வந்து முருகாயிக்கு உறுதி கொடுக்கலாம் என்ற எண்ணத்தில், "கோயிலுக்குப் போயி சாமி கும்பிட்டு விட்டு வருகிறேன். எவ்வளவு நேரம் இங்கேயே அடைஞ்சு கிடப்பது? வந்தப்பறம் விவரமாகப் பேசிக்கிடலாம்" என்ற கூறிவிட்டுப் புறப்பட்டான்.

பொன்னுரங்கம் பூக்கடை இப்போதும் மூடித்தான் இருந்தது. சற்று முன்புதான் அவர் கடையை மூடிக் கொண்டு வீட்டிற்குச் சென்றதாக அருகே இருந்தவர்கள் தெரிவித்தார்கள். பொன்னுரங்கத்தின் வீட்டு விலாசத்தை விசாரித்துக் கொண்டு முத்துக்குமரன் அங்கே சென்றான்.

அவர் வீடு ஒரு சந்தில் இருந்தது. அதைத் தேடிக் கண்டுபிடித்துச் சென்று மூடப்பட்டிருந்த அந்த வீட்டுக்கதவைத் தட்டினான்.

"யார், அது?" என்று உள்ளே இருந்த ஒரு குரல் கேட்டது.

'யார்' என்று அவன் சொன்னால் அவர்களுக்குத் தெரியும்?

மீண்டும், "ஐயா, ஐயா" என்று கூறிக் கதவைத் தட்டினான்.

கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. கையில் சிறு விளக்குடன் இளம் பெண் ஒருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள்.

விளக்கு வெளிச்சத்தில் இருவரும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொண்டு திகைத்தனர்.

கையில் விளக்குடன் நின்று கொண்டிருந்தவள் சுவாமிமலை ஆற்றங்கரையில் அன்று காலை கண்ட அதே மங்கை - வ...டி...வு...

# 9. மர்மக்குரல்

'அந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா?' என்பது போல் ரங்கமாதேவி, பூசையை முடித்துக் கொண்டு, "மோகனாங்கி, மோகனாங்கி" என்று அழைத்தவாறு வந்தாள்.

மோகனாங்கியின் முகத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலையும் அவள் முகத்தில் பீதி காணப்பட்டதையும் கண்ட ரங்கமாதேவி, அவள் அருகே அமர்ந்து, "கண்ணே! பசியால் வாடிவிட்டாயா?" என்று கேட்டாள்.

மோகனாங்கி தலையை அசைத்தாள். "பிறகு, ஏன் முகம் வாட்டமுற்றிருக்கிறது? வா, சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்" என்று இலை போடப்பட்டிருந்த கூடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

வெளிச்சம் சற்றுக் குறைவாய் அந்தக் கூடத்தில் இருந்தது. இரு இலைகள் போடப்பட்டிருந்தன. உட்காருவதற்கு வெள்ளிப் பூணிட்ட ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. இலையின் இருபுறமும் தங்கத்தால் ஆன குவளைகளில் குடிக்க பன்னீர் கலந்த நீர் வைக்கப்பட்டிருந்தது. இலையின் முன், நான்கு ஐந்து கிண்ணங்கள் வைக்கப்பட்டிருந்தன. விதவிதமான காய்வகைகள் பரிமாறப்பட்டிருந்தன. சீனத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வெங்காயம் பக்குவமாகப் பல பொருள்களில் கலந்திருந்தது. பட்சண வகைகள் இலைகளில் முக்கிய இடத்தைப்

"நானா பயந்து மறைந்தேன்? நீங்கள் என்னை மறைந்து கொள்ளச் சொன்னீர்கள். மறைந்து கொண்டேன்..." என்று தன்மேல் விழுந்திருந்த பழுத்த இலைகளை உதறிக் கொண்டே வந்தான் முத்துக்குமரன்.

"ஆகா! மறையாமல் நின்றிருந்தால் அவர்களுடன் நேருக்கு நேர் வாட்போர் செய்திருப்பீர்கள் இல்லையா?" என்று கேட்டாள் ஏளனம் குரலில் தொனிக்கக் கமலம்.

"ஓ! நிச்சயம். அந்த முத்திருளாண்டி எப்படியெல்லாம் பேசுகிறான். வாள் ருசியை அவனுக்குக் கொஞ்சம் காட்டினால் போதும்..." என்று முத்துக்குமரன் சொல்லி முடிப்பதற்குள், "ஹும். சொல்லமாட்டீர்களா, இப்போது! அப்போது ஓடிவந்து மதில் ஏறிக் குதித்தீர்களே, வாள் ருசியைக் காட்டியிருப்பதுதானே" என்றாள் கமலம்.

அப்பொழுது 'உஸ்' என்ற ஒலி, இளவரசியிடமிருந்து எழுந்தது. "போதும் கமலம்! உன் வாயாடித்தனத்தை எல்லாரிடமும் தெரிவிக்க வேண்டுமா? அவரை யார் என்று கேள். ஏன் இங்கே வந்தார் என்று கேள்" என்றாள் இளவரசி.

"நான் கேட்க வேண்டுமா? நீங்கள் கேட்பதுதான் இவர் காதில் விழுகிறதே தேவி! முத்திருளாண்டிக்குப் பயந்து ஓடி வந்தார் என்பது மட்டும் எனக்குத் தெரியும்!" என்று கூறி மெல்ல நகைத்தாள் கமலம்.

முத்துக்குமரன் உதட்டைச் சிறிது மடித்துக் கொண்டான். "நான் ஓடிவந்தது உண்மைதான். அப்படி ஓடி வந்திராவிடில் அவனிடம் தேவையில்லாமல் சிக்கிக் கொண்டிருப்பேன்" என்றான் மெல்லிய குரலில்.

"உங்கள் வாள் அப்போது சும்மாயிருந்திருக்கும்."

"நான் ஒருவன். அவர்கள் பலர். அவர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைவிட தப்புவது சரியென்று எனக்குத் தோன்றியது?"

"இருக்கலாம்; உயிருடன் ஊர் போய்ச் சேரவேண்டிய நினைவு வந்திருக்கும்."

"ஆமாம்; பெருங்கடமை எனக்கிருக்கிறதே!" என்று இன்னும் ஏதோ சொல்ல வந்தவன் சட்டென அடக்கிக் கொண்டான்.

"சாதாரண வீரர் இல்லை போலிருக்கிறது! அப்படியெனில் கடமை வீரரோ?" என்றாள் கமலம் கண்களால் வெட்டியவாறு.

மீண்டும் இளவரசியிடமிருந்து எச்சரிக்கை வந்து விடவே, கமலம் ஏதோ கேட்க முயன்றாள். அதற்குள் முத்துக்குமரனே முந்திக்கொண்டு, "தங்கள் பொன்னான நேரத்தை நான் இப்படி ஏதேதோ பேசி வீணாக்குகிறேன். நான் இங்கு வந்ததே பெரும் தவறு. குற்றம் செய்து ஓடிவந்தவனைத் தேடி வந்தவர்களுக்கே இடமில்லை என்றால்,

குற்றவாளிக்கு இங்கு இடம் ஏது? அதனால் நான் போகிறேன். என்னைக் காப்பாற்றியதற்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை" என்று கூறினான்.

இளவரசி மெல்ல நகைத்து, "கமலம், இந்த வீரர் குற்றவாளியா, இல்லையா என்று நமக்குத் தெரியாது. ஆனால் வெளியூரிலிருந்து வந்தவர் என்பது மட்டும் தெரிகிறது. எந்த ஊர்? எதற்காக தஞ்சை வந்தார்? முத்திருளாண்டி துரத்துகிறானென்றால் ராஜாங்க சம்பந்தம் இவருக்கு உண்டு என்பது தெரிகிறது. நம்மால் ஏதாவது இவருக்கு அரசாங்க உதவி வேண்டுமா என்று கேளடி. ஏனென்றால் இவர் நம்மைத் தேடி வந்தவரல்லவா?" என்றாள்.

இளவரசி இவ்வாறு பேசியது கமலத்திற்கு வியப்பாய் இருந்தது. முத்துக்குமரனுக்கோ அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது; 'எப்படித்தான் தன்னை வெளியூர்க்காரன் என்பதைத் தெரிந்து கொண்டாள் இளவரசி? அரசு தொடர்பாக நான் வந்திருக்கிறேன் என்பதையும் இளவரசி தெரிந்து கொண்டு விட்டாளோ? உண்மையைச் சொல்லி விடுவோமா?'

முத்துக்குமரன் சற்று யோசித்தான். அவனுடைய யோசனையைக் கண்டதும் கமலம் இளவரசியைப் பார்த்தவாறு, "தேவி! ஒருவேளை தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள சங்கோஜப்படுகிறாரோ? அல்லது பயப்படுகிறாரா? - என்னவென்று கேட்கட்டுமா தேவி?" என்றாள்.

"பயமும் இல்லை; நாணமும் இல்லை" என்றான் முத்துக்குமரன்.

"விருப்பமில்லாமல் இருக்கலாம். உண்மை நிலையைச் சொல்லாவிடில் தஞ்சை நாட்டில் மிகத் தொல்லை ஏற்படும் என்பதை மட்டும் சொல்லட்டுமா தேவி? இவர் யார்? எதற்காக வந்தார்? எங்கிருந்து வந்தார் என்பதை இவர் சொல்லாவிடில் நாம் அறிந்து கொள்வதில் ஏதும் சிரமமிருக்காது என்பதைச் சொல்லட்டுமா?" என்றாள் கமலம்.

"நீ சொல்வதுதான் அவர் காதில் விழுகிறதே! அவர் ஊமை இல்லை என்று தெரியும். செவிடும் இல்லை என்று தெரிகிறது. அதனால் அவரே தெரிந்து பதில் சொல்லி விடுவார். நீ வேறு... ஹூம்.." என்றாள் இளவரசி.

பெண்கள் இருவர் சேர்ந்துத் தன்னை நன்றாகக் கேலி செய்கிறார்களென்று அவனுக்குத் தெரிந்து விட்டது. இளவரசி சாதாரணப் பெண்போல் இருபொருள் ஏற்படுமாறு பேசுவது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவனாலும் அவர்களுக்குச் சமதையாகப் பேச முடியும். அங்கே அந்தப் பெண்கள் எதிரே தன் புத்திசாலித்தனத்தைப் புலப்படுத்திக் கொண்டிருப்பதில் என்ன பலன்?

அவன் முன் இருக்கும் பிரச்சினைகளோ மிக அதிகம். தஞ்சையில் அரண்மனை வரையில் வந்தாகிவிட்டது. மாளிகையின் இரகசிய வழிகள் எதையாவது அறிந்து கொள்ளலாம். மன்னரின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

"தேவி! வெளியே பத்திரமாகச் செல்வதற்கு மட்டும் எனக்கு வழி சொல்லுங்கள். இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நான் இருந்தால் தோட்டக் காவல்காரனை அழைத்து என்னை ஒப்படைத்து விடுவீர்கள்" என்றான் முத்துக்குமரன்.

"இங்கிருந்து பத்திரமாக வெளியே போய் மிகவும் ஜாக்கிரதையாக வெங்கண்ணாவிடம் அகப்பட்டுக் கொள்வதற்காகவா?" என்று கமலம் கேட்டாள்.

"ஏன் - வெங்கண்ணா என்னை என்ன செய்து விடுவார்? அவரிடம்தான் கொடுக்க வேண்டிய கடிதத்தைக் கொடுத்துவிட்டேனே..." என்றான் முத்துக்குமரன்.

"அப்படிச் சொல்லுங்கள். தூதர் என்ற முறையில் வெங்கண்ணாவிடம் வந்தீர்களா?" என்று கண்களைச் சுழற்றியபடி கேட்டாள் கமலம்.

முத்துக்குமரனுக்கும் கமலத்தின் சாமர்த்தியமான கேள்விகள் தெரியும். தெரிந்தே பதில் சொல்ல அவன் முனைந்தான். ஆனால் தெரியாதவன் போல் நடித்தான்.

"ஆமாம் தேவி! திடீரெனத் தூதன் பதவி எனக்குக் கிடைத்தது. ஆனால் நான் புறப்பட்ட போது தூதனாக இல்லை..." என்றான்.

"புறப்பட்ட இடத்தில் தஞ்சைக்குச் சாதாரண மனிதராக கூலி வேலை செய்து பிழைக்க வந்தீர்களோ?" என்று கமலம் கேள்வியொன்றை மின்வெட்டென வீசினாள்.

இந்தக் கேள்விக்கு அவன் மதுரையினின்று புறப்பட்ட செய்தியைத் தெரிவித்துத் தானாக வேண்டும். 'நடந்தவற்றையெல்லாம் சொல்லி விடுவோமா?' முத்துக்குமரன் ஒருகணம் யோசித்தான். பிறகு மிகவும் பயப்படுபவன் போல் நடித்து. "நான் நடந்தவற்றையெல்லாம் சொல்லி விடுகிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டியது இளவரசியின் பொறுப்பு. நான் தெரியாத்தனமாக இந்தக் காரியத்தில் இறங்கிவிட்டேன். எனக்கு வயதான தாயார் இருக்கிறார்கள். நான் திரும்பி ஊர் போய்ச் சேராவிடில் மிகவும் கவலைப்படுவார்கள்..." என்று குழைந்த குரலில் கூறினான்.

"எந்த ஊருக்குப் போய்ச் சேர வேண்டும்?"

"மதுரைக்கு..."

"அங்கிருந்துத்தான் புறப்பட்டீர்களோ?"

"ஆமாம்..."

"ஏன் அங்கிருந்து புறப்பட்டீர்கள்? அங்கே வேலை ஏதும் கிடைக்கவில்லையா? பாண்டி நாட்டில் பஞ்சமா? வைகை வற்றி விட்டதா?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பாண்டிய நாட்டில் இந்த வருடம் நல்ல வெள்ளாமை. முப்போகம் கண்டிருக்கிறது. ஆனால் நான் வந்த காரியம்..."

"உம்... சும்மா சொல்லுங்க... எங்கள் இளவரசி மிகவும் நல்லவர்கள். அவர்கள் உங்களுக்கு ஆபத்து ஏதும் ஏற்படும்படிச் செய்துவிட மாட்டார்கள்."

"அதுதான் எனக்கும் வேண்டும். இளவரசியைப் பார்த்தவுடனேயே, புறப்பட்ட காரியம் முடிந்து விட்டது என்று முடிவு செய்து விட்டேன்..."

"நீங்கள் எதற்குப் புறப்பட்டீர்கள் என்பதைச் சொல்லாமல் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்களே..."

"சொல்றேனுங்க... சொல்லத்தானே இங்கே நிற்கிறேன். பெண் பார்க்கப் புறப்பட்டேன்..."

முத்துக்குமரன் இப்படிச் சொன்னவுடன் இளவரசியும் கமலமும் கலுக்கென்று சிரித்து விட்டார்கள்.

"பெண் யாருக்கு, உங்களுக்கா?" என்று கமலம் கேட்டாள்.

"இல்லீங்க. எங்க மகாராஜாவுக்கு..." - முத்துக்குமரன் இவ்வாறு சொன்னவுடன் இளவரசியும், கமலமும் ஒருவரையொருவர் பொருள் நிறைந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டனர். கமலம் மளமளவென்று கேள்விகளைக் கேட்கத் தொடங்கி விட்டாள்.

"எந்த மகாராஜா? அங்க, வங்க, கலிங்க, காந்தார..."

"அவர்களுக்கெல்லாம்கூட மேலானவர்..."

"அப்படி யாரு அவ்வளவு பெரிய மாமன்னர்! விஜய நகரப் பேரரசரா? அவருக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் வயதில்லையே..."

"முதலிலேயே சொல்லி இருக்கிறீர்கள் - 'எனக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் தடுக்க உங்கள் இளவரசியால் முடியும்' என்று! அதனால் நான் உண்மையைச் சொன்னாலும் நீங்கள் எனக்கு 'எந்தவிதத் தொல்லையும் ஏற்படுத்த மாட்டோம்' என்று உறுதி கொடுத்தால் சொல்லுகிறேன்..." என்று முத்துக்குமரன் நடுங்கும் குரலில் கூறினான். இல்லை நடித்தான்.

"சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சிபி சக்ரவர்த்தி வாழ்ந்த சோழ நாடு இது. நாங்கள் உறுதியைக் கடைப்பிடிப்போம். தைரியமாகச் சொல்லுங்கள்" என்றாள் கமலம்.

முத்துக்குமரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்; மார்பை நிமிர்த்திக் கொண்டான்.

"விஜயநகர மன்னருக்கு ஈடான எங்கள் மாமன்னர் ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட பாண்டிகுலாதிபதி மதுரை மாநகர் சிங்காசனாதிபதி, ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீசொக்கநாத தேவ நாயக்கர் அவருக்குத்தான் அழகான பெண் பார்க்கப் புறப்பட்டேன். புஜபலமும் அழகும், வீரமும் நிறைந்த இளைஞரான அவருக்கு அஷ்டதிக்குகளிலும் சஞ்சரித்து மேனகை, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி இவர்களையெல்லாம் விட ரூபலாவண்யமங்கை நல்லாளைத் தேடிக் கண்டு பிடிக்கப் புறப்பட்டேன்" என்று அவன் சொல்லி வரும்போது, கமலம் சற்று ஆத்திரம் மிகுந்த குரலில் "போதும் நிறுத்துங்கள். மதுரையினின்றா நீங்கள் வருகிறீர்கள்?" என்றாள்.

முத்துக்குமரன் இதுவரை உணர்ச்சி மிகுதியில் மிகவும் தைரியமாகவும் திறமையாகவும் வர்ணித்து வந்தவன், திடீரெனத் திகைத்தான். திகைப்பு முகத்தில் பிரதிபலித்தது. மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான்.

# 20. மணமகன் தூதன்

சிறிது நேரம்தான் முத்துக்குமரன் திகைப்பில் ஆழ்ந்து என்ன செய்வது என்று புரியாமல் இருந்தான். மறுகணமே அவன் மனத்தில் பளிச்சென்று யோசனை ஒன்று உதித்தது.

"ஆமாம், ஆமாம் இளவரசி அவர்களே! அவருடைய அருமைத் தோழி அவர்களே! நான் மதுரையினின்றுதான் வருகிறேன். சொக்கநாத நாயக்கருடைய ராயசம் என்னை அனுப்பியதால் கடமையைத் தலை மேல் ஏற்றுக் கொண்டு வருகிறேன்.

"எனக்குக்கூட இன்னும் கல்யாணம் ஆகவில்லை. பெண் பார்க்காமல் என் தாயார் இன்னும் சும்மாயிருக்கிறார்கள். ஆனால் எங்கள் மகாராசாவுக்குப் பெண் பார்க்க வேண்டும் என்று ராயசம் ஐயா சொன்னவுடன் கட்டளையைச் சிரமேற் தாங்கி நான் ஓடி வருகிறேன். ஆமாம்; உண்மையிலேயே ஓடித்தான் வந்தேன்.

"உண்மையைச் சொன்னதால் முத்திருளாண்டியிடம் அகப்பட்டுக் கொண்டேன். 'எங்கள் மகாராசாவுக்குத் தஞ்சாவூர் இளவரசியைப் பெண் கேட்க நினைத்திருக்கிறேன்,' என்று ,சொன்னவுடனே "அவர்

கையை ஓங்கி அடிப்பதற்கு வந்தார் பாருங்க! ஒரே ஓட்டம், மதில்சுவர் ஏறிக் குதித்த பிறகுதான் நின்றேன். பார்த்தாகி விட்டது, இதோ போகிறேன்...'' என்றான்.

இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவன் பட்டபாடு, உடலெங்கும் வியர்த்துவிட்டது. இப்படிப்பட்ட மகத்தான கற்பனையால் என்ன விளையுமோ என்ற அச்சம் அவனிடம் சூழ்ந்தது. கமலமும், இளவரசி மோகனாம்பாளும் ஒருவரையொருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டனர். 'இளவரசியே பேசட்டும்' என்று கமலம் மௌனமாயிருந்தாள். 'கமலம் பேசட்டும்' என்று இளவரசி சும்மாயிருந்தாள். முத்துக்குமரனின் பயம் பறந்தோடியது. அங்கிருந்து போவது போல் பாசாங்கு காட்டி, "எந்த வழியே சென்றால் ஆபத்தின்றிக் கோட்டைக்கு வெளியே போகலாம்'' என்று கேட்டான்.

"எந்த வழியே சென்றாலும் ஆபத்துத்தான். இனி இங்கே இருப்பதும் தங்களுக்கு ஆபத்துத்தான். இதோ நானே காவலரை அழைத்து...'' என்ற அவள் முடிப்பதற்குள், முத்துக்குமரனுக்கு நடுக்கமே ஏற்பட்டது. "முதலிலேயே நான் தங்களைக் கேட்டுக் கொண்டுதான் பேச்சைத் தொடங்கினேன்.... ஆமாம்...'' என்று அவன் குழறியது கேட்டு இளவரசி 'கொல்'லென்று சிரித்து விட்டாள்.

"என்ன, பெண் பார்க்க வந்த வீரரே தடுமாறுகிறீர்கள். காவலரை அழைத்துத் தக்க மரியாதையுடன் மகாராஜாவிடம் தங்களை அனுப்பப் போகிறோம் என்று சொல்ல வந்தேன். பெண் தேடி வந்தவர் இங்கே இருக்கலாமா?'' என்று கமலம் சொன்ன பிறகுதான் உண்மையிலேயே அவனுக்கு 'அப்பாடா' என்றாகியது.

மகாராசாவிடம் நேரே செல்லுவதும் சரிதான். ஆனால் பெண் கேட்டுப் போனால் என்ன கதி நேரிடுமோ? அதுவும் மதுரை மன்னருக்குப் பெண் என்றால் - நம் தலை நிற்குமா உடலில்? ஒரு பொய் சொல்லப் போய் அதை மறைக்க ஆயிரம் பொய் சொல்ல வேண்டி வந்துவிட்டதே! என்ன செய்வது என்று அவன் திகைத்து, மதுரைத் தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டே நின்றபோது, மற்றொரு பணிப்பெண் வேகமாக வந்து வணங்கி, "மகாராணி இளவரசியாரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கிருந்தாலும் அழைத்து வரச் சொன்னார்கள்'' என்றாள்.

கமலம் பரபரப்புடன், "ஐயா, அதோ தெற்கு மூலையில் பெரிய வேப்பமரம் இருக்கிறது, பாருங்கள். அதன் மேலேறி மறுபுறம் குதித்தால் யார் கண்ணிலும் படாமல் போய் விடலாம். உம்... உம்... சீக்கிரமாக வெளியேறி நேரே மகாராஜாவிடம் வந்து சேருங்கள்'' என்று கூறிவிட்டு அவன் போக முற்பட்டவுடன் அவள் அருகே சென்று, அவன் காதுகளில் மட்டும் கேட்கும்படியாக, மகாராஜா என்ன

சொன்னார் என்ற செய்தியை நான் அறிய வேண்டும். இன்று மாலை பெரிய கோயில் அருகே நின்றிருங்கள் நான் வருகிறேன்'' என்றாள்.

முத்துக்குமரன் தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடோடி, வேப்பமரம் வழியாக ஏறிக் குதித்து வெளியேறினான்.

பிறகுதான் பாழ் வீட்டுக்கருகே முதியவர் ஒருவரைச் சந்தித்தான். அவரை மதுரையிலேயே அவன் பார்த்திருக்கிறான். சிவத்தலங்கள் தோறும் சென்று வணங்கி வருபவர் அவர். தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசித்துவிட்டு அவர் தஞ்சைக்கு வந்திருந்தார். அவரிடம் மதுரைக்குச் செய்தி சொல்லி அனுப்புவது நல்லது என்று தஞ்சைபுரி மோகினியான மோகனாவைப் பற்றி அவரிடம் வர்ணிக்கலானான். "நம் மகாராஜாவுக்கு ஏற்ற மகாராணி அவள்தான்" என்று கூறி முடித்தான். அவரும் மதுரை சென்றவுடனேயே தஞ்சை இளவரசியின் பேரெழிலைக் குறித்து மன்னரிடம் தெரிவிப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டார்.

அவர் சென்ற பிறகு முத்துக்குமரன் அதே பாழடைந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அமைதியாக சிந்திக்கலானான். மதுரையிலிருந்து புறப்பட்டது முதல் அவன் துரிதமாக நடைபெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றாக நினைவுப்படுத்திக் கொண்டான். அவன் புறப்பட்ட நோக்கமே, செஞ்சியையடைந்து மதுரையின் முன்னாள் தளபதியின் நடவடிக்கையையும், செஞ்சி மன்னரின் மனப்பான்மையையும் அறிந்து வருவதுதான். எதிர்பாராத விதமாக, செஞ்சிக்குச் செல்லாமலேயே வெங்கண்ணாவின் உதவி கோரி செஞ்சியினின்று வந்த இரகசியக் கடிதம் அவன் கையில் கிடைத்தது. அந்த கடிதத்தின் விளைவு என்ன? வெங்கண்ணா அதற்கு என்ன பதில் எழுதப் போகிறார்? இவற்றை அறியாமல் பெண் பார்க்கும் படலத்தில் இறங்கி விட்டோமே என்ற எண்ணத்தில் மேலே என்ன செய்வது என்று புரியாமல் உட்கார்ந்திருந்தான். பசி வேறு அவனை வாட்டியது. தஞ்சையில் ஏராளமான சத்திரங்கள் உண்டென்று அவன் கேள்விப் பட்டிருக்கிறான். அவை ஏதாவது ஒன்றிற்குச் சென்று பசியைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தலை முண்டாசை அவிழ்த்துவிட்டு, முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மெல்ல நடந்தான். அந்த வீதியைக் கடந்து ஒரு சந்தின் பக்கமாகப் போகையில் வரிசையாக ஜனங்கள் நின்று கொண்டு தட்டிலே குழம்பு கலந்து சோறை வாங்கிச் சென்றதை கண்டான். முத்துக்குமரன் நாக்கில் நீர் ஊறியது. வேகமாகச் சென்று அந்த வரிசையில் நின்று கொண்டான். அவனிடம் இலையோ, தட்டோ, மண் தட்டோ, ஏதும் இல்லை. இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கிடைத்ததை வாங்கிக் கொண்டால் போகிறது என்று எண்ணினான். அப்படி அவன் வாங்கிக் கொண்டு

போனபோது அவனையே அனைவரும் நோக்கினர். ஒதுக்குப்புறமாக போய் அமர்ந்து இரண்டு வாயாக அதைச் சாப்பிட்டுவிட்டு ஏதோ குரல் கேட்கவே திரும்பினான்.

"உம், சாப்பிட்டாச்சா தம்பி" என்ற பலமான கரம் ஒன்று அவன் தோளைத் தொட்டுத் திருப்பியது.

ஒருமுறை அந்தக் கரத்துக்கு உரிய ஆஜானுபாகுவான ஆளைத் திரும்பிப் பார்த்து தோளைக் குலுக்கி அவன் கரத்தை தள்ளி விட்டவாறு, "ஆகா, பசி அடங்கி விட்டது. நீங்களும் வேண்டுமானால் சாப்பிடலாமே" என்றான்.

"நான் சாப்பிட்டாச்சு. உன்னைத் தேடித்தான் வந்தேன். எங்கெங்கெல்லாமோ தேட வைத்து விட்டாயே! வா தம்பி, உனக்காக மகாராஜா காத்திருக்கிறார்" என்றான்.

"எனக்காகவா?" என்று அவன் கேட்டபோது ஆச்சரியம் ஏதும் அவன் குரலில் மிளிரவில்லை. எதிர் பாராமல் ஏதாவது நிகழ்வது சமீப நாட்களில் மிகவும் சகஜமாகி விட்டதே!

"ஆமாம் தம்பி, ஆமாம். உன்னைத் தம்பி என்று நான் அழைக்கலாமல்லவா? பாண்டிய நாட்டுப் பிள்ளை போல் தோன்றுகிறது. நெற்றியில் ஒன்றும் அணிந்து கொள்ளாததால் வைணவனா, சைவனா என்று கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. உம்; காலம் அப்படி மாறி வருகிறது" என்றார் அந்த ஆஜானுபாகுவான மீசைக்கார மனிதர்.

முத்துக்குமரனுக்கு எல்லாமே வேடிக்கையாக இருந்தது. 'திடீரென யாரோ ஒருவர் வருகிறார். உரிமையுடன் தம்பி என அழைக்கிறார். பாண்டிய நாட்டவன் போல் தோன்றுகிறாயே என்கிறார். இது என்ன, இந்தப் பூமியில் எல்லாமே விசித்திரமாக இருக்கும்போல் தோன்றுகிறது. ஒவ்வொருவரும் சரியான படிதான் கணிக்கிறார்கள். நொடியில் அறிந்து கொண்டு விடுகிறார்கள்.

ஆனால், யுத்தம் என்று வந்தால் வீரம் காட்டுவதில் எப்படியோ?' என்று எண்ணினான்.

"என்ன தம்பி யோசனை செய்கிறாய்? மகாராஜ கூப்பிடுகிறார் என்றால் பல்லக்கு இரதம் ஏதும் வரவில்லையே என்று நினைக்கிறாயா? உனக்குக் குதிரை ஏறத் தெரியுமல்லவா? அதோ, இரண்டு குதிரைகள். வா போவோம்" என்றழைத்தார் அந்த மீசைக்காரர். அவர் விழிகளை உருட்டுவதும், தோளை அசைப்பதும், கையை நீட்டி நீட்டிப் பேசுவதும் அவனுக்குப் புதுமையாகத் தோன்றின. அவர் பேசாத போது மீசை மட்டும் ஒரு முறை அசைந்து அடங்கியது. "ஆமாம்; என்னை

எதற்காக அரசர் அழைக்கிறார்! புலியின் குகைக்குள்ளேயே போய்ச் சிக்கிக்கொள்ளுவது போல் ஆகிவிடுமோ?"

"தம்பிக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை போலிருக்கிறது. இதோ பார் முத்திரை மோதிரம். இப்பொழுதாவது நம்பிக்கை வந்ததா?" என்றார் அந்த மனிதர்.

"நம்பிக்கை ஏற்படாமல் இருக்குமா? என்னை எதற்காக அரசர் அழைக்கிறார் என்று யோசிக்கிறேன்" என்றான் முத்துக்குமரன்.

மீசைக்காரர் திடீரென உடம்பு குலுங்கக் குலுங்க நகைத்து, "நன்றாய் கேட்டாய் போ! ஒவ்வொருவர் அரசர் தன்னை அழைக்க மாட்டாரா என்று ஏங்குகிறார்கள். நீ என்னடா என்றால்....! வா... சீக்கிரம்... அந்தப்புரத்துக்குப் போய் விட்டாரானால் அப்புறம் பார்க்க மாட்டார்" என்று துரிதப்படுத்தினார்.

முத்துக்குமரன் குதிரை மீது ஏறி, மீசைக்காரரைத் தொடர்ந்தான். என்ன நேரப் போகிறதோ என்ற அச்சம் அவன் உள்ளத்தில் இருந்தது. அவசரப்படுத்தினாரேயொழிய குதிரையை மெல்லவே தட்டி விட்டாரவர். தஞ்சையின் அகன்ற வீதி, குறுகிய வீதி, சந்து எல்லாம் கடந்து குதிரை சென்றது. மாளிகைக்குப் போவதற்கு இவ்வளவு தொலைவு செல்ல வேண்டுமா? என்று சுற்றுமுற்றும் பார்த்தவாறு சென்றான் முத்துக்குமரன். திடீரென மீசைக்காரர் குதிரையைக் கொஞ்சங் கொஞ்சமாக வேகமாகச் செலுத்த ஆரம்பித்தார். அவருக்குச் சரிசமமாகச் செல்ல விரும்பிய முத்துக்குமரனும் குதிரையைத் தட்டி விட்டான். குதிரை பறந்தது. முத்துக்குமரனும் அதற்கு இணையாகக் குதிரையைச் செலுத்தினான்.

தஞ்சையின் கோட்டை வாயிலைத் தாண்டி புறஞ்சேரியைத் தாண்டிக் குதிரை சென்று கொண்டிருந்ததை முத்துகுமரன் கவனிக்கவில்லை. இடையிடையே மீசைக்காரர் அவனைக் கடைக்கண்ணால் நோக்குவதையும் அவன் கவனிக்கவில்லை. வல்லம் செல்லும் சாலையில் அவர் வேகமாகச் சென்று கொண்டிருப்பதும் அவனுக்குத் தோன்றவில்லை.

சிறிது நேரம் கழிந்த பிறகுதான் தஞ்சையை விட்டு வேறு எங்கோ வந்து கொண்டிருக்கிறோம் என்பதை முத்துக்குமரன் உணர்ந்தான். "எங்கு போகிறோம்" என்று கேட்கவோ, குதிரையை நிறுத்தவோ நினைப்பதற்குள் வல்லம் கோட்டை வாயிலை இருவரும் அடைந்தனர். ஒரு வேளை மன்னர் இங்குதான் இருக்கிறாரோ என்று எண்ணி மௌனமாக இருந்தான் முத்துக்குமரன்.

குதிரைகள் கோட்டை வாயிலில் நிறுத்தப்பட்டன. குதிரை மீதிருந்தபடியே மீசைக்காரர் ஏதோ கூவினார். கதவு திறந்தது.

குதிரைகளைக் கொட்டடியில் கட்டி விட்டு மீசைக்காரரைப் பின்தொடர்ந்தான் முத்துக்குமரன்.

வல்லம் கோட்டைக்குள்ளிருந்த ரங்கமாதேவியின் மாளிகை அது என்று அவனுக்குத் தெரியாது. சந்தடியற்று பணியாட்களே அதிகமில்லாத அந்த மாளிகை அவனுக்கு ஏனோ சந்தேகத்தை அளித்தது. விஜயராகவநாயகருடைய மாளிகை ஏன் இப்படிக் களை இழந்து காணப்படுகிறது என்ற ஐயம் அவன் மனத்தில் ஏற்பட்டது.

மாளிகையின் முன் கூடத்தில் காணப்பட்ட பெரும் ஆசனங்கள் ஒன்றில் அவனை உட்காருமாறு மீசைக்காரர் கூறினார்.

"அரசர் எங்கே இருக்கிறார்? தஞ்சையிலிருந்து என்னை எங்கோ அழைத்து வந்துவிட்டீர்களே?" என்று முத்துக்குமரன் கேட்டான் சுற்றுமுற்றும் பார்த்தவாறு.

"ஏன், இதுவும் தஞ்சைதான். தஞ்சைக்கருகிலுள்ள வல்லம் கோட்டை உனக்குத் தெரியாது? ஆம்; உனக்குத் தெரியாது" என்றார் மீசைக்காரர். பிறகு "அரசர் - அரசர் - இதோ போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே வேகமாகச் சென்றார்.

முத்துக்குமரன் ஏதும் புரியாதவனாக, கன்னத்தில் கை வைத்துக் கொண்டு, மேல் விதானத்தில் புறாக்கள் 'கொர், கொர்' என்று சப்திப்பதைப் பார்த்தபடியே இருந்தபோது, "வாருங்கள் வாருங்கள், மதுரை மணமகன் தூதுவரே!" என்று யாரோ வரவேற்றவாறு வருவது கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான்.

கமலம் மலர்ந்த முகத்துடன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்!

# 21. சித்திரப்பெண்

வண்டியூர்த் தெப்பக் குளக்கரையில் நாம் தஞ்சையில் முத்துக் குமரனுடன் சந்தித்த பெரியவர் (மாணிக்கப் பண்டாரம்) மாலை நியம நிஷ்டைகளை முடித்துக் கொண்டு அமைதியாகச் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். மாலைக் காற்று குளத்தின் நீரை அலம்பிக் கொண்டிருந்தது. குளத்தின் நடுவே நீராழி மண்டபம் மிகப் பெரிதாக அமைந்திருந்தது. மண்டபத்தைச் சுற்றிச் சோலை செழிப்பாகத் திகழ்ந்தது. மண்டபத்திற்கு அப்போதுதான் புதிதாக வர்ணமடித்திருந்தார்கள். மண்டபத்து மூன்றாவது தளத்தின் மேலுள்ள மாடத்தில் விளக்கு ஏற்றுவதற்கு ஓர் பணியாள் கையில் சிறு விளக்குடன் ஏறிக் கொண்டிருந்தான். எங்கிருந்தோ 'நகார நவ பத்து' வாத்தியம் ஒலித்தது. சன்ன மேளத்தின் ஒலி இனிமையாக மிதந்து

வந்தது. சிறு தீவு போல் அமைந்திருந்த அந்த வசந்த மண்டபத்தினின்று கரையை நோக்கி ஒரு படகு மெல்ல ஊர்ந்து வந்தது. படகின் கம்பீரத்தையும் துடுப்புப்போட்டு அதைத் தள்ளி வருபவர்கள் அணிந்திருந்த உடையையும் கண்டால் அது ஒரு சாதாரணப் படகாகக் காட்சி அளிக்கவில்லை.

மதுரை மன்னர் சொக்கநாத நாயகர் கம்பீரமாக அதில் அமர்ந்திருந்தார். இளம் வயதுச் செழுமையும் ஆழ்ந்த சிந்தனையும் உள்ளத்தில் ததும்பி நிற்கும் வீரம் முகத்தில் பிரதிபலிப்பதுமாக அவரது தோற்றத்தில் தனிமிடுக்கை வளர்த்தன. அவரருகே அவருடைய இளம் பிராய நண்பர் செவ்வந்திக்கண்ணன் அமர்ந்திருந்தான். அவனுக்கும் சொக்கநாதருடைய வயதுதான் - இருபது அல்லது இருபத்தொன்று தான் இருக்கும். ஆனால் அவனுக்கு இன்னும் முகத்தில் சரியாகக் கூட மீசை முளைக்கவில்லை. சிவந்த மேனியரான அவரைப் பார்ப்பவர்கள் ஒரு பெண்ணின் சாயலை மனத்தில் நினைத்துக் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்.

"செவ்வந்தி, என் தாத்தா இந்தத் தெப்பக்குளத்தை இங்கே வெட்டும்போது ஊர் இவ்வளவு தூரம் பரவி விடும் என்று நினைத்திருப்பாரா?" என்று சொக்கநாதர் முகத்தில் ஓர் ஒளி பொங்கக் கேட்டார்.

குளத்து நீரின் சிறு அலைகள் படகில் வந்து மெல்ல மெல்ல அணைத்தன. குளத்து நீரைக் கையால் அலைந்தபடி, "இதற்குத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது?" என்று கேட்டார். பிறகு கரையைச் சுற்றும் முற்றும் பார்த்தவராக, "மாலை வேளையில் குளத்தில் குளிப்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் தெரியுமா?" என்றார். அப்போது எதிர்க்கரையில் சில பெண்கள் குளித்துக் கொண்டிருந்தனர்.

செவ்வந்தி பதில் சொல்ல ஒவ்வொரு முறையும் வாயெடுப்பான். அதற்குள் சின்னக் குழந்தையைப் போல் சொக்கநாதர் ஏதாவது கேள்வி கேட்பார்.

"ஏன் செவ்வந்தி 'உம்'மென்று பதில் பேசாமல் வருகிறாய்?" என்று சொக்கநாதர் கேட்டுவிட்டு சிறிது நீரை எடுத்து அவன் மீது தெளித்தார். ஆடையில் பட்ட நீரை மெல்லத் துடைத்தவாறு, "அரசே! இன்னும் சிறு குழந்தை விளையாட்டு உம்மை விட்டுப் போகவில்லையே. நானா 'உம்' என்று வருகிறேன். என்னைத்தான் பேசவிட மாட்டேன் என்கிறீர்களே!" என்றான், செவ்வந்தி.

சொக்கநாதர் தன் நண்பனைத் தன் பக்கம் திருப்பி, "இதோ பார்! 'அரசே! நீங்கள், நாங்கள்' என்று என்னை அழைப்பதாயிருந்தால் நான் உன்னுடன் பேசவே மாட்டேன். சிறு குழந்தை என்று என்னைச்

சொல்லுகிறாய். அதே சமயம் 'நீங்கள் - அரசே' என்று ஒரேயடியாக மரியாதை வைத்துத் தலைக்கு மேல் தூக்கி வைக்கிறாய். குழந்தையைப் போய் இப்படித்தான் மரியாதையாய் அழைப்பார்களோ! அதுதான் போகட்டும் செவ்வந்தி! உன்னை உன் காதலி எப்படி அழைக்கிறாள்? அதைச் சொல்லவில்லையே நீ. உம்; உன் கன்னத்தை அவள் தட்டும்போது உன் கன்னம் சிவப்பதை அவள் மட்டும்தான் பார்க்க வேண்டுமா? நான் பார்க்கக் கூடாதாக்கும். வர வர, செவ்வந்தி என்னை விட்டு நீ விலகிக் கொண்டே போகிறாய்! ஏன் இப்படி?" என்று சொக்கநாதர் அவன் கரத்தை இலேசாகத் தடவினார்.

"உச்... என்ன அரசே, படகோட்டிகள் பார்க்கப் போகிறார்கள். சில வேளைகளில் நாலுபேர் இருக்கிறார்கள் என்று கூடத் தெரியாமல் நீங்கள் பகிரங்கமாக ஏதேதோ பேசுகிறீர்கள்" என்று செவ்வந்தி சிணுங்கிக் கொண்டான்.

தெப்பக்குளத்து வசந்த மண்டபத்திற்குச் செவ்வந்தியை, சொக்கநாதர் அழைக்கிறார் என்றாலே செவ்வந்திக்குத் திகில்தான். அவனும் அவரும் இளம் பிராயம் முதல் உயிர் நண்பர்கள்தாம். அப்போது 'நீ - வா - போ!' என்று அவன் அழைத்திருக்கலாம். இப்போது முடியுமா? அரச பீடத்தில் சொக்கநாதர் அமர்ந்த பிறகும் அப்படி அழைக்க முடியுமா? அரசாங்க அலுவல்கள், ராஜதந்திரப் பேச்சு வார்த்தைகள், அமைச்சர்களுடன் அளவளாவுதல், படை வீரர்களுடன் பேசுதல், ஒற்றர்களுடன் யோசனைகள் இவ்வளவு கடுமையான அலுவல்களில் ஈடுபட்ட பிறகு சொக்கநாதர் விரும்புவது செவ்வந்தியுடன் உற்சாகமாகப் பேசிக் கழிப்பதுதான்.

செவ்வந்திக்கு மதுரை நகரத்துப் பெண்ணொருத்தி மீது காதல் பிறந்து விட்டது. அவளுக்குக் கசக்குமா, செவ்வந்தி போன்ற அழகன் கிடைப்பதற்கு! தன்னுடைய அன்பையெல்லாம் செவ்வந்தி மீது கொட்டித் தீர்த்து, இணைபிரியாது இருக்கவே விரும்புகிறாள். ஆனால், அரசரிடமிருந்து அழைப்பு வந்துவிடும். ஓரிரு சமயங்கள் தட்ட முடியாமல் செல்வான் செவ்வந்தி.

ஓரிரு முறை வருவதாகச் சொல்லிக் காதலியிடமிருந்து பிரிய முடியாது இருந்துவிட்டதால் சொக்கநாதர் அவன் வருகைக்குக் காத்திருந்து ஏமாந்தார்.

இதய வேதனையோ அவருக்குச் சொல்லி முடியாது. அத்தகைய உயிர் அன்பைத் தன் நண்பன் மீது கொண்டிருந்தார். ஒரு தடவை செவ்வந்தி வராதபோது, சொக்கநாதர் குதிரையேறி செவ்வந்தியைத் தேடி வந்து விட்டார்.

செவ்வந்தியின் காதலியை அப்போதுதான் சொக்கநாதர் கண்டார். முத்துப் பல் வரிசையும், குழிவிழும் கன்னமும், செப்புவாயும் ஒரு கணம் அவரைத் திகைக்க வைத்தன.

சொக்கநாதர் வந்தது இருவருக்கும் சற்று நேரம்வரையில் தெரியாது. கலகலவென்ற சிரிப்பொலியில் இருவரும் அமிழ்ந்திருந்தனர்.

காதலி கேட்டாள்: "அந்தப் பறவைகள் இவ்வளவு வேகமாகப் பறந்து செல்கின்றனவே எதற்காக?"

செவ்வந்தி சொன்னான்: "கூட்டையடைந்து கொஞ்சி மகிழ."

"யாருடன் கொஞ்சும்?"

"ஆண் பறவை - பெண்ணுடன் கொஞ்சும், தாய்ப் பறவை குஞ்சுகளுடன் கொஞ்சும்."

"என்ன சொல்லிக் கொஞ்சும்."

"எனக்கு எப்படித் தெரியும்? அலகோடு அலகு பேசும். அதிலே வார்த்தைகள் பிறக்கும். வார்த்தைகளிலே வாஞ்சை ததும்பும். வாஞ்சை வளர்ந்தால் காதல். காதலுக்குப் பேச்சு வேண்டாமே" என்று சொல்லிக் காதலியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினான்.

"உம்.. நான் அதிகமாகப் பேசுகிறேன் என்றுதானே இப்படிச் சொல்கிறீர்கள்?" என்று காதலி குறும்புப் பார்வையுடன் பொய்க் கோபத்துடன் அவனது அழகிய கன்னத்தை மெல்லக் கிள்ளினாள்.

இதைப் பார்த்துக் கொண்டு நின்ற சொக்கநாதரின் உடல் சிலிர்த்தது. புரிய முடியாத உணர்ச்சி உள்ளத்தில் புகுந்து கொண்டது. பனி நீர் படிந்துள்ள இலைகளின் இடையே நறுமணம் வீசிப் பூத்து நிற்கும் புது மலரைக் காணும் உணர்ச்சி உதித்தது.

"ஆகா, ரொம்பக் கிள்ளி விடாதே, என் நண்பனை" என்று சொக்கநாதர் திடீரெனச் சொன்னவுடனே தான் காதல் இளஞ்சிட்டுக்கள் இரண்டும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தன. அரசரைக் கண்டவுடன் வெட்கத்தால் காதலி முகத்தை மூடிக் கொண்டாள். செவ்வந்தி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான். முகத்தில் அசடு வழிந்தது. பிறகு பரபரப்புடன், "அரசே வாருங்கள், வாருங்கள். இப்படி நின்று கொண்டிருக்கிறீர்களே, உட்காருங்கள்" என்று பரபரப்புடன் கூறினானேயொழிய, அவனுக்கு இன்னது செய்வது என்று தெரியவில்லை. அதற்குள் நாணிக் கண் புதைத்த அந்தக் காதல் நங்கை அங்கிருந்து ஓடோடி விட்டாள்.

• • •

அன்றிலிருந்து செவ்வந்தியின் புது அனுபவத்தைக் கேட்டறிவதிலேயே சொக்கநாதர் சம்பாஷணையில் பெரும் பகுதியைக்

கழித்தார். சொக்கநாதர் நெஞ்சத்தில் புதுப்புது மலர்கள் மலர்வதற்கான வித்துக்கள் மெல்ல விழலாயின. செவ்வந்தியை அரசர் ஓய்வு நேரத்தில் சந்திக்கும் போதெல்லாம் பேச்சு புதுமையைப் பற்றியதாயிருந்தது. புதுவித உணர்ச்சிகள் உள்ளத்தில் வழிந்தோடும் நூதன மலர்ச்சியைப் பற்றியதாயிருந்தது.

“செவ்வந்தி நீயும் உன் காதலியும் என்ன பேசிக் கொள்வீர்கள்?”

“செவ்வந்தி உன்னை அவள் என்ன சொல்லி அழைப்பாள்?”

“செவ்வந்தி உனது கன்னத்தை வருடினாளே அவள் ஸ்பரிசம் உனக்கு என்ன கொடுத்தது? உனது மென்மையான கன்னக்கதுப்பிலே அவள் கரம் பட்டபோது அவளுக்கு என்ன தோன்றியது?” என்றெல்லாம் சொக்கநாதர் கேள்விமேல் கேள்விகேட்டு செவ்வந்தியைத் திணற அடிப்பார்.

வண்டியூர் தெப்பக்குளத்து வசந்த மண்டபத்துச் சோலையிலே செவ்வந்தியுடன் காவலர்கள் உடனிருப்பதைக் கூடக் கவனிக்காமல் அவர் செவ்வந்தியிடம் சிருங்கார விஷயங்களை வினவுவார். ஒரு நாள் செவ்வந்தி சொன்னான்:

“உங்கள் பாட்டனார் திருமலை நாயகர் காலத்தில் சுப்ரதீபக் கவிராயர் என்று ஒருவர் இருந்தார்.”

“சொல்லு, சொல்லு. நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் என் பாட்டனாரிடம் கோபங்கொண்டு கூளப்ப நாயக்கனிடம் சென்று விட்டாராம்” என்று ஆவலுடன் சொக்கநாதர் கேட்டார்.

“அந்த சுப்ரதீபக் கவிராயர் நிலக்கோட்டை சிற்றரசர் நாகம்ம கூளப்ப நாயகனை மிகவும் உயர்த்தி விட்டார். சிருங்காரக் காவியத்தின் தலைவனாகவே அந்த மன்னரைப் புகழ்ந்து மகிழ்வித்து விட்டார். அப்படிப்பட்ட திறமை எனக்கிருந்தால் நானும் உங்களை வைத்து அழகான பிரபந்தமே பாடி விடுவேன்...”

“பாடுவாய், பாடுவாய். உனக்கு என் மேல் அளாதியான பிரியம். ஆனால் எனக்குச் சொல்லாமல் ஒரு பெண்ணைக் காதலித்து விட்டாய். நீயே ரகசியமாகப் பாடிக் கொண்டிருக்கிறாய். போகட்டும் அந்த சுப்ரதீபக் கவிராயரைப் பற்றிச் சொல்லு...”

“சுப்ரதீபக் கவிராயர் நவரஸங்களையும் அறிந்தவர். அதிலும் காமரசத்தை நன்றாகப் பருகியவராய் இருக்க வேண்டும்...”

“சொல்லுப்பா, என்ன சுற்றி வளைக்கிறாயே! சுப்ரதீபக் கவிராயர் பாடலில் என்ன எழுதினார்... நீ நாமதப்படுத்துவதால் எனக்கு வேதனைதான் அதிகமாகிறது...”

"ஆகும். ஆகும். ஆகும் துரையே ஆகும். அது சாதாரண வேதனை அன்று. அரசே விரகவேதனை. இதே வேதனை பெண்களுக்கு வந்தால் அவர்கள் படும் பாடு..."

'சொல்லு, செவ்வந்தி சொல்லு. உன் காதலி சொல்லி யிருக்கிறாளா? உன் அனுபவத்தையும் சேர்த்துக் குழைத்துச் சொல்லப் போகிறாயா... சொல்லு!"

"நான் சொல்லவில்லை; என் காதலியும் சொல்லவில்லை. நான் இப்போது சொல்லப் போவதை என் காதலியிடம் சொன்னால் முறம் எடுத்து வருவாள் மொத்த..."

"சரிப்பா... நீ என்னிடம் சொல்லேன்...!"

"நவரத்னமாலை என்னும் பெண். அழகான பெண். அவள் ஒருநாள் மூர்ச்சையடைந்து விழுந்து கிடக்கிறாள் காட்டிலே... அவளைக் காணவில்லையே என்று தோழிகள் தேடியலைகின்றனர். கடைசியில் கண்டு கொண்டனர்..."

"அவள் ஏன் மூர்ச்சையானாள்...?" - அரசர் இவ்வாறு கேட்டவுடன், செவ்வந்தி மெல்லச் சிரித்து, "அவளுக்கும் மன்மதனுடைய சேஷ்டைதான்..." என்றான்.

"அவளுக்கும் என்றால், இன்னும் வேறு யாருக்கு?" என்று கேட்டார் அரசர்.

"அதுபோல் மன்மதனின் கடைக்கண் பார்வை பட்டவர்களுக்கு."

"மன்மதன் பார்வை விழுந்தால்...?"

"விழுந்தால் - தங்களைப் போன்ற மனநிலையுடன் எப்போதும் பெண்களைப் பற்றியே நினைக்கும் நிலை ஏற்படும். பெண்களாயிருந்தால் ஆண்களைப் பற்றியே நினைக்கும் நிலை..."

"ஓ... கோ... மேலே சொல்லு."

"அந்த நவரத்தினமாலை, காட்டிலே கூளப்பநாயக்கனைச் சந்தித்தாள். இருவரும் ஒன்று கலந்து விட்டனர். அவன் போய்விட்டான், இவள் மயங்கி விட்டாள். எப்படிக் கிடக்கிறாளாம் தெரியுமா?"

"குன்றிரண்டு தாங்கும் கொடிபோல் இடை துவள...
மைபண்ணிற் சாய்ந்த கலை குலைய..."

"ஆகா... என்ன பேஷான பாட்டு!"

"இன்னும் பேஷ் பேஷான பாட்டெல்லாம் இருக்கிறது அரசே.

"எல்லாவற்றையும் சொல்லுவாயா?"

செவ்வந்தி பதில் கூறுவதற்குள் அரசருடைய மெய்க் காவலர்கள் அங்கே வந்து வணங்கி நின்று, கோவிலுக்குச் செல்லும் நேரமாவதைப் பற்றியும், இரவு கொலு மண்டபத்து நிகழ்ச்சிகளையும் நினைவு படுத்தினார்கள். வேண்டா மனத்துடன் அன்றைய சம்பாஷணையை முடித்துக் கொண்டு சொக்கநாதர் புறப்பட நேர்ந்தது.

படகிலிருக்கும் போது கூட சொக்கநாதர் மனம் எங்கெங்கோ சுற்றி அலைந்தது. செவ்வந்திக்கு அரசரின் மனமாறுதல் தெரிந்து விட்டது. மன்னரின் அரியணையை உடன் அலங்கரிக்க அரசி ஒருத்தி தேவை எனும் காலம் வந்துவிட்டது என்பதைப் புரிந்து கொண்டான்.

• • •

படகு குளக்கரையை வந்தடைந்தது. மாணிக்கப் பண்டாரம் எழுந்து மன்னர் வருவதைப் பார்த்துச் சற்று ஒதுங்கி நின்றார். தன்னை அரசர் உடனே அடையாளம் கண்டு கொள்வாரோ எனும் சந்தேகம் அவரிடம் ஏற்பட்டது. ஆனால், செவ்வந்தியும் அருகிலிருந்ததால் செவ்வந்தியை அணுகி, முத்துக்குமரன் சொல்லி அனுப்பிய தஞ்சை இளவரசியைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்க எண்ணினார். அதே போன்று சொக்கநாதர் விரைந்து சென்று குதிரைமீதேறி, செவ்வந்தியிடம் விடைபெற்றுக் கொண்டார்.

"செவ்வந்தி" என்று மாணிக்கப் பண்டாரம் அழைத்தார். செவ்வந்தியும் அவரை அடையாளம் கண்டு கொண்டான்.

இருவரும் சிறிது நேரம் ஒருவர் நலனை மற்றவர் விசாரித்துக் கொண்டனர். பிறகுதான் மாணிக்கப் பண்டாரம் தஞ்சையினின்று முத்துக்குமரன் சொல்லியனுப்பிய செய்தியைக் கூறினார்.

செவ்வந்தியின் மனம் ஒரு நொடியில் திட்டம் தீட்டி விட்டது. "பண்டாரம், நான் ஒன்று சொல்லுவேன் செய்கிறீர்களா?" என்று கேட்டான்.

"சொல்லு தம்பி."

"நீங்கள் சொல்லுவதனின்று தஞ்சை இளவரசி நம் அரசருக்கு ஏற்ற மங்கை. நம் நாட்டிற்கு ஏற்ற அரசியை தேடிவர வேண்டாமா? தஞ்சை இளவரசியின் வடிவழகை அப்படியே நல்ல சித்திரமாகத் தீட்ட வேண்டும். அந்தச் சித்திரத்தை எடுத்துக் கொண்டு நீங்களே அரசரிடம் செல்ல வேண்டும். வாய் வர்ணனையை விட எழில் ஓவியம் நல்லது செய்துவிடும்" என்றான்.

மாணிக்கப் பண்டாரத்திற்குப் புரிந்து விட்டது. அவர் சம்மதித்தார். புகழ் பெற்ற சித்திரக்காரரிடம் உடனே இருவரும் சென்றனர்.

• • •

ஓவியப் பாவை எழில் நிறைந்து விளங்கினாள். தஞ்சை இளவரசி அவ்வாறு இருப்பாளோ என்னவோ அந்த ஓவியப் பெண்ணைக் காண்போர் மையல் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். அந்தச் சித்திரத்தை எடுத்துக் கொண்டு மாணிக்கப் பண்டாரம் சொக்கநாதரிடம் சென்றார்.

"வாருங்கள், வாருங்கள் மாணிக்கப் பண்டாரத்தாரே! என்ன விசேஷம்?" என்று மன்னர் சொக்கநாதர் வரவேற்றார். மாணிக்கப் பண்டாரத்தை இளம் வயதில் இருந்தே அவருக்குத் தெரியும்.

"நல்ல விசேஷம்தான் அரசே! தஞ்சையினின்று முத்துக்குமரன் எனும் இளைஞன் செய்தி சொல்லி அனுப்பினான்..."

"தஞ்சையிலின்றா... முத்துக்குமரனா... செய்தியா... சொல்லுங்கள் சொல்லுங்கள்..." என்று சொக்கநாதர் வினவினார். அவர் முகத்தில் ஆவல் ததும்பியது.

"இதுதான் செய்தி" என்று தஞ்சை இளவரசியின் சித்திரத்தை அவரிடம் காட்டியவுடன், சொக்கநாதர் சித்திரப் பெண்ணின் அழகில் பெரிதும் மயங்கி, "யார் இந்தப் பெண்? எங்கே இருக்கிறாள்?" என்று பரபரப்புடன் கேட்டார்.

# 22. அவனால் ஆகும் காரியம்

மதுரை மாமன்னர் சொக்கநாத நாயக்கர் தன் எதிரே அழகியின் ஓவியத்தை வைத்துக் கொண்டு அதன் எழிலில் இலயித்திருந்தார். அந்த ஓவியத்து வடிவழகியின் அங்கம் ஒவ்வொன்றும் அவர் உள்ளத்தில் புதுவிதக் கிளர்ச்சியை அளித்துக் கொண்டு இருந்தன. அத்தகைய உணர்ச்சி ஏற்படும் பருவம் அது. ஆட்சிப் பொறுப்பிலும், அமைச்சர்களுடன் ஆலோசனையிலுமே காலத்தைக் கழித்து வந்த அவனுக்கு மெல்லியலாளின் மணம் நுகர்வதற்குச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

அரண்மனையில் ஏராளமான பணிப்பெண்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் பணிவிடையைப் பெற அரசிதான் இல்லை. பல ராஜ மாதாக்கள் - காலஞ் சென்ற தந்தையின் அபிமானத்துக்கு உட்பட்ட மகளிர் இருந்தார்கள். உறவின் முறையோர்கள் இருந்தார்கள். ஆனால், இராஜ சபையை அலங்கரிக்க அரசி இல்லை.

கோலாகலமான நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அழகிய ஆடலணங்குகள் இருந்தனர். பல தேசத்துப் பாவைகள் பருவ எழிலுடன் பூத்துக் குலுங்கி நின்றனர். ஆனால் சொக்கநாதரின் இதயத்தில் அவர்கள் போதையை ஊட்ட முடியவில்லை. ராஜ

வீதியில், பரிமேல் ஏறி உலா வரும்போது, வீதியின் இரு புறந்து மாடங்களின் வழியே முகமலரை மட்டும் காட்டி நிற்கும் குலமங்கையர்களின் அருள் வதனம்கூட சொக்கநாதர் மனத்தில் தன்னுடைய சரிபாதியாக வாழ்வதற்கு ஒரு பிடி இடையே நீ பெற வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவில்லை.

ஆனால், மாணிக்கப் பண்டாரம் கொண்டுவந்த ஓவியம் அவரது உடலில் ஆயிரம் கோடி பனிநீரை ஒரு கணம் தெளித்தது. அன்றலர்ந்த புது மலர்களால் அர்சித்தது போல் இருந்தது. வானத்துச் சந்திரனின் வெண் குழம்பெடுத்துப் பொதிகைச் சந்தனத்தை உடன் கூட்டி உடல் எங்கும் பூசி மெழுகியது போன்றிருந்தது.

ஆகா; அந்த விழிகளில் ஏதாவது புதிய வேலாயுதம் இருக்கின்றனவா? காமன் காமன் என்கிறார்களே அவனது படைக்கலனை அந்த அழகி பறித்து வந்து தன்னிடம் வைத்துக் கொண்டாளா?

சொக்கநாதர் அந்தச் சித்திரத்தையே பலவிதக் கோணங்களில் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். இரவெல்லாம் அவருக்கு உறக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு படுத்துப் படுத்து அலுப்பு ஏற்பட்டு விட்டது. கவலையுடன் எழுந்தவர் முதல் கடமையாக செவ்வந்தியை அழைத்து வருமாறு ஆளை அனுப்பினார்.

செவ்வந்தி வந்தபோது சொக்கநாதர் சித்திரப்பாவையின் உருவத்தின் எதிரே இமை கொட்டாமல் நின்று கொண்டிருந்தார். செவ்வந்திக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. ஓவியத்தின் எதிரேயே இவ்வாறு மனத்தைப் பறிகொடுத்து நிற்கிறாரே. உண்மையாக அந்த அழகியைக் கண்டுவிட்டால் என்ன நிலையை அடைவாரோ என்று எண்ணியபோது செவ்வந்திக்கு மேலும் சிரிப்புத்தான் வந்தது.

"செவ்வந்தி வந்து விட்டாயா? எங்கே வராமல் உன் காதலியின் அழகிலேயே இருந்து விடுவாயோ என்று எண்ணினேன். இதோ பார், இந்தச் சித்திரத்தை! இந்தச் சித்திரத்திலுள்ள மங்கையின் அழகைப் பார்த்தாயா? உன் காதலியை விட அழகாக இருக்கிறாளா சொல், செவ்வந்தி" என்று பரபரப்பும் ஆவலும் மிகப் பேசினார்.

"ஆகா! இந்த ஓவியத்திலுள்ள எழில் மங்கை எங்கே! என் காதலி எங்கே? இது என்ன? தேவலோக மாதைச் சித்திரக்காரர் வரைந்தாரா? இனி என் மீது உங்களுக்குக் கவனம் ஏது? இந்தக் கனவுக் கன்னியுடனேயே தனித்திருப்பீர்கள். என்னை இவ்வளவு நாட்கள் கே... செய்தது எல்லாம் தங்களுக்கே நேர்ந்து விடப்போகிறது பாருங்கள்" என்றான் செவ்வந்தி.

கிடையாது. என் சொந்த அண்ணனாக இருந்தால் அவன் இப்படியெல்லாம் அலட்சியமாக நடப்பானா? அத்தை சொல்வதற்கு நேர்மாறாக இருக்கிறதே. தந்தை சொல்வது. எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறதே' என்று மோகனா எண்ணினாள்.

மகளின் மௌனம் விஜயராகவருக்கு மேலும் சந்தேகத்தை அளித்தது. மோகனாவின் மனத்தில் இன்னும் என்னென்னவோ இரகசியங்கள் புதைந்து இருக்கின்றன என்ற எண்ணமும் அவருக்குத் தோன்றியது. அதை அறிந்து கொள்வதற்காக மோகனாவை மேலும் வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டு, "மோகனா, உன்னை வல்லத்துக்குப் போக வேண்டாம், போக வேண்டாம் என்று உன் அம்மாவும், நானும் தடுப்பது எதற்காகத் தெரியுமா? இந்தக் குடும்பத்தைச் சர்வ நாசம் செய்யும் வைராக்கிய சபதத்தை உன் அத்தை கொண்டிருப்பதுதான் காரணம்" என்று அவர் கூறியவுடன் மோகனாங்கி, "அதனால் அத்தைக்கு என்ன இலாபம் அப்பா?" என்றாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. சொந்தச் சகோதரன் நான் நன்றாக இல்லாமல் அழிந்து போவதில் அவளுக்கு ஒரு திருப்தி. அதுதான் காரணம்" என்றார் விஜயராகவர். மனம்விட்டுத்தான் சொன்னார்.

தந்தையின் மார்பிலிருந்து தன் முகத்தை விடுவித்துக் கொண்டு, "அப்படிச் சொல்லாதீர்கள் அப்பா! எனக்கு நல்லது செய்யத்தான். நான் இந்த நாட்டு அரசியாக வேண்டுமாம். தனக்கு நியாயமாகச் சேர வேண்டிய இந்த நாட்டை நீங்கள் அபகரித்துக் கொண்டீர்களாம். அதை மீட்டு எனக்குக் கொடுக்கப் போகிறாளாம். அதனால்தான் என்னிடம் பல உண்மைகளை கூறினாள். அத்தையின் அன்பு மகத்தானது. ரங்கராஜம்மா செய்யும் சூழ்ச்சிகளையும் எனக்குத் தெரிவித்தாள். சந்திரகிரியிலிருந்து எனக்குத் தக்க வரன் ஒருவரைப் பார்த்து என்னைச் சந்திரகிரிக்கு அனுப்பிவிட்டு, ரங்கராஜம்மாவே நாட்டை அபகரிக்கச் சூழ்ச்சி செய்கிறாளாம். அப்பா! எனக்குச் சொல்லக்கூட நா கூசுகிறது. தங்களை ரங்கராஜம்மா கலியாணம் செய்து கொள்ளப் போகிறாளாம். பிறகு பிறக்கும் ஆண் குழந்தைக்கு இந்த நாடு உரிமையாகுமாம். மன்னார்தாஸ்..." என்று அதற்கு மேல் சொல்லத் துணிவு இன்றி நிறுத்திக் கொண்டாள்.

விஜயராகவர் உள்ளத்தில் பெரும் எரிமலையே உருவாகியது. அதை வெளிக்குப் புலப்படுத்தாமல் முகத்தில் அமைதியை வரவழைத்துக் கொண்டு, "குழந்தாய்! உன்னுடைய பால் மனத்தில் விஷத்தைத் தெளிக்க உன் அத்தை எனும் சூன்யக்காரி திட்டமிடுகிறாளே! அவள் நன்றாக வாழ்வாளா? ரங்கநாதப் பெருமான் அவளைச் சும்மா

விடுவாரா? அத்தை சொன்னதில் சில உண்மைகள் உண்டு. உனக்குத் திருமணம் செய்யப் போகிறேன். சந்திரகிரி அரச வம்சத்து ராஜகுமாரன்தான் வரன் என்பதுதான் உண்மை. மற்றதெல்லாம் அத்தையின் கட்டுக்கதை. அவற்றையெல்லாம் மறந்து நிம்மதியாக இரு. போ. வேறு ஆடை ஆபரணங்கள் அணிந்து தயாராக இரு. நான் சொல்லியனுப்பியதும் தோட்டத்து வசந்த மண்டபத்துக்கு வந்துவிடு. நான் உன்மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறேன். உனக்கு நன்மை செய்யாமல் தீமை செய்தால் எனக்கு நானே அழித்துக் கொண்டது போலத்தானே ஆகும். இந்தச் சின்ன விஷயம் உனக்கு ஏன் தெரியவில்லை, அருமை மகளே!'' என்று விஜயராகவர் மீண்டும் அவள் முதுகைத் தடவியவாறு கேட்டார்.

''அத்தையும் எனக்குத் தீங்கு செய்வாள் என்று தோன்றவில்லையே அப்பா. தஞ்சை நாடு தனக்கு உரிமையானது என்பதை நிரூபிக்க உள்ள பல கடிதங்கள், ஆவணங்களை எனக்குக் காட்டினாள். அதனுடன் எனக்குக் கல்யாணம் செய்து வைக்கவும் அவள் மிகவும் முயன்று வருகிறாள். நீங்கள் சொல்வதையும் என்னால் மறுக்கமுடியவில்லை. அத்தை சொல்வதையும் பொய் என்று தள்ளிவிட முடியவில்லை. என் மனம் மிகவும் குழம்புகிறது...'' என்று அவள் சொல்லிக்கொண்டே போகும் போது விஜயராகவர் குறுக்கிட்டு. ''மகளே! வீணே மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. சிறு வயதுப் பெண், உலக அறிவு போதாத உன்னை ஏமாற்ற அப்படித்தான் பலர் முயல்வார்கள். இனி வல்லத்துக்குப் போகாதே. சீக்கிரம் உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட ஆயத்தமாகு'' என்று கூறிவிட்டு விஜயராகவர் புறப்பட்டார். அவர் உள்ளத்திலே புயல் உருவாகிக் கொண்டு வந்தது. ரங்கமாதேவியின் இரகசியங்கள் ஓரளவுக்கு மோகனாங்கி மூலமாகத் தெரிய வந்தது அவருக்கு.''

அன்றைய இரவு நடக்க இருக்கும் அரங்கேற்றம் சம்பந்தமாக மேற்கொண்டு ஆகவேண்டியவற்றைக் கவனிப்பதற்காக விஜயராகவர் அங்கிருந்து வேகமாக புறப்பட்டார். அறையிலிருந்து சிறிது தொலைவிலேயே ரங்கராஜம்மா வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டவுடன் அரசர் விஜயராகவர் சற்று நின்றார்.

''எங்கேயோ முக்கியக் காரியமாகச் செல்வது போல் தோன்றுகிறது'' என்று ரங்கராஜம்மா பேச்சைத் தொடங்கினாள்.

''இல்லை... இல்லை! ஆமாம்... ஆமாம்... ஆமாம்'' என்று ஏதோ சொல்லிக் குழம்பிய விஜயராகவர் பிறகு மெல்லிய குரலில், ''இப்போதுதான் நான் வல்லத்திலிருந்து வந்தேன். மோகனாவை அழைத்து வர மிகவும் கஷ்டமாகிவிட்டது'' என்றார்.

தன் புருவத்தை உயர்த்தி. "ஏன்?" என்று வினவினாள் ரங்கராஜம்மா. "அவள் அத்தை அவ்வளவு சீக்கிரமாக அவளை அனுப்ப விரும்பவில்லை. இன்று இரவு மோகனாவை வல்லத்துக் கோட்டையிலே தங்க வைத்து விட வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு."

"இன்று வித்வத் சபை இருக்கிறது என்று சொன்னீர்களா?"

நான் சொல்வதற்கு முன்பே அவளுக்கு அனைத்தும் தெரிந்திருக்கிறது. சந்திரகிரியிலிருந்து மோகனாவைக் காண வரப்போவதும் அவள் அறிந்திருக்கிறாள்."

விஜயராகவர் இவ்வாறு கூறியது கேட்டவுடன் ரங்கராஜம்மா திடுக்கிட்டவள் போல், "எல்லாம் தெரிந்திருக்கிறதா? உங்கள் சகோதரி அன்றோ! எப்படியாவது தெரிந்து கொண்டிருப்பாள்" என்றாள்.

"ரங்கா, நான் சொல்லவில்லை. பரம ரகசியமாக நான் நினைப்பவை அவளுக்குத் தெரிந்து விடுகிறது. மோகனாவுக்கு ஏற்பாடு செய்யப்படும் வரன் உன் முயற்சி என்பதையும் அவள் தெரிந்து கொண்டிருக்கிறாள். அத்துடன் கூட மோகனாவின் மனசை ரொம்பவும் கெடுத்து விட்டிருக்கிறாள். மன்னார்தாஸ் தனக்குச் சகோதரன் இல்லை என்பதையும் அவளிடமிருந்து தெரிந்து கொண்டிருக்கிறாள். இன்னும் பல இரகசியங்கள்... ரங்கா அவற்றையெல்லாம் சொல்லவே என் மனம் கூசுகிறது" என்றார் மன்னர் விஜயராகவர்.

ரங்கராஜம்மா பெருமூச்சு விட்டாள். பிறகு, "நமது திட்டங்கள் ஏதுமே சரியா நடைபெறாது போலிருக்கிறது. ஹூம்... அரசியல் காரியங்களில் நான் ஈடுபடுவதே தவறு. கலைமகள் அனுக்கிரகத்தால் பெற்ற கவிபாடும் திறமையுடனேயே நான் நின்றிருக்க வேண்டும். அதற்கும் மேலே நான் உங்களுடன் நெருங்கிப் பழகாது கவிதைகளைக் கூறிவிட்டுப் போவதோடு நின்றிருக்க வேண்டும்" என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறியவளை விஜயராகவர் மெல்ல நெருங்கினார்.

அவர் தன் கரத்தால் அவளுடைய கண்ணீரைத் துடைத்திருக்க வேண்டும். அந்த இடத்தில் மங்கிய இருள் சூழ்ந்திருந்தபடியால் ஏதும் தெளிவாகத் தெரியவில்லை.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. பிறகு மெல்லிய குரலில் விஜயராகவர் கிசுகிசுத்தது கேட்டது.

"ரங்கா, நீ என்ன மற்றவர்களைப்போல் சாதாரணப் பெண்ணா? நீ கண் கலங்கலாமா? நான் மனத்திற்குள்ளேயே இந்தச் செய்தியை வைத்துக் கொண்டிருக்காமல் உன்னிடம் சொன்னதால்தானே நீ கலங்குகிறாய். வல்லத்திலிருக்கும் என் சகோதரி ரங்கமாதேவியின்

சூழ்ச்சிகள் ஒரு நாளும் வெற்றியடையாது. நீ தைரியமாக ஆகவேண்டியவற்றைக் கவனி" என்றார்.

ரங்கராஜம்மா மெல்லச் சிரிப்பது கேட்டது. பிறகு விஜயராகவர் வேகமாக நடந்து செல்லும் ஓசையும் எழுந்தது. ரங்கராஜம்மா பட்டுப்புடவை சரசரக்க அந்த இடத்தினின்று மெல்ல நடந்து வரும்போது, அதுவரையில் அவர்கள் பேசுவதைப் பெரும் தூண் மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்த மோகனா, வேகமாக அந்தப்புரம் செல்லத் திரும்பியவளைக் கண்டாள்.

ரங்கராஜம்மாவுக்குத் திகிலும், வியப்பும் ஒன்று கூடின. தாங்கள் பேசியவற்றை மோகனா கேட்டுக் கொண்டிருந்திருப்பாளோ என்ற அச்சம் ஏற்பட்டது. தட்டுத்தடுமாறி, "மோகனா, நீ இங்கேயா இருந்தாய்?" என்று கேட்டாள்.

மோகனா ஏதும் அறியாதவள் போல், "இல்லையே! இந்த இருட்டில் எனக்கு என்ன வேலை? இப்போதுதான் அறையிலிருந்து வருகிறேன். சீக்கிரமாக வேறு ஆடை அணிந்து கொண்டு வசந்த மண்டபத்திற்கு வருமாறு தந்தை கட்டளையிட்டிருக்கிறார். இப்போதுதானே அவர் போகிறார். நீங்கள் பார்க்கவில்லை...?" என்று குழந்தை போல் ஒன்றும் தெரியாத பாவனையில் பேசினாள்.

ரங்கராஜம்மா நிம்மதியான பெருமூச்சுவிட்டு, "இப்போதுதான் போகிறாரா?" என்று ஏதோ சொல்ல வேண்டுமே என்பதற்காகப் பேசியவள், "சரி.. சரி... சீக்கிரம் வந்துவிடு. என்னுடைய பாடல்களைக் கேட்க வேண்டாமா?" என்றாள். அரசரும் தானும் பேசியவற்றை மோகனா கேட்கவில்லை என்ற திருப்தி ரங்கராஜம்மாவின் மனத்தில் நிறைந்திருந்தது.

ஆனால் மோகனாவோ, 'அத்தை கூறியவைதான் உண்மை. நாம் கண்ணால் பார்த்துக் காதால் கேட்டிருக்கும் போதே ரங்கராஜம்மா ஒன்றும் தெரியாது என்று மறைக்கிறாளே' என்று கலக்கம் அடைந்தவளாய் என்ன செய்வது என்று புரியாதவளாய் மெல்ல அந்தப்புரத்து மேல் மாடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

## 14. முக்கியமான செய்தி

"வெங்கண்ணாவிடம் நான் வேலை செய்கிறேன்" என்று அந்த மனிதன் கூறியவுடன் முத்துக்குமரன் ஒரு கணம் தன் நிலையைச் சமாளித்துக் கொள்ள வேண்டி வந்தது. வைத்தியர் வீட்டில் தன்னைப் பார்த்திருக்கிறான் அவன். அதனால் மதுரை ஒற்றர் படையைச் சேர்ந்தவன் நான் என்பதை அவன் அறிந்து கொண்டிருப்பான். மதுரை

ஒற்றர் படையைச் சேர்ந்தவனுக்குத் தஞ்சையில் என்ன வேலை? மேலும், செஞ்சியிலிருந்து செய்தி கொண்டு வருவதாக அவன் அறிந்தால் நிச்சயம் அவனுடைய சந்தேகம் உறுதிப்பட்டுவிடும். அதனால் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்துக் கொண்டு, “வாங்க, வாங்க! அண்ணாச்சி! சட்டென்று மறந்து விட்டேன். அதிலும் பாருங்க. நான் மதுரையைச் சேர்ந்தவன் என்று சட்டென்று இங்கே மற்றவருக்குத் தெரியக்கூடாது பாருங்க. அதனால்தான் ஒரு கணம் திகைத்தேன்” என்றான்.

“அதனாலே என்ன தம்பி! இங்கே என்ன வேலையா வந்திருக்கே? எனக்குச் சொல்லலாம்னா சொல்லு. உன்னுடைய தொழில் மொறைமை கெட்டுடக்கூடாது பாரு” என்றான் அவன்.

முத்துக்குமரன் மேலும் தன் நிலையை உறுதிப் படுத்திக் கொண்டு, “தெரியாதவங்க கிட்டேதான் ஏதாவது அப்படி இப்படின்னு சொல்லணும். நீங்க என்ன புதுசா? என் தொழில் தெரிஞ்சவங்க! உங்ககிட்ட சொல்றதுக்கு எனக்கு என்ன?” என்றான்.

“அப்படிச் சொல்லு. என் சிநேகம் இந்த ஊரிலே இருந்தா ரொம்பவும் உபயோகப்படும் தெரியுமா? உனக்கு எல்லா உதவியும் நான் செய்வேன்.... வா, பேசிக் கொண்டே போவோம்” என்றான் அவன். அவன் பெயர் முத்திருளாண்டி.

“உன்னாலே எல்லா உதவியும் செய்ய முடியும் என்று, எனக்குத் தெரியும். வெங்கண்ணாவிடம் வேலை செய்பவர் என்றால் லேசா!” என்றான் முத்துக்குமரன்.

முத்திருளாண்டி சிரித்தான். “தேவலாமே! எங்க எசமானரைப் பற்றி நல்லாத் தெரிஞ்சு வச்சிருக்கியே. ஒற்றன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். வெங்கண்ணா என்றால் நாலு திக்கிலும் நன்றாகத் தெரியுமே! ஆமாம்! நீ தஞ்சாவூருக்கு எதற்கு வந்தாய்?” என்று கேட்டான்.

“எதற்கு வந்தேனா? என்ன இப்படிக் கேட்டுவிட்டாய். நான் வெங்கண்ணாவைப் பார்ப்பதற்குத் தான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல நீ எதிரே வந்து விட்டாய். எங்கே போய் தேடுவது என்று நான் திகைத்திருந்தேன்” என்றான்.

முத்திருளாண்டி ஒரு கணம் திகைத்தான். அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், “எங்க எசமானரைத் தேடி வந்திருக்கிறாயா? ஆச்சர்யமாக இருக்கிறதே. மதுரை அரசருக்கும், தஞ்சை அரசருக்கும் மனத்தாங்கல் அதிகம் என்பது உனக்குத்

தெரியாதா? தவறாக ஏதாவது சொல்கிறயா? வெங்கண்ணாவைப் பார்க்க வந்தாயா? அல்லது வேறு யாரையாவது காண வந்தாயா?" என்றான்.

முத்துக்குமரன் மிகவும் பழக்கப்பட்டவன் போல் முத்திருளாண்டியின் முதுகில் தட்டி, "என்னப்பா எனக்குத் தெரியாமலா வந்துவிட்டேன் என்று நினைக்கிறாய்? தஞ்சை நாயக்கரைக் கண்டால் மதுரை நாயக்கருக்குப் பிடிக்காது என்பதைத் தெரிந்து கொண்டுதான் என்னை அனுப்பினார்கள். அதுசரி; தஞ்சை நாயக்கரை எங்கள் எசமானர் வெங்கண்ணாவுக்கு மட்டும் பிடிக்குமோ?" என்று கேட்டான்.

முத்திருளாண்டி முத்துக்குமரனைப் பிரமிப்புடன் நோக்கி, "பெரிய ஆளாயிருக்கிறாயே, அப்பா! சரியான ஒற்றன்தான். தெரிந்துதான் வந்திருக்கிறாயா? இரகசிய விஷயமோ?" என்று கேட்டான்.

"அதை எப்படி உன்னிடம் சொல்ல முடியும்? தஞ்சை அரசர் விஜயராகவருக்கு ராயசமாக வேலை பார்க்கும் வெங்கண்ணாவுக்கு விஜயராகவரைக் கண்டால் பிடிக்கவில்லை. வெங்கண்ணாவிடம் வேலை பார்க்கும் முத்திருளாண்டிக்கு வெங்கண்ணாவைப் பிடிக்கும் என்பது மட்டும் என்ன உறுதி? முக்கியமான செய்தியை நான் எப்படி உன்னிடம் சொல்ல முடியும்? அது நியாயமா! நீயே சொல்லு" என்றான்.

முத்திருளாண்டி சட்டென்று ஏதும் பதில் பேசவில்லை. சிறிது நேரம் மௌனமாக நடந்தவாறு, "சரியாகச் சொன்னாய். ஆனால், நீ நினைப்பதுபோல் இல்லைய்யா நான். என் எஜமானர் உயர்ந்த பதவிக்கு வரவேண்டும் என்பதுதான் என் முக்கியக் கனவு. அதற்காகவே உழைக்கிறேன். என்னிடம் நீ ஏதும் சொல்ல வேண்டாம். உன்னை இதோ, இப்போதே எங்க எஜமானரிடம் அழைத்துப் போகிறேன். ஆனால், ஒன்று சொல்லுவேன்: அரசர் விஜயராகவரைக் கண்டால் என் எஜமானருக்குப் பிடிக்கவில்லை என்பதை மட்டும் வெளியே ஒருவரிடம் சொல்லி விடாதே. தெரிந்ததோ தலை போய்விடும்" என்றான்.

"யாருடைய தலை?" என்று கேட்ட முத்துக்குமரன் கேள்விக்குப் பதில் சொல்லாமலே, "முத்து, எங்க எசமானரைப் போன்ற அறிவாளி இனி இந்த உலகத்தில் பிறக்கத்தான் வேண்டும். அவருடைய திறமைக்கும், அறிவாற்றலுக்கும் உயர்ந்த பதவி அவருக்குக் கிடைக்கவில்லையே என்ற வருத்தம்தான் எனக்கு" என்றான் முத்திருளாண்டி.

"உன் வருத்தத்தைப் போக்கத்தானப்பா நான் வந்திருக்கிறேன்" என்றான் முத்துக்குமரன்.

"அப்படியா! நான் நினைத்தேன். மதுரை நாயக்கர் ஏதோ முக்கியமான காரியத்திற்குத்தான் வெங்கண்ணாவிடம் அனுப்புகிறார் என்று நான் நினைத்தேன்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

"மிக முக்கியமான காரியம் உனக்குத் தெரியுமே. இப்போ பட்டம் ஏறியிருக்கும் சொக்கநாத நாயக்கர் வயதில் இளைஞ ரானாலும், ஆற்றலில் மிகுந்தவர். அவருக்கு உங்க எசமானர் வெங்கண்ணாவின் நட்பு மிகவும் தேவை. அதனால்தான் என்னை அனுப்பினார்" என்றான் முத்துக்குமரன்.

முத்திருளாண்டி உதட்டைக் கடித்துக் கொண்டான். எப்படியெல்லாம் மாற்றி மாற்றிக் கேட்டாலும் இவனிடமிருந்து செய்தியை அறிய முடியாது என்ற எண்ணத்தில், "முத்து, அதோ அந்தத் தோட்டத்தில் தான் என்வீடு இருக்கிறது. தோட்டத்திற்கு வெங்கண்ணா வரும் சமயம்தான்; இங்கேயே அவரைப் பார்த்து விடலாம்" என்றான். முத்துக்குமரனும் தலையசைத்தான், தன் மடியிலுள்ள ஓலை பத்திரமாகயிருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டே!

முத்துக்குமரனுக்கு ஏதாவது சாப்பிட்டால் தேவலை போலிருந்தது. அதை முத்திருளாண்டியும் தெரிந்து கொண்டு விட்டான் போலிருக்கிறது. "வா, என் வீட்டிற்குப் போகலாம். ஏதாவது சாப்பிட்டுவிட்டுப் பிறகு வெங்கண்ணாவிடம் போகலாம்" என்றான்.

முத்துவும் முத்திருளாண்டியும் தோட்டத்திற்குள்ளிருந்த வீட்டை நோக்கி நடந்தனர். சிறு வீடு; ஓடுவேயப்பட்டிருந்தது. ஓட்டின் மீது பூசணிக் கொடி படர்ந்திருந்தது. முத்துக்குமரன் திண்ணையின் மீது உட்கார்ந்து கொண்டான். முத்திருளாண்டி மட்குடம் ஒன்றைச் சுமந்து கொண்டு தோட்டத்தின் கோடியிலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரச் சென்றான்.

திண்ணைத் தூணின் மீது சாய்தபடி முத்துக்குமரன் தனக்கு நேர்ந்துவரும் அநுபவங்களைப் பற்றி நினைக்கலானான். வெங்கண்ணாவைச் சந்தித்தால் மதுரையினின்று வருவதாகச் சொல்வதா, அல்லது செஞ்சி ஓலையைக் கொடுப்பதா என்ற கவலை அவனைப் பெரிதும் வாட்டியது.

தூணில் சாய்ந்து கொண்டு சற்றுக் கண்ணை மூடிக் கொண்டிருக்கும்போது மதுரை வைத்தியர் மகள் கண் எதிரே தோன்றினாள். ஒரே கணம்தான் புறப்படும்போது அவளைப் பார்த்தாலும் அந்த உருவம் அவன் மனத்தை விட்டு அகல மறுத்தது.

குடந்தை பூக்காரர் மகளும் அவளுடன் சேர்ந்து தோன்றினாள். அவன் இதயத்தில் பெரும் போராட்டம். இருவரில் யார் சிறந்தவள் அழகானவள் என்று ஒப்பு நோக்குவதில் அவன் முனைந்தான். கண்களும், உதடும், கழுத்தும், மணிகள் ஒலித்தது போன்ற பேச்சும் இப்படியாகக் கற்பனை செய்து கொண்டு சூழ்நிலையை மறந்து இருந்தபோது யாரோ, 'ஐயா, ஐயா' என்று கூப்பிடுவது கேட்டு அவன் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான்.

எதிரே அரண்மனைக் காவல்காரன் நின்று கொண்டிருந்தான். "ஐயா... ஐயா எவ்வளவு நேரமாகத் தங்களைக் கூப்பிடுகிறேன்..." என்றான்.

"என்னையா?" என்று முத்துக்குமரன் கேட்டான்.

"ஆமாம், தங்களையேதான், உடனே தங்களை எசமானர் அழைத்து வரச் சொன்னார்" என்றான்.

முத்துக்குமரனுக்குச் சந்தேகம் பிறந்தது. மீண்டும் "என்னையா?" என்று கேட்டான்.

"என்னையா, என்னையா என்று இப்படிச் சந்தேகமாகக் கேட்கிறீர்கள். உங்களைத்தான், உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் - தோட்ட மண்டபத்திலே. கையோடு அழைத்து வரச் சொன்னார்கள்" என்று அவசரப்படுத்தினான் காவல் வீரன்.

நடந்தது நடக்கட்டும் என்று முத்துக்குமரன் காவல்காரனைப் பின்தொடர்ந்து வெங்கண்ணாவைச் சந்திக்கச் சென்றான்.

**வி**ஜயராகவ நாயக்கரின் இராயசமாக வேலை பார்த்து வந்த வெங்கண்ணாவின் உள்ளத்தில் ஆயிரம் சலனங்கள் எழுந்து எழுந்து மோதி இதயக் கரையை உடைக்க முயன்று கொண்டிருந்தன. அப்போதுதான் இளவரசன் மன்னார்தாசன் அவரைக் கண்டு பேசிவிட்டுச் சென்றிருந்தான். அவர் உதவியை அவன் பல விதத்தில் நாடினான். அன்பாகவும், கண்டிப்பாகவும், உத்தரவு போலவும் அவன் கேட்டுக் கொண்டவை பல இருந்தாலும், அவனது ஒரே ஒரு வேண்டுகோள் மட்டும் அவரது மனத்தை வாட்டியது.

மன்னார்தாசன் பெண்களிடம் சபல புத்தி உடையவன். தன் அந்தஸ்தையும், உயர்ந்த இடத்து மதிப்பையும் துளிக்கூட காப்பாற்றிக் கொள்ளாது தன் மோகக் குதிரையைக் கட்டவிழ்த்துச் சங்கடத்தில் மாட்டிக் கொள்வான். அவனைப் பல தடவைகள் ஆபத்தினின்று வெங்கண்ணா காப்பாற்றியிருக்கிறார். அடுத்துப் பட்டத்துக்கு உரியனாகிய அவன் தயவு எப்போதும் வேண்டும் என்ற எண்ணத்தில் அவனுக்கு ஏற்பட இருந்த இன்னல்கள் அவர் போக்கியிருக்கிறார். தனக்கு உதவும் வெங்கண்ணாவின் மீது மன்னாருக்கு மதிப்பும்

பிரியமும் வரவர அதிகரித்தன. தான் சொல்லும் எதையும் அவர் நிறைவேற்றி விடுவார் என்ற நம்பிக்கை அவனிடம் பெரிதும் குடி கொண்டிருந்தது. அதனால் அவன் அன்று வந்து சொன்னவை அவரைத் திடுக்கிடச் செய்தன. தஞ்சையில் எவ்வளவோ கன்னிகளிடம் தன் சேஷ்டைகளைச் செய்ய முனைந்த அவன், இப்போது வேங்கடமஹியின் மகளிடமே தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கிவிட்டான்.

"எனக்கு என்னவோ தெரியாது வெங்கண்ணா! வேங்கட மஹிமையே கேட்பீர்களோ, எப்படியோ... அந்த அழகு மலர் மங்களாவை நான் எப்படியாவது ஒரு முறை சந்தித்தாக வேண்டும்" என்று கூறினான். வெங்கண்ணா திடுக்கிடாமல் என்ன செய்வார்?

வேங்கடமஹியின் மகளிடமே, மன்னார் தன் வலையை விரிக்கிறான் என்றால் அழிவு நிச்சயம் என்று அவருக்குத் தெரியும். அவனுக்கு நல்லுரை கூறினாலும் கேட்கமாட்டான். அதே சமயம் வேங்கடமஹிக்கும் தக்க பாடம் கற்பிக்க வேண்டும் என்ற ஆவேசமும் அவர் மனத்தில் இருந்தது. இந்தக் குழப்பமான நிலையில் அவர் அவசரமாக முத்திருளாண்டியை அழைத்து வருமாறு சொல்லப் போக, புதிய காவல்காரன் முத்துக்குமரனை அழைத்து வந்து அவர் முன் நிற்க வைத்தான்.

மிகவும் அடக்கமாக வணக்கம் தெரிவித்து நிற்கும் முத்துக்குமரனைக் கண்டவுடனேயே வெங்கண்ணாவுக்கு அவனைப் பிடித்துவிட்டது.

"யாரப்பா? நீ எங்கே வந்தாய்?" என்று கேட்டார். கம்பீரமும் அதே போதில் மென்மையும் அந்தக் குரலில் ததும்பி நின்றன.

முத்துக்குமரனா அகப்பட்ட சந்தர்ப்பத்தை விடுபவன்? காவல் வீரன் தன்னைத் தவறாக அழைத்து வந்து விட்டான் என்று சொன்னால் காவல்காரனுக்கு அப்போதே வேலை போய்விடும். முத்திருளாண்டியுடன் வந்திருப்பதாகச் சொன்னால் செஞ்சிச் செய்தியைச் சொல்ல முடியாது போய்விடும். அவன் அந்த காரியத்தை விட்டு வேறு ஏதும் அச்சமயம் பேச விரும்பவில்லை.

"நான் செஞ்சியிலிருந்து வருகிறேன். தங்களைப் பார்க்கத்தான் வந்தேன்" என்று கம்பீரமாகக் கூறினான் முத்துக்குமரன்.

வெங்கண்ணாவின் நெற்றியில் சுருக்கம் ஏற்பட்டது. முத்துக்குமரனிடம் அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டதோ என்னவோ. "நான் இங்கே இருப்பேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஒரு கேள்வியை வீசினார்.

"ஏகோஜி சொல்லி அனுப்பினார்" என்று மெதுவாகத் தான் அவன் சொன்னான். ஏகோஜியின் பெயரைக் கேட்டவுடன் வெங்கண்ணா ஏன் அவ்வாறு திடுக்கிட வேண்டும்? பயபக்தி மேலிட்டவர் போல் முகத்தை மாற்றிக் கொண்டு, "ஏகோஜி சொல்லி அனுப்பினாரா? என்ன சொல்லி அனுப்பினார்?" என்று பரப்பரப்புடன் கேட்டார்.

"இதோ, இந்த ஓலை எல்லாச் செய்திகளையும் சொல்லும்" என்று கூறிக்கொண்டே தன் இடையில் மறைத்து வைத்திருந்த செய்தி நிறைந்த பட்டுத் துணிச்சுருளை நீட்டினான்.

வெங்கண்ணா அதை வாங்கிப் படித்துக் கொண்டிருக்கும் போது முத்துக்குமரன் இதயம் மேலும் வேகமாக அடித்துக் கொண்டது. இந்தச் சமயத்தில் முத்திருளாண்டி வந்து "தனக்குத் தெரிந்தவன் நான் என்று கூறி விட்டால் அவ்வளவும் பாழ்" என்று பயந்து கொண்டே நின்றான்.

"தம்பி, மிகவும் அவசரமான செய்தியைத்தான் கொண்டு வந்திருக்கிறாய். நீ, கொண்டு வந்த இந்தச் செய்தி வேறு யாருக்காவது தெரியுமா?" என்று வெங்கண்ணா கேட்டார். 'தெரியாது' என்பதற்கு அடையாளமாக அவன் தலையசைத்தான்.

"இப்போது நான் இதற்குப் பதில் கொடுத்துவிட முடியாது. ஒரு நாள் அவகாசம் வேண்டும். அதுவரையில் நீ வேறு எங்கும் போகாமல் இங்கேயே இருக்க வேண்டும். யார் எதைக் கேட்டாலும் ஒன்றும் சொல்லக் கூடாது. மிகவும் முக்கியமான செய்தி ஒன்றை எடுத்துக் கொண்டு நீ செஞ்சிக்குப் போகப் போகிறாய் தெரியுமா?" என்று கூறினார் வெங்கண்ணா.

முத்துக்குமரன் தலையசைத்தான். அப்போது தொலைவில் முத்திருளாண்டி வேகமாக அவ்விடத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டான்.

# 15. முறைப்பெண்

முன் காலத்தில் சோழ நாட்டின் தலைநகரமாக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரம், விஜயராகவ நாயக்கர் காலத்தில் மாளிகைகள் பாழடைந்து வீதிகளில் ஜனச்சந்தடியற்று, விளை நிலங்களில் கள்ளியும், கருவேலும் முளைத்து, பகலிலேயே நரிகள் ஓடும் பயங்கர பூமியாக முக்கியத்துவம் இழந்து, காட்சியளித்தது. சோழகங்கப் பேரேரி என்று புகழ்பெற்ற பொன் ஏரியின் தென்கரையில் மரங்கள் அடர்ந்து வளர்ந்து ஏரியின் கரையே தெரியாமல் செய்திருந்தது.

ஏரியிலே பெரும் மரங்கள் முளைத்து, அதன் நிழல் ஏரியின் நீரைக் கருமை நிறமாக மாற்றியிருந்தன.

அந்தப் பக்கமாகப் படகொன்று வந்து கொண்டிருந்தது. பொதுவாகக் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து தென்கரைப் பகுதிக்குப் படகுகள் ஏதும் செல்லா. அப்படித் தப்பித் தவறி ஏதாவது படகு வந்து விட்டால் சரியான மறுமொழி கொடுக்காவிடில் அதன் கதி அதோகதிதான். ஏரியில் முதலைகள் அதிகம் என்றும், அவை படகைக் கவிழ்த்து ஆளைச் சாப்பிட்டு விடுகின்றன என்றும் அந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் பேசிக்கொள்வார்கள். ஆனால், உண்மை அப்படியன்று.

தென்கரையின் அடர்ந்த காடுகள் இருக்குமிடத்தில் மரங்களின் மேல் எப்போதும் கந்ததேவனின் ஆட்கள் அமர்ந்துகொண்டு யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டே இருப்பார்கள். படகு நெருங்கும் போது மரத்தின் மேல் மறைவாக அமர்ந்து இருப்பவன் ஒநாயின் ஊளையைப் போன்ற ஒலி எழுப்புவான். படகில் வருபவர் கந்ததேவனின் ஆட்களாயிருந்தால் பதிலுக்குக் குரல் கொடுப்பர். தெரியாதவர்களோ, எங்கோ நரி ஊளையிடுகிறது என்று அமைதியாயிருப்பர். சிறிது நேரத்தில் படகின் அடியிலே நீந்திவரும் இருவர் நொடியில் படகைக் கவிழ்த்துவிடுவர்.

அந்தக் காட்டின் நடுவே கந்ததேவனின் இருப்பிடம் இருந்தது. பார்ப்பதற்குச் சிறு வீடுதான் என்றாலும், அந்த வீட்டின் மண்ணுக்கடியில் ஏராளமான செல்வங்கள் புதையுண்டிருந்தன. அனைத்தும் பலகாத தூரம் சென்று கந்ததேவனின் ஆட்கள் கொள்ளையடித்தவை. கந்ததேவன் அறியாமல் அவர்கள் ஒரு துரும்பைக்கூட களவாட மாட்டார்கள். ஏழைகளைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள். அவர்கள் குறிக்கோள் எல்லாம் ஒருவருக்கும் கொடுக்காமல் சேர்த்து வைத்திருக்கும் செல்வந்தர்களின் இரும்புப் பெட்டியில் உள்ள செல்வம்தான்.

கந்ததேவன் பார்ப்பதற்கு எளிமையான தோற்றமுடையவன். அடர்ந்த மீசையும், கரிய விழிகளும், கழுத்துவரையில் தொங்கும் மயிரும், குள்ளமான தோற்றமும், பரந்த மார்பும் திரட்சியான கரங்களும், அவனைச் சாதாரண விவசாயி என்றே எண்ணத் தோன்றும். ஆம்; அவன் விவசாயியாக இருந்தவன் தான். அறந்தாங்கியிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் பாதையில் கொஞ்சம் நிலமும் அவனுக்கு உண்டு. வானத்தைப் பார்த்துப் பயிரிட வேண்டிய கட்டாயம். கடும் உழைப்புக்கு ஏற்பப் பலன் நிலத்தில் கிடைக்காது போன பிறகு ஒரு வேளை சோற்றுக்கே திண்டாட வேண்டிய நிலைமை சிறு வயதிலேயே அவனுக்கு ஏற்பட்டது. தஞ்சாவூருக்கு நடந்தே வந்த அவன் கண்ணெதிரே உயரமான களஞ்சியங்களையும் அது நிறைந்து வழியும்

நெற்கதிர்களையும் பார்த்துப் பெருமூச்சு விட்டிருக்கிறான். தஞ்சை வீதிகளில் அவன் அலைந்து கொண்டிருந்தபோது இருண்ட சந்து ஒன்றிலிருந்து ஓர் உருவம் அவன் கரத்தைப் பிடித்து இழுத்தது.

"தம்பி, வவுத்துக்குச் சோறு தேடித்தானே இந்த ஊருக்கு வந்தே?" என்று கேட்டது.

"ஆமாம்..." என்று சொன்ன கந்ததேவனுக்கு அந்த உருவத்தின் கேள்வி ஆச்சர்யமாகவும் அதே சமயம் பயமாகவும் இருந்தது. தலை முதல் கால்வரையில் கறுப்பு அங்கியை அது மாட்டிக் கொண்டிருந்தது. கண்ணுக்கு மட்டும் இடைவெளி இருந்தது.

கந்ததேவன் அந்த உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னோடு வா, உனக்குச் சோறு போடுகிறேன்" என்று அந்த உருவம் அவன் கரத்தைப் பிடித்துக் கொண்டது. ஒரு கணம் அந்தப் பிடியினின்று நழுவி ஓடிவிடலாமா என்றுகூட எண்ணினான். அப்படி ஓடியிருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும். இன்றுபோல் அவன் பயங்கரக் கள்ளர் கூட்டத்தின் தலைவனாக இருந்திருக்க வேண்டாம். ஆனால் விதி வேறுவிதமாக இருந்ததே. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வேறுவிதமாக இருந்தனவே! அந்த உருவம் அவனை ஒரு பெரிய வீட்டின் கொல்லைப் புறத்திற்கு அழைத்துச் சென்றது.

வாழை மரங்கள் அடர்ந்திருந்த இடத்தில் அவனை நிற்கவைத்து, தனது அங்கியின் மறைவில் இருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தது. அதை அவிழ்த்து அதிலிருந்த தயிர்ச் சோற்றை அவனிடம் அளித்தது.

அவனுக்கு இருந்த பசியில் அது தேவ அமுதாகத் தோன்றியது. சோறும் ருசியாக இருந்தது. இரண்டு மாங்காய்த் துண்டுகளும் அதில் இருந்தன.

வாய்க்குச் சுவையாய் இருந்ததால் கந்ததேவன் அந்த உருவத்தின் யோசனைப்படி திறந்திருந்த கொல்லைக் கதவின் வழியே அந்த வீட்டிற்குள் நுழைந்து ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டான். இரவு கதவு தாளிடப்பட்டு அனைவரும் உறங்கியபிறகு, கந்ததேவன் மெல்லக் கதவைத் திறந்து விட்டான். அந்த முகமூடி உருவமும், இன்னும் சிலரும் நுழைந்து விலை உயர்ந்த ஆபரணங்கள் அடங்கிய பெட்டியைச் சுமந்து கொண்டு ஓடினர்.

கந்ததேவனும் அவர்களுடன் ஓடினான். அதிக தொலைவு ஓட முடியவில்லை. சோர்ந்து போய் ஒரு மண்டபத்தில் படுத்து விட்டான்.

மறுநாள் ஊரே அல்லோலகல்லோலப்பட்டது. அரசரிடம் சென்று முறையிட்டார்கள், பணத்தை இழந்த குடும்பத்தினர். கந்ததேவனுக்கு ஒரே நடுக்கம். தன்னை யாராவது பார்த்துவிடப் போகிறார் களோவென்று, பகலெல்லாம் மண்டபத்திலேயே மறைந்திருந்தான். பசி,

தாகம். இரவு வந்தது. சொல்லி வைத்தது போல் அந்த உருவம் வந்தது. கந்ததேவன் பசி அடங்கியது. ஆனால் அவன் உதவி வளர்ந்தது. முகமூடி சரியான வகையில் அவனைப் பயன்படுத்திக் கொண்டான். கந்ததேவன் முகமூடியுடனே இணைந்து விட்டான். அவர்களது கொள்ளைத் தொழிலுக்கு உளவு அறிந்து வருவதற்குப் பெரிதும் உதவியாக அவன் இருந்தான்.

கந்ததேவனுடைய வயது அதிகமாக ஆகத் திறமையும் கள்ளத்தொழிலில் - திறமையும் அதிகரித்தது. தஞ்சை மாளிகையில் முகமூடி தன் கை வரிசையைக் காட்டத் தொடங்கி வெற்றியும் அடைந்து விட்டான். அப்போது தான் ரங்கமாதேவியைக் கந்ததேவன் சந்தித்தான். அவனுடைய இளமைப் பருவத்தில் அவள் மயங்கி விட்டதும் உண்மை. 'இனி மாளிகைப் பக்கம் கொள்ளையர் தொல்லை இல்லாமல் செய்துவிடுவதாக கந்ததேவனிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டாள், ரங்கமாதேவி. அதற்குப் பதிலாகத் தன் உள்ளத்தை மெல்ல அவனிடம் பறிகொடுத்தாள். அவன் கொடிய கள்ளன் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால், அவனது புஜ பலமும், ஆள் பலமும், பண பலமும் தனக்கு ஒரு காலத்தில் உதவும் என்ற நம்பிக்கை அவளுக்கு அப்போது மனத்தில் ஏற்பட்டுவிட்டது. எப்படியாவது கந்ததேவனைச் சந்தித்து வந்தாள். வல்லம் கோட்டைக்கு வந்த பிறகு, கந்ததேவனைச் சந்திப்பதற்கு ஏற்ற வசதிகள் ஏற்பட்டன. கந்ததேவனின் தொழில் குருவாகவும், எசமானராகவும் இருந்த முகமூடி திடீரென நோய்வாய்ப்பட்டார். ஒருவரிடமும் சிக்காமல் உயிர்விட வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தன் சீடர்களிடம் தெரிவித்துக் கொண்டு, கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகிலுள்ள காட்டில் இரகசியமாகத் தான் கட்டியிருந்த வீட்டிற்குத் தன்னைக் கொண்டு போகுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படியே கந்ததேவன் அவரைக் கொண்டு சேர்த்தான்.

அவர் இறப்பதற்கு முன்பு கந்ததேவனைத் தன் இடத்தில் தலைவனாக நியமித்து, அதற்கு மாறாகத் தனது ஒரே சகோதரி ஒருத்தி குடந்தையில் இருப்பதாயும் அவளது மகளை மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வாக்குறுதி வாங்கிக் கொண்டான். கந்ததேவன் கொடுத்த வாக்கை மீறவில்லை. அதே சமயம் ரங்கமாதேவியிடம் கொண்டிருந்த நட்பையும் மறக்கவில்லை. கந்ததேவன் மணந்து கொண்டு இல்லற வாழ்வு நடத்தினான். அவன் மனைவி சந்தனத்தேவனைப் பெற்றெடுத்துவிட்டு இறந்து விட்டாள். கந்ததேவனுக்கு அதற்குப் பிறகு ரங்கமாதேவியே சகலமும், அவள் யோசனைப்படியே நடப்பான். சந்தனத்தேவனை அவள் தன் மகனைப் போலவே பாவித்தாள்.

சந்தனத்தேவனுக்கும் இருபது வயதாகியது. தந்தையின் தொழிலில் தந்தையைவிட அவன் மிஞ்சி விட்டான். அவர்கள் கோஷ்டியில் நூறு பேருக்கு மேல் கள்ள வீரர்கள் சேர்ந்து விட்டனர். தஞ்சை நாட்டிலும், செஞ்சியிலும், மதுரையின் எல்லையிலும் அவர்கள் கைவரிசைகள் அதிகமாயின. மாதத்தில் பத்து நாட்கள்தாம் அவர்கள் தொழில் நடைபெறும். பிறகு அனைவரும் கங்கைகொண்ட சோழபுரக் காட்டில் கூடுவார்கள். உல்லாசமாகப் பொழுது கழியும். அவர்கள் களிப்புடன் வாழ மாணிக்கவல்லியின் அழகும், ஆட்டமும், பருவமும், இனிப்புப் பேச்சும் உதவி வந்தன. ஆனால், ஒருவராவது அவள் மேனியைத் தீண்டத் துணியமாட்டார்கள். இராமேச்வரம் செல்லும் சாலையில் அனாதையாகக் கிடந்த சிறு குழந்தையைக் கந்ததேவன் கண்டெடுத்துப் பல வருடங்களுக்கு முன்பு கொண்டு வந்தான். மாணிக்கவல்லி என்று பெயரிட்டான். அவள் அழகு நாளுக்கு நாள் வளர்ந்தது. காட்டின் நடுவே எழில் மலராக அவள் வாழ்ந்தாள்.

அவள் நடனமாடிக் கொண்டே மதுக் குடத்திலிருந்து கூடியிருக்கும் கள்வர்களுக்கு மது ஊற்றுவாள். மயக்கந்தரும் பாடல் ஒருவரிடமிருந்து கிளம்பும். ஒருவன் மத்தளம் தட்டுவான். ஒருவன் உடுக்கை முழங்குவான். மாணிக்கவல்லி தன் இடையை அசைத்து ஆடுவாள். 'ஆஹா' 'ஆஹா' என்ற ஒலி எழுந்த வண்ணமிருக்கும்.

அன்று, ஏரிக்கரையில் படகு ஒன்று தொலைவில் வந்து கொண்டிருந்தபோது, மாணிக்கவல்லியின் நடனம் நடந்தது. மாணிக்கவல்லிக்கு அன்று நடனத்தில் நாட்டம் செல்லவில்லை. அவள் கண்கள் சுற்று முற்றும் பார்த்தன. விழிகள் யாரையோ தேடின. அவள் இதயம் ஏமாற்றத்தால் அதிகம் படபடத்தது. அவள் உள்ளம் கவர்ந்த அருமைக் காதலன் சந்தனத்தேவன், தலைவரின் மகன் கூட்டத்தில் காணவில்லை. அவன் இருந்திருந்தால் தெம்மாங்குப் பாடல்களை மிக அழகாகப் பாடுவான்.

"சாலை வழி ஓரத்திலே
சத்திரத்து வாசலிலே... என் தங்கமே!
மாலை வந்தும் காணோமே உனை - என் தங்கமே
மனசு ரொம்பத் துடிக்குதடி தங்கமே!"

என்று அவன் பாடும்போது மாணிக்கவல்லி முகபாவமுடன் இடையை அசைப்பாள். அங்கே 'ஹோ' என்ற பேரானந்த ஒலியையும், கரகோஷத்தையும் அது எழுப்பும். குஷி பிறந்து விட்டால் சந்தனத்தேவனுக்குப் புதிய பாடல் பிறக்கும்.

"கண்ணுறந்து வீதியிலே
காத்திருந்தேன் உனக்காக
கண்ணாழி போனதெங்கே
காலும் கடுக்குதடி"

என்று அவன் ஒருநாள் பாடினான். கேளிக்கை முடிந்து, மாணிக்கவல்லி கால் சலங்கையை அவிழ்த்துவிட்டு, சந்தனத் தேவனுடன் தனியே ஒரு மர மறைவில் சென்று அமர்ந்து அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டி, "அது யார் கண்ணழகி?" என்று கேட்டாள்.

"எதைச் சொல்கிறாய்?" என்று கொஞ்சினான் சந்தனத்தேவன்.

"அதான், கண்ணபுரத்து வீதியிலே நீங்கள் காத்திருந்தீங்களே அவள்..." என்று சிணுங்கினாள் மாணிக்கம்.

"ஹோ ஹோ" என்று பெரிதாக நகைத்த சந்தனத் தேவன் அவளை மெல்ல அணைத்து, "அடி பைத்தியமே! அந்தக் கண்ணழகி உன்னையன்றி வேறு யாராக இருக்க முடியும்?" என்றான்; மாணிக்கம் முகம் சிவந்தது. அதை மேலும் சிவக்கச் செய்ய அவளை இழுத்துத் தன் அதரத்தருகில் கொண்டு போய், அணைக்கவும், அவள் நெகிழ்ந்து விழும் கொடிபோல் நழுவி, "கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய்விடும்? அவசரம் என்ன?" என்று கூறிக் கொண்டே நழுவி விடுவாள்.

ஆனால், கிணற்றுநீரை வெள்ளம் கொண்டுபோய் விடும் சந்தர்ப்பம் வந்து கொண்டுதானிருந்தது. அதைத் தெரிவிப்ப தற்காகத்தான் படகில் காத்தவராயன் வந்து கொண்டிருந்தான். அவன் மாணிக்கவல்லியின் தூரத்து உறவினன். சந்தனத் தேவனுக்கு, தஞ்சை அரசர் விஜயராகவரின் மகள் மோகனாங்கியை மணம் புரிவதற்கு, கந்ததேவன் ஏற்பாடு செய்து வருகிறான் என்ற செய்தியை உடனே மாணிக்கவல்லியிடம் தெரிவிப்பதற்காக வந்து கொண்டிருந்தான்.

மரத்தின் மேல் இருந்தவர்கள் ஊளையிட்டதற்குப் பதில் ஊளை கொடுத்துவிட்ட காத்தவராயன் படகு கரையில் உள்ள மரவேரில் கட்டப்படுவதற்கு முன்பே தாவிக் குதித்து "மாணிக்கம், மாணிக்கம்" என்ற கூவிக் கொண்டே நடனம் நடந்து கொண்டிருக்கும் இடம் நோக்கி அந்தச் செய்தியைத் தெரிவிக்க ஓடினான்.

இவ்வளவு நாள் எதிர்பார்த்து, யாரை அடையக் காத்திருந்தாளோ அந்தச் சந்தனத்தேவனுக்கு அரச குடும்பத்துப் பெண் கிடைக்கப் போகிறாள் என்றறிந்த மாணிக்கவல்லியின் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கியது.

# 16. பழியும் பரிகாரமும்

தஞ்சை மாளிகையின் தன் அந்தரங்க அறையில் அரசர் விஜயராகவ நாயக்கர் கவலையே உருவாக அமர்ந்திருந்தார். நாள்தோறும்

அதிகாலையிலேயே ஸ்ரீரங்கம் சென்று அரங்கநாதரைத் தரிசனம் செய்து திரும்பும் பழக்கமுடைய அவர் அன்று புறப்படுவதற்கு ஆயத்தம் செய்யவில்லை. அவரது மனத்தில் என்றுமில்லாத சஞ்சலம் குடி கொண்டிருந்தது. அவர் எதிர்பார்த்ததுபோல் ஏதும் நடக்கவில்லை. அதற்கு நேர் விரோதமாகச் சம்வங்கள் நடந்து கொண்டிருந்தன. அவர் திட்டமிட்டிருந்ததுபோல் முதல் நாள் இரவு பண்டிதர்கள் சபை கூடவில்லை. அன்று சபையின் நடுநாயகமாக வந்திருக்க வேண்டிய பெரும் புலவரும், நாயக அரச குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவருமான வேங்கடமஹி வரவில்லை.

பெரும் ராஜதந்திரியாய் விளங்கிய கோவிந்த தீட்சதரின் புதல்வர் வேங்கடமஹி. கோவிந்த தீட்சதர் விஜயராகவ நாயக்கரின் தந்தை ரகுநாத நாயக்கர் காலத்திலும் முதன்மந்திரியாக இருந்து தமது சிறந்த அறிவாற்றலாலும், தீர்க்க தரிசனத்தாலும் நாட்டிலே நல்லாட்சி நிறுவுவதற்குப் பெரும் காரணமாக இருந்தார். மதுரை நாயக்கர்கள் பொறாமைப்படும் அளவுக்குத் தஞ்சை நாயக்க நாடு சிறப்புற்றிருந்தது.

கோவிந்த தீட்சதர் காலமும் முடிந்தது. அவருக்குப் பிறகு தஞ்சையில் இருந்த வேங்கடமஹி தந்தையின் பதவியை ஏற்று முதல் அமைச்சராக விளங்க விரும்பவில்லை. அவரது சிந்தை எல்லாம் தனக்கு நேர்ந்திருக்கும் தொல்லையை எண்ணி எண்ணி வேதனைப்பட்டது. வேங்கடமஹிக்கு அரச குடும்பத்தினரால் நேர்ந்த தொல்லை அவரது கவலைகளின் சிகரமாகத் திகழ்ந்தது. வேங்கடமகியின் மகள் மங்களம்மாள் அழகும் அடக்கமும் ஒன்றாய்ச் சேர்ந்து விளங்கியவள். அவள் தோற்றம் காண்பவர் எவரையும் ஒருகணம் திகைப்படையச் செய்யும். மன்னார் தாசனின் மனத்தில் அவள் தோற்றம் பெரும் கிளர்ச்சியை அளித்துவிட்டது.

வேங்கடமஹியை அவ்வப்போது சந்திக்கச் செல்வான் மன்னார். மங்களாம்பாளிடம் மோகம் கொண்ட பிறகு அவனுடைய வருகை அதிகரித்தது. இளவரசரை ஒவ்வொரு முறையும் உள்ளன்போடு அவர் வரவேற்பார். அப்போது அவர் சங்கீதத்தில் பலவித ராகங்களைக் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பார். அவருடைய ஆராய்ச்சிக்குப் பேருதவியாக மங்களாம்பாள் விளங்கினாள். அந்த வீட்டில் எப்போதும் இசை முழக்கம் கேட்டுக் கொண்டிருக்கும். தஞ்சையினின்று சிறிது தொலைவில் இருந்த திருவையாற்றில் காவிரிக் கரையருகே அவர் இல்லம் திகழ்ந்தது. இயற்கையான சூழ்நிலையும், இசைத் தேவதையை எப்போதும் வணங்கி வருவதால் ஏற்பட்ட அருள் பொலிவும் அந்தக் குடிலையே சுவர்க்கலோகம் போல் விளங்கச் செய்தது. அங்கே நடமாடும் தேவகன்னிகை போன்றே மங்களாம்பாள் விளங்கினாள். ஒவ்வொரு முறையும் மன்னார்தாசன் அங்கே வரும்போது

மங்களாம்பாள் தம்பூராவில் சுருதியை மீட்டிக் கொண்டிருப்பாள். வேங்கடமகி ராக ஆலாபனையில் தன்னை மறந்து இருப்பார். மன்னார்தாசன், அவர்கள் எதிரே அமர்ந்து இசையை ரசிப்பது போன்று, மங்களாம்பாளின் வடிவழகை ரசித்துக் கொண்டிருப்பான்.

சில நாட்கள் அவன் வரும்போது வேங்கடமஹி குளித்துக் கொண்டிருப்பார். மங்களாம்பாள், மன்னார்தாசனை வரவேற்பாள். இளவரசர் என்ற முறையில் மெல்ல நகைத்தவாறு கோவைப்பழம் போன்ற சிவந்த உதடுகளின் இடையே முல்லை மொக்கு வைத்ததுபோல் பற்கள் வரிசையாகத் திகழ்ந்தன. அவை அவனது மோகத்தை மேலும் தூண்டிவிடும். மன்னார்தாசன் தடுமாறுவான். ஏதாவது அவளுடன் பேச வேண்டும் என்ற முறையில் வாய் குழறுவான். சங்கீதத்தைப் பற்றி ஏதாவது தனக்குத் தெரிந்ததைப் பேச முயல்வான். மங்களாம்பாளும் தன் தந்தை வரும்வரையில் அவனுடன் பேசிக் கொண்டிருப்பாள். இவை அவனது ஆசைத் தீயில் தூபம் போட்டுக் கொண்டிருந்தன.

ஒருநாள் அவன் வந்தபோது வேங்கடமஹி இல்லை. இசை ஒலிக்கவில்லை. மங்களாம்பாளும் வழக்கம் போன்று குளித்துப் புத்தாடை அணிந்து, தம்புராவை மீட்டிக் கொண்டிருக்கவில்லை. ஏதும் வேலையில்லாது சோம்பேறித்தனத்துடன் கூடிய ஓர் சூழ்நிலையில் அவள் இருந்தாள். மன்னார்தாசுக்கு அவளுடைய தனிமையான சூழ்நிலை வெகு எளிதில் புலப்பட்டுவிட்டது.

“தந்தை ஊரிலில்லை...” என்று அவள் கூறும்போது அதில் அவனை வரவேற்கும் உணர்ச்சி இல்லை.

“தந்தை இல்லாவிடில் என்ன? இவ்வளவு நாள்கள் அவரைக் காணவா வந்தேன்? நீ தான் என்னை இங்கே அடிக்கடி வரும்படி செய்து கொண்டிருந்தாய். இன்றும் அதுபோல்தான் வந்தேன். ஏன், இன்று சோர்வுற்றிருக்கிறாய்? உனது மலர் முகம் ஏன் ஒளியிழந்து காணப்படுகிறது?” என்று கூறியவாறு மன்னார்தாசன் அவளை நெருங்கினான்.

மங்களாம்பாள் அவன் எண்ணத்தை ஒரு நொடியில் புரிந்து கொண்டாள். அவன் போக்கை மாற்ற விரும்பி, அவன் கவனத்தைத் திருப்ப விரும்பி, “இன்று இரவு அரண்மனையில் வித்வான்கள் எல்லாம் கூடுகிறார்களாமே. ரங்கராஜம்மா எனும் இசைமேதை புதிய பாடல்களை அரங்கேற்றப் போகிறார்களாமே” என்றாள்.

மன்னார் செவியில் அவள் சொன்னவை ஏதும் விழவில்லை. “மங்களா! உன் விழிகளை ஆண்டவன் என்னைக் கொல்வதற்கு என்றே படைத்தானா? உன் பவழத் திருவாய்ச் சொற்கள் என்னை மயக்கி

விடுகின்றன. மங்களா இன்று உன்னிடம் ஓடி வந்தது எதற்காகத் தெரியுமா? என்னை எவ்வளவு காலம் உன் மௌனத்தால் வாட்டி வதைக்கப் போகிறாய்? என்று உன்னிடம்..." - என்று அவன் வார்த்தைகளை அரை குறையாகக் கூறி முடிக்காமல் நெருங்கினான்.

வெங்கண்ணாவிடம் அவன் தன் மன எண்ணத்தைக் கூறி யோசனை கேட்டிருக்கிறான். அவர் எப்படியும் தனக்கு உதவுவார் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. அதனால் மங்களாவிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்துத் தன் இச்சையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற திடமான எண்ணத்துடன் அவன் அன்று அவளை நெருங்கினான்.

ஆனால், விதி வேறுவிதமாக இருந்தது. யாரும் எதிர்பாராத விதமாக வேங்கடமஹி அங்கே பிரவேசித்து விட்டார். துர்வாச மகிரிஷியைப் போல அவர் சீறினார். "யாருமற்ற போதில் கன்னிப் பெண்ணிடம் தகாத முறையில் நடந்துகொண்ட நீயும் உன் குலமும் அழிந்து விடும்" என்று உள்ளம் வெதும்பிக் கூறினார்.

விஜயராகவ நாயக்கர் இதை அறிந்து வேதனை அடையாமல் என்ன செய்வார். அரச குலத்தவர் ஓர் அறிவாளியின் குடும்பத்துக்குச் செய்த பாதகமும், அவரது சாபமும் அவரை மிக வாட்டின. அத்துடனில்லாமல் ரங்கமாதேவியின் போக்கும், மோகனாவின் மனக்கலக்கமும் விஜயராகவரின் மனத்தில் பெரும் குழப்பத்தை விளைவித்தன. அதனால் அவர் பெரும் கவலைக் குள்ளாகி தினசரி கடமையை மறந்தவராக அந்தரங்க அறையில் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தார். அப்போது வெங்கண்ணா அங்கு வந்தார். விஜயராகவர் அவரை வரவேற்று "உம்மைத்தான் நான் இப்போது நினைத்தேன்; வந்து விட்டீர்கள். உடனே மன்னார்தாஸைச் சிறையில் தள்ளுங்கள். உத்தரவை எழுதிக் கொள்ளுங்கள்" என்று கர்ஜித்தார்.

வெங்கண்ணா நடுநடுங்கி விட்டார். அரசருடைய அத்தகைய கடும் உத்தரவை அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் சற்றுத் தயங்கினார். மன்னார்தாசுக்கு அரசர் தண்டனை விதித்ததில் அவருக்கு எள்ளளவும் மனவருத்தமில்லை. தன்னுடைய சூழ்ச்சிகள் நிறைவேறுவதற்கு முதல்படி என்ற மகிழ்ச்சிதான். ஆனால், இவ்வளவு கடும் தண்டனையைத் தன் மகனுக்கு அவர் அளிப்பார் என்று நினைக்கவில்லை.

"அரசே!" என்று மெல்லப் பேச்சைத் தொடங்கினார் வெங்கண்ணா.

"தெரியும், நீர் என்ன கேட்கப் போகிறீர் என்று. என் மகனாய் இருந்தால் என்ன? அவன் செய்திருக்கும் காரியம் எத்தகைய பயங்கரமானது தெரியுமா?" என்றார் கடுங்கோபத்துடன் அரசர்.

"வயதின் விளைவு. திருமணப் பருவம். தெரியாமல் செய்துவிட்டார். ஒருமுறை மன்னித்துவிடுங்கள்" என்று குழைந்தார் வெங்கண்ணா.

"முடியாது; எங்கள் குலமே பெரிதும் கடமைப்பட்டிருக்கும் கோவிந்த தீட்சதரின் குமாரர் வேங்கடமஹிக்கு இழைத்த குற்றத்திற்கு இன்னும் கொடும் தண்டனை கொடுக்க வேண்டும். உடனே தண்டனையை நிறைவேற்ற வேண்டும். பாதாளச் சிறையில் தள்ளுங்கள்" என்று மேலும் ஆக்ரோஷத்துடன் கூவினார்.

வெங்கண்ணா களிப்புடன் சென்று விட்டார். தன்னைப் பெரிதும் நம்பும் இளவரசருக்கு உடனே தண்டனை நிறைவேற ஆவன செய்தார்.

• • •

**உ**த்தரவு அளித்தாரேயொழிய, விஜயராகவருக்கு வேதனை தாங்கவில்லை. ஏதோ புரிய முடியாத பயம் அவரைப் பிடித்துக் கொண்டது. தன்னை நோக்கி ஏதோ பெரும் ஆபத்துக் காத்திருப்பது போன்ற பிரமை அவரை வாட்டியது. "ரங்கா - திருவரங்க பெருமானே! என்னைக் காப்பாற்ற மாட்டாயா?" என்று வாய்விட்டுப் புலம்பினார்.

அப்போது காவலன் வந்து மைசூரிலிருந்து கங்கபட்டர் எனும் சோதிடர் வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

"சோதிடர் - சோதிடர்; நல்ல சமயத்தில் வந்திருக்கிறார். எனது வருங்காலத்தைக் குறித்து அவரைக் கேட்பேன். முன்கூட்டியே அறிந்துப் பிழைப்பேன்" என்று எண்ணத்தினராய் உடனே சோதிடரை வருமாறு கட்டளையிட்டார்.

கங்கபட்டர் வெகு நேரம் விஜயராகவரின் ஜாதகத்தை அலசி ஆராய்ந்து கடைசியாக, "அரசே உங்களுக்கு மிகவும் சிரமமான காலம் இது" என்றார்.

"அதுதான் தெரிகிறதே" என்றார் அரசர் புன்முறுவலுடன்.

"மேலும் பல தொல்லைகள் அடுத்தடுத்து வரும். அதனுடன் பெரிய மகான் ஒருவர் சாபமும் சேர்ந்திருக்கிறது" என்றார்.

இதைக் கேட்டவுடன் அரசர் பரபரப்புடன், "ஆமாம், ஆமாம் கங்கபட்டரே! என் குலத்துக்கே அழிக்க முடியா சாபம் நேர்ந்து விட்டது. அதைப்போக்க வழியில்லையா?" என்று கேட்டார்.

கங்கபட்டர் மிக நிதானமாக ஏதோ கணக்குகளைப் போட்டு, "இருக்கிறது. உங்களுக்கு இருக்கும் சாபத்தைத் தடுப்பதற்கு பெரும் பரிகாரமாக ஒரு யாகம் செய்ய வேண்டும். அதனால் சூரியனைக் கண்ட பனிபோல் தொல்லைகள் ஒழிந்துவிடும்" என்றார்.

விஜயராகவர் ஓரளவுக்கு மன நிம்மதி அடைந்தார். பெரும் யாகம் ஒன்று செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானார்.

# 17. மாளிகைத் தோட்டத்தில்

இளவரசி மோகனாங்கியை நேரே காண்பவர்களுக்குப் புன்னகை முகத்துடன் பருவத்தின் தலைவாசலில் கட்டிளங் குமரியாக, மகிழ்ச்சி நிறைந்தவளாக அவள் காட்சி அளித்தாலும் அவள் உள்ளத்தில் வேதனைப் புயல் பொங்கிக் கொண்டிருந்தது. சோக உணர்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருந்தது. மேலே பார்ப்பதற்குப் புது மணலாகவும், அடித்தளத்தில் புதைந்துவிடும் புதைகுழியாகக் காணப்படும் ஆற்றுப் படுகை போல் அவள் விளங்கினாள். யாராலும் அவள் நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மோகனா தன் தாயிடம் கூட வேதனையைக் கூற முற்படவில்லை.

தோட்டத்து வாயிலின் அருகே மெல்ல சென்று அமர்ந்தாள். அந்தப்புரத்துச் சூழ்நிலையையும் பணிப்பெண்கள் சந்தடியையும் மறந்து சற்று நேரம் இருக்கலாம் என்ற எண்ணத்துடன் வந்தாள். எதிர்காலம் எவ்வாறு அமையுமோ என்ற கவலை அவளை வாட்டியது. சூழ்ச்சியும், பூசலும் தஞ்சை வானத்தில் மெல்லக் கவிழ்ந்து வருவதை அவள் உணர்ந்தாள். அவளால் என்ன செய்ய முடியும்? எவ்வளவோ செய்ய முடியும் என்று அத்தை கூறியிருக்கிறாள். இந்த நாடே தன்னைச் சார்ந்தது. தனக்கே உரிமையானது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டால் பலபல காரியங்களைச் செய்யலாம். அது முடியும் காரியமா? அத்தையின் உதவியிருந்தால் நடக்கும். ஆனால் அத்தை யாரோ ஒரு மறைந்து வாழும் மனிதனுக்குத் தன்னை மணம் செய்துவைக்க முயலுகிறாளே. அவன் யாரோ? எவ்வாறு இருப்பானோ? என்ன பெயரோ - ஓ... சந்தனத்தேவன் என்று பெயர் என அத்தை சொன்னாளே!

சந்தனத்தேவன் -

மோகனாங்கி முணுமுணுத்தாள். அவள் பின்புறம் அவளுடைய உயிர்த்தோழி கமலம் வந்து நின்று கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.

"தேவி - தாங்கள் உச்சரிக்கும் பெயரிலேயே மணம் வீசுகிறதே!" என்றாள் கமலம்.

திடீரென்று குரல் கேட்டவுடன் மோகனாங்கி திடுக்கிட்டுத் திகைத்தாள்.

"யார் - யார் கமலமா? எங்கே வந்தாய் கமலம்?" என்று முக உணர்ச்சியை மாற்றிக் கொண்டே கேட்டாள்.

"ஏன், நான் வந்தது தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் நான் போய்விடுகிறேன்" என்று கமலம் திரும்பிச் செல்ல முயன்றாள்.

மோகனா அவள் கையைச் சட்டெனப் பற்றி, "போகவா உன்னைச் சொன்னேன் கமலம்? ஏன் நீயும் இப்படிப் பேசுகிறாய்?" என்று கூறி அவளைத் தன் அருகே உட்கார வைத்துக் கொண்டாள்.

"தேவி, நானும் சில நாள்களாகப் பார்க்கிறேன். தங்கள் உள்ளத்தில் ஏதோ பெரிய வேதனையை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். என்னிடம்கூட சொல்லாமல் அப்படியென்ன முக்கியமான விஷயம்? நான் அறியக்கூடாதா?" என்றாள் கமலம்.

மோகனா மெல்ல நகைத்தாள். தன் உள்ளத்துணர்ச்சியை எப்படி இவள் அறிந்து கொண்டாள் என்று மோகனா வியப்படைந்தாள். அதை அறிந்து கொள்வதற்காக, "கமலம், ஏன் நீ புதிதாகக் கற்பனை செய்து கொள்கிறாய்? எனக்கு என்ன கவலை" என்றாள்.

கமலம் கண்கொட்டாமல் மோகனாவின் முகத்தை உற்று நோக்கி, "தேவி, உங்கள் உள்ளத்தை நான் அறிந்து கொள்ளாமல் வேறு யார் அறிவார்கள்? மூன்று தினங்களாகப் பார்க்கிறேன். இரவில் நீங்கள் படுக்கையில் எழுந்து கொள்கிறீர்கள். வெகு நேரம் உறங்காமல் விழித்துக் கொண்டு இருக்கிறீர்கள். உறங்கும்போது ஏதோ பிதற்றுகிறீர்கள். அதில் ஒன்றை உதாரணத்துக்குக் கூறுகிறேன்; 'முடியாது - முடியாது, நான் சம்மதிக்க மாட்டேன்...' என்று தலையை அசைத்துக் கூவுகிறீர்கள். உங்கள் கண்களின் அடியில் இருக்கும் கரிய வட்டம் தெரிவிக்கிறதே..." என்று கூறவும், மோகனா கமலத்தின் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு, "கமலம் - நீ உறங்காமல் என்னைக் கவனித்துக் கொண்டிருந்தாயா - கள்ளி? உன் காதலன் வடக்கே இருந்து செய்தி ஏதாவது அனுப்பினானா?" என்றாள்.

"ஏன் - உங்கள் காதலனும் வடதிசையினின்று வரப்போகிறானா? அதனால்தான் என்னை இப்படிக் கேலி செய்கிறீர்களோ?" என்றாள் கமலம்.

"அப்படித்தான் எல்லாரும் திட்டமிடுகிறார்கள். ரங்கராஜம்மா என் கல்யாணத்தைப்பற்றி மிகவும் கவலை கொண்டிருக்கிறாள். சந்திரகிரி மணாளனை எனக்கு முடித்துவிட என் தந்தையும் முயல்கிறார். என் தாய் எதையும் கவனிக்காமல் இருக்கிறாள். நான் என்ன செய்வேன் கமலம்! என்னை மையமாக வைத்துக் கொண்டு பிரச்சினை சுழன்று சுழன்று வரும் போல் தோன்றுகிறது. அதனால் என்னென்ன தொல்லைகள் விளையுமோ? என்ற கவலை என் உள்ளத்தில் வாட்டுகிறது. அத்தை வேறு என் மீது மிகவும் அக்கறை கொண்டிருக்கிறாள். இதெல்லாம் எங்கே போய் முடியுமோ தெரியவில்லை... அதனால்தான் என் மனத்தின் வேதனைப் புயல் வீசிக் கொண்டிருக்கிறது" என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

கமலம் மௌனமாயிருந்தாள். பிறகு மெல்லிய குரலில், "தேவி! நான் யாவற்றையும் அறிவேன், அதற்காக நீங்கள் கவலைப்பட்டு என்ன பயன்? நடப்பதுதான் நடக்கும். நேற்றுகூட மாரியம்மன் கோயிலில் சோதிடரைச் சந்தித்துப் பேசினேன்..." என்று அவள் சொல்ல முற்படுவதற்குள், மோகனா பரபரப்புடன் "என்ன சொன்னார்? என்ன சொன்னார்? என்னையும் அழைத்துக்கொண்டு போயிருக்கக் கூடாதா? சொல் கமலம்.. சொல் கமலம்" என்றாள்.

"சொல்வதற்காகத்தானே இருக்கிறேன் தேவி! ரங்கராஜமாவோ மற்றவர்களோ தங்கள் வாழ்க்கையில் குறுக்கிட முடியாது என்று சொல்லி விட்டார். ஆனால்?..."

"என்ன ஆனால்? என்று கூறி நிறுத்துகிறாயே... சொல் கமலம்..." என்று அவசரப்படுத்தினாள் மோகனாதேவி!

"நான் சோதிடரிடம் கேட்ட செய்தியை யாரிடமும் தெரிவிக்காதீர்கள். தெற்கே இருந்து தங்கள் வாழ்க்கையில் குறுக்கிட ஒருவர் வருவாராம். பலம் பொருந்தியவராம்..." என்று கமலம் கூறும்போது தொப்பென்று சப்தம் கேட்டது.

தோட்டத்து மதில் சுவரின் மீதிருந்து முத்துக்குமரன் குதித்தான். அது அரண்மனைத் தோட்டம் என்று அவனுக்குத் தெரியாது. முத்திருளாண்டி அவனைத் துரத்திக் கொண்டு வந்தான்.

முத்திருளாண்டி, உண்மையைத் தெரிந்து கொண்டு விட்டான். முத்துக்குமரன் தன்னிடம் சொன்னது ஒன்று வெங்கண்ணாவிடம் சொன்னது ஒன்று என்பதைத் தெரிந்து கொண்ட முத்திருளாண்டி முத்துக்குமரனைப் பிடித்து வெங்கண்ணாவிடம் கொண்டு செல்வது என்ற முடிவில் முத்துக்குமரனை நெருங்கினான்.

"தம்பி! உன் வண்டவாளம் வெளிப்பட்டுவிட்டது. ஐயோ பாவம், தஞ்சாவூர்ச் சிறையில் வாடப்போகிறாயே! தெற்கத்தி வித்தையை என்னிடம் காட்டுகிறாயா? வா, போகலாம் வெங்கண்ணாவிடம். அவரிடம் ஏதோ கூறி அப்பொழுது தப்பித்துக் கொண்டாலும், என்னிடம் முடியாது தம்பி!" என்று கூறி அவன் மேல் பாய்ந்தான்.

முத்துக்குமரன் மிகவும் சாமர்த்தியமாக அவனிடமிருந்து நழுவி அங்கிருந்து பிடித்தான் ஓட்டம்! அந்தச் சமயத்தில் தப்பித்து ஓடுவதைத் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலை. இரவு வேளையாக இருந்தாலும் எங்காவது மறைந்து கொள்ளலாம். பகல் வேளையில் ஓடுவது எவ்வளவு தவறு? அவனுக்குத் தெரியும். இருந்தாலும் என்ன செய்வது? சந்து ஒன்றில் புகுந்து ஓடினான். பெரும் மதிலின் ஓரமாக ஓடினான். தொடர்ந்து முத்திருளாண்டி ஓடிவந்தான்.

ஆனால், முத்துக்குமரன் ஓடும் வேகத்துக்கு முத்திருளாண்டியால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இனியும் ஓட முடியாதநிலை வந்தவுடன் முத்துக்குமரன் அங்கிருந்த மரம் ஒன்றின் மேல் ஏறி மதில்சுவரைத் தாண்டிக் குதித்தான். குதித்த பிறகுதான் அங்கே இரு பெண்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

கமலம் அதட்டும் குரலில், "யார் அது?" என்று கேட்டாள். முத்துக்குமரன் நடுங்கியது கமலத்திற்குத் தெரிந்தது. பயந்து ஓடி வந்தவனேயொழிய தொல்லை கொடுக்க வந்தவனல்லன் என்பதைக் கமலம் புரிந்து கொண்டாள். மோகனாவும் அவனை நோக்கினாள் ஒரு கணம்.

முத்துக்குமரன் உடனே பதில் கூற முடியாமல் திகைத்தான். முத்திருளாண்டியிடமிருந்து தப்பி மோகனக்குமரிகள் இருவரிடம் சிக்கிவிட்டோமே என நடுங்கினான்.

"ஏனய்யா பதில் பேசாமல் நிற்கிறீர்கள்? காவலர்களைக் கூப்பிடட்டுமா?" என்றாள் கமலம்.

முத்துக்குமரன் வாய் திறந்தான். "அம்மா, மன்னித்து விடுங்கள். இது அந்தப்புரத்துத் தோட்டம் என்பது எனக்குத் தெரியாது. ஒருவன் துரத்தி வந்தான். அவனிடமிருந்து தப்ப ஓடிவந்தேன்."

கமலம் மெல்லச் சிரித்து, "உன்னைப் பார்த்தால் வீரனைப் போல் தோன்றுகிறது. ஓடி வரலாமா?" என்றாள். கமலத்தின் துடுக்குக் கேள்வியைக் கண்டு, மோகனா, 'உஸ்' என எச்சரித்தாள்.

"நேருக்கு நேர் நின்று போராடும் வீரனாயின் இந்த மறவன் ஓடமாட்டான். ஆனால், சதிகாரர்களிடம் இருந்து தற்சமயம் தப்பிக்க நானும் ஓடுவதைப்போலப் பாசாங்கு செய்து தப்பிக்க வேண்டியிருக்கிறது" என்று சற்றுத் துணிவுடன் கூறினான் முத்துக்குமரன்.

"சதிகாரனா - தஞ்சையிலா? யார் அவன்?" என்று கம்பீரமாகக் கேட்டாள் மோகனா. மறவன் ஓட மாட்டான் என்ற சொல் மோகனாவைக் கவர்ந்தது.

முத்துக்குமரன் ஒரு கணம் யோசித்தான். பிறகு "முத்திருளாண்டி என்ற சதிகாரன்" என்றான்.

கமலம் புரிந்து கொண்டு விட்டாள். "யார்? வெங்கண்ணாவின் உதவியாளனா?" என்றாள். முத்துக்குமரன் தலையசைத்தான்.

அப்போது மதிலின் மறுபுறம் யாரோ பலர் "இப்படித் தான் ஓடினான் - இப்படித்தான்" என்று பேசுவது காதில் விழுந்தது.

கமலம் சற்று நேரம் மௌனமாயிருந்து, "இப்புதர் மறைவில் சற்று இருங்கள். நான் வெளியே சென்று விசாரித்து வருகிறேன்" என்றாள்.

முத்துக்குமரன் புதரின் மறைவில் மறைந்து நின்றாலும் மோகனாவின் வடிவழகு தெளிவாகத் தெரிந்தது. அதோ! அவளே புதர் அருகே நெருங்கி வருகிறாளே! முத்துக்குமரன் உடல் ஏனோ வியர்த்து நடுங்கியது.

# 18. பெண்ணும் பொன்னும்

ரங்கமாதேவிக்கு அன்று எதிலும் நாட்டம் செல்லவில்லை. வழக்கம்போல் நீராடும் இடத்திற்குச் சென்று திருப்தி ஏற்படும் வரையில் குளித்துக் களிக்கும் அவளுக்குக் குளிக்கச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவேயில்லை. முதல் நாள் இரவு கந்ததேவன் வந்திருந்தான். இரவு நிசியைத் தாண்டியும் அவர்கள் பற்பல விஷயங்களை பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். முதலில் சாதாரணமாக ஆரம்பித்த பேச்சு பிறகு, மோகனாங்கியை வசியம் செய்ய முடியாது போனது பற்றி ரங்கமாதேவியைக் குறை கூறும் போக்கில் திரும்பியது.

"எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது தேவா, மோகனா என் பேச்சைக் கேட்பாளென்று" எனக் கூறினாள் ரங்கமாதேவி, வெற்றிலையில் சுண்ணாம்பை மெல்லத் தடவிக் கொண்டே.

கந்ததேவன் அலட்சியமாக நகைத்தான். "அதுசரி தேவி! உன் பேச்சை அவள் கேட்கிறாள் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், அதை நிறைவேற்றும் சக்தி அவளிடமில்லையே! அரசர் விஜயராகவர் தன் மகளின் பேச்சை ஒப்புக் கொள்வாரா?" என்று கேட்டான்.

ரங்கமாதேவி சற்றுச் சிந்தித்தாள். சிந்தனையின் போது அவள் கண்களை மூடிக்கொள்வது வழக்கம். அவள் சிந்தனையைத் தடைப்படுத்திய கந்ததேவன், "தேவி! எளிதான காரியமென்று நீ நினைத்துவிட்டாய். ஆனால், விஜயராகவர் திட்டம் வேறுவிதமாக இருக்கிறது. மோகனாங்கியின் திருமண விஷயம் அநேகமாக முடிந்ததுபோல்தான்" என்றான்.

கண்களை மூடியபடியே ரங்கமாதேவி கேட்டாள்:

"உனக்கு எப்படித் தெரியும்?"

"சந்திரகிரியிலிருந்து தகவல் வந்தது".

"வரட்டுமே! மோகனா சம்மதிக்காவிட்டால் யாரும் அவளை மணக்க முடியாது."

"சந்தனத்தேவனை மட்டும் அவள் மணக்கச் சம்மதிப்பாள் என்பது என்ன நிச்சயம்?"

"ஆமாம். அவனை ஒரு முறை மோகனா பார்த்திருந்தால் அவனழகில் மயங்கிச் சம்மதித்திருப்பாள். அவன்தான் வரவில்லையே! அதற்குள் வேறு வேலையை அவனுக்குக் கொடுத்து விட்டாய்" என்று ரங்கமாதேவி பொருள் புதைந்த கேள்வியைக் கேட்டாள்.

"நானா கெடுத்தேன்? எப்போதும் சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருக்கும் அவனிடம் ஒருவன் சிக்கினான். அவனிடமிருந்து கிடைத்த செய்தியினின்று பலப்பல புதுச் சதித்திட்டங்கள் தெரிய வந்தன... மோகனாவை நீ ஏன் நிறுத்தி வைத்திருக்கக்கூடாது?"

உடனுக்குடன் கந்ததேவன் ரங்கமாதேவிக்கு மறுமொழி கொடுப்பதுபோல் பேசியது அவளுடைய சிந்தனையைத் தடைப்படுத்திக் குழப்பத்தை அளித்தது.

பெருமூச்சு விட்டவாறு, "ஹூம், நான் எதிர்பாராத விதமாக விஜயராகவன் வந்து தன் மகளை உடனே அழைத்துச் சென்று விட்டான்" என்றாள்.

"என்னதான் உனது சகோதரனாயிருந்தாலும் அவர் அரசர். அவரை மரியாதைக் குறைவாக ஏக வசனத்தில் அழைக்கிறாயே!" என்று கேட்ட கந்ததேவன் குரலை மாற்றிக் கொண்டு, "உன் முகத்தை ஏறிட்டு நோக்க அவருக்குத் துணிவு இருந்ததா?" என்றான்.

"அவனுக்கு ஏது துணிவு? துணிவு இல்லாமலேயே சிங்காதனத்தில் உட்கார்ந்து கொண்டு நாட்டைப் பாழ்படுத்தும் அவனை அரசன் என்று கூற எனக்கு வெட்கமாக இருக்கிறது. என் சகோதரன் என்று சொல்லிக் கொள்ளவும் நாணுகிறது. என்னிடம் மட்டும் அதிகாரமிருந்தால் நான் எப்போதோ விஜயநகர உறவை ஒழித்திருப்பேன். மதுரைப் பயமுறுத்தல்களுக்கு அஞ்சமாட்டேன். மதுரையை சாம்ராஜ்யமாக எதிர்த்துப் போரிடும் அளவுக்கு வலிமை மிகுந்த நாடாக்குவேன் தஞ்சையை" என்று விழிகள் ஜ்வலிக்கக் கூறவும் கந்ததேவன் நகைத்து ரங்கமாதேவியின் முகவாயை மெல்லப் பிடித்தசைத்து, "ரங்கம்மா! கோபத்திலும் உன் முகம் அழகாய் விளங்குகிறது" என்று கூறி அவளை நெருங்கினான்.

அவன் கரத்தை வேகமாகத் தள்ளிய ரங்கமாதேவி, "கல்யாணம் செய்தால் ஒரு குழந்தைக்குத் தந்தை ஆகக்கூடிய ஒரு மகனைப் பெற்றிருக்கும் உனக்கு இன்னுமா ஆசை" என்று சிணுங்கிய ரங்கமாதேவியின் தோளைத் தொட்டுத் தன் பக்கம் திருப்பிய கந்ததேவன், "இதோ பார், என்னை நேரே பார்த்துப் பேசு... எனக்கு மட்டும்தானா இப்படி? உனக்கு..." என்று கேட்டபோது ரங்கமாதேவி முக உணர்ச்சியை மாற்றிக்கொண்டு, "சரி... சரி... எனக்கு ஏனோ மூளை குழம்புகிறது. எதிலும் நாட்டம் செல்லவில்லை. மோகனாவுக்கு

நான் விரும்பிய வரனை முடிக்காவிட்டால் இந்த வல்லத்துக் கோட்டையில் நான் வாழ்ந்தும் பயனில்லை. அதற்கான முயற்சிகளை நான் உடனே எடுக்க வேண்டும்" என்றாள், கந்ததேவனின் மனத்தை மாற்ற விரும்பி.

"எப்படி எடுக்கப் போகிறாய்?" என்று கந்ததேவன் கேட்டான்.

"எப்படி எடுக்கப் போகிறேனா... அதற்கு எனக்குச் சிந்திக்க அவகாசம் வேண்டும். என்னைக் கொஞ்சம் அமைதியா விட்டுவிட்டுப் போ" என்றாள் ரங்கமாதேவி.

கந்ததேவன் அவளை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, சுரங்கப்பாதை வழியாக வெளியேறி விட்டான். அவன் சென்ற பிறகு வெகுநேரம் ரங்கமாதேவிக்கு உறக்கம் வரவில்லை. மோகனாவுக்குச் சந்தனத்தேவனை எப்படியாவது திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்ற உறுதி அவள் உள்ளத்தில் ஏற்பட்டது. அதற்கு என்ன வழி என்று யோசிக்கலானாள். பலவிதமாகச் சிந்தித்தும் எந்தவித முடிவும் அவளுக்கு ஏற்படவில்லை. இரவு கழிந்து விடிவெள்ளியும் முளைத்துவிட்டது. குளிர்ந்த காற்று சாளரத்தின் வழியாக திரைச்சீலையையும் அசைத்துக் கொண்டு வீசியது. ரங்கமாதேவி கண்ணயர்ந்தாள்.

விழித்துக்கொண்டு பார்க்கும்போது விடிந்து வெகு நேரம் ஆகியிருந்தது. தலை பாரமாக இருந்தது. எந்தவித முடிவும் ஏற்படவில்லை. முடிவு ஏதும் தோன்றாததால் எந்த வேலையிலும் மனம் நாடவில்லை. பணிப்பெண்களின் வற்புறுத்தலினால் மெல்ல எழுந்து நீராடிவிட்டு, நேரே பூஜை அறையை அடைந்தாள்.

கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்திருக்கையில் இரகசிய அறைக்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. கந்ததேவன் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

'இது ஏது, பகலிலேயே வர ஆரம்பித்து விட்டானே. இந்த வழியை யாராவது அறிந்துவிட்டால் தொல்லை தான்' என்று எண்ணிய ரங்கமாதேவி மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

கந்ததேவன் அருகில் வந்தமர்ந்தான். "என்ன தேவா, என்ன விஷயம்? பகல் வேளையில் வராதே என்று உனக்கு எவ்வளவு தடவை சொல்லுவது?" என்று மெல்லக் கடிந்து கொண்டாள் தேவி.

"எல்லாம் காரணமாகத்தான் வந்தேன் தேவி! நிலைமை நாளுக்கு நாள் வேறு விதமாகத் திரும்புகிறது" என்றான்.

'என்ன' என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தினாள் ரங்கமாதேவி.

"உன் செல்ல மருமகள் மோகனாங்கி - இல்லை இல்லை- இளவரசி மோகனாங்கி - இல்லை இல்லை, இந்த நாட்டுக்கு உரிமையான அரசி மோகனாங்கியின் மீது இப்போது மதுரை மன்னருக்கே நாட்டம் ஏற்பட்டு விட்டதாம்...!" என்றான் கந்ததேவன்.

ரங்கமாதேவி அலட்சியமாகச் சிரித்து, "இதைச் சொல்வதற்கா இங்கே இந்த நேரத்தில் ஓடி வந்தாய்? பழுத்த கனியை நாடிப் பலவிதப் பறவைகள் ஓடி வருவது சகஜந்தானே. மதுரை மன்னன் என்ன, பீஜப்பூர் சுல்தான் கூட வரலாம்.." என்றாள்.

கந்ததேவனுக்குக் கோபம் பொங்கியது. "தேவி! உமது வார்த்தைகளின் அலட்சியம் என் ஆத்திரத்தைக் கிளப்புகிறது. என் மகனுக்குத்தான் மோகனாங்கி என்று ஏன் வீண் ஆசையைக் கிளப்பிவிட்டு என்னை வேறு எந்த வேலையினாலும் கவனங் கொள்ளாத நிலையை அளித்து விட்டாய்?" என்றான்.

"வீண் ஆசையைக் கிளப்பவில்லை கந்ததேவா! மோகனாங்கியின் கழுத்தில் சந்தனத்தேவன் தாலியைக் கட்டிவிட வேண்டும் எனும் ஓரே ஆவல் எனக்கு. வேறு எந்த வேலையிலும் உனக்கு ஏன் நாட்டம் செல்லவில்லை? பணம் வேண்டாமா பணம்? விஜயராகவன் பணம் என்றால் வாயைத் திறப்பான். இதோ இங்கே மூலையில் கொட்டி வைத்திருக்கும் ஆபரணங்கள், பொன் நாணயங்கள், வைரக்கற்கள் எல்லாம் போதும் என்பது உன் எண்ணமோ? தஞ்சைப் பொக்கிஷத்தில் இதைப் போல் பத்து மடங்குச் செல்வங்கள் உள்ளன. உனது தொழிலைக் கவனிக்காமல் நீ உன் மகன் திருமணத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் காரியம் நடந்து விடுமா? சேதுபதியின் அரண்மனைக்குச் சென்று பொக்கிஷத்தைக் காலிசெய்து வரப்போவதாகச் சொன்னாயே, என்ன ஆயிற்று? அடுத்த பௌர்ணமிக்குள் பத்தாயிரம் கழஞ்சுப் பொன்னும், நீ சொன்னாயே, சந்திரஹாரம் என்ற மரகதக் கல் வைத்த மாலையும் கொண்டு வந்து சேர்த்துவிடு. நான் மோகனாவின் திருமணத்தை முடித்துவிடுகிறேன்" என்றாள்.

கந்ததேவன் மெல்ல மீசையைத் தடவியபடியே ரங்கமாதேவி கூறுவதைக் கேட்டுத் தலையசைத்தபடி இருந்தான்.

"என்ன, தலை ஆட்டுகிறாய்? உனக்குப் பிரியமில்லை போலிருக்கிறது. அப்படித்தானே தேவா?" என்று ரங்கமாதேவி கேட்டாள்.

"அப்படி இல்லை தேவி! நீ சொன்னவற்றுள் உள்ள உண்மைகளைக் கவனித்தேன். நான் சில நாள்களாகத் தொழிலைக் கவனிக்கவில்லைதான். அதிலும், மோகனாவைக் கண்டுவிட்ட பிறகு

சந்தனத்தேவனுக்கு அவளை எப்படியாவது மணம் முடித்துவிட வேண்டும் எனும் ஒரே ஆவலில் நான் எங்கேயும் செல்வதில்லை. கங்கை கொண்டான் காட்டிற்குக்கூடப் போய் நாளாயிற்று. தேவி! மனம் விட்டுச் சொல்லுகிறேன்; நான் மட்டும் இளைஞனாயிருந்தால் மோகனாவை மணம் புரிந்து கொண்டிருப்பேன். உங்கள் வம்சத்தாருக்கு மட்டும் ஆண்டவன் அத்தகைய பேரழகை எப்படித்தான் படைத்தானோ! என்ன தோற்றம்! அவள் முகத்தில் ததும்பும் பேரெழில்தான் என்ன! அத்தையின் ஜாடையை அவள் கொண்டிருக்கிறாள்" - என்று சொல்லிக் கொண்டே போகும்போது ரங்கமாதேவி, "நிறுத்து கந்ததேவா! மதுவில் மயங்கும் போதுகூட இவ்வாறு நீ பிதற்றியதில்லை. போதையிலே நீ காரியத்தைக் கெடுத்துவிடப் போகிறாய். ஹூம்... போ - இப்போதே போய் நான் சொன்ன சந்திரஹாரத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்" என்று கர்ஜித்தாள்.

கந்ததேவன் மெல்லப் பேசினான், "தேவி, சேதுபதி நாட்டில் கொள்ளையிடுவது எளிதல்ல. வீரமறவர்களுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன். விஜயராகவனுக்கு ஏராளமாகப் பொன் தேவை என்றால் நான் வேறு எங்கிருந்தாவது கொண்டு வருகிறேன்."

"எங்கிருந்து கொண்டு வருவாய்? அவ்வளவு பணம் எங்கிருக்கிறது?" என்று கேட்டாள் ரங்கமாதேவி.

"மதுரையிலிருந்து கொண்டு வருகிறேன். மோகனாவின் மீது ஆசை கொண்டு விட்ட மதுரை மன்னனது பொக்கிஷத்தையே காலி செய்து கொண்டு வந்து விடுகிறேன்" என்று வீரம் பேசினான் கந்ததேவன்.

"அதெப்படித் தெரியும்? உனக்கு மதுரை மன்னன் ஆசை கொண்டு விட்டான் என்று? சும்மா நீயே ஏதாவது ஊகம் செய்துகொள்ளாதே" என்றாள் ரங்கமாதேவி. அவனிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காகத் தான் இப்படிக் கேட்டாள்.

"ஊர்ஜிதமற்ற செய்தி எதையுமே கந்ததேவன் கவனிக்க மாட்டான். தஞ்சை வீதியில் நான் அலைந்து கொண்டிருந்தேன். பாழடைந்த வீட்டுத் திண்ணையில் ஓர் இளைஞனும், வயோதிகனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இளைஞன் மிகவும் சாமர்த்தியசாலி. சிறிது நாட்களுக்கு முன் செஞ்சியிலிருந்து செய்தி கொண்டு வருவதாகக் கூறிப் பொய்த் தாடி மீசையுடன் காட்சி அளித்தவன், இன்று மதுரைக்குச் செல்லும் ஒருவரிடமும் ஏதோ செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். மோகனாவின் அழகைப் பற்றி அந்த வயோதிகரிடம் வர்ணித்து, உடனே அந்தச் செய்தியை மதுரை மன்னரிடம் தெரிவிக்குமாறு சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"ஓகோ...!"

"என்ன, ஓகோ என்கிறாய் தேவி?"

"ஆமாம், மதுரை மன்னரிடம் மோகனாவின் அழகைத் தெரிவிக்கச் சொன்னால், மதுரை மன்னர் மோகனாவை விரும்புவதாக அர்த்தமோ? மதுரை மன்னர் சொக்கநாதருக்குப் பெண் கொடுக்க எவ்வளவோ பேர் காத்திருக்கும்போது அவர் மோகனாவை விரும்புவாரா?"

"கோபிக்காதே தேவி! இந்த இடத்தில் உன் முடிவு தவறானது என்று சொல்லித்தானாக வேண்டும். மதுரை மன்னன் மோகனாவின் அழகைத் தெரிந்துகொண்டு விட்டால் கல்யாணம் முடிந்துவிட்டதென்ற முடிவு செய்து கொள்ள வேண்டும். மதுரை மன்னன் பெண் கேட்கிறான் என்றால் விஜயராகவன் சந்தோஷத்தோடு மோகனாவைக் கல்யாணம் செய்து கொடுக்கச் சம்மதிப்பார். அதனால்தான் கல்யாணம் முடிந்தது போல்தான் என்றேன்."

"ஒருநாளும் விஜயராகவர் சம்மதிக்க மாட்டார் என்று எனக்குத் தெரியும். எங்கள் வம்சத்திலிருந்து இனி ஒருநாளும் மதுரை வம்சத்திற்குப் பெண் கொடுக்கவே மாட்டோம். கொலைகாரர்கள் அவர்கள்."

"யார்தான் கொலைகாரர்கள் இல்லை தேவி! அரசர்கள் அனைவரும் கொலைகாரர்கள்தாம். நானும் கொலைகாரன்தான்!"

"அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. தஞ்சையினின்று பெண் கொண்ட திருமலை நாயக்கன் ஒருநாள் திடீரென்று அவளைக் கொன்று விட்டான். கொலைகார அரசரை விஜயராகவர் ஒருநாளும் ஏற்கமாட்டார். மேலும்... மேலும்..." என்று ரங்கமாதேவி வார்த்தையை முடிக்காது இழுக்கவும் "சொல்லு தேவி, சொல்லு" என்று ஆவலுடன் கேட்டான் கந்ததேவன்.

"மதுரை மன்னர்கள் எங்கள் அந்தஸ்தைவிடக் குறைவானவர்கள்" என்றாள் ரங்கமாதேவி.

கந்ததேவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"இதோ, இந்தக் கந்ததேவனின் மகளைவிடவா மதுரை மன்னன் அந்தஸ்தில் குறைந்தவர்! வேடிக்கையாக இருக்கிறது தேவி. உன்னுடைய திட்டமும், எண்ணமும் இங்கேதான் தோல்வியடையப் போகின்றன. மதுரை மன்னரிடம் மோகனாங்கியைப் பறிகொடுத்து விட்டு, நீ, நான் எல்லோரும் ஏமாந்துத் தவிக்கப் போகிறோம்" என்றான்.

ரங்கமாதேவி சீறினாள்: "மற்றொருமுறை அப்படிச் சொல்லாதே தேவா! நான் சொல்வதை நிறைவேற்ற உனக்குத் திறமை இருந்தால்

மோகனாவைப் பற்றி இனிப் பேசு. இல்லாவிடில் மறந்துவிடு" என்றான்!

"ரங்கமாதேவி! இந்தக் கந்ததேவனின் திறமை உனக்குத் தெரியாது. விஜயராகவருக்கு வேண்டியது பணம்தானே. அடுத்த பௌர்ணமிக்கு முன்பே உன் காலடியில் கொண்டு சேர்க்கிறேன். அப்புறம் ஏதாவது அந்தஸ்து - கிந்தஸ்து என்று தட்டிக் கழித்து விடாதே!" என்றான்.

"தேவா! மோகனாவைச் சந்தனத்தேவனுக்கு மணம் புரிந்து கொடுப்பதில் உன்னைவிட எனக்குத்தான் அதிக அக்கறை என்பதை மறந்து விடாதே! அதுசரி; சேதுபதியின் அரண்மனையில் கொள்ளை அடிக்க விரும்பாத நீ எங்கே கைவரிசையைக் காட்டப் போகிறாய்?!" என்று கேட்டாள்.

"எங்கேயோ? அதைப் பற்றி இப்போது சொல்ல மாட்டேன். ஆனால், நீ கேட்டதுபோல் பல மடங்குச் செல்வம் உன் காலடியில் கிடக்கும். அதுவரை உன்னை வந்து பார்க்கமாட்டேன். ஆனால், ஒன்று; அதற்குள் மோகனாவுக்குத் திருமணம் ஆகிவிட்டதோ, பிறகு வல்லம், தஞ்சை, நீ, நான் எல்லோரும் தவிடு பொடி தான்" என்று கூறிவிட்டு வந்த சுரங்க வழியின் மூலமே திரும்பிச் சென்று மறைந்தான்.

## 19. பெண் தேடிப் புறப்பட்டேன்

முத்துக்குமரன் தஞ்சையின் ஒதுக்குப்புற வீதியொன்றில் பாழடைந்த வீட்டில் வந்தமர்ந்ததும் வயது முதிர்ந்த ஒருவரைச் சந்தித்ததும் உண்மை. அவன் அப்படிச் சந்தித்திருக்காவிடில் மோகனாவின் வடிவழகை மதுரைக்குச் சொல்ல அவனே போயிருப்பான். முத்துக்குமரனுக்கும் சரியான பருவ வயதுதான். அழகிகளின் வேல்விழிகளுக்கு எதிராகத் தனது வாளை வீசி வெல்ல முடியாத பருவம்தான். முல்லைச் சிரிப்புக்கும், முத்து நகைக்கும் அவன் மயங்கித் திணறியிருக்கிறான். வைத்தியர் மகளின் எழிலும், பூக்காரர் மகளின் பொலிவும் அவனை நிலை தடுமாற வைத்திருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலிருந்தும் தப்பி வந்த அவனுக்கு இங்கு இளவரசி மோகனாவின் வடிவழகு காத்திருந்தது. அவனும் இளைஞன்தானே! பெண்கள் மோகங்கொள்ளும் வடிவம் வேறு அவனுக்கு இருந்தது.

மோகனாங்கி ஒருமுறைக்கு இருமுறை முத்துக்குமரனை நோக்கியது உண்மைதான். வீர வடிவமும், உருண்டு திரண்ட தோள்களும் கம்பீரத் தோற்றமும் கொண்டு அவன் திகழ்ந்ததால் கட்டுக்காவல் மீறி ஆண்கள் வரக்கூடாத அந்தத் தோட்டத்துக்கு அவன் வந்ததும், மோகனாங்கி கோபம் கொள்ளவில்லை. காவல் வீரர்களை அழைத்து அவனை

ஒப்படைத்து விடவில்லை. தோழி கமலம் மோகனாவின் உள்ளத்தை நொடியில் புரிந்து கொண்டாள். மேலும் வெங்கண்ணாவைச் சதிகாரன் என்று துணிந்து கூறிய அந்த இளைஞனுக்கு அபயம் அளிப்பது அவசியம் என்றுணர்ந்தாள்.

புதருக்கருகே முத்துக்குமரன் கமலத்தின் சொற்படி மறைந்திருந்தான். மதில் சுவருக்கு வெளியே பெருங்கூச்சலுடன் அவனைத் தேடியவர்கள் இப்போது தோட்டத்துக்குள்ளேயே வந்துவிட்டார்கள் போல் இருக்கிறது. கமலத்தின் அதட்டும் குரல் கேட்கிறது.

"ஏன் இங்கு வந்தீர்கள்?" என்று கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்கிறாள் கமலம் அவர்களை.

"இங்கு ஒரு திருடன் ஓடிவந்தானா?" என்று கேட்கிறார்கள்; ஓடி வந்ததால் மூச்சு திணறக் கேட்கிறார்கள்.

"இது அந்தப்புரத் தோட்டம் என்பதை மறந்து விட்டீர்களா? இங்கே உங்களைத் தவிர வேறு யாரும் வரமாட்டார்களென்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கமலம் சீறினாள்.

கமலத்தின் வார்த்தைகளுக்கு அவர்கள் மதிப்பு வைத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் நாலா பக்கமும் சுழன்றனர்; தேடக் கிளம்பினர்.

"இந்தப் பக்கம்தான் ஓடி வந்தான்!" என்றான் ஒருவன்.

"மதில் சுவர் ஏறிக் குதித்ததை நான் பார்த்தேன்" என்றான் முத்திருளாண்டி.

மீண்டும் கமலம் சீறினாள். "ஏய்யா முத்திருளாண்டி! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? மதில் சுவர் ஏறி இங்கே ஏனய்யா திருடன் குதிக்கிறான்? நீ இங்கே வருவதற்காக ஒரு பொய் சொல்லிவிட்டாய். உங்க எசமானர் உன்னை இங்கே போய்த் தேடச் சொன்னாரா?"

முத்திருளாண்டிக்குக் கொஞ்சம் கோபம்தான் வந்தது. "என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லுங்க, எங்க எசமானரைப் பற்றி ஏதும் சொல்லாதீங்க" என்று காவல்காரர்களை அழைத்துக் கொண்டு மேலும் இங்குமங்கும் தேட முனைந்தான். கமலத்துக்கு ஆத்திரம் பொங்கியது. வெங்கண்ணாவின் பணியாளனாக இருக்கும் முத்திருளாண்டி செய்யும் அட்டூழியங்களை அவள் அறிந்திருக்கிறாள். ஆண்வாடையே அடிக்கக்கூடாத இடத்தில் இவன் வந்து அதிகாரம் செய்வதா என்ற ஆத்திரத்தில், "இதோ பார்! இன்னும் ஓர் அடி எடுத்து வைத்து இந்தத் தோட்டத்தில் நடந்தால் உங்கள் அனைவரையும் சிறையில் அடைக்குமாறு எங்கள் வீரர்களுக்கு உத்தரவிட வேண்டி இருக்கும். வீணான தொல்லையில் சிக்கிக் கொள்ளாதே!" என்று சீறினாள்.

முத்திருளாண்டி திரும்பினான். இளவரசி அங்கே இருப்பதை முத்திருளாண்டி அறியவில்லை. கமலத்தை நோக்கி, "ஓகோ! அதிகாரம் செலுத்துமளவுக்கு இந்த நாடு மாறிவிட்டது. ஊஹும். நீ போய் இளவரசியிடம் சொல்லி உங்கள் வீரர்களை அழைத்து வரும் வரையில் நாங்கள் ஏன் இங்கே இருக்கிறோம்? எங்கள் வேலை அதற்குள் முடிந்துவிடும். செடி மறைவில், புதர் மறைவில், தேடிவிட்டுப் போய்விட வேண்டியதுதானே! அதற்குள்ளே நீயே மகாப் பெரிய இளவரசி மாதிரி சீறுகிறாயே" என்றான் ஏளனமாக.

இளவரசி மோகனாங்கியே வந்துவிட்டாள். முத்திருளாண்டி தனது வீரர்களுடன் வந்து அமர்க்களப்படுத்துவது அவளுக்கும் கோபத்தை அளித்தது. "என்ன இங்கே கூச்சல்? யாரைக் கேட்டுக்கொண்டு இங்கே வந்தீர்கள்? கமலம்! உடனே போய்த் தோட்டக் காவல்காரனை அழைத்து வா. இவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கட்டும்" என்று ஆத்திரத்துடன் பேசினாள். மோகனாங்கிக்குக் கோபம் வருவதே தனியழகாகத்தான் இருந்தது. உதடுகள் குவிவதையும், புருவங்கள் வில்போல் உயர்ந்து வளைவதையும், முகம் சிவந்திருப்பதும் அவனைச் சிலிர்க்கச் செய்தது. அடர்ந்த அந்தச் செடிகளின் மறைவிலிருந்து மோகனாவின் வடிவழகைக் காண்பதே முத்துக்குமரனுக்குப் புத்துணர்ச்சியை அளித்தது. மதுரையிலும் சில அந்தப்புரத்து அழகிகளை அவன் கண்டிருக்கிறான். என்றாலும் தஞ்சை இளவரசியைப் போன்ற பேரழகியை அவன் இதுவரையில் கண்டதில்லை.

யானைத் தந்தங்களைப் பறித்து, அன்னத்தின் தூவியால் ஆன உடலில் சேர்த்து, முல்லை மொக்குகளை அடுக்கி கோவைப் பழங்களைப் பறித்து வைத்து, கரிய வண்டுகளைப் பறக்கவிட்டு, எட்ப்பூவைக் கோத்து, தாமரை மலரின் மீது இவை அனைத்தையும் நிற்கவைத்தால் எப்படியோ அப்படியே அந்த மோகனவடிவு அவன் கண்களுக்குத் தோன்றியது.

பிறர் பார்க்காதபோது ஒரு பொருளை அனுபவிப்பதில்தான் ஆனந்தம். அதிலும் பெண்ணழகைப் பூரணமாக அவளறியாமல் ரசிப்பதில் பெரும் சுவை இருக்கிறது. இப்படியே, இந்தப் புதரருகே அமர்ந்திருந்து இளவரசியின் வடிவத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் அவனுக்குத் தோன்றியது.

ஆனால் அவனுடைய சொப்பனத்தைக் கமலத்தின் குரல் கலைத்தது. "வாரும் ஐயா, வீரரே!பயந்து மறைந்தது போதும்" என்று அருகே வந்து குரல் கொடுத்தாள் கமலம்.

“நானா பயந்து மறைந்தேன்? நீங்கள் என்னை மறைந்து கொள்ளச் சொன்னீர்கள். மறைந்து கொண்டேன்...” என்று தன்மேல் விழுந்திருந்த பழுத்த இலைகளை உதறிக் கொண்டே வந்தான் முத்துக்குமரன்.

“ஆகா! மறையாமல் நின்றிருந்தால் அவர்களுடன் நேருக்கு நேர் வாட்போர் செய்திருப்பீர்கள் இல்லையா?” என்று கேட்டாள் ஏளனம் குரலில் தொனிக்கக் கமலம்.

“ஓ! நிச்சயம். அந்த முத்திருளாண்டி எப்படியெல்லாம் பேசுகிறான். வாள் ருசியை அவனுக்குக் கொஞ்சம் காட்டினால் போதும்...” என்று முத்துக்குமரன் சொல்லி முடிப்பதற்குள், “ஹூம். சொல்லமாட்டீர்களா, இப்போது! அப்போது ஓடிவந்து மதில் ஏறிக் குதித்தீர்களே, வாள் ருசியைக் காட்டியிருப்பதுதானே” என்றாள் கமலம்.

அப்பொழுது ‘உஸ்’ என்ற ஒலி, இளவரசியிடமிருந்து எழுந்தது. “போதும் கமலம்! உன் வாயாடித்தனத்தை எல்லாரிடமும் தெரிவிக்க வேண்டுமா? அவரை யார் என்று கேள். ஏன் இங்கே வந்தார் என்று கேள்” என்றாள் இளவரசி.

“நான் கேட்க வேண்டுமா? நீங்கள் கேட்பதுதான் இவர் காதில் விழுகிறதே தேவி! முத்திருளாண்டிக்குப் பயந்து ஓடி வந்தார் என்பது மட்டும் எனக்குத் தெரியும்!” என்று கூறி மெல்ல நகைத்தாள் கமலம்.

முத்துக்குமரன் உதட்டைச் சிறிது மடித்துக் கொண்டான். “நான் ஓடிவந்தது உண்மைதான். அப்படி ஓடி வந்திராவிடில் அவனிடம் தேவையில்லாமல் சிக்கிக் கொண்டிருப்பேன்”என்றான் மெல்லிய குரலில்.

“உங்கள் வாள் அப்போது கம்மாயிருந்திருக்கும்.”

“நான் ஒருவன். அவர்கள் பலர். அவர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைவிட தப்புவது சரியென்று எனக்குத் தோன்றியது?”

“இருக்கலாம்; உயிருடன் ஊர் போய்ச் சேரவேண்டிய நினைவு வந்திருக்கும்.”

“ஆமாம்; பெருங்கடமை எனக்கிருக்கிறதே!” என்று இன்னும் ஏதோ சொல்ல வந்தவன் சட்டென அடக்கிக் கொண்டான்.

“சாதாரண வீரர் இல்லை போலிருக்கிறது! அப்படியெனில் கடமை வீரரோ?” என்றாள் கமலம் கண்களால் வெட்டியவாறு.

மீண்டும் இளவரசியிடமிருந்து எச்சரிக்கை வந்து விடவே, கமலம் ஏதோ கேட்க முயன்றாள். அதற்குள் முத்துக்குமரனே முந்திக்கொண்டு, “தங்கள் பொன்னான நேரத்தை நான் இப்படி ஏதேதோ பேசி வீணாக்குகிறேன். நான் இங்கு வந்ததே பெரும் தவறு. குற்றம் செய்து ஓடிவந்தவனைத் தேடி வந்தவர்களுக்கே இடமில்லை என்றால்,

குற்றவாளிக்கு இங்கு இடம் ஏது? அதனால் நான் போகிறேன். என்னைக் காப்பாற்றியதற்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை" என்று கூறினான்.

இளவரசி மெல்ல நகைத்து, "கமலம், இந்த வீரர் குற்றவாளியா, இல்லையா என்று நமக்குத் தெரியாது. ஆனால் வெளியூரிலிருந்து வந்தவர் என்பது மட்டும் தெரிகிறது. எந்த ஊர்? எதற்காக தஞ்சை வந்தார்? முத்திருளாண்டி துரத்துகிறானென்றால் ராஜாங்க சம்பந்தம் இவருக்கு உண்டு என்பது தெரிகிறது. நம்மால் ஏதாவது இவருக்கு அரசாங்க உதவி வேண்டுமா என்று கேளடி. ஏனென்றால் இவர் நம்மைத் தேடி வந்தவரல்லவா?" என்றாள்.

இளவரசி இவ்வாறு பேசியது கமலத்திற்கு வியப்பாய் இருந்தது. முத்துக்குமரனுக்கோ அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது; 'எப்படித்தான் தன்னை வெளியூர்க்காரன் என்பதைத் தெரிந்து கொண்டாள் இளவரசி? அரசு தொடர்பாக நான் வந்திருக்கிறேன் என்பதையும் இளவரசி தெரிந்து கொண்டு விட்டாளோ? உண்மையைச் சொல்லி விடுவோமா?'

முத்துக்குமரன் சற்று யோசித்தான். அவனுடைய யோசனையைக் கண்டதும் கமலம் இளவரசியைப் பார்த்தவாறு, "தேவி! ஒருவேளை தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள சங்கோஜப்படுகிறாரோ? அல்லது பயப்படுகிறாரா? - என்னவென்று கேட்கட்டுமா தேவி?" என்றாள்.

"பயமும் இல்லை; நாணமும் இல்லை" என்றான் முத்துக்குமரன்.

"விருப்பமில்லாமல் இருக்கலாம். உண்மை நிலையைச் சொல்லாவிடில் தஞ்சை நாட்டில் மிகத் தொல்லை ஏற்படும் என்பதை மட்டும் சொல்லட்டுமா தேவி? இவர் யார்? எதற்காக வந்தார்? எங்கிருந்து வந்தார் என்பதை இவர் சொல்லாவிடில் நாம் அறிந்து கொள்வதில் ஏதும் சிரமமிருக்காது என்பதைச் சொல்லட்டுமா?" என்றாள் கமலம்.

"நீ சொல்வதுதான் அவர் காதில் விழ்கிறதே! அவர் ஊமை இல்லை என்று தெரியும். செவிடும் இல்லை என்று தெரிகிறது. அதனால் அவரே தெரிந்து பதில் சொல்லி விடுவார். நீ வேறு... ஹூம்.." என்றாள் இளவரசி.

பெண்கள் இருவர் சேர்ந்துத் தன்னை நன்றாகக் கேலி செய்கிறார்களென்று அவனுக்குத் தெரிந்து விட்டது. இளவரசி சாதாரணப் பெண்போல் இருபொருள் ஏற்படுமாறு பேசுவது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவனாலும் அவர்களுக்குச் சமதையாகப் பேச முடியும். அங்கே அந்தப் பெண்கள் எதிரே தன் புத்திசாலித்தனத்தைப் புலப்படுத்திக் கொண்டிருப்பதில் என்ன பலன்?

அவன் முன் இருக்கும் பிரச்சினைகளோ மிக அதிகம். தஞ்சையில் அரண்மனை வரையில் வந்தாகிவிட்டது. மாளிகையின் இரகசிய வழிகள் எதையாவது அறிந்து கொள்ளலாம். மன்னரின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

"தேவி! வெளியே பத்திரமாகச் செல்வதற்கு மட்டும் எனக்கு வழி சொல்லுங்கள். இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நான் இருந்தால் தோட்டக் காவல்காரனை அழைத்து என்னை ஒப்படைத்து விடுவீர்கள்" என்றான் முத்துக்குமரன்.

"இங்கிருந்து பத்திரமாக வெளியே போய் மிகவும் ஜாக்கிரதையாக வெங்கண்ணாவிடம் அகப்பட்டுக் கொள்வதற்காகவா?" என்று கமலம் கேட்டாள்.

"ஏன் - வெங்கண்ணா என்னை என்ன செய்து விடுவார்? அவரிடம்தான் கொடுக்க வேண்டிய கடிதத்தைக் கொடுத்துவிட்டேனே..." என்றான் முத்துக்குமரன்.

"அப்படிச் சொல்லுங்கள். தூதர் என்ற முறையில் வெங்கண்ணாவிடம் வந்தீர்களா?" என்று கண்களைச் சுழற்றியபடி கேட்டாள் கமலம்.

முத்துக்குமரனுக்கும் கமலத்தின் சாமர்த்தியமான கேள்விகள் தெரியும். தெரிந்தே பதில் சொல்ல அவன் முனைந்தான். ஆனால் தெரியாதவன் போல் நடித்தான்.

"ஆமாம் தேவி! திருவரங்கத் தூதன் பதவி எனக்குக் கிடைத்தது. ஆனால் நான் புறப்பட்ட போது தூதனாக இல்லை..." என்றான்.

"புறப்பட்ட இடத்தில் தஞ்சைக்குச் சாதாரண மனிதராக கூலி வேலை செய்து பிழைக்க வந்தீர்களோ?" என்று கமலம் கேள்வியொன்றை மின்வெட்டென வீசினாள்.

இந்தக் கேள்விக்கு அவன் மதுரையினின்று புறப்பட்ட செய்தியைத் தெரிவித்துத் தானாக வேண்டும். 'நடந்தவற்றையெல்லாம் சொல்லி விடுவோமா?' முத்துக்குமரன் ஒருகணம் யோசித்தான். பிறகு மிகவும் பயப்படுபவன் போல் நடித்து. "நான் நடந்தவற்றையெல்லாம் சொல்லி விடுகிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டியது இளவரசியின் பொறுப்பு. நான் தெரியாத்தனமாக இந்தக் காரியத்தில் இறங்கிவிட்டேன். எனக்கு வயதான தாயார் இருக்கிறார்கள். நான் திரும்பி ஊர் போய்ச் சேராவிடில் மிகவும் கவலைப்படுவார்கள்..." என்று குழைந்த குரலில் கூறினான்.

"எந்த ஊருக்குப் போய்ச் சேர வேண்டும்?"

"மதுரைக்கு..."

"அங்கிருந்துத்தான் புறப்பட்டீர்களோ?"

"ஆமாம்..."

"ஏன் அங்கிருந்து புறப்பட்டீர்கள்? அங்கே வேலை ஏதும் கிடைக்கவில்லையா? பாண்டி நாட்டில் பஞ்சமா? வைகை வற்றி விட்டதா?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பாண்டிய நாட்டில் இந்த வருடம் நல்ல வெள்ளாமை. முப்போகம் கண்டிருக்கிறது. ஆனால் நான் வந்த காரியம்..."

"உம்... சும்மா சொல்லுங்க... எங்கள் இளவரசி மிகவும் நல்லவர்கள். அவர்கள் உங்களுக்கு ஆபத்து ஏதும் ஏற்படும்படிச் செய்துவிட மாட்டார்கள்."

"அதுதான் எனக்கும் வேண்டும். இளவரசியைப் பார்த்தவுடனேயே, புறப்பட்ட காரியம் முடிந்து விட்டது என்று முடிவு செய்து விட்டேன்..."

"நீங்கள் எதற்குப் புறப்பட்டீர்கள் என்பதைச் சொல்லாமல் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்களே..."

"சொல்றேனுங்க... சொல்லத்தானே இங்கே நிற்கிறேன். பெண் பார்க்கப் புறப்பட்டேன்..."

முத்துக்குமரன் இப்படிச் சொன்னவுடன் இளவரசியும் கமலமும் கலுக்கென்று சிரித்து விட்டார்கள்.

"பெண் யாருக்கு, உங்களுக்கா?" என்று கமலம் கேட்டாள்.

"இல்லீங்க. எங்க மகாராஜாவுக்கு..." - முத்துக்குமரன் இவ்வாறு சொன்னவுடன் இளவரசியும், கமலமும் ஒருவரையொருவர் பொருள் நிறைந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டனர். கமலம் மளமளவென்று கேள்விகளைக் கேட்கத் தொடங்கி விட்டாள்.

"எந்த மகாராஜா? அங்க, வங்க, கலிங்க, காந்தார..."

"அவர்களுக்கெல்லாம்கூட மேலானவர்..."

"அப்படி யாரு அவ்வளவு பெரிய மாமன்னர்! விஜய நகரப் பேரரசரா? அவருக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் வயதில்லையே..."

"முதலிலேயே சொல்லி இருக்கிறீர்கள் - 'எனக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் தடுக்க உங்கள் இளவரசியால் முடியும்' என்று! அதனால் நான் உண்மையைச் சொன்னாலும் நீங்கள் எனக்கு 'எந்தவிதத் தொல்லையும் ஏற்படுத்த மாட்டோம்' என்று உறுதி கொடுத்தால் சொல்லுகிறேன்..." என்று முத்துக்குமரன் நடுங்கும் குரலில் கூறினான். இல்லை நடித்தான்.

"சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சிபி சக்ரவர்த்தி வாழ்ந்த சோழ நாடு இது. நாங்கள் உறுதியைக் கடைப்பிடிப்போம். தைரியமாகச் சொல்லுங்கள்" என்றாள் கமலம்.

முத்துக்குமரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்; மார்பை நிமிர்த்திக் கொண்டான்.

"விஜயநகர மன்னருக்கு ஈடான எங்கள் மாமன்னர் ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட பாண்டிகுலாதிபதி மதுரை மாநகர் சிங்காசனாதிபதி, ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீசொக்கநாத தேவ நாயக்கர் அவருக்குத்தான் அழகான பெண் பார்க்கப் புறப்பட்டேன். புஜபலமும் அழகும், வீரமும் நிறைந்த இளைஞரான அவருக்கு அஷ்டதிக்குகளிலும் சஞ்சரித்து மேனகை, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி இவர்களையெல்லாம் விட ரூபலாவண்யமங்கை நல்லாளைத் தேடிக் கண்டு பிடிக்கப் புறப்பட்டேன்" என்று அவன் சொல்லி வரும்போது, கமலம் சற்று ஆத்திரம் மிகுந்த குரலில் "போதும் நிறுத்துங்கள். மதுரையினின்றா நீங்கள் வருகிறீர்கள்?" என்றாள்.

முத்துக்குமரன் இதுவரை உணர்ச்சி மிகுதியில் மிகவும் தைரியமாகவும் திறமையாகவும் வர்ணித்து வந்தவன், திடீரெனத் திகைத்தான். திகைப்பு முகத்தில் பிரதிபலித்தது. மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான்.

# 20. மணமகன் தூதன்

சிறிது நேரம்தான் முத்துக்குமரன் திகைப்பில் ஆழ்ந்து என்ன செய்வது என்று புரியாமல் இருந்தான். மறுகணமே அவன் மனத்தில் பளிச்சென்று யோசனை ஒன்று உதித்தது.

"ஆமாம், ஆமாம் இளவரசி அவர்களே! அவருடைய அருமைத் தோழி அவர்களே! நான் மதுரையினின்றுதான் வருகிறேன். சொக்கநாத நாயக்கருடைய ராயசம் என்னை அனுப்பியதால் கடமையைத் தலை மேல் ஏற்றுக் கொண்டு வருகிறேன்.

"எனக்குக்கூட இன்னும் கல்யாணம் ஆகவில்லை. பெண் பார்க்காமல் என் தாயார் இன்னும் சும்மாயிருக்கிறார்கள். ஆனால் எங்கள் மகாராசாவுக்குப் பெண் பார்க்க வேண்டும் என்று ராயசம் ஐயா சொன்னவுடன் கட்டளையைச் சிரமேற் தாங்கி நான் ஓடி வருகிறேன். ஆமாம்; உண்மையிலேயே ஓடித்தான் வந்தேன்.

"உண்மையைச் சொன்னதால் முத்திருளாண்டியிடம் அகப்பட்டுக் கொண்டேன். 'எங்கள் மகாராசாவுக்குத் தஞ்சாவூர் இளவரசியைப் பெண் கேட்க நினைத்திருக்கிறேன்,' என்று ,சொன்னவுடனே "அவர்

கையை ஓங்கி அடிப்பதற்கு வந்தார் பாருங்க! ஒரே ஓட்டம், மதில்சுவர் ஏறிக் குதித்த பிறகுதான் நின்றேன். பார்த்தாகி விட்டது, இதோ போகிறேன்..." என்றான்.

இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவன் பட்டபாடு, உடலெங்கும் வியர்த்துவிட்டது. இப்படிப்பட்ட மகத்தான கற்பனையால் என்ன விளையுமோ என்ற அச்சம் அவனிடம் சூழ்ந்தது. கமலமும், இளவரசி மோகனாம்பாளும் ஒருவரையொருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டனர். 'இளவரசியே பேசட்டும்' என்று கமலம் மௌனமாயிருந்தாள். 'கமலம் பேசட்டும்' என்று இளவரசி சும்மாயிருந்தாள். முத்துக்குமரனின் பயம் பறந்தோடியது. அங்கிருந்து போவது போல் பாசாங்கு காட்டி, "எந்த வழியே சென்றால் ஆபத்தின்றிக் கோட்டைக்கு வெளியே போகலாம்" என்று கேட்டான்.

"எந்த வழியே சென்றாலும் ஆபத்துத்தான். இனி இங்கே இருப்பதும் தங்களுக்கு ஆபத்துத்தான். இதோ நானே காவலரை அழைத்து..." என்ற அவள் முடிப்பதற்குள், முத்துக்குமரனுக்கு நடுக்கமே ஏற்பட்டது. "முதலிலேயே நான் தங்களைக் கேட்டுக் கொண்டுதான் பேச்சைத் தொடங்கினேன்.... ஆமாம்..." என்று அவன் குழறியது கேட்டு இளவரசி 'கொல்'லென்று சிரித்து விட்டாள்.

"என்ன, பெண் பார்க்க வந்த வீரரே தடுமாறுகிறீர்கள். காவலரை அழைத்துத் தக்க மரியாதையுடன் மகாராஜாவிடம் தங்களை அனுப்பப் போகிறோம் என்று சொல்ல வந்தேன். பெண் தேடி வந்தவர் இங்கே இருக்கலாமா?" என்று கமலம் சொன்ன பிறகுதான் உண்மையிலேயே அவனுக்கு 'அப்பாடா' என்றாகியது.

மகாராசாவிடம் நேரே செல்லுவதும் சரிதான். ஆனால் பெண் கேட்டுப் போனால் என்ன கதி நேரிடுமோ? அதுவும் மதுரை மன்னருக்குப் பெண் என்றால் - நம் தலை நிற்குமா உடலில்? ஒரு பொய் சொல்லப் போய் அதை மறைக்க ஆயிரம் பொய் சொல்ல வேண்டி வந்துவிட்டதே! என்ன செய்வது என்று அவன் திகைத்து, மதுரைத் தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டே நின்றபோது, மற்றொரு பணிப்பெண் வேகமாக வந்து வணங்கி, "மகாராணி இளவரசியாரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கிருந்தாலும் அழைத்து வரச் சொன்னார்கள்" என்றாள்.

கமலம் பரபரப்புடன், "ஐயா, அதோ தெற்கு மூலையில் பெரிய வேப்பமரம் இருக்கிறது, பாருங்கள். அதன் மேலேறி மறுபுறம் குதித்தால் யார் கண்ணிலும் படாமல் போய் விடலாம். உம்... உம்... சீக்கிரமாக வெளியேறி நேரே மகாராஜாவிடம் வந்து சேருங்கள்" என்று கூறிவிட்டு அவன் போக முற்பட்டவுடன் அவன் அருகே சென்று, அவன் காதுகளில் மட்டும் கேட்கும்படியாக, மகாராஜா என்ன

சொன்னார் என்ற செய்தியை நான் அறிய வேண்டும். இன்று மாலை பெரிய கோயில் அருகே நின்றிருங்கள் நான் வருகிறேன்" என்றாள்.

முத்துக்குமரன் தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடோடி, வேப்பமரம் வழியாக ஏறிக் குதித்து வெளியேறினான்.

பிறகுதான் பாழ் வீட்டுக்கருகே முதியவர் ஒருவரைச் சந்தித்தான். அவரை மதுரையிலேயே அவன் பார்த்திருக்கிறான். சிவத்தலங்கள் தோறும் சென்று வணங்கி வருபவர் அவர். தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசித்துவிட்டு அவர் தஞ்சைக்கு வந்திருந்தார். அவரிடம் மதுரைக்குச் செய்தி சொல்லி அனுப்புவது நல்லது என்று தஞ்சைபுரி மோகினியான மோகனாவைப் பற்றி அவரிடம் வர்ணிக்கலானான். "நம் மகாராஜாவுக்கு ஏற்ற மகாராணி அவள்தான்" என்று கூறி முடித்தான். அவரும் மதுரை சென்றவுடனேயே தஞ்சை இளவரசியின் பேரெழிலைக் குறித்து மன்னரிடம் தெரிவிப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டார்.

அவர் சென்ற பிறகு முத்துக்குமரன் அதே பாழடைந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அமைதியாக சிந்திக்கலானான். மதுரையிலிருந்து புறப்பட்டது முதல் அவன் துரிதமாக நடைபெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றாக நினைவுப்படுத்திக் கொண்டான். அவன் புறப்பட்ட நோக்கமே, செஞ்சியையடைந்து மதுரையின் முன்னாள் தளபதியின் நடவடிக்கையையும், செஞ்சி மன்னரின் மனப்பான்மையையும் அறிந்து வருவதுதான். எதிர்பாராத விதமாக, செஞ்சிக்குச் செல்லாமலேயே வெங்கண்ணாவின் உதவி கோரி செஞ்சியினின்று வந்த இரகசியக் கடிதம் அவன் கையில் கிடைத்தது. அந்த கடிதத்தின் விளைவு என்ன? வெங்கண்ணா அதற்கு என்ன பதில் எழுதப் போகிறார்? இவற்றை அறியாமல் பெண் பார்க்கும் படலத்தில் இறங்கி விட்டோமே என்ற எண்ணத்தில் மேலே என்ன செய்வது என்று புரியாமல் உட்கார்ந்திருந்தான். பசி வேறு அவனை வாட்டியது. தஞ்சையில் ஏராளமான சத்திரங்கள் உண்டென்று அவன் கேள்விப் பட்டிருக்கிறான். அவை ஏதாவது ஒன்றிற்குச் சென்று பசியைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தலை முண்டாசை அவிழ்த்துவிட்டு, முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மெல்ல நடந்தான். அந்த வீதியைக் கடந்து ஒரு சந்தின் பக்கமாகப் போகையில் வரிசையாக ஜனங்கள் நின்று கொண்டு தட்டிலே குழம்பு கலந்து சோறை வாங்கிச் சென்றதை கண்டான். முத்துக்குமரன் நாக்கில் நீர் ஊறியது. வேகமாகச் சென்று அந்த வரிசையில் நின்று கொண்டான். அவனிடம் இலையோ, தட்டோ, மண் தட்டோ, ஏதும் இல்லை. இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கிடைத்ததை வாங்கிக் கொண்டால் போகிறது என்று எண்ணினான். அப்படி அவன் வாங்கிக் கொண்டு

போனபோது அவனையே அனைவரும் நோக்கினர். ஒதுக்குப்புறமாக போய் அமர்ந்து இரண்டு வாயாக அதைச் சாப்பிட்டுவிட்டு ஏதோ குரல் கேட்கவே திரும்பினான்.

"உம், சாப்பிட்டாச்சா தம்பி" என்ற பலமான கரம் ஒன்று அவன் தோளைத் தொட்டுத் திருப்பியது.

ஒருமுறை அந்தக் கரத்துக்கு உரிய ஆஜானுபாகுவான ஆளைத் திரும்பிப் பார்த்து தோளைக் குலுக்கி அவன் கரத்தை தள்ளி விட்டவாறு, "ஆகா, பசி அடங்கி விட்டது. நீங்களும் வேண்டுமானால் சாப்பிடலாமே" என்றான்.

"நான் சாப்பிட்டாச்சு. உன்னைத் தேடித்தான் வந்தேன். எங்கெங்கெல்லாமோ தேட வைத்து விட்டாயே! வா தம்பி, உனக்காக மகாராஜா காத்திருக்கிறார்" என்றான்.

"எனக்காகவா?" என்று அவன் கேட்டபோது ஆச்சரியம் ஏதும் அவன் குரலில் மிளிரவில்லை. எதிர் பாராமல் ஏதாவது நிகழ்வது சமீப நாட்களில் மிகவும் சகஜமாகி விட்டதே!

"ஆமாம் தம்பி, ஆமாம். உன்னைத் தம்பி என்று நான் அழைக்கலாமல்லவா? பாண்டிய நாட்டுப் பிள்ளை போல் தோன்றுகிறது. நெற்றியில் ஒன்றும் அணிந்து கொள்ளாததால் வைணவனா, சைவனா என்று கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. உம்; காலம் அப்படி மாறி வருகிறது" என்றார் அந்த ஆஜானுபாகுவான மீசைக்கார மனிதர்.

முத்துக்குமரனுக்கு எல்லாமே வேடிக்கையாக இருந்தது. 'திடீரென யாரோ ஒருவர் வருகிறார். உரிமையுடன் தம்பி என அழைக்கிறார். பாண்டிய நாட்டவன் போல் தோன்றுகிறாயே என்கிறார். இது என்ன, இந்தப் பூமியில் எல்லாமே விசித்திரமாக இருக்கும்போல் தோன்றுகிறது. ஒவ்வொருவரும் சரியான படிதான் கணிக்கிறார்கள். நொடியில் அறிந்து கொண்டு விடுகிறார்கள்.

ஆனால், யுத்தம் என்று வந்தால் வீரம் காட்டுவதில் எப்படியோ?' என்று எண்ணினான்.

"என்ன தம்பி யோசனை செய்கிறாய்? மகாராஜ கூப்பிடுகிறார் என்றால் பல்லக்கு இரதம் ஏதும் வரவில்லையே என்று நினைக்கிறாயா? உனக்குக் குதிரை ஏறத் தெரியுமல்லவா? அதோ, இரண்டு குதிரைகள். வா போவோம்" என்றழைத்தார் அந்த மீசைக்காரர். அவர் விழிகளை உருட்டுவதும், தோளை அசைப்பதும், கையை நீட்டி நீட்டிப் பேசுவதும் அவனுக்குப் புதுமையாகத் தோன்றின. அவர் பேசாத போது மீசை மட்டும் ஒரு முறை அசைந்து அடங்கியது. "ஆமாம்; என்னை

எதற்காக அரசர் அழைக்கிறார்! புலியின் குகைக்குள்ளேயே போய்ச் சிக்கிக்கொள்ளுவது போல் ஆகிவிடுமோ?"

"தம்பிக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை போலிருக்கிறது. இதோ பார் முத்திரை மோதிரம். இப்பொழுதாவது நம்பிக்கை வந்ததா?" என்றார் அந்த மனிதர்.

"நம்பிக்கை ஏற்படாமல் இருக்குமா? என்னை எதற்காக அரசர் அழைக்கிறார் என்று யோசிக்கிறேன்" என்றான் முத்துக்குமரன்.

மீசைக்காரர் திடீரென உடம்பு குலுங்கக் குலுங்க நகைத்து, "நன்றாய் கேட்டாய் போ! ஒவ்வொருவர் அரசர் தன்னை அழைக்க மாட்டாரா என்று ஏங்குகிறார்கள். நீ என்னடா என்றால்....! வா... சீக்கிரம்... அந்தப்புரத்துக்குப் போய் விட்டாரானால் அப்புறம் பார்க்க மாட்டார்" என்று துரிதப்படுத்தினார்.

முத்துக்குமரன் குதிரை மீது ஏறி, மீசைக்காரரைத் தொடர்ந்தான். என்ன நேரப் போகிறதோ என்ற அச்சம் அவன் உள்ளத்தில் இருந்தது. அவசரப்படுத்தினாரேயொழிய குதிரையை மெல்லவே தட்டி விட்டாரவர். தஞ்சையின் அகன்ற வீதி, குறுகிய வீதி, சந்து எல்லாம் கடந்து குதிரை சென்றது. மாளிகைக்குப் போவதற்கு இவ்வளவு தொலைவு செல்ல வேண்டுமா? என்று சுற்றுமுற்றும் பார்த்தவாறு சென்றான் முத்துக்குமரன். திடீரென மீசைக்காரர் குதிரையைக் கொஞ்சங் கொஞ்சமாக வேகமாகச் செலுத்த ஆரம்பித்தார். அவருக்குச் சரிசமமாகச் செல்ல விரும்பிய முத்துக்குமரனும் குதிரையைத் தட்டி விட்டான். குதிரை பறந்தது. முத்துக்குமரனும் அதற்கு இணையாகக் குதிரையைச் செலுத்தினான்.

தஞ்சையின் கோட்டை வாயிலைத் தாண்டி புறஞ்சேரியைத் தாண்டிக் குதிரை சென்று கொண்டிருந்ததை முத்துகுமரன் கவனிக்கவில்லை. இடையிடையே மீசைக்காரர் அவனைக் கடைக்கண்ணால் நோக்குவதையும் அவன் கவனிக்கவில்லை. வல்லம் செல்லும் சாலையில் அவர் வேகமாகச் சென்று கொண்டிருப்பதும் அவனுக்குத் தோன்றவில்லை.

சிறிது நேரம் கழிந்த பிறகுதான் தஞ்சையை விட்டு வேறு எங்கோ வந்து கொண்டிருக்கிறோம் என்பதை முத்துக்குமரன் உணர்ந்தான். "எங்கு போகிறோம்" என்று கேட்கவோ, குதிரையை நிறுத்தவோ நினைப்பதற்குள் வல்லம் கோட்டை வாயிலை இருவரும் அடைந்தனர். ஒரு வேளை மன்னர் இங்குதான் இருக்கிறாரோ என்று எண்ணி மௌனமாக இருந்தான் முத்துக்குமரன்.

குதிரைகள் கோட்டை வாயிலில் நிறுத்தப்பட்டன. குதிரை மீதிருந்தபடியே மீசைக்காரர் ஏதோ கூவினார். கதவு திறந்தது.

குதிரைகளைக் கொட்டடியில் கட்டி விட்டு மீசைக்காரரைப் பின்தொடர்ந்தான் முத்துக்குமரன்.

வல்லம் கோட்டைக்குள்ளிருந்த ரங்கமாதேவியின் மாளிகை அது என்று அவனுக்குத் தெரியாது. சந்தடியற்று பணியாட்களே அதிகமில்லாத அந்த மாளிகை அவனுக்கு ஏனோ சந்தேகத்தை அளித்தது. விஜயராகவநாயகருடைய மாளிகை ஏன் இப்படிக் களை இழந்து காணப்படுகிறது என்ற ஐயம் அவன் மனத்தில் ஏற்பட்டது.

மாளிகையின் முன் கூடத்தில் காணப்பட்ட பெரும் ஆசனங்கள் ஒன்றில் அவனை உட்காருமாறு மீசைக்காரர் கூறினார்.

"அரசர் எங்கே இருக்கிறார்? தஞ்சையிலிருந்து என்னை எங்கோ அழைத்து வந்துவிட்டீர்களே?" என்று முத்துக்குமரன் கேட்டான் சுற்றுமுற்றும் பார்த்தவாறு.

"ஏன், இதுவும் தஞ்சைதான். தஞ்சைக்கருகிலுள்ள வல்லம் கோட்டை உனக்குத் தெரியாது? ஆம்; உனக்குத் தெரியாது" என்றார் மீசைக்காரர். பிறகு "அரசர் - அரசர் - இதோ போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே வேகமாகச் சென்றார்.

முத்துக்குமரன் ஏதும் புரியாதவனாக, கன்னத்தில் கை வைத்துக் கொண்டு, மேல் விதானத்தில் புறாக்கள் 'கொர், கொர்' என்று சப்திப்பதைப் பார்த்தபடியே இருந்தபோது, "வாருங்கள் வாருங்கள், மதுரை மணமகன் தூதுவரே!" என்று யாரோ வரவேற்றவாறு வருவது கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான்.

கமலம் மலர்ந்த முகத்துடன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்!

## 21. சித்திரப்பெண்

வண்டியூர்த் தெப்பக் குளக்கரையில் நாம் தஞ்சையில் முத்துக் குமரனுடன் சந்தித்த பெரியவர் (மாணிக்கப் பண்டாரம்) மாலை நியம நிஷ்டைகளை முடித்துக் கொண்டு அமைதியாகச் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். மாலைக் காற்று குளத்தின் நீரை அலம்பிக் கொண்டிருந்தது. குளத்தின் நடுவே நீராழி மண்டபம் மிகப் பெரிதாக அமைந்திருந்தது. மண்டபத்தைச் சுற்றிச் சோலை செழிப்பாகத் திகழ்ந்தது. மண்டபத்திற்கு அப்போதுதான் புதிதாக வர்ணமடித்திருந்தார்கள். மண்டபத்து மூன்றாவது தளத்தின் மேலுள்ள மாடத்தில் விளக்கு ஏற்றுவதற்கு ஓர் பணியாள் கையில் சிறு விளக்குடன் ஏறிக் கொண்டிருந்தான். எங்கிருந்தோ 'நகார நவ பத்து' வாத்தியம் ஒலித்தது. சன்ன மேளத்தின் ஒலி இனிமையாக மிதந்து

வந்தது. சிறு தீவு போல் அமைந்திருந்த அந்த வசந்த மண்டபத்திலிருந்து கரையை நோக்கி ஒரு படகு மெல்ல ஊர்ந்து வந்தது. படகின் கம்பீரத்தையும் துடுப்புப்போட்டு அதைத் தள்ளி வருபவர்கள் அணிந்திருந்த உடையையும் கண்டால் அது ஒரு சாதாரணப் படகாகக் காட்சி அளிக்கவில்லை.

மதுரை மன்னர் சொக்கநாத நாயகர் கம்பீரமாக அதில் அமர்ந்திருந்தார். இளம் வயதுச் செழுமையும் ஆழ்ந்த சிந்தனையும் உள்ளத்தில் ததும்பி நிற்கும் வீரம் முகத்தில் பிரதிபலிப்பதுமாக அவரது தோற்றத்தில் தனிமிடுக்கை வளர்த்தன. அவரருகே அவருடைய இளம் பிராய நண்பர் செவ்வந்திக்கண்ணன் அமர்ந்திருந்தான். அவனுக்கும் சொக்கநாதருடைய வயதுதான் - இருபது அல்லது இருபத்தொன்று தான் இருக்கும். ஆனால் அவனுக்கு இன்னும் முகத்தில் சரியாகக் கூட மீசை முளைக்கவில்லை. சிவந்த மேனியரான அவரைப் பார்ப்பவர்கள் ஒரு பெண்ணின் சாயலை மனத்தில் நினைத்துக் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்.

"செவ்வந்தி, என் தாத்தா இந்தத் தெப்பக்குளத்தை இங்கே வெட்டும்போது ஊர் இவ்வளவு தூரம் பரவி விடும் என்று நினைத்திருப்பாரா?" என்று சொக்கநாதர் முகத்தில் ஓர் ஒளி பொங்கக் கேட்டார்.

குளத்து நீரின் சிறு அலைகள் படகில் வந்து மெல்ல மெல்ல அணைந்தன. குளத்து நீரைக் கையால் அலைந்தபடி, "இதற்குத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது?" என்று கேட்டார். பிறகு கரையைச் சுற்றும் முற்றும் பார்த்தவராக, "மாலை வேளையில் குளத்தில் குளிப்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் தெரியுமா?" என்றார். அப்போது எதிர்க்கரையில் சில பெண்கள் குளித்துக் கொண்டிருந்தனர்.

செவ்வந்தி பதில் சொல்ல ஒவ்வொரு முறையும் வாயெடுப்பான். அதற்குள் சின்னக் குழந்தையைப் போல் சொக்கநாதர் ஏதாவது கேள்வி கேட்பார்.

"ஏன் செவ்வந்தி 'உம்'மென்று பதில் பேசாமல் வருகிறாய்?" என்று சொக்கநாதர் கேட்டுவிட்டு சிறிது நீரை எடுத்து அவன் மீது தெளித்தார். ஆடையில் பட்ட நீரை மெல்லத் துடைத்தவாறு, "அரசே! இன்னும் சிறு குழந்தை விளையாட்டு உம்மை விட்டுப் போகவில்லையே. நானா 'உம்' என்று வருகிறேன். என்னைத்தான் பேசவிட மாட்டேன் என்கிறீர்களே!" என்றான், செவ்வந்தி.

சொக்கநாதர் தன் நண்பனைத் தன் பக்கம் திருப்பி, "இதோ பார்! 'அரசே! நீங்கள், நாங்கள்' என்று என்னை அழைப்பதாயிருந்தால் நான் உன்னுடன் பேசவே மாட்டேன். சிறு குழந்தை என்று என்னைச்

சொல்லுகிறாய். அதே சமயம் 'நீங்கள் - அரசே' என்று ஒரேயடியாக மரியாதை வைத்துத் தலைக்கு மேல் தூக்கி வைக்கிறாய். குழந்தையைப் போய் இப்படித்தான் மரியாதையாய் அழைப்பார்களோ! அதுதான் போகட்டும் செவ்வந்தி! உன்னை உன் காதலி எப்படி அழைக்கிறாள்? அதைச் சொல்லவில்லையே நீ. உம்; உன் கன்னத்தை அவள் தட்டும்போது உன் கன்னம் சிவப்பதை அவள் மட்டும்தான் பார்க்க வேண்டுமா? நான் பார்க்கக் கூடாதாக்கும். வர வர, செவ்வந்தி என்னை விட்டு நீ விலகிக் கொண்டே போகிறாய்! ஏன் இப்படி?" என்று சொக்கநாதர் அவன் கரத்தை இலேசாகத் தடவினார்.

"உச்... என்ன அரசே, படகோட்டிகள் பார்க்கப் போகிறார்கள். சில வேளைகளில் நாலுபேர் இருக்கிறார்கள் என்று கூடத் தெரியாமல் நீங்கள் பகிரங்கமாக ஏதேதோ பேசுகிறீர்கள்" என்று செவ்வந்தி சிணுங்கிக் கொண்டான்.

தெப்பக்குளத்து வசந்த மண்டபத்திற்குச் செவ்வந்தியை, சொக்கநாதர் அழைக்கிறார் என்றாலே செவ்வந்திக்குத் திகில்தான். அவனும் அவரும் இளம் பிராயம் முதல் உயிர் நண்பர்கள்தாம். அப்போது 'நீ - வா - போ!' என்று அவன் அழைத்திருக்கலாம். இப்போது முடியுமா? அரச பீடத்தில் சொக்கநாதர் அமர்ந்த பிறகும் அப்படி அழைக்க முடியுமா? அரசாங்க அலுவல்கள், ராஜதந்திரப் பேச்சு வார்த்தைகள், அமைச்சர்களுடன் அளவளாவுதல், படை வீரர்களுடன் பேசுதல், ஒற்றர்களுடன் யோசனைகள் இவ்வளவு கடுமையான அலுவல்களில் ஈடுபட்ட பிறகு சொக்கநாதர் விரும்புவது செவ்வந்தியுடன் உற்சாகமாகப் பேசிக் கழிப்பதுதான்.

செவ்வந்திக்கு மதுரை நகரத்துப் பெண்ணொருத்தி மீது காதல் பிறந்து விட்டது. அவளுக்குக் கசக்குமா, செவ்வந்தி போன்ற அழகன் கிடைப்பதற்கு! தன்னுடைய அன்பையெல்லாம் செவ்வந்தி மீது கொட்டித் தீர்த்து, இணைபிரியாது இருக்கவே விரும்புகிறாள். ஆனால், அரசரிடமிருந்து அழைப்பு வந்துவிடும். ஒரிரு சமயங்கள் தட்ட முடியாமல் செல்வான் செவ்வந்தி.

ஒரிரு முறை வருவதாகச் சொல்லிக் காதலியிடமிருந்து பிரிய முடியாது இருந்துவிட்டதால் சொக்கநாதர் அவன் வருகைக்குக் காத்திருந்து ஏமாந்தார்.

இதய வேதனையோ அவருக்குச் சொல்லி முடியாது. அத்தகைய உயிர் அன்பைத் தன் நண்பன் மீது கொண்டிருந்தார். ஒரு தடவை செவ்வந்தி வராதபோது, சொக்கநாதர் குதிரையேறி செவ்வந்தியைத் தேடி வந்து விட்டார்.

செவ்வந்தியின் காதலியை அப்போதுதான் சொக்கநாதர் கண்டார். முத்துப் பல் வரிசையும், குழிவிழும் கன்னமும், செப்புவாயும் ஒரு கணம் அவரைத் திகைக்க வைத்தன.

சொக்கநாதர் வந்தது இருவருக்கும் சற்று நேரம்வரையில் தெரியாது. கலகலவென்ற சிரிப்பொலியில் இருவரும் அமிழ்ந்திருந்தனர்.

காதலி கேட்டாள்: "அந்தப் பறவைகள் இவ்வளவு வேகமாகப் பறந்து செல்கின்றனவே எதற்காக?"

செவ்வந்தி சொன்னான்: "கூட்டையடைந்து கொஞ்சி மகிழ."

"யாருடன் கொஞ்சும்?"

"ஆண் பறவை - பெண்ணுடன் கொஞ்சும், தாய்ப் பறவை குஞ்சுகளுடன் கொஞ்சும்."

"என்ன சொல்லிக் கொஞ்சும்."

"எனக்கு எப்படித் தெரியும்? அலகோடு அலகு பேசும். அதிலே வார்த்தைகள் பிறக்கும். வார்த்தைகளிலே வாஞ்சை ததும்பும். வாஞ்சை வளர்ந்தால் காதல். காதலுக்குப் பேச்சு வேண்டாமே" என்று சொல்லிக் காதலியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினான்.

"உம்.. நான் அதிகமாகப் பேசுகிறேன் என்றுதானே இப்படிச் சொல்கிறீர்கள்?" என்று காதலி குறும்புப் பார்வையுடன் பொய்க் கோபத்துடன் அவனது அழகிய கன்னத்தை மெல்லக் கிள்ளினாள்.

இதைப் பார்த்துக் கொண்டு நின்ற சொக்கநாதரின் உடல் சிலிர்த்தது. புரிய முடியாத உணர்ச்சி உள்ளத்தில் புகுந்து கொண்டது. பனி நீர் படிந்துள்ள இலைகளின் இடையே நறுமணம் வீசிப் பூத்து நிற்கும் புது மலரைக் காணும் உணர்ச்சி உதித்தது.

"ஆகா, ரொம்பக் கிள்ளி விடாதே, என் நண்பனை" என்று சொக்கநாதர் திடீரெனச் சொன்னவுடனே தான் காதல் இளஞ்சிட்டுக்கள் இரண்டும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தன. அரசரைக் கண்டவுடன் வெட்கத்தால் காதலி முகத்தை மூடிக் கொண்டாள். செவ்வந்தி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான். முகத்தில் அசடு வழிந்தது. பிறகு பரபரப்புடன், "அரசே வாருங்கள், வாருங்கள். இப்படி நின்று கொண்டிருக்கிறீர்களே, உட்காருங்கள்" என்று பரபரப்புடன் கூறினானேயொழிய, அவனுக்கு இன்னது செய்வது என்று தெரியவில்லை. அதற்குள் நாணிக் கண் புதைத்த அந்தக் காதல் நங்கை அங்கிருந்து ஓடோடி விட்டாள்.

• • •

அன்றிலிருந்து செவ்வந்தியின் புது அனுபவத்தைக் கேட்டறிவதிலேயே சொக்கநாதர் சம்பாஷணையில் பெரும் பகுதியைக்

கழித்தார். சொக்கநாதர் நெஞ்சத்தில் புதுப்புது மலர்கள் மலர்வதற்கான வித்துக்கள் மெல்ல விழலாயின. செவ்வந்தியை அரசர் ஓய்வு நேரத்தில் சந்திக்கும் போதெல்லாம் பேச்சு புதுமையைப் பற்றியதாயிருந்தது. புதுவித உணர்ச்சிகள் உள்ளத்தில் வழிந்தோடும் நூதன மலர்ச்சியைப் பற்றியதாயிருந்தது.

"செவ்வந்தி நீயும் உன் காதலியும் என்ன பேசிக் கொள்வீர்கள்?"

"செவ்வந்தி உன்னை அவள் என்ன சொல்லி அழைப்பாள்?"

"செவ்வந்தி உனது கன்னத்தை வருடினாளே அவள் ஸ்பரிசம் உனக்கு என்ன கொடுத்தது? உனது மென்மையான கன்னக்கதுப்பிலே அவள் கரம் பட்டபோது அவளுக்கு என்ன தோன்றியது?" என்றெல்லாம் சொக்கநாதர் கேள்விமேல் கேள்விகேட்டு செவ்வந்தியைத் திணற அடிப்பார்.

வண்டியூர் தெப்பக்குளத்து வசந்த மண்டபத்துச் சோலையிலே செவ்வந்தியுடன் காவலர்கள் உடனிருப்பதைக் கூடக் கவனிக்காமல் அவர் செவ்வந்தியிடம் சிருங்கார விஷயங்களை வினவுவார். ஒரு நாள் செவ்வந்தி சொன்னான்:

"உங்கள் பாட்டனார் திருமலை நாயகர் காலத்தில் சுப்ரதீபக் கவிராயர் என்று ஒருவர் இருந்தார்."

"சொல்லு, சொல்லு. நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் என் பாட்டனாரிடம் கோபங்கொண்டு கூளப்ப நாயக்கனிடம் சென்று விட்டாராம்" என்று ஆவலுடன் சொக்கநாதர் கேட்டார்.

"அந்த சுப்ரதீபக் கவிராயர் நிலக்கோட்டை சிற்றரசர் நாகம்ம கூளப்ப நாயகனை மிகவும் உயர்த்தி விட்டார். சிருங்காரக் காவியத்தின் தலைவனாகவே அந்த மன்னரைப் புகழ்ந்து மகிழ்வித்து விட்டார். அப்படிப்பட்ட திறமை எனக்கிருந்தால் நானும் உங்களை வைத்து அழகான பிரபந்தமே பாடி விடுவேன்..."

"பாடுவாய், பாடுவாய். உனக்கு என் மேல் அலாதியான பிரியம். ஆனால் எனக்குச் சொல்லாமல் ஒரு பெண்ணைக் காதலித்து விட்டாய். நீயே ரகசியமாகப் பாடிக் கொண்டிருக்கிறாய். போகட்டும் அந்த சுப்ரதீபக் கவிராயரைப் பற்றிச் சொல்லு..."

"சுப்ரதீபக் கவிராயர் நவரஸங்களையும் அறிந்தவர். அதிலும் காமரசத்தை நன்றாகப் பருகியவராய் இருக்க வேண்டும்..."

"சொல்லுப்பா, என்ன சுற்றி வளைக்கிறாயே! சுப்ரதீபக் கவிராயர் பாடலில் என்ன எழுதினார்... நீ நாமதப்படுத்துவதால் எனக்கு வேதனைதான் அதிகமாகிறது..."

"ஆகும், ஆகும், ஆகும் துரையே ஆகும். அது சாதாரண வேதனை அன்று, அரசே விரகவேதனை. இதே வேதனை பெண்களுக்கு வந்தால் அவர்கள் படும் பாடு..."

'சொல்லு, செவ்வந்தி சொல்லு. உன் காதலி சொல்லி யிருக்கிறாளா? உன் அனுபவத்தையும் சேர்த்துக் குழைத்துச் சொல்லப் போகிறாயா... சொல்லு!"

"நான் சொல்லவில்லை; என் காதலியும் சொல்லவில்லை. நான் இப்போது சொல்லப் போவதை என் காதலியிடம் சொன்னால் முறம் எடுத்து வருவாள் மொத்த..."

"சரிப்பா... நீ என்னிடம் சொல்லேன்...!"

"நவரத்னமாலை என்னும் பெண். அழகான பெண். அவள் ஒருநாள் மூர்ச்சையடைந்து விழுந்து கிடக்கிறாள் காட்டிலே... அவளைக் காணவில்லையே என்று தோழிகள் தேடியலைகின்றனர். கடைசியில் கண்டு கொண்டனர்..."

"அவள் ஏன் மூர்ச்சையானாள்...?" - அரசர் இவ்வாறு கேட்டவுடன், செவ்வந்தி மெல்லச் சிரித்து, "அவளுக்கும் மன்மதனுடைய சேஷ்டைதான்..." என்றான்.

"அவளுக்கும் என்றால், இன்னும் வேறு யாருக்கு?" என்று கேட்டார் அரசர்.

"அதுபோல் மன்மதனின் கடைக்கண் பார்வை பட்டவர்களுக்கு."

"மன்மதன் பார்வை விழுந்தால்...?"

"விழுந்தால் - தங்களைப் போன்ற மனநிலையுடன் எப்போதும் பெண்களைப் பற்றியே நினைக்கும் நிலை ஏற்படும். பெண்களாயிருந்தால் ஆண்களைப் பற்றியே நினைக்கும் நிலை..."

"ஓ... கோ... மேலே சொல்லு."

"அந்த நவரத்தினமாலை, காட்டிலே கூளப்பநாயக்கனைச் சந்தித்தாள். இருவரும் ஒன்று கலந்து விட்டனர். அவன் போய்விட்டான், இவள் மயங்கி விட்டாள். எப்படிக் கிடக்கிறாளாம் தெரியுமா?"

"குன்றிரண்டு தாங்கும் கொடிபோல் இடை துவள...
மைபடிந்த சாய்ந்த கலை குலைய..."

"ஆகா... என்ன பேஷான பாட்டு!"

"இன்னும் பேஷ் பேஷான பாட்டெல்லாம் இருக்கிறது அரசே.

"எல்லாவற்றையும் சொல்லுவாயா?"

செவ்வந்தி பதில் கூறுவதற்குள் அரசருடைய மெய்க் காவலர்கள் அங்கே வந்து வணங்கி நின்று, கோவிலுக்குச் செல்லும் நேரமாவதைப் பற்றியும், இரவு கொலு மண்டபத்து நிகழ்ச்சிகளையும் நினைவு படுத்தினார்கள். வேண்டா மனத்துடன் அன்றைய சம்பாஷணையை முடித்துக் கொண்டு சொக்கநாதர் புறப்பட நேர்ந்தது.

படகிலிருக்கும் போது கூட சொக்கநாதர் மனம் எங்கெங்கோ சுற்றி அலைந்தது. செவ்வந்திக்கு அரசரின் மனமாறுதல் தெரிந்து விட்டது. மன்னரின் அரியணையை உடன் அலங்கரிக்க அரசி ஒருத்தி தேவை எனும் காலம் வந்துவிட்டது என்பதைப் புரிந்து கொண்டான்.

• • •

படகு குளக்கரையை வந்தடைந்தது. மாணிக்கப் பண்டாரம் எழுந்து மன்னர் வருவதைப் பார்த்துச் சற்று ஒதுங்கி நின்றார். தன்னை அரசர் உடனே அடையாளம் கண்டு கொள்வாரோ எனும் சந்தேகம் அவரிடம் ஏற்பட்டது. ஆனால், செவ்வந்தியும் அருகிலிருந்ததால் செவ்வந்தியை அணுகி, முத்துக்குமரன் சொல்லி அனுப்பிய தஞ்சை இளவரசியைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்க எண்ணினார். அதே போன்று சொக்கநாதர் விரைந்து சென்று குதிரைமீதேறி, செவ்வந்தியிடம் விடைபெற்றுக் கொண்டார்.

"செவ்வந்தி" என்று மாணிக்கப் பண்டாரம் அழைத்தார், செவ்வந்தியும் அவரை அடையாளம் கண்டு கொண்டான்.

இருவரும் சிறிது நேரம் ஒருவர் நலனை மற்றவர் விசாரித்துக் கொண்டனர். பிறகுதான் மாணிக்கப் பண்டாரம் தஞ்சையினின்று முத்துக்குமரன் சொல்லியனுப்பிய செய்தியைக் கூறினார்.

செவ்வந்தியின் மனம் ஒரு நொடியில் திட்டம் தீட்டி விட்டது. "பண்டாரம், நான் ஒன்று சொல்லுவேன் செய்கிறீர்களா?" என்று கேட்டான்.

"சொல்லு தம்பி."

"நீங்கள் சொல்லுவதனின்று தஞ்சை இளவரசி நம் அரசருக்கு ஏற்ற மங்கை. நம் நாட்டிற்கு ஏற்ற அரசியை தேடிவர வேண்டாமா? தஞ்சை இளவரசியின் வடிவழகை அப்படியே நல்ல சித்திரமாகத் தீட்ட வேண்டும். அந்தச் சித்திரத்தை எடுத்துக் கொண்டு நீங்களே அரசரிடம் செல்ல வேண்டும். வாய் வர்ணனையை விட எழில் ஓவியம் நல்லது செய்துவிடும்" என்றான்.

மாணிக்கப் பண்டாரத்திற்குப் புரிந்து விட்டது. அவர் சம்மதித்தார். புகழ் பெற்ற சித்திரக்காரரிடம் உடனே இருவரும் சென்றனர்.

• • •

ஓவியப் பாவை எழில் நிறைந்து விளங்கினாள். தஞ்சை இளவரசி அவ்வாறு இருப்பாளோ என்னவோ அந்த ஓவியப் பெண்ணைக் காண்போர் மையல் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். அந்தச் சித்திரத்தை எடுத்துக் கொண்டு மாணிக்கப் பண்டாரம் சொக்கநாதரிடம் சென்றார்.

"வாருங்கள், வாருங்கள் மாணிக்கப் பண்டாரத்தாரே! என்ன விசேஷம்?" என்று மன்னர் சொக்கநாதர் வரவேற்றார். மாணிக்கப் பண்டாரத்தை இளம் வயதில் இருந்தே அவருக்குத் தெரியும்.

"நல்ல விசேஷம்தான் அரசே! தஞ்சையினின்று முத்துக்குமரன் எனும் இளைஞன் செய்தி சொல்லி அனுப்பினான்..."

"தஞ்சையிலின்றா... முத்துக்குமரனா... செய்தியா... சொல்லுங்கள் சொல்லுங்கள்..." என்று சொக்கநாதர் வினவினார். அவர் முகத்தில் ஆவல் ததும்பியது.

"இதுதான் செய்தி" என்று தஞ்சை இளவரசியின் சித்திரத்தை அவரிடம் காட்டியவுடன், சொக்கநாதர் சித்திரப் பெண்ணின் அழகில் பெரிதும் மயங்கி, "யார் இந்தப் பெண்? எங்கே இருக்கிறாள்?" என்று பரபரப்புடன் கேட்டார்.

# 22. அவனால் ஆகும் காரியம்

மதுரை மாமன்னர் சொக்கநாத நாயக்கர் தன் எதிரே அழகியின் ஓவியத்தை வைத்துக் கொண்டு அதன் எழிலில் இலயித்திருந்தார். அந்த ஓவியத்து வடிவழகியின் அங்கம் ஒவ்வொன்றும் அவர் உள்ளத்தில் புதுவிதக் கிளர்ச்சியை அளித்துக் கொண்டு இருந்தன. அத்தகைய உணர்ச்சி ஏற்படும் பருவம் அது. ஆட்சிப் பொறுப்பிலும், அமைச்சர்களுடன் ஆலோசனையிலுமே காலத்தைக் கழித்து வந்த அவனுக்கு மெல்லியலாளின் மணம் நுகர்வதற்குச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

அரண்மனையில் ஏராளமான பணிப்பெண்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் பணிவிடையைப் பெற அரசிதான் இல்லை. பல ராஜ மாதாக்கள் - காலஞ் சென்ற தந்தையின் அபிமானத்துக்கு உட்பட்ட மகளிர் இருந்தார்கள். உறவின் முறையோர்கள் இருந்தார்கள். ஆனால், இராஜ சபையை அலங்கரிக்க அரசி இல்லை.

கோலாகலமான நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அழகிய ஆடலணங்குகள் இருந்தனர். பல தேசத்துப் பாவைகள் பருவ எழிலுடன் பூத்துக் குலுங்கி நின்றனர். ஆனால் சொக்கநாதரின் இதயத்தில் அவர்கள் போதையை ஊட்ட முடியவில்லை. ராஜ

வீதியில், பரிமேல் ஏறி உலா வரும்போது, வீதியின் இரு புறத்து மாடங்களின் வழியே முகமலரை மட்டும் காட்டி நிற்கும் குலமங்கையர்களின் அருள் வதனம்கூட சொக்கநாதர் மனத்தில் தன்னுடைய சரிபாதியாக வாழ்வதற்கு ஒரு பிடி இடையே நீ பெற வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவில்லை.

ஆனால், மாணிக்கப் பண்டாரம் கொண்டுவந்த ஓவியம் அவரது உடலில் ஆயிரம் கோடி பனிநீரை ஒரு கணம் தெளித்தது. அன்றலர்ந்த புது மலர்களால் அர்ச்சித்தது போல் இருந்தது. வானத்துச் சந்திரனின் வெண் குழம்பெடுத்துப் பொதிகைச் சந்தனத்தை உடன் கூட்டி உடல் எங்கும் பூசி மெழுகியது போன்றிருந்தது.

ஆகா; அந்த விழிகளில் ஏதாவது புதிய வேலாயுதம் இருக்கின்றனவா? காமன் காமன் என்கிறார்களே அவனது படைக்கலனை அந்த அழகி பறித்து வந்து தன்னிடம் வைத்துக் கொண்டாளா?

சொக்கநாதர் அந்தச் சித்திரத்தையே பலவிதக் கோணங்களில் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். இரவெல்லாம் அவருக்கு உறக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு படுத்துப் படுத்து அலுப்பு ஏற்பட்டு விட்டது. கவலையுடன் எழுந்தவர் முதல் கடமையாக செவ்வந்தியை அழைத்து வருமாறு ஆளை அனுப்பினார்.

செவ்வந்தி வந்தபோது சொக்கநாதர் சித்திரப்பாவையின் உருவத்தின் எதிரே இமை கொட்டாமல் நின்று கொண்டிருந்தார். செவ்வந்திக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. ஓவியத்தின் எதிரேயே இவ்வாறு மனத்தைப் பறிகொடுத்து நிற்கிறாரே. உண்மையாக அந்த அழகியைக் கண்டுவிட்டால் என்ன நிலையை அடைவாரோ என்று எண்ணியபோது செவ்வந்திக்கு மேலும் சிரிப்புத்தான் வந்தது.

"செவ்வந்தி வந்து விட்டாயா? எங்கே வராமல் உன் காதலியின் அழகிலேயே இருந்து விடுவாயோ என்று எண்ணினேன். இதோ பார், இந்தச் சித்திரத்தை! இந்தச் சித்திரத்திலுள்ள மங்கையின் அழகைப் பார்த்தாயா? உன் காதலியை விட அழகாக இருக்கிறாளா சொல், செவ்வந்தி" என்று பரபரப்பும் ஆவலும் மிகப் பேசினார்.

"ஆகா! இந்த ஓவியத்திலுள்ள எழில் மங்கை எங்கே! என் காதலி எங்கே? இது என்ன? தேவலோக மாதைச் சித்திரக்காரர் வரைந்தாரா? இனி என் மீது உங்களுக்குக் கவனம் ஏது? இந்தக் கனவுக் கன்னியுடனேயே தனித்திருப்பீர்கள். என்னை இவ்வளவு நாட்கள் கே[illegible] செய்தது எல்லாம் தங்களுக்கே நேர்ந்து விடப்போகிறது பாருங்கள்" என்றான் செவ்வந்தி.

"அப்புறம் என்னைச் சொல்லால் தாக்கலாம் செவ்வந்தி. இந்த மங்கையின் வடிவழகு எப்படி? அதைச் சொல் என்றால் வேறு என்னென்னவோ சொல்கிறாயே?"

"ஆகா! அரசே! நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இத்தகைய அழகு வடிவத்தை வரைந்த ஓவியன் யார்? அவனுக்கு ஆயிரம் பொன் பரிசாகத் தரலாம். இந்த ஓவியத்தைத் தாங்கள் அருகேயே வைத்துக் கொண்டு தங்கள் பட்டமகிஷியாக இதை எண்ணி மனம் மகிழலாம்" என்று செவ்வந்தி சொன்னவுடன் அரசர் நகைத்து, "நீ இவ்வாறு சொல்வாய் என்று எனக்குத் தெரியும். இது சாதாரண ஓவியம் இல்லை, தெரியுமா? தஞ்சை நாட்டு இளவரசியின் ஓவியம். மாணிக்கப் பண்டாரத்திடம், முத்துக்குமரன் வர்ணித்திருக்கிறான் அவள் அழகை. அந்த அழகை அப்படியே வடித்திருக்கிறான் ஓவியன்" என்றார்.

"அப்படியே வடித்திருக்கிறான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நிச்சயம் அவள் அழகுக்கு இது குறைந்திருக்காது என்று எனக்குப் படுகிறது. இல்லாவிடில் மாணிக்கப் பண்டாரம் என்னிடம் இதைத் துணிந்து கொண்டு வரமாட்டார்!"

"அரசே! எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு அரசனுக்கு வாசனையுடன் கூடிய கூந்தலின் இழை கிடைத்ததாம். இதை ஓர் ஓவியனிடம் கொடுத்துச் சித்திரம் வரையச் சொன்னாராம். அந்த ஓவியனும் அந்தக் கூந்தல் இழையைக் கொண்ட அழகியின் வடிவத்தை வண்ணச் சித்திரமாகத் தீட்டிவிட்டானாம். அதுபோல -"

"ஆமாம்; அதுபோல் முத்துக்குமரன் மாணிக்கப் பண்டாரத்திடம் சொல்ல, மாணிக்கப் பண்டாரம் சித்திரக்காரரிடம் சொல்ல அழகான ஓவியம் உருவாகிவிட்டது. இனி ஓவியத்துக்கு உரிமையாளரான அசலை அடைய வேண்டியதுதான்."

சொக்கநாத நாயக்கரின் இந்த உறுதி செவ்வந்தியையே திகைக்க வைத்துவிட்டது. தஞ்சாவூர் இளவரசியின் மீது மதுரை மன்னர் ஆசை வைப்பது கடைசியில் எதில் கொண்டு விடுமோ என்று செவ்வந்தி அஞ்சினாள்.

"என்ன யோசிக்கிறாய் செவ்வந்தி" என்று அரசர் கேட்டார்.

"நான் ஒன்றும் யோசிக்கவில்லை அரசே! தஞ்சை இளவரசி என்றவுடன் எனக்குச் சற்று யோசனை ஏற்பட்டது."

"என்ன யோசனை?"

"தஞ்சைக்கும் மதுரைக்கும் அவ்வளவு இணக்கமான..."

"புரிந்தது, புரிந்தது நீ சொல்ல வந்தது. இதற்கு முன்பு சுமுகம் இல்லைதான். என் காலத்தில் இருநாட்டுக்கும் நல்ல அமைதியை ஏன்

ஏற்படுத்தக்கூடாது? இரு நாடுகளும் ஒன்றுபட்டு வாழ்ந்தால் நல்லதுதானே."

சொக்கநாதர் இதைக் கூறும்போது அவர் கண்கள் ஒளி வீசின. புதியதொன்றைக் கண்டுபிடித்து விட்டது போல் அவர் முகம் பெருமையுடன் திகழ்ந்தது.

செவ்வந்திக்கும் அரசரின் சொற்கள் புதுமையாய்த்தான் தோன்றின. அவன் மௌனத்தைக் கண்ட அரசர் "ஏன் மௌனமாய் இருக்கிறாய்? நான் சொல்லுவது நடக்காத காரியம் என்று தோன்றுகிறதா?" என்று கேட்டார்.

"அப்படியெல்லாம் இல்லை. தங்களுடைய எண்ணம் வெற்றியடைந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். தஞ்சைக்கும் மதுரைக்கும் என்றுமே தகராறு இருந்து கொண்டிருந்தால் அதற்கு எப்போதாவது முடிவு ஏற்பட்டுத்தானே ஆக வேண்டும். ஆனால்..." என்று செவ்வந்தி சொல்லி நிறுத்திக் கொண்டான்.

"சொல்லு செவ்வந்தி, தைரியமாகச் சொல்லு... என் கருத்து சரியில்லை என்றால் மாற்றிக் கொள்ளத் தயார்."

"மன்னிக்க வேண்டும். தங்களுடைய கருத்தில் தவறு கண்டுபிடிக்க எனக்கு அவ்வளவு சக்தி ஏது? ஆனால், தாங்கள் கொண்டிருக்கும் நல்ல எண்ணம் போன்று தஞ்சை மன்னரும் கொள்ள வேண்டுமே. இங்கே நகரத்தில் சிலர் பேசிக் கொள்வதைப் பார்த்தால் தஞ்சை மன்னர் விஜயராகவர் மேலும் மேலும் மதுரைமீது துவேஷத்தை வளர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடுகிறாராம். தங்களுக்கும் அந்தச் செய்தி தெரிந்திருக்கும். இந்த நிலையில் தாங்கள் தஞ்சை இளவரசியைச் சென்று பெண் கேட்பது சரிதானா என்று சொல்ல வந்தேன்..."

செவ்வந்தி சொல்லும்போது, அவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்த சொக்கநாதர் அவன் முடித்தவுடன் அவனை அப்படியே அணைத்துக் கொண்டு, "செவ்வந்தி உயிர் நண்பன் நீ, உன்னுடைய அபிப்பிராயம் முற்றிலும் சரியே. எனக்கும் தஞ்சையிலிருந்து செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன விஜயராகவருடைய நடவடிக்கையைப் பற்றி "நான் உடனேயே தஞ்சைக்கு ஆள் அனுப்பி விடுவேனா? சித்திரத்தைப் பார்த்தவுடன் அந்தக் கன்னியை அடைய வேண்டும் என்னும் ஆவல் துள்ளுகிறது. அதற்காக என் மானம் மரியாதை எல்லாம் விட்டுவிட முடியுமா? நாட்டுக்குக் காலா காலத்திற்கும் அழியாத கெட்ட பெயரை உண்டு பண்ண முடியுமா? மேலும் தஞ்சை இளவரசியின் மனம் அறியாமல் ஒருதலைப்பட்சமாக நான் மட்டும் ஆசைகொண்டால் எப்படி? அதனால் தீவிரமாக

ஆலோசனை செய்வேன். பிரதானியிடம் என் விருப்பத்தைச் சொல்லும் முன்பாக தஞ்சை இளவரசியின் மனநிலையை நான் அறிய வேண்டும். அதற்கு நீதான் ஓர் உதவி செய்ய வேண்டும்."

அரசர் சொக்கநாதர் இவ்வாறு கூறியவுடன் செவ்வந்திக்குப் பரபரப்பு பிடிபடவில்லை. தன்னை அரசர் உதவி கேட்கிறார்; என்னதான் உயிருக்குயிராய்ப் பழகியவரென்றாலும் இத்தகைய சொல் அரசரிடமிருந்து வருவதென்றால் தன் அந்தஸ்து பெரிதும் உயர்ந்து விட்டதென்றே அவன் எண்ணினான்.

"அரசே! என்ன செய்ய வேண்டும். தஞ்சை இளவரசியை இரவோடு இரவாகக் கொண்டு வந்துவிட வேண்டும் எனும் செயலைத் தவிர மீதி என்ன வேண்டுமானாலும் செய்யச் சொல்லுங்கள் செய்கிறேன்" என்றான்.

சொக்கநாதர் குலுங்கக் குலுங்க நகைத்து, "அவ்வளவு வீரனாக இருந்தால் உன்னைப் படைத் தளபதியாக நியமித்திருக்கமாட்டேனா! தஞ்சை இளவரசியை நீ தூக்கிக் கொண்டு வரவேண்டாம். போய்ப் பார்த்துவிட்டு வந்தால் போதும். அவள் மனம் அறிந்து வந்தால் போதும்" என்றார்.

செவ்வந்திக்கு மேலும் திகைப்பாய்த்தானிருந்தது.

"நாளையே நீ தஞ்சைக்குப் பயணமாக வேண்டும்" என்று சொக்கநாதர் அன்புக் கட்டளையிட்டார்.

செவ்வந்தி பெரும் யோசனையுடன் தன் வீடடைந்தான். கவலை முகத்தில் ததும்பி நின்றது.

அவனது பெரும் சிந்தனையையும், தன்னுடனும் பேசாது அவன் இருப்பதையும் கண்ட அவன் காதலி என்னவென்று தூண்டிக் கேட்டாள். அரசாங்க விஷயங்களைச் சொல்லக் கூடாது என்ற பிடிவாதம் அவனுக்கு அப்போது இருந்தது எனினும் அவள் வற்புறுத்தல் தாங்காமல் அரசர் கண்டு மயங்கிய ஓவியத்தைப் பற்றி முதலில் சொன்னான். பிறகு அந்த ஓவியத்துக்குரிய தஞ்சை இளவரசியைத்தான் எப்படியாவது சந்தித்து அவள் மனநிலை அறிந்து வரவேண்டும் என்று மன்னர் கட்டளையிட்டிருப்பதாகவும் அதை எப்படி நிறைவேற்றுவது என்ற பெரும் யோசனையில் ஆழ்ந்திருப் பதாகவும் செவ்வந்தி தெரிவித்தவுடன், அவனுடைய காதலி அதற்கு ஒரே நொடியில் வழி கண்டதுபோல், மாதுளம் பழம் விண்டதுபோல் பல்வரிசை காட்டி வெள்ளி நாணயங்களைக் கீழே சிதறவிட்டது போல் கலகலவென்று நகைத்தாள்.

"நாளைக்கே நாம் புறப்படுவோம்" என்றாள் அவள்.

"நாமா... என்னுடன் நீயும் வருகிறாயா? அங்கெல்லாம் நீ எதற்கு?"

"உங்களைவிட்டு நான் ஒரு நொடியும் பிரிய முடியாது" என்று சிணுங்கினாள் காதலி.

"தஞ்சை - வடக்கத்திச் சீமை. அது எப்படிப்பட்ட இடமோ? மனிதர் குணங்கள் எப்படியோ? பழக்க வழக்கங்கள் எப்படியோ?" என்று அவளைத் தடுக்கப் பார்த்தான் செல்வந்தி.

"தஞ்சை நாட்டுக்காரர்கள் எல்லாரும் நல்லவர்கள். நான் சிறு வயதில் அங்கே இருந்திருக்கிறேன்" என்று காதலி பதில் சொல்லித் தன் நிலையை உறுதிப்படுத்த முயன்றாள்.

"நான் என்ன நிலையில் அங்கே ஊர் சுற்றுவேனோ? இளவரசியை நான் சந்திக்க வேண்டுமாம். அவள் மனம் அறிய வேண்டுமாம். அங்கெல்லாம் நீயும் வருவதென்றால் சங்கடம்தான்."

"சங்கடம்! நான் வராவிட்டால்தான் மிகவும் சங்கடம் உங்களுக்கும், எனக்கும்! தங்களைத் தஞ்சைக்குத் தனியாக அனுப்ப மாட்டேன். அதுவும் இளவரசியிடம் அனுப்பவே மாட்டேன்!"

"ஏனாம்..."

"ஆமாம். உங்கள் வடிவழகில் அவள் மயங்கி விட்டால் என் ராஜாவை நான் இழந்து விட வேண்டியது தான். ஆண் பிள்ளையே பார்த்து ஆசை கொள்ளும் அழகுடைய உங்களை அந்த அரசகுமாரி பார்த்து விட்டால்?"

"சீ, என்ன சொல்கிறாய். என்னைப் பார்த்து தஞ்சை இளவரசி மயங்குவதா? அல்லது நான் மயங்கி விடுவேனா? என் ராசாத்தியைத் தொட்ட கரத்தால் வேறு ஒருத்தியைத் தொடுவேனா?" என்று கூறி அவளை அன்புடன் அணைத்துக் கொண்டான். அப்பொழுது அவன் காதுக்கருகில் அவள் கிசுகிசுத்து ஏதோ சொன்னாள். அவள் சொன்ன யோசனை செல்வந்திக்குத் திருப்தியாகப் பட்டது. அதன்படி நடந்து கொண்டால் தஞ்சையில் எளிதில் காரியத்தைச் சாதித்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தான். மறுநாள் காலையிலேயே தஞ்சைக்குச் செல்வதாக இரட்டைக் குதிரை பூட்டிய வண்டி ஒன்று தயாராக நின்றது. மதுரை நாட்டு எல்லை வரையில் செல்வந்தியும், அவன் காதலியையும் ஏற்றிக் கொண்டு வண்டி சென்றது - தஞ்சை சென்றதும் செய்ய வேண்டியதை அவர்கள் யோசித்துக் கொண்டே வண்டியில் இருந்தனர். செல்வந்திக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை, தன் காதலியின் திட்டத்தைக் கேட்டதும்! அவளுடைய திறமை பலிக்க வேண்டும் என்ற பயம் அவனுள்ளத்தில் இருந்தது.

# 23. பவழமலைக் குறத்தி

இளவரசி மோகனாங்கிக்கு இருப்புக் கொள்ளவே இல்லை. காலை இளங்காற்று மெல்ல வீசிக் கொண்டிருந்தது. அந்தப்புரத்து மேன்மாடத்துச் சாளரங்கள் வழியாக கதிரவனின் பொற்கிரணங்கள் நுழைந்து உட்கூடத்தைப் பொன்மூலாம் பூசிக் கொண்டிருந்தன. காற்றிலே நீலவர்ணமுள்ள திரைச்சீலைகள் மெல்ல அசைந்தன. மோகனாங்கியின் கூந்தல் வாரப்படாமல் இருந்ததால் காற்றிலே மெல்ல அசைந்தன. அதை எடுத்துச் சொருகிக் கொள்வதும், திரைச்சீலையை மெல்ல அகற்றி வெளியே பார்ப்பதுமாக அவள் இருந்தாள்.

சாளரத்துக்கு அருகே இத்தாலிய நாட்டுப் புதிய சிற்பி கதவுகள் அமைந்த சாளரம் ஒன்றை அமைத்திருந்தான். வேண்டும்போது திறந்தும் வேண்டாதபோது மூடிவிடக்கூடிய அளவுக்கு அது அமைக்கப்பட்டிருந்தது. ஜன்னல் என்று அழைத்தார்கள் அவர்களுக்குப் புதுமையாக இருந்தது. மோகனாங்கி அந்த ஜன்னல் வழியாகத் தோட்டத்தையும் மற்றும் அரண்மனைக்கு வெளியேயுள்ள தோற்றங்களையும் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி கொள்வாள். அங்கிருந்து பார்த்தால் அரண்மனையின் வெளிவாசல் வழியாக உள்ளே நுழைபவர்களைக் காணலாம். ஆனால், வெளிவாசல் வழியாகப் பார்த்தால் ஜன்னல் வழியாகப் பார்ப்பவர் யார் எனக் கண்டுபிடிக்கமுடியாது.

மோகனாங்கி பார்க்கும் போது அவள் தந்தை அரசர் விஜயராகவர் தன் பரிவாரங்களுடன் திருவரங்கத்திற்குப் புறப்படுவது தெரிந்தது. குதிரைகளின் குளம்படியோசையும், வாழ்த்தொலிகளும் தெளிவாகக் காதில் விழுந்தன.

விஜயராகவர் சமீபகாலமாக ஒரு வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். அரண்மனையின் ஒரு பகுதியை அரங்கநாதருக்குப் பூஜை செய்யும் சிறு கோயிலாக மாற்றி வழிபாடு நடத்திக் கொண்டிருந்தாலும், நாள்தோறும் திருவரங்கம் எனப்படும் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று பாம்பணையில் அரிதுயில் பயிலும் ரங்கநாதரைத் தொழுது தஞ்சைக்குத் திரும்பிய பிறகே உணவு கொள்ளுவதென்ற வழக்கத்தைக் கொண்டிருந்தார். இளஞ்சூரியன் எழுந்தவுடனேயே அவர் ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட ஆயத்தமாகி விடுவார்.

தந்தையும் புறப்பட்டாகி விட்டது. இரவுக் காவலர்கள் மாறிப் புதிய வாயிற்காவலர்கள் வந்து கையில் வேலுடன் நின்றாகி விட்டது. கோட்டை மதிலின் மேல் உள்ள பீரங்கிகளைச் சரி பார்ப்பதற்கான

பணியாட்கள் கோட்டைச் சுவரின் மீது ஏறி வந்து கொண்டிருப்பது எதிர் வெயில் ஒளியில் நிழல் ஓவியம் போல் தோற்றமளித்தது. தஞ்சை பெரிய கோயிலில் அப்போதுதான் உதயகால பூஜை நடப்பதை அறிவிக்கும் மணியோசை ஒலித்துக் கொண்டிருந்தது. நேரம் அறிவிக்க "டாண் டாண்" என்று ஓசை எழுப்பிக் கொண்டிருந்தார்கள் மணி கூண்டுப் பணியாட்கள்.

மோகனாங்கிக்கு எதிலும் கவனம் செல்லவில்லை. அவள் யாரையோ எதிர்பார்த்திருப்பது அவளது முக ஆவலிலிருந்துத் தெரிகிறது. இடை இடையே எழும் பெருமூச்சு அதை ஆமோதித்தது. முதல் நாள் வல்லத்துக் கோட்டைக்குச் சென்ற கமலத்தைத்தான் அவள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கமலம் பல செய்திகளைக் கொண்டு வருவாள். ஒவ்வொரு செய்தியும் அவள் அளவில் மிக முக்கியமானவை. அத்தையின் மனநிலையை முத்துக்குமரனைச் சந்தித்துக் கமலம் தெரிவித்துக் கொண்ட தகவல் இவற்றையெல்லாம் மோகனாங்கி எதிர்பார்த்தாள். அதிகாலையிலேயே வந்து விடுவதாகக் கூறிச் சென்ற கமலத்திற்கு ஏதாவது நேர்ந்து விட்டதோ என்ற அச்சம் வேறு அவள் உள்ளத்தில் சூழ்ந்து கொண்டது.

கமலத்துக்கு எந்தவிதமான ஆபத்தும் நேரவில்லை என்பது அவள் புன்முறுவலுடன் வந்த பிறகுதான் தெரிந்தது.

"கமலம் போன காரியம் என்ன?" என்று மோகனா கேட்டாள்.

"எல்லாம் நல்லதாகத்தான் ஆச்சு. பிறகு சொல்கிறேன். வழியிலே பவழமலைக் குறத்தியைப் பார்த்தேன். அவளை அழைத்து வந்திருக்கிறேன். அப்பப்பா, என்ன சக்தி, என்ன சக்தி அவளிடம்!" என்று கமலம் வியப்பும் பரபரப்பும் நிறைந்த குரலில் கூறினாள்.

"என்ன, பவழமலைக் குறத்தியா - குறத்திக்கும், சக்திக்கும் என்னடி சம்பந்தம்? நான் கேட்பதற்குப் பதில் சொல்லாமல் நீ என்னென்னவோ சொல்கிறாயே?"

"ஆமாம் இளவரசி! பவழமலைக் குறத்தி நடந்ததைச் சொன்னாள். நடக்கவிருப்பதைச் சொல்கிறாள். வழியிலே அவளைப் பார்த்தேன்; தங்களிடம் அவளை அழைத்து வந்தால் அவளை எவ்வளவோ கேட்கலாம். நான் வல்லத்துக்குப் போனதைப் பற்றியும் அங்கே அந்த தெற்கத்திச் சீமை வயசுப் பிள்ளையிடம் பேசியது பற்றியும் அவள் கூட இருந்ததுபோல் சொல்கிறாள். எனக்கே ஆச்சரியமாய்ப் போச்சு. அதனால்தான் அவளை அழைத்து வந்தேன்."

"எங்கே, அவள்? ஏன் இங்கே அழைத்து வரவில்லையா?"

"இங்கேயா, இங்கே அழைத்துக் கொண்டு வரலாமா?"

"ஆமாம். இங்கே வந்தால்தான் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள், ரகசியமாக இருக்கும்."

இளவரசி இவ்வாறு கூறியவுடன் கமலம் மோகனாவின் முகத்தையே சற்று நேரம் வியப்புடன் கவனித்துவிட்டு, இளவரசிக்கு உள்ள ஆவலைத் தெரிந்துக் கொண்டு பவழமலைக் குறத்தியை அழைத்து வருவதற்காக விரைந்தாள்.

• • •

பவழமலைக் குறத்தி பெயருக்கு ஏற்பப் பவழம் போன்ற பொலிவுடன் திகழ்ந்தாள். மணிமாலைகள் ஏராளமாக அணிந்து கையிலே குறி சொல்லும் கோலுடனும், கூடையுடனும் அவள் குலுங்கிக் குலுங்கி நடந்து வருவதே தனி அழகாகத்தானிருந்தது. கால் சதங்கைகள் 'ஜல் ஜல்' என ஒலித்தன. இடையில் அணிந்திருந்த மேகலை மாலைகள் பளபளப்புடன் ஜ்வலித்தன. வண்ண வண்ண மணிமாலைகள் கழுத்தை அலங்கரித்தன. தலைக்கூந்தலை விதவிதமாக அள்ளிச் சொருகியிருந்தாள். கொண்டையைச் சுற்றி வட்டமாக வண்ண மலர்மாலை.

"ஏ, குறத்தி! உனக்குப் பேரதிர்ஷ்டம்தான்! இளவரசி தன் அந்தரங்க அறைக்குள் உன்னை அழைக்கிறார்கள். வாவா, நல்ல பலனாகச் சொல்லு. நடக்கப் போவதைச் சொல்லு. நல்ல காலம் வரப்போவதைச் சொல்லு. இளவரசி ஏராளமாக உனக்குப் பரிசு கொடுப்பார்கள். அதிலே எனக்குப் பாதி கொடுத்து விடுகிறாயா?" என்று கமலம் பவழமலைக் குறத்தியை அழைத்தாள். குறத்தியின் மீது அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது.

பவழமலைக் குறத்தி நகைத்தாள். முத்துப்பல் வரிசை அழகாகத் தெரிந்தது. "எனக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது என்பதும் பவழ மலைக் குருநாதர் அருளினால் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்டுதானே வந்திருக்கிறேன். எங்கள் சிங்கன் கேட்பதைத்தான் நீங்களும் கேட்கிறீர்கள் அம்மாவோ! அவரும் அப்படித்தான் பாதிப் பரிசைக் கேட்டு விட்டார்" என்றாள். அவள் பேசும்போது அவள் உடல் நெளிவையும் முகக் குலுங்கலையும் கமலம் விழி மாறாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். குறத்தியின் செழுமையான உடல் அமைப்பு அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தன பாரம் தாங்காமல் ஒடிந்து விழுந்து விடுமோ எனப்படும் இடையையும், முழங்கால்வரையில் புடவையை எடுத்துக் கட்டியிருந்ததால் புலப்பட்ட செழுமையான கால்களையும் கமலம் கண்டு மலையளிக்கும் வளப்பத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டாள். அத்தகைய பருவச் செழுமை பொங்கிப் பாயும் அழகியைக் கைப்பிடித்தவன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் என்று எண்ணினாள்.

"சிங்கன் என்றாயே, அவர் யாரம்மா?" என்று கமலம் கேட்டாள்.

குறத்தி நகைத்துக் கொண்டு, "என் கைப்பிடித்த மவராஜாவுக்குச் சிங்கன் என்று பெயர்" என்றாள்.

"அப்படியானால் உன் பெயர்"

"சிங்கி."

"சிங்கி" என்று ஒரு தரம் சொல்லிப் பார்த்த கமலம் சிரித்துவிட்டு, "சிங்கி, வா, வா. ஆவலுடன் இளவரசி காத்திருப்பாள் - போவோம் வா" என்று கூறி அழைத்துச் சென்றாள்.

இளவரசி மோகனாங்கி ஆவலுடன் எதிர்பார்த்துத் தானிருந்தாள். அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது.

அவள் உள்ளத்தில் குறிப்பிட்ட எந்த ஆணழகனோ இளவரசனோ குடிபுகுந்து விடவில்லை. ஆனால், அவளுடைய இதயத் தாமரையில் பலவந்தமாக யாரையாவது ஏற்றி வைக்க அவள் தந்தையும் அத்தையும் முயன்று கொண்டிருந்தார்கள். தன்னைத் தானே இதுவரையில் புரிந்து கொள்ளாமல் இருந்தாள். இப்போது மெல்ல அவள் கன்னத்தை யாரோ தொடுவது போன்ற உணர்ச்சி. அந்த உணர்ச்சியைத் தொடர்ந்து உடலில் ஒருவிதச் சிலிர்ப்பு. குளிர்ந்த காற்று வீசும் போது உடல் வியர்த்தது. காற்றே இல்லாதபோது மேனி எங்கும் ஒருவிதக் குளுமை. நட்ட நடுநிசியில் துயில் கலைந்து விடுகிறது. மெல்ல அசையும் திரைச் சீலையும் தாண்டி நீலவானத்தில் சந்தனக் கிண்ணம் போல் திகழும் சந்திரனில் யாரோ இருந்துத் தன்னை அழைப்பது போன்ற பிரமை! ஆனாலோ, அந்த அறையில் கமலியைத் தவிர வேறு யாரும் இருப்பதில்லை. கமலமும் நன்றாக உறங்கிக் கொண்டிருப்பாள்.

எதையும் அதிகம் நினைக்கத் தோன்றுவதில்லை. பணிப்பெண்களின் வாத்திய இசையிலும், பாடலிலும் மனம் லயிப்பதில்லை. அவளைப் பற்றி அவளாலேயே உணர முடியவில்லை. இதற்குக் காரணம் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் தாய் - அரசி - தன் மகளுடைய மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் தன்னுடைய அன்றாடப் பணியிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள். உள்ள வேதனையைத் தீர்க்க மருந்து வைத்தியரிடம் இருக்கும் என்ற நம்பிக்கை அவளுக்கில்லை. அரண்மனைச் சோதிடரிடமும் கேட்கலாம். ஆனால், தன் இதய ரகசியத்தை யாரிடமும் பங்கிட்டுக் கொள்ள விருப்பமில்லை அவளுக்கு. தன் மனத்தைக் கமலம் புரிந்து கொண்டு பவழமலைக் குறத்தியை அழைத்து வந்ததில் மோகனாவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

கால் சதங்கை ஒலிக்க, ஒயிலாய் நடந்து வரும் குறத்தியைப் பார்த்தவுடன் இளவரசிக்கு மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

*"போன பிறவியிலே*
*பொன் பூமிக்கு அரசி நீ!*
*தேனருவிச் சோலையிலே*
*தித்திக்கும் தேன்மலர் நீ!"*

- என்று கூறிக்கொண்டே கீழே அமர்ந்தாள். அவள் எப்போதும் சுமந்துவரும் கூடையிலிருந்து குறிசொல்லும் கோலை எடுத்துக் கொண்டாள்.

*"தேன்மலர் தேவிக்கு*
*குறிசொல்ல வந்தேன்*
*வானுலக முதல்வா*
*வந்தெனக்கு உதவு"*

- என்று துதித்துக் குறத்தி பாடிய குரலில் இளவரசி மயங்கினாள். அவளிடம் ஏதாவது பேச வேண்டும் போல் தோன்றியது இளவரசிக்கு.

"பவழ மலைக் குறத்தி - உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டாள் இளவரசி.

குறத்தி சிரித்தாள். "என் பெயரிலேயே இருக்கிறது தாயே, நான் வாழும் ஊர்!" என்று கூறிப் பாடினாள்.

*"பச்சை மலைச் சோலை,*
*பழங்கனிகள் குலுங்கி நிற்க*
*இச்சை கொண்ட கிளிகள்*
*இனிமையுடன் ஓடிவரும்,*
*சந்தனமரம் தழுவிச்*
*சிறுகொடிகள் படர்ந்து நிற்கும்*
*செந்தமிழ்த் தேன் பாயும்*
*பவழமலை எந்தனூர்"*

என்று குறத்தி சொல்லுவதைக்கேட்டு மோகனாங்கி ஏதோ மயக்கத்தில் கட்டுண்டவள் போல் அமர்ந்திருந்தாள்.

*"இரு நதிக்கிடையே*
*இலங்குகிற சீரங்கம்*
*சீரங்கச் சீமைதனில்*
*சீராய்க் கண் துயிலும்*
*திரு மகளைச் சேர்த்தணைத்து*
*திகழாழி கைச்சுற்றி*
*தண்ணொளிர்ப் பார்வையால்*

*தனம் நல்கும் திருமாலின்*
*உடன் பிறந்த மலைமகள்*
*ஒருநாள் தவமிருந்து*
*உலகம் தொழு தேத்தும்*
*உருத்திரனார் வாழும் மலை.*
*எங்கள் மலைக்கீடு*
*எந்தச் சீமையிலு மிலை*
*எந்நாட்டு வளங் கூற*
*இங்கு வந்தேன் தாயே நான்!*
*வளம் கொழித்த பவழமலை*
*பிறந்து வந்த சிங்கி நான்*
*வற்றாக் காவிரியின் கரம்*
*பார்க்க ஓடி வந்தேன்."*

- என்று கூறி, "தேவி, உன் பொன் கரத்தை நீட்டம்மா! அதில் ஓடும் அற்புத ரேகைகளைக் காட்டம்மா?" என்று கூறினாள். இளவரசி முகம் நாணத்தால் சிவந்தது.

"ஆகா, ஆகா! என்ன அருமையான ரேகை!" என்ற கூற முற்பட்டவளிடம் கமலம் குறுக்கிட்டு, "குறத்தி, செந்தமிழ்ப் பாட்டைக் கூறி, குறி சொன்னால் இளவரசிக்குப் புரிந்து கொள்வது கஷ்டம். அவர்கள் பேசும் மொழி தெலுங்கு என்பதை மறந்து விட்டாயோ?" என்றாள். இளவரசி உடனே கமலத்தைக் கோபிப்பதுபோல், "உச்; அவள் இஷ்டப்படி பேச விட்டுவிடு கமலம்" என்றாள்.

இதைக் காதில் போட்டுக் கொள்ளாத குறத்தி,

*"வடுகன் நாட்டு வளர்மதியே*
*எந்தன் தேவி*
*வந்தேன் நான்*
*கூறுதற்கு நல்ல சேதி!"*
*(வடுகு - தெலுங்கு)*

என்று! பாடிவிட்டு "தேவி, இந்தக் கையிலே ஓடும் தனரேகையைப் பார்த்தீர்களா? இந்த ரேகை அதிர்ஷ்டத்தையும், செல்வத்தையும் மட்டும் குறிக்கவில்லை; நீங்கள் காலடி எடுத்துவைக்கும் இடம் முன்பே அஷ்ட ஐஸ்வர்யங்கள் நிறைந்தது. நீங்கள் அங்கே சென்றவுடன் அந்த இடம் மேலும் பலமடங்கு ஐஸ்வர்யத்துடன் விளங்கும்."

கமலம் குறுக்கிட்டாள், "இவர்கள் புகும் இடம் எங்கே என்று சொல்ல முடியுமா?" "சொல்லத்தானே வந்தேன். நானா சொல்கிறேன். தெய்வம் எல்லாவற்றையும் கூறும். இளவரசியின் ரேகையின் போக்குப்படி இவர்களின் அழகையும், குணத்தையும் கேள்விப்பட்டு இளவரசியைக் காணத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார் ஓர் அரசர். அவர் சாதாரண அரசரா? மகாராஜா! வீரத்திலும் தீரத்திலும் சிறந்தவர். ஆணழகர். வாலிப வயது. எத்திக்கும் நடுநடுங்க வைக்கும் திறமையுடையவர்" என்று குறத்தி கூறினாள்.

கமலம் பரபரப்புடன், "பார்த்தீர்களா? வல்லம் கோட்டையில் அந்த இளம் வீரர் கூறியதும், குறத்தி கூறுவதும் எவ்வளவு சரியாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்றவுடன் இளவரசி கையசைத்து அவளை அடக்கி, "ஆமாம், என் திருமணத்தை, என் விருப்பப்படி என் தந்தை முடிப்பாரா? அல்லது என் தந்தையே தன் விருப்பப்படி முடிப்பாரா?" என்று கேட்டவுடன் குறத்தி சிறிது நேரம் அவள் கையைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "தேவி! சுபத்திரையை அவள் தந்தை அர்ஜுனனுக்கு இலேசில் மணமுடித்துக் கொடுக்கவில்லை. ருக்மணியையும் கிருஷ்ணபிரான் எளிதிலா மணந்தார்? தங்களுடைய திருமணம் நடப்பதில் இடையூறு இருக்கத்தான் செய்யும்" என்றாள்.

"குறத்தி - அதுதான் தெரிந்திருக்கிறதே. இளவரசியின் திருமணத்தைப் பற்றி ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதமாக முடிவு செய்து இருக்கிறார்கள். முடிவு எப்படி என்று சொல்லக்கூடாதா!" என்று கேட்டாள் கமலி.

"வருங்காலம் நம் கையிலா இருக்கிறது தேவி! ஆண்டவன் இஷ்டம் என்றாலும், அன்றெழுதினவன் எழுத்தை அழிக்க முடியாது. சொல்றேன் கேளுங்க. இந்தக் கைக்குடையவங்க என்ன நினைக்கிறாங்களோ அது நடக்கும். இதோ பாருங்க இந்த மணவாழ்க்கை ரேகை என்ன சொல்கிறது. இளவரசியார் உறுதியாகவும், தைரியமாகவும் முயன்றால் எதுவும் வெற்றிகரமாக நடக்கும் என்று சொல்கிறது. தேவியை எண்ணி எண்ணித் தெற்கே ஒரு ராஜா ஏங்குகிறார். இளவரசிக்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது" என்று கூறிய குறத்தி, தன் கூடையை எடுத்துக் கொண்டு எழுந்தாள். "மதுரை சுந்தரேச்வரர் அருளால் உங்களுக்கு எல்லாமே நல்லாத்தான் நடக்கும்" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டாள். மோகனாங்கிக்கு இன்னும் என்னென்னவோ கேட்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால், நாணம் வந்து சூழ்ந்து கொண்டது. கமலியை அழைத்துத் தன் நகைப் பெட்டியிலிருந்து ஒரு முத்துமாலையைக் கொண்டு வரச் சொன்னாள்.

கமலி நகைப்பெட்டி இருக்குமிடம் சென்றிருக்கும் போது குறத்தி இளவரசியை நெருங்கி மெல்லிய குரலில், "தேவி! இதோ இந்த மந்திரக் கோலை உங்களிடம் தருகிறேன். யாரும் இல்லாத சமயம் பார்த்து அதன் மேல் மூடியைத் திறந்து பாருங்கள்" என்றாள். இளவரசி வியப்புத் தாங்காத வகையில் அதை வாங்கி மறைத்துக் கொண்டாள்.

கமலி கொண்டு வந்து கொடுத்த முத்துமாலையை இளவரசி குறத்திக்குப் பரிசாக அளித்தாள்.

"வேண்டாம் தாயே! நாங்கள் அன்பைத் தவிர வேறு எதையும் பரிசாக வாங்குவதில்லை. தங்களுடைய திருமணம் நடநத பிறகு எனக்குப் பரிசு தாருங்கள், போதும்" என்று கூறி குறத்தி விடைபெற்றுக் கொண்டாள்.

இளவரசிக்குப் பரபரப்புத் தாங்கவில்லை. குறத்தி கொடுத்த மந்திரக்கோலை எப்போது திறந்து பார்ப்போம் அதில் என்ன இருக்கிறது என்று பார்ப்போம். என்று துடியாய்த் துடித்தாள்.

எல்லாரும் அன்று உறங்கிவிட்டனர். கமலியும் அசதியால் உறங்கி விட்டாள். இளவரசிக்கு உறக்கம் பிடிக்கவில்லை. மெல்ல எழுந்து, குறத்தி கொடுத்த மந்திரக் கோலை எடுத்து வந்தாள். சாளரத்தின் வழியே நிலவொளி பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் மந்திரக்கோலின் மேல்மூடியைத் திறந்தாள். அதற்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்த மெல்லிய துணியை எடுத்தாள். அவள் விழிகள் வியப்பால் மேலும் விரிந்தன.

# 24. களவும் நனவும்

அந்தக் கோல், மந்திரக்கோலோ என்று இளவரசி மோகனாங்கி ஒரு கணம் திகைத்தாள். பவழமலைக் குறத்தியின் கரத்தில் இருக்கும் போதுதான் அதற்கு மந்திரச்சக்தி இருப்பதால் பவழமலைக் குறத்தி நடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களும் அறிந்து விடுகிறாளா? என்று சந்தேகம் கொண்டிருந்தாள். பவழமலைக் குறத்தி குறி சொல்லும் கோலைத் திடீரெனத் தன்னிடம் கொடுத்து விடுவாள் என்று இளவரசி எதிர்பார்க்கவில்லை. யாரும் இல்லாதபோது அதன் மேல் மூடியைத் திறந்து பார்க்க வேண்டுமாமே! கோலுக்கு மேல்மூடி உண்டா? அப்படியென்றால் அது மாயக் குழலாய்த்தான் இருக்க வேண்டும்.

அந்தக் குழலுக்குள் என்ன இருக்கும் என்றறியத் துடித்தாள் இளவரசி. இரவின் நேரம் நத்தையைப் போல் நகர்வதாகத் தோன்றியது. வழக்கத்துக்கு விரோதமாக அந்தி வந்தவுடனேயே பணிப்பெண்களைத்

தங்கள் விடுதிக்குச் சென்று விடுமாறு அனுப்பி விட்டாள். தான் உறங்கும் அறையில் ஒரே ஒரு சரவிளக்கை ஏற்றினால் போதுமென்று கூறிவிட்டாள். கமலத்திடம் இரவு உணவு கொள்வதற்குச் சமையற் கூடத்துக்கு வரவில்லை என்றும் தனக்குப் பசியே இல்லையென்றும் கூறிவிட்டாள்.

"பசி எடுக்காததும், தூக்கம் வராததும், படுக்கை நொந்து போவதும், ஒருவருடனும் பேசப் பிடிக்காததும் காதல் நோய்ப்பட்டவர்களுக்குத்தான் ஏற்படும் தேவி. தங்களுக்கு நொடிக்குள்ளே காதல் நோய் படர்ந்து விட்டது. குறத்தி சொன்னவுடனேயே மனக் கற்பனை மூலம் தங்கள் இதயத்தில் மணாளனைச் சித்திரம் தீட்டி விட்டீர்களா? அந்தச் சித்திரம் தங்களுடன் பேசியதா? அதனால் தங்கள் உள்ளத்தில் பரபரப்பு ஏற்பட்டு விட்டதா! அவர் தொட்ட இடங்கள் எல்லாம் புல்லரித்துத் தங்களை வேதனைப்பட வைத்ததா? ஏன் தேவி, சாயுங்கால வேளை வந்ததும் மனமாற்றமடைந்து விட்டீர்களா?" என்று கமலம் கூறியதும், மோகனா பொய்க்கோபம் கொண்டு அவள் காதைப் பிடித்துத் திருகி, "என்னென்னமோ அடுக்கிக் கொண்டே போகிறாயே! என் உள்ளத்திற்குள் என்ன இருக்கிறது புகுந்தா பார்த்து விட்டாய். உனக்குத்தான் பேசத் தெரியுமென்று அடுக்கிக் கொண்டே போகிறாயே?" என்றாள்.

வலி பொறுக்க முடியாமல் கமலம் 'ஹா' எனக் கூவி, "விட்டு விடுங்கள், விட்டு விடுங்கள்" என்று கூவினாள். இளவரசி கலகலவெனச் சிரித்து, "கமலம், அந்தப் பவழமலைக் குறத்தி போய் விட்டாளா? எங்கே தங்கியிருக்கிறாள்?" என்று கேட்டாள்.

கமலம் இப்போது கோபப்படுபவள் போல் நடித்து, "எந்த வேளையில் அந்தக் குறத்தி வந்தாளோ உங்களுக்கு வேதனையைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டாள். அந்த மந்திரக் கோலில் என்ன மாயம் இருக்கிறதோ, அதை வைத்துக் கொண்டு என்ன பாடுபடுத்தி விட்டாள். நாளைய தினம் அவளைச் சந்தித்தால் அந்தக் கோலைத் தூக்கி எறிந்துவிடப் போகிறேன்', என்றாள்.

மோகனா பரபரப்புடன், "அப்படி ஏதும் செய்து விடாதேயடி! அவள் மந்திரம் போட்டு விட்டால் நாமெல்லாம் ஏரிக்குள் மீனாகிவிடுவோம்" என்று கூறிவிட்டு அதற்கு மேல் அவளுடன் வாதாடாமல் அவளை அனுப்பிப் பாலும் பழமும் மட்டும் வாங்கி வரச் சொன்னாள். சிறிது நேரம் கழித்துக் கமலம் பாலும், பழமும் கொண்டு வந்தவுடன் அதை வேகமாகச் சாப்பிட்டு விட்டுப் படுத்துத் தூக்கம் வருவதாகக் கூறி விளக்கை அணைக்கச் சொல்லிவிட்டுப் படுத்துக்

கொண்டாள். கமலமும் இளவரசியை உறங்க விட்டுவிட்டுச் சென்று விட்டாள்.

வெளியே சந்தடி அடங்கி யாரும் வரமாட்டார்கள் என்ற உறுதி ஏற்பட்டவுடன் மோகனா கோலின் மேல் மூடியைத் திறந்தாள். உள்ளே மெல்லிய காகிதம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

அப்போதுதான் காகிதம் எனும் எழுதும் பொருள் பிரபலமாகிக் கொண்டு வந்தது. பழுப்பு வெண்மை நிறத்தில் மெல்லியதாகச் சுருட்டப்பட்டிருந்த அந்தச் சுருளைப் பிரித்தவுடன் மோகனாவின் உடல் ஒரு கணம் வியர்த்துக் கொட்டியது. நிஜ வடிவைக் காண்பது போல் ஓர் அரச குமாரனின் முகம் அதில் வரையப்பட்டிருந்தது. தத்ரூபமாகத் தோன்றுவதற்காக வர்ணம் தீட்டப்பட்டிருந்தது.

மோகனா இமை கொட்டாமல் அந்த வடிவத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். நிலவின் மெல்லியக் கதிர்கள் அந்தச் சித்திரத்தின் மீது புகுந்து புதுச் சோபையை அளித்துக் கொண்டிருந்தன. 'கண்களிலே தெரியும் அந்த ஒளி வீரத்தைப் புலப்படுத்துகிறதா அல்லது கனிவைத் தருகிறதா? வளைந்த புருவத்தில் தெரிவது என்ன பெரும் நாட்டை ஆளும் திறமையா அல்லது அழகிய பெண்கள் மயங்கிவிடக் கூடிய அமைப்பா? கூர்மையான நாசிக்குக் கீழே அரும்பியிருந்த மீசையும் இரு உதடுகளும் அவை எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் முகத் தாமரையும் என்ன பேசுகின்றன?'

"தேவி" என்றழைக்கிறதா, அந்த உருவம்? 'மோகனா' என்று கூப்பிடுகிறதா? அதன் உதடுகள் திறந்து என்ன கூறுகின்றன?

"என்னை இதற்கு முன் பார்த்திருக்கிறாயா?"

'ஆ! இவரை நாம் எங்கே பார்த்திருக்கிறோம்? எங்குமே பார்த்ததில்லையே.' பவழமலைக் குறத்தி கூறினாள். தெற்குப் பகுதியை ஆளும் பேரரசர் ஒருவர் இருக்கிறார் என்று, அந்த வடிவத்தைக் கற்பனை செய்து கொள்ளவில்லையே!

'இளவரசி! என்ன சிந்தனையில் ஆழ்ந்து விட்டாய்? உன்னைச் சந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே உன்னைத் தனியே வந்து சந்திக்கிறேன்'.

'என்னைச் சந்திப்பதற்காகக் குறிசொல்லும் குழலுக்குள் அமர்ந்து வந்தாரா? என்னைப் பற்றி இவருக்கு எப்படித் தெரியும்?'

'உன்னை நான் அறிவேன் மோகனா! உன் பெயருக்கு ஏற்ற இனிய வடிவமும், கூர்மையான அறிவும் நாட்டு மக்களால் போற்றப்படும் குணமும் என்னைக் கவர்ந்து விட்டன இளவரசி! அதனால்தான் என்னைக் குறத்தி ஓவியமாகக் கரங்களில் ஏந்தி வந்தாள்!'

'அடடா! என் அழகை முன்பே அறிவாரா? எங்கு பார்த்தார்? தஞ்சைக்கு மாறுவேடத்தில் வந்தாரா? திருவிழாக் காலங்களில் கண்டாரா? கொலு மண்டபத்தில் பார்த்தாரா?'

'நான் அறிந்திருந்த அதே வடிவம்தான். ஆகா! நான் எப்படிப் புகழ்வேன். நான் தமிழ் கற்றேனில்லையே உன் அழகை வர்ணிக்க. ஜ்வலிக்கும் வேல்களை எங்கள் நாட்டு வீரர்களிடம் பார்த்திருக்கிறேன்; அவை உன் விழிகளுக்கு இணையாகுமா? என்ளுப்பூ உன் நாசியிடம் என் செய்யும்? கிளிகள் எப்படி உன்னைக் கண்டு சும்மாயிருக்கின்றன? இரண்டு கோவைப் பழங்களை அதரங்களாகக் கொண்டிருக்கிறாயே அவற்றைக் கொத்தித் தின்னாமல் விட்டு விட்டனவா! உன் முகம் மதிகண்டு மலர்ந்த அல்லியா? அல்லது தண்ணொளி வீசும் மதியேதானா? நான் கண்ட வடிவம் சரியாகத்தான் இருக்கிறது. நான் பாக்கியசாலி தான்.'

மோகனாவின் உடல் சிலிர்த்தது. தென்றல் தவழும் அந்த வேளையிலும் அவள் உடலெங்கும் ஏனோ வியர்த்து விட்டது. தன்னை வர்ணித்துப் பேசியது அந்த ஓவியம்தானா? அந்த ஓவியம் உயிர் பெற்று வந்து பேசுகிறதா அல்லது அந்த அறையில்தான் யாராவது மறைந்து நின்று பேசுகிறார்களா?

மோகனா மளமளவென்று அந்த ஓவியக் காகிதத்தைச் சுருட்டிப் பழையபடி அந்தக் குழாயிலேயே அடைத்து வைத்து விட்டாள். படுக்கையில் தலையணையின் அடியில் மறைத்து வைத்து விட்டாள்.

வானத்திலிருந்து சந்திரன் கீழே இறங்கி விட்டான். குளிர்ந்த காற்று சாளரத்தின் உள்ளே நுழைந்து கொண்டிருந்தது. எங்கோ விழித்துக் கொண்ட பறவையொன்றின் குரல் கேட்டது. நேரத்தை அறிவிக்கும் கால வட்டிலில் ஓசையெழுப்பும் ஒலி தெளிவாகக் கேட்டது. யானைக் கொட்டிலில் யானையொன்று பிளிறும் ஒலி கேட்டது.

மோகனாவுக்கு ஏதேதோ சிந்தனைகள். தலையணையில் சாய்ந்தாள். துயில் மெல்ல வந்து கண்ணைத் தழுவியது.

• • •

மதுரையினின்று சொக்கநாதர் குதிரையேறி விரைந்து வருகிறார். அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்த்தபோது அவர் வருவது தெளிவாகத் தெரிந்தது. அவரை மாளிகைக்குள் விடமாட்டார்களே! மேலும் மதுரை மன்னர் என்று தெரிந்தால் ஆபத்து நேர்ந்துவிடும். அவரை வடக்கு வாயிலுக்கு வருமாறு சொல்லி விடுவோம் என்று கமலியை அனுப்புகிறாள். கமலியும் விரைந்து சென்று சொக்கநாதரை வடக்கு வாயிலில் புன்னைமர நிழலில் காத்திருக்கச் சொல்கிறாள். மோகனா அவரிடம் விரைந்து செல்கிறாள்.

இருவரும் வெகு நாட்களுக்கு முன்பே அறிமுகமானவர்களைப் போல் ஒருவரோடொருவர் பழகுகிறார்கள். நந்தவனத்தில் தனிமையாக இடம் தேடி இருவரும் செல்கிறார்கள். கமலி காவலாக நின்று விடுகிறாள். யாரவாது வந்துவிடப் போகிறார்கள் என்று நந்தவனக் கதவுக்கருகே இருக்கிறாள்.

மரத்தடியில் மெத்தென்ற புல்வெளியில் இருபுறமும் மலர்ச்செடிகளும் கொடிகளும் சூழ்ந்திருக்க, தஞ்சை இளவரசியும் மதுரை மன்னரும் நேரம் போவது தெரியாமல் அமர்ந்திருக்கிறார்கள்.

"இளவரசி" என்று சொக்கநாதர் மோகத்தால் குழறியவாறு அழைக்கிறார்.

"நான் மதுரைக்கு வந்த பிறகும் இளவரசிதானா?" என்று மோகனா துவள்கிறாள்.

"ஆகா! மதுரைக்கு வந்த பிறகு மகாராணி. இந்த ஈரேழு புவனமும் உன் காலடியில்தான். நாட்டை நீயே ஆளுவதற்கு நான் விட்டு விடட்டுமா? ஒரு பெண்ணரசி ஏன் நாட்டை ஆளக்கூடாது. உன் தந்தைக்குப் பெரும் குறையொன்று உண்டு. தஞ்சையினின்று மதுரை வந்த ராணிகளை வெறும் அந்தப்புரத்துப் பதுமையாக நாங்கள் மதித்து நடத்தினோம் என்ற ஆத்திரம் உண்டு. அதைப் போக்குவதற்காக உன்னை அரசியாக்குகிறேன்" என்று சொல்லாமல் அவளை அர்ச்சித்தார்.

மோகனாவின் கன்னம் சிவந்தது. அதரம் துடித்தது. இடை துவண்டது.

"அரசே, எனக்கு இந்த மண்ணை ஆளும் பொறுப்பு வேண்டாம். தங்கள் இதயத்தில் வாழும் அரசியாக என்றென்றும் இருந்தால் போதும். உங்கள் இதய அரியணையில் நான் அமர்வேன். தங்கள் அன்பெனும் மகுடத்தை அணிந்து கொள்வேன். தங்கள் அரவணைப்பு என்னும் செங்கோலைத் தாங்குவேன்" என்றாள்.

ஆகா? அந்தக் கரங்களுக்குத்தான் எத்தனை வலிமை. வாள் சுழற்றும் அக்கரங்கள் வலிய அணைக்கும் தன்மை கொண்டிருக்கின்றன.

அந்த விசாலமான புஜங்கள் இரும்புக் கவசங்களை அணிந்து விரோதிகளைத் தாக்குவதற்கு மட்டுமல்ல, மெல்லிய முகத் தாமரையை அணைத்து மகிழவுந்தான் விரிந்திருக்கின்றன.

"தேவி நான் சென்று வரட்டுமா?"

"சென்று - நல்ல செய்தியுடன் வாருங்கள்!"

"என் மந்திரிப் பிரதானிகளை அனுப்புகிறேன். உன் தந்தையிடம் பெண் கேட்டுத் தூதனுப்புகிறேன். உன் தந்தை இசைந்தவுடன் ஐம்பது

யானைகள் வரை வைடூரியப் பெட்டகங்களைத் தாங்கி வரும். முப்பது ஒட்டகங்கள் முத்துப் பவளக் குவியல்களைச் சுமந்து வரும். இருபது குதிரைகள் பட்டுப் பட்டாடைகளைக் கொண்டு வரும். அவைகளை உன் காலடியிலே எனது வீரர்கள் காணிக்கை ஆக்குவர்.”

மோகனாவின் கண்களில் நீர் ததும்புகிறது. ஆனந்தத்தால் அவை ஆணி முத்துக்கள் என ஒளி வீசுகின்றன.

“காத்திருப்பேன் என் தெய்வமே!” என்கிறாள் இளவரசி மோகனா.

“என்னாலும் அதிகநாள் காத்திருக்க முடியாது. இன்னும் பத்துத் தினங்களில் நல்ல சேதி வரும். ஆனால், உன் தந்தையின் மனநிலை எப்படியோ?” என்கிறார் சொக்கநாதர்.

“என் தந்தையின் மனத்திலே நான் நல்லெண்ணம் விதைப்பேன். மலர்ச்சியுடன் தங்கள் மந்திரிகளை வரவேற்கச் செய்வேன்” என்று குதூகலத்துடன் கூறுகிறாள் மோகனா.

கையை அசைத்து விடை பெறுகிறார் சொக்கநாதர். அவர் உருவம் மறையும் வரை அங்கேயே நிற்கிறாள் சிலையென மோகனா.

திடீரென்ற எங்கிருந்தோ வானத்தில் கரியமேகம் திரள்கிறது. உலகமே அந்தகாரமாகிறது. மின்னல் ஆயிரம் கோடி சூரியர்கள் போல் ஒளிவீசுகிறது. அண்டம் குலுங்கும்படி இடி இடிக்கிறது. யானைத் துதிக்கையைப் போல் மழை பெய்கிறது.

'அவர் - அவர் - இந்தக் கால ஊழியில் தப்பிச் சென்றிருப்பாரா' என மோகனா வேதனைப்படுகிறாள்.

மீண்டும் உலகமே கிடுகிடுக்கும்படியான பேரிடி...

இளவரசி மோகனா 'ஆ'வென அலறுகிறாள்.

• • •

“தேவி, தேவி, என்ன, என்ன?” என்று பணிப்பெண்கள் ஓடிவருகிறார்கள்.

படுக்கையிலிருந்துத் துள்ளி எழுந்து உட்கார்ந்திருக்கிறாள் மோகனா. வியர்வையால் படுக்கை நனைந்திருக்கிறது. சூரியன் உதித்து ஒரு நாழிகையாகி விட்டதால் அந்த அறை முழுவதும் 'சுள்'ளென்று கதிரொளி படர்கிறது.

இளவரசி மோகனாவின் உடல் நடுங்கிக் கொண்டிருக்கிறது. இன்பக் கனவு ஏற்பட்டாலும் கனவின் கடைசியில் இடியும் மின்னலும் தோன்றி அவள் உள்ளத்தில் வேதனையைத்தான் நிற்க வைக்கின்றன. அவள் உடல் நடுங்குகிறது. முகத்தில் ஏனோ பயம்.

“கமலி, கமலி அந்த பவழமாலைக் குறத்தியிருந்தால் உடனே அழைத்து வா” என்று மோகனா நடுங்கும் குரலுடன் கூறுகிறாள்.

"காலையிலிருந்தே அவளைத் தேடுகிறேன் தேவி, காணவில்லை. அவள் தங்கியிருந்த இடத்திற்குப் பல முறை சென்று விட்டேன். நகரமெங்கும் தேடச் சொல்லி ஆட்களை அனுப்பியுள்ளேன்" என்கிறாள் கமலி.

இளவரசி, மோகனாவுக்கு இன்பக் கனவினால் மகிழ்ச்சி அடைவதா, கனவின் முடிவில் ஏற்பட்ட பயங்கர இயற்கை நிகழ்ச்சியால் வேதனை அடைவதா என்று புரியவில்லை.

அந்தச் சமயத்தில் அந்தப்புரத்திற்கு வெளியே பரபரப்பான குரல் கேட்கிறது. கமலி விரைந்துச் சென்று பார்க்கிறாள். அவள் அங்கு இருப்பவர்களிடம் நடந்த விஷயம் என்ன என்று அறிந்து வந்து இளவரசியிடம் மிகவும் பயந்த குரலில் கூறுகிறாள்.

"தேவி! பவழமலைக் குறத்தியையும், அவளுடைய புருஷன் சிங்களையும் அரசாங்கக் காவலர்கள் கைது செய்திருக்கின்றனராம். குறத்தியிடமிருந்த முத்துமாலை அரண்மனையிலிருந்து களவாடப் பட்டது என்று அவள் மேல் குற்றம் சாட்டியிருக்கின்றனராம். யாரும் அறியாமல் குறத்தி அந்தப்புறத்திற்கு வந்ததாகவும், அவள் திரும்பிப் போகும்போது கூடப் பார்த்தாகவும் இங்குள்ள பணிப்பெண் ஒருத்தி சாட்சி சொல்லியிருக்கிறாள். இப்போது என்ன தேவி செய்வது?"

மோகனா சற்று நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல், "இதோ நானே சென்று குறத்தியையும் அவள் கணவனையும் விடுதலை செய்துவிட்டு வருகிறேன்" என்று புறப்படுகிறாள்.

# 25. நாடும் நங்கையும்

திருமலை நாயக்கர் கட்டி வைத்த மாபெரும் மாளிகையின் மேல்மாடத்தில் நின்று பார்த்தால் வைகை நதி தன் வெண்மலர் பரப்புகளை அகல விரித்தாற் போல் நீண்டு வளைந்து செல்லும் தோற்றம் நன்கு தெரியும். மறுபுறம் பார்த்தாலோ வண்டியூர் தெப்பக்குளத்தினிடையே வசந்த மண்டபத்தைத் தனது கண்போல் கொண்டு திகழும் தோற்றம் தெரியும். இன்னொரு புறம் பார்த்தால் திருப்பரங்குன்றத்து மலையும் தெரியும். இரவென்றால் மலைமீது முருகன் கோபுரத்தில் ஏற்றி வைத்த அணையா சோதி விளக்குகளும் தெளிவாகத் தெரியும். சொக்கநாதர் இந்தக் காட்சியைப் பலமுறை கண்டிருக்கிறார். மாளிகையிலிருந்து கூப்பிடு தொலைவுள்ள வானை எட்டிவிடுமோ என்று வியக்கத்தக்க அரங்கையர்க் கண்ணி அம்மையின்கோயில் கோபுரத்தையும் அவர் பல முறைகள் கண்டு

மகிழ்ச்சியடைந்திருக்கிறார். ஆனால், இன்று அவர் அடையும் களிப்பும் வியப்பும் தனிப்பட்ட விருந்தாகத்தான் இருந்தன. அவர் உள்ளம் குதூகலத்தால் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இன்றைய தினம் கொலு மண்டபத்திற்குச் சென்று அவசர அரசியல் காரியங்களைக் கவனிப்பதற்குக் கூட அவர் முயலவில்லை. 'தன்னைக் காண்பதற்குக் கிருஷ்ணப்ப நாயக்கர் காத்திருக்கிறார்' என்ற செய்தியைக் காவலன் வந்து தெரிவித்ததும் அவர் கிருஷ்ணப்பரை அழைக்கவில்லை. அதற்கு மாறாக அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நபரே வேறு.

வடக்கே சென்றிருந்த அவரது உயிர் நண்பன் செவ்வந்தி எப்படியும் வந்துவிடுவான் என்ற நம்பிக்கை அவர் உள்ளத்தே துளிர்த்துக் கொண்டிருந்தது. அதுவும் இன்றைய தினம் அவன் வந்து நல்ல செய்தியைச் சொல்லிவிடுவான் என்று உள்ளுணர்வு ஏதோ அவருக்கு உணர்த்திக் கொண்டிருந்தது. அதனால் மேல்மாடக் கூடத்திலிருந்து வாயில் வழியே மாளிகைக்குள்ளே வருபவர்கள் யாராக இருக்க முடியும் என்பதைத் தனது கூரிய கண்களால் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார். சுற்றுப்புறக் காட்சிகளைப் பார்ப்பதும் வெளி வாயிலைக் காண்பதுமாக அவர் நிலைக்கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தார். பகல் பொழுதெல்லாம் கழிந்து மாலையும் வந்து மறைந்து எங்கும் இருள் சூழத் தொடங்கிய பிறகு - கோவில் கோபுரங்களிலே விளக்குகளின் ஒளி வீசத் தொடங்கிய பிறகு - அவர் மட்டும் அந்த இடத்தை விட்டு நகராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று புரியாமல் அனைவரும் திகைத்துக் கொண்டிருந்தனர்.

பார்ப்பதற்குச் சாதுபோல் இருந்தாலும் சொக்கநாதரைத் திடீரென நெருங்கி அவர் கவனத்தைத் திருப்பி அவரிடம் பேசுவதற்கே யாரும் துணியமாட்டார்கள். ஏனெனில் அவர் சிந்தனையிலே எண்ணத்திலே ஆழ்ந்து இருக்கும்போது அச்சிந்தனையைக் கலைப்பவர்கள் யாராய் இருந்தாலும் அவர் சீறி விழுவார். 'இளம் வயது தானே முதிர்ந்த அறிவு இருக்குமோ?' என்று தனது அறிவையெல்லாம் அவர் மீது ஆட்சி செலுத்த நினைக்கும் முதியவர் கூட அவரிடம் சட்டென்று நெருங்கிப் பேசத் துணியமாட்டார்கள். அவருடைய மிகப் பக்கத்திலேயே அவருடைய மனத்தை அறிந்து கொள்ளக் கூடியவர் அமைச்சர் கிருஷ்ணப்ப நாயக்கர்தான். கிருஷ்ணப்ப நாயக்கர் வருகிறார் என்றால் மன்னர் சொக்கநாதர் தனக்கு எப்படிப்பட்ட துயரமோ வேதனையோ அல்லது ஆழ்ந்த சிந்தனையோ எதில் ஈடுபட்டு இருந்தாலும் அதை எள்ளளவும் பொருட்படுத்தாமல் நாயக்கரை முகமலர்ச்சியுடன் வரவேற்பார்.

அவர் இத்தகைய பெரும் அரசுக் கட்டிலில் ஏறுவதற்கு உறுதுணையாய் இருந்தவர் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர்

கிருஷ்ணப்ப நாயக்கர்தான். அவரைத் திருநெல்வேலிச் சிறையிலே அடைத்து மாற்றார்கள் துன்புறுத்திய காலம் உண்டு. அவரை அழித்து விட்டால் சொக்கநாதர் மீளமாட்டார் என்ற உறுதியான எண்ணத்துடன் அப்போதிருந்த இராயசமும், பிரதானியும் அழிவு வேலை செய்யவிருந்தனர். கிருஷ்ணப்ப நாயக்கர் இல்லாவிட்டால் அவ்வளவு இளம் பருவத்திலே மதுரைப் பெரு நாட்டை ஆட்சி செலுத்தக்கூடிய துணிவு சொக்கநாதருக்கு வந்திருக்காது. அந்த நல்ல நினைவைச் சொக்கநாதர் மறக்கவேயில்லை. அதனால்தான் தனக்கு எப்படிப்பட்ட வேதனையோ குண மாறுபாடோ இருந்தாலும், தன்னை அச்சமயம் ஒருவரும் நெருங்காது இருப்பதே நல்லது என்ற எண்ணம் அவருக்கு இருந்தாலும், கிருஷ்ணப்ப நாயக்கர் வந்து விட்டால் தன்னுடைய மற்ற உணர்ச்சிகளை எல்லாம் மாற்றிக் கொண்டு விடுவார்.

அன்றும் அவர் எதிர்பார்த்திருந்த செவ்வந்தி இன்னும் வரவில்லை என்ற பரபரப்புக்குள்ளாகியிருந்தும் கிருஷ்ணப்ப நாயக்கர் கீழ்க் கூடத்திலே அவசரமாக செய்தி ஒன்றைச் சொல்வதற்காக வந்திருக்கிறார் என்ற தகவல் தெரிந்திருந்தும் சொக்கநாதர் அவரை அழைக்கவில்லை.

எவ்வளவு நேரம்தான் கிருஷ்ணப்பர் பொறுமையுடன் காத்திருக்க முடியும்? மேல் மாடம் ஏறிவந்து விட்டார். மங்கிய இருளில் பெரும் மாளிகையைக் காவல் காக்கும் வீரனைப் போல் மாடத்து முகப்பிலே குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக் கொண்டிருக்கும் சொக்கநாதரை அவர் அணுகினார்.

அந்தப் பொழுதில் அவரிடம் வேறு யாராவது அங்கு வந்திருந்தால், அருகில் நெருங்கியிருந்தால் தொண்டையைக் கனைத்திருந்து பேசமுற்பட்டிருந்தால் அவர்களது நிலை வேறுவிதமாக இருந்திருக்கும். ஏனெனில், சொக்கநாதரின் உள்ளம் அப்போது புதுவித உணர்ச்சியில் மூழ்கியிருந்தது.

தஞ்சை சென்ற தனது நண்பன் அந்த அழகியைச் சந்தித்திருப்பான். அவள் உள்ளத்தை அறிந்திருப்பான். தன் கருத்தையும் தான் கொண்டிருக்கும் பருவ தாபத்தையும் அவளிடம் தெரிவித்திருப்பான்.

அவள் மனத்தையும் அறிந்து, அவளுக்குத் தன் மேலுள்ள காதலையும் அறிந்து இருப்பான். அந்த நல்ல செய்தியைக் கூறுவதற்காக விரைந்து ஓடிவந்து தன்னிடம் சொல்லப் போகிறான் என்ற எண்ணத்தில் அவர் அதே நினைவில் மேல் மாடத்திலே நின்று, உலவிக் கொண்டிருக்கும் போது சிந்தனை இதயத்திலே தங்க, அந்தச் சுமையோடு காதல் வீரனைப் போல் உலவிக் கொண்டிருக்கையில் - அதைக் குலைக்க - மாற்ற வேறு ஒருவர் வருகிறார் என்றால் அவருக்கு

சீற்றம் வராமல் என்ன செய்யும்? ஆனால் கிருஷ்ணப்ப நாயக்கர் தன் அருகே நெருங்கிவிட்டார் என்று தெரிந்தவுடன் சொக்கநாதரால் சும்மாயிருக்க முடியவில்லை. தனது மன உணர்ச்சியை மாற்றிக் கொண்டு அவரை, "வாருங்கள், நீண்ட நேரமாக நீங்கள் காத்திருக் கிறீர்களோ?" என்று அழைத்தார்.

"எனக்கு நேரம் பெரிதல்ல. ஆனால், இருக்கும் சூழ்நிலையில் ஒவ்வொரு நொடியும் இனி மிகப் பெரிதாகத் தான் இருக்கும் போல் தோன்றுகிறது அரசே" என்று கிருஷ்ணப்ப நாயக்கர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

அந்தக் குரலில் தன்னைக் காக்க வைத்து விட்டாரே என்ற சீற்றமும் சேர்ந்து இருந்தது. ஆனால் தன் மகனைப் போல் ஒவ்வொரு நொடியும் சொக்கநாதரைப் பரிபாலித்து வரும் கிருஷ்ணப்பருக்கு அந்தச் சீற்றம் பெரிதாகத் தோன்றவில்லை. எனினும் தான் தன்னிடம் இருக்கும் அவசரக் காரியத்தை அரசரிடம் உறுதிப்படுத்துவதற்காக அவர் அழுத்தமாக மொழிந்தார்.

கிருஷ்ணப்பரின் குரலில் இருந்த வேற்றுமையை அறிந்து கொண்ட சொக்கநாதர், தான் ஆவலுடன் காத்திருக்கும் உணர்ச்சியையும் புலப்படுத்திக் கொள்ளாமல், "ஏதோ ஒரு நினைவில் நீங்கள் வந்திருப்பதை அறியாது இருந்துவிட்டேன். அமைச்சரே, பொறுத்தருள வேண்டும். அவசரம் என்று ஆளிடம் சொல்லியிருந்தால் நானே விரைந்து வந்திருப்பேனே" என்று ஏதேதோ வார்த்தைகள் கூறி கிருஷ்ணப்பரின் கோபத்தை மாற்ற முயன்றார்.

"என்னுடைய நோக்கம் எல்லாம் வடக்கே இருந்து ஒரு செய்தியை எதிர்பார்த்திருந்தது. அதே நினைவில் நான் ஆழ்ந்திருந்தமையால் தங்களைக் கவனிக்க முடியாமல் போய் விட்டது" என்று சிறிது புன்முறுவலுடன் சொக்கநாதர் சொன்னார்.

"வடக்கிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த செய்தி நீங்கள் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே எனக்குக் கிடைத்து விட்டது" என்றார் கிருஷ்ணப்பர்.

சொக்கநாதர் ஒரு கணம் திடுக்கிட்டார். தஞ்சைக்குச் சென்ற செவ்வந்தி தான் சென்ற காரியத்தின் முடிவைத் தன்னிடம் வந்து சொல்லாமல் முடிவைக் கிருஷ்ணப்பரிடம் சொல்லி இருப்பானோ? கிருஷ்ணப்பருக்கும் சொல்லாமல் தான் ரகசியமாக அனுப்பிய செவ்வந்தி தன்னை இக்கட்டான நிலையில் சிக்கவைத்து விட்டானே என்று ஒருகணம் ஐயமும் அச்சமும் உற்றார் சொக்கநாதர். அதே பார்வையுடன் கிருஷ்ணப்பர் மிகவும் அமைதியான குரலில், "வடக்கிருந்து நீங்கள் எதிர்பார்த்த செய்தி நாங்கள் எதிர்பார்த்ததை

விடப் பயங்கர உருவெடுத்து வந்து விட்டது" என்று கூறவும் சொக்கநாதர் தன்னை அறியாமல் "ஆ" என்று கூவிவிட்டார்.

அழகு வடிவானவளின் இதயத்தைப் புரிந்துவர அவர் ஆள் அனுப்பினார். அது பயங்கரமாக உருவெடுத்து வந்து விட்டது என்றால் தன் காதல் உணர்ச்சியில் மண் விழுந்து விட்டதா? தன்னைத் தஞ்சை இளவரசிக்குப் பிடிக்காமல், தான் அனுப்பிய தூதுவன் நடந்து கொண்ட முறை பிடிக்காமல் அவனை இளவரசி அவமதித்து அனுப்பி விட்டாளா? அல்லது தஞ்சை மன்னர் செவ்வந்தியைச் சிறையிட்டுத் தனக்கு அவமானம் விளைவிக்குமாறு செய்திருப்பாரா? என்று பலவித கேள்விகளால் அவர் உள்ளம் சலனமுற்றது.

"ஏன்? தஞ்சையிலே ஏதாவது அவமதிப்பு நேர்ந்து விட்டதா?" என்று பரபரப்புடன் கேட்டார் சொக்கநாதர்.

அரசரின் பரபரப்பும் அவர் "ஆ" என்று தன்னை அறியாமல் கூவி அச்சத்தைப் புலப்படுத்தும்படி ஒலித்ததும் கிருஷ்ணப்பருக்குத் தெளிவாகப் புரியாவிடினும் சொக்கநாதர் உள்ளத்திலே ஏதோ ஒருவித சஞ்சலம் இருக்கிறது; அது நாட்டைப் பற்றியதாய்த்தான் இருக்கும் என்று எண்ணினார்.

ஆனால், அவர் உள்ளத்தில் நங்கையைப் பற்றிய ஆர்வமும் ஆவலும் அவசரமும் இருக்கும் என்று கிருஷ்ணப்பர் நினைக்கவில்லை. தஞ்சை அரசருக்கு அழகான பெண் ஒருத்தி திருமணத்திற்கு ஏற்ற பருவத்துடன் இருக்கிறாள் என்ற எண்ணமே அவருக்கு இல்லாமல் போய்விட்டது. விஜயராகவருக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்று அவர் அறிந்திருந்தால் முன்கூட்டியே அவர் திட்டமிட்டு அப்பெண்ணைச் சொக்கநாதருக்கு மணம் முடித்துக் கொடுப்பதன் மூலம் தஞ்சைக்கும் மதுரைக்கும் முன்பு இருந்த உறவை மீண்டும் ஒன்று சேர்த்து இரு நாயக்கர் நாடுகளையும் தென்பெண்ணை முதல் கன்னியாகுமரி வரை விரிந்து பரந்து கிடக்கும்படியான திட்டத்தை வகுத்திருப்பார். அவரது திட்டமும் பேராசையும் எவ்வளவோ. தஞ்சையிலே வாழ்ந்து நாடுபோற்றும் நல்ல அமைச்சராகத் திகழ்ந்த அப்பய்ய தீட்சதரைப் போல் தானும் மதுரையில் சிறந்த அமைச்சர் என்று நாடு போற்ற வேண்டும். அதற்குத் தக்கபடியான செயல்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு நெடுநாட்களாக உண்டு. தன் பெயர் தனக்குப் பிறகும் நாட்டிலே வாழ வேண்டும். அதற்கு அழியாத செயல் ஏதாவது செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் கனவு காண்பார். தஞ்சை அரசருக்கு கன்னிமலர் ஒருத்தி மகளாக இருக்கிறாள் என்பதை அறிந்திருந்தால் அம்மலரைக் கொண்டு வாடாத ஒரு பெரும் மாலையைத் தொடுத்து அதன் மூலம் இரு நாடுகளையும் பிணைப்பார். அரசாங்க அலுவலிலேயே தன்னுடைய சிந்தனையைச் செலுத்தி

இருந்ததால் தஞ்சைபுரி மோகினி அவர் கண்ணிலே படாமல் போய் விட்டாள்.

அதனால் சொக்கநாதர் தஞ்சையிலிருந்து அழகியைப் பற்றிய செய்தியை எதிர்பார்க்கிறார் என்பதை அறியாமல் அரசியலைப் பற்றிய செய்தியை எதிர்பார்க்கிறார் என்ற எண்ணத்தில், "தஞ்சைக்குத் தூதுவரை யார் அனுப்பியது? நாம் தூது அனுப்பாமலே நம் பெயரைக் கெடுப்பதற்கு நாம் ஏற்கனவே சிறைப்படுத்தாமல் விட்டு வைத்திருக்கும் முன்னாள் தளபதி லிங்கமன் வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறானே; செஞ்சியிலிருந்து ஏகோஜியை அழைத்துக் கொண்டு தஞ்சை அரசர் விஜயராகவரிடம் அவன் சென்றிருக்கிறான். அவரும் அவனுக்கு உதவி புரிய வாக்கு அளித்து விட்டாராம். அவருடைய படை உதவியும் செஞ்சியின் பொருள் உதவியும் சேர்ந்து விரைவிலே திருச்சிராப்பள்ளி மீது படை எடுக்கும் படியான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது. பெருமளவில் 15,000 வீரர்கள் திருச்சியிலுள்ள நமது கோட்டையை முற்றுகையிடுவதற்காக அணிவகுத்து செஞ்சியிலிருந்து புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம். இந்தச் செய்தி எனக்குக் கிடைத்த உடனே தங்களிடம் விரைந்து வந்தேன். நீங்கள் அதைத்தானே எதிர்பார்த்தீர்கள் அரசே" என்று கிருஷ்ணப்பர் மெல்லக் கேட்டவுடன், சொக்கநாதருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

"ஆம்; எதிர்பார்த்தது ஒன்று. கிடைத்த செய்தி வேறொன்றாக இருக்கிறது" என்ற சொக்கநாதர் முணுமுணுத்தார்.

தான் எதிர்பார்த்ததைக் கிருஷ்ணப்பரிடம் சொல்லாமல் இருக்க முடியுமா? சொல்லாமல் இருந்து பிறகு அது வெளிப்பட்டால் தன்னை அவர் பிற்காலத்தில் நம்புவாரா? தக்க சமயத்தில் தமது அரிய கருத்துரைகளை வழங்கி நல்ல வழியில் திருப்ப முற்படுவாரா? என்றெல்லாம் ஒரு கணத்திலே சொக்கநாதருக்குக் கவலையைத் தோற்றுவித்தது. பிறகு சொல்லப் போவதை இப்பொழுதே சொல்லிவிடுவது நல்லது என்ற காரணத்தால் சொக்கநாதர் தட்டுத்தடுமாறி, 'அமைச்சரே, நான் எதிர்பார்த்ததில் இந்தச் செய்தியும் ஒன்று. ஆனால் விரைவில் எதிர்பார்த்தது விரோதிகளின் சூழ்ச்சி அன்று. வடிவழகியின் சம்மதமே" என்றார் புதிர் போடுவது போல்.

"வடிவழகியா?" ஒரு கணம் கிருஷ்ணப்பருக்கு ஒன்றும் தோன்ற வில்லை. சொக்கநாதருடைய குணத்தைப் பற்றி அவருக்குத் தெரியும். இளம் பருவ வயது. அந்தப் பருவத்திலே மதுரை நகரத்தில் அவர் கண்ணசைத்தால் அவர் காலடியில் வந்து விழக்கூடிய காரிகைகள் அநேகம் பேர் உண்டு. இச்சைக்காக மட்டுமே பல மங்கையரிடம் செல்வது என்றால் செல்ல முடியும். ஆனால் சுகபோகங்களின்

நினைவே இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தையும், சூழ்ச்சிக்காரர்களின் சதிகளையும், விரோதிகளின் படையெடுப்பையும் முறியடிப்பதற்காக அதே நினைவில் இருப்பவருக்கு உல்லாசக் கேளிக்கைகள் நினைவுக்கு வருவதே இல்லை. அதனால் தான் "அழகி" என்று அவர் சொன்னவுடன் கிருஷ்ணப்பநாயக்கர் திடுக்கிட்டார். அரசருடைய நினைவு அழகிகளிடம் செல்கிறது என்றால் அவருக்கு விரைவிலேயே திருமணத்தை முடித்தால்தான் அவர் தவறான பாதையிலே விழுவதற்கு முன்பு திருத்திவிட முடியும் என்ற எண்ணம் பளீர் என்று தோன்றியது. ஆனால், அதைப் பற்றி இந்த வேளையில் அவருக்கு அறிவுரை சொல்வதோ, திட்டங்கள் தீட்டுவதோ முடியாது. அதை மற்றொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துவிட்டு, "அழகி என்று என்னமோ சொல்ல வந்தீர்களே அரசே, சொல்லுங்கள்" என்று கேட்டார்.

சொக்கநாதரின் முகத்திலே வாட்டம்தான் தோன்றியது. கிருஷ்ணப்பர் வயது முதிர்ந்தவர். தனது தந்தையைச் சொக்கநாதர் சரிவரப் பார்த்த நினைவுகூட இல்லை. ஆனால், கிருஷ்ணப்பருடைய அறிவும் ஆற்றலும், அன்பும் ஒரு தந்தைக்கு மேலாக அவரை உயர்த்தின. அதனால் தந்தை போன்ற மதிப்புடைய ஒருவரிடம் தான் கொண்ட காதலைப் பற்றி எப்படிச் சொல்வது என்று ஒரு கணம் திகைத்தார். எனினும் அரசருடைய காதல் என்றாலும் அது நாட்டின் உயர்வு தாழ்வையும் பாதிக்கும் என்ற நினைப்பினால் மூடி மறைப்பதை - தள்ளிப் போடுவதை விரும்பாமல், "அமைச்சரே, தங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று ஒரு வாரமாக நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். மறைக்க முடியவில்லை. ஆனால், வெட்கத்தினால் தள்ளிப் போட முயன்றேன். தஞ்சைக்கு நான் எனது உயிர் நண்பர் ஒருவரை அனுப்பினேன். அவர் வரவைத் தான் இப்பொழுது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

"அவர் கொண்டுவரப் போகும் செய்தியும் அழகியைப் பற்றியதுதான். நான் 'அழகி அழகி' என்று உங்கள் எதிரே சொல்வது எனக்கு வெட்கத்தைக் கொடுக்கிறது.

"தஞ்சையின் இளவரசி என் இதயத்திலே அறியாமல் இடம் கொண்டுவிட்டாள். அவளை நான் பார்க்கவில்லை. ஆனால், அவளுடைய ஓவியத்தை வரைந்து, முதியவர் ஒருவர் என்னிடம் கொடுத்தார்.

"அதைப் பார்த்தவுடன் நான் அவள் அழகில் வசப்பட்டு விட்டேன். அவள் தஞ்சை இளவரசி என்று அறிந்த பிறகும் விரோதியின் மகள் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் அவள் நினைவை இதயத்திலிருந்து மாற்ற முடியவில்லை.

"ஏன் அப்படி முன்பின் பார்த்திராத ஒருத்தியைச் சித்திரமாகத் தீட்டிக் கொண்டு ஒருவர் கொண்டு வந்து கொடுத்தார்? அதைப் பார்த்தவுடனே நான் ஏன் மனத்தை நெகிழ விட்டு விட்டேன்? எவ்வளவோ பெண்களை நான் பார்த்து இருக்கிறேன். மதுரையில் இல்லாத அழகிகளா? எனினும் தஞ்சையிலிருந்து வந்த இளவரசியின் எழில் உருவம் என்னை ஏனோ மயக்கி விட்டது.

"அதனால் என்னுடைய தாபத்தை எனது உயிர் நண்பன் செவ்வந்தியிடம் சொன்னேன். ஒரு துறைக் காதலாக இருந்தால் பலிக்குமா? என் வேண்டுகோளுக்கிணங்க தஞ்சை இளவரசியின் எண்ணம் என்ன என்பதை அறிந்து வரச் செவ்வந்தி உறுதி பூண்டு சென்றிருக்கிறான்.

"இதுகாறும் அவன் அவளைச் சந்தித்திருப்பான். நல்ல செய்தியோ அல்லது வேதனைப்படும் செய்தியோ எதுவாய் இருந்தாலும் அவன் கொண்டு வருவான் என்று தான் நான் இன்று காலையிலிருந்து எப்பணியிலும் சிந்தனையைச் செலுத்தாமல் மேல் மாடத்தில் உலவிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வந்து வடக்கிலிருந்து வந்த செய்தி என்று சொன்னவுடன் தஞ்சை இளவரசியிடமிருந்து கொண்டு வந்த செய்திதான் என்று எண்ணி ஆவலுடன் உங்கள் முகத்தைப் பார்த்தேன். ஆனால் உங்களுக்குத் தெரியாத செய்தியை நான் எதிர்பார்த்தது அரசியல் மறைக்கு ஏற்றது அன்றுதான். நான் ஒன்று எதிர்பார்க்க, வந்த செய்தியோ என் இதயத்தில் ஒருவித வேதனையை உண்டு பண்ணிவிட்டது" என்றார் சொக்கநாதர்.

கிருஷ்ணப்ப நாயக்கர் அரசரின் முகத்தை இமைக்காது உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு இன்னும் அரசர் குழந்தை உள்ளம் படைத்தவராகத்தான் இருந்து வருகிறார் என்பதை உறுதி செய்து கொண்டு, சொக்கநாதரை நோக்கி, "அரசே, காதலும் போரும் என்றுமே ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவை. நீங்கள் காதலில் ஈடுபடாமல் இருந்தால் போரில் மட்டுமேதான் இன்னும் சிலகாலம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டியிருக்கும். இப்பொழுது காதலில் ஈடுபட்டு விட்டீர்கள். அந்தக் காதல் போரைக் கொடுக்கும். அதனால் இன்னும் போருக்குத்தான் வலிமை அதிகமாகப் போகிறதே ஒழிய நமக்குத்தான் மேலும் வலிமை அதிகமாகப் போகிறதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. தாங்கள் அனுப்பிய தூதுவருக்கு என்ன கதி நேர்ந்ததோ என்ற ஒரே ஒரு அச்சம்தான் எனக்கு இருக்கிறது. ஆனால் அதுவே நமக்குப் போதுமான காரணமாகும். தஞ்சை அரசருடைய சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு இந்த ஒரு சிறு காரியத்தையே நாம் பெரிதாகக் கொள்ள முடியும். தஞ்சை அரசருக்கு அழகிய பெண் இருக்கிறாள் என்று எனக்கு முன்பே தெரியாமல் போனது எனது

அரசியல் தந்திரத்தின் குறைபாட்டைத்தான் காட்டுகிறது. இப்பொழுது ஒன்றும் மூழ்கிவிடவில்லை. காலம் கடந்து விடவில்லை. தங்கள் நண்பர் செய்தி கொண்டு வருகிறாரா என்பதைப் பார்ப்போம். அதற்கிடையே நாமும் செய்தியை அறிய முற்படுவோம். காதல் அரும்பு உங்கள் இதயத் தடாகத்திலே மெல்ல மெல்லப் பூக்கட்டும். ஆனால் அதே சமயத்தில் சூறாவளியைப் போல் எழுந்து மலர்க் கொடியை வெட்ட முயலும் சதியை முளையிலேயே கிள்ளி எறிவதற்கான தயக்கத்தை நமது விரோதி லிங்கமனும் ஒன்று சேர்ந்து தாக்கவரும் இவ்வேளையில் காதல் நினைவு ஒன்றை மட்டும் கொண்டிருக்காதீர்கள். உடனடியாக நாம் நமது படை வீரர்களைத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள்" என்றார்.

சொக்கநாதர் நொடியில் தான் கொண்டிருந்த உணர்ச்சி களையெல்லாம் மாற்றிக் கொண்டு போர் ஆவேசம் கொண்டவர் போல், "திருச்சியைத் தாக்குவதற்குத் துணிந்தவர்கள் தங்களது தலைவிதியை நிச்சயம் அறிந்து கொண்டார்களோ?" என்று கர்ஜித்தார்.

கிருஷ்ணப்பர் வியப்புடன் பார்ப்பதைக் கண்ட அரசர், திருச்சிக் கோட்டையிலே ஆள் பலமும் குறைவுதான். ஆனால் வெடி மருந்து ஏராளமாக சேர்த்து வைத்திருக்கிறோம் என்பது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ஆயிரம் பேர் செய்யக்கூடிய வேலையை ஒரு பீரங்கி செய்யும் என்பதை நாம் பேசிக் கொண்டிருந்தபோது வெள்ளைகாரப் பாதிரியார் ஒருவர் சொன்னதை நீங்கள் இன்னும் மறக்க வில்லையே; வெடி மருந்தை ஏன் வீணே சேமித்து வைத்திருக்கிறோம் என்று நான் நினைத்தது உண்டு. அந்த வெடி மருந்துக்கெல்லாம் இப்பொழுதுதான் வேலை வந்து விட்டது. அடங்கியிருக்கும் அதன் அடங்காத பசி உணவை அறிந்து இந்த மருந்துகளை உபயோகிக்க ஒரு சில கைதேர்ந்த வீரர்களை நாம் இங்கிருந்து அனுப்புவோம். கோட்டையை நோக்கி நெருங்கும் வீரர்களை நோக்கிக் குண்டு வீசுவோம்: அதை அறியாமல் அவர்கள் வாள்களையும், வேல்களையும் கொண்டு நம்மைத் தாக்க வருவார்கள். பாய்ந்து வரும் தீ நாக்கு எதிரே அது எப்படி நடக்கும் என்பதைப் பார்த்து விடுவோம்" என்றார்.

அவரது வீரத்தையும் ஆவேசம் பிடித்தவர் போல்பேசியதையும் கேட்டு கிருஷ்ணப்ப நாயக்கரே ஒருகணம் அசந்து விட்டார்.

காதல் போதை ஏறியவர்களுக்குக் கண்பார்வை மங்கிப் போய் அறிவு கலங்கிப் போய் எவ்விதக் காரியத்திலும் நாட்டம் செல்லாமல் இருக்கும் என்று அவர் எண்ணி ஒருகண நேரம் முன்பு அஞ்சியது போக, சொக்கநாதர் இன்னும் பூரண நினைவுடன் இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தார்.

"தாங்கள் சொல்லியபடியே இன்று இரவே திறமை வாய்ந்த வீரர்களைத் திருச்சியை நோக்கி விரையும்படி செய்கிறேன். தங்களுடைய மற்றொரு கோரிக்கையைப் பற்றிச் சிந்தித்து அதற்கான வழி வகைகளைச் செய்கிறேன்" என்றார்.

"என்னுடைய மற்றொரு கோரிக்கையா? எதைச் சொல்கிறீர்கள் அமைச்சரே!" என்று வினவினார் சொக்கநாதர்.

"நான் கிழவனானாலும் இளம்பிள்ளையின் வயது உணர்ச்சியை மதிக்காது நடப்பவன் அல்லன். இளம் உள்ளத்தில் அரும்பி நிற்கும் புது மலரை நான் கசக்க முற்பட்டேனானால் அதனால் நான் நாட்டிற்கே பெரும் தீங்கு செய்தவன் ஆவேன். சிங்காதனம் இருக்கும் மண்டபத்தைக் கடந்து வரும் ஒவ்வொரு பொழுதும் நான் அந்த அரியணையின் ஒரு பக்கம் அலங்கரிக்கப்பட வேண்டியவர்களால் அலங்கரிக்கப்படாமல் இருப்பதை உணர்கிறேன். கொலு மண்டபத்திலே பேரறிஞர்களும் அறவோர்களும் கூடி இருக்கும் பொழுது தாங்கள் மட்டும் அரியணையின் நடுவே அமர்ந்து இருக்கையில் ஏதோ ஒன்று குறைபடுவது போல் தோன்றுவதை நான் கவனிக்காமல் இல்லை. முடிசூட்டு விழா வைபவத்தைப் போன்று மதுரை நகர மக்கள் மற்றொரு பெரும் விழாவைக் காணும் ஒரு வாய்ப்பு ஏற்படாமல் இருப்பது யாருடைய குறை என்று நினைக்கிறீர்கள்? அது என்னுடைய குறைதான்" என்றார் கிருஷ்ணப்பர்.

"எதைச் சொல்கிறீர்கள் அமைச்சரே" என்று முகத்திலே சந்தேகத்தைக் கேள்வியாகப் போட்டு கொண்டு அரசர் கேட்டார்.

கிருஷ்ணப்பர், "திருப்பித் திருப்பி, நான் எதைச் சொல்ல முடியும்? இப்போது அரசே அரசே என்று மட்டும் தான் அழைக்கும் நிலை இருக்கிறது. 'அரசியாரே! மகாராணியாரே!' என்று கூப்பிடும்படியான ஒரு வாய்ப்பையும் எனக்கு ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய கடமை எனக்கு அல்லவா இருக்க வேண்டும். அதை நான் உணர்ந்து விட்டேன். அதைப் பற்றிப் பேசி ஒரு முடிவு செய்து முடிக்க நாளை வருகிறேன்" என்று கூறி சொக்கநாதருடைய பதிலுக்குக் காத்திராமல் விரைந்து சென்று விட்டார் கிருஷ்ணப்பர். அவர் நினைவிலே திருச்சியை நோக்கி வந்து கொண்டிருக்கும் கடல் போன்ற எதிரிகளின் படைகள் அலை ஓசைபோல் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஆனால் சொக்கநாதரோ கிருஷ்ணப்ப நாயக்கர் சென்றவுடன் தஞ்சையிலிருந்து இன்னும் வராத தனது நண்பன் செவ்வந்தியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். செவ்வந்தி தஞ்சைக்குச் சென்றிருப்பானா? இளவரசியைக் கண்டிப்பானா? தன்னுடைய கருத்தை அவளிடம் கூறி அவள் இதயத்தை அறிந்திருப்பானா?

என்றெல்லாம் அவருக்கு அச்சம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. 'தஞ்சை அரசரிடம் அவன் சிக்கிக் கொண்டு விட்டால் அவர் அவனை படாத பாடுபடுத்தி பாதாளச் சிறையில் அல்லவா தள்ளி இருப்பார்?' என்று எண்ணும்போது அவருடைய உடல் நடுங்கியது. நடுக்கமே துணிவாக மாறியது. தன்னுடைய நண்பனுக்கு அப்படி ஒரு தீங்கு செய்யத் தஞ்சை மன்னர் முற்பட்டிருந்தால் அதனால் அந்த நாட்டையே அழித்துவிடக் கூடிய பலம் அவரிடம் இருக்கிறது. இப்படி நினைத்தவுடன் சொக்கநாதருக்கு வேறு எதிலும் கவனம் செல்லவில்லை. அந்த நேரத்திலே தன் நண்பன் வந்தாலும் தன்னை எழுப்புமாறு பணி ஆட்களுக்குக் கட்டளை இட்டுவிட்டுத் தனது அந்தரங்க அறைக்குச் சென்று விட்டார். ஆனால், தஞ்சையில் நடந்ததோ வேறுதான்.

# 26. அசலும் நகலும்

"ஏய்! குறத்தி, எனக்குக் குறி சொல்லுவாயா?" என்று பவழமலைக் குறத்தியை நோக்கிச் சிவகங்கைத் தோட்டத்துக்கு அருகாமையில் நின்று கொண்டு இருந்த குதிரைக்காரன் ஒருவன் கேட்டான்.

அவள் சாதாரண குதிரைக்காரன்தானே என்று கருதி அவனை நோக்கிப் புன்முறுவல் புரிந்துவிட்டுப் பதில் ஏதும் சொல்லாமல் மேலே தன் வழியே செல்ல முற்பட்டாள். அரண்மனையிலிருந்து இளவரசிக்குக் குறி சொல்லிவிட்டு அவள் நேரே தன்னுடைய காதலன் தங்கியிருக்கும் இடம் நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தாள்.

குறத்தியின் தோற்றத்தில் யார் என்று இதற்குள் புரிந்திருக்கும். மதுரையிலிருந்து புறப்பட்ட செவ்வந்தியின் அருமைக் காதலிதான் பவழமலைக் குறத்தியின் வேடம் பூண்டிருந்தாள். செவ்வந்தி, சிங்கன் வேடம் தரித்திலாவிடினும் அயல்நாட்டு வாணிபன் போல் உடை அணிந்து இருந்தான். பெரு மீசையும் ஒட்ட வைத்திருந்தான். தலையில் பெரும் முண்டாசு கட்டியிருந்தான். கழுத்திலே கரு மணி, பவழமாலை அணிந்திருந்தான். முழங்கையை மறைக்கும் அளவுக்குத் தடித்த துணியாலான அங்கியை அணிந்திருந்தான். காலிலே வளைந்த செருப்புப் போட்டிருந்தான். நெற்றியிலே கருப்பு நிறத்திலாகிய ஜவ்வாது பொட்டு இட்டிருந்தான். அந்தத் தோற்றத்திற்குள் ஒளிந்திருந்த அழகனான செவ்வந்தியை மதுரை மன்னரே அப்பொழுது பார்த்திருந்தாலும் அவருக்கு அடையாளம் தெரிந்திருக்காது.

மதுரையினின்று செவ்வந்தியும் அவன் காதலியும் புறப்பட்டவுடனே வழியிலேயே செவ்வந்திக்குப் பெரும் திகிலாய் இருந்தது. தஞ்சைக்குச் செல்ல என்ன யுக்தி செய்து இளவரசியைச் சந்திக்கப் போகிறோம் என்ற கவலை அவனைப் பிடித்திருந்தது. முன் யோசனையாக அரசர்

சொக்கநாதருடைய உருவத்தை அவன் மெல்லிய துணியிலே எழுதி அதற்கு வர்ணம் தீட்டி வைத்திருந்தான்.

செவ்வந்தி மிகவும் கவலை நிறைந்த குரலில் தன் காதலியை நோக்கி, "தஞ்சைக்குப் போய் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

"நீங்கள் கவலைப்படாமல் வாருங்கள். திருச்சிராப்பள்ளியிலுள்ள அகண்ட காவிரியைத் தாண்டியவுடனே உங்களுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்பதைப் பற்றிச் சொல்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் என்ன வென்றால் திருச்சியில் மயிலம் சந்தையில் நான் கேட்கும் சில ஆடை அணிகளை வாங்கித் தரவேண்டியது ஒன்றுதான்" என்றாள் சிரித்துக் கொண்டே.

"மதுரையில் இல்லாததா? திருச்சியில் என்ன வாங்குவாய்? பட்டாடை கேட்பாயா? பொன்னாலான மணிகளைக் கேட்பாயா? காதுக்கு மரகதப் கல் பதித்த ஓலையைக் கேட்பாயா? மெட்டி கேட்பாயா? நீண்ட காலமாக நீ ஆசைப்பட்டுக் கொண்டிருந்த கெட்டிக்காப்பு கேட்பாயா? இவ்வளவுக்கும் நான் பணம் எதுவும் எடுத்து வரவில்லையே! உன் ஆசையை நீ மதுரையிலேயே சொல்லியிருக்கக் கூடாதா?"

"ஐயோ, செவ்வந்தி! உனக்கு நான் என்ன சொல்வது? நான் சொல்லப் போவது என்ன என்பது தெரியாது; சொல்வதையும் உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. திருச்சிக்கு வந்து என்னை அழகு செய்வதற்காகவா ஆடை ஆபரணங்கள் கேட்கிறேன். நாம் என்ன தஞ்சைக்கு சென்று கல்யாணமா செய்து கொள்ளப் போகிறோம். நாம் தஞ்சைக்குச் செல்லும் நோக்கம் என்ன?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான்.

"தஞ்சைக்குச் சென்று இளவரசியைச் சந்திக்கப் போகிறோம்."

"இளவரசியைச் சந்திக்கப் போகிறாய், என்று சொல்லுங்கள். ஒரு ஆம்பிளை நேரடியாக இளவரசியைச் சந்திப்பதற்கு அவ்வளவு எளிதாக விடுவார்களா? அதிலும் அயல் நாட்டுக்காரர் என்ற உடனே உங்களைச் சந்தேகக் கண்ணோடுதான் பார்ப்பார்கள். சந்தேகக் கண்களோடு பார்த்த பிறகு சந்தேகப்படும் உங்களுக்குப் பின்னாலேயே சந்தேக நிழல் வந்து நிற்கும். அதனால் இளவரசியைச் சந்திக்கப் போவது நான். நான் இந்த உடையில் சென்றால் முடியுமா! அதற்குத்தான் மாறுவேடம் பூணுவதற்கான ஆடை, அரங்கேற்ற ஆபரணங்களைக் கேட்கிறேன். இப்பொழுது புரிந்ததா?" என்றாள், இலேசாக அவன் தோள் பட்டையைத் தன் கைகளால் இடித்து.

செவ்வந்திக்கு வியப்பு தாங்கவில்லை. தன் காதலிக்கு இவ்வளவு சாமர்த்தியமும் சமயோசித அறிவும் இருக்கிறதா? என்று அவன் நினைக்கவே இல்லை. அழகிய தோற்றத்துடன் காதல் போதையிலே கிறங்கவைக்கும் சொற்களைத்தான் அவள் உகுப்பாள் என்று இதுவரை அவன் நினைத்திருந்தான். பெரிய தந்திரசாலியாகவும் அவள் இருக்கிறாள் என்பதை அறிந்து கொண்டவுடன் தான் எடுத்த காரியம் அநேகமாக நிறைவேறிவிடும் என்ற துணிவு அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

திருச்சியை வந்தடைவது அவ்வளவு எளிதாக இல்லை. வழியிலே மாற்றுக் குதிரைகள் கிடைக்கவில்லை. குதிரை கிடைத்தாலும் குதிரை கால் தேய்ந்து அதற்கு லாடம் அடிப்பதற்காகக் கொல்லுப் பட்டரையைத் தேடி அலைய வேண்டி இருந்தது. குதிரைக்கு உணவு தேடித் தரும் பிரச்னை பெரும் பிரச்னையாக இருந்தது. ஏனெனில் வழியிலெல்லாம் உணவு பஞ்சம் தலை விரித்தாடியது. பருவமழை தவறி இருந்தது. பயிர்கள் காய்ந்து இருந்தன. வற்றாத ஜீவ நதியாக ஓடும் காவிரியிலே வெறும் மணல்தான் இரு கரையையும் தொட்டுக் கொண்டிருந்தது. கண்மாய்களும் தடாகங்களும் நீர் இன்றி நிர்மூலமானது போல் தோன்றின. மக்கள் அரிசி கிடைக்கும் இடம் தேடி அலைவதையும் பசுக்களும் கால் நடைகளும் தண்ணீருக்காக அலைந்துத் திரிவதையும் அவன் காணாமல் இல்லை. இந்த அழகிலே அயலூர்க்காரனான அவனுக்கும் அவனுடைய குதிரைக்கும் உணவு யார் கொடுப்பார்கள்? அதனால் அவன் மணப்பாறையைத் தாண்டியவுடன் குதிரையை விட்டுவிட வேண்டியதாயிற்று.

பிறகு கால்நடையாகவே நடந்தும், இடையிலே போக்குவரத்து வண்டியைப் பிடித்தும் ஒருவாறாக திருச்சியை அடைந்தார்கள். திருச்சிராப்பள்ளி கடைத்தெருவிலே எப்பொழுதும் போல் கலகலப்புக்குக் குறைவேயில்லை. மதுரைக்கு அடுத்தபடியாக மதுரை நாயக்கர் மன்னருடைய முக்கிய நகரமாகத் திருச்சிராப்பள்ளி திகழ்ந்தது.

மலைக் கோட்டையும், மலைக் கோட்டையிலேயுள்ள உச்சிப்பிள்ளையார் கோவிலும் உணவுத் தானியங்கள் சேமித்து வைத்திருக்கும் பெரும் கிட்டங்கிகளும் அந்த நகரின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தின. மேலும் அயல்நாட்டு ஒற்றர்கள் எப்போதும் சாலையில் சுற்றித் திரிந்து கொண்டே இருந்ததால் அந்த நகரத்துக்கு வேறொருவித முக்கியத்துவமும் இருக்கிறது என்பது தெளிவாய் விளங்கியது.

மைசூர் நாட்டை ஆண்டு வருபவரும், செஞ்சியிலே ஆட்சி புரிந்து வருபவரும் தஞ்சை நாயக்கரும் திருச்சிராப்பள்ளி மீது எப்போதும் ஒரு கண் வைத்துக் கொண்டே இருந்தனர். மதுரை நகரத்தினுடைய ஆட்சி

யினின்று அந்த நகரை எப்படியாவது பிடித்துக் கொள்வது என்ற உள்நோக்கம் ஒவ்வொருவருக்கும் இருந்தது.

ஆனால், திருமலை நாயக்கர் காலத்திலிருந்து பலம் பொருந்திய பெரும் வீரர்களும் தற்காப்புக் கோட்டையிலே சேகரிக்கக்கூடிய அளவுக்கு ஆயுதங்களும் அங்கு நிறைந்திருந்தமையால் திருச்சியை எதுவும் செய்ய முடியாமல் இருந்தது. ஆனால் எந்த நொடியிலும் எதிரிகளின் படையெடுப்புக்கு நகரம் ஆளாகும் என்ற அச்சம் அங்கு இருந்தவர்களுக்கு எப்போதும் குடி கொண்டிருந்தது. மேலும் அந்த நகரத்திலே அப்பொழுது பரவிக் கொண்டிருந்த வதந்தியின்படி மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கரால் விரட்டப்பட்ட முன்னாள் தளபதி லிங்கமன் எப்படியும் திருச்சியைத் திடீரென்று தாக்கிப் பிடித்துவிடப் போகிறான் என்று மக்கள் உள்ளூரப் பீதி அடைந்திருந்தார்கள். அவருக்குத் தஞ்சை மன்னரும் உதவப் போவதாக அங்கங்கே இரகசியமாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மக்கள் குசு குசு என்று பேசிக் கொள்வது நாள்தோறும் திருவரங்கத்திற்கு வந்து திருவரங்கநாதரைத் தரிசித்த பிறகே போய் உணவருந்தும் தஞ்சை அரசர் விஜயராகவருக்கும் எட்டியது. அது அவருக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. கடைசியில் அவர் தன் ஒற்றர்களை விசாரித்த பொழுது லிங்கமன் செஞ்சியில் வந்துத் தங்கியிருப்பதாகவும், விஜயராகவருடைய உதவியைக் கேட்டுத் தூதுவனைப் பல நாட்களுக்கு முன்பே அனுப்பியதாகவும் ஏதும் மறுமொழி வராததால் கவலை அடைந்திருப்பதாகவும் அறிந்திருந்தார். நெடுநாட்களுக்கு முன்பே அனுப்பியிருந்த தூதுவர் தன்னை ஏன் வந்து சந்திக்கவில்லை என்பது விஜயராகவருக்கு வியப்பாக இருந்தது. ஆனால், அப்பொழுது அந்த வியப்பினை மனத்திலே போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை. அவருக்குப் படையெடுப்பு, அரசியல் தந்திரம், மாற்றானை அழிப்பது எனகிற எண்ணங்களிலெல்லாம் அதிக சிந்தனை செலுத்த முடிவதில்லை. வைஷ்ணவ நூல்களிலும், வைணவப் பெரியோர்களின் உபந்யாசங்களிலும் அவர் அதிக நேரம் சிந்தையைச் செலுத்திப் பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டுமென்று அவாக் கொண்டிருந்தார். திருவரங்கத்திற்கு வந்த பொழுது அந்தப் பெரிய கோயிலின் அமைப்பையும், அங்கே கமழும் பக்தி நெறியையும் கண்டு தஞ்சை மாளிகையை விட்டுத் திருவரங்கத்திற்கே வந்து காலத்தைக் கழித்து விடலாமா என்று கூட எண்ணுவார். மேலும், அவரது அரசவையில் இருந்த தெலுங்குப் பண்டிதர்களும், வடமொழி வித்துவான்களும் அழகாக கவிரசம் பொங்க, பக்தி மணம் கமழும்படியான பாடல்கள் எழுதி அவரை வைணவ மார்க்கத்திற்குத் திருப்ப முயன்று கொண்டிருந்தார்கள். மேலும் பெண் கவிஞராகிய ரங்கராஜம்மாள் தன்

கவிதையால் அரசரை மயக்கினாரா? அல்லது தன் அழகால் அரசரை மயக்கினாரா? என்பது புரியாத புதிராக இருந்தது. எப்படி இருந்தாலும் ரங்கராஜம்மாளின் பக்தி ரசம் ததும்பும் பத்யங்கள் எனப்படும் கவிதைப் பொழிலை மன்னர் கேட்டு மயங்கிவிட்டார் என்று சொல்லலாம்.

இந்த நிலையில் தூதுவர் தன்னை வந்து அடையாதது பற்றி அவர் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. திருச்சியை விங்கமன் தாக்கப் போகிறான் என்றால் தனக்குத் திருச்சி கிடைக்காத நிலை ஏற்பட்டு விடுமோ என்ற ஐயம் தனது மனத்திற்குள்ளே தோன்றியதாலே தஞ்சைக்குச் சென்ற பிறகு அதைப் பற்றி முழுவதும் விசாரிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்.

இப்படி திருச்சி நகரில் பலவிதமான வதந்திகளும் அயல் நாட்டு ஒற்றர்கள் நடமாட்டம் நகர் முழுவதிலும் நிலவி இருந்த சமயத்தில் செவ்வந்தியும் தன் காதலியுடன் கடைத் தெருவுக்கு வந்து அவளுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களைப் பற்றிய கடைகளை விசாரித்த பொழுது, செவ்வந்தியின் காதலி கேட்ட ஆடையோ செவ்வந்தியைச் சிரிக்க வைத்தது.

"நீ என்ன மலைக் குறத்தி போல வேடம் அணியப் போகிறாயா? பாசி மாலைகளையும் பவழ மாலைகளையும் கருக மணிகளையும் தேடி வாங்கி இருக்கிறாயே" என்று செவ்வந்தி சிரித்துக் கொண்டே கேட்டான்.

"ஆமாம், நான் குறத்தியாக ஆகப் போகிறேன். என் பெயர் சிங்கி. உன் பெயர் சிங்கன். தெரியுமா? நமது பகுதியிலே மலை வட்டாரத்திலிருந்து சிங்கனும் சிங்கியும் தான் மதுரை மாநகரில் தன்னுடைய மலைவளத்தைக் கூறி மலைத் தெய்வத்தின் பெருமையைக் கூறி புனையப் பெற்ற அழகான பாடல்களைப் பாடிய வண்ணம் குறி சொல்லுவதற்கு ஒவ்வொரு தனவந்தர் வீடாக ஏறி இறங்குவதை நீ கேள்விப்பட்டது இல்லையா?" என்றாள் செவ்வந்தியின் காதலி.

"ஆமாம். ஆமாம். அவர்கள் மலையிலிருந்து தேன் கொண்டு வருவார்கள். புலிப் பல் கொண்டு வருவார்கள். சிறுத்தையின் தோல்கொண்டு வருவார்கள். கரடியின் ரோமத்தையும் கொண்டு வந்து மதுரைச் சந்தையிலே விற்பதை நான் பார்த்திருக்கிறேன். அவர்களைப் போல் நீ என்ன தஞ்சை வீதியிலே தேன் விற்கப் போகிறாயா? நீ தேன் விற்பதைப் பார்த்து இளவரசி தேன் வாங்கிச் சாப்பிட உன்னை அழைக்கப் போகிறார்கள் என்று நினைத்தாயா?" என்றான் செவ்வந்தி.

"ஐயோ, சிங்கா! உனக்கு நான் என்ன என்று சொல்லி விளங்க வைக்கப் போகிறேன்; தயவு செய்து எதைப்பற்றியும் காரணம் கேட்காமல் இருந்தாயானால் அதுவே எனக்கு நீ செய்யும் உதவியாக

இருக்கும். நாம் தனியே ஓர் இடத்திற்குச் சென்று இந்த வேடங்களை எல்லாம் அகற்றிவிட்டுப் புதிய தோற்றத்தில் வருவோம். அப்பொழுது நீ என்னைச் சந்தேகக் கேள்வி என்பதையே கேட்கவே கூடாது. உன்னால் சிங்களைப் போல் வேடம் போட்டுக் கொள்ளப் பிரியம் இல்லை என்றால் நான் சொல்வதைக் கேள்" என்றாள் அவள்.

பிறகு ஏதோ நினைவு வந்தவன் போல், "ஆமாம் ஆமாம்! நீ சிங்கன் வேடம் அணிய வேண்டாம். மலை நாட்டுக் குறவர் யாருக்கு உன்னைப் போன்ற சிவந்தமேனி இருக்கிறது. அழகிய அரும்பு மீசை இருக்கிறது. வரிசையான பற்களையும் கொண்ட மலைநாட்டுச் சிங்களை நான் பார்த்ததே இல்லை. சிங்களது புஜங்கள் திரண்டு உருண்டு இருக்கும். ஓடும் காட்டுப் பன்றியைத் துரத்தித் தாக்கும் அளவுக்கு புஜங்கள் பலம் மிகுந்தவையாய் இருக்கும். நீ இந்த உடலுடன் சிங்களாக மாறினாய் என்றால் உன்னைப் பார்த்த உடனே சிரிப்பார்கள். சந்தேகப்பட்டு உன்னுடைய உண்மையான தோற்றத்தைத் தெரிந்து கொண்ட உடனே உன்னைப் பிடித்துக் கொண்டு ஊர் அதிகாரியிடம் நிறுத்தி விடுவார்கள். அதனால் உன் முகத்தைத்தான் மறைக்க வேண்டுமே தவிர, உன் உடலை மறைக்க வேண்டியதில்லை" என்றாள் அவள்.

"ஏதோ இனி நீயே கட்டளையிட்டு அதிகாரம் செய்ய ஆரம்பித்து விடுவாய் போல் இருக்கிறதே! என் உடலில் கரியைப் பூசிக்கொள்ளச் சொல்லப் போகிறாய்? வெண்மையான பல்லையெல்லாம் கரிகொண்டு கறுப்பாக்கப் போகிறாயா? காதிலே வளையத்தை மாட்டப் போகிறாயா? இடையிலே ஆடையின்றி வெறும் கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டு நடக்கச் சொல்லப் போகிறாயா? என்னால் முடியாது. நான் வேண்டுமானால் இங்கே மலைக்கோட்டையில் பேசாமல் உட்கார்ந்து கொண்டு இருக்கிறேன். நீ தஞ்சைக்குப் போ! இளவரசியைப் பார். காரியத்தைப் பத்திரமாக முடித்துக் கொண்டு வா!" என்றான் செவ்வந்தி. அவன் காதலி குலுங்கக் குலுங்க நகைத்தாள்.

"ஐயோ, வீரரே! எனக்குத் துணை நீங்கள். உங்களுக்குத் துணை நான். அரசர் என்னிடம் கட்டளை இட்டாரா? உங்களிடம் கட்டளை இட்டாரா? இளவரசியைப் பார்த்து வருமாறு எனக்குக் கட்டளை இடவில்லையே! நீங்கள் போய் வாருங்கள். நான் மதுரைக்குப் போய் விடுகிறேன். நீங்கள் எப்படியாவது இளவரசியைப் பாருங்கள். மன்னரின் கருத்தை எடுத்துச் சொல்லுங்கள். இளவரசியின் ஆசையை அறிந்து வாருங்கள். அவர்கள் கொடுக்கும் பரிசைக் கொண்டு வாருங்கள்" என்று முகத்திலே பொய்க் கோபத்தைக் கொண்டு வந்து கேட்டாள்.

செவ்வந்தி உண்மையிலேயே பயந்து விட்டான். அவன் அவள் முகவாயைத் தொட்டு, "இதற்குள் நீ கோபித்துக் கொள்ளலாமா?

என்னால் அந்த வேடத்தில் நடிக்க முடியாது என்பதால்தான் உன்னைப் போய் வரச் சொல்கிறேன். நீ போகாவிட்டால் நான் என்ன செய்வது? நான் உன் இஷ்டப்படி செய்கிறேன்" என்று பணிந்தான்.

சிறிது நேரம் கழித்துச் செவ்வந்தியும் அவன் காதலியும் அயல்நாட்டு வாணிபம் செய்யும் வியாபாரி போலவும் மலைக்குறத்தி போலவும் மாறினார்கள். "நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அப்படிச் செய்கிறேன். பவழமலைக் குறத்தி! நான் மான் கொம்பு வைத்து இருக்கிறேன். புனுகு வைத்து இருக்கிறேன். மான் கொம்பைத் தேய்த்து மார்பிலே போட்டுக் கொண்டால் எந்தவிதமான இதய நோயும் தீர்ந்துவிடும்" என்று கூறிச் சிரித்தான் செவ்வந்தி.

"நல்ல வியாபாரி ஐயா! இதய நோயைத் தீர்ப்பதற்கு மான் கொம்பா? இதயத்திலுள்ள வேதனையைக்கூட அந்த மான் கொம்பு தீர்த்துவிடுமா? அப்படியென்றால் நேரே மதுரை மன்னரிடம் சென்று மான் கொம்பை அரைத்து அவர் இதயத்திலே போட்டு "உங்கள் இதயத்தில் நீங்கள் இப்பொழுது கொண்டிருக்கும் இளவரசியின் மீதுள்ள காதல் நோய் மான் கொம்பால் தீர்ந்துவிடும் என்று சொல்லுங்களேன்!" என்றாள். செவ்வந்திக்குத் தக்க பதில் சொல்ல முடியவில்லை. மெல்லச் சிரித்தான்.

அவள் சும்மா இராமல், "நீங்களொன்றும் நிஜமாக வியாபாரம் செய்யப் போவதில்லை. உங்களது பொன்னான வாயை மூடிக் கொண்டு வாருங்கள். சரிதானே!" என்றாள்.

"அது சரி. ஒரு பவழ மலைக் குறத்தியின் பின்னால் ஒரு அயல்நாட்டு மருந்து வியாபாரி தொடர்ந்து வந்தால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? குறத்தியை மயக்கித் தன் ஊருக்குக் கொண்டு போகப் பார்க்கிறான் என்று நினைத்து உங்கள் உடம்பைப் பதம் பார்த்துவிடுவார்கள். நீங்கள் ஒரு பக்கமாகத் தஞ்சைக்கு வாருங்கள். நான்பாட்டுக்கு வருகிறேன். தஞ்சையிலே பெரிய கோயில் என்று ஒன்று இருக்கிறது. தெரியுமா? எங்கே தெரியப் போகிறது? தஞ்சைக்கு வந்தால் தானே தெரியும்! போகிறது. உங்களுக்கு மதுரையே கதி. உம்... உம்... தஞ்சைப் பெரிய கோயிலுக்கருகே நந்தவனம் ஒன்று இருக்கிறது. அந்த நந்தவனத்துக்குப் பக்கத்திலே சிவகங்கைத் தோட்டம் இருக்கிறது. நீங்கள் அந்தத் தோட்டத்தினருகிலே உங்கள் மூட்டையை விரித்து உட்கார்ந்திருங்கள். நீங்கள் கொண்டு வந்ததை எல்லாம் விற்று விடாதீர்கள். ஒன்றுக்கு முப்பது மடங்காகச் சொல்லுங்கள். மான் கொம்புகளைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டு, மற்றவற்றையும் பரப்பி வைத்திருங்கள். யாரும் கிட்டே நெருங்க முடியாதபடி விலையைக் கூட்டிச் சொல்லுங்கள். ஒன்றுக்குப் பத்தாக முப்பதாகச் சொல்லுங்கள். யாரும் கிட்டே வரமாட்டார்கள்.

ஓடிப்போய் விடுவார்கள். நான் அங்கு வந்து உங்களைச் சந்திக்கிறேன். நான் அருகே வரும் வரையில் நீங்கள் என்னைத் தேடக்கூடாது. ஒன்றும் கேட்கவும் கூடாது" என்று தெரிவித்துவிட்டு அவள் கிளம்பி விட்டாள்.

• • •

பவழமலைக் குறத்தி இளவரசியைச் சந்தித்துவிட்டு - கை பார்த்துக் குறி சொல்லிவிட்டு, தன்னிடம் இருந்த குறி சொல்லும் கோலை இளவரசியிடம் கொடுத்துவிட்டு வேகமாக வந்து கொண்டிருந்தபோது தான் அவளை வழிமறித்துக் "குறி சொல்லுகிறாயா?" என்று குதிரைக்காரன் கேட்டான்.

தன் காதலனைச் சந்திக்க வேண்டுமென்ற வேகத்திலே சென்று கொண்டிருந்த பவழமலைக் குறத்தி குதிரைக்காரன் கேட்டதற்கு ஒரு முறுவலை மட்டும் சிந்திவிட்டுப் பதிலேதும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குதிரைக்காரன் குதிரையை மரவேரிலே கட்டிவிட்டு நொடியிலே அவள் முன்பாக வந்து நின்று, "ஓ குறத்தி! நான் என்ன கேட்கிறேன். நீ போய்க் கொண்டே இருக்கிறாயே! என் கையைப் பார்த்துக் குறி சொல்" என்றான்.

பவழமலைக் குறத்திக்குச் சட்டென்று கோபம் வந்து விட்டது. "இவன் நம்முடைய நடையுடையைப் பார்த்துச் சந்தேகித்துக் கேட்கிறானா? இல்லை நம்மை உண்மையான குறத்தி என்று நினைத்துக் கேட்கிறானா என்று புரியாதவளாய் அவனை ஏற இறங்கப் பார்த்து, "நினைத்த நேரத்திலே குறி சொல்ல மாட்டேன். ஐயா, என் தெய்வம் குறி சொல்லுவதற்குக் கண்ட இடத்திலே வந்து இறங்காது" என்று கூறி அவனிடமிருந்துத் தப்புவதற்கு முயன்றாள். ஆனால், அவன் விடுவதாய் இல்லை.

"குறி சொல்ல முடியாது என்று கூறிவிட்டு, நீ எங்கே செல்கிறாய். உனக்கு எந்த ஊர்?" என்று மீண்டும் கேட்டான்.

"குறத்திக்கு எந்த ஊர் என்று எப்படி ஐயா சொல்ல முடியும்? மலைகள் இருக்கும் ஊர்கள் எல்லாம் எங்கள் ஊர்தான். மால் மருகன் குடிகொண்டிருக்கும் கோயில் எல்லாம் எங்கள் கோயில்தான். அதுசரி, என்னை வழி மறித்து என்னைக் கேள்வி கேட்கும் நீ யார்?" என்றாள்.

"உன் வருங்காலத்தைச் சொல்ல வேண்டுமா? அல்லது நடக்கிற காலத்தைச் சொல்ல வேண்டுமா? அல்லது நடந்து போன காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? எதற்காக இப்படி யெல்லாம் என்னை வழிமறித்துக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள். ஒரு கணம் குதிரைக்காரன் குறத்திக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைத்தான். என்றாலும் மறுகணம், "ஏ! குறத்தி, நீ சாதாரண குறத்தி இல்லை என்று

எனக்குத் தெரியும். நீ மதுரையிலிருந்து வருகிறாய். பெரிய இடத்தில் பெரிய மாளிகையிலே குறி சொல்லி இருப்பாய்? அதற்காக உனக்குப் பரிசுகள் எல்லாம் கிடைத்திருக்கும் அல்லவா?" என்றான்.

"மாளிகையா? நான் எந்த மாளிகையைக் கண்டேன்? எனக்குக் குறி சொல்லவும் தெரியாது. நான் ஏதோ கருகு மணிகளையும், பவழ மாலைகளையும், அயல் நாடுகளிலிருந்து வந்த மணிகளையும் கடைத் தெருவிலே விற்றுக் கொண்டு பிழைத்து வருகிறேன். என்னைப் போய் ஏதேதோ கேட்கிறீர்களே!" என்றாள்.

"ஓஹோ! அப்பொழுது உனக்குக் குறி சொல்லத் தெரியாது. நீ சாதாரண நரிக் குறத்திதான் போல் இருக்கிறது. உன்னைப் போய் பெரிய மலைக்குறத்தி என்று எண்ணி ஏமாந்தேனே! போ, போ! என் எதிரில் நிற்காதே" என்று அவன் அதட்டினான்.

பவழமலைக் குறத்தி அவனிடமிருந்துத் தப்பித்தால் போதும் என்ற வகையில் நெஞ்சம் படபடக்க திரும்பிக் கூட பார்க்காமல் நொடியிலே சிவகங்கை தோட்டத்திற்கு அருகே வந்து சேர்ந்தாள்.

அவள் கூறி இருந்தபடி செவ்வந்தியும் மரத்து அடியிலே சோர்வுற்றவனாய் கன்னத்திலே கையை வைத்துக் கொண்டு தன் காதலி எப்பக்கமாய் வருவாளோ? எப்பொழுது வருவாளோ என்ற ஏக்கத்திலே அமர்ந்திருந்தான்.

விரைந்து வந்த குறத்தி அவன் எதிரிலே நின்று, "ஏன் ஐயா, வியாபாரம் எல்லாம் இன்று எப்படி?" என்று கேட்டவுடன் அவன் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்து, "வந்து விட்டாயா, நீ எப்பொழுது வருவாய் என்றுதான் நான் காத்துக் கொண்டிருந்தேன். போன காரியம் எப்படி? வெற்றிதானா? இளவரசியின் இதயத்தை அறிந்து கொண்டாயா?" என்றெல்லாம் மளமளவென்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டான்.

பவழமலைக் குறத்தி பதில் ஏதும் சொல்லாமல் தனது கச்சையில் மறைத்து வைத்திருந்த இளவரசி கொடுத்த முத்துமாலையை வெளியே எடுத்து, "இதோ பார்த்தாயா, இது தான் என்னுடைய பதில். இளவரசியின் இதயம் இது தான்" என்று கூறிவிட்டு, "நாம் இங்கே ஒரு கணம்கூட தாமதிக்கக்கூடாது. இப்போதே மதுரை நோக்கி நாம் புறப்பட வேண்டும்" என்று பெருமூச்சு பொங்கப் பரபரவென்று கூறினாள்.

"இதற்குள் நம் காரியம் அவ்வளவு எளிதில் முடிந்து விட்டதா? இளவரசியைப் பார்த்தாயா? இந்தப் பரிசை உனக்குக் கொடுத்தார்களா? இளவரசி பரிசு கொடுத்து விட்டாள் என்றால் அவளுடைய இதயம்

நன்றாக நமக்குப் புரிந்து விட்டது. மன்னரிடம் அந்தச் செய்தியைப் போய்ச் சொல்லலாம்" என்று உணர்ச்சியால் கூவினான் செவ்வந்தி.

அவன் எதிரே பவழமலைக் குறத்தி கையிலே பிடித்துக் கொண்டிருந்த முத்துமாலை ஜொலித்துக் கொண்டிருந்தது. "வேண்டாம் இந்த முத்துமாலை என்று பிடிவாதமாக மறுத்தேன். இளவரசி வற்புறுத்திக் கொடுத்தார்கள்" என்று கூறினாள். முத்துமாலையைக் கொண்டு வந்த தன் காதலியின் முத்துப்பல் வரிசைக்கும் முத்து மாலைக்கும் உள்ள பட்டொளியை காண முயன்று கொண்டிருந்த செய்தியை ஒரு குரல் திடுக்கிட வைத்தது.

"சாதாரண குறத்தியா? உனக்கு ஏது அரண்மனை முத்துமாலை? திருடிக் கொண்டு வந்து விட்டாயா? வா போவோம், அரண்மனை அதிகாரியிடம்" என்று கூறியவாறு இரண்டு வீரர்கள் அங்கே நின்று கொண்டு இருந்தார்கள்.

# 27. தோழி சொன்ன கற்பனை

வல்லம் கோட்டையில் ரங்கமாதேவி இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள். சற்று நேரத்திற்கு முன்புதான் பூஜை அறையிலுள்ள சுரங்கப்பாதையின் கதவைத் திறந்து கொண்டு கந்ததேவன் வந்து சென்றிருந்தான். அவன் சொல்லிவிட்டுப் போயிருந்த செய்திகள் எல்லாம் ரங்கமாதேவிக்கு வியப்பையும் அதே போன்று பயத்தையும் அளித்தன. கந்ததேவனின் பேச்சிலே சிறிது பயமுறுத்தல் கூட ஒலித்தது. தன் மகனுக்கு இளவரசி மோகனாங்கியைத் திருமணம் செய்து வைக்காவிட்டால் தஞ்சை நகரத்தையே நிர்மூலமாக்கி விடுவதாக அவன் கருவினான். தான் நல்ல யோசனை செய்ததுபோக அது பெரும் தீங்கை விளைவிக்கும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் என்று ரங்கமாதேவி கனவில் கூட எண்ணவில்லை. தனக்கு மிகவும் வேண்டிய கந்ததேவனின் மகனுக்கு மோகனாவை எப்படியாவது மணம் முடித்துவிட்டால் தன் சகோதரன் விஜயராகவனுடைய செல்வாக்கைக் குறைத்துத் தஞ்சையிலும் தன் விருப்பப்படி ஆட்சியை நடத்துவதற்கு வழி வகைகளைச் செய்யலாம் என்று மனத்திற்குள்ளேயே பலகாலம் திட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

கந்ததேவன் அரசர் குடியில் பிறந்தவன் அல்லன், அவனுக்குப் போய் இளவரசியைத் திருமணம் செய்து கொடுப்பது என்றால் அதனால் பரம்பரை பரம்பரையான உயர் குலத்துப் பெருமையெல்லாம் பாழ்பட்டுப் போய் விடாதா என்ற ஒரு சிந்தனை எள்ளளவும் அவளுக்கு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய கம்பீரமான ஆட்சி

கொடி கட்டிப் பறக்க வேண்டும் என்னும் பெண் புத்தி அவளை இன்னது செய்கிறோம் என்பதை நினைக்க விடாமல் செய்தது.

கந்ததேவன் ஏராள்மான செல்வங்களைக் கொள்ளை அடித்து வல்லம் கோட்டையிலே கொண்டு குவித்திருந்தான். கடைசியாக சேதுபதியின் நாட்டிற்குச் சென்று விலை உயர்ந்த ஆபரணங்களைக் கொண்டு வருவதாக சவால் விட்டிருந்தான். சேதுபதி நாட்டிற்குச் செல்வது அவ்வளவு எளிதன்று என்பது கந்ததேவனுக்குத் தெரியும். மேலும் அவனுக்கு உறுதுணையாய் இருந்து கொண்டிருந்த கள்ளர்கள் பல்வேறு திசைகளிலும் பிரிந்து போய் இருந்தார்கள். அவர்களெல்லாம் வந்து சேரவில்லை. அவர்களுடைய உதவியில்லாமல் சேது நாட்டிலே நுழையவே முடியாது. ஆனால், ரங்கமா தேவியோ அடிக்கடி அவன் செய்திருந்த சவாலை நினைப்பூட்டி, "வைர ஆபரணங்கள் கொண்டு வருவதாகச் சொன்னாயே, அது என்னவாயிற்று? இளவரசியின் கழுத்தை அது அலங்கரிக்க வேண்டாமா? முடியாத காரியத்தை முடியும் என்று வீறாப்புடன் சொல்லிச் சென்றாயே! உன்னால் முடியாதென்று எனக்கு முன்பே தெரியும்!" என்பன போன்ற வார்த்தைகளால் அவனை ஏளனம் செய்ததால் கந்ததேவன் உள்ளத்தில் சீற்றம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அதைத் திருடிக் கொண்டு வருவதற்கு உற்ற சமயத்தை அவன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இளவரசி மோகனா வேறு ஒருவர் மீது உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள் என்பதை அறிந்து கொண்ட கந்ததேவன், அந்தச் செய்தியை ரங்கமாதேவியிடம் எடுத்துச் சொல்லி, "அது நடக்காத காரியம் என்று சொன்னாயே! இப்பொழுது இளவரசியை என் மகனுக்குத் திருமணம் புரிந்து கொடுப்பது மட்டும் நடக்கக்கூடிய காரியமா என்பதை யோசித்துப் பார்!" என்றான். ரங்கமாதேவியால் ஏதும் பதில் பேச முடியவில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டு கந்ததேவன் இவ்வாறு சொல்லுகிறான் என்று யோசித்துப் பார்த்தாள். திடீரென்று ஒரு நாள் மோகனாவின் தோழி கமலம் வல்லம் கோட்டைக்கு வந்திருந்தாள். அவளுடைய வருகை ரங்கமா தேவிக்கு வியப்பையளித்தது. ஒருவேளை மோகனா வருவதற்கு முன்பாக முன்னோடியாக கமலம் வந்து இருக்கிறாளோ என்ற எண்ணத்தில், "இளவரசியைத் தனியே விட்டுவிட்டு நீ மட்டும் ஏன் முன்னதாக வந்து விட்டாய்?" என்று கேட்டாள்.

"தனியே என்ன தேவி. மாளிகையிலே மற்ற பணியாட்களுக்குக் குறைவா? இளவரசிதான் என்னை இங்கு அனுப்பினார்கள். ஒரு

முக்கியமான செய்தியைக் கேட்டு வர என்னை அனுப்பி யிருக்கிறார்கள்" என்றாள் கமலம்.

"முக்கியமான செய்தி என்ன என்று நான் அறிந்து கொள்ளலாமா?" என்று ரங்கமாதேவி கேட்டாள்.

"உங்களுக்குத் தெரியாமல் நான் இந்தக் கோட்டையிலிருந்து அந்தச் செய்தியை அறிந்து கொண்டு செல்ல முடியுமா? உங்களிடமே அந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு வரத்தான் எனக்கு இளவரசி கட்டளையிட்டிருக்கிறார்கள்" என்று சிரித்துக் கொண்டே கமலம் சொன்னாள்.

ரங்கமாதேவிக்கு எதுவும் புரியவில்லை. வல்லம் கோட்டை யிலிருந்து முக்கியமான செய்தியை அறிந்து வருவதற்குத் தோழியை இளவரசி அனுப்புகிறாள் என்றால், தனக்குத் தெரியாத மிக முக்கியமான செய்தி என்ன இங்கே இருக்க முடியும்? மேலும் அதைத் தோழி தெரிந்து கொண்ட பிறகுதான் தெரிந்து கொள்வதென்றால் அப்பேர்ப்பட்ட செய்தி என்னவாய் இருக்கும்? என்று ரங்கமாதேவி குழப்பம் அடைந்தாள். ரங்கமாதேவி முகத்திலிருந்து அவள் குழப்ப் நிலையைப் புரிந்து கொண்ட கமலம், "தேவி! தெற்கே இருந்து ஓர் ஒற்றர் வந்து இருக்கிறார். அவர் ஒற்றரா என்று எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், அவர் திடீரென்று அரண்மனைத் தோட்டத்திற்குள் இடம் தேடினார். இளம் வயது. அழகிய தோற்றம். பார்த்தால் கொடியவர் என்று தோன்றவில்லை. தஞ்சை நகர் வந்து தன்னை வெங்கண்ணாவின் ஆட்கள் துரத்தி வருகிறார்கள் என்றும், அதனால் தப்பித்து கொள்ள ஓடிவந்ததாயும் அவர் கூறினார். வெங்கண்ணாவின் ஆட்கள் இவரைத் துரத்துவானேன்? அதுதான் எங்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவரிடமிருந்து எவ்விதச் செய்தியையும் எங்களால் அறிய முடியவில்லை. அதனால் அவரை இங்கு வரும்படியாகச் செய்துவிட்டால் அவரிடமிருந்து பல செய்திகளை அறிந்து கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் நான் இங்கு வந்தேன்" என்றாள் கமலம்.

ரங்கமாதேவிக்கு மேலும் குழப்பம் அதிகரித்ததே தவிர, உறுதியான நிலைக்கு அவளால் வர முடியவில்லை. "என்ன சொல்லுகிறாய் கமலம்? தெற்கே இருந்து ஒற்றரா? இளைஞர், அழகர் என்று வருணிக்கிறாயே? இளவரசியின் தோட்டத்திற்கும் அவர் ஓடி வந்தாரா? அவரை உடனே காவலர்களிடம் பிடித்து ஒப்படைத்து இருக்க வேண்டாமா? வெங்கண்ணாவின் ஆட்கள் அவரைத் துரத்துவதாகக் கூறுகிறாயே! வெங்கண்ணாவிற்கு என்று தனி ஆட்படை இருக்கிறதா? தஞ்சையிலே ஒவ்வொருவரும் கையாட்களை வைத்துக் கொண்டு தங்களுடைய நிலையைப் பெரிதாக்கிக் கொள்ள விரும்புகிறார்களா?" என்று ரங்கமாதேவி கேட்டாள்.

"அதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் தேவி. ஊரிலே பலர் பலவிதமாகப் பேசுகிறார்களே. இளவரசி வல்லம் கோட்டைக்கு வந்து போவதைப் பற்றி நகரத்திலே மக்களிடையே ரகசியப் பேச்சு அடிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் நான் காதில் போட்டுக் கொள்ள முடியுமா? என் வேலை உண்டு, நான் உண்டு என்று இருப்பதுதான் அழகு என்ற முறையில் நான் மாளிகையில் வேலை செய்து வருகிறேன். பெரிய இடத்து விவகாரத்தில் தலையிட்டால் நாளைக்கு என் பாடு என்ன ஆவது?" என்றாள் கமலம், தனது விழியை அலட்சியமாகச் சுழற்றிக் கொண்டே.

"இளவரசி இங்கு வருவதைப் பற்றித் தஞ்சையிலே என்ன பேசிக் கொள்கிறார்கள் கமலம்? உங்கள் இளவரசியை நான் என்ன செய்து விடுவேன்?" என்று பரபரப்புடன் கேட்டாள் ரங்கமாதேவி.

கமலம் சிரித்துக் கொண்டே, "இளவரசியை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அத்தைக்கு இல்லாத உரிமையா அன்னியர்களுக்குச் சென்றுவிடப் போகிறது. இளவரசியின் நல்வாழ்வுக்கு நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்ய உரிமை கிடையாதா என்ன?" என்று கமலம் கேட்டாள்.

கமலத்தின் சரளமான பேச்சிலே மயங்கி ரங்கமாதேவி, "நீ சொல்கிறாய் அப்படி? ஆனால் மோகனாவின் தந்தை என்ன நினைக்கிறார் தெரியுமா? இளவரசியின் வாழ்வையே நான் பாழாக்கி விடுவேன் என்று, என்னிடம் அவளை வர விடாமல் செய்து வைக்கிறார். நான் நல்ல இடமாகப் பார்த்து இளவரசிக்கு மணம் முடிக்க வேண்டுமென்று படாதபாடுபட்டு வருகிறேன்" என்று ரங்கமாதேவி கூறியபோது, கமலம் இடைமறித்து, "இளவரசிக்கு நீங்கள் வேறு மணமகன் பார்க்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"நான் வேறு பார்க்கிறேன் என்றால், அப்பொழுது இன்னும் வேறு யாரெல்லாம் மணப்பிள்ளையைத் தேடுகிறார்கள்? சொல்லு கமலம்" என்று கேட்டாள் ரங்கமாதேவி.

கமலம் ஏதோ பெரிய ரகசியத்தைச் சொல்லுவது போல் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு, "ரங்கராஜம்மாள் என்ற பாடகி நல்ல மாப்பிள்ளையாகத் தேடி முடிவு செய்திருக்கிறாள்" என்றாள்.

இதைக் கேட்டு ரங்கமாதேவி பெரிதாக நகைத்து, "இது பழைய செய்தி. அது எனக்கு எப்பொழுதோ தெரிந்து விட்டது. வேறு புதிதாக யாராவது மோகனாவின் சொந்தக் காரியத்தில் தலையிட்டிருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

"எவ்வளவோ பேர். அதை எல்லாம் நான் இங்கே சொல்லிக் கொண்டிருப்பது என்றால் அரண்மனை ரகசியத்தை வெளியிட்ட

குற்றத்திற்குள்ளாகி விடுவேன். அரண்மனைக்குத் தினந்தோறும் ஜோசியர்களின் போக்குவரத்து அதிகமாகி விட்டது. அரண்மனை ஜோதிடரும் அடிக்கடி அரசரிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கிறார். சோழி போட்டுப் பார்த்துக் குறி சொல்லும் வள்ளுவன் இரண்டொரு முறை அரசரைச் சந்தித்துப் போய் இருக்கிறான். இவையெல்லாம் இளவரசிக்குத் திருமண விஷயத்தில் துரிதமான முடிவை ஏற்படுத்துவதற்காக உதவும் என்று நான் நினைக்கிறேன்" என்றாள்.

ரங்கமாதேவி கமலத்தின் தோள்மீது தன் கையை வைத்து, "கமலம் உன் சமார்த்தியம் எனக்குத் தெரியாதா? அரண்மனை ரகசியத்தை வெளியிட விரும்பாத நீ இவ்வளவு செய்திகளையும் எப்படிச் சொன்னாய்? அதுபோல் உனக்குத் தெரிந்ததைக் கூறினாய் என்றால், நான் உனக்குத் தக்க பரிசு கொடுப்பேன். அத்துடன் மற்றொன்றையும் உனக்கு எச்சரிக்க விரும்புகிறேன். எப்படி இருந்தாலும் நான் முடிவு செய்திருக்கும் வரனுக்குத்தான் மோகனா மாலையிடுவாள். அப்பொழுது என் அதிகாரத்திற்குத் தான் அவள் உட்பட்டு விடுவாள். உன் பேரில் சந்தேகமோ கஷ்டமோ எனக்கு அப்பொழுது ஏற்பட்டது என்றால் வருங்காலத்தில் உன்னை விலக்கி விட வெகுநேரம் ஆகாது" என்றாள்.

கமலம் பயப்படுவது போல் நடித்து, "தேவி... தேவி அப்படியெல்லாம் ஒன்றும் என்னைப் பற்றித் தவறாக நினைத்து விடாதீர்கள். இளவரசிக்காக உயிரைக் கொடுக்கவே விரும்புகிறேன். இளவரசியின் நல்வாழ்வுதான் என் நல்வாழ்வு. நான் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளாமல் ஏன் இருக்கிறேன் தெரியுமா? அது எதற்காக என்று உங்களுக்குத் தெரியுமா? நான் கல்யாணம் செய்து கொண்டால் இளவரசியைப் பிரிந்து கணவன் வீட்டுக்குப் போகும்படியான நிலை ஏற்பட்டுவிடும். அப்பொழுது என்னைப் போன்ற உண்மைத் தோழி இளவரசிக்குக் கிடைப்பாளா? அதனால்தான் என் சுகவாழ்வையே நான் தியாகம் செய்வது ஒரு பொருட்டா? அதனால் இளவரசிக்கு நல்வாழ்வு கொடுக்கப் போகும் உங்களுடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு நான் என்றுமே சித்தமாய் இருக்கிறேன்" என்றாள்.

கமலத்தின் நடிப்பை அறிந்து கொள்ளாத ரங்கமாதேவி, "கமலம் உன்னைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். உன்னை அப்படியெல்லாம் நான் பாதிக்கவிடமாட்டேன். ஆனால், நான் எடுத்த காரியமோ மிகவும் பெரியது, மிகவும் முக்கியமானது. கொஞ்சமாவது அதில் தவறு ஏற்பட்டுவிட்டால் எல்லாக் காரியமும் பாழாகி விடும். அதனால்தான் நான் இந்த அரண்மனையில் பல ஒற்றர்களை வைத்து

அவ்வப்போது நடக்கும் செய்திகளைக் கொண்டு வருமாறு சொல்லி இருக்கிறேன். ஆனால், அவர்கள் எல்லாம் காசு பறித்துத் தின்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்களேயொழிய உருப்படியான ஒன்றையும் எனக்கு இதுவரை தெரிவிக்கவில்லை. நீயோ இன்று மிக முக்கியமான இரு செய்திகளைச் சொல்லியிருக்கிறாய்" என்று கூறிச் சற்று நிறுத்தினாள்.

கமலம் பயத்துடன் கேட்பதுபோல், "என்ன இரண்டு செய்திகள் தேவி" என்றாள்.

"இளவரசிக்கு வரன் தேடுகிறார்கள் என்ற செய்தி ஒன்று. தெற்கே இருந்து ஒற்றன் ஒருவன் வந்து இளவரசியைச் சந்தித்தான் என்ற செய்தி இரண்டு. இவை இரண்டும் மிக முக்கியமானது அல்லவா?. இந்த இரண்டு செய்திகளும் இதுவரையில் நான் அறியவில்லையே" என்றாள் ரங்கமாதேவி.

"ஏன்? இளவரசிக்கு வரன் தேடும் விஷயம் எப்பொழுதோ தங்களுக்குத் தெரியும் என்ற சொன்னீர்களே!" என்று மடக்கினாள் கமலம்.

"வரன் தேடுகிறார்கள் என்ற செய்தி இளவரசியின் மூலமாகத்தான் எனக்கும் தெரியும். ஆனால் அரண்மனை ஜோதிடர்களை எல்லாம் அழைத்து, குறி சொல்லும் வள்ளுவனைக் கூப்பிட்டு பல ஜாதகங்களை எல்லாம் ஆராய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அதனால், நான் நினைக்கிறேன். ஒன்றுக்கு மேற்பட்ட பல இடங்களிலிருந்து இளவரசிக்கு வரன் வந்திருக்கிறது என்று தெரிகிறது. மற்றொன்று தெற்கே இருந்து ஒற்றன் வந்திருக்கிறான் என்றால் அதுவும் ஏதாவது முக்கியமான செய்தியைச் சொல்லலாம். இவ்வயெல்லாம் எனக்குத் தெரியாமலே போயிருக்கும் அல்லவா?" என்றாள் ரங்கமாதேவி.

"உங்களுக்குத் தெரியாமல் அது எப்படிப் போய் விடும்! வல்லம் கோட்டைக்கு நான் வந்து தெற்கே ஒற்றன் ஒருவனோடு பேசுகிறேன் என்றால் அது உங்களுக்குத் தெரியாமலா போய்விடும். மேலும் தங்களிடம் அச்செய்தியைத் தெரிவித்து வருமாறு இளவரசி எனக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள்" என்றாள் கமலம். இதைக் கேட்டவுடன் ரங்கமாதேவிக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

"ஆஹா! எனக்கு மோகனாவின் குணம் தெரியாதா? அந்தப் பெண் என் விருப்பமின்றி எதையுமே செய்ய மாட்டாள்" என்றாள்.

கமலம் சற்று நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, "நான் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுச் செல்கிறேன். ஆனால், நீங்கள் ஓர் உறுதி கொடுக்க வேண்டும். இங்கு நடைபெற்ற செய்தியை யாரிடமும் சொல்வதில்லை என்று நீங்கள் உறுதி கூற வேண்டும். அதனால்

எவ்வளவோ இடையூறுகள் எனக்கும் உங்களுக்கும் நேரிடலாம்!" என்றாள் கமலம்

ஒரு சாதாரண தோழி. தன்னைப் பார்த்து உறுதி கூறுமாறு கேட்கிறாளே என்ற கோபம் ரங்கமாதேவிக்கு இருந்தாலும் கமலத்திடமிருந்து அச்செய்தியை அறிவதற்காக அப்படியே செய்வதாக வாக்களித்தாள்.

"அவன் வரும்போது நானும் அவனும் பேசும் பொழுது நீங்கள் எக்காரணம் கொண்டும் இங்கு இருக்கக்கூடாது. நீங்கள் இங்கு இருந்தீர்கள் என்றால் அவன் முழுத் தகவலையும் எனக்குத் தெரிவிக்காமலே போய்விடலாம்" என்ற கமலம் கூறியவுடன் ரங்கமாதேவிக்கு மேலும் கோபம் அதிகமாகியது. இருந்தாலும் கமலத்திடமிருந்து எவ்வளவோ அறிய வேண்டியது இருந்ததால் அவள் சொல்வதற்கெல்லாம் சம்மதித்து வந்தாள். அதைப் போலவே முத்துக்குமரன் வல்லத்துக்கோட்டையிலுள்ள மாளிகையின் கூடத்தில் வந்து அமர்ந்தவுடனே ரங்கமாதேவி அங்கிருந்து சென்று விட்டாள். முத்துக்குமரனும் கமலமும் பேசி முடித்து முத்துக்குமரன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகு கமலமும் நேராக ரங்கமாதேவியிடம் வந்தாள்.

ரங்கமாதேவி ஆவலுடன் காத்திருந்தாள் என்பது கமலத்திற்குத் தெரியும். "தேவி, எனக்கு நேரமாகிறது. தங்களிடம் நான் செய்தியைச் சொல்லிவிட்டு விரைவாக அரண்மனைக்குப் போக வேண்டி இருக்கிறது. சொல்கிறேன், நீங்கள் கூறியதுபோல் இங்கு வந்தவர் தெற்கே இருந்து வந்த ஒற்றர் அல்லர். செஞ்சியிலிருந்து வந்தவராம்! செஞ்சியில் இப்பொழுது லிங்கம நாயக்கர் என்னும் மதுரைத் தளபதி வந்து தங்கியிருக்கிறார். அவர் மோகனாவைப் பெண் கேட்டுவரத் தஞ்சைக்குத் தூது அனுப்பியிருக்கிறார். இங்குள்ள ராயசம் வெங்கண்ணாவோ அந்தச் செய்தி மன்னரை அடையக் கூடாது என்பதற்காக அவர் மன்னரைச் சந்திக்கவொட்டாமல் செய்ய முயன்றிருக்கிறார்" என்று கூறி நிறுத்தினாள்.

ரங்கமாதேவிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. "செஞ்சிக்கு மதுரைத் தளபதி ஏன் வந்திருக்கிறார்?" என்று கேட்டாள்.

"மதுரையிலிருந்து தப்பி ஓடிவந்த தளபதியாம். இப்பொழுது மதுரையிலிருக்கும் மன்னருக்கும் லிங்கமருக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. அதனால் மதுரையை எப்படியும் கைப்பற்றித்தான் அரியணை ஏறவேண்டுமென்று பெரும் ஆவலுடன் மிகத் தந்திரமாக ஏராளமான சேனையுடன் அவர் செஞ்சிக்கு வந்திருக்கிறார். அங்கே மோகனாவின் அழகைப் பற்றி யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

தஞ்சையுடன் மணத் தொடர்பு கொண்டால் தஞ்சை உதவியும் தனக்குக் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் அவர் பெண் கேட்டு அந்த வாலிபரை அனுப்பி இருக்கிறார். அவ்வளவுதான் விஷயம். நான் போகட்டுமா?" என்று கமலம் சொல்லிவிட்டு அங்கிருந்து போக முற்பட்டாள்.

ரங்கமாதேவிக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. நாளுக்கு நாள் புதுவிதச் சிக்கல்கள் முளைத்துப் பெரும் குழப்பத்தை உண்டாக்கிவிடும் போல் இருக்கிறதே என்ற கவலையில் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

கமலமோ அங்கிருந்துச் சென்று விட்டாள். சிறிது நேரம் கழிந்த பிறகு ரங்கமாதேவி எழுந்து பூசை அறைக்குச் சென்றபோதுதான் அங்கே சுந்ததேவன் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தாள். அவன் முகத்திலே கோபம் பொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். கோபத்திற்கு ஏற்ப அவன் சொன்ன செய்தியும் ரங்கம்மாவை மிகவும் திடுக்கிட வைத்தது.

"தஞ்சை இளவரசி மோகனாவைத் தன் மகனுக்குத் திருமணம் செய்துவைக்கும் ஏற்பாடு நடைபெறாமல் போய்விட்டால், அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பயங்கரமாய் இருக்கும்" என்று அவன் கூறியதால் ஏற்பட்ட கவலை அவளைப் பிடித்துக் கொண்டது. கவலையைத் தவிர்ப்பதற்காக என்ன செய்யலாம் என்ற ஆலோசனையில் அவள் ஆழ்ந்தாள்.

# 28. இளவரசியின் ஜாதகம்

தஞ்சை மன்னர் விஜயராகவர் சோதிடரின் முகத்தையே பார்த்து கொண்டிருந்தார். என்ன நேருமோ என்ற கலக்கமே அவரது உள்ளத்தைப் பெரிதும் வாட்டிக் கொண்டிருந்தது.

அரங்கநாதர் நினைப்பையும் தர்ம சிந்தனையையும் எப்பொழுதுமே இதயத்தில் கொண்டிருக்கும் அரசர் இப்பொழுது தன்னுடைய நாட்டைப் பற்றி மட்டும் அல்லாமல் வேறு நாடுகளைப் பற்றியும் மனத்தில் எண்ணியவாறு தன் சிந்தையை உளப்பிக் கொண்டிருந்தார். செஞ்சியிலிருந்து வந்த தூதுவன் தன்னைக் காணாமல் வெங்கண்ணாவை மட்டும் கண்டுவிட்டுப் போன செய்தி அவருக்குக் கலக்கத்தை அளித்தது.

நேற்றுவரை வெங்கண்ணாவை அவர் பெரிதும் நம்பிக் கொண்டிருந்தார். ராயசம் பதவி என்றால் சாதாரணமானது அல்ல. அரசருடைய அந்தரங்கம் முழுமையும் ராயசத்திற்குத் தெரியும். அரசர் என்ன திட்டமிடுகிறார் என்பதையும் அவர் எப்படி நிறைவேற்றப்

போகிறார் என்பதையும் ராயசம் முதலில் அறிந்து விடுவார். வெங்கண்ணாவை நம்பி அவர் ராஜ்யபாரம் முழுவதையுமே ஒப்படைத்திருந்தார் என்று சொல்லலாம். ஆனால், வெங்கண்ணாவோ தனக்கு இருக்கும் ராயசம் பதவியைவிடத் தஞ்சை நாட்டின் அமைச்சர் பதவிதான் சிறப்பாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தமையால், தன்னை அரசர் சரியான முறையில் நடத்தவில்லை என்ற வீண் சந்தேகத்தால் தனக்கு உரிய மதிப்புக் கிடைக்கவில்லை என்ற கவலையில் உரிய பதவியை அடைவதற்கான சூழ்ச்சியைச் செய்வதிலேயே நாட்டம் கொண்டிருந்தார்.

அரசருடைய மகன் மன்னார்தாசனோ நகர மக்களிடையே கெட்ட பெயரைப் பெற்றிருந்தான். வேங்கடமகியின் குல விளக்கிடம் தகாத முறையில் நடந்ததாகச் செய்தி மன்னருக்குக் கிடைத்த பிறகு அவனுக்குரிய தண்டனை சிறைச்சாலைதான் என்று முடிவு செய்து, அந்த அடையவும் செய்துவிட்டார். விஜயராகவர் இவ்வாறு கடுமையாக நடந்து கொள்வார் என்று ராயசமே எதிர்பார்க்கவில்லை. தன் சொந்த மகன் செய்த குற்றத்தைப் பூசிமெழுகி அவனைக் காப்பாற்றி விடுவார் என்றுதான் பலரும் எண்ணியிருந்தார்கள். மேலும் வேங்கடமகியின் மகளை அவர் தன் மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதில் அவர் தயங்கமாட்டார் என்று கூட சிலர் எண்ணத் தவறவில்லை. ஆனால், மன்னர் தன் மகன் பெண் சபலம் கொண்டு செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள விரும்பவில்லை. தன் மகனுக்குக் கொடுக்கும் தண்டனை, நாடு முழுமையும் அறிந்து அத்தண்டனையால் பிறர் குற்றம் செய்வதைக் குறைத்துக் கொள்வதற்கு ஓர் உதாரணமாக இருக்குமென எண்ணி இருந்தார்.

மன்னார்தாசனோ தனக்கு இவ்விதத் தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. கடும் சிறைச்சாலையில் முதல் நாளே அவன் திக்பிரமை பிடித்து ஏதுவும் உண்ணாமல் யாரிடமும் பேசாமல் சோர்ந்து போய்க் கிடந்தான். தண்டனை கொடுத்து விட்டாரே யொழிய மன்னருக்கும் கவலை இல்லாமலில்லை. தனக்கு இத்தகைய சஞ்சலம் ஏன் வந்தது என்று அவர் ஆண்டவன் முன் கண்ணீர்விட்டுக் கதறிய நாட்களும் உண்டு. அதைத் தொடர்ந்துதான் மிகவும் நம்பிய ராயசமே தனக்கு விருப்பமான செயல்களைச் செய்ய முற்பட்டிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டவுடன் மேலும் கவலையில் ஆழ்ந்தார். சோதிடர்களை அழைத்து அவர்களிடம் தன் குறையைத் தெரிவித்து அதற்குப் பரிகாரம் தேடுவதைத் தவிர அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை.

அரண்மனைச் சோதிடர் அரசரின் ஜாதகத்தை மிகக் கவனமாக ஆராய்ந்தார். "இப்பொழுது அரசருக்கு மிகவும் போதாத காலம்" என்று

தெரிவித்தார். விஜயராகவர் மெல்ல நகைத்துக் கொண்டு, "சோதிடரே, நீங்கள் சொல்லித்தான் போதாத காலத்தைப் பற்றி நான் தெரிந்து கொள்ள வேண்டுமா? நீங்கள் ஆராய்வதற்கு முன்பே நான் அதைப் பற்றிய எதிரொலியை அறிந்து விட்டேன். திருவரங்கத்திற்குச் சென்று ஆண்டவனைத் தரிசிக்கும் போது அங்கே தஞ்சையைப் பற்றிப் பலர் பேசிக் கொள்வது என் காதில் விழுந்தது. செஞ்சியிலிருந்து நம் உதவியைக் கேட்பதற்காகத் தூதுவன் வந்ததாகவும், அவனை என்னிடம் வரவொட்டாமல் ராயசம் தடுத்து விட்டார் என்றும் நான் அறிந்து பிறகு அது என் போதாத காலம் என்பதைத் தவிர வேறு என்னவாய் இருக்க முடியும்?" என்றார்.

சோதிடர் சாமார்த்தியசாலி. சமயோசித அறிவு நிறைந்தவர். அவர் ராஜ்ய விவகாரங்களில் தலையிட விரும்பாவிடினும் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பாமல் "நீங்கள் இதைப் போய் ஒரு போதாத காலம் என்று சொல்லக் கூடாது. செஞ்சியிலிருந்து தங்கள் உதவியை நாடிவந்த தூதுவன் தங்களைச் சந்திக்காமல் போய்விட்டான் என்றால் அதனால் நஷ்டம் நமக்கல்ல, அவனுக்குத்தான். தங்களைச் சந்தித்திருந்தால் தங்கள் உதவியை அவன் பெற்றிருப்பான். இல்லாவிடில் உங்கள் ராயசமா படைகளைக் கொடுக்கப் போகிறார். இதனால் போதாத காலம் என்று அதை வைத்துக் கொண்டு சொல்லாதீர்கள். தங்கள் மகன் செய்த செயலிலும் தங்களுடைய போதாத காலத்தைத் தெரிவிக்கவில்லை. தங்கள் மகனுக்கு நீங்கள் தண்டனை கொடுக்காமல் இருந்திருந்தால் ஒரு வேளை மக்கள் சினந்தெழுந்து தங்களை எதிர்த்துப் புரட்சி நடத்த முடிவு செய்திருப்பார்கள். அதனால் தங்களுக்கு நான் சொன்ன இரண்டிலும் போதாத காலம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று கூறி நிறுத்தினார்.

விஜயராகவர் சற்றுத் திகைத்தார். 'இந்த இரண்டுமே என்னுடைய போதாத காலத்தைத் தெரிவிக்கவில்லை என்றால் உண்மையில் கெட்ட காலம் என்பது இன்னும் எப்படி வரப்போகிறதோ' என்ற ஐயப்பாட்டை மனத்திலே கொண்டார். அதை வெளிப்படுத்தவில்லை. ஆனால், அவருடைய முகம் அகத்தைப் பிரதிபலித்து விட்டது. சோதிடர் அதை அறிந்து "அரசே உங்களுடைய கிரக பலன்களை நான் நன்றாக அறிந்தவன். ஒவ்வொரு நாளும் என்ன நடக்கும் என்பதை நான் கணித்து வைத்திருக்கிறேன். ஆனால், சோதிட சாஸ்திரத்தின்படி ஓர் உண்மை, சோதிடன் தீங்கு வருவதைப் பற்றி அவ்வளவு தெளிவாக எடுத்துச் சொல்லிவிடக் கூடாது. சொல்லாமலும் இருக்கக் கூடாது. அதைச் சூசகமாகச் சொல்லித்தான் பரிகாரத்தை விஸ்தாரமாகத் தெரியப் படுத்த வேண்டும். சோதிட மேதைகளுக்கு ஏற்பட்ட விதி.

அந்த முறையில்தான் நான் தங்களுக்குப் போதாத காலம் என்று சொன்னேன். அதைக் கொண்டு நீங்கள் மிகவும் கலவரம் அடைந்து குழம்பி விட்டீர்கள் போல் தோன்றுகிறது. உங்களைப் போன்று கடவுள் பக்தி மிகுந்தவர்களுக்கு ஒருநாளும் இறைவன் கெடுதலைக் கொடுக்க மாட்டான். அத்துடன் தாங்கள் பிறருக்குப் பயந்து வணங்கிச் செல்லும் குணம் உடையவர்கள் அல்லர். தலை நிமிர்ந்து தங்கள் கொள்கையிலிருந்து வழுவாத நேர்மையாளர். அதனால் தங்களுக்குச் சிறு துன்பம் ஏற்பட்டாலும் அது பெரிது போல் தோன்றும். ஆனால், அத்துன்பம் சூரியனைக் கண்ட பனியைப் போல் உருகிவிடுவது திண்ணம்'' என்றார்.

சோதிடர் சாமர்த்தியமாகப் பேசினாலும் அரசருக்கு அவருடைய சமாதானம் கவலையைத் துரத்துவதாகத் தோன்றவில்லை. எதையோ சோதிடர் சொல்வதற்குத் தயங்குகிறார் என்று மட்டும் அவருக்குத் தோன்றியது. அதனால் சட்டென்று அச்சோதிடரை நோக்கி, "ஐயா தங்களை நான் வரவழைத்த காரணத்தை மறந்து விட்டேன். என்னுடைய கிரகநிலை எப்படி இருக்கிறது என்று கேட்டு, என்னைப் பற்றிய கவலையிலேயே நான் ஆழ்ந்துவிட்டேனே ஒழிய, நான் கூப்பிட்டதே என்னுடைய மகளின் திருமண விஷயமாகத்தான். அவளைப் பற்றிய கவலைதான் எனக்கு இப்பொழுது மேலோங்கி நிற்கிறது. அவள் ஜாதகத்தைப் பாருங்கள். அது என்ன சொல்லுகிறது என்று என்னிடம் சொல்லுங்கள். எனக்கு நேரப்போவதைப் பற்றித்தான் என்னிடம் சொல்லக் கூடாதே ஒழியப் பிறருக்கு நேரப் போவதைப் பற்றிச் சொல்லலாம் அல்லவா?'' என்று கேட்டார்.

சோதிடர் அரசருடைய முகத்தையே தனது அறிவு நிறைந்த கண்களால் உற்று நோக்கி அவர் இதயத்தையே புரிந்து கொள்பவர் போல் கண்கொட்டாமல் பார்த்து அரசர் கொடுத்த சுவடியை வாங்கி வைத்துக் கொண்டார்.

இளவரசி மோகனாவின் ஜாதகத்தைக் கணித்தவரே அவர்தான். பலமுறை அவர் அந்த ஜாதகச் சுவடியை எடுத்து வைத்துக் கொண்டு பார்த்திருக்கிறார். அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவர் உள்ளத்தில் ஒருவித வேதனை தோன்றும். அவரே அறியாதவாறு அவர் கண்ணுக்குள்ளிருந்து நீர் துள்ளும்போது உடனே சுவடியை மூடி வைத்து விட்டுக் கடவுளை நோக்கிக் கண்ணை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்யத் தொடங்கி விடுவார். சோதிடருடைய மனைவி பலமுறை அதைக் கவனித்திருக்கிறாள். ஒரு சமயம் அதைப் பற்றிக் கேட்கவே கேட்டுவிட்டாள். ஆனால், தன் மனைவியிடம் எதையும் ஒளிக்காத சோதிடர் இளவரசியின் ஜாதகத்தைப் பார்த்தவுடன் தான் பெருமூச்சு விடுவதும், கலங்குவதையும் பற்றி மட்டும் தெரிவிக்க

விரும்பவில்லை. அவர் இதயத்திலே அந்த ரகசியம் புதைந்து மண்மேடிட்டுப் போய் இருந்தது. சமீபகாலத்தில் அவருக்குச் சிந்தனை தோன்றவில்லை. இப்பொழுது அரசர் இளவரசியின் ஜாதகத்தை அவரிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னவுடன் அவர் அதை உடனே பார்க்காமல் மௌனமாக அமர்ந்திருந்தார். அதைப் பார்த்தால் பரிசீலனை செய்யுமாறு அரசர் வற்புறுத்துவார். பார்க்காவிட்டால் அரசரின் கட்டளையை அலட்சியப் படுத்தியதாக ஆகும். அதனால் சோதிடர் மிகச் சாமர்த்தியமாக, "அரசே! இளவரசிக்கு இது திருமணம் செய்ய வேண்டிய காலம். அவளுக்கு ஏற்ற வரன்கள் வந்து கொண்டிருக்கின்றன அல்லவா? ஓரிரு ஜாதகங்கள் தாங்கள் தங்களிடமிருப்பதாகத் தெரிவித்தீர்கள். அரச குடும்பப் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பொழுது பொதுவாக ஜாதகப் பொருத்தம் பார்ப்பது இல்லை. காந்தர்வ விவாகப்படியும், சுயம்வரம் முறையிலும் கல்யாணத்தைச் செய்துவிடுவார்கள். ஆனால், தாங்களோ வெகுகாலத்துக்கு முன்பே பிடிவாதமாக 'ஜாதகப் பொருத்தம் எந்த நாட்டு இளவரசருக்கு ஏற்றதாக இருக்கிறதோ அவருக்குத்தான் என் மகளை மணம் புரிவிக்கப் போகிறேன்' என்று கூறியிருக்கிறீர்கள். அதனால் தங்களிடமுள்ள ஜாதகங்களை என்னிடம் கொடுங்கள். விடியற்காலையிலே பூஜையில் வைத்துப் பிறகு எடுத்து நான் பார்க்கிறேன். பார்த்துப் பலனைக் கூறுகிறேன்" என்றார்.

சோதிடர் கூறியது அரசருக்குச் சரி எனப்பட்டது. அதனால் தன்னருகே இருந்த மரப் பெட்டியிலிருந்து இரண்டு மூன்று சுவடிகளை எடுத்துச் சோதிடரிடம் கொடுத்தார். சோதிடர் அவற்றைப் பார்த்துவிட்டு "மதுரையிலிருந்து எந்த ஜாதகமும் வரவில்லையா?" என்று கேட்டார்.

விஜயராகவருக்கு முகம் சட்டென மாறியது. "மதுரையா? துரோகிகள் வீட்டில் எஜமானன் சம்பந்தம் செய்து கொள்வது சரியென்று நீங்கள் கூடக் கருதுகிறீர்களா?" என்றார்.

சோதிடர் எதுவும் பேசவில்லை. ஜாதகங்களை வாங்கிக் கொண்டு அரசரிடம் விடைபெற்றுக் கொண்டார்.

ஆனால், அவற்றையெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த இளவரசி மோகனா விம்மும் ஒலி அரசர் காதில் விழுந்ததோ இல்லையோ சோதிடர் காதில் தெளிவாக விழுந்தது. அதற்கு எதிரொலியாக அவர் பெருமூச்சு ஒன்றை விட்டுக் கொண்டே விம்மல் வந்த திசையை மட்டும் திரும்பிப் பார்த்துவிட்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினார்.

# 29. மன்னரின் சந்தேகம்

அந்த அறையில் எழுந்த விம்மும் ஒலி விஜயராகவரைத் திடுக்கிட வைத்தது. இவ்வளவு நேரம் ஜோதிடருடன் தான் பேசிக் கொண்டிருந்ததை வேறு யாரோ கேட்டிருக்கிறார்கள் என்ற ஐயம் அவருக்குத் தோன்றியவுடன் வேகமாகச் சென்று ஒலி வந்த இடத்திலே அசைந்து கொண்டிருந்த திரையைத் தள்ளிப் பார்த்தார். மோகனா மெல்லக் கண்களைத் துடைத்தவாறு அங்கிருந்து சென்று கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது. "மோகனா நில், இவ்வளவு நேரம் இங்கேயா இருந்தாய்?" என்று அரசர் சற்றுக் கோபமாகக் கேட்டார். மோகனா திரும்பிப் பார்த்த பார்வை விஜயராகவர் மனத்தில் சட்டென வேதனையை அளித்தது. தன் குரலில் உஷ்ணம் இருந்தது. அவளுடைய இதயத்தில் வருத்தத்தை அதிகப்படுத்தி விடுமோ என்ற கவலையுடன் "மோகனா நீ ஏன் அழுகிறாய்?" என்று சாந்தமான குரலில் கேட்டுச் சமாதானப்படுத்த முயன்றார். மோகனா பதில் சொல்லவில்லை. கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டாள். அவளிடமிருந்து ஏதும் பதில் வராததால் விஜயராகவர் அவள் வருத்தத்தை அறிய முயன்று "நீ எதற்கு அழுதாய் என்பதை எனக்குச் சொல்லித்தான் ஆக வேண்டும்" என்றார். "உனக்கு ஏற்பட்ட வேதனை எதுவாய் இருந்தாலும் நான் தீர்க்கத் தயார்" என்று கூறவும், மோகனா மெல்லிய குரலில் "எனக்கு ஏதும் வேதனை இல்லை" என்று சமாதானம் கூற முயன்றாள்.

ஆனால் விஜயராகவர் அவள் பேச்சில் நம்பிக்கை கொள்ளவில்லை. அவள் உள்ளத்திலே இருப்பதை எப்படியாவது அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், "நீ இங்கே எப்போது வந்தாய் மோகனா?" என்று கேட்டார். "சோதிடர் வருவதற்கு முன்பே" என்று ஒரே வரியில் பதில் அளித்தாள் மோகனா. "சோதிடர் வருவதற்கு முன்பே என்றால் நாங்கள் பேசிக் கொண்டிருந்ததை நீ கேட்டாயல்லவா" என்று பரபரப்புடன் கேட்டார் அரசர். "ஆம்" என்று கூறிய மோகனா தந்தையை நிமிர்ந்துப் பார்த்தாள்.

"நான் சோதிடரிடம் ஒன்றும் பேசவில்லை. உன்னுடைய ஜாதகத்தை அவரிடம் காட்டினேன்" என்றார்.

"திடீரென்று என் ஜாதகத்தின் மீது உங்களுக்கு ஏன் அவ்வளவு கவலை பிறந்து விட்டது என்று நான் தங்களைக் கேட்கலாமா?" என்று மோகனா சற்றுப் பயத்துடன் கேட்டாள்.

"இப்பொழுது தான் உனக்குத் திருமணப் பருவம் வந்தது. எப்படியாவது உன் கல்யாணத்தை முடித்து விட வேண்டுமென்ற

ஆவலிலும் அவசரத்திலும் நான் சோதிடரை உடனே வரவழைத்தேன்" என்று சமாதானம் கூற முயன்றார்.

மோகனா உடனே பதில் சொல்லவில்லை. அவள் குனிந்து தரையைப் பார்த்தவண்ணம் இருந்தாள். பிறகு மெல்லிய குரலில் தந்தையை நோக்கி, "அப்பா, என் மனத்திலிருப்பதைச் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு அல்லவா?" என்று கேட்டாள்.

"என்ன அப்படிக் கேட்கிறாய் குழந்தாய்! என்னிடம் கேட்காமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறாய்? அல்லது உன்னுடைய ஆவலை நிறைவேற்றாமல் நான் வேறு எந்தக் காரியத்தைத்தான் செய்யப் போகிறேன்? நீ தைரியமாகச் சொல்லலாம்!" என்றார் அரசர்.

"எனக்கு இப்பொழுது விவாகம் வேண்டாம் அப்பா" என்று கூறித் தந்தையின் விழிகளை ஏறெடுத்து நோக்கினாள். மகளுடைய அந்த சொற்களையும் அவளுடைய தைரியத்தையும் கண்டு ஒரு கணம் திடுக்கிட்ட அரசர் அவள் கூறியதன் முழுப் பொருளையும் தெரிந்து கொள்ள விரும்பி அவள் முகத்தையே கூர்ந்து மீண்டும் அவளுடைய எண்ணத்தை அறிய முற்படுபவர் போல் பார்த்தார்.

"ஆமாம்! நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்" என்றாள் மோகனா.

"திடீரென்று அந்த முடிவுக்கு நீ வருவதற்கு என்ன காரணம் என்பதைச் சொல் மோகனா. அப்படிச் சொல்ல அவ்விதம் உன்னை யாராவது தூண்டி இருக்கிறார்களா?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார் விஜயராகவர்.

"என்னை யார் தூண்ட வேண்டும்? திருமணம் செய்து கொள்வது என்பது என்னுடைய சொந்த விஷயம். இதில் மற்றவர்களுடைய குறுக்கீடு அல்லது உபதேசங்கள் எந்த விதத்திலும் என்னைப் பாதிக்காது. நான் தீவிரமாகச் சிந்தித்தேன். இங்கு நடக்கும் சூழ்நிலைகளையெல்லாம் புரிந்து கொண்டேன். கடைசியாகத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்" என்றாள் மோகனா.

தன் மகள் பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசுவதையும் 'தன் சொந்த விஷயம், சூழ்நிலை' என்றெல்லாம் பெரும் அனுபவசாலி போல் - வயது முதிர்ந்தவள் போல் கூறுவதையும் கேட்ட விஜயராகவருக்கு ஒரு கணம் கோபமும் மறுகணம் தன் மகளின் மனத்தை மாற்றியவர் யார் என்று எப்படியாவது அறிவதிலுள்ள ஆவலும் சேர்ந்தன. மகளிடம் உஷ்ணமாகப் பேசுவதில் அர்த்தமில்லை என்பதைத் தெரிந்து கொண்ட அரசர், அவள் அருகே சென்று அவள் கண்களைத் துடைத்து மெல்ல அணைத்தவாறு மஞ்சத்திற்கு அழைத்துச் சென்று தன் அருகே உட்கார வைத்து, "குழந்தாய்!

உன்னுடன் சிறிது காலயாக நான் சரிவரப் பேச முடியாமல் போனதனால் ஏற்பட்ட விளைவு என்று நான் நினைக்கிறேன். நீ சொல்லாவிட்டாலும் எனக்கு நன்றாகத் தெரியும். வல்லம் கோட்டைக்குச் சமீப காலமாக நீ தொடர்ந்து சென்று கொண்டிருந்ததன் விளைவுதான் நீ இவ்வாறு பேசுவதற்கான தைரியத்தை உனக்கு அளித்திருக்கிறது. உன்னுடைய நலத்திற்கு ஏற்ற முடிவைச் செய்யக் கூடியவன் என்னைவிட ஒருவன் இருக்க முடியும் என்று நீ நம்புகிறாயா? உன்னுடைய சொந்த விஷயமும் அல்லவா? உனக்கு ஏற்படும் வருத்தமும் தொல்லையும் துயரமும் இடையூறும் என்னையும் பாதிக்கக் கூடியன என்பது உனக்குத் தெரியாது. உன் திருமண விஷயம் என்பது இந்த நாட்டையே பாதிக்கக்கூடியது என்பதை உனக்கு நான் முன்பே எடுத்துச் சொல்லி இருக்க வேண்டும். அப்படிச் சொல்லாதது என் தவறுதான்" என்று கூறி நிறுத்தினார்.

மோகனா உடனே தந்தையின் பக்கம் திரும்பி, "என் திருமணத்தால் இந்த நாடு எப்படிப் பாதிக்கும் என்று நீங்கள் சொல்கிறீர்கள்? நான் ஒரு இளவரசி; எந்த நாட்டுக்காவது போய் அந்த நாட்டு இளவரசருடனோ அரசருடனோ அல்லது அரச குடும்பத்தில் ஒருவருடனோ வாழ வேண்டியவள். இந்த நாட்டை விட்டே போக வேண்டியவளாதலால், இந்த நாட்டின் நல்லது கெட்டது எப்படிப் பாதிக்கப்படும் என்பது எனக்குப் புரியவில்லை. திருமணத்தால் பாதிக்கப்படும் என்பது எனக்குப் புரியவில்லை. திருமணத்தால் ஏற்படும் சாதக பாதகங்கள் திருமணம் நடக்காமல் போனாலும் ஏற்படலாம் அல்லவா?" என்றாள் மோகனா.

தான் மிகவும் சாதுர்யமாகப் பேசித் தன் தந்தையை மேற்கொண்டு பேசமுடியாமல் செய்து விட்டதாக அவள் எண்ணினாள். ஆனால் உடனே விஜயராகவர் மோகனாவின் கரங்களைப் பிடித்துக் கொண்டு, "மோகனா, நீ சொல்லிய வார்த்தையிலிருந்தே இந்த நாட்டிற்கு நீ எவ்வளவு முக்கியமானவள் என்பது தெரிந்திருக்கிறது. உன்னை மணம் புரிந்து கொள்ளும் இளவரசனோ அல்லது அரசனோ நல்லவனாக இருந்தால்தான் இந்த நாட்டிற்குப் பயன் ஏற்படும். இந்த நாட்டைக் கபளீகரம் செய்ய நினைப்பவன் உன்னை மணந்து கொண்டு விட்டால் நாம் அறிந்திருந்தே இந்த நாட்டு மக்களை - இந்த நாட்டை மாற்றானிடம் ஒப்படைப்பது போல் ஆகும். மேலும் ஓர் உண்மையை உனக்கு இதுவரையில் சொல்லவில்லை. இந்த நாட்டின் வருங்கால இளவரசியே நீதான். வருங்கால அரசியின் நல்வாழ்வுதான் இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வு. அதனால் உனக்கு நல்ல இடமாகப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது என்பதை நீ இப்பொழுது நன்றாக உணர்ந்திருப்பாய் என்று நினைக்கிறேன்" என்றார்.

மோகனா ஒரு கணம் சிந்தித்தாள். இந்த நாட்டின் வருங்கால அரசி என்று தந்தை கூறியதன் பொருள் அவளுக்கு விளங்காமல் இல்லை. முன்பே வல்லத்தில் தனது அத்தை அதைப்பற்றி உறுதியாகச் சொல்லியிருக்கிறாள். அதனால்தான் தனது திருமண விஷயத்திலும் அவள் அதிக சிரத்தை கொண்டிருந்தாள் என்பதும் அவளுக்குத் தெரிந்ததுதான். அந்த உரிமையைத் தந்தையின் வாய் மூலமாகத்தான் இப்பொழுது கேட்கும் பொழுது உரிமையிலுள்ள உண்மையின் நிலை என்ன என்பதைத் தந்தையின் வாயிலாகவே தெரிந்து கொள்ள விரும்பினாள். அதைக் கேட்கும்பொழுது ஏதோ முன்னம் தெரிந்து கொள்ளாதவள் போலும் அப்போது தான் அதைக் கேட்டுத் திடுக்கிட்டவள் போலும் நடித்து, "தந்தையே என்ன சொன்னீர்கள்? இந்த நாட்டின் வருங்கால அரசி நான் என்றா? என் செவிகளை என்னால் நம்ப முடியவில்லை. எனக்கு ஏதோ திடீர் என்று பெரிய பதவியைப் பற்றிக் கூறித் திருமண விஷயத்தில் என்னைச் சம்மதிக்க வைப்பதற்காகத்தான் இல்லாத உரிமையை எனக்கு அளிக்க முயல்கிறீர்கள். அண்ணன் இருக்கும் போது தங்கை எங்கேயாவது அரியணை ஏறுவது உண்டா? மேலும் ஒரு பெண் அரசாட்சியை எடுத்து நடத்துவது நல்லதுதானா? தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. அதனால்தான் நான் தங்களை இப்படிக் கேட்க விரும்புகிறேன்" என்றாள் மோகனா.

மகள் தெரிந்தும் தெரியாதது போல் பேசுகிறாள் என்பதை உணராத அரசர், "உன் அண்ணன் இனி எந்த நாட்டிற்கும் அரசனாக முடியாது. ஒழுக்கமும் பண்பும் இல்லாதவன் நாட்டை ஆள்வதற்குத் தகுதியற்றவன். அவன் ஆளக்கூடிய இடம் இனி ஒன்றே ஒன்றுதான். கடுஞ்சிறை. இருள் நிறைந்த சிறை. அதை ஆண்டு முடிந்த பிறகு பரந்து விரிந்த மேல் உலகம்தான் அவன் ஆட்சி நடத்தக்கூடிய இடம். அதனால் அவனைப் பற்றி என்னிடம் ஏதும் பேசாதே. அவன் என்னுடைய மகன் என்பதையே நான் மறந்து விட்டேன். நீ ஒருத்தி தான் எனக்குப் பெண் என்றும் அடுத்த வாரிசு நீதான் என்று நான் இறுதியாக முடிவு செய்து விட்டேன். அதனால்தான் நாட்டை ஆளும் பொறுப்பு உன்னிடம் தான் இருக்கிறது எனும் திடமான முடிவுக்கும் நான்வந்து விட்டேன். அதனால்தான் உன்னுடைய நலனில் நான் இரட்டிப்பு உற்சாகம் கொண்டு, உரிமை கொண்டு சோதிடரை வரவழைத்துச் சீக்கிரமாகப் பார்க்க எண்ணம் கொண்டேன். உன்னை மணக்கப் போகும் அரசருடைய ஜாதகத்தை அலசி ஆராய்ந்துத் தெரிந்து கொண்ட பிறகுதான் உனக்குத் திருமணம் புரிந்து வைக்க வேண்டுமென்று எண்ணத்தில் உறுதியாக ஈடுபட்டேன். சோதிடரிடம் பேசிக் கொண்டிருந்தேன். நீ வந்தாய். வந்தவள் நேராக வந்திருக்கலாம்.

திரைக்குப் பின்னால் நின்று கொண்டு நாங்கள் பேசுவது முழுவதையும் நீ கேட்டுக் கொண்டிருந்தாய். உன் நலன் அன்றி வேறு ஏதும் நான் அவரிடம் பேசவில்லை என்பது உனக்குத் தெரிந்திருக்கிறது அல்லவா? ஆனால் நீயோ திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்ற முடிவு செய்திருப்பதாகச் சொல்கிறாய்; உனக்குப் பிடித்தம் இல்லாத மணாளனை நான் தேர்ந்தெடுத்து விடுவேன் என்ற பயத்தில் அவ்வாறு முடிவு செய்து விட்டாயா?'' என்று சொல்லி அரசர் மோகனாவின் தலையை மெல்ல வருடினார்.

மோகனா நகைத்தாள். "இந்த நாட்டின் அரசியாவதற்கு எனக்குப் பெருமையாகவும் இருக்கிறது. இந்த நாட்டு மக்கள், நல்லவர்கள். பெரியோர்கள் - எல்லாம் என்னை 'அரசி அரசி' என்று கொண்டாடும் பொழுது ஏற்படும் பெருமிதத்தை இப்பொழுதே நினைக்கும் பொழுது கூட உள்ளம் பொங்குகிறது. ஆனால் அதற்கு நான் தகுதியானவளா என்பதைப் பற்றிய சந்தேகம் என் உள்ளத்திலே எப்பொழுதுமே இருந்து கொண்டிருக்கிறது. அடிக்கடி என் இதயத்திலே எங்கோ புரிய முடியாத வேதனை ஏற்படுகிறது. என்னுடைய எண்ணக் கனவுகளை யெல்லாம் முறியடிப்பதற்காக யாரோ பயங்கரமான சதி செய்து கொண்டிருப்பதாக இரவில் தூக்கத்தில் கனவுகள் தோன்றுகின்றன. அடிக்கடி என் உள்ளம் நடுங்குகிறது. மேலும் நான் கேள்விப்படும் செய்திகளை எல்லாம் கேட்கும் போது எனக்கு நல்லது ஏற்படாது என்ற பயம் உறுதியாகத் தோன்றுகிறது. அதனால்தான் ஏற்படப் போகும் துயரத்திருந்து தப்புவதற்காகத் திருமணமே வேண்டாமென்று கூட முடிவு செய்து விடுவோம் எனும் நிலைக்கு நான் வந்தேன்'' என்றாள் மோகனா.

மகளின் துயரம் நிறைந்த குரலையும் அவள் கூறுவதையும் கேட்ட அரசர், ஒரு கணம் அஞ்சினார். சூழ்நிலை உருவாவதைப் பற்றி மகள் சொல்கிறாளே அது எதுவாக இருக்கும் என்று அவருக்குப் புரியவில்லை. "உனக்கு விரோதமான சூழ்நிலை என்று நீ சொல்கிறாயே அதைப் பற்றி அது என்ன என்பது பற்றி என்னிடம் சொல்லக் கூடாதா? சூழ்நிலையை உருவாக்குபவரை நான் முறியடிக்க மாட்டேனா?'' என்று அரசர் கேட்டார்.

மோகனா மெல்ல நகைத்தவாறு கூறினாள்: "நன்மை செய்யக் கூடியவர்களே அந்தச் சூழ்நிலையை உருவாக்குபவர்களாக இருந்தால்?''

"நீ என்ன சொல்கிறாய் மோகனா?"

"நான் ஒன்றும் சொல்லவில்லையே! என்னுடைய நன்மைக்கு மாறாகச் சூழ்நிலையை உருவாக்குபவர்களை ஒன்றுமே செய்துவிட முடியாது என்றுதான் சொல்லுகிறேன்.''

"எனக்கு விளங்கவில்லை மோகனா; புரியும்படி சொல்லேன்."

"இதில் மறைவான பேச்சு ஒன்றும் இல்லை தந்தையே! நான் அதைச் சொல்லாவிட்டால் உங்களுக்கு என் மேல் கோபம் ஏற்படும். நான் ஏதோ தங்களுக்கு விரோத எண்ணத்துடன் இந்த மாளிகையில் வாழ்கிறேன் என்ற எண்ணம் தோன்றும். அதனால்தான் நான் சொல்வதிலே மறைவான வார்த்தை தொனிக்கிறது" என்றாள் மோகனா.

"பரவாயில்லை மோகனா, நீ சுடும் சொற்களை என் மேல் வீசினால் கூட நான் உன்னைப் பற்றித் தவறாக நினைக்க மாட்டேன். என்னுடைய அருமைக் குழந்தையாகத் திகழும் உன்னை ஒதுக்கித் தள்ளிவிட என்னால் முடியாது. இந்த நாட்டிற்கு அடுத்தபடியாக நான் உன் மீதுதான் சகல அன்பையும் வைத்திருக்கிறேன். அதனால் நீ தைரியமாகச் சொல்லலாம். என் மீது குறையிருந்தாலும் அதை நீ சொன்னால் அன்றோ என்னால் புரிந்து கொள்ள முடியும்" என்றார் அரசர்.

மோகனா ஒரு கணம் கூட யோசிக்கவில்லை. சுற்றி வளைக்கவும் விரும்பவில்லை. தெளிவாகத் தன் மனத்தில் இருப்பதை ஒன்றுவிடாமல் தந்தையிடம் எடுத்துக் கூறினாள். அவள் கூறிய ஒவ்வொரு சொல்லையும் அரசர் கவனமாகக் கேட்டார். கோபம் இல்லாமல் கேட்டார். முகத்திலே ஒரு வித சலனமும் இல்லாமல் கேட்டார். அவளுடைய சொற்களிலே அவர் ஆத்திரம் அடையும் படியான கூற்றுக்கள் இருந்தபோதிலும் அதை அவர் வெளியே தெரிவித்துக் கொள்ளாமல் கேட்டுக் கொண்டே இருந்தார். ஆனால் கடைசியாக தான் கண்டது கனவு என்று அவள் சொன்ன ஒன்றை மட்டும் அவரால் நம்ப முடியவில்லை.

அழகான இளவரசன் ஒருவனுடைய ஓவியம் என்பதை அவள் சொல்லி அவர் கேட்டுக் கொண்டிருந்த பொழுது அது கனவில் நடந்த நிகழ்ச்சியாகக் கொள்ளாமல் தஞ்சை மாளிகைக்குள் யாரோ ஒருவன் வந்து இளவரசியின் மனத்தை மாற்றிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்ற அளவுக்கு உறுதியாக நம்பினார்.

அதை எப்படி அறிந்து கொள்வது என்பதைப் பற்றிய சிந்தனையில் உடனடியாக மூழ்கி விட்டபடியால் மகள் மோகனா அதுவரையில் கூறிய சொற்கள் எல்லாம் அவர் மனத்திலே அதிகமான சலனத்தை ஏற்படுத்தவில்லை.

யாரோ இளவரசியை ரகசியமாகச் சந்தித்துச் சென்றிருக்கிறான் என்று உறுதியாக அவர் நம்பினார்.

இளவரசியின் அந்தப்புரத்திற்கு வந்தவன் யாராக இருக்க முடியும்? என்பதை உடனே அறிய வேண்டும் என்ற உறுதியுடன் அவர் சரேல் என்று மகளிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் அங்கிருந்துப் புறப்பட்டுச் சென்றார்.

# 30. காத்தானின் சதி

சந்தனத் தேவன் மீது தனியாகக் காதல் கொண்டிருந்த மாணிக்கவல்லி காத்தவராயனுடைய சொற்களால் மனம் மாறும் நிலையை அடைந்தாள். தன் இதயத்தையே சந்தனத் தேவனிடம் ஒப்படைத்திருந்த மாணிக்கவல்லி இப்பொழுது அதை அவனி டமிருந்து மெல்லப் பறித்துக் கொள்ள வேண்டிய ஒரு நிலைக்கு வந்து விட்டாள். ஏனெனில் காத்தவராயன் அவ்வளவு அழுத்தமாக சந்தனத்தேவன் மீது இல்லாததையும் பொல்லாததையும் கூட்டியும் குறைத்தும் சொல்லிவிட்டான். மாணிக்கவல்லிக்கு என்ன செய்வது? என்றே தெரியவில்லை. சுந்ததேவனிடம் தான் கேட்ட செய்தியைக் கூறி முறையிடலாம் என்றாலோ சுந்ததேவன் அந்த இடத்திற்கு வந்துப் பல நாட்களாகி இருந்தன. காத்தான் ஒரு வேளை பொய் சொல்லியிருப்பானோ என்று மாணிக்கவல்லி ஒருகணம் சிந்தித்தாள்.

அவன் இதுவரை சொன்னது அனைத்தும் பொய்யாகவே இருக்கக் கூடாதா என்று கூட அவள் தெய்வத்தை வேண்டிக் கொண்டாள். பொய்யாகப் போய்விட்டாலும் அதற்காகக் காத்தான் மீது தான் கோபம் கொள்ளக் கூடாது என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். சந்தனத்தேவன் தன்னை அவ்வளவு எளிதில் மறந்து இருப்பானா, தன்னைவிட மற்றொருத்தியை மனத்தில் நினைக்கும் துணிவு கூட அவனுக்கு வராதிருக்குமா என்றெல்லாம் எண்ணி எண்ணி மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொண்டு அவள் இரவெல்லாம் உறங்காமல் கிடந்தாள்.

கள்ளர்கூட்டத்து வீரர்கள் குடிலுக்குள் நுழைந்து அவள் சோர்வுற்று வேதனையுடன் படுத்திருக்கும் காரணத்தை அறிவதற்கு முயன்றார்கள். மாணிக்கவல்லியிடம் மட்டும் காத்தான் சந்தனத்தேவனைப் பற்றிக் கூறினானே தவிர, மற்றவர் களிடம் மூச்சுக்கூட விடவில்லை. காத்தான் வந்த பிறகு மாணிக்க வல்லி ஏனோ மாறிவிட்டாள் என்று வீரர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். காத்தானைக் காரணம் உபாராக்கள் பிரிந்து இந்தப் பக்கத்துக்குள்ளேயே சரி செய்ய கேட்கவும் அவர்கள் முனைந்தார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் காத்தான் நடந்த விஷயத்தைச்

சொல்லாமல் வேறு விதமாகப் பொய் சொல்லி மேற்கொண்டு அவர்கள் ஏதும் கேட்காமல் செய்து விட்டான்.

மாணிக்கவல்லி கலகலப்பாக ஆடுவதும் பாடுவதுமாக அந்தக் காட்டின் நடுவே புது உற்சாகத்தை ஏற்படுத்திக் கொண்டிரா விட்டால் அவர்களுக்குச் சோர்வு வந்து சேர்ந்துவிடும். அவர்களுடைய உறுதியான நடவடிக்கைகளுக்கு அவளுடைய அழகிய தோற்றமும் அவள் தன் இடையை அசைந்து ஆடுவதும் கிள்ளை மொழி போல் ஒவ்வொரு வரிடமும் வந்து ஓரிரு வார்த்தைகளைப் பேசிச் செல்வதும் கள்வர்களின் திட உணர்ச்சியை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. அன்று அவள் எதிலும் கவனம் செலுத்தாமல் குடிலைவிட்டு வெளியே வராமல் ஆடை ஆபரணங்கள் அணியாமல் அலங்காரம் செய்து கொள்ளாமல் கூந்தல் தரையில் அவிழ்ந்து புரள, காய்ந்த கோடுகள் முகத்தில் வெள்ளை வரியைப் படரவிட சோகக் காண்டமாக அவள் விளங்கியது கள்வர்களின் அன்றாட நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தியது. காலையும் மாலையும் அவர்கள் சோர்ந்து போய் ஒரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்து இருந்தார்கள்.

மாணிக்கவல்லி இப்படித் திடீரென மாறிவிடுவாள் என்று காத்தான் கூட எதிர்பார்க்கவில்லை. அவள் இரவிலும் உண்ண வில்லை, உறங்கவில்லை. பொழுது விடிந்து சூரியன் உச்சியை நெருங்கும் நேரம் வந்த பிறகு கூட அவள் எழுந்து வந்ததாகத் தெரியவில்லை. வழக்கமாக அந்தக் குடிலிருந்து உணவு தயாரிக்கக் கிளம்பும் புகையைக் கூடக் காணோம். கள்வர்கள் வந்து அவள் கிடக்கும் நிலையைக் கூறிச் செய்தியை விசாரிக்கத் தொடங்கிய பிறகுதான் காத்தான் பயந்து போய் மெல்ல அவள் படுத்திருக்கும் அறைக் கதவைத் தட்டினான். அது திறந்திருந்தது. மங்கிய வெளிச்சத்தில் அவள் வெறும் தரையில் கிடந்தாள். காத்தான் அவளருகே சென்று மண்டியிட்டு அமர்ந்தான். சந்தனத்தேவனைப் பற்றி அவன் அவ்வளவு அவசரப்பட்டு அவளிடம் சொல்லியிருக்க வேண்டாம். அப்படி ஒன்றும் முடிவடைந்த காரியமும் அன்று அது. பின் ஏன் வெகு அவரசமாக அந்தச் செய்தியைத் தலைமேல் போட்டுக் கொண்டு மாணிக்கவல்லியிடம் ஓடிவந்து சொல்ல வேண்டும்?

காத்தான் அந்தச் சந்தர்ப்பத்தை வெகு நாள்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அது வந்து விட்டது. சந்தனத்தேவன் போன்ற தலைக்கனம் பிடித்தவர்களுக்கு எப்படியாவது தக்க தண்டனை வாங்கிக் கொடுத்துவிட வேண்டுமென்று வெகு நாள்களாக அவன் கருவிக் கொண்டிருந்தான். அதற்கான வாய்ப்புக் கிடைத்தவுடனே அதை நழுவவிட அவனுக்கு மனம் வரவில்லை.

சந்தனத்தேவன் மீது காத்தான் கொண்ட கோபத்திற்குக் காரணம் ஒன்றும் பெரிதில்லை. ஏதோ ஒரு சமயம் கொள்ளை அடித்த பணத்தைப் பங்கு போட்ட போது ஒரு வைரக் காசு மாலையைத் தனக்கு வேண்டுமென்று காத்தான் கேட்டும் சந்தனத்தேவன் வெகு அலட்சியமாக, "எந்தக் காதலிக்குக் காசுமாலையைக் கொடுப்பதற்காகக் கேட்கிறாய். காடு வா வா என்று சொல்லும் கிழவரெல்லாம் காசு மாலைக்கு ஆசைப்பட்டால் என்னைப் போன்ற இளங்காளைகள் வைர வைடூரியங்களாகத்தான் தேடும்படியாக இருக்கும்" என்று அவன் கூறி மறுத்துவிட்ட ஒரு சொல் காத்தானை வேகமாகப் பாதித்து விட்டது. உண்மையிலேயே அந்தக் காசு மாலையை ஜெயங் கொண்டத்திலுள்ள தன் ஆசை நாயகிக்குக் கொடுக்க வேண்டுமென்று பலகாலமாகத் திட்டமிட்டிருந்தான்.

அது நிறைவேறாதது மட்டுமன்று, தன்னைப் படுகிழவனாக்கித் தனக்கும் ஆசை, அனுபவம், காதல், உணர்ச்சி எல்லாம் உண்டு என்பதைச் சந்தனத்தேவன் மதிக்காமல் கூறிக் குத்தலாகப் பேசியது அவன் உள்ளத்திலே வெஞ்சினத்தை அப்பொழுதே விதைத்து விட்டது.

தனக்குக் காதலி இல்லை என்று சொல்லும் சந்தனத்தேவன் மாணிக்கவல்லியுடன் கொஞ்சுவதும் கூடிக் குலாவுவதும் அவளைத் திருமணம் முடித்துக் கொள்ளத் திட்டமிடுவதும் அவனுக்கு அவ்வப்போது ஆத்திரத்தை ஏற்படுத்தி, பழைய வெஞ்சினத்தின் மீதும் தண்ணீர் தெளித்துக் கொண்டேயிருக்கும். சந்தனத்தேவனுடைய காதலைக் கைகூடாமல் செய்ய வேண்டு மென்னும் திட்டம் அன்று அவன் விதைத்த விதையிலே உருவாகி விடும் என்ற சந்தோஷத்தில் அவன் ஓடிவந்து அந்தச் செய்தியைத் தெரிவித்தான். சந்தனத்தேவன் தஞ்சை இளவரசியை மணக்கப் போகிறான் என்ற செய்தியைச் சொன்னவுடனே மாணிக்கவல்லி அவனை மறந்து விடுவாள் என்று அவன் எண்ணி இருக்க, அவளோ மிக வியாகூலம் அடைந்து பெரும் நிதியத்தைப் பறிகொடுத்தவள் போல் இருட்டறையில் சோகமே வடிவாய்க் கிடப்பதைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டு விட்டான். உண்மைக்காதல் கொண்டவர்கள்தாம் காதலில் தோல்வியும் ஏமாற்றமும் ஏற்படும்போது இடிந்து விடுவார்கள் என்று அவன் அறிந்திருக்கிறான். மாணிக்கவல்லி சந்தனத்தேவன் மீது அழியாக் காதல் கொண்டிருக்கும் நிலை அவனுக்கு அப்பொழுதும் புரியவில்லை. ஏதோ சிறுபிள்ளை விளையாட்டு அவர்கள் விளையாடுகிறார்கள் என்றுதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். சிறுபிள்ளை கட்டி இருக்கும் மணல் வீட்டை எளிதிலே சிதைத்து விடலாம் என்ற எண்ணத்துடன் தான் அவன் சந்தனத் தேவன் திருமணம் செய்துக் கொள்ளப் போவதைப் பற்றிக் கூறியது. ஆனால்,

அந்தச் செய்தியோ மாணிக்கவல்லியின் மனத்தில் இவ்வளவு பெரிய வேதனையை அளித்து விடும் என்று அவன் நினைக்கவே இல்லை. அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது, திடீர் என்று தலைவர் கந்ததேவன் அங்கே வந்து மாணிக்கவல்லியின் சினத்தின் - வேதனையின் காரணத்தை அறிந்து அதை ஏற்படுத்தியதன் செய்கையை அறிந்தால் உடனே தன்னை இரண்டு துண்டாக வெட்டி ஏரியிலே போட்டு விடுவார் என்பதும் அவனுக்குத் தெரியும். அதனால் அவன் மாணிக்கவல்லி துயரத்தை மாற்றுவதற்காக அறைக்குள் நுழைந்தான்.

துயர் நிலையில் சோக வடிவாய்ப் படுத்திருக்கும் மாணிக்கவல்லியின் வனப்பு மிக்க தோற்றம் ஒரு கணம் அவனைத் தடுமாற வைத்தது. பாதி பட்டும் படாமலும் அவள் உடலிலே விழுந்து கொண்டிருக்கும் ஒளி அவளுடைய அங்கங்களின் எழிலைப் புலப்படுத்தியது. அவன் மனத்தில் புதிய போதையை ஏற்படுத்தியது. நெகிழ்ந்த ஆடைகள் அவனுடைய உள் விகாரத்தை மேலும் மேலும் தூண்டிவிட்டன. அரைக் கண்ணை மூடிய நிலையில் ஆழ்ந்த சிந்தனையில் கிடக்கும் மாணிக்கவல்லி யாரோ வரும் காலடி ஓசையைக் கேட்டவுடன் மெல்ல விழியைத் திறந்துப் பார்த்தாள். துயரச் செய்தியைச் சொன்ன காத்தான் மீண்டும் அங்கே வந்து மெல்லத் தன் அருகே உட்கார முயன்று கொண்டிருக்கிறான். ஒரு வேளை நேற்று தான் சொன்ன செய்தி விளையாட்டாகச் சொன்னது என்று கூறிவிட்டுப் போகத்தான் வந்து இருக்கலாம் என்ற நினைவில் அவள் மெல்லிய குரலில் "வாருங்கள்" என்று அழைத்தாள்.

காத்தானுக்கு அப்பொழுதுதான் உயிரே வந்தது எனலாம். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியான செய்தியில் தன் மீது அவள் ஆத்திரம் கொண்டு விடவில்லை என்ற தைரியத்தில் பேச்சை ஆரம்பிக்கும் முன்பாக அசட்டுச் சிரிப்பு ஒன்றைக் கொட்டினான்.

மாணிக்கவல்லி வாடிய பெருமூச்சு ஒன்றைவிட்டுப் புரண்டு படுத்துக் கையூன்றி மெல்ல எழுந்துச் சுவரில் சாய்ந்து கிடந்தாள்.

வலது காலை நீட்டி இடது காலைச் சற்று மடக்கிய நிலையில் அவள் அமர்ந்திருந்த கோலம் காத்தான் உடலில் புல்லரித்தது.

அந்த வடிவழகிக்குச் சொந்தமானவன் சந்தனத்தேவனே என்பதை நினைக்கும் போது அவனுக்கு மீண்டும் வெஞ்சினத்தின் தீய வாடை எழுந்தது.

கண்களை மூடுவதும் திறப்பதுமாக காத்தான் பேசட்டும்' என்ற எண்ணத்தில் மாணிக்கவல்லி பெரு மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் போது காத்தான் அசட்டுச் சிரிப்புடன், "என்ன குழந்தை! நேற்றைக்கெல்லாம் சாப்பிடாமலே படுத்துவிட்டாயாமே. உன்

கண்களைப் பார்த்தால் இரவெல்லாம் உறங்காமல் கழித்து விட்டது தெரிகிறது. ஓர் இரவிலேயே இவ்வளவு வாடி விட்டாயே" என்று காத்தான் பேச்சைத் தொடங்கினான்.

செப்புக்குடம் மேலும் கீழுமாக அசைவதைப் போன்று பெருமூச்சினால் ஸ்தன பாரங்கள் அசைய, மாணிக்கவல்லியும் புன்சிரிப்பு ஒன்றை உகுத்தாள்.

"இதையெல்லாம் மனத்திலே வைத்துக் கொண்டிருக்க முடியுமா குழந்தை? உடனுக்குடன் மறந்து விடுவதுதான் நல்லது. வேதனையால் உள்ளத்தை வாட விட்டால் கலைந்து விட்ட அழகு மீண்டும் வளராது" என்று காத்தான் மெல்லச் சொன்னான்.

காத்தான் என்ன சொல்கிறான்? மீண்டும் நேற்றுச் சொன்ன அதே செய்தியை உறுதிப்படுத்துவது போன்று மீண்டும் பேசுகிறானே என்று எண்ணிய மாணிக்கவல்லி அவன் கூற்று உண்மையானதுதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மெல்ல சூள்கொட்டி, "அதை எப்படி மறக்க முடியும் காத்தா? முள் குத்தினாலே பாதம் கடும் வலியை ஏற்படுத்துகிறது. மெல்லிய பாதத்திற்கே அந்தக் கதி என்றால் இதயத்திலே இடியை அல்லவா அவர் போட்டு விட்டார்" என்றாள் மாணிக்கவல்லி. மாணிக்கவல்லியின் அழுத்தமான எண்ணத்தை மாற்றுவதற்காக, "இதையெல்லாம் நீ பெரிய காரியமாக எடுத்துக் கொண்டால் உன்னுடைய வாழ்நாள் முழுவதும் நீ தைரியமாக எப்படித் தள்ள முடியும் குழந்தாய்?" என்றான் காத்தான்.

"முதல் படியே வழுக்கி விட்டால் மாளிகையிலே ஏறப்போகும் படிகள் எல்லாம் வேதனையாகத்தான் தோன்றும். அந்த மாளிகையை அடைய வேண்டுமே என்று கூட எண்ணம் தோன்றாமல் இருக்குமா?" என்று புதிர் போல் பேசினாள் மாணிக்கவல்லி.

காத்தானுக்கு அவள் பேச்சு புரியாமல் இல்லை. அவளுடைய சிறிய துயரும், அவளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த அனுபவமும் சாதாரணமானது என்று விளக்க விரும்பிய காத்தான், "உனக்கு என்ன வயதாகி விட்டது குழந்தாய்? சந்தனத்தேவன் உன்னிடம் ஏதோ சிறு குழந்தை என நினைத்து விளையாடியிருக்கலாம். அவனுக்கு அப்படி என்ன வயதாகிவிட்டது. ஒருவர் மனத்தை ஒருவர் முழுவதும் புரிந்து கொள்ளக்கூடிய பருவம் இல்லை. ஏதோ வானிலே சாதாரணமாகச் செல்லும் மேகம் அவசரமாக உதிர்க்கும் சிறு மழைத்துளி போல் அவன் உன் மீது அன்பைப் பொழிந்திருக்கலாம் அல்லது அவனுக்கு நாடு நகரங்களிலேயுள்ள ஆசை நாயகிகளைப் போல் உன்னையும் ஒருத்தியாக நினைத்துப் பழகி இருக்கலாம். நீ என்னமோ உன்னுடைய உயிரே போய்விட்டது போன்று வேதனைப் படுகிறாயே!" என்றான்.

மாணிக்கவல்லியின் உடல் சிலிர்த்தது. காத்தான் நேற்றுச் சொன்னதைத்தான் இன்றும் சொல்லுகிறான். ஆனால், அவள் நேற்று உடலின் மேல் பாகத்தைத்தான் குத்தியிருந்தான். இப்பொழுது அந்தக் கட்டாரியை அழுத்தமாக இதயத்தில் பாய்ச்சிவிடத் தன் பலத்தைப் பயன்படுத்தியிருக்கிறான்.

உண்மையில்லாமல், அப்படிச் செய்ய அவன் முயல மாட்டான் என்ற காரணத்தினால் துயரம் நெஞ்சை வந்து அடைக்க, "காத்தா! அப்படியெல்லாம் நீங்கள் அவரை நினைத்து விடாதீர்கள். அவருடைய நெஞ்சம் என் ஒருத்திக்குத்தான் தெரியும். எனது இதயமும் அவர் ஒருவருக்குத்தான் புரியும் என்று சொல்வதைவிட என் நெஞ்சையே அவரிடம்தான் புதைத்து வைத்து இருக்கிறேன். அப்படி நம்பி ஒப்படைத்த ஒருவர் மனம் மாறிவிட்டார் என்றால் அது விளையாட்டுத்தனமாக இருக்கும் என்று என்னால் நம்பவும் முடியாது. அவரும் நானும் பழகிவந்த கதை எல்லாம் அந்தச் சிற்றோடைக் கரையிலுள்ள பாறைக்கு மேலே அடர்ந்து வளர்ந்திருக்கும் புன்னை மரத்து இலைகளும் பூக்களும் சொல்லும். நாங்கள் கொஞ்சி விளையாடும்போது பார்த்து மகிழ்ந்து தாங்களும் அதைப் போல ஆடிக் களித்த அணில் கூட்டம் சொல்லும். இதையெல்லாம் உங்களிடம் நான் சொல்வதற்கு நெஞ்சிலிருந்து வார்த்தை வரவில்லை. அவருடைய புதிய நடவடிக்கை உண்மைதானா என்று ஒன்றை மட்டும் தான் நான் தங்களைக் கேட்க வேண்டுமென்று இரவிலிருந்து தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நீங்கள் வர மாட்டீர்களா, அவரைப் பற்றிச் சொன்னதெல்லாம் 'பொய் - விளையாட்டுக்குத்தான் சொன்னேன் என்று சொல்லிவிட மாட்டீர்களா' என்றெல்லாம் தான் வேதனையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் நீங்கள் வந்தீர்கள். ஆனால், நேற்றுச் சொன்னதைவிட மிக அழுத்தமாகச் சொல்லி விட்டீர்கள்" என்று மாணிக்கவல்லி கூறியவுடன் காத்தானுக்கு மேற்கொண்டு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. பொய் என்று அவள் உணர்ந்து விட்டால் தன்னுடைய நிலை மோசமாகி விடும். அதுமட்டுமல்லாமல் தன்னைக் காட்டிக் கொடுக்கவும் அவள் தயங்க மாட்டாள். அதனால் தன் காரியத்தை மேலும் அழுத்தமாக அவளிடம் தெரிவித்து, வந்தது வரட்டும் என்று இன்னும் அதிகமாக சந்தனத்தேவனைப் பற்றிக் கூற வேண்டியதுதான், என்ற முடிவுக்கு வந்தவனாக "குழந்தே.. நான் கேடு இழைக்க நினைப்பேனா, என் காதில் விழுந்த செய்தி பொய்யாகப் போய் விடக் கூடாதா என்று நான் வல்லத்தில் எண்ணினேன். நான் கண்ணால் பார்க்கும் செய்தி பொய்யாகிப் போய் விடக் கூடாதா என்று தஞ்சையில் நினைத்தேன். ஆனால் அப்படி மாயை ஒன்றும் நேரவில்லை.

"கண்ணாரக் கண்டதும் காதாரக் கேட்டதும் பொய்யாகப் போய் விடவில்லையே. பொய் போல் உன்னிடம் அதை சொல்லி விளையாடுவதற்கேற்ற வயது எனக்கு இப்பொழுது இல்லை.

"என் மகளைப் போன்று இருக்கும் உனது காதல் விளையாட்டைக் கெடுத்து விடும் கொடிய நெஞ்சமுடையவனும் அல்லன் நான்" என்று கூறி மெல்லப் பேச்சை நிறுத்தினான் காத்தான்.

மாணிக்கவல்லியின் உடல் மேலும் நடுங்கியது. சந்தனத்தேவன் இளவரசி திருமணம் முதலில் காத்தானுக்குச் செய்தியாக எட்டியிருக்கிறது.

பிறகு அதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் நேரிடையாகவும் அதை அவன் கண்டிருக்கிறான். அதனால் காத்தான் பொய் சொல்லியிருக்க முடியாது.

இவ்வளவு ஊர்ஜிதமான செய்தியைக் காத்தான் கொண்டு வந்து விட்டார் என்றால் அவர் மீது நாம் கோபப்படக் கூடாது.

சந்தனத்தேவன் மீது தான் கோபப்பட வேண்டும் என்ற உறுதிக்கு அவள் வந்தாள். உள்ளத்திலே அடக்கி வைத்திருந்த துயரம் இப்பொழுது விம்மலாக வடிவெடுத்து ஒலித்தது.

"காத்தான்! நீங்கள் கண்டதும் உண்மைதானா? நீங்கள் கண்டது என்ன என்பதை என்னிடம் சொல்லலாமா? அதைக் கேட்க வேண்டாம் என்று என் மனம் வருந்தினாலும் கூட நான் கடைசியாக அவரைப் பற்றி முடிவு செய்து கொள்ளும் முன்பு இது வரையிலும் அறிந்த ஊர்ஜிதமான சொற்களை எதிர்பார்க்கிறேன். நீங்கள் தஞ்சையிலே என்ன கண்டீர்கள்?" என்று மாணிக்கவல்லி விம்மியவாறு கேட்டாள்.

"குழந்தே! நான் சாதாரணமாய்ச் சொன்ன சொற்களே உன்னை வாட விட்டு விட்டன. நான் மேலும் நடந்த செய்தியை - கண்ணாரக் கண்ட செய்தியைச் சொல்லி விட்டால் நீ துயரம் தாங்காமல் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து விட்டால் தலைவர் என்னைக் கொன்றுப் போட்டு விடுவார். அதனால் நீ எனக்கு ஓர் உறுதி கூற வேண்டும். நான் சொன்ன பிறகு நீ ஆத்திரம் அடையாமலும் உணர்ச்சி வசப்படாமலும் மௌனமாக, அமைதியாக மேற்கொண்டு செயல்களைச் செய்கிறேன் என்று எனக்குச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் தஞ்சையில் கண்டவற்றைச் சொல்லுகிறேன்" என்றான்.

மாணிக்கவல்லி படபடப்புடன், "அமைதியை இழந்துவிட்ட நான் இனி அழவேண்டியது ஏதும் இல்லை. ஆனால், நான் திடமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். கடைசியாக ஓர் உறுதியைச் செய்து கொண்டு மேற்கொண்டு என்னுடைய நடவடிக்கையை எடுத்துக் கொள்வது என்று நான் ஒரு கணத்தில் முடிவு செய்து விட்டேன்.

சத்தியமாகத் தங்களை நான் காட்டிக் கொடுக்க மாட்டேன், அத்துடன் அல்லாமல் நீங்கள் ஓர் உதவி எனக்குச் செய்ய வேண்டும். நான் மேற்கொண்டு எடுக்கப் போகும் முடிவுக்கு எனக்கு உதவி செய்வதாகத் தங்களால் வாக்கு அளிக்க முடியுமா?" என்று கேட்டாள்.

காத்தான் மெல்லச் சிரித்துக் கொண்டு, "அதனால் என்ன குழந்தே! என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றான்.

"சொல்லுங்கள், சொல்லுங்கள். நீங்கள் தஞ்சையிலே கண்டதைச் சீக்கிரமாகச் சொல்லுங்கள். இன்றைய கதிரவன் மறையும் முன்பாக நான் இங்கிருந்துப் புறப்பட்டாக வேண்டும்" என்றாள் மாணிக்கவல்லி.

காத்தான் சொன்னான்: "மாணிக்கவல்லி, வல்லம் கோட்டையிலே எனக்கு ஊர்ஜிதமான தகவல் கிடைத்தது. தஞ்சை இளவரசியைச் சந்தனத் தேவனுக்கு மணம் முடிப்பதில் சுந்ததேவனும் ரங்கமாதேவியும் மிகவும் முனைந்திருப்பதாக. வல்லம் கோட்டையிலிருந்து பலமுறை தலைவர் சுந்ததேவன் வந்ததைப் பார்த்தேன். பிறகு சுந்ததேவனை தஞ்சை மாளிகையிலே பார்த்தேன். அப்பொழுதெல்லாம் கூட நான் நம்பவில்லை. ஒரு நாள் மாளிகைத் தோட்டத்தில் இருவர் பேசிக் கொண்டிருக்கும் அரவம் கேட்டது. யாராக இருக்கும் என்று நான் உற்றுக் கவனித்தேன். சந்தனத்தேவனும் இளவரசி மோகனாவும் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஒருகணம் நான் திடுக்கிட்டுத் திகைத்தேன். பிறகு மறைந்திருந்த பொழுது சந்தனத்தேவன்தான் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. சிறிது நேரம் கழித்து சந்தனத்தேவன் மதில் ஏறிக் குதித்து அங்கிருந்து வருவதையும் நான் இந்தக் கண்ணால் கண்டேன். அவை எல்லாவற்றையும் ஊர்ஜிதப்படுத்தும் வகையில் மாளிகைக் காவலர்கள் சிலர் சந்தனத்தேவன் மோகனாங்கியைப் பல நாட்களாக இப்படி ரகசியமாகச் சந்திக்கும் விஷயத்தைத் தெரிவித்தார்கள். வேறு என்ன வேண்டும்? நான் உன்னிடம் இந்தச் செய்தியைத் தெரிவிப்பதற்காகப் பொய் சொல்ல மாட்டேன். உங்கள் இருவர் காதலைக் கெடுப்பதற்காக நான் சதி செய்ய மாட்டேன். ஆனால், நீ ஒருத்தி மட்டும் அவனுக்காக உருகி உள்ளத்தையே அவனிடம் ஒப்படைத்து ஒருதலைப் பட்சமாகக் காதலைக் கொண்டிருக்கும் பொழுது, அவன் வேறு பெண்ணை நாடிப் பல மலர்களைச் சுற்றிவரும் வண்டுபோல் அமர்ந்திருப்பதை அறிந்தவுடன் உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்காகத் தக்க சமயத்தில் எச்சரிப்பதற்காக வந்தேன்; எச்சரித்து விட்டேன். நான் சொல்வதில் உனக்கு ஐயம் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். எந்தச் சமயத்திலும் அதை நான் நிரூபிக்க முடியும்" என்று கூறி நிறுத்தினான் காத்தான்.

மாணிக்கவல்லி நீண்ட நேரம் தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு சிந்தித்தவாறு இருந்தாள். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவள் போல் துள்ளி எழுந்து, "காத்தான்! நான் இப்பொழுதே தஞ்சைக்குச் செல்ல வேண்டும். என் கண்ணால் ஒரு தடவையாவது மாளிகைத் தோட்டத்தில் இருந்துத் திருட்டுத்தனமாகக் காதலித்துவரும் சந்தனத்தேவனுடைய செயலைப் பார்க்க வேண்டும். அதன் பிறகு காலம் சொல்வதை இப்பொழுது சொல்ல மாட்டேன். எப்படியிருந்தாலும் இந்த இடத்தில் இனி ஒரு கணம் கூட நான் தங்கி இருப்பதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அதனால் என்னை அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இங்குள்ள ஒருவருக்கும் இந்தச் செய்தி தெரிய வேண்டாம். பகல் பொழுது மறைந்து இங்குள்ளவர்கள் இளைப்பாற்றிக் கொண்டிருக்கும் வேளையிலே நாம் புறப்பட்டு விடுவோம்" என்றாள்.

அவளுடைய உறுதி காத்தானைத் திடுக்கிட வைத்தது. என்றாலும் அந்த இடத்திலிருந்து அவளை வெளியேற்றிச் சந்தனத்தேவனுக்கு மாணிக்கவல்லி கிடைக்காமல் செய்து விட வேண்டும் என்ற ஓர் உறுதி கொண்டு மாணிக்கவல்லியின் விருப்பப்படியே நடப்பதாக அவன் வாக்களித்தான்.

சிறிது நேரத்தில் ஏரிக்கரையில் மறைவிடத்தில் கட்டப்பட்டிருந்த படகை அவிழ்த்துத் துடுப்பைச் செலுத்திப் படகை ஓட்டினான். மாணிக்கவல்லி தன் உருவம் தெரியாமல் போர்வையால் போர்த்தியவாறு அமர்ந்திருந்தாள். அந்தப் போர்வையில் அவள் ஆடைகளுக்கும் மறைவில் உறுதியான பள பள என்று மின்னும் கத்தி ஒன்று அவசரச் சமயத்திற்குப் பயன்படுத்தவதற்காக இருக்கும் என்பது காத்தானுக்கு எப்படித் தெரியும்?

# 31. இரவில் நடந்தது

நடுநிசி. விஜயராகவர் உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். வழக்கம் போல் காற்று வீசிக் கொண்டிருந்தது. தோட்டத்து நறு மணத்தைச் சுமந்து சாளரத்தின் வழியே வந்து கொண்டிருந்தது. விஜயராகவருக்குக் காற்றே வீசாதது போன்ற பிரமை. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ரத்த நாளங்கள் வழக்கத்துக்கு விரோதமாக மிகவும் வேகமாகத் தசை நரம்புகளில் ஓடுவது போன்ற ஓர் உணர்ச்சி. படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தார். சாளரத்தின் அருகே வந்து வானைப் பார்த்த பிறகுதான் அப்பொழுது நேரம் நடுநிசிக்கு மேலாக இருக்குமென்று தோன்றியது. அவர் மனத்திலே பலவித எண்ணங்களால் வேதனை மிக நிறைந்து அதை நீக்க வழி

தேடுவதில் முனைந்தது. அதனால் கொஞ்ச நஞ்சம் அவர் கண்களைத் தழுவி இருந்த உறக்கமும் ஓடிப் போய் விட்டது. அவர் அறைக் கதவைத் திறந்து வெளி முற்றத்திற்கு வருவதற்காக காலடி எடுத்து வைத்தவுடன் ஓர் உருவம் மெல்ல அவர் அறைக்குள் நுழைவது தெரிந்தது. "யாரது?" என்று அதட்டினார். ஆனால் முக்காடிட்டு வந்த அந்த உருவம் பதில் பேசாமல் நேரே அவர் மஞ்சத்திற்கு அருகிலுள்ள திரைச் சிலைக்கு அருகே போய் நின்று கொண்டது. விஜயராகவர் வேகமாகத் திரும்பி வந்து கட்டிலுக்கு அருகே வைக்கப்பட்டிருந்த தன் உடைவாளை எடுக்க விரைந்தார். ஆனால் அவரை முந்திக் கொண்டு விரைந்து அந்த வாளை எடுத்துக் கொண்ட அந்த உருவம், "அரசே அவசரப்பட்டுத் தாங்கள் வாளை எடுக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை" என்றது. உருவம் தெரியவில்லை என்பதாலும் குரலிலிருந்து ஒருவாறு அந்த உருவம் இன்னார் என்பதைத் தெரிந்து கொண்ட விஜயராகவர், சீற்றத்துடன், "கந்ததேவா! இந்த நேரத்தில் உனக்கு இங்கு என்ன வேலை?" என்று கர்ஜித்தார்.

"காரியமில்லாமல் கந்ததேவன் எங்குமே வரமாட்டான் என்பது தங்களுக்குத் தெரியாதா?" என்று கூறியவாறு போர்த்தியிருந்த மேல் துணியை மெல்லத் தள்ளிக் கொண்டு அவர் முன்னால் நின்றான்.

அந்த அறையில் வெளிச்சமில்லை. முன் நிலவுக் காலமாதலால் வானமும் இருண்டிருந்தது. ஏதோ மங்கிய ஒளியில், ஒருவர் முகத்தை ஒருவர் ஒருவாறு உணர்ந்து கொண்டு பேச முற்பட்டனர். ஆனால், விஜயராகவர் மிகுந்த சீற்றத்துடன் கந்ததேவன் அந்த நடுநிசி வேளையில் தன்னுடைய அறைக்கு அனுமதியின்றி வந்தது கண்டு ஆத்திரம் தாங்காமல் படபடப்பு அதிகம் கொண்டு, "எந்த வேலையாய் இருந்தாலும் நீ இந்த நேரத்தில் வந்தது எனக்குப் பிடிக்கவில்லை. நான் இப்பொழுது எல்லாக் காவலர்களையும் அழைத்து உன்னை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியதுதான்" என்றார்.

கந்ததேவன் பயங்கரமாகச் சிரித்து, "துணிவும் சாமர்த்தியமும் இருந்தால் நீங்கள் அதைச் செய்யலாம்! கந்ததேவனைப் பற்றி நீங்கள் மறந்துவிட்டீர்களா? அல்லது கந்ததேவனுடைய பலம் குறைந்து விட்டது என்ற எண்ணம் புதிதாக உங்களுக்கு ஏற்பட்டு விட்டதா? கந்ததேவன் முன்பைவிட இப்பொழுது புது சக்தியுடன் விளங்குகிறான் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அதனால் வீணே காவலாளிகளை அழைத்து அவர்கள் முன்னிலையில் அவமானப்படாதீர்கள்" என்று கூவினான்.

அந்த நிசி வேளையில் அவன் போட்ட குரல் வெளியே நிச்சயமாகக் கேட்டிருக்கும். ஆழ்ந்த உறக்கத்தில் காவலாளிகள் இருந்ததால் அவர்கள் அந்தக் குரலால் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு அரசரிடம்

ஓடிவரவில்லை. கந்ததேவன் அவ்வளவு துணிச்சலுடன் பயமில்லாமல் உரத்த குரலில் பேசுவது கண்ட விஜயராகவர் கூட ஒரு கணம் தனது கோபத்தை ஓரளவுக்குத் தணித்துக் கொண்டு, "கந்ததேவா, உன்னுடைய சாமர்த்தியத்தையும் வீரத்தையும் தெரிவிப்பதற்காகத்தான் இப்பொழுது நீ வந்து இருக்கிறாயா? உன்னுடைய நடவடிக்கைகள் எனக்குத் தெரியாமல் ஒன்றும் போய் விடவில்லை. நீ வல்லம் கோட்டைக்கு வந்து போகும் செய்தி என் கவனத்திற்கு வரவில்லை என்று நினைக்காதே! அதனால் தஞ்சை அரண்மனையிலும் நீ உன்னுடைய செளகரியப்படி நுழைந்து பயமுறுத்திக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று மட்டும் நினைத்துவிட வேண்டாம். விஜயராகவர் இன்னும் கோழையாக ஆகிவிடவில்லை" என்று கூறும்பொழுது கந்ததேவன் குறுக்கிட்டு, "ஆஹா, விஜயராகவருடைய பலத்தைப் பற்றிக் குறைவாக மதிப்பிடுவதற்குக் கந்ததேவன் மூட்டாள் அல்லன். புதிய படைப் பலங்கள் வேறு இப்போது தங்களுக்குச் சேரப் போகிறது என்பதையும் நான் உணர்ந்துதான் இருக்கிறேன்.

"தாங்கள் என்னை என்னதான் அவட்சியப்படுத்தினாலும், தஞ்சை நாட்டுக்குத் துரோகத்தை ஒரு நாளும் செய்யமாட்டேன். தஞ்சை மண்ணிலே மாற்றார் யார் வந்து கால் வைத்தாலும் அவர்கள் ஊன்றுவதற்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். ஆனால் அது வேறு விஷயம். வல்லம் கோட்டைக்கு நான் வந்து போகும் விஷயம் தெரிந்து வைத்திருக்கும் நீங்கள்- வல்லம் கோட்டையில் நடைபெறுபவைகளை அறிந்திருக்கும் நீங்கள் அதைப் பற்றி முடிவு எடுக்காமல் இருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது" என்றான்.

விஜயராகவர் அவனை நெருங்கி, "இது நிசி வேளை என்பது நினைவிருக்கட்டும் கந்ததேவா! கொஞ்சம் அமைதியாகவே பேசுவதனால் எந்தக் காரியமும் கெட்டு விடாது. ஏன் இவ்வாறு கத்துகிறாய்? வல்லம் கோட்டையில் நடந்தவற்றில் எதை நான் நிறைவேற்றாமல் இருக்கிறேன் என்று கூறுகிறாய்?" என்றார்.

கந்ததேவன் மெல்லிய குரலில் அரசருடைய கட்டளைக்குப் பணிபவன்போல், "இன்னும் தாங்கள் தெரியாதவர் போல் பேசிக் கொண்டிருந்தால் காரியத்தை முடித்துவிட்ட பிறகு கந்ததேவனைச் சமாதானப்படுத்தி விடலாம் என்று மனப்பால் குடிக்காதீர்கள். சுற்றி வளைக்கவும் நான் விரும்பவில்லை. இப்பொழுது நேரிடையாகவே தங்களைக் கேட்கவே வந்து விட்டேன். எப்பொழுது தங்கள் மகளுக்கும் என் மகனுக்கும் திருமணத்தை நடத்தி வைக்கப் போகிறீர்கள்?" என்று நேருக்கு நேர் கேட்டுவிட்டான். விஜயராகவருக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது. கந்ததேவன் என்ன சொல்கிறான்? அவனுக்குப்

பைத்தியம் ஏதாவது பிடித்து விட்டதா! வேறு யாரிடமாவது பேச வேண்டியதை இங்கு வந்து பேசுகிறானா? குடி மயக்கத்தில் இருக்கிறானா? அவனுக்கு நேர்ந்து விட்டதா? என் மகளையா கேட்கிறான்? அரசர் மகளைக் கள்வர் தலைவன் கேட்பதா? என்று கவலையுடன், "என்ன சொல்கிறாய் கந்ததேவா?" என்று அதிர்ச்சியுடன் கேட்டார்.

கந்ததேவன் சிரித்துவிட்டு, "நான் தமிழில் பேசியது தங்களுக்குப் புரியவில்லை போல் இருக்கிறது. வேண்டுமானால் உங்களுடைய மொழியில் பேசத் தயார். அதில் பேசுவதற்கு எனக்கு அவ்வளவு சக்தி போதாது. அதனால்தான் என் மனத்தில் பட்டதை உடனடியாக எடுத்துச் சொல்லக் கூடிய என்னுடைய பாஷையில் பேசினேன். மற்றொரு தடவை கேட்கிறேன்; உங்கள் மகளை என் மகனுக்கு எப்பொழுது திருமணம் செய்விக்கப் போகிறீர்கள்?"

அதைக் கேட்டவுடன் விஜயராகவர் 'கட கட' வென்று நகைத்துவிட்டார். "இந்தக் கேள்வியை வேறு யாராவது கேட்டிருநதால் இந்த நேரம் அவர் கதி என்னவாகி இருக்கும் என்பது நான் சொல்லத் தேவையில்லை. கந்ததேவன் கேட்கிறான், அதனால் நான் அமைதியாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்திருக்கிறது. அந்த நிர்ப்பந்தத்திற்குக் காரணம் - நான் அடங்கிப் போவதற்குக் காரணம் ஒருவரையும் குறை சொல்ல வேண்டியதில்லை. என்னுடைய கோழைத்தனம் தான். நான் அந்தக் காலத்திலே உன்னை அடக்காமல் துளிர்த்து பெரிய மரமாக வளரும்படி விட்டுவிட்டேன். உன்னுடைய திருட்டுக் கூட்டத்தை அடக்கி அழித்துவிடும் படி செய்யாமல் நேருக்கு நேர் சந்தித்து என் மகளை உன் மகனுக்கு மணம் முடிக்கக் கேட்கிறாய். நன்று கேட்டாய் கந்ததேவா! நாயகர் வம்சத்துக் குலக்கொடியை நாடோடியாக வாழும் உன் மகனுக்குக் கேட்கிறாயா? மற்றொரு முறை அந்த வார்த்தையை நீ என்னிடம் சொல்வாயானால் நான் உன் நாவை துண்டிக்கத் தயங்கமாட்டேன்" என்றார்.

கந்ததேவனுக்குக் கோபம் எல்லையைக் கடந்து வந்து விட்டது. இருந்தாலும் அரசர் தன்னுடைய அந்தஸ்தை குறைத்துக் கொள்ளாமல் பேசுவதைத் தான் தடுக்கக் கூடாது. அதே சமயத்தில் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளாமல் போகக்கூடாது என்ற முடிவில், "அரசே! தாங்கள் சொல்வது எல்லாம் உண்மைதான். ஆனால் நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் நாங்கள் திருட்டுக் கூட்டத்தை நடத்தி நாட்டில் பிழைக்கவில்லை. நானும் ஒரு சுதந்திர அரசனாகத்தான் இந்த நாட்டிலே நடமாடுகிறேன். எனக்கு உரிமை கிடையாது என்று நீங்கள் சொல்ல முடியாது. உரிமையைப் பற்றி நான் பேசப் புகுந்தால் உங்களுக்கு என்ன உரிமை இங்கு இருக்கிறது என்றுதான் துணிந்து

கேட்டு விடுவேன். தஞ்சையின் மகத்தான அரியணையில் நீங்கள் உட்காருவதற்கு என்ன பரம்பரை உரிமை உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது? எங்களுடைய முன்னோர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். தஞ்சையின் அழகிய சிங்காதனத்தில் அமர்ந்து அரசு புரிந்த குலோத்துங்கனுடைய கிளை மரபில் வந்தவன் நான். நியாயமாக நான் அரச உரிமையைத் தஞ்சை நாட்டு மக்களிடையே பிரசாரம் செய்து அவர்கள் மனத்தைக் கவர்ந்து தஞ்சை அரண்மனையிலே வாழவேண்டியவன்.

"ஆனால், அதெல்லாம் எனக்குப் பிடிக்காமல் சிறு வயதிலேயே போய்விட்டது. அப்படியெல்லாம் அரச போகத்தில் வார்ந்து சுதந்திரம் அற்ற ஒரு வாழ்க்கை நடத்துவதை விட சுதந்திரமாக வாழ்வதுதான் சிறந்தது என்ற முறையில் நான் வாழ்க்கை நடத்தி வருகிறேன்.

"ஏழை எளியவரிடம் நான் கொள்ளை அடிப்பதில்லை. சொல்லப் போனால் ஏழை எளியவரிடம் வரி வரி என்று வாங்கி உங்களுடைய சுகவாழ்வை வளர்த்துக் கொள்கிறீர்களே, அதைப் போன்ற கொள்ளையை நான் செய்யவில்லை.

"செல்வத்தைப் பூமிக்கடியில் புதைத்து வைத்துப் பண மூட்டைகளைப் பெட்டிக்குள்ளே நிறைத்து - கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நிலங்களை வளைத்துப் போட்டு - அதிலே உழைப்புக் குருதியைச் சிந்தி உழைத்துப் பயிரிட்டு பலன் கொடுப்பவர்களுக்கு ஒரு மணி நெல்லைக் கூட கண்ணிலே காட்டாமல் கொள்ளை கொள்ளையாய்ச் சேமித்து வைத்திருக்கிறார்களே! அவர்களிடமிருந்து பறித்து ஏழை எளியவருக்கு விநியோகிக்கும் ஒரு மாபெரும் தொழிலைத் தான் நான் இதுவரை செய்து வந்திருக்கிறேன்.

"என்னைத் திருடன் என்று கூறிவிட்டீர்கள். என் செய்கையைத் திருட்டுச் செய்கை என்றால் தங்களைப் போன்றவர்களுடைய செய்கையை நான் என்னவென்று சொல்வேன். நாம் அதைப்பற்றி விவாதிக்க வேண்டாம். தங்கள் அந்தஸ்துக்கு, என் அந்தஸ்து குறையவில்லை என்று சொல்லுவதற்காகத்தான் நான் இவ்வளவு தூரம் பேசினேன். என் மகன் எதில் குறைவானவன்? அழகிலா? வீரத்திலா? அவனுக்குத் தங்கள் மகளைக் கொடுப்பதன் மூலம் இந்த நாட்டின் பெருமை குறைந்து விடாது. இந்த நாட்டு அரசாட்சியும் சீர்குலைந்து விடாது. சொல்லப் போனால் மாற்றாருக்குப் பயந்து நடுங்கி வாழும் இங்குள்ள படை வீரர்களின் தைரியத்தை, இன்னும் அதிகமாக வளர்த்துப் போர்த் திறமையுடன் அவர்களைப் பொங்கி எழச் செய்வான். அவன் சிறந்த படைத் தளபதியாக விளங்குவான். வேண்டுமானால் நீங்கள் ஒன்று செய்யலாமே! ஒரு வேளை என் மகன் தங்கள் அந்தஸ்துக்குக் குறைந்தவனாகத் தங்களுக்குத் தோன்றினால்

அவனை இந்த நாட்டுத் தளபதியாக நியமித்து அவன் பதவியை உயர்த்தி அவனைத் தங்களுக்குச் சமதையான அந்தஸ்துடன் திகழுமாறு செய்த பிறகு தங்கள் மகளை மணம் புரிவித்து வைக்கலாமே. இது தங்களுக்கு முடியாத காரியம் அன்று. எங்கெங்கோ தங்களுக்குச் சமதை இல்லாத இடங்களில் எல்லாம் மாப்பிள்ளையைத் தேடி அலையும் நீங்கள் உங்கள் எதிரே இருக்கும் வழியை மறந்து விட்டீர்களே" என்றான்.

விஜயராகவர் அவன் கூறியவற்றைக் காதுகொடுத்துக் கேட்டதாகத் தெரியவில்லை. அவர் கவனமெல்லாம் தன்னைக் கந்ததேவன் அவமரியாதைப்படுத்தி அவமானப் படுத்துவதற்காக அவன் நடுநிசியில் கேட்ட கேள்வி என்ற எண்ணத்தினால், அவன் கூறியதற்குத் தகுந்த பதிலைக் கூற முற்படாமல், "கந்ததேவா, இனி நீ இங்கு நிற்பதை நான் பொறுக்க மாட்டேன். என் உள்ளம் எரிமலையாகிக் கொண்டிருக்கிறது. என் உள்ளத்திலே உன்னைச் சுட்டெரிக்கும்படியான ஆத்திரம் பொங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிற்குப் பெரும் அவமானம் தேடித் தரும் காரியத்திலே நீ இறங்கிக் கொண்டிருக்கிறாய் என்ற கோபம் மனத்தினுடைய கட்டுப்பாட்டைக் கலைத்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய உணர்ச்சி பொங்கி எழுந்து உன் சிரத்தை அழிக்கும் முன்பாக நீ இங்கிருந்து போய் விடு. இல்லாவிட்டால் பிறகு உன் காலத்திற்கு நீ தப்பிச் செல்ல முடியாத ஒரு நிலையை அடைந்து விடுவாய். போ! போ! போய்விடு. பொருள் ஆசை மட்டும் இதுவரை கொண்டிருந்தாய் என்று எண்ணினேன். பெண் ஆசை கொண்டு விட்ட உனக்குத் தண்டனை இனி இந்த வாள்தான்" என்று கர்ஜித்து 'சரேல்' என்று உடைவாளைத் தாவி எடுத்து அவன் மீது வீசத் துணிந்தவுடன் அவனும் வெகு வாகவமாக அந்த வாளைத் தட்டி விடுவதற்கு முனைந்தான்.

ஆனால், அதற்குள் விழித்துக் கொண்ட காவலர்கள் பலர் 'தடதட' என்ற ஓடிவரும் ஓசை அந்தத் தருணத்தில் கேட்டவுடன் இந்தச் சமயத்தில் இங்குச் சிக்கிக் கொள்வது தனக்கு ஆபத்தில் முடியும் என்ற எண்ணம் உடையவனாய் விரைந்து சாளரத்தை நோக்கித் தாவிக் கணப் பொழுதிலே அங்குள்ள தோட்டத்திற்குள் ஓடி விட்டான்.

அவன் குதித்து அரண்மனை தோட்டத்திற்குள் நுழைந்து அங்குக் காத்திருந்த தன் மகன் சந்தனத்தேவனைக் கைகாட்டி அழைத்து மதில்மேல் ஏறிக் கீழே குதித்து ஓடியதைச் சற்றுத் தூரத்தில் மறைந்திருந்த மாணிக்கவல்லியும் காத்தானும் பார்த்துக் கொண்டிருந்தனர். கந்ததேவன் ஓடியது மாணிக்கவல்லியின் கண்களில் படவில்லை. சந்தனத்தேவன் ஓடி வரும் பொழுது வெகு அருகாமையில் மரத்தின் மறைவில் நின்று கொண்டிருந்த

மாணிக்கவல்லி அவனுடைய முகத்தைப் பார்த்து விட்டாள். "காத்தான் சொன்னது உண்மைதான். மாளிகையில் இளவரசியைச் சந்தித்து விட்டுத்தான் சந்தனத்தேவன் ஓடி வருகிறான்" என்பதைப் புரிந்து கொண்ட பொழுது அவளுடைய உள்ளத்தில் பெருஞ்சினம் பொங்கி எழுந்தது. அவளை அறியாமலே அவள் கை மறைத்து வைத்திருந்த கத்தியின் மீது சென்றது.

## 32. பறவை பறந்தது!

இரவெல்லாம் கண் விழித்த களைப்பும் தன் அந்தப்புர அறைக்குள் வந்து விவாதம் நடத்திக் காவலர் கையில் சிக்காமல் தப்பி ஓடிச் சிறு குழப்பத்தைச் செய்து விட்டுக் கந்ததேவன் போனதனால் ஏற்பட்ட கலக்கமும் ஒன்று சேரவே விஜயராகவர் அன்றாடம் நடத்தும் எந்த வேலையையும் கவனிக்காமல் சிவந்த கண்களுடன் மேல் மாடத்தை விட்டுக் கீழ் இறங்காமலேயே இருந்தார். நீராடிவிட்டுத் திருவரங்கம் செல்லும் நேரமோ கடந்து கொண்டிருந்தது. திருவரங்கத்திற்குச் சென்று அரங்கநாதரைத் தரிசித்தப் பிறகுதான் அவர் உணவு உண்ணும் பழக்கம் உடையவராதலால் எவ்வளவோ குழப்பத்திலுள்ள அவர் அன்றைய தினம் உண்ணா நோன்பு இருக்க வேண்டிய சினத்துடன் இருக்கும்போது அவருடைய பட்ட மகிஷியும் அவரை அணுகத் துணிவில்லாமல் இருந்தார்கள்.

உச்சிவேளையில் பிரதானி மட்டும் மிகவும் அவசரமான செய்தி ஒன்றை எடுத்துக் கொண்டு துணிந்து அவரை அணுகினார். விஜயராகவர் பார்வைக்குச் சினத்துடன் இருந்தாலும் அவர் உள்ளத்தில், பிரதானியைக் கண்டவுடன் உள்ளதையெல்லாம் கொட்டிவிட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. சிறிது மலர்ச்சியை மன்னர் முகத்தில் பிரதானி கண்டவுடன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "மிகவும் அவசரமான காரியமாதலால் தங்களைக் காணும்படியான அவசியம் எனக்கு நேர்ந்து விட்டது. தங்களுடைய அமைதியைக் குலைக்க நான் வந்ததற்குப் பொறுத்தருள வேண்டும்" என்று, பூர்வ பீடிகையாகப் பேச்சைத் தொடங்கினார். "அதனால் என்ன? தாங்கள் வந்ததால் என்னுடைய துக்கம் ஓரளவுக்கு மாறி விட்டது என்று சந்தோஷப்படுகிறேன்" என்றார் விஜயராகவர்.

"தங்களுக்குத் துக்கமா? என்ன அப்படித் திடீர் என்று நேர்ந்து விட்டது? நேற்று மாலைப் பொழுதுதானே நாம் சந்தித்தோம். திருச்சிக் கோட்டையைத் தாக்குவதற்கு செஞ்சிப் படைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்னும் செய்தியையும், நம் படைகளை அனுப்புவது பற்றிய ஆலோசனையையும் நடத்தினோம். அதற்குள்

நீங்கள் வருத்தப்படும்படியான செய்தி என்ன நேர்ந்து விட்டது என்று எனக்கே புரியவில்லையே'' என்றார் பிரதானி. பிறகு, "ஓஹோ! நேற்று இரவு தப்பிச் சென்றவனைப் பிடிக்க முடியாமல் போய் விட்டது குறித்து தங்களுக்கு வருத்தம் நேர்ந்து விட்டதா? எப்படியும் அவனைப் பிடித்து விடுவோம்'' என்றார் பிரதானி.

பிரதானி எதைச் சொல்கிறார் என்று சட்டென்று புரிந்து கொள்ளாமல் தன்னிடம் அருமையாக விவாதம் நடத்தி விட்டு தப்பிச் சென்ற கந்ததேவனைப் பற்றித்தான் பிரதானி சொல்கிறார் என்ற எண்ணத்தில் அவனை வலை வீசிப் பிடிக்க முற்பட்டு, அதனால் மேலும் தொல்லையை வரவழைத்துக் கொள்ளப் போகிறார் என்கிற கவலையும் கொண்டு, "வேண்டாம், வேண்டாம், வீணாக அவனைத் தேட முயல வேண்டாம். தானே போனால் போகிறது என்று தான் விட்டு விட்டேன்'' என்றார். பிரதானி வியப்பில் மூழ்கியவராய், "நீங்கள் விட்டுவிட்டீர்களா? அப்படியென்றால் அந்தப்புரத்தில் மாளிகைச் சுவரைத் தாண்டிக் குதித்தபொழுது பார்த்து விட்டீர்களா? தங்களுக்கும் அந்தச் செய்தி தெரிந்து விட்டதா'' என்று கேட்டார்.

பிரதானி சொல்வது ஒன்று; விஜயராகவர் நினைப்பது ஒன்று. விஜயராகவர் கந்ததேவனைப் பற்றிச் சொன்னார். பிரதானியோ அந்தப்புரத்தில் தோட்டத்து மதிலைத் தாண்டிக் குதித்த உருவத்தைப் பற்றிப் பேசினார். அந்த மங்கிய ஒளியில் நிசி வேளையில் மதிலைத் தாண்டியவன் சந்தனத்தேவன் என்று பிரதானிக்கும் தெரியாது. ஆனால் யாரோ தாண்டிக் குதித்து ஓடும் அரவம் கேட்டவுடன் காவலர்கள் துரத்திச் சென்றதும், அவன் பிடிபடாமல் ஓடியதையும் காலையில் கேள்விப்பட்ட பிரதானி அதைப் பற்றித் தீவிரமாக விசாரித்து மன்னரிடம் அந்தச் செய்திக்குப் பின்னால் புதைந்திருக்கும் ஓர் உண்மையைச் சொல்வதற்காகத்தான் இப்பொழுது அவசரமாக அங்கே வந்தார். அவருக்குக் கிடைத்த தகவலிலிருந்து இளவரசி மோகனாங்கியைத் தூக்கிச் செல்வதற்குச் சிலர் திட்டமிடுகிறார்கள் என்றும் அந்த முயற்சியின் விளைவே நேற்றைய தினம் நிசியில் ஒருவன் மதிலைத் தாண்டிக் குதித்து ஓடியது என்றும் அறிந்திருந்தார். தக்க சமயத்தில் அதை மன்னரின் காதில் போட்டால்தான் அந்தப்புரத்தில் பலத்த காவல் ஏற்படுத்த முடியும் என்ற எண்ணத்தில் அவர் வந்தார். மன்னர் சொன்னதோ வேறு விதமாக இருந்தது. இருவரும் சற்று நேரம் ஒருவர் சொல்வது ஒருவருக்குப் புரியாமல் குழம்பிக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு தான் சொல்வது வெவ்வேறு செய்தி என்பதை அறிந்து கொண்டனர். தன்னிடம் கந்ததேவன் கடுமையாய் விவாதித்ததைப் பிரதானிக்கு அவர் முதலில் சொல்லாமல், அந்தப்புரத்துத் தோட்டத்து மதில் சுவரைத் தாண்டியவனைப் பற்றிய

செய்தியை ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஒன்று ஊர்ஜிதம் ஆகியது. அந்தப்புரத்துக்கு யாரோ வருகிறார்கள். அப்படி வருபவர் இளவரசிக்கு வேண்டியவராகவும் இருக்கலாம். அல்லது இளவரசியை அறியாமல் வேறு யாராவது சதிகாரர்கள், அவளைக் கவர்ந்து செல்வதற்காகத் திட்டமிடுபவராகவும் இருக்கலாம். அதனால் இளவரசி ஓர் அழகிய யுவனைப் பற்றிக் கனவு கண்டதாகக் கூறியதற்கும் மதில் ஏறி ஒருவன் தப்பி ஓடினான் என்பதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டுமென்ற உண்மையை ஊர்ஜிதம் செய்து கொண்டார்.

"சிறிது நாளாக நான் சந்தேகப்பட்டிருந்தது இப்பொழுது உண்மை ஆகியது அமைச்சரே! அந்தப்புரத்திற்கு இதுபோல் யாரும் அறியாமல் வருபவனை நாம் எப்படியும் கண்டு பிடித்தாக வேண்டும்" என்றார் விஜயராகவர்.

"அதைப் பற்றிச் சொல்லத்தான் நான் இங்கே வந்தேன் அரசே! நேற்றுத் தப்பி ஓடியவன் மீது அந்த இருளில் மறைந்திருந்த ஒரு பெண் கத்தியை வீசி இருக்கிறாள். அது அவன் மீதும் பட்டிருக்கிறது. முதுகிலே பதிந்திருக்க வேண்டும். அந்தப் பெண்ணை நமது காவலர்கள் உடனே பிடித்து விட்டார்கள். அவள் மூலமாக எப்படியாவது செய்தியை அறிய வேண்டுமென்ற எண்ணத்தில் காலையிலிருந்து அவளைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பெண் ஒன்றுக்கும் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆகாரமும் ஏதும் உண்ண மறுக்கிறாள். தோட்டத்திலிருந்து நடுநிசியில் தப்பி ஓடியவர்க்கும் அவளுக்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும். அந்தத் தொடர்பு விரோதமாக மாறி இருக்க வேண்டுமென்று முடிவுக்குத்தான் அதிகாரிகள் வந்து இருக்கிறார்கள். இவ்வளவையும் தங்களிடம் கூறவேண்டுமென்பதற்காகத்தான் நான் வந்தேன். தாங்களோ கண் சிவந்து, முகம் வாடி, சோர்வுற்று மேல் மாடத்தைவிட்டுக் கீழே இறங்காமல் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறீர்கள். தங்கள் மன நோயுடன், இந்த வீண் கவலையையும் நான் சேர்க்க விரும்பவில்லை. ஆனால் நேற்று நடந்த சம்பவத்திற்குப் பின் ஏதோ முக்கியமான செய்தி ஒன்று இருக்கிறது என்பது மட்டும் எனக்குத் தெரிகிறது" என்றார் பிரதானி.

பிரதானியின் கூர்மையான அறிவை அரசர் மெச்சத் தவறவில்லை. தன் தந்தையின் காலத்தில் கோவிந்த தீட்சதர் போன்ற பெரும் அறிவாளிகள் உடன் இருந்து அரசாங்கத்தை நடத்தியது போல் தனக்கும் பேரறிஞர் ஒருவர் அமைச்சராக இருந்து அறிவுரை பகர அமையவில்லையே என்ற கவலை அவருக்குச் சிற்சில சமயங்களில் ஏற்படுவது உண்டு. ஆனால் தீட்சதரின் வம்சத்தில் நெருங்கிய கிளை

மரபினரான பிரதானி ராஜ தந்திரத்திலும் தக்க சமயத்தில் அறிவுரை பகருவதிலும் சளைத்தவர் அல்லர் என்பதைப் பலமுறை புலப்படுத்தியிருக்கிறார். இப்பொழுது அவர் வந்து சொன்ன செய்தியும் மேலும் நடவடிக்கை எடுப்பதற்கான உறுதுணையாக அமைந்திருக்கிறது. திடீர் என்று இருக்கையை விட்டு எழுந்த அரசர், "அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு வயதிருக்கும்?" என்று கேட்டார்.

"இளம் வயதுதான் அரசே! நகர வாடை அதிகமாகப் படாத கிராமத்துப் பெண் போல் தோன்றுகிறது" என்றார் பிரதானி.

"நடுநிசியில் அவள் மட்டும் அந்தப்புரத்துத் தோட்டத்து மதில் அருகே தனியாகவா இருந்திருப்பாள்! அவள் கத்தியை யார் மீது வீசுவதற்கு இருந்தாள் என்று ஏதாவது உங்களுக்குத் தடையம் கிடைத்ததா?" என்று அரசர் கேட்டார்.

"என்ன கேட்டாலும் அவளிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. ஆனால், ஒன்றே ஒன்றுமட்டும் அவள் என்னிடம் வேண்டிக் கொண்டாள். தான் வீசிய கத்தியால் குத்துண்ட நபர் இறந்து போகாமல் உயிருடன் இருந்தால் அவரைத் தயவு செய்து பிடித்து ஒன்றும் செய்து விடாதீர்கள் என்று மட்டும் கேட்டுக் கொண்டாள். நானும் மிகவும் சாமர்த்தியமாக, "உன் கத்திக்குப் பலியாவது என்றால் கோட்டையின் சற்றுத் தூரத்திலே விழுந்து கிடந்திருப்பான். அப்படி யாரும் உயிரிழந்து கிடக்காததால் அவன் தப்பிச் சென்றிருப்பான் என்று எனக்குத் தோன்றுகிறது. அவன் இருக்கும் இடம் தெரிந்தால் அல்லவா அவனை நாங்கள் கைது செய்யலாம். அதற்காக நீ ஏன் கவலைப்படுகிறாய். வேண்டு மானால் ஓர் உறுதி உனக்கு நான் தரலாம். முதுகிலே காயம் பட்ட அவனுக்கு என் வைத்தியரைக் கொண்டு தக்க சிகிச்சை செய்வதாக வாக்கு அளிக்க முடியும். அவன் எங்கே இந்தச் சமயம் இருப்பான் என்று நீ சொல்லக் கூடுமானால் நான் என் ஆட்களை அழைத்து அவனை இங்கு கொண்டு வரச் செய்கிறேன்" என்று சொல்லிப் பார்த்தேன், பெண் தானே உடனே அவன் இருக்கக் கூடிய இடத்தைச் சொல்லி விடுவாள் என்று. ஆனால், அவள் மிகவும் கெட்டிக்காரியாக இருக்கிறாள். நான் கேட்ட கேள்விக்கு அவள் பதிலே சொல்லவில்லை" என்று கூறினார் பிரதானி.

"சரி, நானே வருகிறேன். நான் அந்தப் பெண்ணைப் பார்த்துச் சில கேள்விகளைக் கேட்கிறேன்" என்றார் மன்னர். பிரதானியோ சட்டென்று இடைமறித்து, "களைப்புடன் இருக்கும் நீங்கள் சிறைக் கூடத்திற்கு வருவதானால் மேலும் களைப்பு அடையக்கூடும். அதனால் நீங்கள் உணவு அருந்தி விட்டு வருவதுதான் சிறந்தது என்று நான் சொல்வேன்" என்றார்.

விஜயராகவர் சற்று யோசித்தார். 'பிரதானி சொல்வதும் நியாயம்தான். என்ன வந்து விட்டது என்று நான் இன்று திருவரங்கத்திற்குச் செல்லாமல் இருக்கிறேன். இப்பொழுதே நீராடிவிட்டுத் திருவரங்கம் சென்று எவ்வளவு நேரமானாலும் அரங்கநாதரைத் தரிசித்து விட்டுத்தான் பிறகு அந்தப் பெண்ணை விசாரித்துவிட்டு வரவேண்டும்' என்ற எண்ணத்தினராய், தான் திருவரங்கம் செல்லப் போவதைப் பிரதானியிடம் தெரிவித்தார்.

அப்பொழுது பிரதானி அவருடைய செய்கையை ஒப்புக் கொள்ளாமல், "அரசே, ஆண்டவனைத் தரிசித்து விட்டு உணவருந்துவது மிக உயர்ந்த செய்கைதான். இன்றைய நிலையில் தாங்கள் திருவரங்கம் போய்விட்டு வருவது என்றால் மாலைப்பொழுது ஆகிவிடும். காலையிலிருந்துத் தாங்கள் இருக்கும் களைப்பான நிலையில் வெகு தூரத்துக்குப் போய்விட்டுத் திரும்பி வருவது என்றால் உடல் நலிந்து விடும். மேலும் திருச்சிக் கோட்டைக்கு அணிவகுத்துச் செல்லும் படைகளும் குதிரைப் படைகளும் அந்தப் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கும்போது தாங்கள் அவர்களிடையே சிக்கிக் கொள்ள நேர்ந்துவிட்டால் பெரும் ஆபத்து நேர்ந்துவிடும். தங்களுக்கு நான் ஒரு யோசனை சொல்கிறேன். இங்கிருந்தே அரங்கநாதரைப் பார்ப்பதற்கு வழி சொல்கிறேன்" என்றார்.

விஜயராகவருக்கு வியப்புத் தாங்கவில்லை. "இங்கிருந்துத் திருவரங்கத்தைப் பார்க்க முடியுமா?" என்று கேட்டார். "கோபுரத்தைத் தரிசித்தால் ஆண்டவனைத் தரிசித்தது போல்தான் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கோபுரத்தைக் காண்பதற்கு நம் மாளிகையிலேயே வழி இருக்கிறது. நீங்கள் நீராடிவிட்டு வாருங்கள். நான் அழைத்துச் சென்று காட்டுகிறேன்" என்றார்.

அதே போல் விஜயராகவர் விரைந்து சென்று நீராடி விட்டு, பிரதானி பின் தொடர, அரண்மனை சபா மண்டபத்திற்கு மேலே உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் கிளி மண்டபத்தின் படிக்கட்டுகளின் வழியாக ஏறினார். மேல் உச்சிக்கு வந்தபொழுது தென்மேற்குப் பக்கமாக பிரதானி கையை நீட்டிக் காட்டியவுடன், விஜயராகவர் கண்களுக்கு மங்கிய நிழல் உருவமாகத் திருவரங்கத்து விமானமும், கோபுரமும் தெரிந்தன. விஜயராகவர் உடல் சிலிர்த்தது. கண்களில் நீர்மல்க நெடுநேரம் கோபுரத்தைத் தரிசித்துக் கொண்டிருந்துவிட்டுப் பிரதானியைத் தழுவிக் கொண்டு, "அமைச்சரே, இன்று நீங்கள் எனக்குச் செய்த உதவியை நான் மறக்கவே மாட்டேன். அதே போல் என் மனத்திலுள்ள கலக்கம் முழுவதையும் ஒழிப்பதற்கு நீங்கள் எப்படியாவது வழி செய்தாக வேண்டும்" என்று குரல் தழுதழுக்கக் கூறினார். பிரதானி ஒன்றும் பேசவில்லை. அரசரை மெல்ல அழைத்துக்

கொண்டு வந்து அவர் பகல் உணவை அருந்துவதற்கு வழி செய்தார். உணவை முடித்து வந்த விஜயராகவர், "இப்பொழுது நாம் போகலாமா, காவலிருக்கும் அந்தப் பெண்ணிடம்" என்றார்.

பிரதானியினால் தடையேதும் சொல்ல முடியவில்லை. விஜயராகவரும் பிரதானியும் மாணிக்கவல்லி காவலில் வைக்கப்பட்டிருந்த கூடத்தை நோக்கிச் சென்றார்கள். பெரும் கதவைத் திறந்து வழிவிட்டுக் காவலர்கள் பயபக்தியுடன் ஒதுங்கி நின்றார்கள். ஆனால், அறைக்குள்ளே சென்ற பிரதானியும் விஜயராகவரும் அந்த இடத்தில் யாருமே இல்லாதது கண்டு திகைப்படைந்து நின்றார்கள். அந்த இடத்திலிருந்து மாணிக்கவல்லி எப்பொழுது தப்பிச் சென்றாள்? எப்படித் தப்பிச் சென்றாள் என்பதே காவலாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் வியப்பாக இருந்தது.

# 33. மோதிரத் தூது

இளவரசி மோகனாங்கியால் இப்பொழுதெல்லாம் முன் போல் மாளிகையின் அந்தப்புரத்தை விட்டு வெளியே வர முடிவதில்லை. கட்டுக்காவல் பலமாய் இருந்தது. தோழி கமலம் தவிர வேறு யாரும் மோகனாங்கியைச் சந்தித்துப் பேசுவதற்கு அனுமதிக்கப் படவில்லை. அந்தப் புரத்திற்குள் யாரோ வந்து செல்கிறார்கள். அதைக் கண்டு பிடிக்கத்தான் இத்தகைய பலத்த காவல் என்று சிலர் பேசிக் கொண்டதைக் கமலம் அறிந்து இளவரசியிடம் சொன்னாள். இளவரசிக்கு அதைக்கேட்டு 'அழுவதா? சிரிப்பதா?' என்று தெரியவில்லை. அந்தப் புரத்துக்குள் இதுவரையில் ஆடவர் வாசனையே பட்டது கிடையாது. அப்படி ஏதாவது சொல்லித்தான் ஆகவேண்டுமென்றால் மதுரை மன்னருடைய ஓவியத்தைத் தவிர அந்தப்புர இளவரசியின் அறையில் ஆடவர் படமே கிடையாது. அப்படியிருக்க அரசர் திடீரென இப்படிச் சந்தேகிப்பதற்குக் காரணம் என்னவாய் இருக்கும் என்று மோகனாங்கி சிந்தித்தாள். குறத்தி வந்ததும், குறி சொல்லிப் போனதும் அரசருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒருவேளை முத்துமாலையை அபகரித்து விட்டாள் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட குறத்தியைத் தான் விடுதலை செய்த செய்கை அரசருக்கு எட்டியருக்குமோ என்று நினைத்தாள். ஆனால், அரசர் அதை அறியமாட்டார் என்பது பிறகு தெரிந்தது. அதனால் அரசர் சந்தேகப்படுவது வேறு ஏதோ ஒன்றாய் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தாள். கமலத்தை அனுப்பி விவரம் அறிந்து வருமாறு சொன்னாள். கமலமோ வெகு நேரம் கழித்துத் திரும்பி வந்து,

அந்தப்புரத்துத் தோட்டத்து மதிலோரத்தில் சந்தனத்தேவன் குதித்து ஓடியதாயும், காவலர்கள் அவனைத் துரத்திச் சென்றதாயும், தெரிவித்தாள். அரசர் அதைத்தான் சந்தேகப்படுகிறார் என்ற முடிவுக்கு வந்த மோகனாங்கி, சந்தனத்தேவன் அந்தப்புரத்துத் தோட்டத்துக் கருகே வரவேண்டியதன் நோக்கம் என்ன? என்ற ஆராய்ச்சியில் இறங்கினாள். பிறகு தன் அத்தை ரங்கமாதேவி சந்தனத்தேவனைப் பற்றிக் கூறி இருந்தது அவள் நினைவுக்கு வந்தது. தன்னை அவனுக்கு எப்படியும் மணம் முடித்துக் கொடுத்துவிட வேண்டுமென்ற ஆசை மிகத் தீவிரமாக இருப்பதனால் சந்தனத்தேவன், தன்னை நேரிடையாக சந்திப்பதற்கு இரவு நேரத்தில் வந்திருக்கலாம் என்றும் யூகித்து முடிவுக்கு வந்தாள்.

சந்தனத்தேவன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அவளுக்குக் கசப்பாய் இருந்தது. ஏனென்றால் குறத்தி கொண்டு வந்த ஓவியத்தைப் பார்த்த பிறகு இளவரசியால் வேறு ஆடவர் மீது நாட்டம் செல்லவில்லை. மேலும் அந்த ஓவியத்திற்குரியவர் மதுரை மன்னர் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு அவளால் மாளிகையில் தங்கி இருக்கவே தோன்றவில்லை. பறவையைப் போல் பறந்து மதுரைக்கு ஓடிவிடலாமா? என்று கூட எண்ணினாள். அவளுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. 'முன்பின் பார்த்திராத ஒருவர் மீது அது என்ன, அப்படி ஓர் ஆசை தனக்கு ஏற்பட்டு விட்டது? அது நல்லதற்குத்தானா? ஒரு கன்னிப்பெண் இப்படி மனத்தில் வேறொரு ஆடவரை நினைக்கலாமா?' என்று தன்னந் தனியே உட்கார்ந்து சிந்தித்தாள். அவளால் எந்தச் சமாதானத்திற்கும் முடிவிற்கும் வர முடியவில்லை. தன்னைத் தானே புரிந்து கொள்வதற்காகப் பல கேள்விகளை மனத்திற்குள்ளே கேட்டுக் கொண்டாள். கடைசியாகக் கிடைத்த விடையோ தெய்வீகக் காதல் தனக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். கமலத்திடம் மனத்தில் இருப்பதைச் சொல்லலாமா என்று பலமுறை கேட்டுக் கொண்ட பிறகு கடைசியாக அவளுடைய ஆலோசனையையும் கேட்பதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தாள்.

"கமலம், நீ என்ன நினைக்கிறாய்? அந்தப் புரத்திற்குள் யாராவது வந்திருப்பார்கள் என்று எண்ணுகிறாயா?" என்று கேட்டாள்.

கமலம் சிரித்தவாறு சொன்னாள்: "அந்தப்புரத்தைப் பொறுத்தவரையில் என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்."

"என்ன சொல்ல முடியும்?"

"யாரும் நிச்சயமாக வரவில்லை என்று சொல்ல முடியும். ஆனால்..."

"ஆனால் என்றால்? இன்னும் ஏதோ ஒன்றை முடிக்காமல் விழுங்கப் பார்க்கிறாயே?" என்று இளவரசி சற்றுக் கோபத்துடன் கேட்டாள்.

"இல்லை தேவி, அந்தப்புரத்திற்குள் யாரும் வரவில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் தங்கள் இதயத்திற்குள் யாரும் நுழையவில்லை என்பதை என்னால் உறுதியிட்டுச் சொல்ல முடியாது" என்றாள்.

மோகனாங்கி கமலத்தை விழுங்கி விடுவதைப் போல் பார்த்துவிட்டு அவள் கன்னத்தைப் பொய்க் கோபத்துடன் கிள்ளி,. "உன்னை அறியாமல் என் இதயத்திற்குள் யாராவது புகுந்து விட முடியும் என்று நினைக்கிறாயா?" என்றாள்.

"நான் அப்படி நினைக்கவில்லைதான். ஆனால் சிறிது நாட்களாகத் தங்களுடைய தோற்றத்தையும் நடவடிக்கைகளையும் பார்த்தால் தாங்கள் இப்பொழுது தனிமையில் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால்தான் தங்கள் இதயத்திற்குள் புகுந்திருப்பவர் யார் என்பது எனக்குத் தெரியாது" என்று கூறிக் கமலம் இளவரசியின் இதயத்திலிருப்பதை ஊடுருவி அறிய முயல்வது போல் பார்த்தாள். மோகனாங்கியும் குறும்புச் சிரிப்புடன், "அப்படி என்றால் உன்னிடம் பொய் சொல்கிறேன் என்றா நினைக்கிறாய்?" என்று கேட்டாள்.

"இருக்கலாம், எனக்குத் தெரியாமல் அன்னமோ, புறாவோ அல்லது கிளியோ தூதாகத் தங்களை வந்து அடைந்திருக்கலாம். அந்தத் தூதுப் பறவைகள் ஏதாவது செய்தி கொண்டு வந்திருக்கலாம். முன் காலத்திலெல்லாம் காதலனிடமிருந்து காதலிக்குக் கடிதம் கொண்டு வருவதைத்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், தங்களுக்கோ அழகிய சித்திரத்தின் மூலம் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ஓவியமோ தங்கள்கு எத்தனையோ கதைகளைச் சொல்லியிருக்கும்; காதல் மொழிகளைப் பேசி இருக்கும்" என்று கூறிக் கமலம் நிறுத்தியவுடன், மோகனாங்கிக்குத் தூக்கிவாரிப் போட்டது. குறத்தி கொடுத்துவிட்டுப் போன ஓவியத்தை இவள் பார்த்து விட்டாளா? என்ற ஆச்சரியத்துடன், "என்ன சொல்கிறாய் கமலி? பறவையாவது, படத்தைக் கொண்டு வந்து கொடுத்திருப்பதாவது? ஏதாவது கனவு கண்டாயா?" என்றாள்.

"ஆமாம், கனவுதான் கண்டேன். நடுநிசியில் எல்லோரும் உறங்கிய பிறகு திடீர் என்று ஒரு கனவு கண்டேன். தாங்கள் தூக்கம் வராமல் படுக்கையில் புரள்வது போலவும், பிறகு எழுந்து உட்கார்ந்து நாலு புறமும் சுற்றிப்பார்த்த பிறகு தலையணைக்கு அடியிலிருந்து ஒரு குழலை எடுத்து அதற்குள் இருக்கும் மெல்லிய துணியிலே எழுதப்பட்ட சித்திரம் ஒன்றைக் கண்கொட்டாமல் நீண்ட நேரம் பார்த்து மகிழ்வது போலவும் கனவு கண்டேன்" என்றாள்.

இளவரசி அதிர்ச்சியடைந்தாள், தான் இதுவரையில் ரகசியம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் விஷயம் கமலத்திற்குத் தெரிந்து

விட்டதே என்ற பயத்திலும் மேலும் இவளிடம் பொய் சொல்லித் தப்ப முடியாது என்ற முடிவுக்கு வந்து, "கமலம், உனக்கு எல்லாம் தெரியுமா? எப்படி நீ தெரிந்து கொண்டாய்?" என்று கேட்டாள். கமலம் புன்சிரிப்புடன், 'தங்களுடைய உயிர்த் தோழியாக - கண்ணை இமை போல் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நான் அதைக்கூடத் தெரிந்து கொள்ளாவிட்டால் அரண்மனையில் வாங்கும் சம்பளம் தான் எனக்குச் செரிக்குமா? அப்படியே இல்லாவிட்டாலும் தங்களுடன் வெகுகாலமாகப் பழகி வரும் நான் தங்கள் இதயத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் நான் பார்க்கும் வேலைதான் நிலைக்குமா? எப்படித் தெரிந்து கொண்டேன் என்று மட்டும் என்னைத் தயவுச் செய்து கேட்காதீர்கள்! ஆனால் தாங்கள் ஓர் ஓவியத்தைப் பார்த்து பெருமூச்சு விடுவதும் காதல் வயப்பட்டவள் போல் மெலிந்து, உடல் வாடி இருப்பதும் எதிலும் பற்றில்லாமல் யாருடனும் கலகலப்பாகப் பேசாமல் இருப்பதும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அந்த ஓவியத்திற்கு உரியவர் யார் என்பது மட்டும் எனக்குப் புலப் படவில்லை. அன்று ஒருநாள் நந்தவனத்தில் சந்தித்தோமே அவராய் இருக்கலாமோ என்று நினைத்தால் அவர் அவ்வளவு அழகரல்லர். சரி; வடக்கே இருந்து ரங்கராஜம்மாள் சொன்ன வரனாக இருக்குமோ என்று பார்த்தால் அந்த வரனுக்கு அவ்வளவு இளம் வயதில்லை. எனக்குத் தெரிந்த வரையில் அண்டை நாட்டில் எந்த இளவரசரும் அத்தகைய இளம் வயதினராக இல்லை. அதனால்தான் நான் யாராக இருக்குமென்ற சிந்தனையிலேயே தங்களைக் கேட்காமலேயே அதைக் கண்டு பிடித்து விடுவது என்ற பெரும் முயற்சியில் சில நாட்களாக ஈடுபட்டிருந்தேன். ஆனால் முடியவில்லை. தாங்கள் தான் இப்பொழுது எனக்குச் சொல்ல வேண்டும்" என்றாள்.

இளவரசி கமலத்தின் தோள் பட்டையைப் பிடித்து உலுக்கி, "பொல்லாதவளடி நீ, இவ்வளவும் தெரிந்து வைத்துக் கொண்டே என்னிடம் பணி செய்து கொண்டிருக்கிறாயா? உன்னிடம் நான் இன்னும் சொல்லாமல் மறைத்தால் என் இதயத்திலேயே காதலை மூடி வைத்து பூஜை போட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான். கடைசியில் இலவு காத்த கிளியாக மாற வேண்டியதுதான். நான் அந்த ஓவியத்திற்கு உரியவர் யார் என்று தெரிவித்தால் அவரிடம் தூது செல்வதற்கு நீ தயாராய் இருக்கிறாயா? நான் சொல்லி அனுப்பும் செய்தியை அவரிடம் சென்று தெரிவிப்பாயா?" என்று கேட்டாள் இளவரசி. "இது என்ன கேள்வி தேவி? தாங்கள் இட்ட பணியை நிறைவேற்றுவதற்காகத் தானே நான் இருக்கிறேன். ஏழு கடலையும் தாண்டிச் செல்லச் சொன்னாலும் செல்வதற்கு எனக்கு தடையில்லை. சொல்லுங்கள்! நான் யாரிடம் தூது செல்ல வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்!

தங்களுடைய காதலை அரசர் அறிவாரா? அரசருக்குத் தெரிவிக்காமல் தாங்களே மனத்திற்குள் மூடி மறைத்துக் கொண்டிருந்தால் அரசர் வேறு வரனை ஏற்பாடு செய்து விட்டால் கடைசியில் என்னாவது?" என்ற கவலையுடன் கேட்டாள் கமலம். "என் விருப்பம் இல்லாமல் அரசர் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விடமுடியுமா? மாலையிடப் போகிறவள் நானா, என் தந்தையா? அதைப் பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே. நான் சொல்வதை ரகசியமாக செய்வதாக வாக்களித்தால் என்னுள்ளம் கவர்ந்த அவரது பெயரைத் தெரிவிக்கிறேன்" என்றாள். கமலம் அவ்வாறே வாக்களித்தாள்.

மோகனாங்கி பிறகு மெல்லிய குரலில் சொன்னாள்: "கமலம், நீ பார்த்த அந்த ஓவியத்திலுள்ள அழகரை நான் நேரிடையே கண்டதில்லை. ஆனால் வெகு காலம் பழகியதைப் போன்று நெருங்கிய உணர்ச்சி ஒன்று எனக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால், அவரை அடைவது அவ்வளவு எளிது என்று எனக்குத் தோன்றவில்லை. வெகு தொலைவிலும் அவர் இல்லை. மூன்று நாள் பயணத்தில் அவரை அடைந்து விடலாம். ஆனால் எனக்கும் அவருக்கும் இப்பொழுதிருக்கும் இடைவெளியைப் பார்த்தால் மூவாயிரம் ஆண்டுகளானாலும் நெருங்க முடியாது போல் தோன்றுகிறது. ஒரு வேளை நீ தூது சென்றால் இடைவெளி குறையலாம்" என்றாள்.

"தேவி! இன்னும் சுற்றி வளைக்காமல் எனது ஆர்வத்தைப் பெருக்காமல் தங்கள் உள்ளங் கவர்ந்த அந்தக் கள்வன் யார் என்று சொன்னீர்களானால் அவரைத் தஞ்சைக்கே அழைத்து வந்து தங்களைச் சந்திக்குமாறு ஏற்பாடு செய்கிறேன்" என்றாள்.

மோகனாங்கி நாணத்தால் முகம் சிவக்க, ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லப் போவது போல் இதயம் படபடக்க, பயத்தால் உடல் சிலிர்க்க, "கமலம், அந்த ஓவியத்தில் இருப்பவர் வைகை நதியின் கரையிலே எழில் மாடங்கள் நிறைந்த மதுரை நகரத்து மாமன்னர்" என்றாள்.

ஏதோ கேட்கக்கூடாத ஒன்றைக் கேட்டுவிட்டவள் போல் கமலம் திடுக்கிட்டாள். விழிகள் நகராமல் குத்திட்டு நிற்க, பயம் முகத்திலே வெறுப்பை உண்டாக்க, "தேவி, யாரைக் காதலிக்கிறீர்கள்? மதுரை மன்னரையா? உங்கள் தந்தைக்கு இது தெரிந்தால் காரியம் கெட்டுப் போய் விடுமே. நடக்காததை நீங்கள் விடாமல் மனத்தில் வைத்துக் கொண்டிருந்தால் அதனால் வேதனைதான் மிக அதிகமாகும்" என்றாள். கமலம் இவ்வாறு கூறியவுடன் மோகனாங்கி சிற்றத்துடன், "உன்னிடம் உபதேசம் கேட்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இந்த நாடே என்னை எதிர்த்தாலும், எனக்குள்ள உரிமை அனைத்தும் பறிபோனாலும் என் மனத்திலே உருவகப்படுத்தி விட்ட - தெய்வமாக

என்னைத் தொடங்கிவிட்ட தெய்வத்தால் என் இதய அரண்மனையில் வீற்றிருப்பதற்காக அனுப்பப்பட்ட - அவரை என்னால் மறக்க முடியாது. இது உறுதி. உன்னால் இயலுமானால் - உனக்குத் துணிவு இருந்தால் - மதுரையை நோக்கிச் செல். இல்லாவிட்டால் நான் சொன்னதை யெல்லாம் மறந்துவிட்டு எப்பொழுதும் போலவே நீ என்னிடம் பணி செய்து கொண்டிரு. மதுரை போவதாக முடிவு செய்தால் உடனே புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய். இல்லையென்றால் என் முன்னால் நின்று என் வேதனையை வளர்க்காதே. என்னைப் பிறகு வந்து பார். இதற்கிடையில் இந்தச் செய்தியை நீ வெளியே யாரிடமாவது தெரிவித்ததாக எனக்குத் தெரிந்தால் பிறகு மோகனாங்கி என்பவள் மிகப் பாதகி என்னும் அவப்பெயரைத்தான் நான் அடைவேன்'' என்று கடுமையாக மொழிந்தாள்.

கமலத்தின் கண்களில் நீர் துளிர்த்தது. "தேவி! தங்களுடைய கட்டளையை நிறைவேற்றுவதைவிட எனக்கு வேறு தொழில் கிடையாது என்று முன்பே சொல்லி விட்டேன். நாளைக் காலையிலேயே மதுரை செல்லச் சித்தமாகிறேன். மதுரை மன்னரிடம் என்ன தெரிவிக்க வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்'' என்றாள்.

மோகனாங்கியின் முகத்தில் பொன்னொளி பிறந்தது. கையிலிருந்த கணையாழியைக் கழற்றி அவள் கையில் கொடுத்து, "இதை மதுரை மன்னரிடம் சேர்ப்பித்து என் ஆவலைத் தெரிவித்துவிட்டு வா. அது போதும்'' என்றாள். கமலமோ மோதிரத்தை வாங்கிப் பத்திரமாகத் தனது முந்தானையில் முடிந்து இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

# 34. செஞ்சிக்கு இருவர்

கணையாழியை வாங்கிக் கொண்ட கமலம் நேரே மதுரைக்குச் சென்றிருக்கவாம். ஆனால், அவள் தன்னுடைய இளம் வயதுத் தோழியான குடந்தையிலிருக்கும் பூக்காரரின் மகள் வடிவின் வீட்டிற்குச் செல்வதற்காகக் குடந்தையை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்தாள். அவளுடைய உள்ளத்தில் வேறுவிதமான எண்ணம் இருந்திருக்க வேண்டும். இளவரசியிடம் கணை யாழியை வாங்கிக் கொண்டு அதைத் தவறான முறையில் - அவளுக்கு எதிராக பயன்படுத்தத் துணிந்தாள் அவள். நீண்ட நாட்களாக அவள் இத்தகையதொரு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தாள். அது இன்று நேர்ந்ததும் உடனே குடந்தையை நோக்கிச் சென்றாள்.

குடந்தையை அவள் அடையும் போது இருட்டி விட்டது. காவேரிக் கரை மண்டபத்தில் அவள் சற்று நேரம் இளைப்பாறி முகம் கழுவித்

தன்னுடன் எடுத்து வந்திருந்த சிற்றுண்டியை அருந்திய பிறகு புறப்படலாம் என்று அமர்ந்தாள். தஞ்சை மாளிகையை விட்டு அவள் புறப்பட்டு விட்டாளே ஒழிய, அவளுக்குத் தைரியம் சற்றுக் குறைவாகத்தான் இருந்தது. மதுரையை நோக்கித் தான் செல்வது அரசருக்கு தெரிந்தாலோ அல்லது செஞ்சியை நோக்கித் தான் செல்வது இளவரசிக்குத் தெரிந்தாலோ மிகுந்த ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட கமலம், திரும்பவும் தஞ்சைக்கே சென்று விடலாமா என்று கூட எண்ணினாள்.

ஆனால், அப்படித் திரும்பி விட்டால் இளவரசி தன்னை வேறு எதற்கும் பிறகு நம்பமாட்டாள். செஞ்சிக்குச் சென்று அந்த முத்திரை மோதிரத்தை செஞ்சித் தளபதியிடம் கொடுக்க வேண்டும் என்ற தன் திட்டபடி நடந்தாலும் காரியம் வேறுவிதமாகக் கெட்டுவிட்டாலும் விடலாம். ஒன்றும் புரியாமல் மிகக் குழப்பத்தில் ஆழ்ந்த வண்ணம் சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்த அவளது நிலையைக் குதிரையின் குளம்படிச் சப்தம் குலைத்தது.

குதிரை மீது இருந்து இளம் வீரன் ஒருவன் இறங்கினான். காவேரியில் கால் கை கழுவுவதற்காகப் படிக்கட்டுகளின் வழியே நடந்தான். மங்கிய வெளிச்சத்தில் முதலில் அந்த உருவத்தின் அடையாளத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. பிறகுதான் அவளுக்கு அந்த உருவம் முத்துக்குமரன் என்பது தெரிந்தது. அந்த இடத்திற்கு முத்துக்குமரன் எப்படி வந்தான் என்பதே அவளுக்கு வியப்பாக இருந்தது. தந்திரமாக அவனைத் தஞ்சைச் சிறையிலே பிடித்து அடைக்கும்படி அவள் செய்திருந்தாள். அவன் அந்த நேரத்தில் குடந்தையில் காணப்படுகிறான் என்றால் அவளுக்கு வியப்புத் தாங்கவில்லை. தனக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கு எல்லாம் அவள் காரணம் என்பது முத்துக்குமரனுக்குத் தெரியாது. அதனால் அவளை அவன் தவறாகவும் நினைக்கமாட்டான். அவனோடு இப்பொழுது பேசுவதால் ஏதாவது நன்மை கிடைக்கலாம் என்ற எண்ணத்தில் கமலம் அவன் திரும்பி வரும் வரையில் அங்கேயே இருப்பதற்கு முனைந்தாள்.

ஆனால், முத்துக்குமரனோ கடைசிப் படிக்கட்டில் இறங்கியவுடன் தனது ஆடைகளை எல்லாம் களைந்து இடையிலே ஒரு துண்டை மட்டும் அணிந்து கொண்டு 'தொப்'பென்று நீரிலே குதித்தான், களைப்புடன் - வெகு தூரத்திலிருந்து வரும் அவனுக்குச் சிறிது நீரில் அமிழ்ந்துக் குளிப்பது மிகத் தெம்பை அளித்தது. அதனால் அவன் ஆற்றில் வெகுதூரம் சளைக்காமல் நீந்திக் கொண்டே குளித்துக் கொண்டிருந்தான்.

கமலம் பொறுமையாக - சிறிது நேரத்தில் அவன் வந்து விடுவான் என்று மண்டபத்தில் அமர்ந்திருந்தாள். சற்று நேரத்திற்கு ஒரு தரம் அவன் குளிக்கும் இடத்தை நோக்கியவாறு இருந்தாள்.

நேரம் ஆக ஆக இருள் நன்றாகப் படர்ந்தது. குளக்கரையில் இருந்த உருவம் சிறிது கூடப் புலப்படவில்லை. மேலும் அங்கே உட்கார்ந்திருப்பது சரியல்ல என்ற எண்ணத்துடன் தன் தோழி வடிவின் வீட்டை நோக்கிச் சென்றாள் கமலம்.

தோழியின் வீட்டிற்கு எப்பொழுதோ அவள் வந்திருக்கிறாள். அதனால் சட்டென்று வழியும் அவளுக்குப் புலப்படவில்லை. பிறகு தட்டுத்தடுமாறி கும்பேஸ்வரர் கோவிலைக் கண்டுபிடித்து அதற்கு அருகே இருந்த பூக்கார பொன்னுரங்கத்தின் வீட்டைக் கண்டு பிடித்தாள். வாசலிலேயே அவள் தோழி வடிவு நின்று கொண்டிருந்தாள்.

கமலத்தை முதலில் அவளுக்கு அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. பிறகுதான் வீடு தேடி வந்திருக்கும் பெண் யாராய் இருக்கும் என்று உற்று நோக்கியவுடன் அவள் புரிந்து கொண்டாள். நெடு நாட்கள் கழித்துச் சந்தித்த தோழியை அவள் அணைத்து மிகவும் குதூகலத்துடன் நல்வரவு கூறி வீட்டிற்குள்ளே அழைத்துச் சென்றாள். மேலும் தஞ்சை நாட்டு இளவரசியின் அந்தரங்கத் தோழி என்னும் அரசாங்கப் பதவி வேறு அதிகப்படியான மரியாதையை அவள் செய்யுமாறு செய்தது. திடீரென்று கமலம் தன் வீட்டிற்கு வந்த காரணத்தைப் பூக்காரரின் மகளால் அறிய முடியவில்லை. வற்புறுத்தி உணவு அளித்து அவளுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தாள். அவள் தந்தையும் வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடையை மூடி வீட்டிற்கு வந்தார். அவருடன் மற்றொரு ஆண் குரலும் கேட்கவே வடிவு எழுந்து சென்று வாயிற்புறத்தை நோக்கினாள்.

முத்துக்குமரன் தன் தந்தையுடன் வந்து கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவள் மிகுந்த பரபரப்படைந்தாள். அந்த இளைஞன் மீண்டும் வருவானா என்ற ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த வாலிபன், தன் வீட்டை நோக்கி வருவதைக் கண்டவுடன், தன் தந்தையே அவனை அழைத்து வருவதை அறிந்தவுடன் அவளுக்கு ஏற்பட்ட உள்ளத் துடிப்புக்கு அளவில்லை! கமலம் நொடியில் வடிவின் மாற்றத்தை அறிந்து கொண்டாள். வருபவர் யாராய் இருக்க முடியும் என்று யூகிக்க அவளுக்குத் தோன்றவில்லை.

தன் தோழிக்கு வேண்டிய நெருங்கிய உறவினர் யாராவது வந்திருக்கலாம் என்ற நினைவில் அவள் தான் இருந்த அறையை விட்டு வெளியே வரவில்லை. பரபரப்பு மிகுந்த பூக்காரரின் மகள் வடிவு மட்டும் கமலத்தை நெருங்கி முகமலர்ச்சியுடன், "இன்று எதிர்பாராத சந்திப்பெல்லாம் நடக்கிறது கமலம்" என்று கூறினாள்.

"எதிர்பாராத சந்திப்பு என்று எனது வருகையைக் கூறினால் அர்த்தம் உண்டு. வேறு இன்னொருவருடைய வருகையையும் நீ சொல்கிறாய்

போல் இருக்கிறதே" என்று கமலம் அவள் வாயிலிருந்தே வருபவரைப் பற்றிய செய்தியை அறிவதற்காகக் கேட்டாள்.

"ஆமாம்; ஆமாம். நான் இவ்வளவு நாட்களாக ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் வந்து விட்டார்" என்று கூறியவள் மறுகணமே ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டதைப் போல் உதட்டைக் கடித்துக் கொண்டு பேச்சை மாற்ற முயன்றாள். கமலமா விடுபவள்? விழிகளில் குறும்புத்தனத்தை நிறைத்துக் கொண்டு, "பெண்ணின் ஏக்கத்தைத் தீர்க்கக் கூடியவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். கல்யாணமான பெண்ணாக இருந்தால் வெளிநாடு சென்ற கணவராகவும், கல்யாணமாகாதவளாய் இருந்தால் காதலனாகவும் தான் இருக்க முடியும். உனக்குத் திருமணம் ஆகி இருக்க முடியாது. அதனால் நீ நெடுநாளாக ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்தவர் உனது ஆசைக் காதலனாகத் தான் இருக்க முடியும், இல்லையா?" என்றாள் கமலம். வடிவின் முகம் நாணத்தால் சிவந்தது. பொய்க் கோபம் கொண்டு, "அரண்மனையிலிருந்து அழகாகப் பேசக் கற்றுக் கொண்டாய்" என்றாள்.

"இதில் என்ன பேச்சு இருக்கிறதடி? இயற்கையாய் நடக்கக்கூடியதைத்தான் நான் சொல்கிறேன். ஒரு கணத்திலே உன்னிடம் ஏற்பட்ட மாறுதலையும் உள்ளத் துடிப்பையும் கண்ட எனக்கு உன் இதயத்திலிருப்பதைப் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமில்லை. எனக்குத்தான் சொல்லேன். உன் காதலர் இவ்வளவு நாட்களாக எங்கே சென்றிருந்தார்" என்று கேட்டாள் கமலம். இதற்குள் முத்துக்குமரனும் பூக்காரப் பொன்னுரங்கமும் கூடத்திற்குள் நுழைந்து விட்டனர். விளக்கு வெளிச்சத்தில் முத்துக்குமரனைக் கண்டுவிட்ட கமலம் திடுக்கிட்டு ஒன்றும் பேச முடியாமல் திகைத்தாள். கமலத்தின் திகைப்பை அறியாத வடிவு அவளை அழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுக் கிணற்றங்கரைக்கு அருகிலுள்ள சிறு மேடைக்குச் சென்றாள்.

அது சிறிய வீடாதலால் ஒரு சிறு கூடமும் சமையல் அறையும் தாழ்வாரமும் கிணற்றை ஒட்டினாற்போல் உள்ள தோட்டமும் தான், அவர்கள் புழங்குவதற்கு இடமாய் இருந்தன. கமலத்தை அங்கே கண்டு விட்ட முத்துக்குமரனும் திகைத்தான். அவள் இங்கு எங்கே வந்தாள் என்ற கவலை அவனைப் பிடித்துக் கொண்டது. தான் இங்கு வந்திருக்கும் காரியத்திற்குக் கமலத்தின் வருகை ஒரு வேளை இடையூறாக இருக்குமோ என்ற எண்ணத்தில் அவன் மிகவும் ஜாக்கிரதையாகப் பூக்காரருடன் பேசுவதற்கு முயன்றான்.

"இவ்வளவு நேரம் கலகலப்பாகப் பேசி வந்த நீ வீட்டிற்குள் வந்தவுடன் திடீரென்று மௌனமாகி விட்டாயே. இது உன்

வீடுபோல்தான். கூச்சப்படாமல் நீ பேசலாம். மேலும் என் மகளுக்கு நீ அன்னியன் அல்லன். உன்னை அவளுக்கு முன்பேதான் தெரியுமே!" என்றார் பூக்காரர். முத்துக்குமரன் மெல்லிய குரலில், "நான் திடீரென்று ஊமை போலாகி விடவில்லை. ஊமையாக வேண்டிய சந்தர்ப்பம் இங்கு எதிர்பாராமல் நேர்ந்து விட்டது" என்றான். "ஏன் இந்த வீட்டில் உன்னைப் பேச முடியாமல் எந்தச் சக்தியாவது செய்து விட்டதா?" என்று கேட்டார் பூக்காரர். 'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் முத்துக்குமரன். "உன்னைப் பேசா மடந்தை யாக்கியது என் மகளா?" என்று பளிச்சென்று கேட்டுவிட்டார் அவர், "இல்லை" என்று தலையை அசைத்த முத்துக்குமரன் தொலைவில் அமர்ந்திருந்த கமலத்தைச் சாடையாகக் காட்டி, "அந்தப் பெண் யார்?' என்று மெல்லிய குரலில் கேட்டான். பூக்காரரும் அப்பொழுதுதான் கவனித்தார். அவருக்கும் அவள் யார் என்று தெரியவில்லை. தெரியாது என்பதைக் காட்டிக் கொள்ளாமல், "அடுத்த தெருவிலிருக்கும் அவளது தோழி யாராவது வந்திருப்பாள். நான் வரும் வரையில் பேச்சுத் துணைக்கு வேண்டுமல்லவா?" என்றார் பொன்னுரங்கம். முத்துக்குமரன் மெல்ல நகைத்து விட்டு, "தஞ்சாவூர், குடந்தைக்கு அடுத்த தெரு என்பது இப்பொழுதுதான் நீங்கள் சொல்வதிலிருந்து எனக்குத் தெரிந்தது. தஞ்சாவூர், அடுத்த தெருவென்றால் மதுரை அடுத்த ஊராக வைத்துக் கொள்ளலாம். அடுத்த தெருவில் இருப்பவர்கள் இவ்வளவு சீக்கிரமாக வருவதுபோல் அடுத்த ஊருக்கும் போய்விடுவார்கள் போல் இருக்கிறதே" என்றான். கமலம் தஞ்சையிலுள்ளவள் என்பதைக் குறிப்பாக உணர்த்தியதைக் கமலம் புரிந்து கொண்டாள்.

அவனுடைய புரியாத பேச்சைக் கேட்டு ஒன்றும் தோன்றாமல் பூக்காரர் விழித்தார். "என்ன தம்பி சொல்லுகிறாய்? தஞ்சாவூர் என்கிறாய். அடுத்த தெரு என்கிறாய், அடுத்த ஊர் என்கிறாய், எனக்கு ஒன்றும் புரியவில்லையே. களைப்பு உனக்கு அதிகமாகியதால் இப்படிப் பேசுகிறாயா" என்று கேட்டுவிட்டு, "சீக்கிரமாக உனக்கு உணவளித்துக் களைப்பு நீங்கச் செய்தால் தான் உன்னுடைய குழப்பங்கள் எல்லாம் தீரும். நீயும் விரைவாகக் காலையில் எழுந்து செஞ்சிக்குச் சென்று விடலாம்" என்றார்.

முத்துக்குமரன் உரக்கப் பேசாமல் இருப்பதற்கான ஜாடையைக் காட்டி, "எனக்குக் களைப்புதான். ஆனால் சித்தம் தடுமாறும்படியான களைப்பு இல்லை" என்றான். அதற்குள் பூக்காரர் தன் மகளை நோக்கிச் சென்று, "வீட்டிற்கு விருந்தினர் வந்திருக்கிறாரே? கவனிக்காமல்

இருக்கிறாயே. அவர் சாப்பிட்டுவிட்டு இளைப்பாறி விடியற்காலையில் ஊருக்குப் புறப்பட வேண்டுமாம். சோறு இருக்கிறதா அல்லது, புதிதாக ஆக்க வேண்டுமா?'' என்று கேட்டார். அவர் மகளும் விரைந்து எழுந்து, "ஒரு விருந்தினர் மட்டும் வந்திருக்கவில்லை அப்பா. இரண்டு விருந்தினர்கள், அரச விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். அவருக்கு ராஜோபசாரம் செய்யக்கூடிய சக்தி நமக்கில்லை. ஆனால், நம்மால் முயன்ற அளவு செய்யலாம் அல்லவா?'' என்றாள்.

"யாரைச் சொல்கிறாய்?'' என்று கேட்பது போல் தன் மகளையும் அவள் அருகில் இருந்தவளையும் மாறி மாறிப் பார்த்தார் பூக்காரர். தன் தந்தைக்குக் கமலத்தை அடையாளம் தெரியவில்லையாதலால் அவளை அறிமுகப்படுத்த விரும்பி, "கமலத்தை மறந்து விட்டீர் அப்பா? காவேரிக் கரையோரமாகப் பத்து வருடங்களுக்கு முன்பு செந்தாமரை ஆச்சி என்ற ஒரு பாட்டி இருந்தாளே, உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவளுடைய பேத்திதான் இவள், சிறு வயதிலேயே அரண்மனைக்குச் சென்று விட்டாள். முன்பெல்லாம் வருஷம் ஒரு முறையாவது இந்தப் பக்கம் கமலம் வருவாள். இப்பொழுது சில வருஷங்களாக நம்மையெல்லாம் அடியோடு மறந்து விட்டாள். இளவரசியின் அந்தரங்கத் தோழி என்றால் இந்த ஏழைகளை எல்லாம் கவனிப்பதற்கு அவளுக்கு நேரம் ஏது? எங்கோ ஊருக்குப் புறப்பட்ட அவளுக்கு வரும் வழியில் என்னுடைய நினைவும் வந்திருக்கிறது'' என்றாள்.

ஒரே மூச்சில் இவ்வளவையும் சொல்லிவிட்ட தன் மகளையும், கமலத்தையும் வியப்புடன் மாறி மாறிப் பார்த்த பூக்காரர், "அப்படியென்றால் நம் வீட்டிற்கு இன்று வந்திருக்கும் இரண்டு விருந்தினர்களும் முக்கியமானவர்கள்தாம். சீக்கிரமாக நல்ல விருந்துக்கு ஏற்பாடு செய். நான் சென்று சில காய்கறிகளை வாங்கி வருகிறேன்'' என்று கூறி அவர் புறப்பட்டார்.

அவர் மகளும் உடனே அடுப்பை மூட்டி உணவு தயாரிக்க முனைந்தாள்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கமலம் மெல்ல முத்துக்குமரனிடம் உட்கார்ந்து மோட்டு வளையைப் பார்த்தவாறு யோசித்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து அவன் எதிரே நின்று கனைத்தாள். முத்துக்குமரன் தன்னைக் கண்டவுடன் திகைத்து விடுவான் என்று எதிர்பார்த்த கமலம் ஏமாந்து போனாள். அதற்குப் பதிலாக முத்துக்குமரன் உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு எழுந்து, "இளவரசியின் உயிர்த் தோழியே வருக! வருக! தாங்கள் இப்படி நிற்கலாமா? உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்று கேலியாக, ஆனால், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் கூறினான்.

துடுக்குத்தனமும் சாமர்த்தியமும் மிகுந்த கமலத்தால் உடனடியாக ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. "நீங்கள் இங்கு எதற்கு வந்தீர்கள்?" என்று மெல்லக் கேட்டாள்.

முத்துக்குமரன் குறும்புத்தனமான சிரிப்புடன், "செஞ்சிக்குப் போவதற்கு இதுதானே வழி. நான் அடிக்கடி செஞ்சிக்குப் போவது வழக்கம். போகும் வழியில் பூக்காரார் வீட்டில்தான் தங்குவேன்".

கமலத்திற்கு அவன் கூறிய பதில் - 'செஞ்சிக்குப் போகப் போகிறேன்' என்னும் பதில் திடுக்கிட வைத்தது. அவனுடைய தோளின் மீது தன் மூச்சுப் படும்படியாக நின்று கொண்டிருந்த அவள் திடுக்கிட்டுப் பின்னடைந்தாள்.

# 35. அழைப்பும் அவமதிப்பும்

தஞ்சை மாளிகையே பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. அரண்மனை அதிகாரிகள் ஒவ்வொருவரும் அண்மையில் நடக்கவிருக்கும் பெரும் விழா ஒன்றை நடத்துவதற்காக ஆயத்தம் ஆவது போல் செயலாற்றிக்கொண்டிருந்தனர். ஏராளமான பேர் உணவருந்துவதற்கான பண்டங்கள் சேமிக்கப்பட்டன. ஒரே சமயத்தில் மக்கள் கூடுவதற்காகப் பெரும் பந்தல் போடப்பட்டது. பந்தலின் நடுவே யாகம் வளர்ப்பதற்காகப் பெரும் மேடை அமைக்கப்பட்டது. பந்தலிலே அலங்காரத் தோரணங்களை கட்டுவதற்காக இரவும் பகலுமாகக் கைதேர்ந்த பந்தல் அலங்கார நிபுணர்கள் பணியாற்றி வந்தனர். என்ன விழா நடக்கப் போகிறது என்ற ஆலோசனை மக்களிடையே நடந்தது. அதுவரை தஞ்சை மாநகர் காணாத அளவுக்குப் பெரும் யாகம் ஒன்று நடத்தப் போவதாகக் கூறிக் கொண்டார்கள். நூற்றுக்கணக்கான பொற் கொல்லர்கள் தங்கத்தாலான பசு ஒன்றை பிரம்மாண்டமாகச் செய்து கொண்டிருந்தார்கள். சாஸ்திர நிபுணர்கள் பல சோதிடர்களோடு கூடி அந்த யாகம் எப்படி நடைபெற வேண்டுமென்பதற்கான வழி முறைகளை வகுத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த யாகம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதில் விஜயராகவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். அந்த யாகத்தைச் செய்யவேண்டும் என்று அவருக்கு யோசனை கூறியவர் கங்க நாட்டிலிருந்து வந்த வைணவப் பெரியார் ஒருவர். அரசருக்குத் தொடர்ந்து கவலைக்கு மேல் கவலை, தொல்லைக்கு மேல் தொல்லையும் வந்து கொண்டிருப்பதை அவருக்கு உணர்த்தப் பட்டவுடன் அதை நீக்குவதற்காக இப்படிப்பட்ட ஒரு பெரும் யாகம் செய்தால் அரசருடைய கவலைகள் தீரும் என்ற யோசனையும் அவர் கூறினார்.

முற்பிறவியில் செய்த பாவத்தின் காரணமாகத்தான் அரசர் இத்தகைய இன்னல்களுக்கு உட்படுகிறார் என்று அவர் தெரிவித்து, பாவத்தைப் போக்க வேண்டுமானால் பெரும் பசு ஒன்றைத் தங்கத்தால் செய்து அதனுள் அரசரும் அரசியும் புகுந்து புறப்பட்டால் பாவங்கள் எல்லாம் தீர்ந்துவிடுமென்று அப்பெரியார் கூறியபடியால் மன்னர் விஜயராகவர் பெரும் பசு ஒன்றைத் தங்கத்தாலேயே செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானார்.

பசுவின் வயிற்றில் நுழைந்து அவர்கள் வெளி வருதற்காகச் செய்யும் சடங்கை மிக விமரிசையாக நடத்துவதற்கும், மக்கள் கூடிக் களிக்கவும் பெரு பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மன்னர் செய்யத் தொடங்கினார். அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகப் பல நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்தார்.

விஜயராகவர் செய்யப் போகும் இத்தகைய சடங்கு குறித்து மதுரை மன்னர் சொக்கநாதரும் கேள்விப் பட்டார். ஏராளமான பொருள் செலவு செய்து இத்தகைய சடங்கைச் செய்யப் போகிறார் என்ற செய்தி கேட்டு சொக்கநாதர் மனத்திற்குள்ளேயே நகைத்துக் கொண்டார். தன்னுடைய முதலமைச்சரை அழைத்து அவர் செய்யப் போகும் சடங்கு குறித்து அவருக்கு ஏதாவது தெரியுமா என்று விசாரித்தார். தனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்றும் ஆனால், ஒற்றர்களைத் தஞ்சைக்கு அனுப்பி விவரங்களைச் சேகரித்து வருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய இருப்பதாகவும் தானும் தஞ்சைக்கு விரைந்து சென்று அது பற்றி அறிந்து வரப்போவதாகவும் பிரதானி தெரிவித்தார்.

சொக்கநாதர் பிரதானியைப் பார்த்து, "தாங்கள் இப்போது செல்லவேண்டாம். நான் வேறு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். அது சரியாக நடைபெறுமானால் வெகு விரைவிலே நான் தஞ்சைக்குச் செல்வேன். செவ்வந்தியை இன்னும் எதிர்பார்த்து எதிர்பார்த்து மன வேதனை கொண்டிருக்கும் நேரத்தில் வேறு ஒருவரைத் தஞ்சைக்கு அனுப்புவதைவிட, நானே செல்வதுதான் சரி எனப்படுகிறது. அதனால் இந்த நிலைமையில் தாங்கள் செல்ல வேண்டாம்" என்று சொக்கநாதர் கூறினார்.

ஆனால், பிரதானி அவர் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்து, "தாங்கள் இந்தச் சமயத்தில் தஞ்சைக்குச் செல்வது சரி அன்று. ஏனெனில் தஞ்சையில் உள்ள நிலைமை இப்பொழுது முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. அதனால் தாங்கள் தன்னந் தனியராய் விரோதி நாட்டுக்குச் செல்வது சரி அன்று என்பது எனது கருத்து" என்று பிரதானி கூறியபோது சொக்கநாதர் நகைத்து, "நான் அரசருடைய தோற்றத்திலா அங்குச் செல்வேன். தஞ்சைக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் தாங்கள் செய்ய

வேண்டியதெல்லாம் என்னுடன் மாறுவேடத்தில் சில நூறு பேர்களைத் துணையாக அனுப்பினால் போதும்" என்றார். அவர்கள் அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் செவ்வந்தியும் அவனுடைய காதலியும் மதுரை வந்து அடைந்து விட்டனர் என்ற செய்தியை வாயிற்காப்போன் தெரிவித்தான். சொக்கநாதருக்கு ஏற்பட்ட ஆவல் அடக்க முடியாமல் போகவே அவர் துள்ளி எழுந்து தன் அந்தஸ்தையும் மீறி செவ்வந்தி தங்கியிருக்கும் இடம் நோக்கி விரைந்தார். அவர் செவ்வந்தியைத் தொலைவில் பார்த்தபொழுதே, "செவ்வந்தி உனக்காகத்தான் நான் இவ்வளவு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். போன காரியம் பழமா? காயா?" என்ற சிறு பிள்ளை போல் கூவிக் கொண்டே அவனை அடைந்தார்.

செவ்வந்தியின் அருகே குறத்தி ஒருத்தி நிற்பதைப் பார்த்தவுடன் அரசர் சற்றுத் திகைத்து நின்று அந்த குறத்தி யார் என்று வினவும் பாவனையில் அவனை நோக்கினார். செவ்வந்தி குறத்தியை நோக்கி, "ஏ! மலைக் குறத்தி. அரசர் வந்திருக்கிறார். என்ன சும்மா நிற்கிறாய்?" என்றான். குறத்தியும் அரசரை வணங்கி எழுந்து நாணத்தால் சற்று ஒதுங்கி நின்றாள். மலைக் குறத்தியின் ஆடை ஆபரணங்களை கண்கொட்டாமல் அவர் பார்த்தாரா? அல்லது அந்த உடைக்குள் எத்தகைய அழகிய தோற்றமுடைய பெண் இருக்கிறாள் என்பதை ஆராய்ந்தாரா தெரியவில்லை. கண்கொட்டாமல் குறத்தியை அவர் பார்த்ததை அறிந்த செவ்வந்தி, "ஏ, குறத்தி! அரசருக்குக் கை பார்த்துக் குறி சொல்ல உன்னால் முடியுமா?" என்று கேட்டான்.

குறத்தியும் நாணமும் அச்சமும் கலந்ததால் பேச்சு இயற்கையாக வராமல் தடுமாறிக் கொண்டே, "அரசர் முதல் ஆண்டி வரை யாருக்கும் குறி சொல்லத் தயங்க மாட்டேன்" என்றாள். செவ்வந்தி அரசரை நோக்கி, "அரசே தங்கள் கரத்தைச் சற்று நீட்டுங்கள். சிவந்த தங்கள் தடக்கையைக் குறத்திக்குக் காட்டுங்கள். அவள் சொல்வாள். நான் போன காரியம் பழமா? காயா என்பதைப் பற்றி" என்று கூறி மெல்ல நகைத்தான்.

அவன் போடும் புதிர் அரசருக்கு விளங்கவில்லை. ஆனால், அருகே இருந்த பிரதானி புரிந்து கொண்டு விட்டார். அவர் குறத்தியை நோக்கி, "தைரியமாகச் சொல்லம்மா! எவ்வளவு பரிசு வேண்டுமானாலும் கிடைக்கும்" என்றார்.

"நல்ல செய்தியாகச் சொல்" என்று கூறவும், குறத்தி மிகவும் குழப்பத்துடனும், பயத்துடனும் அரசருடைய கரத்தை நடுங்கும் தன் கரத்தால் எடுத்துக் கண்களை மெல்ல மூடிக்கொண்டு, "வடக்கே வாழும் இளவரசி அரசரை மிகவும் விரும்புகிறாள். கன்னி மாடத்தில் மன்னரின் வருகைக்காகக் காத்து கிடக்கிறாள்" என்றாள்.

சொக்கநாதர் மெல்லச் சிரித்து, "இது என்ன? குறத்தி குறி சொல்லும் முறையிலேயே இல்லையே! யாரோ சொல்லிக் கொடுத்ததை ஒப்புவிப்பதைப் போல். அல்லவா பவழ மலைக் குறத்தி பேசுகிறாள்" என்றார்.

செவ்வந்தி பகீர் என்று சிரித்து விட்டான். "என்ன தான் வேடம் போட்டாலும் அரசரிடம் வேடத்தைக் கலைத்துத்தான் ஆக வேண்டும்" என்று கூறி, "அரசே குறத்தியின் வேடம் எப்படி?" என்று கேட்டுவிட்டு, "இந்த வேடத்தில்தான் நாங்கள் தஞ்சையை அடைந்தோம். பவழமலைக் குறத்தியாக அவள் அரண்மனைக்குள்ளேயே சென்றுவிட்டாள். தங்களுடைய சித்திரத்தை இளவரசியிடம் கொடுத்து, முத்துமாலையைப் பரிசாகப் பெற்றுக் கொண்டு வந்தவளும் இவள்தான்" என்றான்.

சொக்கநாதர் வியப்புடன், "அவ்வளவு எளிதிலே தஞ்சை அரண்மனைக்குள் உங்களால் போக முடிந்ததா? இது என்ன விசித்திரப் பேச்சாக இருக்கிறதே! எனக்காகச் சொல்கிறாயா அல்லது உண்மையிலேயே இளவரசியைச் சந்தித்தீர்களா? சொல்லுங்கள்? நீங்கள் சொல்வதிலிருந்து தான் நான் மேற்கொண்டு செய்ய வேண்டியதையெல்லாம் பற்றித் திட்டமிட வேண்டும்" என்றார். செவ்வந்தி நடந்தவற்றைக் கூறினான். அவன் சொல்வதை ஆவலுடன் கேட்ட அரசர், "ஓஹோ? அவ்வளவு தூரம் உன்னுடைய காதலி கஷ்டப்பட்டு இருக்கிறாளா? கடைசியாக எப்படித்தான் மாளிகைக் காவலர்களிடமிருந்து தப்பி வந்தாள்?" என்று கேட்டார்.

"ஒரு காமுகன் தன் மதியீனத்தால் நாங்கள் தப்பி வருவதற்கான வழியைச் செய்து விட்டான். அது பெரிய கதை. இதை நான் சாவகாசமாகச் சொல்கிறேன். சுருக்கமாக நான் சொல்வதென்றால் இளவரசி உங்களைக் காணாமலேயே உங்கள் மீது பித்துப் பிடித்தவள் போலாகியிருக்கிறாள். இனி உங்களுடைய திறமை: தஞ்சைபுரி இளவரசியை மதுரை மாநகரத்துக்குக் கூட்டி வந்து அரியணையில் ஏற்றி வைப்பது!" என செவ்வந்தி கூறியவுடன் சொக்கநாதர் உடனே பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்து பிரதானியை நோக்கி, "பார்த்தீர்களா நான் நினைத்தது போல்தான் எல்லாம் நடக்கிறது. இளவரசி என்னைப் பார்க்காமலேயே என் தோற்றத்தை ஓவியத்தில் கண்டவுடனே காதல்கொண்ட விட்டாள் என்றால் நான் நேரிடையே சென்றால் நிச்சயமாக அழியாத அன்பை என்னிடம் செலுத்தி விடுவாள். அதனால், நான் தஞ்சைக்குப் போகும் ஏற்பாடு உறுதிதான்" என்றார். பிரதானி பலமாகத் தலையை அசைத்தார்.

"என்னைக் கேட்டால் தாங்கள் இப்பொழுது தஞ்சைக்குச் செல்வது சரியன்று என்றுதான் சொல்வேன். இன்னும் ஓரிரு நாட்கள்

பொறுத்துப் பார்ப்போம். பிறகு முடிவு செய்யலாம். அப்பொழுதுகூட தாங்கள் செல்வது என்பது அரச தர்மத்துக்கும் மரியாதைக்கும் மிகக் குறைவானது. கிணற்றுத் தண்ணீரைப் பூதம் கொண்டுபோய் விடாதே. இளவரசி தங்களை விரும்பி விட்டாள் என்றால் தங்களை அடைவதற்கு அவள் எப்படியும் நடவடிக்கை எடுத்து விடுவாள். மேலும் திருச்சிக் கோட்டை தாக்கப்படும் நேரத்தில் தாங்கள் மதுரையை விட்டுத் திருச்சி அருகே செல்வது என்பது உயிருக்கு ஆபத்தாகவும் முடியலாம். ஆதலால், தாங்கள் பொறுத்திருந்து காரியத்தைச் செய்வது நல்லது என்பது என்னுடைய திடமான கருத்து" என்றார்.

அவர் காரியத்தை முறிப்பது போலவே மறுநாள் ஒற்றன் கொண்டு வந்த செய்தி இருந்தது. தஞ்சையில் விஜயராகவர் செய்யும் பெரும் வேள்விக்கு எல்லா நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பி இருக்க, மதுரை மன்னர் மட்டும் அழைக்கப்படவில்லையென்பது தெரிந்தது. அத்துடன் அல்லாமல் மதுரை மன்னருக்கு எழுதப்பட்ட லிகிதத்தை விஜயராகவர் நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டார் என்று ஒற்றன் தெரிவித்த செய்தி பிரதானியைத் திடுக்கிட வைத்தது! சொக்கநாதர் வீறுகொண்டெழச் செய்தது.

# 36. கோட்டை முற்றுகை

திருச்சிக் கோட்டையைச் சுற்றிச் செஞ்சிப் படைகளும், லிங்கமனின் படைகளும் சூழ்ந்து கொண்டன. பொழுது புலரும் முன்னர் அந்தப் பண்டைகள் கோட்டையின் நாலு புறமும் நின்று உள்ளே புகுவதற்கான வழி வகைகளைச் செய்து கொண்டிருந்தன. கோட்டையிலிருந்து எதிர்ப்பு வராதது அவர்களுக்கு மேலும் பலத்தைக் கொடுத்தது.

குதிரையின் மீது அமர்ந்து கொண்டு லிங்கமன் தனது படைவீரர்களை நோக்கிக் கொக்கரித்துக் கொண்டு, "கோட்டையை நொடியிலே பிடித்து விடுவோம்; கோட்டைக்குள் இருக்கும் அத்தனைப் பண்டங்களையும் பொக்கிஷங்களையும் கொண்டு விடுவோம். அத்தனையும் நமக்குத்தான். அதை எடுத்துக் கொண்டு நேரே மதுரை நோக்கி முன்னேறுவோம்" என்று உற்சாகம் மிகுந்த குரலில் கூறியவாறு குதிரையைத் தட்டிவிட்டு இங்குமங்கும் சென்று கொண்டிருந்தான்.

படை வீரர்களிடையே புதுக்களிப்பு மிகுந்திருந்தது. திடீர் என அவர்கள் கோட்டையைச் சூழ்ந்து கொண்டதால் மதுரை நாயக்கரின் ஆதிக்கத்திலிருந்து திருச்சிக் கோட்டையை நொடியிலே வீழ்த்தி விடுவோம் எனும் தெம்பு அவர்கள் உள்ளத்தில் ததும்பிக்

கொண்டிருந்தது. அந்தப் படை வீரர்கள் அனைவரும் மதுரையையும் அதன் சுற்றுப்புறத்தைச் சேர்ந்துள்ள ஊர்களையும் விட்டுவந்து பல மாதங்களாகி விட்டன. அவர்களுடைய உள்ளத்திலே தங்கள் குடும்பத்தினரைக் காண வேண்டும் எனும் ஓர் ஏக்கம் எழுந்து பல நாட்களாகி விட்டன. குடும்பத்தைக் காண முடியாமல் - சொந்த ஊர் அடைய முடியாமல் தடுத்திருப்பது எதுவாயிருந்தாலும் அதை நொடியிலே அழித்துவிட வேண்டும் என்னும் ஓர் ஆக்ரோஷம் அவர்கள் இதயத்தில் குடி கொண்டிருந்தது.

அதை லிங்கமன் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான். அவர்களுடைய சுக சௌகரியங்களுக்கு இடையூறாக இருப்பவர் மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கர்தான். அப்பொழுதுதான் பட்டத்துக்கு வந்திருக்கும் சொக்கநாதர்தான் என்று படை வீரர்களின் உள்ளத்திலே பதியும்படியாக அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருந்தான். திருச்சிக் கோட்டையை முற்றுகையிட்டுப் பிடித்துத் திண்டுக்கல் வழியாக மதுரையைப் புதுப்பலத்துடன் அடைந்து வெற்றி கொண்டு விட்டால் ஒவ்வொரு வீரருக்கும் ஏராளமான பணம் பரிசாகத் தருவதாக ஆசை காட்டினான். முதன் முதலிலே அந்த வீரர்கள் அனைவரும் செஞ்சிக்குப் படையெடுப்பதற்காகத்தான் மதுரையிலிருந்து கிளம்பினார்கள்.

அப்போது சொக்கநாதர் சிங்காதனம் ஏறவில்லை. குழப்பம் நாட்டில் மிகுந்திருந்தது. லிங்கமன் பெருந் திட்டத்துடன் மதுரையை விட்டுப் புறப்பட்டான், ஏராளமான வீரர்களுடன். அவர்களுக்கெல்லாம் கட்டளையிடுவது தளபதிதான். தளபதி லிங்கமன் என்ன சொல்கிறானோ அதன்படிதான் நடக்கக் கடமைப்பட்டவர்களாய் இருந்தனர். அவர்களுக்கு மதுரை அரசபட்டத்தில் யார் இருந்தாலும் கவலையில்லை. அவர்களுக்குத் தலைவர் தளபதிதான். அந்த அளவுக்கு லிங்கமன் போர் வீரர்களிடம் கட்டுப்பாட்டை வளர்த்து வந்தான். தளபதி இடும் உத்தரவுதான் போர் வீரர்களுக்கு முக்கியமானது எனும் ஓர் உணர்வை வளர்த்திருந்தான். அதனால் அரசர் யார் மாறினாலும் வீரர்கள் கவலைப்படாமல் லிங்கமனே தங்களுக்குத் தெய்வம் போலவும், அரசர் போலவும் எண்ணி மதுரையிலிருந்து செஞ்சியை நோக்கி அவர்கள் வந்தார்கள். செஞ்சியிலே அவர்கள் எதிர்பார்த்தது போல் போர் ஏதும் நடைபெறவில்லை.

போர் இல்லாமல் சும்மா வேளைக்கு உண்டு களித்து ஒய்யாரமாக இருப்பதும் அவர்களுக்குச் சௌகரியமாகத்தான் இருந்தது. ஆனால், ஒரு மாதம் கழித்து அந்த மாதத்திற்கு உண்டான ஊதியம் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கவே அவர்களுக்குச் சற்று

சோர்வு ஏற்பட்டது. போரும் இல்லை, ஊதியமும் இல்லை என்ற நிலை சிலரிடையே முணுமுணுப்பை ஏற்படுத்தியது.

அப்பொழுதுதான் லிங்கமனுடைய திட்டம் படை வீரர்களுக்குத் தெரிந்தது. மதுரை மன்னருடன் பகைத்துக் கொண்டு மதுரையினின்று சுதந்திரமாக பறந்து வந்து மதுரையையே தாக்குவதற்கான ஏற்பாடுகளை அவன் செய்து கொண்டிருக்கிறான் என்பது தெரிந்தது. செஞ்சியின் மீது படையெடுப்பதற்காகப் பொய்க் காரணம் கூறி வந்தவன் செஞ்சியிலுள்ள மகாராஷ்டிரர்களுடன் ரகசியமாக உடன்படிக்கை செய்து கொண்டு மதுரையைத் திருப்பித் தாக்குதவதற்கான திட்டத்தைத் தீட்டுகிறானென்பதை உணர்ந்து கொண்டார்கள்.

போர் வீரர்களின் முணுமுணுப்பை அறிந்த லிங்கமன் உடனே அவர்களுக்குத் தக்க சமாதானங்கள் சொல்வதற்காக உற்சாகமாக, பிரசங்கம்போல் செய்து உடனடியாக பொன்னும் பொருளும் ஓரளவுக்குக் கொடுக்க முனைவதாக அவர்கள் எதிரே பசப்பு வார்த்தைகளைக் கூறினான்.

ஒருபுறம் தொட்டியில் தங்க நாணயங்களாகக் குவித்து இவை அனைத்தும் உங்களுக்குத்தான் என்று ஆசை காட்டினான். ஆனால், அந்த நாணயங்கள் யாவும் செஞ்சியிலிருந்த அரச பிரதிநிதிக்குத்தான் சென்றது.

லிங்கமன் எதிர்பார்த்ததுபோல் அவ்வளவு எளிதில் காரியங்கள் நடைபெறவில்லை. அத்துடன் அவனை எவ்விதத்திலும் சிறைபிடிப்பதற்காக மதுரையிலிருந்து ஒற்றர்கள் பலர் நாடு முழுவதும் பரவி இருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

என்ன ஆனாலும் தன் படைப்பலத்தைக் கொண்டு, செஞ்சியின் உதவியையும் பெற்று அத்துடன் தஞ்சையின் அரசர் விஜயராகவரையும் துணை சேர்த்துக் கொண்டு மதுரையை முறியடித்து விட வேண்டுமென்னும் விரிந்த திட்டத்துடன் அவன் செஞ்சிக்கு அருகே முகாமிட்டிருந்தான். ஒரு நாளாவது ஒரு கணமாவது அவன் உள்ளத்தில் அவநம்பிக்கை ஏற்படவேயில்லை. தஞ்சைக்கு இரகசியமாக உதவி கோரி தூது அனுப்பினான். திருச்சிக் கோட்டை நிலவரங்களை அறிந்து வருவதற்கு ஒற்றர்களை அனுப்பினான். கடைசியாக ஒரு நாள் செஞ்சியின் உதவி அவனுக்குக் கிடைத்தது.

செஞ்சியிலிருந்து ஆயிரக்கணக்கான படைவீரர்களும் ஏற்கனவே லிங்கமனிடம் வேலை ஏதுமின்றிச் சோம்பியிருந்த ஆயிரக்கணக்கான படைவீரர்களும் ஒன்று சேர்ந்து திருச்சியை நோக்கி அணிவகுத்துச் சென்றனர்.

எந்தச் சமயத்திலும் உதவி அனுப்புவதாகத் தஞ்சையில் இருந்து லிங்கமனுக்குச் செய்தி வந்தது. ஆனால், அந்தச் செய்தி விஜயராகவர்

அனுப்பியதன்று. வெங்கண்ணா தனிப்பட்ட முறையில் அனுப்பியது. காரணம் லிங்கமன் அனுப்பிய தூதுவன் தக்க சமயத்தில் தஞ்சையை அடைய முடியவில்லை. அவன் அனுப்பிய ஓலையையும் தஞ்சையில் தஞ்சை அரசரிடம் அணுகவில்லை. முத்துக்குமரனின் சாமர்த்தியத்தால் லிங்கமன் அனுப்பிய ஓலை வழியிலேயே பறிக்கப்பட்டுக் கொளுத்திப் போடப்பட்டது.

லிங்கமனின் தூதுவன் போல் முத்துக்குமரன் வெங்கண்ணாவைச் சந்திக்கும்படியான நிலைமையும் ஏற்பட்டது. அதனால் தஞ்சைப் படைகள் லிங்கமன் எதிர் பார்த்ததுபோல், தக்க சமயத்தில் வரவில்லை. அதற்காக லிங்கமன் செஞ்சியிலேயே காத்திருக்கவில்லை. அணி வகுத்துப் போர் முரசம் கொட்டித் திருச்சியை நோக்கி விரைந்தான். அவன் வருகை முன்கூட்டியே திருச்சிக்குத் தெரிந்திருக்கும்; பலத்த எதிர்ப்பு காவேரிக் கரையருகே இருக்கும் என்பதை அவன் உணர்ந்திருந்தான். ஏனென்றால் மதுரையில் ஒற்றர்கள் மிகவும் திறமையுடன் வேலை செய்கிறார்கள் என்பதையும் அந்த நொடியிலேயே அவனை அவர்கள் தோற்கடித்துத் திட்டத்தை முறியடித்து அவனைச் சிறை செய்து கொண்டு போவதற்கு ஆவலுடன் இருக்கிறார்கள் என்பதையும் அவன் அறிந்திருந்தான். அதனால் திருச்சிக் கோட்டையைக் காப்பதற்காக முன்னெச்சரிக்கையுடன் பலத்த போர் வீரர்கள் கோட்டை வெளியே காத்திருப்பார்கள். இல்லாவிடினும் காவிக்கரையில் வந்து சந்தித்து விடுவார்கள் என்று எதிர்பார்த்தான். அதனால் தனது படைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துத் தனித் தனியே மூன்று பக்கங்களில் சூழ்ந்து கொள்ள அனுப்பினான். இரவு முழுவதும் அவர்கள் மறைந்திருந்து களைப்பாறி இருந்து விட்டு இளம் காலைப் பொழுதிலே திடீர் என்று கோட்டையை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு தாக்க வேண்டுமென்பது அவன் திட்டம். அப்படியே முரசம் ஒலித்து ஆவேசக் கூக்குரலுடன் லிங்கமன் படைகளும் செஞ்சிப் படைகளும் கோட்டையைச் சூழ்ந்தன.

ஆனால், கோட்டையின் வெளியிலே அவன் எதிர்பார்த்தது போல் ஒரு போர் வீரர் கூட எதிர்ப்பதற்காகக் காத்திருக்கவில்லை. மிகுந்த களிப்புடன் கோட்டைக் கதவைச் சிலரை விட்டுத் தகர்ப்பதற்கும் மற்றும் சிலரை நூல் ஏணிகொண்டு கோட்டையின் மதில் மீது விரைந்து ஏறுவதற்கும் உத்தரவிட்டான் லிங்கமன். கோட்டைக் கதவு தகர்க்கப்பட்டால் குபுகுபு என படை வீரர்கள் உள்ளே நுழையலாம். அப்படிக் கோட்டைக் கதவு தகர்ப்பதற்குத் தாமதமானால் நூல் ஏணியின் மேல் விரைந்து ஏறும் வீரர்கள் கோட்டை உள்ளே குதித்து உட்புறத்தில் நொடியில் நுழைந்துக் கதவைத் திறந்து விட்டபின் படை வீரர்கள் அலை போல் உள்ளே நுழையலாம் என்றெல்லாம் அவன்

திட்டம் வகுத்திருந்தான். அவன் திட்டம் அப்படி ஒன்றும் சோடை போகவில்லை. ஆனால், நாலாபுறமும் நூலேணி போட்டு நூற்றுக்கணக்கானவர்கள் மளமளவென்று ஏணியின் மீது ஏறி மதிலின் உச்சியிலே மிக்க கம்பீரமாக நின்றனர். கோட்டைக் கதவைப் பெரும் ஆயுதம் கொண்டு பலமாக இடித்த காரணத்தால் கதவும் 'மளார்' என்று முறிந்தது.

பெரும் வெற்றிக் கோஷத்துடன் செஞ்சிப் படைகளும் லிங்கமன் படைகளும் வேகமாக மடை திறந்த வெள்ளம் போல் கோட்டைக்குள் நுழைந்தனர். நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் திடீர் என அண்டமே பெயர்ந்து போனது போல் ஒரு பெரும் ஓசை. பூகம்பம்தான் நேர்ந்து விட்டதா? பல்லாயிரம் மேகங்கள் ஒன்று சேர்ந்து மோதிப் பெரும் இடியை வீசினவா? வானம் கிளர்ந்து உறுமியதா? அல்லது ஆயிரம் கோடி மின்னல் சேர்ந்து பூமியைப் பிளக்க முயன்றனவா?

அது என்ன? என்று யாரும் அறியும் முன்பே நெருப்பிலே போட்ட ஈசல் போல் கை, கால், தலை உடல் வெவ்வேறாக வெகுதூரம் விட்டெறியப்பட்டு கோட்டையுள்ளே புகுந்த படைகளைச் சின்ன பின்னமாக்கின.

அவர்களுக்கு அக்கதி நேர்ந்ததற்குக் காரணம் - தயாராக வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள் தாம்.

கோட்டைக்கு அருகே பூமிக்கு அடியில் பல இடங்களில் வெடி மருந்து மறைத்துப் புதைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை நொடியிலே கொளுத்துவதற்கான கெட்டியான திரி ஓர் இடத்தில் இருந்தது. அவர்கள் உள்ளே நுழைந்ததும் அத்திரியில் நெருப்பு வைக்கப்பட்டது.

சந்தோஷ ஆரவாரத்தில் திரியில் நெருப்புப் பற்றிக் கொண்டு எரிந்து வந்ததைக்கூட லிங்கமனுடைய வீரர்களும் செஞ்சி வீரர்களும் அறியவில்லை.

ஆகா; அவ்வெடி மருந்து பேரிரைச்சலுடன் வெடித்து அனைவரையும் சின்னாபின்னமாக்கியது. லிங்கமன் மட்டும் அந்தக் கோர சம்பவத்தில் இருந்து தப்பி விரைந்து வெளியே ஓடி வந்தான்.

## 37. வேள்வியின் இரகசியம்

தஞ்சை நகரமே பெரும் திருவிழாக் கோலம் பூண்டுத் திகழ்ந்தது. வீதி எங்கும் மாவிலைத் தோரணங்களும் கமுகும், குருத்தோலைகளும் புதுமலர் மாலைகளும் காற்றிலே அசைந்தாடி ஏதோ ஒரு பெரும் விசேஷம் நடக்கப் போவதாய் அறிவித்தன. ராஜவீதி எங்கும்

வீடுகளுக்குப் புதுச் சுண்ணம் அடித்து இருந்தார்கள். ஒவ்வொருவரும் புதிய இந்த மாற்றத்தைக் கண்டு அரசர் நடத்தவிருக்கும் வேள்வியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து பேரறிஞர்களும் கலை விற்பன்னர்களும் தஞ்சையை வந்தடைந்த வண்ணமாக இருந்தனர். பல தேசத்து அரசப் பிரமுகர்களும் அவர்களது பிரதிநிதிகளும் நகரில் வந்து குழுமியிருந்தனர். அரண்மனையை அடுத்துள்ள பெரிய வெளியில் பிரமாண்டமான பந்தல் போடப்பட்டிருந்தது. பந்தற் கலையிலே சிறந்து விளங்கிய தொழிலாளர்கள் இரவும் பகலுமாகக் கூடித் தென்னை ஓலைகளால் வேயப்பட்ட பந்தல் என்பது தெரியாவண்ணம் ஏதோ மயன் சிருஷ்டித்த மாளிகை போல் அதைச் செய்தனர். ஒரே சமயத்தில் ஆயிரக்கணக் காணவர்கள் அமர்ந்து அரசர் நடத்தும் வேள்வியையும் அறிஞர்கள் தங்கள் திறமையைக் காட்டி மகிழ வைக்கும் நிகழ்ச்சிகளையும் கண்டு களிக்கும் வண்ணம் பந்தல் அமைந்திருந்தது. பல தேசத்து மக்கள் வந்து குழுமியிருந்ததால் நகரமெங்கும் புது முகங்களைப் பார்க்க முடிந்தது. வேள்வி நடக்கும் தினத்தன்று அரசர் முக்கியமாகப் பசுவின் வயிற்றுக்குள் புகுந்துப் புறப்படவிருந்த தங்கத்தாலான பெரும் பசுவைப் பொற்கொல்லர்கள் இரவும் பகலுமாக விரைந்துத் தயாரித்து வந்தனர். அதற்கான விலை மதிப்பற்ற தங்கம் அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து வந்த வண்ணமாக இருந்தது. துளிக்கூடக் கலப்படம் இல்லாமல் தங்கப் பசுவை அமைக்க வேண்டி இருந்ததால் பொக்கிஷத்திலிருந்த தங்கப் பாளங்கள், பழைய காலத்து ஆபரணங்கள் அனைத்தும் தேவைப் பட்டன. பெரும் கொப்பறையில் தங்கத்தைப் போட்டு உருக்கியவாறு தொழிலாளர்கள் கண்ணும் கருத்துமாக வேலையில் ஈடுபட்டிருந்தனர். அவ்வப்பொழுது வேலையின் முன்னேற்றத்தை வந்து பார்த்துக் கொணடிருந்த அரண்மனை அதிகாரிகள் தங்களுக்குத் தோன்றும் யோசனைகளைக் கூறியவாறு இருந்தனர். எதற்காக தங்கத்தால் ஆன பசுவை அரசர் செய்கிறார் என்ற ஐயப்பாடு அனைவரின் மனத்திலேயும் இருந்தது. பசுவின் வயிற்றிற்குள் சென்று வெளி வருவது என்றால் பெரும் புண்ணியம் என்று சிலர் கூறினார்கள். அரசரின் கனவில் மன்னார்குடியில் உள்ள ராஜகோபால சுவாமி வந்து அவ்வாறு செய்யுமாறு கட்டளையிட்டதாக சிலர் பேசிக் கொண்டனர். அரச குடும்பத்திலே ஏதோ பயங்கரமான பிழை நேர்ந்து விட்டது. அதைப் போக்குவதற்காக அந்தப் பாவத்திலிருந்து விடுபடுவதற்காகச் செய்யப்படும் பெரும் வேள்வி இது என்று சிலர் கூறினார்கள். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் வேத விற்பன்னர்கள், சாத்திரம் அறிந்த பண்டிதர்கள் தஞ்சையிலே கூடிவிட்டனர். அவர்கள் காலையிலும் மாலையிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்து வதற்கான தர்க்கத்தில் ஈடுபட்டு எப்போதும் வேத கோஷம் அங்கே கேட்கும்படியாக செய்து கொண்டிருந்தனர்.

மன்னர் விஜயராகவரின் பட்டமகிஷி மங்களா தேவிக்குக்கூட அரசர் செய்யப் போகும் அந்த மாபெரும் வேள்வியின் உட்பொருள் தெரியவில்லை. "நகரம் எங்கும் ஒரே கோலாகலமாக இருப்பதாகப் பணிப் பெண்கள் வந்து கூறுகிறார்களே என்ன விசேஷம்?" என்று அரசி அரசரைக் கேட்டாள். "எல்லாம் நல்ல விஷயம்தான். நமது வருங்காலம் நல்லதாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் பொருள் என்று பாராமல் செலவு செய்து இந்தப் பெரும் வேள்வினை நடத்துகிறேன். இந்த வேள்வியை நடத்துவதற்கு நாம் ஓரளவுக்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும்" என்று அரசர் கூறினார்.

"முன் ஜென்மம், பாபம், புண்ணியம் என்றெல்லாம் நீங்கள் சொல்கிறீர்களே? அப்படிப் பாவம் செய்தவர்கள் இந்த ஜென்மத்தில் அரசர்களாய்ப் பிறக்க முடியுமா?" என்று கேட்டாள் அரசி.

விஜயராகவர் சிரித்துக் கொண்டே, "போன ஜென்மத்தில் செய்த பாபத்தினால் தான் அரசனாய்ப் பிறந்திருக்கிறேனோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் சாதாரண பிரஜையாக நான் பிறந்திருந்தால் இவ்வளவு கவலைகளுக்கும் பிறருடைய விரோதத்திற்கும் நான் ஆட்பட்டிருக்கக் கூடுமா? சாதாரண மனிதனின் மகன் ஒரு குற்றம் செய்தால் அதை மறைத்து விடத்தான் அவனது பெற்றோர்கள் முயல்வார்கள். ஆனால், என்னால் அப்படி முடியவில்லையே" என்றார் அரசர்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது நாதா! மன்னார் செய்த தவறு அப்படி ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. அவனுக்குக் கல்யாண வயது. பெண் சபலம் பெரும் முனிவரைக் கூட விட்டு விடுவதில்லையே. அப்படியிருக்க உங்கள் மகன் இதிலிருந்து தப்பிவிட முடியுமா? அதற்காக அவனைக் கொண்டு போய்ப் பாதாளச் சிறையிலே தள்ளியிருக்கிறீர்களே! நாளைக்குப் பட்டத்திற்கு வரும் அரசகுமாரன் என்ற எண்ணம் தங்கள் இதயத்தில் என்னளவும் இல்லாமல் போய்விட்டதா? அவன் சிறைச்சாலையிலே மனம் புழுங்கி, உள்ளம் வெந்து, சித்தம் தடுமாறி நலிந்து போய்விட்டால் நாளைக்கு இந்த நாட்டை ஆளக் கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள் சுவாமி?" என்றாள் அரசி.

அரசி மறைமுகமாகத் தன்னைத் தாக்குகிறாள் என்பதை விஜயராகவர் உணர்ந்து கொண்டார். 'தந்தையைப் போல் மகன் சொல்லாமல் சொல்கிறாளே! நாம் என்ன ஆயிரத்தெட்டு அரண்மனைப் பெண்களுடன் சல்லாபம் செய்து காதல் கிழத்திகளாக வைத்துக் கொண்டிருக்கிறோமா?' என்று தன்னைத் தானே ஒரு முறை கேட்டுக் கொண்டு தனது குணத்தில் அரசி இவ்வளவு நாளாக ஏதாவது தவறு கண்டுபிடித்து இருக்கிறாளா என்ற அச்சத்தைப் போக்கிக்

கொள்வதற்காக, "அது என்ன அப்படிக் கேட்டுவிட்டாய்? நான் என்ன சதாசர்வ காலமும் பெண்களுடன் லீலைகள் புரிகிறேனா? பத்து அரண்மனைகள் கட்டி, குடித்து, பாங்காய் ஆங்காங்கே குடிவைத்துக் கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கிறேனா உன் மகனுடன் பட்டத்திற்குப் போட்டியிடுவதற்கு எனது முத்திரையை எங்கேயாவது பதித்திருக்கிறேனோ?" என்று சற்றுக் கோபத்துடனும் அதே சமயம் கொஞ்சுதல் நிறைந்த மொழியுடனும் கேட்டார்.

அரசி உடனடியாகத் தன் இதயத்திலே அடக்கி வைத்திருந்த படபடப்பு வெளிக்குத் தெரிந்து விடும்படியாக, "ஆஹா; பெண் சபலம் நிறைந்த மன்னர் என்று பெயர் வேறு எடுக்க வேண்டுமா? நாட்டு மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? கவி பாட வந்த பெண்ணுடன் உங்களைச் சம்பந்தப்படுத்தி என்ன என்ன பேச்சுகள் நகரத்திலே உலவுகின்றன என்பது உங்களுக்குத் தெரியாது. அதனுடன் மற்றொரு பயங்கரமான செய்தி ஒன்றும் எனக்குக் கிடைத்திருக்கிறது. நாதா, அதைக் குறித்து நான் நீண்ட நாட்களாகத் தங்களைக் கேட்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறேன். கேட்டால் நெற்றிக் கண்ணைத் திறந்து சிவனாக மாறி விடுவீர்களோ என்ற அச்சம் எனக்கு உண்டு. கேட்காமல் இருப்பதற்கும் பெண்மை இடங்கொடுக்கவில்லை. நாட்டுக்கு அரசியாக இருந்தாலும் நான் ஒரு பெண்தானே. நீங்கள் சொல்வது போல் சாதாரண பெண்ணாக இருந்திருக்கக் கூடாதா என்று பல சமயங்களில் எனக்குத் தோன்றுகிறது" என்று கூறி அரசரின் முகத்தையே பார்த்த மங்களாதேவி அதில் பலவிதமான குணபாவங்கள் மாறியதைக் கண்டு அவர் என்ன சொல்லப் போகிறார்? என்ன கேட்கப் போகிறார் என்பதை அறிவதற்குத் தயாராய் இருந்தாள். அரசி இதுபோல் நேருக்கு நேரான பதில் அளிக்கக் கூடிய கேள்விகளைக் கேட்டவளல்லள். அத்துடன் பயங்கரமான செய்தி என்று ஏதோ சொல்கிறாளே அது என்ன பயங்கரமான செய்தி என்ற ஆவலுடன் பரபரப்பும் மிகுந்தவராய், "என்ன சொல்ல வந்தாய்? சீக்கிரமாகச் சொல். எனக்கு வேலை தலைக்கு மேல் இருக்கிறது. நாளை விடிந்தால் வேள்விக்கான ஆயத்தங்கள் தொடங்கிவிடும்" என்று கூறி அரசியை அவசரப்படுத்தினார்.

சொல்லலாமா வேண்டாமா என்று சிறிது நேரம் யோசித்துவிட்டு மங்களாதேவி கடைசியாகச் சொன்னாள்: "தஞ்சையின் வாரிசாக மற்றொரு ஆண் சிங்கம் நாகைப்பட்டினத்தில் வளர்கிறானாமே, அது உண்மை தானா அரசே!" என்று கேட்டாள்.

விஜயராகவர் உடல் ஒரு முறை குலுங்கியது. அரசே, என்று தன்னை அழைத்த அரசியின் முகத்தை ஒரு கணம் இமைகொட்டாமல் நோக்கி,

"தஞ்சை வாரிசா? இளம் சிங்கமா? நாகைப்பட்டினத்தில் வளர்கிறானா? என்ன நீ சொல்கிறாய்? இதுதான் பயங்கரச் செய்தி என்று என்னிடம் சொல்ல வந்தாயா? ஒரு நாட்டின் அரசுரிமையைப் பறிப்பதற்குப் பல பேர் இப்படிப் புறப்படுவார்கள். அவர்களுள் நீ சொன்ன வாரிசும் ஒன்றாக இருக்கலாம். இது ஒரு பயங்கரச் செய்தியா? இதை உன்னிடம் வந்துத் தெளிவு படுத்தியவர் யார் என்று எனக்கு நீ சொன்னால் இந்தச் செய்தியிலுள்ள உண்மை எவ்வளவு பங்கு என்பதை நான் சொல்கிறேன்" என்றார்.

அரசர் ஏதோ மூடி மறைக்கப் பார்க்கிறார் என்பதை மட்டும் தெரிந்து கொண்ட அரசி அதற்கு மேல் அவரை வற்புறுத்த விரும்பாமல் மற்றொரு சமயம் அந்த உண்மையை அறிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் - அரசருடைய மனத்தை நோகச் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் - முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்துக் கொண்டு, "நான் சொன்னது வெறும் வதந்தியாக இருந்து விட்டால் என்னை விட அதிகம் சந்தோஷப்படக் கூடியவர் வேறு யார் இருக்க முடியும்? அது போகட்டும். நாளை நடக்கும் வேள்வியைப் பற்றிக் கேட்கவந்த நான் ஏதேதோ சொல்லி உங்கள் கவனத்தைத் திருப்பி விட்டேன். நாம் முன் ஜென்மத்தில் பாவம் செய்தவர்களாகவே இருக்கட்டும். அதைப் போக்குவதற்கு இந்த வேள்வி எந்தவிதத்தில் பயன்படும்?" என்று ஒன்றும் தெரியாதவள் போல் மீண்டும் கேட்டாள்.

உண்மையிலேயே அரசிக்குத் தங்கத்தால் செய்யப்படும் பசுவைப் பற்றியோ, பெரும் வேள்வியைப் பற்றியோ, கலைஞர்களைப் பற்றியோ, வேத வித்தகர்களைப் பற்றியோ, தெரியாது. நகரத்தில் கோலாகலமான விழா நடக்கப் போகிறது. அரச சபை கூடி அரசர் கொலு வீற்றிருந்து, விழாவில் வேடிக்கை விளையாட்டுகளையும், வாத சர்ச்சைகளையும், கலைஞர்கள் காட்டும் திறமைகளையும் கண்டு களிக்கப் போகிறார். பரிசு வழங்கப் போகிறார் என்ற அளவுக்கு மட்டும் அவள் அறிந்திருந்தாள். ஆனால், பாவம் போக்கவே, புண்ணியம் பெறவே நடக்கப் போகும் வேள்வி என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டாள். பிரம்மாண்டமாக நடக்கவிருக்கும் வேள்வியைப் பற்றியும், தங்கத்தால் செய்யப்பட்டிருக்கும் பசுவைப் பற்றியும், அந்தப் பசுவின் வயிற்றுக்குள் தாங்கள் புகுந்து புறப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் அரசர் விளக்கிச் சொன்னார்.

அரசி வியப்புடன் அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு "தங்கத்தாலான பசுவா? அதன் வயிற்றுக்குள் எப்படிப் புகுந்து வருவது?" என்று ஆவல் பொங்கக் கேட்டாள்.

"நானும் இப்பொழுதுதான் அந்தத் தங்கப் பசுவைப் பார்க்கப் போகிறேன். நீயும் என்னுடன் வருவாதாயிருந்தால் அழைத்துச் சொல்கிறேன்" என்றார்.

தஞ்சை மன்னர் விஜயராகவரும் அரசி மங்களா தேவியும் தங்கப் பசு செய்யப்படும் இடத்திற்குச் சென்றார்கள். பிரம்மாண்டமான தங்கப் பசுவைப் பார்த்த அரசிக்கு மனத்தில் ஏனோ ஒரு விதச் சங்கடமும் பயமுங் கலந்த வேதனை எழுந்தது.

# 38. வழித் துணை

பூக்காரரும் முத்துக்குமரனும் இரவெல்லாம் உறங்காமல் பேசிக் கொண்டே இருந்தனர். அதைப் போல் வீட்டின் உட்புறத்தே வடிவும் கமலமும் ஏதேதோ சம்பந்தா சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். முத்துக்குமரனுக்கு அரசியல் விஷயங்களை அப்பொழுது பேச வேண்டாம் என்ற எண்ணம். மதுரை மன்னர் தன்னை அனுப்பியது பற்றி எங்காவது பூக்காரப் பொன்னுரங்கம் பேச்சினிடையே பிரஸ்தாபித்து உள்ளேயிருக்கும் கமலத்தின் செவிகளில் அந்த ரகசியத்தை விழுமாறு செய்துவிடப் போகிறாரோ என்ற பயம். உள்ளே பேசிக் கொண்டிருக்கும் கமலமும் வடிவும் மேலுக்கு ஏதோ பேசிக் கொண்டனர். ஆனால் ஒவ்வொருவரும் தனித் தனியே குமரனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டவர்களாய்த் திகழ்ந்தனர். செஞ்சிக்கு முத்துக்குமரன் போகப் போகிறான் என்பதை அறிந்த கமலம் முதலில் ஒரு கணம் திடுக்கிட்டாள். பிறகு எப்படியாவது முத்துக்குமரனுடன் சிநேகம் பிடித்துக் கொள்ள வேண்டுமெனும் ஆவல் அவள் மனத்தில் எழுந்தது.

ஆனால், கமலத்திற்கு என்னவோ முத்துக்குமரன் மீது சந்தேகம் எழுந்தது. அவன் வேடம் பூண்டு தன்னுடைய சுய உருவத்தை மறைந்து யாருக்காகவோ ஒற்றனாக அவன் வந்திருக்கிறான் என்ற அளவில் அவள் அவனுடைய நடவடிக்கைகளின் மீது சந்தேகங் கொண்டாள். அதை அறிவதற்கு அவளால் முடியவில்லை. ஆனால், இப்பொழுதோதான் செல்லுமிடமாகிய செஞ்சிக்கு அவனும் செல்கிறான் என்பதை அறிந்தவுடன் அவனுடைய போக்கை நம்புவதா, நம்பாமல் இருப்பதா என்பது அவளுக்குப் பெரும் புதிராக இருந்தது. அவன் உண்மையாகவே செஞ்சிக்கு வேண்டியவனாக இருந்தாலும் தான் இப்பொழுது எடுத்திருக்கும் காரியத்திற்கு அவனால் எந்தவித உதவியும் இருக்காது. அத்துடன் தொல்லைதான் அதிகமாக இருக்குமென்றும் அவள் நம்பினாள்.

அவள் செஞ்சிக்குப் போவதே செஞ்சித் தளபதியான செங்கல்வராஜவைத் தேடி, அவனுக்கு இளவரசியை எப்படியாவது திருமணம் முடித்துவிட வேண்டுமென்றும் திருமணத்திற்கு நெருக்கடியான நிலை ஏற்பட்டுவிட்டால் இளவரசியைத் தூக்கிச் சென்றாவது அவன் மணம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவள் நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்தாள். செஞ்சித் தளபதி மோகனாங்கியை அடைந்தான் என்றால் தன் அந்தஸ்து நிச்சயமாக உயரும் என அவள் மனப்பால் குடித்தாள்.

ஒரு கன்னி மலருக்கு எத்தனை வண்டுகள் அந்த மலரின் சுவையை அடைவதற்காக ரீங்காரமிட்டுச் சுற்றிச் சுற்றி வருகின்றன. வல்லத்து ரங்கமாதேவியும், கவியரசி ரங்கராஜம்மாளும், மதுரை மன்னரும், தஞ்சையிலே இருந்து உறவாடித் துரோகம் செய்யும் வெங்கண்ணாவும், சுந்ததேவனும் இப்பொழுது இளவரசியின் அந்தரங்கத் தோழியாக இவ்வளவு நாள் இருந்து உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பது போல், துரோகம் செய்ய நினைப்பது போல் துரோகம் செய்ய நினைக்கும் கமலமும் - இவ்வளவு பேர்களும் ஒரு பெண்ணை அடைவதற்குத் தங்கள் திறமைகளை பயன்படுத்துகிறார்கள் என்றால், கன்னிமலர் தன்னிடம் பெற்றெடுத்துச் சேமித்து வைத்திருக்கும் தேனை எந்த வண்டு நுகர்வதற்காக அளிக்கப் போகிறாளோ? தேனை அளிக்காமலேயே மணத்தை ஒருவரும் நுகரவிடாமலேயே இருந்து வாடி, வதங்கிக் கருகி, உதிர்ந்து விடப் போகிறாளோ? யார் அறிவர்!

ஆனால், ஒவ்வொருவரும் தங்களுக்குள் தாங்கள் வெற்றி பெறப் போகிறோம் என்ற மனப்பால் குடித்து கொண்டிருந்தனர். இளவரசியை இன்னும் சில நாட்களில் செஞ்சித் தளபதி அடைந்து விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதில் கமலம் முனைந்தாள். இளவரசியின் முத்திரை மோதிரம் கிடைத்த பிறகு அந்தக் காரியம் மிக எளிதில் நிறைவேறி விடும் எனும் தைரியம் அவள் உள்ளத்தில் இருந்தது. இளவரசியின் அடையாள மோதிரமிருந்து விட்டால் கோட்டையில் எப்பொழுது வேண்டுமானாலும் நுழையலாம். பணி ஆட்களை எப்படி வேணுமானாலும் உத்தரவிட்டுக் காரியத்தை நிறைவேற்றச் செய்யலாம் என்பது அவளுக்குத் தெரியும். தஞ்சை மாளிகையின் ஒவ்வொரு நுட்பமான பகுதியையும் அறிந்திருந்த கமலத்திற்குத் தான் வெற்றியடைய முடியும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகம் ஏற்படவில்லை.

முத்துக் குமரனோ செஞ்சியின் அருகே படைகளுடன் வந்து முற்றுகையிட்டுக் கொண்டிருந்த லிங்கமனைப் பற்றிய செய்தியை அறிவதற்காக மதுரையிலிருந்து வந்தவன். அந்தத் துடிப்புடன் அழகிய

பெண்ணைப் பற்றிய செய்தியையும் இப்பொழுது அறிந்து மதுரைக்குத் தகவல் அனுப்பியிருந்தான். அரசரிடமிருந்து மறுமொழி வரும் வரையில் தான் தஞ்சைப் பகுதியில் சுற்றிக் கொண்டு இருக்க வேண்டும். இளவரசியைப் பார்த்ததிலிருந்து மனத்திலே ஒருவிதக் கிளு கிளுப்பு. அவ்வளவு அழகிய மலரைத் தம் மன்னர் எடுத்து அணிந்து கொள்வதுதான் சிறந்தது என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றிய வுடனே தனக்கு ஏற்ற மலர் எங்கேயிருக்கிறது என்னும் ஒரு கவலையும் அவன் உள்ளத்திலே தோன்றத் தொடங்கி விட்டது. மதுரையை விட்டுப்பிரிந்து, தாயாரின் அரவணைப்பை விட்டு விலகி அவன் பல நாட்களாகி விட்டன. மதுரையிலிருந்து புறப்பட்ட பொழுது விழியால் வழி அனுப்பிய சோதிடர் மகளையும், குடந்தையில் தன்னுடைய இதயத்தைத் தாங்கி வந்த பூக்காரரின் மகளையும் அவன் ஒரு கணம் நினைத்துக் கொண்டான். சத்திரத்தில் தங்கியிருந்த அவனைத் தேடிக் கொண்டு வந்து உபகாரம் செய்த அந்தப் பெண்ணையும் அவனால் மறக்க முடியவில்லை. ஆனால், நிலத்திலே மலரும் மலர்கள் எல்லாம் பூஜைக்கு ஏற்ற மலர்கள் அல்லவே! அவை சூடிக்கொள்வதற்குத் தகுதியுள்ள மலர்கள்தாமா என்ற ஐயம் அவனுக்குத் தோன்றாம லில்லை. பலவிதக் குழப்பங்களுடன் இப்பொழுது பூங்காரரின் வீட்டிலே வந்திருக்கும் இளவரசியின் தோழி கமலம் பழகிய விதமும், பொன்னுரங்கமும் வடிவும் சற்றுப் பிரிந்திருந்த இடைவெளியில் அவள் வந்துத் தன்னை நெருங்கிப் பேசிய பேச்சு வெறும் நடிப்போ என அவனுக்குப் பலவிதமான எண்ணத்தைக் கொடுக்க ஆரம்பித்தன. தன்னைக் கண்டவுடனே மனத்தைப் பறிகொடுத்தவள் போல் அன்றோ இளவரசியின் தோழி பேசுகிறாள். அவள் நடையுடை பாவனையும் சந்தேகக் கோணத்திலே அல்லவா இருக்கின்றன என்று எண்ணினான்.

ஆக, பொன்னுரங்கத்துடன் அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவனுடைய சிந்தனை எல்லாம் வேறு இடத்திலிருந்தன. மேலுக்குத்தான் அவன் பொன்னுரங்கம் பேசுவதற்கெல்லாம் தலையை அசைத்து 'உம்' போட்டுக் கொண்டிருந்தான். அதே போல் கமலத்தின் சிந்தனை வேறு எங்கேயோ இருந்தது. வடிவு பேசுவதற்கெல்லாம் அவள் சிரிப்பது போல் பாவனை செய்து கொண்டு இருந்தாள்.

பூக்காரரின் மகள் வடிவுக்கோ எண்ணமெல்லாம் முத்துக்குமரனிடம் இருந்தன. கமலத்திடம் பேச வேண்டுமே என்பதற்காக ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். எண்ணம், செவி, இதயம் மூன்றும் மூவருக்கும் மூன்று விதமாக செயல்பட்டுக் கொண்டிருந்தன.

ஆனால், பொழுது மட்டும் ஒருவருக்காகவும் காத்து நிற்பதில்லை. நடுநிசியைக் கடந்து வைகறையை எட்டிக் கதிரவனைக் கீழ்த்

திசையிலே எழுமாறு செய்து விட்டது. பறவை இனங்கள் கதிரவனுக்குக் கட்டியம் கூறிக் கொண்டிருந்த வேளையில் வடிவு வழக்கம் போல் வாசலுக்குச் சாணமிட்டுக் கோலம் போட எழுந்து விட்டாள். கமலமோ அரண்மனை சுகவாசத்தின் சாயை மறக்காமல் இரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்த களைப்பு நீங்க, ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். முத்துக்குமரனுக்கு உறக்கமும் விழிப்பும் ஒன்றையொன்று முந்தும் வகையில் தயக்கத்தில் அவன் எழலாமா இன்னும் கொஞ்சம் உறங்கலாமா என்று திண்ணையிலே புரண்டு கொண்டிருந்தான்.

பூக்காரர் இருள் பிரியா முன்பே நந்தவனத்தில் பூப்பறிப்பதற்கு எழுந்துச் சென்று விட்டார். வடிவு மெல்ல முத்துக்குமரனின் முகத்தை உற்று நோக்கினாள். தன் அருகே யாரோ நிற்கும் அரவம் அறிந்த முத்துக்குமரன் திடுக்கிட்டு விழித்தெழுந்தான்.

கமலமாய் இருக்குமோ என்ற கவலை அவனுக்கு இருந்தது. ஆனால் அங்கே நின்றதோ வடிவு!

அந்த இளங்காலை வேளையில் இயற்கையான அழகுடன் கூடிய வடிவு நிற்கும் ஒயிலே அவன் உடலைப் புல்லரிக்க வைத்தது. புன்முறுவலுடன் அவன் மெல்ல எழுந்துத் திண்ணையில் சாய்ந்து கொண்டான். யார் முதலில் பேசுவது என்ற கேள்வி ஒவ்வொருவர் இதயத்திலும் எழுந்தது. எதை வைத்துப் பேசுவது என்று வடிவு தவித்தாள். எத்தனை எத்தனையோ பேச வேண்டுமென்ற துடிப்பு அவன் இதயத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. நெஞ்சுக்கு மேல் ஒரு வார்த்தை கூட வராத நிலை. ஆனால் நேரத்தை அப்படியே கழித்துக் கொண்டிருக்க முத்துக்குமரன் விரும்பவில்லை. அவனுக்கு எதிரேயுள்ள பணியே முக்கியமானது. அது காதலுக்கு அப்பாற்பட்டது. பெண்ணின் அழகிய தோற்றத்தின் எதிரிலே இதயத்தை நழுவவிட்டுக் கடமையைக் காற்றிலே பறக்க விடக்கூடிய குணம் கொண்டவன் அல்லன் அவன். காதல் பின்னால் கிடைக்கும். ஆனால் கடமை கிடைக்காது. மதுரையிலிருந்துச் செய்தி வரவேண்டிய இடம் குடந்தை. மதுரை மன்னரை உடனே புறப்பட்டு வருமாறு அவன் தகவல் அனுப்பியிருந்தான். அவர் என்ன வேடத்திலே குடந்தைக்கு வருகிறாரோ என்ற கவலை அவனுக்கு இருந்தது. ஆம்; அவர் வரப்போகிறார். மதுரை மன்னராகக் குடந்தைக்கு வரப் போவதில்லை. சாதாரண ஒரு விவசாயியைப் போல் தோற்றம் கொண்டு தனது விரோதி நாட்டுக்குள் அவர் வரப் போகிறார். அவர் வருவது பெரும் காரியத்திற்காக வாழ்வின் பெரும் திருப்பு முனையை நாடி அவர் வருகிறார். அந்தக் காரியத்திலே வெற்றி கொண்டால் முத்துக்குமரனுக்குப் பெரும் பரிசு கிடைக்கும். தோல்வி கண்டால்

அதனால் அவனுக்கு மட்டுமல்ல. மதுரை மாமன்னருக்கும் நஷ்டம் - தோல்வி என்பது எப்படி வரும் தெரியுமா?

மாறுவேடத்தில் வரும் மதுரை மன்னரைக் கண்டதும் தஞ்சை மன்னர் நொடியிலே அவரைச் சிறையிலே பிடித்துப் போடத் துணிவார். சித்திரவதை செய்வார். மரண தண்டனை கொடுப்பதற்குக்கூடத் தயங்க மாட்டர். அந்தத் தோல்வி யாரைப் பாதிக்கும். அப்பொழுது முத்துக்குமரன் என்ன? வைத்தியர் மகள் என்ன? பெரும் நாடு என்ன? எதுவுமே ஒன்றும் செய்யாது. அதனால் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டிய வேளையில் அவன் அழகை ரசித்து அழகியுடன் இடைக் காலத்தைக் கழிக்க முனையவே மாட்டான். ஏக்க நினைவுடன் ஏதோ சொல்லத் துடித்து நிற்கும் வடிவின் வார்த்தையைக் கேட்க அவன் விரும்பவில்லை. அவனுடைய மௌனத்தைக் கண்டுவிட்ட வடிவு "இன்றே நீங்கள் புறப்படப் போகிறீர்களா?" என்று ஒரு வார்த்தையைக் கூறி ஓராயிரம் மறுமொழியைப் பெற விரும்பினாள்.

"ஆமாம்; செஞ்சி வரையில் போக வேண்டிய வேலை எனக்கு இருக்கிறது" என்றான் முத்துக்குமரன். வடிவின் கண்கள் ஏனோ கலங்கின. "மீண்டும் நீங்கள் எப்பொழுது வருவீர்கள்?" என்று கேட்டாள் வடிவு. "எப்பொழுது வருவேன் என்பது எனக்கே தெரியாது. நேற்று மாலை நான் இந்த இடத்திற்கு வருவேன் என்பதை முன் கூட்டியே நான் திட்டமிட்டு வைத்திருக்கவில்லை, வந்தேன். உங்கள் வீடு தேடி வரவேண்டுமென்று தோன்றியது. வந்தேன்" என்றான்.

அந்தச் சொல் நெஞ்சிலே கலகலப்பை உண்டாக்கியது. 'உங்கள் வீடு' என்று முத்துக்குமரன் கூறியது தன்னைக் காண்பதற்காகத்தான் என்று அவள் நினைத்துக் கொண்டாள். மீண்டும் செஞ்சி சென்று அவன் திரும்பி வரவேண்டும். வரும்பொழுது ஓரிரு நாட்கள் இங்கே தங்கிச் செல்ல வேண்டும். அதற்குள் தன் தந்தையிடம் தன் இதயத்தைத் தெரிவித்துத் திருமணத்திற்கான ஏற்பாடு செய்து அவனுடன் மதுரைக்குச் சென்றுவிட வேண்டும் என்று ஒரு பெரும் திட்டத்தை ஒரு நொடியிலேயே அவள் தயாரித்து விட்டாள். அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் கமலம் படுக்கையிலிருந்து எழுந்து வடிவை அழைத்தது காதில் விழுந்தது. அவளுக்கு ஏனோ கமலத்தின் மீது கோபம் பொங்கியது. ஆனால், முத்துக்குமரன் மெல்ல நகைத்து, "உன் தோழி உன்னைக் கூப்பிடுகிறாள் போல் இருக்கிறது" என்றான்.

"ஆமாம்; அவளும் இன்று புறப்படப் போகிறாளாம். எங்கே புறப்படுகிறாளென்று நான் சரிவரக் கேட்கவில்லை" என்று கூறிக்

கொண்டிருந்தபொழுது கமலம் அவர்கள் இருக்கும் இடத்திற்கே வந்து விட்டாள்.

"நீ கேட்காவிட்டாலும் நான் சொல்லுகிறேன் வடிவு. நான் இன்னும் சிறிது நேரத்தில் குளித்து விட்டு செஞ்சிக்குப் போகிறேன். நான் இன்னும் இரண்டு நாட்கள் தங்கிப் போகலாம் என்றுதான் நினைத்து வந்தேன். ஆனால், தஞ்சைத் துணை கிடைத்திருக்கிறது. அதை நழுவவிட எனக்கு விருப்பமில்லை" என்று கூறிக் கடை விழியால் கமலம் நோக்கினாள்.

"துணையா?" என்று வடிவு கேட்டாள்.

"ஆமாம், செஞ்சி வரையில் செல்லுவதற்கு ஒரு ஆண் துணை கிடைத்து விட்டது" என்றாள்.

"துணை எங்கே இருக்கிறது, யார்?" என்று ஆவலுடன் கேட்டாள் வடிவு.

"இதோ!" என்று முத்துக்குமரனை அவள் சுட்டிக் காட்டியதும் வடிவின் நெஞ்சில் திடீரென்று ஏனோ ஒரு விதக் கலக்கம் எழுந்தது. அத்துடன் பொறாமையும் கலந்தது.

# 39. மோதிரம் மாறியது

கமலம் வடிவிடம் விடைபெற்றுக் கொண்டு முன்னதாகவே கிளம்பி விட்டாள். முத்துக்குமரன் கமலத்தைச் சந்திக்கக் கூடாது என்ற எண்ணத்தில் வடிவு முத்துக்குமரனை மேலும் இங்கேயே தங்கிப் பகலுக்கும் மேல் செல்ல வேண்டும் என்னும் எண்ணத்துடன் தன் தந்தையிடம் "பகல் உணவு முடித்துச் செல்லலாம் என்று அவரிடம் கூறுங்கள்" என்றாள். பொன்னுரங்கத்திற்குத் தெரியும். முத்துக்குமரன் செஞ்சிக்குப் போகப் போவதில்லையென்று. தன் மகளிடம் அதைத் தெரிவிக்க விரும்பாமல் "அவசரக் காரியமாகச் செல்லும் முத்துக்குமரனை நாம் தடுக்கக்கூடாது. அவன் செல்லும் காரியம் வெற்றிகரமாக முடித்தால் திரும்பி வந்து வேண்டிய அளவுக்கு அவன் சாப்பிட்டுச் செல்வான்" என்றார்.

வடிவுக்குத் தன் தந்தை சொல்வது சம்மதமாகப் படவில்லை. ஆனால், தந்தையின் எண்ணத்திற்கு விரோதமாகவும் அவளால் நடக்க முடியவில்லை. கமலத்தை முத்துக்குமரன் சந்திக்காமல் இருக்க வேண்டுமென்பது ஒன்றுதான் அப்போது அவளுடைய நோக்கம். அதைத் தந்தையிடம் எப்படிச் சொல்வது? 'அவசரக் காரியம் என்று

எனக்குத் தெரியும் அப்பா. அவர் பகல் உணவு சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினால் இரவு போகும் வழியில் உணவு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. அதற்காகத்தான் சொன்னேன்" என்றாள்.

பொன்னுரங்கம் மெல்லச் சிரித்துக் கொண்டு "உணவைப் பார்த்தால் மற்ற காரியங்களெல்லாம் கெட்டு விடும். நீ வற்புறுத்தாதே மகளே!" என்றார். வடிவு சும்மாயிராமல் தன் தந்தையை நோக்கி "வற்புறுத்தும் நோக்கத்துடன் சொல்லவில்லை அப்பா. அவர் போகும் காரியத்துக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். ஆனால் தஞ்சையிலிருந்து வந்து சென்றாளே கமலம் அவளும் செஞ்சிக்குத்தான் செல்கிறாளாம். இவர் போகும் காரியம் அவளுக்குத் தெரிந்து விட்டால் நன்றாக இருக்காதே என்றுதான் நான் சற்றுத் தங்கிச் செல்லுமாறு திட்டம் வகுத்தேன்" என்றாள்.

பொன்னுரங்கத்திற்குப் புரிந்து விட்டது மகள் மனத்தில் ஏற்பட்டிருக்கும் சந்தேகம். அதனால் அவர் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டு, "அப்படியெல்லாம் முத்துக்குமரனை ஒருவரும் மயக்கிவிட முடியாது. அவன் எப்பொழுதும் எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் தான் கண்ணும் கருத்துமாக இருப்பான். அதனால் நீ தடையேதும் சொல்லாமல் அவனைச் செல்ல விடு" என்றார்.

வடிவுக்குத் துக்கம் தாங்கவில்லை. கமலத்தின் சாகசம் முத்துக்குமரனை மயக்கி விட்டால் என்னாவது என்ற எண்ணத்திலே அவள் சற்று நேரம் எதையோ யோசித்தவாறு நின்று விட்டு பிறகு முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு உள்ளே சென்றாள். அவள் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் முத்துக்குமரன் அங்கே வந்து "வடிவு! நீ எதற்காக என்னை இப்போது சாப்பிடச் சொல்லுகிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ நினைப்பது போல் நான் கமலத்துடனே சென்றுவிட மாட்டேன். அநேகமாக நான் பகல் உணவு சாப்பிடுவதற்கே வந்து விடுவேன்" என்றான்.

வடிவு வியப்புடன், "செஞ்சியிலிருந்து அதற்குள் திரும்பி விடுவீர்களா?" என்று கேட்டாள். முத்துக்குமரன் சிரித்துக் கொண்டே, "வேண்டுமானால் பாரேன். நான் பகல் உணவுக்காக இங்கு வருகிறேனா இல்லையா என்று. அதனால் நீ இரண்டு பேருக்குத் தேவையான உணவை எடுத்துத் தயாராக வைத்திரு" என்றான்.

வடிவுக்கு அவனுடைய புதிர் போன்ற பேச்சின் உட்பொருள் புரியவில்லை. முத்துக்குமரனும் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றான். கமலத்தைத் தன்னால் சந்திக்க முடியாமல் போய் விடுமோ என்ற கவலை அவனுள் இருந்தது. குதிரையை வேகமாகத் தட்டிவிட்டுக் குடந்தையின் எல்லையைத் தாண்டுவதற்குள்

இருபுறமும் பார்த்தவாறே சென்றான். ஆனால், அவன் கவலைப் பட்டது போல் கமலத்தைச் சந்திக்க முடியாமல் போய் விடவில்லை. அவனுக்காகக் கமலம் மரத்தடி ஒன்றில் உட்கார்ந்து காத்திருந்தாள். முத்துக்குமரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. தனக்காகத்தான் அவள் காத்திருக்கிறாளா? அல்லது வேறு யாருடைய வருகைக்காக அவள் அதுபோல் காத்திருக்கிறாளா? என்ற ஐயத்துடன் குதிரையை விட்டு இறங்கலாமா வேண்டாமா என்று யோசித்தவாறு குதிரையை மெதுவாகச் செலுத்தினான். தன்னைத் தாண்டிக் குதிரை போய்விடுமோ என்ற அச்சத்தில் கமலம், "ஐயா, இங்கே நான் இருப்பது தெரியாமல் போய்க் கொண்டே இருக்கிறீர்களே" என்றாள்.

"நான் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. அதனால்தான்" என்று மெல்ல இழுத்தான். கமலம் சிரித்துக் கொண்டே, "அவசரமாகப் போகிறவர் இந்த இடத்துக்கு வந்தவுடன் குதிரையை மெல்ல நடத்திச் செல்வானேன்" என்று கேட்டாள். முத்தக்குமரனும் புல்முறுவல் பூத்தவாறு, "பழகியவர்களைக் கண்டால் இந்தக் குதிரை சட்டென்று நின்று விடுகிறது. அதனால்தான் மரத்தடியில் தாங்கள் உட்கார்ந்திருப்பதைத் தொலைவிலேயே பார்த்துவிட்ட இந்தக் குதிரை தனது நடையை மெல்ல போடத் தொடங்கி விட்டது" என்றான்.

அவனுடைய சாதுர்யமான பேச்சைக் கேட்ட கமலம் மெல்ல எழுந்து, "எனக்கும்தான் செஞ்சிக்கு அவசரமாகச் செல்ல வேண்டும். ஏதாவது கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டுதான் நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன்" என்றாள்.

"உங்களுக்குக் குதிரையேறிப் பழக்கமுண்டா?" என்று கேட்டான் முத்துக்குமரன்.

"குதிரை மீது ஏற்றிவிட்டால் நான் அதைச் சரியான முறையில் செலுத்திச் செல்வேன்" என்றாள் கமலம்.

முத்துக்குமரன் உடனடியாகப் பதிலேதும் சொல்லவில்லை. அவள் எதற்காக அப்படிச் சொல்கிறாள்? என்பது அவனுக்குப் புரிந்தது. "அப்படியென்றால் குதிரையை விட்டு நான் இறங்கிக் கொள்கிறேன். நீங்கள் குதிரையில் ஏறிச் செல்கிறீர்களா?" என்று கேட்டான் முத்துக்குமரன்.

கமலம் சிரித்துக் கொண்டே, "நல்ல யோசனைதான். ஆனால், நீங்களும் அல்லவா செஞ்சிக்குச் சீக்கிரமாகப் போக வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதனால் நாம் இருவருமே இந்தக் குதிரையை உபயோகித்தால் என்ன?" என்று முகத்தில் நாணம்படரக் கேட்டுவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

முத்துக்குமரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு பெண்ணைக் குதிரையின் மீது தன் அருகே ஏற்றிக் கொண்டு செல்வது அவனுக்குப் புதிய விஷயம். ஆனால், அவன் எதிர் பார்த்திருந்த ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இளவரசியின் முத்திரை மோதிரத்தை எப்படியாவது அவளிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்னும் எண்ணம் உடையவனாய் அவன் இருந்ததால் செஞ்சி வரையில் அவளுடன் சென்றாவது அதைக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் தனக்குக் கூச்சம் மிக ஏற்பட்டாலும் ஓர் அன்னியப் பெண்ணை நெருக்கமாக அமர்த்திக் கொண்டு செல்வது அவனுக்கும் பழக்கமில்லாத விஷயமாக இருந்தாலும், கமலத்தைக் குறும்புப் பார்வையுடன் நோக்கி, "எனக்கு எதுவும் ஆட்சேபணையில்லை; ஆனால், நீங்கள் தைரியமாக உட்கார்ந்து வருவீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி" என்றான்.

கமலம் அதற்குப் பதில் சொல்லாமல் தன் பல் வரிசையைக் காட்டினாள். அவளைக் குதிரை மீது ஏற்றுவதற்கு அவன் துணைபுரிய நேர்ந்தது. பிறகு தானும் ஏறி உட்கார்ந்து கொண்டான். கமலம் தனது இரு கரங்களாலும் அவனது மார்பைச் சுற்றிக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். முத்துக்குமரன் குதிரையைச் செலுத்தினான். கமலத்திற்கும் அந்த நிலை கூச்சமாக இருந்தது. முத்துக்குமரனுக்கோ உடலில் ஏற்பட்ட பரபரப்பு அவ்வளவு எளிதில் அடங்கக் கூடியதாக இல்லை. 'இது என்ன ஒரு பெண் இவ்வளவு எளிதில் மற்றொரு ஆடவனைப் புரிந்து கொண்டு அவனுடன் வருவதற்குத் துணிகிறாள்? இதில் ஏதாவது இருக்குமா? அல்லது கமலம் தன்னைத் தவறாக நினைத்து விட்டாளா?' என்ற எண்ணத்துடன் குதிரையைச் செலுத்தியவாறு, "இப்படி நாம் செல்வதைத் தங்கள் இளவரசி பார்த்தால் தவறாக நினைக்க மாட்டார்களா?" என்று கேட்டான்.

"இளவரசி இங்கு வந்து நாம் செல்வதைப் பார்ப்பதாய் இருந்தால், நான் ஏன் இப்படிக் குதிரை மீது ஏறிவர வேண்டும். ராணியின் பல்லக்கிலேயே 'ஜாம் ஜாம்' என்று அமர்ந்து செல்வேனே" என்றாள்.

"நான் அதற்காகக் கேட்கவில்லை. நாம் இப்படிச் செல்வதை யாராவது வேறுவிதக் கற்பனையைச் சேர்த்து அவர்களிடம் தெரியப்படுத்தினால், அதனால் தங்களுக்கு ஏதும் சங்கடங்கள் நேர்ந்து விடாதா என்பதற்காகத்தான் கேட்டேன்" என்றான் முத்துக்குமரன்.

"சங்கடம் என்று வருவதாய் இருந்தால் அது பல வேடங்களில் வரலாம். நான் இந்த நேரத்தில் மதுரையை நோக்கிச் சென்றிருக்க வேண்டியவள். ஆமாம்; உங்கள் ஊர் மதுரை என்றுதானே முன்பு சொன்னீர்கள்?" என்று ஒரு கேள்வியை வீசினாள் கமலம்.

"ஆமாம். அதற்கென்ன? மதுரையை நோக்கிச் செல்ல வேண்டியவர்கள் செஞ்சி நோக்கித் தவறான பாதையில் செல்கிறீர்களே" என்று கேட்டான் முத்துக்குமரன்.

"அது ஒரு காரணத்திற்காகத்தான். அது மிகவும் ரகசியமான காரணம். இருந்தாலும் தங்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று எனக்கு ஏனோ தோன்றிவிட்டது. அதனால் சொல்கிறேன்" என்றாள் கமலம்.

முத்துக்குமரன் மெல்லச் சிரித்து, "நாம் இரண்டு பேரிடமும் இப்பொழுது ரகசியம் ஏதும் மறைந்திருக்க வில்லை. நான் சொல்லும் காரியம் வெளியே யாருக்கும் தெரியக்கூடாது. ஆனால், உன்னிடம் சொல்லி விட்டேன். நீயோ வேறு பாதையில் செல்ல வேண்டியவள். என்னுடன் வந்து கொண்டிருக்கிறாய். ஆக இரண்டு பேரும் ஒருவர்க்கொருவர் எல்லாவற்றையும் சொல்லிக் கொள்வதில் தவறே இல்லை. ஆமாம்! நீ எதற்காக மதுரைக்குப் போக விரும்பினாய்?" என்று முத்துக்குமரன் கேட்டான்.

ஒரு கணம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்து கமலம் சொன்னாள்: "நான் மனமறிந்து இளவரசிக்குத் துரோகம் செய்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த முத்திரை மோதிரத்தை மதுரை மன்னரிடம் சேர்க்குமாறு என்னை இளவரசி கேட்டுக் கொண்டு தூதாக அனுப்பினாள். ஆனால், நானோ செஞ்சித் தளபதியிடம் இதைச் சேர்ப்பித்து அவருக்கு இளவரசியை மணம் புரிந்து கொடுத்துவிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்" என்றாள்.

முத்துக்குமரன் திடீரென்று உடம்பு குலுங்கச் சிரித்து, "இளவரசியின் திருமணத்தை அவ்வளவு எளிதில் நிறைவேற்றி வைக்கக்கூடிய சாமர்த்தியம் தங்களிடம் இருக்கிறதா? இவ்வளவு நாட்களாக எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! தெரிந்திருந்தால் தங்களிடம் கேட்டு நான் இளவரசியைக் கல்யாணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யச் சொல்லியிருப்பேனே" என்றான்.

கமலத்திற்கு ஏனோ திடீர் என்று கோபம் பொங்கியது. "நீங்கள் என்னைக் கேலி செய்கிறீர்களா? அல்லது இளவரசி என்ன கிள்ளுக் கீரையா? நினைத்தவர்களிடமெல்லாம் தூக்கிப் போடுவதற்கு. நான் அவளுடைய அந்தரங்கத் தோழி. மதுரை மன்னர் மீது இளவரசிக்குத் திடீரென ஆசை ஏற்பட்டது. விரோதியான மதுரை மன்னரை இளவரசி மணப்பதைவிட செஞ்சித் தளபதியை மணந்தால் எவ்வளவோ நல்லது என்ற எண்ணத்தில் நான் நல்ல நோக்கத்துடன்தான், இளவரசி சொன்ன கருத்துக்கு மாறுபட்டு செஞ்சிக்குச் செல்கிறேன். நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?" என்றாள். விரோதியென்று அவள் மதுரை மன்னரை வர்ணித்தவுடன் முத்துக்குமரனுக்குக் கோபம் பொங்கியது. ஆனால்,

அதை வெளிக்குக் காட்டாமல், "ஏதோ நீங்கள் நினைத்தவருக்கெல்லாம் இளவரசியை மணம் முடித்து விடக்கூடிய சக்தி உங்களுக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன்..." என்றான்.

"அப்படி இன்னொரு தடவை சொல்லாதீர்கள். நான் இவ்வளவு தூரம் எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றிச் சொல்வதற்குக் காரணம் தங்களை முதன் முதலாகச் சந்தித்தவுடனே தங்கள் மீது எனக்கு..." என்று மேற்கொண்டு சொல்ல முடியாமல் நிறுத்தினாள் கமலம். அவளுடைய எண்ணத்தை அவ்வளவு பளிச்சென்று வெளியிட்டு விட முத்துக்குமரன் அனுமதிக்கவில்லை. கமலம் மேலும் தொடர்ந்தாள்: "முதன் முதல் தாங்கள் நந்தவனத்தில் என்னையும் அரசியையும் சந்தித்தீர்கள் இல்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம். போர் வீரர்களிடமிருந்து தப்புவதற்காக ஓடி வந்தேன். நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள்" என்று முத்துக்குமரன் சொன்னான்.

"ஆமாம். நான் காப்பாற்றினேன். ஆனால், உங்கள் மனம் சென்றதோ அரசியிடம்! எப்படியிருக்கிறது இந்த காலத்து நன்றி உணர்ச்சி?" என்று கமலம் தனது விரல்களால் மெல்ல முத்துக்குமரனுடைய விலாவில் சீண்டியவாறு கேட்டாள். கமலத்தின் சேஷ்டைகள் முத்துக்குமரனுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் தன் மார்பைச் சுற்றிக் கொண்டிருந்த அவளுடைய கைவிரல்களில் மின்னும் இளவரசியின் மோதிரத்தைப் பார்த்து, "இளவரசியின் மோதிரம் பெரும் வைர வைடூரியங்களாய் மின்னும் என்று நினைத்தேனே. இது சாதாரண வெள்ளி மோதிரம் போல் அல்லவா இருக்கிறது?" என்றான்.

"ஐயா. இது இளவரசியினுடைய அடையாள மோதிரம். இதுபோன்ற மோதிரம் அரச குடும்பத்தில் மொத்தம் நான்கு பேர்களிடம்தாம் இருக்கிறது. அரசரிடமும் அரசியாரிடமும் அரசருடைய மூத்த மகளிடமும் தளபதியிடமும்தான் இருக்கிறது. இந்த மோதிரம் இருந்தால் தஞ்சை நாட்டில் எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் எளிதில் சாதித்துக் கொள்ளலாம் என்பது தங்களுக்கும் தெரிந்திருக்கும். பார்த்தால் இது ஏதோ சாதாரண மோதிரம்போல் தோன்றினாலும் இதனுடைய மதிப்பு விலை கூற முடியாதது. என்னிடம் இளவரசி இதைக் கொடுத்தார்கள் என்றால் என்னுடைய மதிப்பு எப்படிப்பட்டது தெரியுமா?" என்று கூறியவளை இடைமறித்த முத்துக்குமரன், "மிகவும் விலை மதிப்பற்றதுதான்" என்று கூறி முடித்தான். ஏதோ பெரிய நகைச்சுவையைக் கண்டுவிட்டவள் போல் கமலம் சிரித்தாள்.

"ஆமாம், இந்த மோதிரத்தை எடுத்துக்கொண்டு நீ ஏன் செஞ்சிக்குச் செல்கிறாய். வழியிலே இது வேறு யாரிடமாவது சிக்கிவிட்டால் நீ

நினைத்த காரியம் வேறு விதமாக அல்லவா முடிந்துவிடும்'' என்ற கேட்டான் முத்துக்குமரன்.

"அது எப்படி? வேறு யாரிடம் இந்த மோதிரம் சிக்கமுடியும். நான் தான் தங்களுடன் தைரியமாக வருகிறேனே. நூறு பேர் சூழ்ந்தாலும் அவர்களை எதிர்த்துத் தாக்கக்கூடிய வீரம் உங்களிடம் இல்லையா? கமலம் அவ்வளவு எளிதில் ஒருவரையும் நம்பமாட்டாள். நம்பினால் கடைசி வரையில் விடவும் மாட்டாள்'' என்றாள்.

முத்துக்குமரன் கமலத்தின் மனத்தில் எப்படியாவது பயத்தை ஏற்படுத்திவிட வேண்டுமென்ற நோக்கத்துடன், "உனக்கு விவரம் தெரியாது போல் இருக்கிறது. திருச்சிக் கோட்டையை நோக்கி செஞ்சியிலிருந்து படைகள் சென்ற வண்ணமாக இருக்கின்றன. நீ செஞ்சிக்கு யாரைத் தேடிச் செல்கிறாயோ அவர் செஞ்சியில் இருக்கிறாரோ இல்லையோ என்பது சந்தேகம்தான். ஒரு பெண் தன்னந் தனியாக செஞ்சி நகரில் அலையும் போது யாராவது ஏமாற்றி உன்னை அழைத்துச் சென்று மோதிரத்தைப் பறித்துக் கொண்டால் பிறகு என்ன செய்வாய்?'' என்றான்.

கமலம் திடுக்கிட்டவளாக, "திருச்சிக் கோட்டையை நோக்கி எதற்காக செஞ்சிப்படைகள் செல்லுகின்றன'' என்று கேட்டாள்.

முத்துக்குமரன் பேச்சை மாற்ற விரும்பி, "அதெல்லாம் எனக்குத் தெரியாது. நானும் செஞ்சியில் முக்கியமான ஒருவரைச் சந்திப்பதற்குத்தான் போகிறேன். ஆனால், செஞ்சியை அடைந்தவுடன் நீ வேறு பாதையாகவும் நான் வேறு பாதையாகவும் செல்ல வேண்டியிருக்கும். அதனால்தான் இப்பொழுதே உன்னிடம் சொல்லி விடுகிறேன்'' என்றான்.

முத்துக்குமரன் எங்கே நழுவிவிடுவானோ என்ற அச்சத்தால், "செஞ்சி நகரத்திற்குச் சென்றால்கூட நீங்களும் நானும் பிரியாமல் தான் செல்ல வேண்டும். நான் தளபதியைச் சந்தித்துவிட்டு ஒரு நொடியில் திரும்பி விடுவேன். அப்படி தளபதி அங்கில்லை என்றால் அவருக்காக நாம் காத்திருப்போம். அப்படியும் அவர் வரவில்லையென்றால் எனக்குக் கவலையில்லை. உங்களோடு நான்...'' என்று பேச்சை முடிக்காமல் நிறுத்தினாள்.

முத்துக்குமரனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. கமலத்தினுடைய புத்தி சாதுர்யத்தைப் பற்றி அச்சங்கூட வந்தது. ஆனால், அவனுடைய நோக்கமெல்லாம் அவள் கையிலிருக்கும் மோதிரத்தை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்பதுதான். அதற்கு என்ன வழி என்று அவன் நினைத்தான். குடந்தையைத் தாண்டி வெகு தொலைவு வந்தாகி விட்டது. சாலையின் இருபுறங்களிலும் மரங்கள்

அடர்ந்திருந்ததால் வெயிலின் கடுமை தெரியவில்லை. பிறகு போகப் போக சாலை கரடு முரடாகவும் மரங்கள் அற்றும் இருந்தபடியால் குதிரையை முன்போல் வேகமாகச் செலுத்த முடியவில்லை. நாவறட்சி ஏற்பட்டது. ஆகவே சிறிது தண்ணீர் குடித்தால் தேவலைபோல் தோன்றியது. "உனக்குத் தாகம் எடுக்கவில்லையா கமலம்" என்று முத்துக்குமரன் முதன்முதலாக அவளைப் பெயரிட்டு அழைத்தான். "எனக்கு எப்போதும் தாகம்தான். இப்பொழுது நீங்கள் கேட்டவுடன் இன்னும் அதிகமாகி விட்டது" என்றாள். வழியில் ஓரிடத்தில் சிறு சத்திரமும் அருகே ஒரு குளமும் இருந்தது. அங்கே இறங்கி தண்ணீர் குடித்துவிட்டுச் சத்திரத்தில் சிறிது நேரம் இளைப்பாறிச் செல்லலாம் என்ற எண்ணத்தில், "அதோ, அந்தக் குளத்தில் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன். வேண்டுமானால் நீயும் வந்தால் தைரியமாகக் குளத்தில் இறங்கும் துணிவிருந்தால் இறங்கித் தண்ணீர் குடித்துவிட்டு வரலாம்" என்றான்.

கமலம் அவனைப் பின் தொடர்ந்து குளக்கரைக்குச் சென்றாள். அந்தக் குளத்தின் படிக்கட்டுகளில் பாசி நிறைந்திருந்தது. அதை முதலிலேயே முத்துக்குமரன் கவனித்து விட்டான். கமலத்தை எச்சரிக்காமல் வேண்டுமென்றுதான் முதலில் வேகமாக இறங்கினான். அவனைத் தொடர்ந்து அதே போல் கமலம் இறங்கவே திடீரென பாசி நிறைந்த படிகள் அவளை வழுக்கி விட்டன. அவள் நிலை தடுமாறிக் குளத்து நீரில் விழுந்தாள். இப்படி நேரும் என்பதை முத்துக்குமரன் முன் கூட்டியே அறிவான். உடனே பரபரப்புடன், "ஐய்யய்யோ! கமலம் கவனிக்காமல் இறங்கி விட்டாயே" என்று கூவியவாறு குளத்தில் குதித்து அவளை மூழ்காமல் காப்பாற்றிக் கரையிலே அழைத்து வந்து உட்கார வைத்தான்.

கமலத்தின் உடல் வெடவெட என்று நடுங்கியது. அவள் தன் உயிரைக் காப்பாற்றிய முத்துக்குமரனை நன்றியுடன் பார்த்தாள். மேலும் குளக்கரையில் உட்கார்ந்திருப்பதைவிட அருகிலுள்ள சத்திரத்திற்குச் சென்று இளைப்பாறலாம் என்று அவளை மெல்ல கைத்தாங்கலாக முத்துக்குமரன் அழைத்துச் சென்றான்.

கமலம் ஆயிரம் முறைகள் அவன் செய்த உதவியைப் பாராட்டியவாறு சத்திரத்துத் திண்ணையில் சாய்ந்திருந்தாள். அவளுக்கு ஏனோ திடீரெனக் களைப்பு மேலிட்டது. சற்று நேரம் கண் அயர்ந்தால் தேவலைபோல் தோன்றியது. அருகே முத்துக்குமரன் துணை இருக்கும்போது தனக்கு என்ன பயம் என்ற எண்ணத்தில் அவள், "கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் இளைப்பாறலாம் என் நினைக்கிறேன். இங்கு நாம் தங்கும் நேரத்தைப் பிறகு நீங்கள் வேகமாகக் குதிரையைச் செலுத்திச் சென்று சரி செய்து விடுவீர்கள்

அல்லவா?" என்று கேட்டவாறு கண்களை மூடிக் கொண்டான். மறுநிமிடம் அந்தக் காலை வேளையிலும் அவனை உறக்கம் சூழ்ந்து கொண்டது. குறட்டையொலி பலமாக வந்தது.

முத்துக்குமரன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் அங்கிருந்து ஒரே நொடியில் குதிரைமீது தாவி ஏறி மீண்டும் வந்த வழியாகவே குடந்தையை நோக்கிக் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென்றான். இப்பொழுது அவனுடைய விரலில் இளவரசியின் முத்திரை மோதிரம் இருந்தது. அதை ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் குதிரையைச் செலுத்தினான்.

குளத்திலிருந்து கமலத்தைத் தூக்கியபோது அவள் விரலிலுள்ள மோதிரத்தை மிகவும் சாமர்த்தியமாக அவன் கழற்றி விட்டான். அவன் வடிவிடம் சொல்லி வந்தது போல் பகல் உணவுக்கு நிச்சயம் குடந்தையை அடைந்துவிடுவான். ஆனால் இரண்டு பேருக்கு உணவு எடுத்து வைக்குமாறு சொல்லி வந்தானே அந்த மற்றொருவர் யாராய் இருக்கலாம்?

# 40. மதுரைச் சாமியார்

கும்பேச்வரர் கோயிலின் மணியோசை காற்றிலே மிதந்து வெகு தூரத்துக்கு வெகுதூரம் கேட்டுக் கொண்டிருந்தது. உச்சி கால பூஜை நடப்பதை அம்மணியோசை தெரிவித்தது. உச்சி காலை பூசை முடிந்தவுடன் கோயில் சாத்தப்பட்டு பிறகு பகல் மூன்று மணிக்கு மேல்தான் திறக்கப்படும். வெளியூர்களிலிருந்து வந்திருக்கும் தேசாந்திரிகள் உச்சிகால பூசை முடிந்தவுடன் விநியோகிக்கப்படும் உணவிற்காகக் காத்துக்கொண்டு மண்டப வாயிலில் நிற்பது தினந்தோறும் நடைபெறும் காட்சியாகத் திகழ்ந்தது. அந்த மணியோசையைத் தொலைவிலேயே கேட்டுவிட்ட முத்துக்குமரன் குதிரையை மேலும் கடுகிச் செலுத்திக் கோயிலை நோக்கி விரைந்தான். அவன் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்ய அவ்வளவு அவசரமாகச் செல்கிறான் என்று சொல்ல முடியாது. யாரையோ எதிர்பார்த்து அந்தக் குறிப்பிட்ட நேரத்திலே அங்கே இருக்க வேண்டு மென்பதற்காக அவன் மனத்தைவிட வேகமாகக் குதிரையைச் செலுத்தினான். அவன் கோயிலில் ஆவலுடன் எதிர்பார்த்தது அவனுடைய காதலியையன்று. உற்றார் உறவின் முறைகளையோ அன்று அவர்களுக்கும் மேலாக மிக முக்கியமானவராக மதுரை மன்னர் சொக்கநாதர் அந்த நேரத்தில் அங்கே வருவதாக அவனுக்கு முன்கூட்டியே செய்தி வந்திருந்தது. அவரை அவன் அந்நேரத்தில்

சந்திக்காவிட்டால் ஒரு வேளை அவர் ஏமாற்றம் அடைந்து தனது திட்டங்களையெல்லாம் மாற்றிக் கொண்டு விடலாம். தனது சிறு தாமதத்தால் விளையும் பெரும் செயல்களை அவன் எண்ணினான். தன்னால் எந்தவித இடையூறும் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காகக் குதிரையை விரைந்து செலுத்துவதற்காக அதை விரட்டினான். காலையிலே கிளம்பி இடைவிடாது பயணம் செய்து மீண்டும் பகலுக்குள் ஒரே மூச்சில் திரும்புவது என்றால் அந்தப் பிராணிக்குக்கூட மூச்சுத் திணறியது. வாயில் நுரை தள்ளியது. முத்துக்குமரன் அதை அறிவான். அவனுக்கும் சோர்வு மிகுந்தது. இரவிலும் நல்ல தூக்கம் இல்லாதிருந்தாலும் சிந்தனைக்கு அதிகமாக வேலை கொடுத்திருந்ததாலும் அவனுக்குக் களைப்பு மிகுந்தது.

அத்துடன் காலையில் சரியான ஆகாரமும் அவனுக்கு இல்லை. உடல் சோர்வு மிகுந்திருந்தாலும் காரியத்தின் மீது கண்ணை வைத்துக் குறித்த நேரத்தில் கும்பேசுவரர் கோயிலை அடைய வேண்டுமென்னும் நோக்கத்துடனே விரைந்தான். அவன் கோயில் கோபுர வாயிலை வந்தடையும்போது கோயில் பூசை முதலியவை முடிந்து கருப்பகிரகத்துக் கதவையும் மூடி விட்டார்கள். குருக்கள் மற்றும் சிப்பந்திகள் சூழ வெளியே வந்து கொண்டிருந்தார்கள். பரிசாரகர் பிரசாதத்தைத் தேசாந்திரிகளுக்கு விநியோகித்துக் கொண்டிருந்தார்.

முத்துக்குமரனின் பார்வை நான்கு புறமும் சுழன்றது. மன்னர் எந்த இடத்திலே வந்திருக்கிறாரோ என்ற ஐயத்துடனே அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். பரிசாரகர் அவன் அருகே வந்து பிரசாதத்தை நீட்டி, "எங்கே ஐயா திருதிருவென்று விழித்துக் கொண்டு பார்க்கிறாய்? சீக்கிரமாக வாங்கிக்கொள். உனக்காகக் காத்திருந்தால் மற்றவர்களுக்கு நான் எப்பொழுது கொடுப்பது?" என்று சற்றுக் கோபமாகவே பேசினார். அவனும் கையை நீட்டிப் பிரசாதத்தை வாங்கிக் கொண்டான். அந்த உணவு அவனுடைய பசிக்கு ஒரு பங்குகூட காணாது என்றாலும் பலவித யோசனையுடன் அவன் அதைப் பெற்றான்.

கையிலே மணக்கும் தயிர்ச்சோற்றை வைத்துக் கொண்டு யாரிடமாவது அதைக் கொடுத்துவிடுபவன் போல் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரே வாயில் அதைத் தின்று விட்டவர்கள் முத்துக்குமரன் இப்படி அலைவதைப் பார்த்து அவன் யாருக்கோ அதைக் கொடுத்துவிடப் போகிறான் என்ற எண்ணத்தில் அவன் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்த காட்சி பெரும் ஓவியம் தீட்டும் அளவுக்குச் சிறந்திருந்தது.

அவன் தேடியவரின் உருவத்தைக் கண்கள் ஒன்றின் மூலமாகத்தான் கண்டுபிடிக்க முடியும். என்னதான் மதுரை மன்னர் மாறுவேடம்

பூண்டிருந்தாலும் கண்களிலே ஜொலிக்கும் கம்பீரத்தை மறைக்க முடியாது. அதில் ததும்பும் கருணையை மறைக்க முடியாது. அதிலே திகழும் வீரத்தை அவர் என்னதான் மாற்ற முயன்றாலும் மாற்ற முடியாது. அதனால் அப்படிப் பட்ட விழிகள் எங்கேயெங்கே என்று ஒவ்வொருவருடைய விழிகளாகச் சந்தித்து வந்தான். ஆனால், அவன் தேடிய விழிகளை அங்கே காணோம். ஒரு வேளை மன்னர் வருவதற்கு ஏதாவது சங்கடம் நேர்ந்திருக்குமோ என்று கூட ஐயப்பட்டான். மன்னர் குறித்த நேரத்தில் வரத் தவறவே மாட்டார். அதனால் ஏதோ வழியில் சங்கடம் நேர்ந்திருக்க வேண்டும். அல்லது மன்னருக்கு வழி தெரியாமல் தவிப்பு ஏற்பட்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அவன் பரபரப்புடன் கோயிலை ஒரு முறை சுற்றி வந்து விட்டான். இன்னும் சிறிது நேரம் காத்துக் கொண்டிருந்து பார்ப்போம் என்ற எண்ணத்தில் குளக்கரையை அடைந்து கையில் இருந்த சோற்றைத் தின்று கையைக் கழுவிக்கொள்ளலாம் என்னும் எண்ணத்தில் குளக்கரையை நோக்கி நடந்தான்.

வெயில் 'சுள்' என்று அடித்துக் கொண்டிருந்தது. குளத்தின் கருங்கற் படிக்கட்டுகள் வெயிலின் தகிப்பால் கால்களைக் கொப்பளித்துப் போகுமாறு செய்தன. தண்ணீர் கலங்காமல் அமைதியாக இருந்தது. வெயிலின் கொடுமை தாங்காமல் தண்ணீரில் குளிப்பதற்காக குளத்தை நாடி வந்தவர்கள் நன்றாக அமிழ்ந்து நீராடிக் கொண்டிருந்தனர். சிலர் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு நீச்சலடித்துச் சென்று கொண்டிருந்தனர்.

முத்துக்குமரன் கையிலிருந்த சோற்றை ஒரே வாயில் விழுங்கிவிட்டுக் குளத்தில் இறங்கிக் கையைக் கழுவிக் கொண்டான். அவனுக்கு அமிழ்ந்து ஸ்நானம் செய்ய வேண்டு மென்ற உணர்ச்சி ஏற்பட்டது. அதனால் தன் ஆடைகளை யெல்லாம் களைந்து படிக்கட்டில் வைத்து விட்டு முன் ஜாக்கிரதையாக கையிலிருந்த இளவரசியின் மோதிரத்தைக் கழற்றித் துணிகளின் நடுவில் வைத்து விட்டுக் குளத்தில் குளிக்க இறங்கினான்.

ஓரிருவர் அப்பொழுது அங்கே குளிப்பதற்கு வந்தார்கள். முத்துக்குமரன் குளித்தவாறே கரையிலே ஒரு பார்வையைச் செலுத்திக் கொண்டு அமிழ்ந்து குளித்தான். பிறகு ஒருவாறாக குளிப்பதை முடித்துக் கொண்டு கரை ஏறினான். தலையைத் துவட்டிக் கொண்டு ஆடையை அணிவதற்கு முன்பாக மோதிரத்தைக் கவனித்தான். மோதிரத்தைக் காணோம். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு நொடியிலே முத்திரை மோதிரம் எங்கு சென்றிருக்கும் என்னும் ஐயம் அவனைச் சூழ்ந்து கொண்டது. கரையருகே ஒருவரும் வரவில்லை. அவன் கவனமாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், சில

விநாடிகளில் தண்ணீரில் மூழ்கி எழுந்தோமே அப்பொழுது ஏதாவது நேர்ந்திருக்குமோ என்னும் ஐயம் அவன் உள்ளத்திலே தளும்பியது. அதனால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் யாராவது இருக்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்காக பரபரப்புடன் படிக்கட்டுகளிலே இருந்த ஆடைகளைக் கையிலே எடுத்துக் கொண்டு விரைந்தான். மேல் படிக்கட்டில் ஒரு சாமியார் உட்கார்ந்திருந்தார்.

அவருக்கு நடுத்தர வயதுதான் இருக்கும். இன்னும் சடைமுடிகள் நரைக்கவில்லை. ஆனால், வெகுநாள் ஆனது போல் சடைகள் பழுப்பு நிறமடைந்து காணப்பட்டன. காவி உடை வெகுதூரம்வரை அலைந்து வந்தது போன்று புழுதி படிந்து காணப்பட்டது. நெற்றியிலே பளிச்சென்று தென்கலை நாமமும் திகழ்ந்தது. நாமத்தின் பாதம் மூக்கின் பாதிப் பக்கம் வரையில் இழுத்து விடப்பட்டிருந்தது. நெற்றியின் பெரும் பகுதியை வெண்ணிற நாமம் அடைத்துக் கொண்டிருந்தது. அவர் கையிலே சிறு மூட்டை ஒன்றை வைத்துக் கொண்டிருந்தார். அது பச்சை நிறக் கம்பளியலான ஒரு பாய் போல் தோன்றியது.

முத்துக்குமரன் அவசர அவசரமாக அவர் அருகே இரண்டு முறை குறுக்கும் நெடுக்குமாக நடந்து அவரைச் சந்தேகப்பட்டு, ஏதோ கேட்பவன் போன்ற பாவனையில் நடந்தான். அந்தச் சாமியாரும் ஒரு முறை முத்துக்குமரனைப் பார்த்தார். அவர் முத்துக்குமரன் சங்கடத்தைப் போக்க எண்ணி, "என்னப்பா தேடுகிறாய்?" என்றார்.

முத்துக்குமரனுக்குச் 'சுருக்'கென்று மனத்தில் பட்டது. தான் அலைவதைப் பார்த்தவுடன் ஏதோ தேடுவது போன்ற எண்ணம் அவருக்கு ஏன் தோன்றியது என்ற சந்தேகம் அவன் உள்ளத்தில் எழுந்தது. அவன் சாமியின் வெகு அருகே வந்து, "நான் எதையோ தேடுகிறேன் என்று தங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"உன்னுடைய முகம் சொல்கிறதே. நீ குளத்தில் கடைசி படியிலிருந்து ஒரே தாவாகத் தாவி ஏறி வந்த உனது வேகம் சொல்கிறதே" என்றார் சாமியார்.

முத்துக்குமரனின் உடல் சிலிர்த்தது. அவன் தன் கையிலிருந்த ஆடைகளைக் கீழே வைத்துவிட்டு இரு கரங்களையும் கூப்பி, "அரசே, இது என்ன வேடம்?" என்று பரபரப்புடன் கேட்டான். அதில் பயமும் கலந்திருந்தது. தான் மிகவும் கஷ்டப்பட்டு அடைந்த இளவரசியின் மோதிரத்தை ஒரு நொடியிலேயே எங்கேயோ தொலைத்து விட்டோமே என்றும் இது அரசருக்குத் தெரிந்தால் தன்னைப் பற்றி அவர் என்ன நினைப்பார் என்ற பீதியும் அவனுக்கு இருந்தது. அரசரைச் சந்தித்து விட்டோம் என்ற களிப்பு ஒரு புறம் இருந்தாலும் அவரிடம் சேர்க்க வேண்டிய பொருளைச் சேர்க்காமல் விட்டு விட்டோமே என்ற

எண்ணத்துடன் அரசருக்குத் தெரியாது. என்னிடம் இளவரசியின் மோதிரம் இருக்கிறது என்று. அதை அடைந்ததாகவே காட்டிக் கொள்ள வேண்டாம். சொல்லாமலே காரியத்தை நடத்தலாம். ஆனால் மோதிரத்தை அரசரிடம் கொடுத்திருந்தாலும் நடக்கப்போகும் காரியம் முக்கியமானதாய் இருக்கும். உடனே அரசர் இளவரசியைப் போய்ச் சந்திக்கும்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு காரியத்தை 'மளமள'வென்று வெற்றிகரமாக முடித்து விடலாம். அதற்கு முடியாமல் தனது ஒரு கணநேர அசட்டுத் தனத்தால் இளவரசியின் மோதிரத்தைத் தொலைத்து விட்டோமே' என்று அவன் எண்ணியபடி தனக்குத்தானே நொந்து கொண்டான்.

"என்னப்பா ஏதோ யோசித்துக் கொண்டே இருக்கிறாய்? நான் குறித்த நேரத்தில் வரமாட்டேன் என்று எண்ணினாயா? அல்லது நீ எடுத்துக் கொண்ட காரியத்தைச் சரியாக இன்னும் முடிக்கவில்லையே, அதற்குள் அரசர் வந்து விட்டாரே என்ற கவலை உனக்கு ஏற்பட்டிருக்கிறதா?" என்று கேள்வி மேல் கேள்வியாக அரசர் கேட்கவும், முத்துக்குமரன் நடுக்கம் கொண்டவனாய் அரசரிடம் உண்மையை மறைக்க விரும்பாமல், "இல்லை அரசே, எல்லாவற்றிலும் வெற்றிதான் அரசே. ஆனால் நான் கவனப் பிசகால் பெரும் தவறு செய்து விட்டேன்" என்று கூறினான். "ஐந்து நிமிஷங்களுக்கு முன்பிருந்த ஓர் அரிய பொக்கிஷத்தை நான் கணநேரத்தில் தொலைத்து விட்டதை நினைக்கும் பொழுது என் உடல் நடுங்குகிறது" என்றான். முத்துக்குமரனின் படபடப்பையும் அவன் மிகவும் பயந்து விட்டதையும் கண்ட அரசர் சொக்கநாத நாயக்கர் அவனை நோக்கி, "பயப்படாதே முத்துக்குமரா! நீ மோதிரத்தைத்தானே தேடுகிறாய். இதோ! அது இங்கே இருக்கிறது" என்று இளவரசியின் மோதிரத்தை அவன் எதிரே நீட்டினார்.

முத்துக்குமரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அதை அரசரிடம் இருந்து அவசரமாகப் பெற்றுக் கொண்டு திருப்பித் திருப்பி அதைப் பார்த்துக் கேள்விக் குறியுடன் அரசரை நோக்கவும் அரசர் கேட்டார், "இதை எப்படி நான் நொடியில் எடுத்தேன் என்றுதானே நீ கேட்க விரும்புகிறாய்" என்றார். முத்துக்குமரனுக்கு அரசருடைய அறிவாற்றல் வியப்பை அளித்ததோடல்லாமல் அவரிடம் மேலும் பக்தியும் மரியாதையையும் அளித்து. "நீ குளிக்க இறங்கும் முன்பாக மிகவும் கவனத்துடன் அந்த மோதிரத்தைக் கழற்றி ஆடைகளுக்கு நடுவில் வைப்பதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்; அது ஏதோ முக்கியமானதாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றியவுடன் உனது ஜாக்கிரதையைச் சோதிப்பதற்காக நீ குளத்தில் மூழ்கியவுடன் ஒரு நொடியில் அதை நான் எடுத்துக் கொண்டேன்" என்றார்.

முத்துக்குமரன் இதை அரசரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, "உங்களுக்குச் சேர வேண்டியதை இதோ உங்களிடமே சேர்ப்பித்து விட்டேன்" என்று கூறி அந்த மோதிரத்தை அவன் பெற்றுக் கொண்ட விவரத்தைச் சுருக்கமாக அரசரிடம் சொன்னான். அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அரசர் வேறொன்றும் மறுமொழி கூறாமல் "அடுத்தபடியாக நமது திட்டம் என்ன?" என்று கேட்பவர் போல் முத்துக்குமரனை நோக்கினார். "நாளையதினம் தஞ்சையிலே தஞ்சை மன்னர் நடத்தும் பெரும் விழாவில் ஊரே கோலாகலத்தில் இருக்கிறது. தங்களுக்கு அழைப்பு அனுப்பாமல் அவமானப்படுத்த எண்ணியிருக்கும் தஞ்சை மன்னரின் கர்வத்தை அடக்குவதற்கான வழியைத் தேடுவது முதல் காரியம்.

"இரண்டாவது காரியம், இளவரசியைச் சந்திப்பது. இளவரசிக்குத் தங்கள் மூலம் ஏற்பட்டிருக்கும் அன்பை அவளது தோழியின் மூலம் நான் அறிந்து கொண்டேன். இந்த மோதிரத்தைத் தங்களிடம் சேர்ப்பிப்பதற்காகத் தான் இளவரசி மதுரைக்குத் தன் தோழியை அனுப்பியிருக்கிறாள்.

"இந்த மோதிரத்துடன் நீங்கள் எப்படியாவது இன்றே இளவரசியைச் சந்திக்க வேண்டும். சந்தித்த பிறகுதான் என்ன செய்வது என்பதற்கான மார்க்கம் புலப்படும்" என்று கூறி அரசர் முகத்தைப் பார்த்தான். மதுரை மன்னர் பதில் ஏதும் சொல்லவில்லை. அவர் அந்த இடத்தைவிட்டு எழுந்து "சரி நீ உனது வேலையைக் கவனித்துக் கொண்டு என்னைச் சந்தித்ததாகத் தெரிந்து கொள்ளாமலேயே தஞ்சைக்குச் சென்றுவிடு. நான் நேரே தஞ்சைக்குப் போய் ஆகவேண்டியதைக் கவனித்துக் கொள்கிறேன்" என்றார்.

முத்துக்குமரன் மேற்கொண்டு அவரிடம் ஏதும் கேட்க விரும்பவில்லை. உடனே அங்கிருந்து புறப்பட முயன்றவன் சற்றுத் திரும்பிக் கோயிலுக்கு அருகேயுள்ள பூக்காரர் வீட்டில் தனக்காகக் காத்திருக்கும் பூக்காரரின் மகளை ஏமாற்றமடையச் செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் "இங்கே நமது அன்பர் ஒருவர் உணவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அதைச் சாப்பிட்டுவிட்டுப் போகலாமே" என்று மெல்லக் கூறினான் முத்துக்குமரன்.

அரசர் சிரித்து, "பொன்னுரங்கத்தின் வீட்டைத் தானே சொல்லுகிறாய். நான் அங்கே இப்பொழுதான் சென்று சாப்பிட்டு வருகிறேன். உனக்காகத்தான் அந்தப் பெண் காத்துக் கொண்டிருக்கிறாள். நீ வேண்டுமானால் அங்கே போய் சாப்பிட்டுவிட்டுச் சற்று இளைப்பாறி தஞ்சைக்கு வந்து சேர்" என்று கூறியவுடன் முத்துக்குமரனுக்கு ஏற்பட்ட வியப்புக்கு எல்லையில்லை. அவன் மீண்டும் புறப்படுவதற்கு ஆயுத்தமானவுடன் அரசர் அவனை

அழைத்து, "தஞ்சைக்குள் நுழையும்போது நீ இப்படி முடுக்கான வாலிபத்துடன் வருவது சரியாக இருக்காது. அதனால் வேறுவிதத் தோற்றத்துடன் வருவது நல்லது" என்றார். முத்துக்குமரன் தலையை அசைத்துவிட்டு சென்றான்.

தஞ்சை நகர எல்லையை மதுரை மன்னர் சாமியார் வேஷத்தில் அடைந்தபொழுது அவருடன் மற்றும் இரண்டு சாமியார்களும் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் இருவரும் அவருடன் மெல்லப் பேச்சுக் கொடுத்தனர். "சாமிக்கு எந்த ஊரோ?" என்று ஒருவர் கேட்டார். "வடக்கே" என்று மட்டும் கூறி நிறுத்திக் கொண்டார் மதுரைச் சாமியார். "வடக்கே என்றால் எந்த இடம் என்று சாமி சொல்லவில்லையே?" என்று மீண்டும் கேட்டார் மற்றொரு சாமியார். "தங்களுக்கு எந்த ஊர்" என்று திருப்பிக் கேட்டார் மதுரைச் சாமியார். "நான் காஞ்சிபுரத்திலிருந்து வருகிறேன். நாளைய தினம் இங்கே நடைபெறப் போகும் பெரும் யாகத்தில் ஒவ்வொருவருக்கும் தாராளமான சாப்பாடும் நிறைய பணமும் தரப்போகிறாராம் தஞ்சை அரசர்" என்றார் காஞ்சிபுரத்துச் சாமியார். "ஏன் உங்கள் ஊரில் சாப்பாட்டுக்குப் பஞ்சமா?" என்று கேட்டார் மதுரைச் சாமியார். காஞ்சிபுரத்துச் சாமியாருக்குச் சற்றுக் கோபம்தான் வந்தது. "சோற்றுக்கில்லாமலா நாங்கள் காததூரம் நடந்து வந்திருக்கிறோம். ஊரைப் பார்த்தது போல் இருக்கும். உங்களைப் போன்ற எவ்வளவோ சாமியார்களின் அறிமுகம் ஏற்படும். ஒருவருக்கொருவர் உலக விவகாரங்களைப் பேசிப் புரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில்தானே சாமி வந்திருக்கிறோம். நீங்கள் என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்?" என்றார் காஞ்சிச் சாமியார்.

மூன்றாவது சாமியார் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தார். மதுரைச் சாமியார் அவரை நோக்கி, "சாமியார்கள் என்றால்உலக விவகாரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் கட்டளையா? ஏதோ ஊர் ஊராகப் போகிறோம். ஏதோ பார்க்கிறோம், கேட்கிறோம், அறிந்து கொள்கிறோம். எதிலும் அதிகப் பற்றில்லாமல் காலத்தைக் கடத்த வேண்டுமயொழிய இப்படி உலக விவகாரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஊர் ஊராகப் போக வேண்டுமென்ற கொள்கை எனக்குப் பிடிக்கவில்லை" என்றார். மௌனமாய் இருந்த சாமியார் சற்றுக்கோபத்துடன் "வடக்கத்திச் சாமியார் என்று சொல்கிறீர்களே, ஆனால் உங்களுடைய பேச்சும் குணமும் அப்படிப் பிரதி பலிக்கவே இல்லையே" என்றார்.

மதுரைச் சாமியாருக்குக் கொஞ்சம் கோபம் பொங்கியது. "ஊருக்குள் நுழையும் பொழுதே ஏன் ஏதவாது தர்க்கத்தை விளைவிக்கிறீர்கள். ஏதோ நாளைக்குப் பெரியதோர் திருவிழா அரசர் நடத்தப்

போகிறாராம். அதைப் பார்த்து விட்டுப் போகலாம் என்பதற்காக வந்திருக்கும் என்னை வீண் வம்புச் சண்டைக்கு ஏன் இழுக்கிறீர்கள்? உங்களைப் போல் என்னால் வாயால் வாதப் பிரதிவாதம் செய்ய முடியாது. தக்க பதில் சொல்வது இதோ இதுதான்" என்று கையிலிருந்த தடியைக் காட்டினார்.

உடனே காஞ்சிச் சாமியார், "ஓஹோ! நீர் முரட்டுச் சாமியார் போல் இருக்கிறது. உம்மிடம் வீணே தர்க்கித்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. ஆனால், நாளைய தினம் சபையிலே இடம் பிடித்துக் கொடு என்று ஓடிவந்து எங்கள் உதவியைக் கேட்காதீர்கள். தனித்து வரும் சாமியார்களுக்கு ரொம்பக் கட்டுப்பாடு அதிகமாக வைக்கப் போகிறார்களாம். ஒவ்வொரு ஊரிலிருந்தும் வரும் கோஷ்டிக்குத்தான் முதலிடம் தரப்போகிறார்களாம்" என்று காஞ்சிச் சாமியார் மெல்லச் சிரித்து, "அப்படிச் சபையிலே இடம் கிடைக்காமல் தள்ளிவிட்டால் குடிமுழுகிப் போகாது. நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்றார்.

இரண்டு சாமியார்களும் இனி இங்கே பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று தெரிந்து கொண்டு வேறு திசையில் சென்றனர். ஆனால் மதுரைச் சாமியார் மட்டும் சற்று நேரம் அங்கே உட்கார்ந்து யோசித்து மறுநாள் நடக்கவிருக்கும் வேள்விக்குச் செல்வதற்கு முன்பாக இளவரசியைச் சந்தித்து அவளுடன் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வது என்ற எண்ணத்தில் அரண்மனை அந்தப்புரத்திற்கு அருகிலுள்ள நந்தவனத்தின் பக்கமாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது மாலைக் கதிரவன் மேற்குத் திசையில் மறைந்து கொண்டிருக்கும் நேரம். கோயிலில் ஒலிக்கும் மணியோசை மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது. வானத்திலே கூட்டையடைய விரைந்து பறந்துவரும் பறவையினங்கள் அணிவகுத்து வந்து கொண்டிருந்தன. அந்தப்புரத்து நந்தவனத்தில் மதிலோரமாகச் சென்று கொண்டிருந்த மதுரைச் சாமியாரை யாரோ கை தட்டி அழைப்பது போல் தோன்றியது; அவர் திரும்பிப் பார்த்தார். நந்தவனத்துத் தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு இரண்டு பேர் விரைந்து வந்து, "ஐயா! சீக்கிரமாக வாருங்கள். தங்களுக்கு இலை போட்டு உணவு பரிமாறப்பட்டுத் தயாராக இருக்கிறது. தங்களைத் தேடி நாங்கள் எங்கெல்லாம் சுற்றி அலைவது?" என்று அழைத்தார்கள்.

மதுரைச் சாமியாருக்குத் தன் காதில் விழுவது நிசமா பொய்யா என்று ஒருகணம் சந்தேகம் தோன்றியது. 'தனக்காக எங்கெல்லாமோ! சுற்றி அலைந்து வருகிறார்களாமே! என்ன இது!' என்று ஆச்சரியத்தில் அவர் இருவரையும் ஒருகணம் உற்று நோக்கினார். அவர்கள் மிகவும் பணிவான குரலில், "ஆமாம் ஐயா, தங்களுக்காகத்தான் நாங்கள் சுற்றி

வருகிறோம். தாங்கள் தானே காஞ்சி மடத்திலிருந்து வந்த சாமியார். அரசர் தங்களுக்காகத்தான் வெகு நேரம் காத்திருக்கிறார். தாங்கள் உணவருந்திய பிறகுதான் அவர் சாப்பிட வேண்டுமாம்" என்று கூறினார்கள்.

மதுரைச் சாமியாராகிய மதுரை மன்னர், "வந்தது வரட்டும்" என்று அவர்களைப் பின் தொடர்ந்து நந்தவனத் தோட்டத்து வழியாக அரண்மனையிலுள்ள சமையல் அறைக்குள் விரைந்து சென்றார்.

# 41. அரசரும் ஆண்டியும்

அரண்மனைச் சமையல் அறை என்றால் அதுவே ஒரு சிறு மாளிகை போல் இருக்கும். சமையல் அறையை ஒட்டி நீண்ட தாழ்வாரம், அதிலிருந்து தனியே ஒரு பாதை ஒரு சிறு மண்டபத்திற்குச் சென்றது. அந்த மண்டபம் கோயில் போல் காட்சி தந்தது. விஜயராகவர் வந்து வணங்குவதற்காகக் கட்டியிருந்த சிறு கோயில் அது. அக்கோயிலினுள் அரங்க நாதருடைய சிலை ஒன்றும், குழலூதும் கண்ணபிரானின் சிலை ஒன்றும் ருக்மணி சத்யபாமாவை அணைத்தவாறு இருக்கும் ராஜகோபாலனின் சிலை ஒன்றுமாக சிறு கோயில் போல் அது காட்சியளித்தது. அரசர் வணங்கும் அந்த இடம். தினந்தோறும் அரசர் அங்கே வணங்குவதற்குச் செல்வார். பிறகுதான் உணவருந்துவார். உண்பதற்கு முன்பாக நான்கைந்து பேர்களுக்காகவது தன் கையாலேயே சாப்பாடு போடுவார்.

அந்தச் செய்தி கேட்டவுடன் நூற்றுக்கணக்கான பேர்களுக்குத் தஞ்சையில் வெவ்வேறு இடங்களில் சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவர்களெல்லாம் சாப்பிடுகிறார்கள் என்று தெரிந்த பிறகுதான் விஜயராகவர் இலையில் உட்காருவார்.

தன் கையால் பரிமாறுவதற்குத் தக்க ஆட்கள் கிடைக்கவில்லை என்றால் அன்று பூராவும் அவர் பட்டினிதான். இப்படி நேர்ந்துவிடக் கூடாதே; மறுநாள், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் வேள்வியின் போது மன்னர் முதல் நாளே களைப்படைந்து விட்டாரென்றால் மிகவும் சங்கடமென்பதை உணர்ந்த அவரது அந்தரங்கக் காரியதரிசிகள் எப்படியாவது நான்கைந்து பாகவத உத்தமர்களை அழைத்து வருவதற்காக வெளியே அலைந்தனர். அன்று தஞ்சையிலிருந்த நிலையில் நூற்றுக்கணக்கான பேர்களைக் கூட அழைத்து வந்து விடலாம். ஆனால் வைணவ சிரோண்மணியாக, தேசாந்திரியாக இருக்க வேண்டும். அதை அறிந்துதான் மெய்க்காப்பாளர்கள் மதுரைச் சாமியாரை அழைத்து வந்தனர்.

சமையலறையின் அருகே அவருக்கு இலை போடப்பட்டிருந்தது. ஒவ்வொரு இலையிலும் சுவையான பதார்த்தங்கள் பரிமாறப் பட்டிருந்தன. ஏற்கனவே இரண்டு பேர் இலையிலே உட்கார்ந்தார்கள். மூன்றாவதாக மதுரைச் சாமியார் போய்ச் சேர்ந்தார். அவர் இலைக்குமுன் உட்கார்ந்த சிறிது நேரத்திற்குள் மற்றொரு இலைக்குப் புதியவர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அவரும் வந்து சேர்ந்தார். அவர் முன்பே மதுரைச் சாமியாருடன் தர்க்கம் செய்த காஞ்சிச் சாமியார். அவர் இலையில் உட்காரும் முன்பாகவே அவர் பார்த்த பார்வை மதுரைச் சாமியாரையே அவர் சாப்பிட்டு விடுவார் போல் தோன்றியது. தஞ்சை மன்னர் விஜயராகவர் அரச உடை ஏதும் இன்றி மிகச் சாதாரணப் பக்தன் போல் உடையணிந்து மேனி முழுவதும் திருமண் அணிந்து கொண்டு இடுப்பிலே வஸ்திரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டு மிகப் பயபக்தியுடன் அங்கே வந்தார். அந்தச் சமயம் அவரைப் பார்ப்பவர்கள், 'இவரா அரசர்?' என்று நினைக்கும்படியான தோற்றத்தில் அவர் இருந்தார். அரசர் வரும்போதே சாமியார்கள் - மதுரைச் சாமியாரை தவிர மற்றவர்கள் எழுந்து நின்றனர். மதுரைச் சாமியாருக்கு அவர் அரசர் என்று தெரியாது என்பதால் அவர் இலையின் முன்னால் உட்கார்ந்திருந்தார். காஞ்சி சாமியார் அவர் தோள் பட்டையில் இடித்து, "அரசர் வருகிறார் என்ற மரியாதை கூட இல்லாமல் இப்படி உட்கார்ந்திருப்பது உங்களுக்கே நியாயமாக் இருக்கிறதா?" என்று கேட்டார்.

மதுரைச் சாமியார் மெல்ல எழுந்தவாறு, "சாமியாருக்கு அரசனும் ஒன்றுதான், ஆண்டியும் ஒன்றுதான் என்பது உமக்குத் தெரியாது போல் இருக்கிறது. நீர் உண்மைச் சாமியாராய் இருந்தால்தானே அதெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கும். வெறும் சோற்றுச் சாமியார்!" என்று மெல்லக் கூறவும் காஞ்சி சாமியாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"யாரைப் பார்த்துப் பொய்ச் சாமியார் என்று சொல்லுகிறீர்கள்? நீர்தான் பொய்ச் சாமியார். இப்பொழுதே உம்முடைய முகமூடியைக் கழற்றி நீர் யார் என்பதை நான் இங்கே அம்பலப்படுத்தி விடுவேன் தெரியுமா?" என்று கூச்சல் போட்டார்.

மதுரைச் சாமியாருக்கு அந்த விவாதத்தை மேலும் வளர்த்த விருப்பமில்லை. ஒருவேளை தன்னைக் காஞ்சிச் சாமியார் அடையாளம் தெரிந்து வைத்திருக்கிறாரோ என்ற பயத்தில் வாயை மூடிக் கொண்டிருந்து விட்டார்.

அதற்குள் அரசரும் அங்கே வந்து அடியார்களைப் பார்த்து, 'அமுது உண்ணுங்கள்' என்று பணிவுடன் வேண்டிக் கொள்ள, அவர்கள் சாப்பிடத் தொடங்கினார்கள். மதுரைச் சாமியார் தஞ்சை அரசரைக்

கடைக் கண்ணால் பார்த்தவாறு அவர் தன்னை எங்கேயாவது அடையாளம் தெரிந்து கொண்டுவிடப் போகிறாரோ என்ற பயத்தில் ஏதோ சாப்பிடுவது போல் பாவனை செய்தாரேயொழிய மற்றவர்களைப் போல் திருப்தியாகச் சாப்பிடவில்லை. அதைக் கவனித்த விஜயராகவர், "என்ன அடிகளார், இலையில் வைத்தது எல்லாம் அப்படியே இருக்கிறது. உடல் நலம் சரியில்லையா?" என்று மிகவும் மரியாதையுடன் கேட்டார்.

அவர் பதில் சொல்லுவதற்கு முன்பாக காஞ்சிச் சாமியார் முந்திக் கொண்டு "முன்பின் இப்படிச் சாப்பிட்டிருந்தால் தானே அவருக்குத் தெரியும்" என்றார். மதுரைச் சாமியார் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார். "நல்ல வேளை நம்மை அவர் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லைதான். தெரிந்து கொண்டால் இப்படி நான் முன்பின் சாப்பிடாதவர் என்று அவர் சொல்லமாட்டார்" என்று எண்ணிக் கொண்டே வேகமாகச் சாப்பிடுவர் போல் பாவனை செய்தார்.

அவர் மனமெல்லாம் அந்த மாளிகையில் அந்தப்புரம் எங்கே இருக்கிறது என்பதை அறிவதிலேயே நாட்டம் கொண்டிருந்தது. சாப்பாடு முடிந்து அவரவர் வேலைகளைப் பார்ப்பதற்காகப் பிரிந்தனர். அரசரும் சென்று விட்டார். மதுரைச் சாமியார் திடீர் என்று சமையல் அறைக்கு அருகாமையில் இருந்த உக்ராண அறைக்குள்ளே சென்று மறைந்து கொண்டார்.

இரவு மெல்லக் கவ்வியது. அரண்மனைச் சாப்பாட்டு அறைப்பக்கம் சந்தடி குறைந்தது. உக்ராண அறையிலிருந்து அது சாத்தப்படுவதற்கு முன்பாக வெளியே வந்துவிட்ட சாமியார் இருளிலே பதுங்கிப் பதுங்கி அரண்மனைக் கூடம் தாழ்வாரம் வழியாக நடந்து ஓர் உத்தேசமாக மாடிக்குச் சென்று படிக்கட்டுகளின் வழியாக ஏறினார்.

தஞ்சை மாளிகையும் மதுரை மாளிகையைப் போன்று கட்டட அமைப்பு உடையதுதான் என்பது அவருக்குத் தெரியும். அதனால் மதுரை மாளிகையில் அந்தப்புரத்திற்குச் செல்லும் வழியை அறிந்திருந்தவராதலால் தஞ்சை மாளிகையில் அவர் செல்வது பெரும் கஷ்டமாகத் தோன்றவில்லை. அப்படி யாராவது வழியில் அவரைத் தடுத்தாலும் கையில் இளவரசியின் முத்திரை மோதிரம் இருக்கிறது. அது இல்லாவிட்டாலுங்கூட அவருடைய சடைமுடியையும் நெற்றியில் துலங்கும் திருமண்ணையும் காவி உடையையும் பார்க்கும் காவல்காரர்கள் அரசருக்கு வேண்டிய சாமியார் போல் இருக்கிறது என்று சும்மா இருந்து விடுவார்கள். அந்தத் தைரியத்துடன் மதுரைச் சாமியார் வடிவில் இருந்த சொக்கநாதர் விரைந்து மாடியிலுள்ள நீண்ட தாழ்வாரத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தார்.

ஓர் இடத்தில் அவரைக் காவல்காரர் ஒருவர் தடுத்து நிறுத்தினார். "இந்த வேளையில் எங்கே செல்கிறீர்கள்? நீங்கள் யார்?" என்று அதட்டினார். சொக்கநாதர் தாடியை உருவி விட்டுக் கொண்டு காவலனை எரித்து விடுபவர் போல் பார்த்து "உனக்குச் சொல்லித்தான் ஆகவேண்டுமோ" என்று அதட்டும் குரலில் கேட்டார். அவனும் அதற்கு மேலாக, "ஆமாம்" என்று மிகவும் உரத்த குரலில் சொல்லி விட்டு. "இப்படியெல்லாம் மிரட்டினால் நான் பயந்து விடுவேன் என்று நினைக்க வேண்டாம். எந்த வடிவத்தில் யார் வந்தாலும் அவர்களை உடனே கைது செய்யுமாறு மன்னர் உத்தரவிட்டிருக்கிறார்.' இந்த நேரத்தில் அந்தப்புரத்திற்கு வரும் நீங்கள் யார்? தக்க பதில் சொல்கிறீர்களா அல்லது என்னுடன் வந்து இன்றைய இரவை சிறைக்கொட்டடியில் கழிக்கிறீர்களா?" என்றான். மதுரைச் சாமியார் தனது நீண்ட அங்கியிலுள்ள ஒரு பையில் கையை விட்டுத் துழாவி முத்திரை மோதிரத்தை எடுத்து அவன் எதிரே நீட்டி, "இன்னும் சொல்ல வேண்டுமா நான் யார் என்று?" என அதிகாரக் குரலில் கேட்டார். காவலரும் அந்த முத்திரை மோதிரத்தை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு. "இந்த மோதிரம் உம்மிடம் எப்படி வந்தது?' என்று கேட்டான்.

"அதைப்பற்றி உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை" என்று கூறியவாறு அவனிடமிருந்த மோதிரத்தைச் சட்டென்று பறித்துக் கொண்ட சாமியார், "இப்பொழுது வழியை விடப் போகிறாயா அல்லது நான் வந்த வழியே திரும்பிச் சென்று என் வேலையை நான் கவனிக்கப் போய் விடட்டுமா? நாளை நடக்கவிருக்கும் பெரும் விழாவுக்கு இளவரசிக்கு ஒரு ரட்சை கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இங்கு வந்திருக்கிறேன். இந்த மோதிரத்தை இளவரசி முன்பே என்னிடம் கொடுத்து அவசரமான சமயத்தில் உபயோகித்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறாள். நீ என்னைத் தடுத்து அவமரியாதையாக நடத்தினாயானால் நான் இப்படியே திரும்பிப் போய்விடுகிறேன். எனக்கு என்ன? நாளைக்கு அரசர் கேட்டால் சொல்லி விடுகிறேன், நீ தடுத்து விட்டதாக" என்று அலட்சியம் மிகுந்த குரலில் கூறினார் சாமியார்.

முதலிலே மிகவும் அதட்டும் குரலில் அதிகாரம் முழுவதையும் தனது காவல் திறமையில் காட்ட முனைந்த காவற்காரன் பயந்துபோய் மறுமொழி பேசாமல், 'நமக்கென்ன?' என்று அவரைச் சும்மா விட்டதோடு இளவரசி இருக்குமிடத்தையும் சுட்டிக் காடினான்.

அந்த மாடத்திற்கும் மேலேயுள்ள சிறு மாடத்தில் இளவரசி மோகனாங்கி தன்னந் தனியாய் ஆழ்ந்த யோசனையில்

அமர்ந்திருந்தாள். தன்னருகே சாமியார் வந்து நின்ற பிறகுதான் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"யார்?" என்று அதட்டும் குரலில் கேட்கவும் அவளுக்குத் துணிவில்லை. கேட்காமல் இருக்கவும் முடியவில்லை. ஆனால், பேச்சுக்கு இடம் கொடுக்காமல் மதுரைச் சாமியார் கையிலிருந்த மோதிரத்தை அவள் முன்னால் நீட்டினார். மோகனாங்கியின் உடல் சிலிர்த்தது. தான் கமலியிடம் கொடுத்தனுப்பிய மோதிரம் வெகு விரைவில் தன்னிடமே திரும்பி வந்துவிட்டதென்றால் அவளுக்கு வியப்பு ஒரு பக்கமும் பயம் மற்றொரு பக்கமுமாகக் கலந்தன.

மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட மோகனாங்கி சாமியாரை ஏற இறங்கப் பார்த்தாள். தான் அதை அனுப்பியது மதுரைக்கு. எதிர்பார்த்ததோ மதுரை மன்னரை. ஆனால், வந்திருப்பதோ காவி உடைச் சாமியார். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும் அந்த இரவு வேளையில் கட்டுக் காவலையெல்லாம் தாண்டித் தன்னிடம் அவர் வந்திருப்பதைப் பார்த்தால் ஏதோ மிக முக்கியமான செய்தியைக் கொண்டு வந்திருக்கும் தூதுவர் போல்தான் தெரிகிறது என்ற எண்ணத்தில், "நீங்கள் மதுரையிலிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டாள். "ஆமாம்" என மெல்லத் தலையை அசைத்தார் சாமியார். "மதுரை மன்னர் அனுப்பினாரா?" என்று மீண்டும் கேட்டாள் மோகனாங்கி. சாமியார் பதில் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்தார். மோகனாங்கியின் உடல் முழுவதும் வியர்த்து விட்டது. 'சாமியார் சொல்வது உண்மையாய் இருந்தால் நான் எடுத்த காரியம் வெற்றிதான். பொய்யாய் இருந்து யாராவது இப்படி மாறுவேடத்துடன் தன்னை ஏமாற்றுவதாக வந்திருந்தாலோ என்னுடைய திட்டங்கள் யாவும் கலைந்து என்றென்றைக்கும் நான் வேதனையில் ஆழ்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். தந்தை அறிந்து விட்டால்? விரோதியின் நாட்டிற்குச் செய்தியனுப்பியதற்காகத் தன் அண்ணனுக்கு கொடுத்தது போன்ற தண்டனையை அவர் தனக்கும் கொடுக்கத் தயங்க மாட்டார். அவர் என்ன கொடுப்பது, என்னுடைய எண்ணம் ஈடேறாமல் நான் தோல்வியைக் காண வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டால் நிச்சயமாக உயிர்த் தியாகம் செய்து கொள்ள வேண்டியதுதான்' என்று உறுதியோடு மீண்டும் அவள் சாமியாரை நோக்கி, "கட்டுக் காவலை எல்லாம் தாண்டி இந்தக் கோட்டைக்குள் தாங்கள் எந்தவித அசௌகரியமும் இல்லாமல் வந்தீர்களா? ஆகாரம் ஆகிவிட்டதா? வழி நடைக்களைப்பு தங்களை மிகவும் படுத்தியிருக்குமே?" என்றெல்லாம் கேட்டவாறு சாமியார் முகபாவத்தை விழிகளிலிருந்து கண்டுபிடிக்க முயன்றாள். ஆனால், அந்த விழிகளோ இளவரசியின் இதயத்தையே ஊடுருவிச் சென்று

கொண்டிருந்தது. முதிர்ந்த சாமியாரின் விழிகளாக அவை இல்லாமல் மோகனாங்கியை முன் பிறவியிலே சந்தித்துப் பல ஆண்டுகள் உறவாடிய ஒரு பிரமை அந்தக் கண்களில் இருந்தது.

ஆயிரம் ஆயிரம் காலத்துக் காதல் காவியத்தையே தங்கள் விழிகளில் அடக்கி அதை அரங்கேற்றுவதற்காக வந்திருக்கும் பெரும் காந்த ஒளியோடு அவ்விழிகள் இயங்கின. சாமியார் மெல்ல அவளை நெருங்கினார். உள்ளத்திலே இயற்கையான உறுதி பெற்றிருந்த மோகனாங்கிகூட ஒரு நொடியில் சாமியார் தன்னை நெருங்கியவுடன் நடுங்கி, "நில்லுங்கள், அப்படியே நில்லுங்கள். நீங்கள் யார்" என்று சொல்லுவதற்கு முற்படாமல் "ஏன் என் அருகே வருகிறீர்கள்? அப்படியே நின்று கொண்டு தாங்கள் பேசலாம்" என்றாள்.

மதுரைச் சாமியாருக்குச் சிரிப்புத்தான் வந்தது. "ஏன் சிரிக்கிறீர்கள்? நான் கேட்டதற்கெல்லாம் தாங்கள் பதில் சொல்லிவிட்டு நகைத்திருக்கலாமே" என்றாள் மோகனாங்கி. இவ்வளவு நேரமாக முதியவருடைய குரலைப் போன்று மாறுபட்ட குரலில் பேசிய மதுரைச் சாமியார் இப்பொழுது இயற்கையான குரலில் மோகனாங்கியின் உள்ளத்தை நெகிழச் செய்யும் வண்ணம் அவள் மேனி எங்கும் பூதுச் சோலையை அள்ளித் தெளிக்கும் அழகிய குரலில், "கட்டுக் காவலைத் தாண்டி எதிர்ப்பு ஏதுமில்லாமல் உன் அருகே வந்து விட்டேன் மோகனாங்கி!" என்றார்.

குரலில் மாறுபாடும் பேச்சில் வித்தியாசமும் தெரிந்த மோகனாங்கிக்கு, "இது யாரோ மாறு வேடத்தில்தான் வந்து இருக்கிறார்கள்" என்று தோன்றவே, சற்று உரத்த குரலிலேயே, "போலிச் சாமியாரே! உண்மை வடிவத்தைச் சொல்லிவிடுங்கள். இளவரசியாய் இருந்தாலும் பெண் என்னும் பேதமை என்னை விட்டு இன்னும் விலகிவிடவில்லை. நான் உங்களிடம் கேட்கக் கூடாதவற்றை எல்லாம் கேட்டு ஒரு நொடியில் மனத்திலுள்ள ரகசியம் பூராவையும் வெளியிட்டு விட்டேன். ஆனால் நீங்கள் அவ்வளவு எளிதில் என்னை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடிவிட முடியும் என்று நினைத்தீர்களானால் நான் ஒரு குரல் கொடுத்தால் இப்பொழுதே காவலர்கள் உம்மைக் கட்டிப்பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்" என்று சொல்லியவள் சட்டென்று நிறுத்தி, அப்படியே தான் குரல் கொடுத்து விட்டால் - கடைசியில் நமது திட்டங்கள் இந்தச் சாமியாரால் வெளியாகிவிட்டால் - மிகவும் கவலையாக அல்லவா போய்விடும். நாளைக்குப் பெரும் விழா நடைபெற இருக்கும்போது இப்படிப்பட்ட ஒரு காரியத்தை நாம் செய்யக்கூடாது. மிகவும் தெளிவான சிந்தையோடு இவரைத் தக்க முறையில் பயன்படுத்தி நடிக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்தவளாக, "ஐயா! சாமியாரே. நீர் சாமியார் இல்லை என்பது எனக்குத் தெரிந்து

விட்டது. குரலைப் பலவிதமாக மாற்றும் நீங்கள் உருவத்தை மாற்றத் தயங்க மாட்டீர்கள். அப்படித்தானே?" என்று குரலில் கேலியுடன் கேட்டாள்.

இயற்கையான குரலில் மதுரைச் சாமியார், "இளவரசி, நான் சாமியார் இல்லைதான்" என்று சொன்னார். அவர் உடனே தனது உருவத்தைக் களைந்து மதுரை மன்னராக அவள் முன்னால் தோன்றியிருக்கலாம். அவர் அப்படிச் செய்யாததற்கு இரண்டு விதக் காரணங்கள் இருந்தன. திடீர் எனச் சாமியார் வேடத்தைக் களைந்து விட்டால் வேறு யாராவது இளவரசியைத் தேடி வருபவர்கள் தன்னைப் பார்த்துவிட்டால் இருவருக்குமே பெரும் ஆபத்து ஏற்பட்டுவிடுமே!

"துணிவுடன் இவ்விடம் வரக் கூடியவர் யாராய் இருக்க முடியும்? அதை நீ நினைத்துப் பார்த்தாயா? நீ யாரிடம் மோதிரத்தைக் கொடுத்தனுப்பினாயோ அவர் தானே இங்கு உன் எதிரே வந்து நிற்க முடியும்? அதிலே நீ கொஞ்சம் சிந்தனை செலுத்தி நல்ல முடிவுக்கு வந்து தைரியமாக இந்த நேரத்தில் இருக்க முடியவில்லையே! பேரரசரின் மகள் மனம் பேதலித்துக் காரியத்தைத் தோல்வியாக்கி விடலாமா?" என்று கேட்டார்.

மோகனாங்கியால் அவருடைய வாதத்தை ஒப்புக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவர் வாதத்தைத் தீரக் கேட்காது அவரை அங்கிருந்து விரட்டிவிட வேண்டுமென்ற எண்ணத்தில், "நான் முத்திரை மோதிரத்தை ஒருவரிடம் அனுப்பினேன். அது அவரிடம் தான் போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமென்பது என்ன நிச்சயம்? அவரிடம் சேர்ந்திருந்தால் அவர் இங்கு வரமாட்டார். மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு பதிலுக்குத் தன் மோதிரத்தைத்தான் கொடுத்து அனுப்புவாரே ஒழிய என் மோதிரத்துடனே இங்கு ஒருவர் வந்திருக்கிறார் என்றால் அவர் நிச்சயம் வழியிலே கண்டெடுத்த அல்லது மோதிரத்தைக் கொண்டு சென்றவரிடமிருந்து பறித்து வந்தவராகத்தான் இருக்க வேண்டும். அதனால் மோதிரத்தைக் காட்டியதால் மட்டும் நீங்கள் நான் எதிர் பார்த்தவராக ஆகிவிட முடியாது" என்றாள்.

மோகனாங்கியின் சாமர்த்தியமான பேச்சையும் அவ்வளவு எளிதில் அவள் யாரிடம் மயங்கிவிடக் கூடியவள் அல்லள் என்ற ஒரு செய்தியும் அவருடைய மனத்திலே மகிழ்ச்சியை அளித்தாலும் தர்க்க ரீதியாக இளவரசி இப்படியே பேசிக் கொண்டுபோனால் வந்த காரியம் கெட்டு விடுவதோடன்றித் தானும் அரண்மனைக் காவலர்களிடம் சிக்கிக் கொள்ளும்படியான ஒரு நிலை ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது? என்ற ஒரு குழப்பத்தில், "இளவரசியின் தர்க்க ரீதியான பேச்சிலே மயங்கி அதைப் பாராட்டிக் கொண்டு நிற்கும் ஒரு நிலையில் நான்

இப்பொழுது இல்லை. நீங்கள் மோதிரத்தை ஒருவரிடம் அனுப்பினீர்கள். அதை அவர் நீங்கள் அனுப்பிய இடத்திற்குக் கொண்டு சேர்க்கவில்லை என்பது உண்மைதான். அதை வழியிலேயே கண்டெடுத்து நான் கொண்டு வந்தேன் என்பதும் உண்மைதான். ஆனால், அது எனக்குச் சேர வேண்டியது என்பதால் நான் அதைத் தைரியமாகக் கொண்டு வந்து அதை அனுப்பியவரின் முன்னால் மிகத் தைரியத்துடன் நிற்கிறேன். அதே சமயம் இளவரசி எதை திரும்பவும் எதிர்பார்த்தார்களோ அதையும் கொண்டு வந்துதான் நான் நிற்கிறேன்" என்றார்.

சாமியாரின் சொல்லிலும் ஒரு கவர்ச்சி இருப்பதை அப்பொழுதுதான் மோகனாங்கி உணர்ந்து கொண்டிருந்தாலும் அவரை எளிதில் நம்பாமல், "சுற்றி வளைத்துப் பேசுவதால் நான் ஏமாந்து விடமாட்டேன் சாமியாரே! வந்த காரியம் என்ன என்பதைத் தெரிவித்து விட்டு விரைந்து நீங்கள் சென்று விடலாம். எந்தக் காவலர்களிடமும் தங்களை நான் காட்டிக் கொடுக்க மாட்டேன்".

சாமியார் சிரித்தார். "வந்த காரியத்தை உடனே தெரிவித்து விட்டு விரைந்து மறையத்தான் நான் வந்தேன். ஆனால் என்னை இவ்வளவு நேரம் நிறுத்தி வைத்திருப்பது நீதான். அதனால்தான் நான் ஒரே வார்த்தையில் வந்த காரியத்தைத் தெரிவித்துவிட்டு இதோ ஓடிவிடுகிறேன். எந்தக் காவலரும் இந்தக் காவலரைப் பிடிக்க முடியாது" என்று கூறிவிட்டுத் தனது இடையிலே மறைத்து வைத்திருந்த மோதிரத்தை எடுத்து "நீ எதிர்பார்த்தது இந்த மோதிரத்தைத் தானே?" என்றார்.

அந்த மங்கிய ஒளியிலும் அந்த மோதிரத்திலிருந்த மீன் வடிவம் மரகதப் பட்டையால் இழைக்கப்பட்டிருந்ததால் பளீரென மின்னியது. மீன் வடிவத்தைக் கண்டவுடனே மோகனாங்கிக்குத் தன் பாதங்கள் இந்தப் பூமியில் பதிந்திராது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அப்பொழுதும் அவள் சாமியார்தான் மதுரை மன்னர் என்பதை அறிந்து கொள்ளாமல் 'இந்தச் சாமியார் மூலம் மதுரை மன்னர் மோதிரத்தைக் கொடுத்தனுப்பியிருக்கிறார் என்ற எண்ணத்தில் பரபரப்புடன் சாமியாரின் கரத்தில் இருந்த அந்த மோதிரத்தைப் பறித்துக் கொள்ள முயன்று, "மதுரை மன்னர் இதன் மூலம் தனது மோதிரத்தை அனுப்பி என்னை ஏற்றுக் கொள்வதாக வாக்களித்து விட்டாரா?" என்று ஆவல் நிறைந்த குரலில் கையை ஆவேசமாகச் சாமியார் வைத்திருக்கும் மோதிரத்தை நோக்கி நீட்டியவுடன், சாமியார் மோதிரத்தை அவள் விரலிலே ஒரு நொடியில் அணிவித்து, "ஆமாம்; உன்னை ஏற்றுக் கொள்வதாக வாக்களிப்பது மட்டுமல்லை; ஏற்றுக்

கொள்ளவே வந்து விட்டார்" என்று கூறி அவளைத் தன் பக்கமாக வேகமாக இழுத்து அணைத்துக் கொண்டார்.

மோகனாங்கி நொடியிலே அவருடைய பிடியிலிருந்து விலகித் துடிக்கும் உதடுகளுடன், "போலிச் சாமியாரே, உம்மை இனி எளிதில் காவலர்களிடம் பிடித்துக் கொடுத்துவிட வேண்டியதுதான். மதுரை மன்னர் சரியான போக்கிரியாகப் பார்த்துத் தூது அனுப்பியிருக்கிறார்" என்று கோபத்துடன் சற்று விலக முயன்றவளை மீண்டும் மதுரைச் சாமியார் நெருங்கி ஏதோ கூறினார்.

அப்பொழுது கீழ்தளத்திலிருந்து மேல் மாடத்தை நோக்கிப் பலர் விரைந்து வரும் ஓசை கேட்டது.

# 42. அவள் இதயத்தில் வசிப்பவர்

சாமியார் வடிவத்தில் இருந்த சொக்கநாதர் இன்னும் மோகனாங்கியை ஏமாற்றக்கூடாது. உண்மையைச் சொல்லிவிட வேண்டுமென்ற எண்ணத்தில், "என்னை யார் என்று நீ தெரிந்து கொண்டால் நிச்சயம் இப்படியெல்லாம் வெறுக்க மாட்டாய்" என்று கூறியவரை மோகனாங்கி அலட்சியமான குரலில் முறைத்து. "இன்னும் நீங்கள் யார் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமோ? போலியின் லட்சணம் நன்றாய் முகத்தில் தெரிகிறதே" என்று எகத்தாளத்துடன் சொல்லவும், சொக்கநாதர் மெல்ல நகைத்து, தனது பொய்த்தாடியையும் மீசையையும் கழற்றிச் சற்று வெளிச்சம் வரும் பகுதியில் நிற்கவும் மோகனாங்கி வியப்புத் தாங்காமல் 'ஆஹா' என்று வாய்விட்டுக் கூவி விட்டாள்.

மேலும் அந்த இடத்தில் சொக்கநாதரால் நிற்க முடியவில்லை. ஏனெனில் கீழே எழுந்த காலடியோசை இப்பொழுது அந்த இடத்தை நெருங்கி விட்டது. தன்னை இன்னார் என்று கண்டு கொண்டால் ஆபத்து வருவது உறுதி என்ற முன் யோசனையுடன் சொக்கநாதர் தாவிக் குதித்து உயர்ந்து வளர்ந்திருந்த மரக்கிளையின் மீது ஒரே எட்டாகத் தாவி இருளில் மறைந்தார்.

"மோகனா? இப்பொழுது ஆஹா என்று கூச்சல் போட்டது நீதானே?" என்று கேட்டுக் கொண்டே மன்னர் விஜயராகவர் மற்றும் தனது பரிவாரங்கள் சிலர் சூழ அங்கே வேகமாக வந்தார். இந்நேரத்தில் தன் தந்தை அந்தப்புரத்திற்கு வருவது ஆச்சரியமில்லை என்றாலும் தான் இருக்கும் இடத்திற்கு அவர் அப்பொழுது வருவார் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. நல்ல வேளையாக மதுரை மன்னர் அங்கிருந்து போய் விட்டார். இல்லாவிட்டால் அவருக்கு என்ன நேர்ந்திருக்குமோ?

அவர் தன் அருகே இருந்தது சிறிது நேரம்தான் என்றாலும் பேதைப் பெண்ணாகிய நான் உணராமல், அரசர் என்று அறிந்து கொள்ளாமல் அவர் போலிச்சாமியார் என்ற எண்ணத்தில் பல பல அவதூறுகளைப் பேசி அவர் மனம் புண்படும்படிச் செய்து விட்டேனே, ஒரு கணம் அந்தப் பொய்த்தாடியை அகற்றியவுடன் விளக்கு வெளிச்சத்தில் அந்த முகத்தில் தெரிந்த அழகையும் வீரத்தையும் இனி எப்பொழுது காணப் போகிறோம் என்ற மனவேதனையுடன் தன் எதிரே தந்தை கோபத்துடன், கேள்விகள் கேட்டுக் கொண்டு நிற்பதற்குப் பதில் ஒன்றும் சரிவரச் சொல்ல இயலாதவளாய் ஏதோ ஒன்றைக் கண்டு பயந்து நடுங்கினவள் போல் திக் பிரமை கொண்டு வெறித்த போக்குடன் நின்றாள். "மோகனா, என்ன இப்படிப் பயந்தவள் போல் நிற்கிறாயே, 'ஆஹா' என்று அலறினாயே. இங்கு யார் வந்தார்கள்?" என்று மன்னர் கேட்டார். மோகனாங்கி 'யாரும் இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். "பின் ஏன் அப்படிக் கூவினாய்" என்று அரசர் கேட்டதற்கு அவள் பதில் சொல்வதற்குள், அரசர் அருகே இருந்த வெங்கண்ணா, "அதுதான் நான் சொன்னேனே அந்தச் சாமியாரின் உருவத்தைக் கண்டு அவள் பயந்திருக்கிறாள்" என்றார். அருகே இருந்தவர், "நான் எச்சரித்தது உண்மையாகி விடவில்லையா? அந்தச் சாமியாரை நான் ஊர் எல்லையிலிருந்தே தொடர்ந்து வருகிறேன். அவர் போலிச் சாமியார் என்பது எனக்கு ஆரம்பத்திலேயே தெரிந்து விட்டது" என்றார் காஞ்சி சாமியார். தான் ஏதோ பெரிதாகக் கண்டுபிடித்தவர் போல் முகத்தில் பெருமை குதித்தோடப் பேசினார். விஜயராகவருக்கு முன் இருந்த பல அவசர வேலைகளாலும் காலை முதல் இடைவிடாத பணிகளால் ஏற்பட்ட களைப்பினாலும் எரிச்சல் மிகுந்தவராய் அவர்களைத் திரும்பிப் பார்த்து எரித்து விடுபவர்போல், "நீங்கள் சும்மா இருங்கள். பிரமை அடைந்தது என் மகள் அன்று, நீங்கள்தான்" என்றார். மோகனாங்கிக்குச் சற்றுத் தைரியம் வந்தது. இனி அவள் தந்தை கேட்கும் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்வதற்குச் சித்தமாய் இருந்தாள். அதற்கு அறிகுறியாகத் தந்தையை நோக்கி, "நீங்கள் என்னப்பா கேட்கிறீர்கள்? நீங்கள் எல்லாருமாக என்னைக் கேள்வி கேட்பதற்காகவே வந்திருக்கிறீர்களா? அந்தப்புரத்திற்குள் இவ்வளவு பேரை ஆடம்பரமாக அழைத்து வந்த காரணம் எனக்குத் தெரியவில்லையே. அதுவும் வேண்ள என்னவென்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை" என்று மோகனாங்கி சற்றுக் கடுமையாகக் கூறவும், விஜயராகவர் மகள் சொல்வது சரிதான் என்ற எண்ணத்தில் சற்றுக் குரலைத் தாழ்த்தி, "அதற்கில்லை குழந்தாய்! இங்கு யாரோ விரோதி நாட்டினன் ஒருவன் வந்து ஒளிந்து கொண்டிருக்கிறான் என்ற செய்தி எனக்கு எட்டியது. அதனால்தான் நானே விரைந்து வந்தேன்" என்றார்.

"நீங்கள் வந்தது சரி. உண்மையும் உண்டு. ஆனால் ராயசத்தையும் மற்றும் பலரையும் அழைத்து வந்ததன் நோக்கம் என்ன?" என்று மன்னர் பதில் சொல்ல முடியாத கேள்வி ஒன்றை வீசினான். விஜயராகவர் பதில் சொல்லாமல் வெங்கண்ணாவின் பக்கம் திரும்பி, 'போகலாம்' என்பதற்கு அடையாளமாக ஜாடை காட்டினார். வெங்கண்ணாவிற்கு அரை மனதுதான். கையும் களவுமாக ஒரு முக்கியமானவரைப் பிடித்துவிட வேண்டுமென்ற உறுதியுடன் வந்தவருக்கு இப்படி ஓர் ஏமாற்றம் காத்திருக்கும் என எண்ண முடியவில்லை. மதுரை மன்னர் மாறுவேடத்திலிருக்கும் செய்தி வெங்கண்ணாவை மாலை வெகு நேரம் கழித்துத்தான் எட்டியது. தஞ்சையின் எல்லைக்குள் மதுரை அரசர் மாற்று உருவில் வந்து இருக்கிறார் என்றால் அவரை எளிதில் பிடித்து அரசர் முன் நிறுத் தினால் இரண்டு விதத்தில் தனக்கு நன்மை உண்டு என்று வெங்கண்ணா எண்ணினார். தன் மீது சமீபகாலமாக சந்தேகம் கொண்டிருக்கும் விஜயராகவர் மனத்தில் விரோதியைப் பிடித்துக் கொடுத்தோம் என்ற எண்ணம் வீழ்ந்தால் தன்மீது நன்னம்பிக்கை ஏற்படும். அந்த நன்னம்பிக்கை மூலம் எனக்குச் சாதகமாகப் பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்பது ஒன்று. இரண்டாவதாகத் 'தான் வெகு நாள்களாகத் திட்டமிட்டிருக்கும் தஞ்சை நாட்டின் பிரதானிப் பதவிக்கு அநுகூலம் ஏற்படும். செஞ்சி நாயக்கர் மனத்திலும் பெரும் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டுமென்றால் மதுரை நாயக்கரை வெகு எளிதில் ஒழிக்கும் திட்டத்தில் தான் முன் நின்ற செய்தி அவருக்கு எட்டுவதுதான். இப்படியாக வெங்கண்ணா தன் மனத்திற்குள் திட்டமிட்டு மன்னரையும் வற்புறுத்தி அந்தப்புரத்திற்கு வேகமாக அழைத்து வந்தார். அங்கே யாரையும் காணாமல் திகைத்ததோடன்றி மன்னரால் வெகு சுலபமாக அந்த இடத்தைவிட்டுப் போகுமாறு உத்தரவும் பெற்றபடியால் மனவேதனை கொண்டார். அந்த வேதனை அவரிடம் உற்சாகத்தைக் குறைத்து விடவில்லை. அவருடைய உள்ளத்திலே மேலும் கொடிய புயலை வளர்த்தது. வெஞ்சினத் தீயை கொழுந்துவிட்டு எரியுமாறு செய்தது. அவர் படிக்கட்டுகளின் வழியாக இறங்கிக் கொண்டே, "நாம், அவனைச் சும்மா விட்டுவிடக் கூடாது. இங்கு எங்கேயோதான் அவன் ஒளிந்திருப்பான். அல்லது அந்தப்புர மாளிகையைத் தாண்டி வெகுதூரம் அவன் சென்றிருக்க முடியாது. அதனால் நாலா புறமும் உடனே பாருங்கள்" என்று உத்தரவிட்டார்.

படிக்கட்டுகளின் வழியாக இறங்கி மாளிகை வெளி முற்றத்திற்கு வரும்பொழுது அங்கே காவித்துணியும், சடை முடியும், கமண்டலமும் சிதறிக் கிடந்ததைக் கண்டார். உடனே அவர் உற்சாகம் கொண்டவராய், "சீக்கிரமாகப் பாருங்கள். போலிச் சாமியார் தன் சடையையும் உதறிவிட்டு இங்கு எங்கோதான் உயிர் தப்புவதற்காக

ஒளிந்து கொண்டிருக்கிறான். சற்று பிரயாசைப்பட்டால் கையும் களவுமாகப் பிடித்து விடலாம்" என்று உத்தரவிட்டார். அவர் உத்தரவிட்ட குரல் மோகனாங்கியின் செவியிலே வீழ்ந்தது. "அப்பாடா! அவர் இன்னும் அகப்படவில்லை" என்று தனக்குள் சொல்லிப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். ஆனால் விஜயராகவர் அந்த இடத்தைவிட்டு உடனே போய்விட முடியவில்லை. காலைச் சூரியன் உதிக்கும் முன்பாகவே அரச சபா மண்டபத்திலே அரச தம்பதிகளுக்கு மங்கள நீராட்டு வைபவத்திற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை அவர் அறிவார். அந்த மங்களத் திருமுழுக்குக்கு அரசர் மகளும் உடனிருத்தல் அவசியம் என்று அரண்மனைப் புரோகிதர் சற்று முன்புதான் அறிவித்தார். அதனால் மோகனாங்கியை அப்பொழுதே தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லும் நோக்கத்துடன், "மோகனாங்கி இப்பொழுதே என்னுடன் என் மாளிகைக்கு வந்துவிடு" என்றார். மோகனாங்கி எதற்காகத் தன் தந்தை கூப்பிட்டார் என்பதை அறியாமல், "ஏன் திடீர் என்று இந்த நேரத்தில் என்னை அழைக்கிறீர்கள்? தாங்கள் ஏதோ மனத்திலே வேறுவித சந்தேகத்துடன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்கள்" என்றாள்.

"எனக்குச் சந்தேகம் ஏதும் இல்லை மோகனாங்கி. இருந்ததெல்லாம் நீங்கி விட்டது. ஆனால் சற்று முன்பு மதுரை மன்னரே மாறுவேடத்தில் இங்கே வந்திருப்பதாகத் தகவல் கிடைத்தபடியால் ஓடிவந்தேன்" என்றார்.

மோகனாங்கி மெல்ல நகைத்து, "மதுரை மன்னர் சபா மண்டபத்திற்கு வராமல் அந்தப்புரத்திற்கு ஓடி வருகிறார் என்று தங்களுக்கு யார் சொன்னார்கள்?" என்று கேட்டாள். மகளுடைய சாதுர்யமான கேள்வியை உணர்ந்த விஜயராகவர் அவள் கேள்விக்குச் சளைக்காமல், "வீரராய் இருந்தால் சபா மண்டபத்திற்கு வருவார். கோழையும் மோழையும் குறுக்கு வழியில் தானே வருவார்கள். பதுங்கி வந்தப் பூனையைப் பிடித்துக் கூண்டிலே அடைத்துவிட்டால் அவர்களுடைய வீர பரம்பரை லட்சணம் உலகுக்குத் தெரிந்துவிடும் அல்லவா?" என்றார்.

"ஒரு நாட்டு மன்னர் வந்தால் இப்படித்தான் நீங்கள் வரவேற்பீர்களா?" என்று கேட்டாள் மோகனாங்கி.

"நட்புரிமையுடன் கூடிய மன்னர் வந்தால் கோலாகலத்துடன்-பெரும் மரியாதையுடன் வரவேற்போம். மேலும் வருகிற மன்னரும் தனக்குத் தக்க மரியாதை செய்ய வேண்டும்மென்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் மதுரை மன்னருக்குத் துணிவு கிடையாது. அந்தப் பரம்பரையே குற்றம் புரியும் எண்ணத்துடன் கூடிய பரம்பரை. கோழை உள்ளம்

படைத்தவர்கள். நேருக்கு நேர் நின்று ஏதும் பேசமாட்டார்கள். குறுக்கு வழியிலே அரியணை ஏறியது போல் மற்றவர்களுடைய செயலிலும் தங்களுடைய குறுக்கு வழிகளைக் காட்டியே தங்களை உயர்த்திக் கொண்டு போக முயலுவார்கள். அதனால்தான் அவர்களுடைய குறுகிய எண்ணத்தை முறியடிப்பதற்காக நான் என்றுமே அவர்களை மதித்ததில்லை. மதிப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களை வளரவிடவே கூடாது என்ற எண்ணத்திலே தான் தீவிரமாக இறங்கியிருக்கிறேன்" என்று சற்றுக் கடுமையாகவே பேசினார்.

மோகனாங்கிக்குத் தந்தையின் பேச்சிலே வருத்தம் மிகுந்துதான் இருந்தது. இருந்தாலும் மன்னரது கோபத்தைத் தணிப்பதற்கு அது தருணம் இல்லை என்பதை அறிந்து கொண்ட அவள், மேலும் மதுரை மன்னரைப் பற்றிப் பேசினால் அவர் சீற்றத்தை வளர்ப்பது போலாகும் என்பதைப் புரிந்து கொண்டதால் பேச்சை வேறு பக்கம் திருப்ப விரும்பி, "நாளைக்குப் பெரிய யாகம் நடத்தப் போகிறீர்களாமே. திடீரென என்ன விசேஷம் அப்பா" என்று மகள் தந்தையைக் கேட்கும் உரிமையில் கொஞ்சலான மொழிகளுடன் கேட்டாள். "எல்லாம் உனக்காகத்தான் மோகனாங்கி, உன்னுடைய சௌக்கியத்திற்காகத்தான் நான் இந்த வேள்வியைச் செய்கிறேன். பொருள் என்று பாராமல் நான் செய்யும் இந்த வேள்வியால் உனக்குச் சகல சௌபாக்கியங்களும் உண்டாக வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம்" என்றார்.

மோகனாங்கி மெல்லச் சிரித்தபடி, "இப்பொழுது எனக்குச் சௌகரியத்தில் என்ன குறைவு நேர்ந்துவிட்டது தந்தையே?" என்று கேட்டாள்.

"கடவுள் அருளால் எந்தக் குறையும் இல்லைதான். ஆனால் தக்க மணாளனைத் தேர்ந்தெடுத்து உனக்கு மணம் புரிவிக்கும் எனது கடமையை நிறைவேற்றுவதற்கான காலம் தள்ளிக்கொண்டே போகிறதே என்ற ஒரே ஒரு குறைதான். என்னுடைய மனத்தில் உனக்கு நல்ல மணாளன் அமைய வேண்டுமென்றால் அதற்குத் தெய்வானுகூலம் வேண்டாமா? அதைப் பெறுவதற்காகத்தான் இந்த யாகம்" என்று அரசர் உணர்ச்சி நிறைந்த குரலில் கூறினார்.

மோகனா இங்குதான் அவசரப்பட்டு பேசிவிட்டாள். "வல்லத்து ராணி எனக்கு வரன் பார்க்கிறார்கள். தங்களுடைய அபிமானத்தைப் பெற்ற ரங்கராஜம்மாளும் சந்திரகிரியிலிருந்து மாப்பிளை தேடிக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். இந்த நாட்டிலே செல்வாக்கு மிகுந்த கந்ததேவன் தந் மகனை எப்படியாவது அரச குடும்பத்தில் சம்பந்தப்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார். ஆனால் ஒருவராவது என்னுடைய இதயத்திலிருப்பதை உணர்ந்து கொள்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேயில்லை.

என்னுடைய இதயப்படி நடப்பதற்காக ஏதாவது வேள்வி உண்டென்றால், அதற்காக ஆயிரம் ஆயிரம் பொன் செலவழித்து யாகம் செய்யுங்களேன்" என்றாள் மோகனாங்கி.

கந்ததேவனுடைய பெயரை அவள் உச்சரித்தவுடன் விஜயராகவரின் உள்ளத்திலே சீற்றம் பொங்கியது. கந்ததேவனுக்கு மகன் இருக்கிறான் என்றும், தன் மகனுக்கு மோகனாங்கியை மணம் புரிவிக்க விரும்புகிறான் என்றும், தன் மகளுக்கும் தெரிந்திருக்கிறது என்றால் இதில் ஏதோ உள்ளர்த்தமும் இருக்கிறது என்ற முடிவுக்கு அவர் உடனே வந்துவிட்டார். அதைப் பிறகு அறிந்துகொள்ள அவர் முயன்றிருக்கலாம். அவருடைய முன் கோபம் அப்படிச் செய்யவிடவில்லை. அவர் திடீரென்று தன் மகளை நோக்கி, "பலர் பேசிக்கொண்டது என் காதிலே வீழ்ந்ததை நான் நம்பவில்லை. அந்தத் திருடனின் மகன் அடிக்கடி அந்தப்புரத்திற்கு வருகிறான் என்ற செய்தி கேட்டபொழுது கூட நான் நம்பவில்லை. ஆனால் அதை ஊர்ஜிதப்படுத்தும் வகையிலே இப்பொழுது நீ நடந்து கொண்டு விட்டாய். உனக்கும் அந்தக் கள்ளன் மகனுக்கும் என்ன தொடர்பு? அதைச் சொல்லாவிட்டால் இப்பொழுதே இந்த வாளால் உன்னை இரண்டு துண்டாக வெட்டிவிடுவேன்." என்று சீறியவராக உடைவாளை உருவினார்.

மோகனாங்கி ஒரு கணம் தந்தையின் கோபத்தைக் கண்டு திடுக்கிட்டாள் என்றாலும் அபாண்டமாகத் தன் தந்தை சொல்வதைக் கண்ட அவளும் பொங்கி எழுந்தாள். "பரம வைஷ்ணவ பக்தரான தங்களுடைய மகளைப் பார்த்து ஓர் அரசர் கேட்கும் கேள்வியா இது? ஆனால் நீங்கள் அரசர், நான் தங்களுடைய மகள். நீதி தவறாத அரசர் நீங்கள் ; சிறு குற்றம் செய்த தன் மகனையே கடும் சிறையில் தள்ளிய நீங்கள், எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயங்க மாட்டீர்கள். ஆனால் அதை மிகக் களிப்புடன் ஏற்றுக் கொள்ளவும் நான் தயங்க மாட்டேன். அதனால் நான் கேட்க வேண்டியதை அரசர் என்ற முறையில் இல்லாவிடினும், தந்தை என்ற முறையில் தங்களைக் கேட்கிறேன். கள்வர் மகனை யார் பார்த்தார்கள்? தங்களுடைய திருச் சகோதரி பெரு முயற்சி எடுத்துக் கொண்டு எப்படியாவது என்னை அவனுக்கு மணம் புரிவித்து விட வேண்டு மென்று திட்டம் தீட்டிக் கொண்டிருப்பது ஒன்றுதான் நான் அறிந்தது. அவன் முகத்தை நான் அறியேன். இப்படி ஓர் அபாண்டமான வார்த்தையைத் தீர ஆலோசியாமல் வந்து கேட்டுவிடுபவர் சாதாரண தந்தை என்றால் சரி, ஆனால் தாங்கள் அரசர். தாங்கள் இப்படிக் கேட்பது தகவே தகாது. இந்த இடத்திலே நீதி வந்து நின்று தங்களை மறைமுகமாகவாவது கேள்வி கேட்கும்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினாள். விஜயராகவர் ஒரு கணம் அயர்ந்துவிட்டார். தன்

மகளுடைய சாதுர்யமான பேச்சையும் நிதானத்தையும் வரம்பு மீறிப் போகாமல் சொற்களைக் கையாண்டதையும் கண்டு அவருக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம் ஏற்பட்டாலும் மறுபக்கம் மகள் இவ்வளவு தைரியமாகத் தன்னைக் கேள்வி கேட்கும் அளவுக்குத் துணிந்து விட்டாளே என்ற வருத்தமும் ஏற்படத்தான் செய்தது. அதே சமயம் தன்னுடைய சகோதரி வல்லத்திலிருந்துகொண்டு செய்யும் விரோதமான காரியங்களை மேலும் உணர்ஜிதப்படுத்திக்கொண்டு யாகம் முடிந்தவுடன் தன் சகோதரியின் கொட்டத்தை அடக்குவதற்காக ஏதாவது வழி செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். பிறகு தன் மகளுடைய மனத்தில் ஏற்பட்டிருக்கும் சிறு ஐயப்பாட்டை மாற்றுவதற்காக குழைவு நிறைந்த குரலில், "மகளே! ஒரு நொடியில் நான் என் நிதானத்தை இழந்துவிட்டேன். நாள் முழுவதும் ஏற்பட்ட வேலைப் பளுவினால் உண்டான குழப்பமும் தளர்ச்சி காரணமாக ஏற்பட்ட அசதியும் என்னைத் திமிர் என்று கோபம் கொள்ள செய்துவிட்டன. கள்ளன் மகன் மீது உனக்குக் காதல் இல்லை என்றால் அது எனக்கு மகிழ்ச்சிதான். தஞ்சை நாட்டு உயர்ந்த பரம்பரையை நான் ஒரு நாளும் வீழ்ந்துபோக விடவே மாட்டேன். என்னுடைய உயர் குடியினரின் நல்ல குணமும் நல்ல ரத்தமும் உள்ள உனக்கு நல்ல பரம்பரையைக் கொண்ட அரச மகனைத் தான் தேர்ந்தெடுத்து மணம் புரிவேனேயொழிய நான் எந்தவிதக் கட்டுப்பாட்டிற்கும் கட்டுப்பட்டு விடமாட்டேன்" என்றார்.

"உங்களுடைய எண்ணத்தையே இதுவரை சொல்லி வந்தீர்கள். ஆனால் என் இதயத்தை ஒரு கணமாவது தெரிந்து கொள்ள வேண்டாமா? நற்குடியில் பிறந்தவர் என்றாலும் பெண்ணுக்கு மணமகன் பிடித்தவனா என்பதைக் கவனிக்க வேண்டாமா? அந்தக் காலத்தில் அரசகுலத்துத் திருமணங்கள் எல்லாம் சுயம்வரமாகவும் காந்தர்வ விவாகமாகவும் ஏன் நடத்தி வந்தார்கள் என்பது தங்களுக்குத் தெரியாதா? ஒரு பெண்ணுக்கு அவள் இதயம் நிறைந்த கணவன்தான் முக்கியமேயன்றி வேறெதும் இல்லை" என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாகப் பேசினாள். விஜயராகவர் மேலும் அந்த இடத்தில் பேச்சை வளர்த்த விரும்பாமல், "அப்படியென்றால் நீ உன் இதயத்தில் முன்பே யாரையாவது தேர்ந்தெடுத்து விட்டாயா?" என்று அவசர அவசரமாகக் கேள்வி ஒன்றை வீசினார். இயற்கையிலேயே புத்தி சாதுர்யமுடைய மோகனாவும் அந்தக் கேள்விக்கு ஏதும் பதில் சொல்லியிருக்க வேண்டாம். பதில் சொல்லாமல், தன் தந்தையைப் பரபரப்பிலும் ஆர்வத்திலும் வைத்திருந்துப் பிறகு சொல்லியிருக்கலாம். அதனால் ஒருவேளை காரியத்தை நிறைவேற்றிக் கொண்டு வெற்றி அடைந்திருக்கலாம். ஆனால் மோகனாங்கி அவ்வாறு அமைதி கொள்ளாமல் அவசரப்பட்டு விட்டாள். தன் இதயம் கவர்ந்த

மணாளனைப் பற்றி அவள் சொல்லி விட்டாள். இதய பீடத்திலே வைத்துப் பூஜை செய்யும் அந்த மதுரை மன்னரைப் பற்றி அவள் சொன்னபோது விஜயராகவருக்குத் தன்னைச் சுற்றியுள்ள அனைத்தும் - அண்டமே படீர் என்று வெடித்து விட்டது போல் தோன்றியது.

# 43. இரு முடிவுகள்

தஞ்சை மன்னர் விஜயராகவர் மட்டுமென்ன? வேறு யாராய் இருந்தாலும் தன் விரோதி ஒருவர் மீது தன் மகள் காதல் கொண்டு விட்டாள் என்பதை அறியும் பொழுது கோபம் வரத்தான் செய்யும். சீற்றம் பொங்கி வழியும். ஆத்திரத்தில் உறவு முறைகள் என்பதைக் கூட புரிந்து கொள்ளாமல் ஆத்திரம் மதியை மறைத்துவிடும். விஜயராகவர் அரசராய் இருந்தாலும் மனித குணத்திற்கு அப்பாற்பட்டவர் அல்லர். அவர் தன் மகள் கூறிய வார்த்தையைக் கேட்டவுடன் பொங்கி எழுந்தார். மிகவும் உயிருக்குயிராகத் தன் மகளை அவர் முழுவதும் நம்பியிருந்தும்கூட விரோதியை அவள் காதலிக்கிறாள் என்பதைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர் உள்ளம் எரிமலையாக ஆகிவிட்டது.

"முடியாது, முடியவே முடியாது. ஒரு நாளும் எனக்குப் பிடிக்காத ஒருவரை நீ மணந்து கொள்ளச் சம்மதிக்கவே மாட்டேன். அதனால் இந்த நாடே போனாலும் சரி, அரச உரிமையை இழக்கக்கூடிய சந்தர்ப்பம் வந்தாலும் சரி, மதுரையிலுள்ள வேலைக்காரனை என் கௌரவத்திற்கு மாறாக மணம் புரிந்து கொடுக்கச் சம்மதிக்க மாட்டேன்" என்று சீறினார்.

மோகனாங்கி தன் தந்தைக்குக் கோபம் வரும் என்பதை அறிவாள். ஆனால், மதுரை மன்னரை வேலைக்காரன் என்று கேவலமாகப் பேசுவதுதான் அவளுக்குப் புரியவில்லை. கோபத்திற்கும் ஓர் எல்லையுண்டு. அவதூறு சொல்வதற்கும் ஓர் வரம்பு உண்டு. தனக்கு ஒப்பான ஒரு மன்னரை வேலைக்காரன் என்று இழிவாகச் சொல்கிறாரே என்றுதான் வருத்தப்பட்டாள். அதைப்பற்றி மட்டும் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு விரும்பினாள். ஆனால் அவள் துணிந்து, "உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் அதற்காக வேலைக்காரன் என்று அவரை அவமரியாதையாக ஏன் சொல்கிறீர்கள்? என்னதான் இருந்தாலும் நம் நாட்டைப் போன்று சம அந்தஸ்துடைய நாடு அல்லவா மதுரை?" என்று மெல்லக் கேட்டாள் மோகனாங்கி. விஜயராகவர் ஏளனமாகச் சிரித்தார். "நமக்குச் சமதையாகவோ நம்மைவிட மேலாகவோ இருக்கும் நாடாய் இருந்திருந்தால் நான் உன்னுடைய விருப்பத்தை நிச்சயம் நிறைவேற்றியிருப்பேன். ஆனால் மதுரை மகுடத்தை ஏற்றிருப்பவர்களைப் பற்றி நான் என்றுமே மதித்தது

கிடையாது. அவர்கள் சாதாரணமானவர்கள். வேலைக்காரர்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள். நம் அந்தஸ்து என்ன? நம்முடைய குல கௌரவம் என்ன? அதையெல்லாம் விட்டுவிட்டு ஏதோ சந்தர்ப்ப வசத்தால் அவசரப்பட்டு ஏதோ ஒரு பரம்பரையில் வந்தவருக்கு உன்னை மணம் புரிந்து கொடுக்க மாட்டேன். அதை விட நீ கன்னியாகவே காலம் கழிக்கலாம்" என்றார் விஜயராகவர்.

தந்தை மேலும் மேலும் மதுரை மன்னரை வேலைக்காரர் பரம்பரை என்று சொல்வதிலேயே ஏதோ உள்ளர்த்தம் இருக்க வேண்டுமென்று எண்ணிய மோகனாங்கி, அதைப் பற்றி அப்பொழுது தன் தந்தையைக் கேட்க விரும்பாமல், "அப்படியேதான் வேலைக்காரராக இருக்கட்டுமே அப்பா. உங்களுடைய மகளின் மனத்திற்குப் பிடித்தவரென்றால் அவருக்கு மணம் புரிந்து கொடுப்பதிலே உங்களுக்கு என்ன தடை?" என்று மோகனாங்கி கேட்டாள்.

விஜயராகவர் சற்றுக் கோபம் தணிந்தவராய், "உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் என்றுமே எனக்கு மகிழ்ச்சி உண்டு. நீ இந்த நாட்டில் ஒரு கொடியவனை விரும்பியிருந்தால் கூட அவனை இளவரசனாக்கி உன்னை மணந்து கொள்ளுமாறு செய்துவிடுவேன். அல்லது வேறு ஒரு நாட்டுச் சாதாரணப் பிரஜையாக இருந்தாலும் கவலைப்பட மாட்டேன். ஆனால், மதுரை நாடு - என்னுடைய ஜென்ம விரோதி நாடு. நமது முன்னோர்கள் ஒரு தடவை இங்கிருந்து பெண்ணைக் கொடுத்துவிட்டு அதனால் எவ்வளவு வேதனைக்கு உள்ளானார்கள் என்ற கதை உனக்குத் தெரியாது. அதை நான் சொன்னேன் என்றால் நீ வேதனைப் பட்டு உன்னுடைய முடிவைக்கூட மாற்றிக் கொள்வாய். மதுரை அரசர்கள் தஞ்சையிலிருந்து எடுத்த பெண்ணை அவமரியாதை மட்டும் செய்யவில்லை. கொன்றே விட்டார்கள். அவர்கள் கொலைக்காரப் பரம்பரையினர். அந்த இடத்தில் சம்பந்தம் கொள்ளுமாறு சொல்கிறாயே. இந்த விஜயராகவன் உடலில் சுயமரியாதை ரத்தம் - விஜயநகர பரம்பரையின் கம்பீரமான ராஜரீக ரத்தம் - ஓடும் வரையில் ஒருநாளும் கொலைகாரர்களுக்குச் சம்பந்தப்பட ஒப்புக் கொள்ள மாட்டேன். அவர்கள் வேலைக் காரர்களாக இருந்தாலும் பரவாயில்லை. கொலைகாரர்களான பரம்பரையை எனது மருமகனாக வரித்துக் கொள்ள விடமாட்டேன். கடைசியாகச் சொல்கிறேன் மோகனாங்கி, உன்னுடைய நன்மைக்காக உன்னுடைய வருங்காலம் செழிப்பாக இருப்பதற்காக பெரும் யாகம் செய்யும் உனது தந்தை ஒரு நாளும் சமமற்ற குலத்தோடு தொடர்பு கொள்ள விடமாட்டேன். இன்றே நீ அதை மறந்து விடலாம்" என்றார். பிறகு தொடர்ந்து, "உண்மையைச் சொல். மதுரை மன்னர் இங்கே வந்தாரா? இந்த அந்தப்புரத்திலே மாறு வேடம் போட்டுக் கொண்டு

சுற்றினாரா? உன்னைச் சந்தித்தாரா? அவன் உன்னிடம் என்ன ரகசியம் சொல்லிப் போனான். இரவோடு இரவாக தூக்கிச் சென்று விடுவதாகச் சொன்னானா? அல்லது ரகசியமாக உன்னைப் புறப்பட்டு வந்துவிடுமாறு யோசனை கூறினாரா? சொல், சொல் மகளே சொல்! உடனே சொல். வெங்கண்ணா கூறியது யாவும் உண்மையாகப் போய்விட்டது அல்லவா? அந்த நள்ளிரவில் அந்தத் துரோகி எங்கிருந்தாலும் இழுத்து வருமாறு கட்டளையிடுகிறேன். என் கையாலேயே அவனுக்கு மரணதண்டனை அளிக்கிறேன்" என்றார்.

மோகனாங்கி மெல்ல சிரித்தாள். "அப்பா, தங்கள் உள்ளத்திற்குள்ளே இவ்வளவு கடூரம் மறைந்திருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. மகள் மீது உயிருக்குயிராய் இருப்பதாகப் பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். எனது விருப்பப்படியே திருமணம் செய்து வைப்பதாகவும் உறுதியளித்திருக்கிறீர்கள். ஆனால், என் மனத்திலே குடி கொண்டுவிட்ட மணாளனைப் பற்றிச் சொன்னவுடன் குதித்தெழுகிறீர்கள். இந்த மதுரை மன்னர் செய்த தவறுதான் என்ன? அவரது பரம்பரை அடிமைப் பரம்பரையாக இருக்கலாம். அவரது முன்னோர் ஒருவர் குலப்பெண்ணைக் கொலை செய்திருக்கலாம். அதற்காக இப்பொழுதுள்ள உத்தமர் எவ்வாறு பொறுப்பேற்க முடியும்? நான் உண்மையில் சொல்கிறேன். மதுரை மன்னரை நேரே பார்த்தறியேன். பேசி அறியேன். தெய்வீக உணர்ச்சியோடு ஏற்பட்ட காதல் என்றுதான் என்னால் சொல்ல முடியும் தந்தையே. மதுரை மன்னர் அந்தப்புரத்திற்கு வந்தார். ஆம்; என் அருகே வந்தார். என்னுடன் பேசினார். ஆனால் அவர் இன்னார் என்று கண்டுபிடிக்கும் முன்னமே மறைந்து விட்டார். இதயத்திலே நான் போற்றி வளர்த்த உருவத்தை நேரிடையே கண்டபொழுது கேட்க வேண்டிய கேள்விகளை எல்லாம் - பேச வேண்டிய பேச்சுக்களை எல்லாம் கேட்காமல் பேசாமல் விட்டுவிட்டேன். யாரென அறியாமல் அந்தப்புரத்திற்குள் தவறாக நுழைந்துவிட்ட கொடியவன் என்றுகூட அவரைக் கடுமையாகப் பேசி விட்டேன். அவ்வளவுதான் நடந்தது. அவர் மனம் வைத்திருந்தால் என்னை நெருங்கி இருக்கலாம். என்னைக் கரம் தொட்டிருக்கலாம். நான் தப்பித்துப் போவதற்கான வழியைச் சொல்லி இருக்கலாம். அல்லது உடனே என்னை அழைத்துப் போய், மதுரையிலே மணம் புரிந்து கொள்வதற்கான திட்டத்தைத் தீட்டி இருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. மாறுவேடத்தில் வந்தார். என் உள்ளத்தை அறிந்தார். போய் விட்டார். அவரை என்னால் எப்படி மறக்க முடியும்?" என்று உணர்ச்சிப் பொங்கக் கூறினாள்.

விஜயராகவருடைய சீற்றம் மேலும் வளர்ந்தது. "அவனை மறக்க முடியாது என்ற சொல்லை நீ மீண்டும் சொல்வாயானால் நான்

கடைசியாக ஒருமுறை உன்னை எச்சரிக்க வேண்டித்தான் உள்ளது! என்னுடைய திடசித்தம் உனக்குத் தெரியும். மகள் என்று பாராமல் என்ன தண்டனை விதிப்பேன் என்று உனக்குத் தெரியும். இப்பொழுதே அந்தத் தண்டனையை விதிக்கவும் என்னால் முடியும். ஆனால் நாளைப் பொழுது விடிந்தால் நடக்கவிருக்கும் கோலாகலமான திருவிழாவின் போது அசம்பாவிதம் ஏதும் நடப்பதற்கு நான் விரும்பவில்லை. உனக்கு ஒரு நாள் அவகாசம் கொடுக்கிறேன். நீ அவனை மறந்து விடு. இதுவரையில் உன்னை நான் சந்தித்ததாகவோ கடும் உத்தரவு போட்டுள்ளதாகவோ நீ என்னுடைய விருப்பத்திற்கு மீறிப் பேசியதாகவோ நான் நினைக்கவே மாட்டேன். நாளை மறுநாள் உன்னை நான் அழைப்பேன். அப்பொழுது நீ 'அவனை மறந்துவிட்டேன்' என்று சொல்ல வேண்டும். அவ்வளவுதான்" என்று கூறிவிட்டு மகளுடைய மறுமொழியைக் கூடக் கேட்காமல் விஜயராகவர் 'மள மள'வென்று மாடியினின்று இறங்கிப் போய் விட்டார். அவர் செல்வதற்காகக் காத்திருந்தது போல் தலைமுதல் கால் வரையில் போர்வையால் போர்த்திக் கொண்டு ஓர் உருவம் உடனே "மோகனா" என்று அழைத்துக் கொண்டே அவள் அருகே வந்தது. இவ்வளவு நேரம் விஜயராகவர் பேசியவற்றையெல்லாம் அவ்வுருவம் கேட்டுக் கொண்டுதான் இருந்திருக்க வேண்டும். அந்த குரலுக்கு உடையவர் யார் என்பதை மோகனா எளிதில் உணர்ந்து கொண்டாள். அவளுக்கு மேலும் துக்கமும் துயரமும் அதிகரித்தனவேயொழிய வாஞ்சையுடன் அக்குரலுக்குடையவர் அழைத்தது கண்டு அவள் சமாதானம் அடையவில்லை.

# 44. கனியும் கன்னியும்

மோகனா பதில் ஏதும் பேசாமல் தனது இருப்பிடத்தை நோக்கிச் சென்றாள். அவளைப் பின் தொடர்ந்து தான் அணிந்திருந்த போர்வையைக் களைந்துவிட்டு அவ்வுருவம் பின்தொடர்ந்தது. அந்த நடையிலிருந்தே அவ்வுருவம் வல்லத்து ராணி ரங்கமாதேவி என்பதை அறிவது கஷ்டமன்று. மோகனாவிடம் இவ்வளவு சீக்கிரம் மனமாற்றம் ஏற்படும் என்று ரங்கமாதேவி நினைக்கவில்லை. தன்னுடைய திட்டத்திற்கும் யோசனைகளுக்கும் அவள் செவிசாய்த்து நடப்பாள் என்று அவள் எண்ணியிருந்தது போகத் தான் கூப்பிட்ட குரலுக்குக் கூட பதில் பேசாமல் அவள் செல்வது ரங்கமாதேவிக்கு வேதனையை அளித்தது. அவள் தன்னை அலட்சியப்படுத்துகிறாள் என்பது கூட அவளுக்குத் தெரிந்தது. ஆனால் அதற்காகச் சோர்ந்து விடாமல் மோகனாவைப் பின் தொடர்ந்து சென்று அவள் அருகே மஞ்சத்தில்

அமர்ந்தாள். மங்கிய தீபவொளி நிறைந்த அந்த அறையில் மோகனாவின் முகத்தையே சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரங்கமாதேவியைப் பார்க்க மோகனாவுக்கு அருவருப்பாக இருந்தது. சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் முகவாய்க் கட்டையை மெல்லப் பிடித்துத் தன் பக்கம் திருப்பிய ரங்கமாதேவி, "என் மேல் கோபமா மோகனா?" என்று கேட்டாள்.

மோகனா ஒன்றும் பதில் சொல்லவில்லை. "உன் தந்தை பேசிக் கொண்டிருந்தவற்றையெல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். கள்ளங்கபடமற்ற உனது இதயத்தில் மதுரை நாட்டு அரசர் எப்பொழுது புகுந்து கொண்டார் மோகனா?" என்று கேட்டாள் ரங்கமாதேவி. மோகனா ஒன்றுக்கும் பதில் சொல்லவில்லை. "என்னிடம் நீ வல்லத்துக்கு வந்து கொண்டிருந்த வரையில் உன் மனம் சலனமற்றிருந்தது. பிறகு எப்படியோ இந்த வெள்ளை உள்ளத்தை யாரோ மயக்கியிருக்கிறார்கள். எட்டாத கனிக்கு நீ ஆசைப்படலாமா? அதனால் உன் மனம் வேதனை அடைவதோடு வாழ்க்கையும் பாழாகி விடுமே" என்றாள் ரங்கமாதேவி, மோகனாவுக்கு ஆத்திரமாகத்தான் இருந்தது. முகத்தில் கொடூரத்தை வரவழைத்துக் கொண்டு "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள் அத்தை? எட்டும் கனியோ எட்டாத கனியோ நான் ஆசைப்பட்டு விட்டேன். அடைந்தால் அக்கனியை அடைவேன். இல்லாவிட்டால், கன்னியாகவே காலங் கழிக்கத் தவறமாட்டேன்" என்றாள்.

ரங்கமாதேவி விஷமச் சிரிப்புடன், "அப்பாடா! எப்படியெல்லாம் பேசக் கற்றுக் கொண்டு விட்டாய்? நான் நடக்கப் போவதையே சொல்கிறேன். உன்னை விட எனக்கு எவ்வளவு வயது அதிகம். உலக அநுபவத்தைக் கண்ட நான் சொல்வது உனக்குக் கசப்பாய் இருக்கலாம்" என்றாள்.

"உங்கள் அநுபவம் என் விஷயத்தில் வெற்றி அடையாது அத்தை. தயவு செய்து என்னைத் தனியே விட்டு விட்டுப் போக மாட்டீர்களா? இவ்வளவு நேரம் என் தந்தை என் மனத்தை மிகவும் வேதனைப்படுத்தி விட்டார். நீங்கள் மேலும் அதில் நெய்யை வார்ப்பதற்காகவா வந்திருக்கிறீர்கள்?" என்று வேதனையுடன் கேட்டாள். ரங்கமாதேவி பேச்சைச் சற்று மாற்ற விரும்பிய அவள் தலையை மெல்லக் கோதிய வண்ணம், "மோகனாங்கி நீ வல்லம் கோட்டைக்கு வந்து கொண்டிருந்த நாட்களை எல்லாம் நினைத்துப் பார். எவ்வளவு இன்பமாக அந்தப் பொழுதெல்லாம் கழிந்தன. உன் மனத்திலும் எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த நாள் மீண்டும் வராதா என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றாள். மோகனாவும்

கோபத்துடன், "ஆமாம்; எனக்குக் கூட அமைதியான நாட்கள் வராதா என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அதற்காகத் தங்களுடைய பேச்சைக் கேட்டு வேதனைப்படுவதற்கு எனக்குப் பிரியமில்லை - நீங்கள் இப்போது எதற்காக வந்தீர்கள்? நீங்கள் வந்தது என் தந்தைக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் இப்படி ரகசியமாக இங்கு வருவது சரியல்ல என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனெனில், என்னைப் பார்ப்பதற்காக யார் வருகிறார்கள் என்று கட்டுக்காவல் அதிகமாகத்தான் இருக்கிறது. ஒரு வேளை தங்களைத் தவறாக எண்ணி அரண்மனைக் காவலர்கள் வந்து கைது செய்து போனால் ஆச்சரியப் படமாட்டேன். இப்படியெல்லாம் நேராமல் இருப்பதற்காகத் தயவு செய்து என்னைவிட்டு நீங்கள் போய்விடுவதுதான் நல்லது என்று நினைக்கிறேன்" என்றாள்.

ரங்கமாதேவி நகைத்தாள். "என்னைச் சிறைப்படுத்துவதற்கு இந்த அரண்மனையில் உள்ள பெரும் தளபதிக்குக் கூட தைரியம் உண்டா? நான் இப்பொழுது மனம் வைத்தால் உனது தந்தையைச் சிறையில் தள்ளி விட முடியும் என்பது உனக்கு நான் சொல்ல வேண்டுமா? இந்த நாடும், இந்த நாட்டுக்குள் உள்ள உரிமையும் என்னைச் சார்ந்தது என்பது நினைவிருக்கட்டும். நான் இப்பொழுது குரல் எழுப்பினால் உனது தந்தையும் உனது தாயும் சிறையிலேதான் வாடுவார்கள். நான் அதைப் பற்றிக் கேட்பதற்காகத்தான் உன் தந்தையிடம் வந்தேன். கோலாகலமாக விழா நடத்துகிறாராம். சொந்தச் சகோதரிக்கு அழைப்புக் கிடையாது. யாருடைய பணத்தை எடுத்து யாகம் செய்கிறான்? யார் உத்தரவின் மீது செய்கிறான். இந்த யாகம் நடக்கிறதா என்று நான் பார்க்கிறேன். அத்தகைய ஒரு தைரியமும் அதிகாரமும் என்னிடம் இருக்கும்பொழுது நீ என்னைப் பார்த்துச் சொல்கிறாய், 'இங்கிருந்து போய் விடு' என்று. நான் உன்னுடைய நன்மைகளைக் கருதி - உன்னுடைய வருங்காலத்து வாழ்க்கையைக் கருதி எவ்வளவோ திட்டங்கள் வைத்திருக்கிறேன். இப்பொழுதுகூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. நீ சந்தனத்தேவனை மணப்பதாக வாக்குக் கொடு. உனக்கு இருக்கும் சஞ்சலத்தையெல்லாம் ஒரு நொடியில் போக்கிவிட்டு நாளையே பெரும் திருவிழா போல் கல்யாணம் நடக்குமாறு செய்கிறேன். அடிமை அரசரை விட சந்தனத்தேவன் எந்தத் தகுதியிலேயும் குறைந்தவன் அல்லன். என்ன சொல்கிறாய் மோகனா?" என்று ரங்கமாதேவி கேட்டவுடன் மோகனா உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து துள்ளி எழுந்துச் சீற்றத்துடன், "இப்பொழுது இங்கிருந்து போகப் போகிறீர்களா இல்லையா? என் கலங்கிய உள்ளம் பொங்கிப் பாயும் முன்பாகப் போய் விடுங்கள். என் வேதனை இதயம் வெடித்துச் சிதறி உங்கள் மீது பழி தீர்த்துக்

கொள்வதற்கு முன்பாகப் போய் விடுங்கள் - நான் யாரையும் மணக்கப் போவதில்லை. மணந்தால் மதுரை மன்னரை. இல்லையெனில் கன்னியாகவே காலத்தைக் கழித்து விடுகிறேன். அதில் யாருக்கும் சங்கடமில்லை அல்லவா? தயவு செய்து என்னை அமைதியாக விட்டுவிட்டுப் போய் விடுங்கள்" என்றாள்.

மோகனாங்கி துள்ளி எழுந்த வேகமும், அவள் அழுத்தம் திருத்தமாகப் பேசிய பேச்சும் ரங்கமாதேவியைக் கூட ஒரு கணம் திகைக்க வைத்தன. தனது வார்த்தைக்கு இனி மோகனா மதிப்புக் கொடுக்க மாட்டாள் என்று ரங்கமாதேவி புரிந்து கொண்டு விட்டாள். அதனால் அவள் இருப்பிடத்தை விட்டு எழுந்து, "நீ இன்னும் சிறிய பெண்தான் - வல்லத்து இளவரசி என்ற பட்டத்திற்குச் சற்றும் தகுதி இல்லாதவள். என்னுடைய பேச்சைக் கேட்டு அதன்படி நடக்கச் சம்மதித்தால் நீ இந்த நாட்டில் இளவரசியாக வாழலாம். இல்லாவிடில் உன்னுடைய குடும்பத்திற்கு நேரும் கதிதான் உனக்கும் நேரப் போகிறது. நான் கந்ததேவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி வைக்கா விட்டால் கந்ததேவனே இந்த நாட்டை அழித்து விடுவான். அதனால் உனக்கு இன்னும் ஒருநாள் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் நீ நன்றாக யோசித்துச் சொல். நீ இந்த நாட்டின் அரசியாக வேண்டுமா? அல்லது அல்லலுற்று எங்கோ ஓர் இருட்டறையில் வாழ வேண்டுமா? அந்த முடிவை உன்னிடமே விட்டு விடுகிறேன். நீ நன்றாக யோசித்து முடிவைச் சொல்" என்று கூறி ரங்கமாதேவி திரும்பிக்கூட பாராமல் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள். மோகனாங்கிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. தந்தையும் அத்தையும் ஒருநாள் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஒரு நாளிலே நான் மீண்டும் மதுரை மன்னரைச் சந்தித்து அவரிடம் தெரிவித்து மதுரைக்கே சென்றுவிடக் கூடாதா என்று எண்ணிச் சோர்வுற்றவளாய் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

# 45. பெண் கேட்டுத் தூது

மதுரைக்குச் சொக்கநாத நாயக்கர் அவ்வளவு விரைவில் தஞ்சையிலிருந்து திரும்பி வந்து விடுவார் என்று பிரதானியும் மற்றும் மந்திரி மண்டலத்தாரும் எதிர்பார்க்கவில்லை. அவர் மாறுவேடம் பூண்டு தஞ்சைக்குப் போகும்போது அவரைத் தடுக்க எண்ணியும் அவர்களால் முடியவில்லை. அரசருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடப் போகிறதே என்று மன்னர் அறியா வண்ணம் பலரை வெவ்வேறு உருவில் அவருக்குத் துணையாக அனுப்பியிருந்தார் பிரதானி. ஆனால் அவர்கள் கூட அறியாமல் சொக்கநாதர் மதுரைக்குத் திரும்பி

வந்துவிட்டார். திரும்பி வரும்பொழுது சொக்கநாதர் உள்ளத்தில் உவகை ததும்பி இருந்தாலும் அதேபோல், ஒரு வஞ்சினமும் சூழ்ந்திருந்தது. எப்படியாவது மோகனாங்கியைத் தஞ்சையிலிருந்து அழைத்து வந்துவிட வேண்டுமென்னும் துடிப்பு அவரிடம் இருந்தது. ஒவ்வொரு கணமும் அவளுடனே இருக்க வேண்டுமெனும் அந்தரங்க ஆசையானது அவரது மற்ற எண்ணங்களைத் துரிதப்படுத்தி இயங்கச் செய்தது. மோகனாங்கியின் உள்ளத்தை அவர் அறிந்து விட்டார். ஆனால், அவளது பெற்றோர்கள் ஒருநாளும் தனக்கு மணம் புரிந்து கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது அவருக்குப் புரிந்து விட்டது. என்றாலும் முறைப்படி பெண் கேட்டுத் தூது அனுப்புவது தான் சிறந்தது என்ற எண்ணத்தில் அவர் மதுரையை வந்து அடைந்த உடனேயே பிரதானியை அழைத்து வருமாறு சொல்லியனுப்பினார்.

அரசர் அழைத்தவுடன் விரைந்து வந்த பிரதானியும், மன்னர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். இன்னும் முதிராத முகம், அனுபவ ரேகைகள் இன்னும் படராத முகம், ஆனால் அந்தக் கண்களில் உள்ள கூர்மையும் துடிக்கும் உதடுகளில் எவ்வளவோ கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டி மறைந்திருக்கும் ஆற்றலும் பிரதானியை ஒருகணம் திகைக்க வைத்தன. தஞ்சை போய் வந்த செய்தி என்ன ஆகியது என்று அவர் கேட்பதற்கு முன்பாகவே சொக்கநாதர் புன்சிரிப்புடன் பிரதானியை நோக்கி, "நாளைக்கு நீங்கள் தஞ்சைக்குப் பயணம் செல்லுகிறீர்கள்" என்றார்.

'ஏன்' என்று கேட்பது முறையல்ல. ஆதலால் பிரதானி அப்படிக் கேட்காமல் மன்னர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார் கேள்விக் குறியுடன். "தக்க மரியாதையுடன் தஞ்சை மன்னரை நீங்கள் சென்று காண வேண்டும்" என்று ஆரம்பித்த அரசருடைய வார்த்தையில் ததும்பி நிற்கும் ஆர்வத்தை முழுவதும் அறிந்து கொள்ளாத பிரதானி, "தக்க மரியாதையுடன் என்றால் நீங்கள் சொல்லுவதை நான் சிவேடையாக எடுத்துக் கொள்ளலாமா? நாலுவகை சைன்னியங்களுடனும் படைக்கலங்களுடன் செல்லட்டுமா?" என்று உதட்டில் விஷமச் சிரிப்புத் ததும்பக் கேட்டார்.

• • •

"அதற்கும் ஒருவேளை பிறகு சந்தர்ப்பம் நேரலாம். அவர்களையும் ஆயத்தமாக இருக்குமாறு சொல்லி விட்டு, நீங்கள் சீர்வரிசைகளுடன் தஞ்சை மன்னர் விஜயராகவரை அணுகுங்கள். நமது கடல் துறையில் சமீபத்தில் மூழ்கி எடுத்த ஆணி முத்து ஒன்றையும் அரசருக்குப் பரிசாக எடுத்துச் செல்லுங்கள்" என்றார் அரசர்.

"பரிசாகவா?" என்று பிரதானி வியப்புடன் கேட்டார்.

"ஆமாம், ஆணி முத்தைப் போன்ற அழகிய பெண்ணுக்கு அதைப் பரிசமாகக் கொடுப்பதற்காக!" என்றார் சொக்கநாதர்.

அரசருடைய அந்தரங்க உள்ளத்தைச் சிறப்பாக உணர்ந்து விட்ட பிரதானி அவரது ஆசையைக் கலைக்க விரும்பாமல் "நீங்கள் போய் வந்த காரியம் என்னவாகியது?" என்று கேட்டார்.

"நான் போய் வந்ததனால்தான் சொல்கிறேன், உங்களைத் தக்க மரியாதையுடன் தஞ்சை அரசரைச் சென்று அணுகுமாறு. மதுரை மன்னர் யாருக்கும் தலை வணங்கியதில்லை. மதுரை மன்னரது சாதாரண சேவகர் கூட மாற்றானிடம் கைகட்டி நிற்கும் வழக்கம் இதுவரையில் இல்லை. ஆனால், தங்களைத் தஞ்சை அரசரிடம் சீர் வரிசைகளுடன் மிகவும் பணிவுடன் அனுப்புகிறேன் என்றால் அந்தத் தஞ்சைபுரி மோகினி வல்லத்து இளவரசி என் உள்ளத்திலே ஏற்படுத்திவிட்ட புயலின் வேகம் தாங்காமல்தான். எனக்காகத் தாங்கள் தஞ்சை மன்னரிடம் சென்று பெண் கேட்க வேண்டும்" என்றார்.

அரசரின் குரலில் இருந்த குழைவையும் இதயபூர்வமான அவரது வேண்டுகோளையும் கேட்ட பிரதானிக்கு உள்ளமே நெகிழ்ந்து விட்டது. தன்னைத் தந்தையின் இடத்தில் வைத்துத் தான் அரசர் பேசுகிறார் என்பது அவருக்குத் தெரியும். தானே முன் நின்று தக்க பெண்ணைப் பார்த்து அவருக்கு மணம் முடித்து மதுரைக்கு ஒரு ராணியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கடமை இருக்கும் பொழுது அரசர் வேண்டிக் கொள்ளும் வரையில் காத்திருப்பதே தவறு என்ற எண்ணத்துடன் தனக்கு முழுச்சம்மதம் என்பதைத் தெரிவிக்கும் வகையில் மெல்லத் தலையை அசைத்தார். அவரது முகத்தையே கூர்ந்து உள்ளத்திலிருப்பதை அறிவது போல் பார்த்துக் கொண்டிருந்த சொக்கநாதர்,, "தஞ்சைக்கு நீங்கள் சென்றவுடன் உங்களுக்கு மிக அமோகமான வரவேற்பு இருக்கும் என்று நினைத்துவிட வேண்டாம். மதுரையிலிருந்து நீங்கள் வருவதாகக் கேள்விப்பட்டவுடனே எவ்வளவு வித அவமானங்கள் உண்டோ அவ்வளவும் அங்குக் காத்திருக்கும். எனக்காக அவற்றைப் பொருட்படுத்தாது. தஞ்சை மன்னரை நேரடியே சந்தித்துப் பரிசுப் பொருள்களை எல்லாம் அவரிடம் அளித்து என் சார்பிலே அவர் மகளைப் பெண் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள். நாம் முறைப்படி காரியங்கள் செய்வதுதான் நல்லது" என்றார்.

பிரதானி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "நீங்கள் தஞ்சைக்குச் சென்றீர்களே, தங்களை இன்னார் என்று கண்டு கொண்டு விட்டார்களா?" என்று மெல்ல நடந்த காரியத்தைப் பூராவாக அறியும் வகையில் கேட்டார் பிரதானி.

மதுரை மன்னர் நடந்தது நடந்தபடியே எல்லாவற்றையும் கூறி, "நான் அதிக நேரம் தஞ்சையில் இளவரசியுடன் தங்கியிருக்க முடியவில்லை. அவள் ஆசையை மட்டும் நான் ஒரு நொடியில் அறிந்தேனேயன்றி என் இதய எண்ணங்களை இளவரசியிடம் தெரிவிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் சந்தித்த அந்த ஒரு கணநேரமும் எனது இதயத்தில் எவ்வளவோ மாறுதல்களை ஏற்படுத்தி விட்டன. ஒருகணம் கூட அவள் இன்றி நான் இருக்க முடியாது எனும் ஒரு பெரும் ஆர்வத்தைத் தூண்டி விட்டது. தஞ்சை மன்னரும் தன் பெண்ணுக்கு வரன் மதுரையில் இருக்கிறார் என்பதை மறந்து போய் வேறு இடம் தேட முனைந்திருக்கலாம். ஆனால், ஏனோ அவருக்கு நான் கண்ணில்படவில்லை. நாங்கள் எல்லோரும் ஒரே தேசம்தான். ஆதியில் விஜய நகரிலிருந்து வந்த இரண்டு மரபுகளும் வெவ்வேறு ஊரிலே ஆட்சிபுரியத் தொடங்கியதால் வெவ்வேறு குலத்தவராகவும், மதத்தினராகவும் ஆகிவிடுவோம் என்று சொல்லிவிட முடியுமா? அதனால் நெருங்கிய கிளை மரபினரான நாங்கள் ஒருவருக்கொருவர் பெண் கொடுத்துப் பெண் வாங்குவது எவ்வளவு பொருத்தமானது. அதை ஏன் விஜயராகவர் உணரவில்லையென்பது எனக்குத் தெரியவில்லை. தஞ்சையிலே கோலாகலமாகப் பெரும்விழா இந்த நேரத்திலே நடந்து முடிந்திருக்கும். பல நாடுகளிலிருந்து அரச பிரதானிகளும், கலைஞர்களும் அங்கே கூடி இருந்திருப்பர். ஆனால், நமக்கு மட்டும் அழைப்பு இல்லை. இவையெல்லாம் அவமரியாதையின் சின்னம்தான் என்றாலும், தஞ்சையிலே தேவதை போல் அந்தப்புரத்தில் ஒயிலாக உலவிவரும் அந்த இளம் மானை நான் முதன்முதலில் சித்திரவடிவில் கண்டதிலிருந்து பிறகு சிங்கார வடிவில் நேரிடையே கண்டபிறகு என்னால் ஒருகணமும் அவளை அடையாமல் இருக்க முடியாது எனும் உறுதிக்கு வந்துவிட்டேன். இப்பொழுது நாம் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். பெண் கேட்டுத் தஞ்சைக்குச் செல்வது ஒன்றுதான். தங்களுக்கு உள்ள சிரமங்களையோ ஏற்படப் போகும் தொல்லைகளையோ பொருட்படுத்தாமல் சொல்வீர்கள் என்று நினைக்கிறேன்" என்று சொக்கநாதர் கூறியவுடன் பிரதானியின் கண்கள் கலங்கின.

மறுபேச்சுப் பேசாமல் தஞ்சைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமானார். அவர் சிறிது நேரம் கழித்து வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டு மன்னரிடம் விடைபெறுவதற்காக வந்தபோது தஞ்சையிலிருந்து வந்த ஒற்றன் கொண்டு வந்த செய்தி மன்னருடைய கலக்கத்தை அதிகப்படுத்தியது. மதுரையினின்று தஞ்சைக்கு அரச சேவை செய்வதற்காகப் புறப்பட்ட இளம் வீரன் முத்துக்குமரன் தஞ்சைக்கு அருகேயுள்ள இடத்தில் படுகாயமுற்றுக் கிடந்ததாயும்

அவனுக்கு அவசரம் அவசரமாக முதலுதவி செய்து ஒரு வண்டியிலே கிடத்தி போட்டு மதுரையை நோக்கிக் கொண்டு வருகிறார்கள் என்றும் அந்த ஒற்றன் சொன்ன செய்தி கேட்டு மன்னரின் கண்கள் கலங்கின. முத்துக்குமரனுக்குத் தீங்கு செய்திருப்பவர்கள் நிச்சயமாக தஞ்சை அரண்மனையைச் சார்ந்தவர்களாய்த்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் பிரதானியை அருகே அழைத்து, "தாங்கள் பெண் கேட்டு முடிந்தவுடன் மன்னருடைய முகத்தைக் காணுங்கள், அதிலே ஓரளவு அதிருப்தி ஏற்பட்டால்கூட, தாங்கள் அஞ்சாமல், 'போர் முனையில் சந்திப்பதாக'க் கூறிவிட்டு வந்து விடுங்கள்" என்று கூறவும் பிரதானி அதையும் ஆமோதிப்பவர் போல் ஏற்றுக் கொண்டார்.

தஞ்சையின் கோலாகலமான யாகம் முடிந்து இரண்டு தினங்கள் கழித்து மதுரையினின்று புறப்பட்ட பிரதானியின் சீர்வரிசை யாத்திரை தஞ்சை கோட்டைக்குள் நுழைந்தது. மீன்கொடி பிடித்த மதுரை வீரன் முன் செல்ல, போர் வீரர்களோடு பிரதானி கம்பீர நடையுடன் பின்வர, பணியாட்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்குப் பரிசுப் பொருள்களைச் சுமந்து வர, தஞ்சை வீதியிலே அந்த ஊர்வலக் காட்சி மக்கள் எல்லோரையும் கவர்ந்தது. பரபரப்பை அளித்தது. 'மதுரை மன்னர் தஞ்சை மன்னருக்குச் சீர் அனுப்பி இருக்கிறாராம். அது எதற்காகவோ?' என்ற ஐயம் ஒவ்வொருவரிடமும் எழுந்து நகரமெங்கும் அதுவே பேச்சாக மாறியது.

# 46. பெண்ணா போரா?

காலையிலிருந்தே இளவரசி மோகனாங்கிக்கு இன்ப வேதனையும் துன்ப நினைவுகளுமாக மாறி மாறி எழுந்து இதயத்தில் புரியமுடியாத ஓர் உணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. வழக்கத்திற்கு விரோதமாக அவள் நீராடுவதற்குச் செல்லவில்லை. ஆடை அலங்காரங்கள் செய்விக்கும் பணிப்பெண்கள் பலமுறை அவளைத் தேடி அவளுடைய இருப்பிடத்திற்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். இளவரசியின் அந்தரங்கத் தோழியான கமலி இல்லாததால் அவளை அணுகி அவளுடைய விருப்பம் என்ன என்று கேட்பதற்கான துணிவு ஒருவருக்கும் ஏற்படவில்லை. மோகனாங்கிக்குத் தெரியும் தன்னை அழைப்பதற்காகப் பலமுறை பாங்கிமார்கள் வந்துத் திரும்பிச் செல்கிறார்கள் என்று.

கோலாகலமாக நடந்த தஞ்சை விழாவில்கூட மோகனாங்கி உற்சாகமாகக் கலந்து கொள்ளவில்லை. தந்தையும் தாயாரும் தங்கத்தால் செய்யப்பட்ட பெரும் பசுவின் வயிற்றுக்குள் புகுந்து சிறிது

நேரம் அமர்ந்திருந்துப் பிறகு வெளிவந்த காட்சியைக் கூட அவள் உற்சாகமாகப் பார்த்து ரசிக்கவில்லை. லட்சோப லட்சம் மக்கள் திரண்டு கூடியிருந்த அந்தப் பந்தலிலே பதுமையாக அவள் அரசியின் அருகே நின்றிருந்தாளேயொழிய அவளுடைய இதயம் வேதனையில் ஆழ்ந்திருந்தது. அந்த நிகழ்ச்சிகளையும் அதற்கு முதல் நாள் மதுரையிலிருந்து மாறுவேடத்தில் தன் அருகே வந்து சென்ற மன்னருடன் பேசியதையும் பிறகு தந்தை அவளுடன் தர்க்கித்துக் கடும் சொற்கள் கூறிச் சென்றதையும் அவள் கொஞ்சம் கொஞ்சமாக நினைத்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

கமலி சென்ற விஷயமும் என்னவாகியது என்று தெரியவில்லை. தான் கொடுத்தனுப்பிய மோதிரத்தை அவள் மதுரை மன்னரிடம் சேர்ப்பித்திருக்க வேண்டும். அதனால்தான் மன்னர் தன்னைத் தேடி வந்திருக்கிறார் என்று ஒரு கணம் எண்ணினாள். மதுரைக்குச் சென்ற பிறகு ஏன் உடனடியாக அவள் திரும்பவில்லை என்ற ஐயமும் அவளுக்கு இருந்தது. தன்னுடைய வருங்காலம் என்னவாகுமோ என்ற வேதனையும், வல்லத்து ராணி ரங்கமாதேவி சபதமிட்டுச் சென்ற கடும் சொற்களும் அவள் மனத்தில் பயங்கரமாக உருவெடுத்து நிழலாட்டம் போல் ஆடி வேதனையை அளித்தன. இப்படி நினைவுச் சூழலில் சிக்கியிருந்தபடியால் அவளால் அன்றாட நிகழ்ச்சிகள் எதிலும் கவனத்தைச் செலுத்த முடியாமல் இருந்தது. இப்படியாகப் பொழுது மெல்ல மெல்லக் கழிந்து கொண்டிருந்தது.

பலகணியின் மேல்புறத்தையும் கதிரவனின் கதிர்கள் தாண்டி உச்சி வேளையின் உக்கிரத்தை அளிக்கக் கதிரவன் நெருங்கிக் கொண்டிருந்தான். இப்படியே இருந்து விட்டால் மட்டும் நினைத்ததெல்லாம் நடந்து விடுமா என்ற வேதனை அவள் உள்ளத்தில் எழாமல் இல்லை. அதனால் அவள் மஞ்சத்தை விட்டெழுந்திருந்து நீராடும் இடத்தை நோக்கி நடக்கலானாள். அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பாங்கியர் மிகவும் பயபக்தியுடன் அவளைப் பின் தொடர்ந்து அவள் நீராடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யலானார்கள். சாதாரண நாட்களில் நீராடும் அந்தப் பெரும் தொட்டியில் நேரம் போவதே தெரியாமல் அமிழ்ந்துச் சில்லென்ற அந்தத் தண்ணீரை உடல் முழுவதும் வாரியிறைத்துக் கொண்டு தடாகத்திலே உள்ள மீனோ என்று நினைக்கும் வண்ணம் நீந்திக் கொண்டு அந்த இடத்தைவிட்டு வருவதற்கே மனமில்லாமல் அமிழ்ந்திருப்பாள். இன்று அவளுக்கு அந்த நீராடும் தொட்டியில் இறங்குவதற்கே ஏனோ மனம் வரவில்லை. படிக்கட்டுகளில் சிறிது நேரம் உட்கார்ந்து காலை மட்டும் தண்ணீரில் இட்டுத் தண்ணீரைக் கலக்கிக் கொண்டிருந்தாள். ஓரிரு மீன்கள்

அவளுடைய பாதத்தை மெல்ல முத்தமிட்டுச் சென்றன. நடுத் தொட்டியில் துள்ளிக் குதிக்கும் மீன்கள் மீது சூரிய கிரகணம் படும் பொழுது வெள்ளியாலான கதிர்கள் ஓர் இடத்திலிருந்து மற்ற இடத்திற்குப் பாய்வது போன்ற தோற்றம் எழுந்தது. மோகனாங்கி துள்ளும் மீனையே பார்த்தவாறு இருந்தாள். அவள் இதயமும் மீன் போல்தான் துள்ளிக் கொண்டிருந்தது.

ஒரு தோழி மட்டும் மெல்ல இளவரசி அருகே வந்து, "நேரமாகிக் கொண்டே இருக்கிறதே தேவி. எப்பொழுது நீராடி விட்டு உணவருந்தச் செல்வது?" என்று மிகவும் பயம் கலந்த குரலில் கேட்டாள். மோகனாங்கிக்குப் பசியோ தூக்கமோ எதுவும் தோன்றவில்லை. ஏன் இன்று ஒன்றுமே சாப்பிடாமல் விரதம் அனுஷ்டிக்கக் கூடாது என்ற எண்ணமும் அவள் உள்ளத்தில் தோன்றியது. "இன்று நான் ஒன்றுமே சாப்பிடப் போவதில்லை. என்னைத் தொந்தரவு செய்யாமல் தனியே விட்டுவிட்டுச் செல்லுங்கள்" என்றாள் இளவரசி. சாதுர்யம் மிகுந்த தோழி சொன்னாள்: "ஒன்றும் சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருப்பதும் நல்லதுதான். ஆனால் நீராடிவிட்டு அப்படி இருந்தால் புண்ணியத்திற்குப் புண்ணியமும் ஏற்படும். இன்று நல்ல நாள் கூட" என்று மெல்லச் சொன்னாள். மோகனாங்கிக்கு அது சரியெனப்பட்டது. ஆனால் அப்படிச் சொன்ன தோழியோ மெல்ல இளவரசியை நீராடச் செய்துவிட்டால் பிறகு அவளுக்குத் தானே பசியெடுக்கும். உணவு அருந்துமாறு செய்து விடலாம் என்ற எண்ணத்தில் அவ்வாறு சொன்னாள். இளவரசி குளிக்கும் கடமையை முடித்துக் கொண்டால் பிறகு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சாப்பிடாமல் இருந்து விரதம் அனுஷ்டித்து ஒரு புண்ணியத்தையும் சம்பாதித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தொட்டியில் இறங்கி அவசரம் அவசரமாகக் குளிக்க முயன்றாள். நீச்சல் அடித்து ஜலக்கிரீடை செய்யும் எண்ணம் அவளுக்கு இல்லை. நொடியிலே குளித்து விட்டு கூந்தலைத் துவட்ட வந்த பாங்கிமார்களை அண்டவிடாமல் தானே ஒரு சேலையினால் கட்டி முடிந்து கொண்டு மாற்று உடையைக் கூட சரிவர அணியாமல் அந்தப்புரத்தை நோக்கி விரைந்தாள். பாங்கிகளுக்கு எல்லாம் அவளுடைய அந்த நடவடிக்கை விசித்திரமாக இருந்தது. "இளவரசிக்குத் திடீரென என்ன வந்து விட்டது. இப்படி ஏதோ தோல்வி கண்டவர் போல் பெரும் அவதிக்குள்ளானவர் போல் இருக்கிறார்களே" என்று ஒருத்தி மற்றொருத்தியைக் கேட்டாள். "ஆமாம் இளவரசியைப் பொறுத்த வரையில் பெரும் தோல்விதான், அவள் எண்ணியபடி நடக்கவில்லை. அரசரோ அவளுடைய விருப்பப்படி நடக்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

பிறகு இளவரசிக்கு வேதனை ஏற்படாமல் இருக்குமா? இன்று அவள் நீராடிச் செல்வதே பெரிய காரியம்'' என்று விஷயம் முழுவதையும் அறிந்திருந்த அந்தப்புரத்துப் பாங்கி ஒருத்தி சொன்னாள். "இளவரசி கேட்டதைக்கூட செய்ய மாட்டேன் என்று அரசர் சொல்கிறாரா என்ன? தன் மகள் மீது உயிரையே வைத்திருக்கும் மன்னருக்கு அவள் கோரிக்கையை மறுப்பதற்கு என்ன நேர்ந்துவிட்டது?'' என்று மற்றொருத்தி கேட்டாள். "அதெல்லாம் பெரிய இடத்து விஷயம். நாம் இப்படிப் பேசுவது தவறு'' என்றாள் மற்றொரு பாங்கி. "நெருப்பு என்றால் வாயா வெந்துவிடும்? நாம் பேசுவதால் ஏதாவது நேர்ந்துவிடுமா?'' என்று ஒருத்தி சொன்னாள். "இப்பொழுது நீ சொல்லாவிடினும் நாளைக்கு வெளியே வராமல் இருக்கப் போவதில்லை'' - விஷயம் அறிந்த அந்தப்புரத்துத் தோழிகளிடமிருந்து மேற்கொண்டு செய்தியைக் கறப்பதாக அப்படிச் சொன்னாள்.

இதயத்திலிருப்பதை வெளியிட்டாக வேண்டுமென்ற துடிப்பில் அவள், "மன்னர் மறுப்பதற்குக் காரணமில்லாமல் இல்லை. அவர் யாரைப் பெரும் விரோதி என்று கருதுகிறாரோ அவரையே தன் மகள் மணப்பதற்கு முடிவு செய்திருக்கிறாள் என்பதைக் கேட்டவுடன் அரசருக்குக் கோபம் வராமலா இருக்கும்?'' என்றாள் அந்தப் பாங்கி

"மன்னர் அப்படித்தான் முதலில் கோபித்தார். அதோ மதுரையிலிருந்து பெண் கேட்டுப் பெரும் பரிசுகளுடன் அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்களே, அதை எப்படி அரசர் மறுத்து விடப் போகிறார்?'' என்றாள் ஒருத்தி.

"அப்படியா! மதுரையிலிருந்து பெண் கேட்டு வந்து விட்டார்களா? இளவரசி இதை அறிந்தால் மிகவும் சந்தோஷப்படுவார்களே!'' என்று கூறிய பாங்கி, இளவரசியிடம் அந்தச் செய்தியைச் சொல்வதற்காக விரைந்தாள்.

மோகனாங்கி அந்தச் செய்தியைக் கேட்டவுடன் ஓரளவுக்குக் களிப்பு அடைந்தாள் என்றுதான் எண்ண வேண்டும். மதுரை மன்னர் பெரும் அந்தஸ்தைவிட்டுப் பெண் கேட்டுத் தூது அனுப்புகிறார் என்றால் தன்மீது உள்ள காதலால்தான் என்று முடிவு செய்துகொண்ட மோகனாங்கி, தனது இஷ்ட தெய்வங்கள் அனைத்தையும் வேண்டிக் கொண்டாள். தூது வந்தவரை அரசர் மதித்து நல்ல செய்தியாகக் கூற வேண்டுமென்று - அதற்காகவே அன்று முழுவதும் எதுவுமே சாப்பிடாமல் நல்ல செய்தி கேட்ட பிறகுதான் உண்பது என்ற திடமான முடிவில் இருந்தாள். ஆனால் அவளிடம் மாலையில் செய்தி வந்து எட்டிய போது அவள் மயங்கி விழக்கூடிய நிலையைத்தான் அடைந்தாள்.

மதுரையிலிருந்து வந்த பிரதானியை நீண்ட நேரம் வரையில் அரசர் சந்திப்பதற்கு அழைக்கவில்லை. அரண்மனை முற்றத்தில் சாதாரண சேவகர்போல் நின்று கொண்டிருந்த மதுரைப் பிரதானியின் உள்ளம் எரிமலை போல் குமுறியது. ஆனால் மன்னர் கூறியிருந்த யோசனைப் படி அமைதியையே முற்றும் கடை பிடித்துக் காரியத்தை வெற்றி கரமாக முடிக்க வேண்டுமென்ற எண்ணத்தால் அவமரியாதையையும் பொருட்படுத்தாமல் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

வழக்கம் போல் விஜயராகவர் திருவரங்கத்திற்குச் சென்று ரங்கநாதரைத் தரிசித்துவிட்டு பிற்பகல் திரும்பி வந்து உணவருந்தி ஓய்வெடுத்துக் கொண்ட பிறகுதான் அவர் மதுரையிலிருந்து வந்த பிரதானியைப் பேட்டிக்கு அழைத்தார். பரிசுப் பொருள்களை விநயமாக அவரது காலடியிலேயே வைத்துவிட்டு பிரதானி தான் வந்த காரியத்தைச் சொன்னவுடன், விஜயராகவர் தனது மீசை துடிக்க, இடது காலால் தன் எதிரேயிருந்த பரிசுப் பொருள்களை யெல்லாம் எட்டி உதைத்து, "என்ன துணிவு உங்கள் மன்னருக்கு? வேலைக்காரர்களுக்கு அரச மகளை மணம் செய்து கொடுக்க சம்மதிக்கவில்லை என்று போய் சொல்லுங்கள். இந்தப் பரிசுப் பொருள்களையெல்லாம் கொடுத்து என்னை ஏமாற்ற நினைக்க வேண்டாம். என்னுடைய முடிவும் எண்ணமும் தெரிந்து கொள்ளாமல் ஒரு நாட்டை ஆண்டு கொண்டு இருக்கிறாரே உங்கள் அரசர். அவருக்குத் தக்க புத்தியை எடுத்துச் சொல்லும். அவரை எங்காவது பெண் எடுத்து மணம் புரிந்து கொள்ளச் சொல்லும்" என்று மிகக் கோபமாகக் கர்ஜித்தார்.

மதுரைப் பிரதானியின் உள்ளத்திலே ஏற்பட்ட கம்பீரத்திற்கும் அதன் விளைவாக எழுந்த கோபத்திற்கும் எல்லையே இல்லை. அந்தக் கோபத்தின் பிரதிபலிப்புப் போல் ஒரே ஒரு பதிலை மட்டும் சொல்லி விட்டு, அவர் அங்கிருந்து தன்னுடன் வந்தவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

"தூதுவன் என்ற முறையில் நான் ஏதும் உங்களுக்கு யோசனை சொல்ல விரும்பவில்லை. ஆனால், விஜயநகர ராஜ்யத்தின் நலனைக் கருதுபவன் என்ற முறையில் - பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கும் இந்த சாம்ராஜ்யத்தின் நலனைக் கருதுபவன் என்ற முறையில் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். வலியவரும் ஸ்ரீதேவியை எட்டி உதைத்து விட்டீர்கள். இதனால், ஒரு பெரும் நாயக்கர் அரச வம்சம் ஒன்று சேரும் தருணத்தை நழுவவிட்டு விட்டீர்கள். அதனால் ஏற்படப்போகும் விளைவு என்னவென்று தங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ அதை மட்டும் சொல்லிவிட்டு நான் என் கடமையை முடித்துத் திரும்புகிறேன்.

"என் அரசரை வேலைக்காரர் பரம்பரை என்று கூறி நீங்கள் அவமரியாதை செய்திருந்தும் கூட தங்கள் மகள் மீது கொண்டுவிட்ட அன்பு காரணமாகத் தங்கள் மகளை மதுரையின் அரியணையில் சரிசமமாக அமர்த்த வேண்டுமென்ற ஆசை காரணமாகத்தான் பல முறை இழைத்த இடையூறுகளையெல்லாம் மறந்து எங்களை அனுப்பினார். பெண் கேட்க, மன்னர் மீது உள்ள கோபத்தினால், உங்களுக்குக் காணிக்கையாக அளித்த பரிசுப் பொருள்களை உதைத்து மிதித்து விட்டீர்கள்.

"இதோ இங்கே சிதறிக் கிடைக்கும் பொன்னும் மணியும் போல் தங்களுடைய சாம்ராஜ்யத்தின் செல்வங்கள் எல்லாம் சிதறுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விட்டீர்கள். 'பெண் அல்லது போர்' என்பதுதான் எங்கள் மன்னரது முழக்கம். சமாதான முறையில் பெண்ணா? அல்லது சண்டை மூலம் பெண்ணா? என்று தான் நாங்கள் எல்லாம் பேசி முடிவு செய்திருக்கிறோம். அன்பாக வந்துத் தங்களை அணுகியதற்கு அவமரியாதை மூலம் பெரும் யுத்தத்தை வரவழைத்து விட்டீர்கள். தங்களுடைய நாசத்திற்குத் தாங்களே முடிவு செய்து கொள்ள வேண்டாம். இன்னும் சிறிது அவகாசம் தருவதற்கு நாங்கள் தயார். நாங்கள் கோட்டை வாயிலைத் தாண்டிச் செல்வதற்குள் நீங்கள் மனம் மாறி எங்களை அழைத்து நல்ல செய்தி சொல்லி அனுப்புங்கள்" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சபை மண்டபத்தைத் தாண்டிச் சென்றவரைப் பார்த்து விஜயராகவர் கொக்கரித்தார்.

"இங்கிருந்து கோட்டை வாயிலைத் தாண்டிச் செல்வதற்குள் என்னிடம் இருந்து வரும் செய்தி என்ன தெரியுமா? அது செய்தியாக இருக்காது. போர் முரசாக இருக்கும். நீங்கள் மதுரையை அடைவதற்குள் என்னுடைய படைகள் உங்களைப் பின் தொடர்ந்து வரும். இந்தச் செய்தியை விரைவாகச் சென்று உங்கள் மன்னரிடம் சொல்லி அவரைப் பிழைத்துச் செல்லுமாறு செய்யுங்கள்" என்றார்.

இருவர் இதயங்களிலும் அப்பொழுது 'போர் போர்' என்ற எதிரொலிதான் எழுந்தது.

## 47. ரங்கமாதேவியின் ஆத்திரம்

இளவரசி மோகனாங்கிக்குத் தஞ்சை அரண்மனையில் இருப்பதற்குப் பிடிக்கவில்லை. மதுரையிலிருந்து தூதுவர் வந்து சென்ற பிறகு விஜயராகவரின் கோபம் முன்னைவிட அதிகமாக இருந்தது. அவர் யாரிடமும் கலகலப்பாகப் பேசுவதில்லை. அப்படிப் பேசினாலும் தன் மகளுக்கு ஏற்ற வரனைத் தேடிப் பிடிப்பதைப் பற்றிய

பேச்சாகத்தான் அது இருந்தது. அதற்காக கவிரங்கராஜம்மாளைச் சந்திரகிரிக்கு விரைந்து சென்று வருமாறு அனுப்பியிருந்தார். அவளுடைய வருகையை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் உள்ளத்தில் மட்டும் ஏனோ ஒருவிதக் கலக்கம் சூடி கொண்டிருந்தது. ஆலோசனைச் சபையை அடிக்கடி கூட்டி அவர்களது யோசனைகளையும் கேட்டுக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் ராயசம் வெங்கண்ணா செய்த ஒரு துரோகம்தான் அவரைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. வெங்கண்ணா ஒரு நாள் ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் செஞ்சிக்குப் புறப்பட்டுப் போய் விட்டதாகவும் அவருடைய குடும்பத் தினரையும் நாகப்பட்டினத்திற்கு அனுப்பி விட்டதாகவும் அவருக்குச் செய்தி வந்தது. செஞ்சிக்கு அவர் போனதிலே எந்த விதச் சந்தேகமும் முதலில் அவருக்கு ஏற்படவில்லை.

ஆனாலும், செஞ்சியிலே அவர் ஏகோஜியுடன் பேசிக் கொண்டிருந்த செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த பிறகு அவர் பெரிதும் சிந்திக்க ஆரம்பித்தார். ஏகோஜி செஞ்சியைத் தன்னுடைய சொந்த நாடாக ஆக்கிக் கொள்வதற்கான சதி செய்து வருகிறார் என்ற செய்தி விஜயராகவருக்கு முன்பே எட்டியிருந்தது. இப்பொழுது அவருடன் சென்ற வெங்கண்ணா குலாவுவதில் எந்தவிதமான உள் சூழ்ச்சி இருக்கப் போகிறதோ என்னும் கவலை விஜயராகவருக்கு ஏற்பட்டது. மதுரையைத் தாக்குவது என்றால் செஞ்சிப் படைகளும் உடன் இருந்தால்தான் முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

ஆனால் சிறிது நாட்களுக்கு முன்பு செஞ்சிப் படைகளும் மதுரையிலிருந்து ஓடி வந்த பழைய தளபதியின் படைகளும் ஒன்று சேர்ந்து தாக்கித் தோல்வியுற்றுச் சின்னாபின்னமாக ஓடி வந்தன என்பதையும் அவர் அறிந்திருந்தார். அந்த நிலையில் மதுரையின் கொட்டத்தை அடக்க வேண்டுமானால் தன்னுடைய படைகள் பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும்; தனக்கும் சமயத்தில் உதவிப் படைகளும் வந்து சேர வேண்டும். இதைத்தான் விஜயராகவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். சந்திரகிரி இளவரசருடன் மணத் தொடர்பு கொண்டால் நிச்சயமாக மதுரைப் படையை முறியடிப்பதற்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றியதனால் சீக்கிரமாக ரங்கராஜம்மாவை சந்திரகிரிக்குச் சென்று வருமாறு அனுப்பினார்.

அவர் இவ்வாறெல்லாம் குழம்பிக் கொண்டிருந்தபொழுது வல்லத்திலிருந்து மீண்டும் ஒரு நாள் ரங்கமாதேவி புறப்பட்டு வந்தாள். விஜயராகவரை அவள் தனியே சந்தித்துத் தனது பழைய விரோதத்தின் தன்மைகளையெல்லாம் மறந்து அந்தரங்கமான சில விஷயங்களைப் பேச விரும்பினாள். அவளுக்கு மதுரையினின்று பெரும் படை

வரப்போகும் செய்தி முன்கூட்டியே தெரிந்து விட்டது. அதை முறியடிக்க வேண்டுமென்றால் தக்க பலம் சந்தனத்தேவனிடம்தான் இருக்கிறது என்பதை அரசருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது தன்னுடைய கடமை என்ற எண்ணத்தில் அவள் வல்லத்திலிருந்து வந்திருந்தாள். விஜயராகவர் முகம் கொடுத்து அவளை 'வா' என்று அழைக்கவில்லை. அது அவள் இதயத்தில் ஓரளவுக்குச் 'சுரீர்' எனக் குத்தினாலும் ரங்கமாதேவி அதைப் பொருட்படுத்தாமல், "என்னதான் என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையென்றாலும் தக்க சமயத்தில் உதவுவது உடன் பிறந்த எனக்கிருக்கும் உரிமை என்ற முறையில் நான் உன்னிடம் வந்திருக்கிறேன். மதுரையினின்று தஞ்சையை நோக்கிப் பெரும்படை புறப்பட்டு வரும் செய்தி முன்னதாகவே எனக்குக் கிடைத்தது. உனக்கு ஆபத்து வந்தால் அது எனக்கும்தான். நியாயமான என்னுடைய கோரிக்கைகளை எல்லாம் நீ மறுத்து எனக்குள்ள உரிமையை நீ கொடுக்கா விட்டாலும் நம் இருவருக்கும் பொதுவான ஓர் அன்புப் பிரச்சினை இருக்கிறது. அதுதான் வல்லத்து இளவரசியாகத் திகழும் மோகனாங்கியின் வாழ்க்கைப் பிரச்சனை.

"மோகனாங்கி சிரும் சிறப்புமாக வாழ வேண்டுமென்பதில் உனக்கும் எனக்கும் எந்தவிதக் கருத்து வேற்றுமையும் கிடையாது. மதுரை மன்னருக்கு மோகனாங்கியை மணம் புரிந்து கொடுப்பதில் எனக்கு எள்ளளவும் பிரியம் இல்லை. இந்த விஷயத்தில் நம் இருவர் கருத்தும் ஒன்றுபட்டிருக்கிறது" - இப்படிக் கூறி அவள் சற்று நிறுத்தியவுடன் விஜயராகவர் தனது கோபத்தை மெல்லக் குறைத்துக் கொண்டு இதயத்தில் ரங்கமாதேவியின் மீது சிறிது வாஞ்சையும் வரவழைத்துக் கொண்டு அவள் பக்கம் திரும்பினார். இதயத்திலுள்ளதை எளிதில் ஊடுருவி அறியக்கூடிய ரங்கமாதேவி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, "மதுரை மன்னர் மீது மோகனா உயிருக்குயிரான அன்பு கொண்டிருக்கிறாள். அதை எப்படியாவது மாற்ற வேண்டுமென்று நான் படாதபாடு பட்டேன். அதற்காகத்தான் நான் வல்லத்திற்குப் பலமுறை அழைத்துச் சென்று அவள் மனத்தை வேறு திசையில் திருப்புவதற்கு முயன்றேன்" என்றாள்.

விஜயராகவர் வியப்புடன், "மதுரைக்காரன் மீது என் மகள் மோகம் கொண்டிருக்கும் செய்தி உனக்கு முன்னமே தெரியுமா? ஏன் அதை என் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை" என்று கேட்டார். ரங்கமாதேவி சிரித்துக் கொண்டாள். "எனக்குத் தெரிந்த அனைத்தையும் உன்னிடம் தெரிவிக்க எனக்கு ஏதாவது சந்தர்ப்பம் கொடுத்தாயா? என்னை மதித்தாயா? என்னை அழைத்தாயா? என்னைப் பரம விரோதியாக நினைத்து என் இருப்பிடத்திற்கு வந்துகூட ஒரு நொடி கூட அங்குத்

தங்காமல் அலட்சியப்படுத்தித் திரும்பினாயே; உன்னிடம் நான் எதை எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் நான் அதையெல்லாம் இப்பொழுது பொருட்படுத்தவில்லை. பழைய குரோதத்தை மறந்து விட்டேன். உரிமை, அந்தஸ்து, மரியாதை என்றெல்லாம் கௌரவமாக நான் நினைத்து எவ்வளவு நாட்கள் உன்மீது வன்மத்துடன் போராட வேண்டுமென்பதை ஒரு நொடியிலே அழித்து விட்டேன். காரணம் நம் நாட்டை எதிர்நோக்கி இருக்கும் பேராபத்து. அந்த ஆபத்து மோகனாங்கியின் காரணமாக ஏற்பட்டு வருகிறதே என்று எண்ணும்பொழுது எனக்கு வேதனை உண்டாகாமல் இல்லை. அதனால்தான் நான் கடைசியாக உன்னிடம் ஒரு யோசனை கூற வந்தேன். தஞ்சை மாளிகையில் மோகனாங்கி இருந்தால் எல்லாவிதப் பாதுகாப்பு இருந்தாலும் மதுரை மன்னன் நொடியிலே ஒருவரும் அறியாமல் மோகனாவைக் கவர்ந்து சென்றாலும் சென்று விடுவான். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. கோட்டையைச் சுற்றிப் படைவீரர்கள் சூழ்ந்து கொண்டால் பிறகு மோகனாங்கியை இங்கிருந்து அப்புறப்படுத்துவது கஷ்டம். அதனால் நான் இப்பொழுதே மோகனாவை வல்லத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

"மேலும் வல்லம் அவளுடைய கோட்டைதானே! அந்தக் கோட்டைக்குரிய இளவரசி அந்தக் கோட்டையில் இருப்பதுதானே நியாயம். தஞ்சையிலுள்ள கன்னிமாடம் கூட காவல் இல்லாமல் துரோகிகள் காசுக்கு ஆசைப்பட்டு நினைத்தவர் களையெல்லாம் நுழையும்படி இங்குத் திறந்தவெளியாக இருக்கிறது. வல்லத்துக் கோட்டையைப் பார். என்னுடைய உத்தரவு இல்லாமல் ஓர் எறும்பு கூட வெளியே போக முடியாது. மோகனா அங்குதான் இருக்க வேண்டும். பிறகு நாம் நடக்க வேண்டியதைக் கவனிப்போம்" என்றாள்.

விஜயராகவர் தன் சகோதரி கூறியதைச் சற்று நேரம் சிந்தித்தார். அவளை ரங்கமாதேவியிடம் அனுப்புவது சரிதானா என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் உதித்தது. திடீர் என ரங்கமாதேவியின் மனம் எப்படி மாறியது. அதில் ஏதாவது சூழ்ச்சி இருக்குமா? இளவரசியை அழைத்துச் சென்று ஒருவரும் அறியாமல் அந்தக் கள்வர் கூட்டத் தலைவனின் மகனுக்கு மணம் புரிந்து கொடுத்து விட்டால் என்னாவது என்ற எண்ணமும் அவருக்குத் தோன்றியது. அதனால் அவர் ஆழ்ந்த சிந்தனையில் சிறிது நேரம் மூழ்கி இருந்த பிறகு தன் சகோதரியை நோக்கி, "என் உள்ளம் மிகவும் கலக்கமுற்றிருக்கிறது. சிந்தனையை எதிலும் சரிவரச் செலுத்த முடியவில்லை. புத்தி வேலை செய்ய மறுக்கிறது. அதனால் ஒரு நாள் நன்றாக யோசிப்பதற்கு அவகாசம் கொடு, நான் சொல்லுகிறேன்" என்றார். ரங்கமாதேவி தன் மனத்தினுள் சிரித்துக்கொண்டு அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்,

"உன்னுடைய நன்மைக்காகவும் உன் மகளுடைய நன்மைக்காகவும் தான் இந்த யோசனையை நான் சொன்னேன். பிறகு உன்னுடைய இஷ்டம். நான் திடீரென்று இப்படிச் சொல்வதனால் உனக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம். சகோதரி ஏதோ பெரும் சதித் திட்டத்தில் ஆழ்த்தி என் மகளைப் பலி கொடுப்பதற்கு அழைத்துச் செல்கிறாளோ என்று கூட நீ நினைக்கலாம். அப்படியே நான் செய்தாலும் அதனால் யாருக்கு நஷ்டம்? இந்தப் பெரும்நாடு அழிவுற்ற பிறகு அந்தச் சாம்பலின் மீதா நடமாடப் போகிறேன்? பாழடைந்த மாளிகையிலா நான் குடியிருக்கப் போகிறேன்? எல்லாரையும் பலி கொடுத்துவிட்டுப் பிறகு அந்தப் பாசத்தை மனத்திலே கொண்டா நான் வாழப் போகிறேன்? அதனால் மோகனாவைக் காப்பாற்ற வேண்டும் என்னும் ஒரே எண்ணத்தில்தான் நான் சொன்னேன். யோசித்துச் சொல்வதைக் குறித்து எனக்கு சந்தோஷம்தான். நான் நாளைய தினம் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய் விட்டாள்.

மறுநாள் விஜயராகவர் மோகனா இருக்கும் மாளிகையின் காவல் கூடத்திற்கு வந்தார். அங்குப் பொறுப்பு வாய்ந்த காவல் தலைவரை அழைத்துச் சற்று மெல்லிய குரலில், "உடனே இளவரசி மோகனாவை வல்லத்திற்கு அழைத்துச் சென்று நான் மறுபடியும் உத்தரவிடும் வரையில் அங்கேயே தங்கியிருக்கச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு ஒரு நொடியில் அங்கிருந்து போய்விட்டார். ஆனால், உச்சிவேளை கழித்து திருவரங்கத்திற்குச் சென்று அரங்கநாதரைத் தரிசித்துவிட்டு மாளிகைக் கோயில் பூஜையை முடித்துக் கொண்டு தன் மகளை அழைத்து வருமாறு சொன்ன விஜயராகவருக்குக் கிடைத்த செய்தியோ இடிவிழுந்தாற் போல் இருந்தது. மாளிகைக் காவலன் அவரை அணுகி மிகவும் பயந்த குரலில், "காலையில்தானே வல்லத்திற்கு இளவரசியை அழைத்துச் செல்லுமாறு கட்டளையிட்டு விட்டு, இப்பொழுது மீண்டும் பூஜை அறைக்கு அழைத்து வருமாறு சொல்கிறீர்களே" என்றவுடன் அவர் திகைக்காமல் என்ன செய்வார்?

"நான் உத்தரவிட்டேனா" என்று நாக்குழற அவர் கேட்ட பொழுது, 'மன்னருக்குச் சித்த சுவாதீனம் இல்லையா அல்லது காலையில் இட்ட உத்தரவை மறந்து போய் விட்டாரா?' என்ற கேள்வியே காவல் தலைவருக்கு ஏற்பட்டது. அவன் திகைப்பதைப் பார்த்த விஜயராகவர் கடுங்கோபத்துடன், "நீயும் இங்குள்ள சதிகாரர்களின் கூட்டத்தில் சேர்ந்து விட்டாயா? இளவரசி எங்கே?" என்று கர்ஜித்தார்.

அவன் உண்மையான ஊழியன். மன்னரின் அந்த அதட்டலுக்கு அவன் அஞ்சிவிடவில்லை. அந்த மாளிகையில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக சேவை செய்து வரும் அவன் சற்றுத் துணிகரமான குரலில், "அரசர் கடுமையான வேலையினால் மறந்து போய் இருக்கலாம்.

காலையில் இளவரசியின் மாளிகைக்கு வந்த தாங்கள் உடனே வல்லத்திற்கு இளவரசியை அழைத்துச் செல்லுமாறு உத்தரவிட்டு, மறு உத்தரவு வரும் வரையில் தேவியாரை அங்கே தங்கியிருக்கச் செல்லவும் என்றும் கட்டளையிடவில்லையா?" என்று கேட்டான். மாளிகையிலிருந்து அழைத்து வரப்பட்ட பணிப்பெண்கள் எல்லாம் அதை ஊர்ஜிதம் செய்தனர். விஜயராகவரின் தலை சுழல்வது போல் இருந்தது. அவர் அப்படியொன்றும் மறதியுடன் எந்தக் காரியத்தையும் செய்யவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொள்வதற்குக்கூட அப்பொழுது சக்தியில்லை. பசியாலும் களைப்பாலும் அதிர்ச்சியாலும் குழம்பி விட்ட அவர் சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் இருந்த இடத்திலேயே கண்ணை மூடிக் கொண்டு சிந்திக்கத் தொடங்கி விட்டார்.

ஆனால், நடந்தது வேறு. அரசருடைய உடையோடும் அதே கம்பீரமான குரலோடும் அங்கே வந்து உத்தரவிட்டது ரங்கமாதேவிதான். ரங்கமாதேவியும் விஜயராகவரும் இரட்டைப் பிறவிகள் இல்லையென்றாலும் தோற்றத்தில் இருவரும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள். மீசை வைத்துத் தலையிலே மணி முடியையும் சூட்டிப் பளபளக்கும் ஆடையையும் உடுத்தி, இடையில் வாளையும் ரங்கமாதேவிக்கு அணிவித்தால் விஜயராகவரா? ரங்கமாதேவியா? என்ற வித்தியாசமே தெரியாது. அதனால் அரசருடைய வடிவத்தில் ரங்கமாதேவி வந்து உத்தரவிட்டவுடன் காவலர்கள் நம்ப வேண்டியதாயிற்ற. மோகனாவிடம் சென்று அரசருடைய உத்தரவு என்று கூறியவுடன் மோகனாவும் அதை எதிர்க்கவில்லை. தஞ்சையை விட்டு வேறு எங்காவது போக வேண்டுமென்ற உள்ளத் துடிப்புடன் இருந்த அவளுக்கு வல்லத்திற்குச் செல்வது உகந்ததாய் இருந்தது. ஆனால், வல்லத்திற்குச் சென்றால் தன் அத்தையை நேருக்கு நேர் சந்திக்க வேண்டி நேருமே? அலட்சியப் படுத்திக் கோபமாக அவர்களை அனுப்பிவிட்ட பிறகு இப்பொழுது அங்கே போய்ச் சேர்ந்தால் அவர்கள் தன்னை மீண்டும் சரியான முறையில் நடத்துவார்களா அல்லது வேறுவிதமாக நடத்துவார்களா? என்பது புரியவில்லை. எனினும் துணிவுடன் வல்லத்திற்குப் போகச் சம்மதித்தாள். மேலும் அப்படி அத்தையின் அதிகாரம் அங்குக் கொடி கட்டிப் பறக்குமானால் தன்னுடைய அதிகாரத்தையும் அங்குச் செலுத்துவது என்ற முடிவுக்கும் அவள் வந்தாள். ஆனால், வல்லத்திற்கு அவள் சென்றவுடன் அப்படியெல்லாம் நேரவில்லை. ரங்கமாதேவி மிகவும் அன்புடன் முன்போல் வரவழைத்துச் சென்றாள். "உன்னை எதற்காக இங்கே அழைத்து வந்தேன் என்று தெரியுமா?" என்று கேட்டாள் ரங்கமாதேவி.

மோகனாவுக்கு ஏனோ துடுக்குத்தனம் சட்டென வந்து கவ்விக் கொண்டது. "அக்கள்வர் தலைவன் மகனுக்கு என்னை இங்கு மணம் புரிந்து கொடுப்பதற்காகா அழைத்து வந்திருக்கலாம்" என்றாள்.

ரங்கமாதேவி மெல்ல நகைத்தாள். "மதுரை மன்னருக்குக் கள்வர் தலைவன் மகன் எந்த விதத்திலும் குறைந்தவன் அல்லன். தஞ்சையை இப்பொழுது காப்பாற்றக்கூடிய சக்தி யாராவது ஒருவருக்கு இருக்குமானால் அது நீ அலட்சியமாகப் பேசும் அந்தக் கள்வர் தலைவனுக்கும் அவனுடைய மகனுக்கும்தான். தஞ்சையிலுள்ள படைகள் உண்மையான - விசுவாசமான - தன்மை கொண்டவர்களாகத் தெரியவில்லை. வெளியேயும் உள்ளேயும் உள்ள படைகளில் தஞ்சைக் கோட்டையைத் தாக்க வரும் மதுரைப் படைகளுடன் சேர்ந்து கொள்ளும் துரோகிகள் ஏராளமான பேர் தஞ்சையில் இருக்கிறார்கள். ஆனால், மதுரைப் படையை விரட்டியடிக்கக் கூடிய சக்தி நீ வெறுக்கும் அந்தக் கள்வர்களுக்குத்தான் உண்டு" என்றாள்.

மோகனா அலட்சியமாகச் சிரித்து, "தஞ்சையிலிருந்து மதுரைப் படைகளுடன் சேர்க்கூடிய துரோகிகளின் பட்டியலில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள் அத்தை. மதுரைப் படைகள் வருகின்றனவா? எப்பொழுது வருகின்றன? தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளப் போகின்றனவா? மிகவும் நல்லதாகப் போய்விட்டது. கோட்டையினுள்ளே நான் இருந்தால் வெளியேயுள்ள மதுரைப் படைகளுடன் சேர்ந்து கொள்வதற்கு ஒருபொழுதும் எனது தந்தை சம்மதிக்க மாட்டார். நல்ல வேளையாக வல்லத்துக் கோட்டைக்கு நான் காவலாக வந்துவிட்டேன். அணிவகுத்து வரும் மதுரைப்படைகள் இப்பக்கம்தானே வருகின்றன? அப்படைகளுடன் மதுரை மன்னர் வருவார் இல்லையா? அவரைக் கண்டால்தான் உங்களுக்குப் பிடிக்கவில்லையே? நான் உங்களுக்கு அவரைக் காட்டுகிறேன். அந்தச் சுந்தர புருஷரை - கம்பீரமான புருஷரை - நான் உங்களுக்குக் காட்டுகிறேன் அத்தை. அவர் யானை மீது தானே வருவார். அல்லது குதிரை மீது ஏறிக் குதிரைப் படைகளுடன் நடந்து வருவாரா? அவர் வெற்றி வாகை சூடிவர நல்ல மலர்களை எல்லாம் உடனே சேகரித்துத் தொடுத்து வைக்க வேண்டுமே! வாடாத மலர்களாகத் தொடுத்து எடுத்து நான் அணிவிக்கப் போகிறேன். உங்களுக்கும் அளிக்கிறேன் அத்தை. என் தந்தையை உங்களுக்குப் பிடிக்காது. தந்தைக்கு மதுரை மன்னரைப் பிடிக்காது. விரோதிக்கு விரோதி நண்பர்கள் அல்லவா?" என்று மோகனா ஏதேதோ பேசிக் கொண்டே போவதைக் கண்ட ரங்கமாதேவியின் உடல் ஆத்திரத்தால் பற்றி எரிந்தது. கோபம் நெஞ்சை வந்து முட்டியது.

"இப்பொழுது நிறுத்துகிறாயா இல்லையா?" என்று ஆக்ரோஷத்துடன் கருவிக்கொண்ட அவளை நோக்கிப் பாய்ந்தாள்.

# 48. கந்ததேவனின் திட்டம்

ரங்கமாதேவியின் ஆத்திரத்திற்கு மோகனா பயந்து விடவில்லை. தன்னை நோக்கி விரைந்து பாய்ந்து வந்த அவள் அத்தையின் கோபத்தைக் கண்டு புன்முறுவல் பூத்தாள். ரங்கமாதேவிக்கு இருந்த ஆத்திரத்தில் கொடி உடலாள் மோகனாவை அவள் என்ன செய்திருப்பாள் என்றே சொல்ல முடியாது. அந்தச் சமயம் பார்த்து அவள் பின்புறத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது. "இது என்ன தேவி? தாங்கள் இப்படிக் கோபப்பட்டால் மற்றவருக்குக் கோபம் உண்டாவது கஷ்டமா?"

அந்தக் குரலுக்குரிய கந்ததேவன் ரங்கமாதேவியின் கரங்களைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான். மோகனாவின் மீதிருந்த ஆத்திரம் இப்பொழுது கந்ததேவன் மீது திரும்பியது. "உன்னை யார் இப்பொழுது இங்கே வரச் சொன்னது?" என்று அவள் கர்ஜித்தாள்.

கந்ததேவன் அலட்சியமான சிரிப்புடன், "என்னை இது வரையில் யாராவது கூப்பிட்டுத்தான் நான் வந்தேனா தேவி? அழையாத வீட்டில் நுழைந்து வரும் விருந்தாளி போல் எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்போதப்போதெல்லாம் நான் வந்து கொண்டிருந்தேன். நீ விரும்பியோ விரும்பாமலோ நான் உன்னைத் தேடி வந்தேன். இப்பொழுதும் அப்படித்தான். அதனால் உன்னுடைய கேள்விக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை" என்றான். ரங்கமாதேவிக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கு எல்லையில்லை. கந்ததேவனை அவள் அந்தச் சமயம் எதிர்பார்க்கவில்லை. அவனை எப்படியாவது அங்கிருந்து போகச் சொல்ல வேண்டுமென்ற ஆக்ரோஷத்துடன், "இப்பொழுது நான் சொல்கிறேன்; நீ இங்கிருந்து போ. போகப் போகிறாயா இல்லையா?" என்று கூவினாள். ரங்கமாதேவியும் இத்தகைய கோபத்துடன் கந்ததேவனை இதுவரையில் பேசியதும் இல்லை. அன்பு நிறைந்த குரலுடன் அவனிடம் பேசிப் பழகிய தேவி, இப்படி உறவே அறுந்துவிடும் போல் பேசியது கந்ததேவனுக்கு வியப்பாக இருந்தது. ஆனால் அவளிருந்த நிலையில் இன்னும் அதைவிட அதிக ஆத்திரமாகத்தான் பேசி இருக்க முடியும். ஆனால், கந்ததேவன் அதை எதிர்பார்த்துதான் வந்தான். அவள் கூறியதை மிக அமைதியாக

ஏற்றுக்கொண்டு, "நாம் அனைவரும் இந்த இடத்திலிருந்து போக வேண்டும். நாம் அனைவருமே தான் போக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. நாம் இன்னும் சிறிது நேரம் தங்கினோமானால் நம் எல்லாரையும் மதுரையின் படைகள் ஒன்று சேர்த்து கைது செய்து கொண்டு சென்று விடுவார்கள். மதுரையின் படையிடம் சிக்க வேண்டுமானால் நாம் இங்கேயே இன்னும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தங்கி ஒருவருக்கொருவர் ஆக்ரோஷத்துடன் பேசிக் கொண்டு உள்ளத்தில் உள்ள ஆத்திரத்தை ஒருவர் மீது ஒருவர் தாக்கிக் கோப தாபங்களைக் காட்டிக் கொண்டிருக்கலாம். இல்லை நம்முடைய லட்சியம் நிறைவேற வேண்டுமெனும் எண்ணம் நமக்கு இருந்தால் உடனடியாக நாம் இங்கிருந்துப் போய்விடுவதுதான் நல்லது. அதைச் சொல்வதற்காகத்தான் உங்களையெல்லாம் காப்பாற்றிக் கொண்டு போவதற்காகத்தான் நான் வந்தேன். வந்த இடத்தில் இந்த நாட்டின் பொக்கிஷமே இருப்பது தெரிந்தவுடன் நான் வந்தது மிகவும் நல்லதாகிவிட்டது என்ற ஒரு சந்தோஷம் எனக்கு ஏற்பட்டது. தஞ்சையின் இளவரசியை, இந்த வல்லத்துக் கோட்டையின் இளவரசியைக் காப்பாற்றிய பெரும்புகழ் எனக்கு வந்து சேரும் என்னும் களிப்பு என்னுள்ளத்தில் எழுந்தது. நீ என்னவென்றால் இளவரசியின் மீதே பாய்ந்து என்ன காரணத்தினாலோ அவள் மீது உன் கோபத்தைக் காட்ட முயன்று கொண்டிருக்கிறாய். வேண்டாம் தேவி. நாமே ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொண்டால் பகைவருக்கு மிகவும் எளிதாகிவிடும்" என்று கந்ததேவன் மிகவும் அமைதியாக அடக்கமாகப் பேசினான். அவன் இதுவரையில் அவ்வாறு பேசியதே கிடையாது. தன்னை அவமதித்தவன் நாக்கைத் துண்டித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். அதிலும் மோகனாங்கியின் எதிரிலே ரங்கம்மாதேவி தன்னை அலட்சியப்படுத்தியது அவன் ஆக்ரோஷத்தை நிச்சயம் வளர்த்திருக்கும். ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஒரு ஆபத்தான சூழ்நிலையை எண்ணி அவன் அமைதியுடன் இருந்தான்.

மதுரையின் படைகள் வல்லத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்னும் செய்தி கேட்டவுடன் ரங்கமாதேவி நடுங்கிவிட்டாள். கந்ததேவன் சொல்வதுபோல் அங்கிருந்துத் தப்பி வெளியே செல்வது ஒன்றும் பிரமாதமான காரியமில்லை. அதனால் அவள் உடனே தன்னுடைய கோப நிலையை மாற்றிக் கொண்டு மோகனாவையும் அழைத்து, "நமக்குள்ளே மனஸ்தாபங்களைப் பிறகு தீர்த்துக் கொள்ளலாம். வா வா, வெளியே போவோம்" என்று பரபரப்புடன்

அழைத்தாள். மோகனாவின் கரத்தைப் பற்றி அவளை அழைக்க முனைந்த பொழுது மோகனா ரங்கமாதேவியின் கையை உதறி, "நான் ஏன் தப்பிச் செல்ல வேண்டும்? இந்தக் கோட்டையின் அதிபதி நான். வல்லத்து இளவரசி நான். கோட்டையை விட்டுவிட்டு கோழை போல் ஓடுவதற்கு நான் தயாராயில்லை" என்றாள். "விரோதியின் படைகள் வந்தால் கோட்டையின் அதிபதியைத்தான் முதலில் சிறை பிடிப்பார்கள் என்பது தங்களுக்குத் தெரியாததா" என்று கந்ததேவன் கேட்டான்.

"சிறை பிடித்துப் போகட்டுமே! அதனால் என்ன?" என்று அலட்சியமாக மோகனா கூறினாள். ரங்கமாதேவி குறுக்கிட்டு "இதையெல்லாம் நாம் சுரங்க வழியாக ஓடிக் கொண்டே பேசலாம்" என்று கூறவும். மோகனா முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு அருகேயிருந்த ஆசனத்தில் அமர்ந்து, "நீங்கள் வேண்டுமானால் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தப்பிச் செல்லுங்கள். நான் இந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை. மதுரைப் படைகள் வந்து என்னை சிறை செய்யட்டும். சிறைப்படுத்தி எங்கே அழைத்துச் செல்வார்கள்? மதுரை மன்னரிடம்தானே? நன்றாக அழைத்துச் செல்லட்டும்; யாருக்காக அவர் இவ்வளவுதூரம் படை எடுத்து வருகிறாரோ அதை மிக எளிதில் முடித்துக் கொண்டு விட்டால் தஞ்சைக் கோட்டையைக் கூட அவர் முற்றுகையிடாமல் சென்று விடுவார். எனக்காகத் தஞ்சை மாநகரம் தப்பிப் பிழைக்கட்டும்" என்றாள். கந்ததேவனுக்கு இப்பொழுது உண்மையில் ஆத்திரம் பொங்கியது. "என்ன சொல்கிறீர்கள்? மதுரை மன்னர் தங்களை அழைத்துச் செல்லட்டுமென்றா? தங்கள் உள்ளத்தில் தஞ்சையின் சுதந்திர எண்ணம் இருக்கிறதா இல்லையா? மாற்றானிடம் சிறைப்படுவது குலப்பெருமை என்று எண்ணினார்களா? நாங்கள் ஒரு நாளும் இப்படி நடப்பதற்கு விட்டுக் கொடுக்கமாட்டோம். எங்கள் கண்ணெதிரே தஞ்சைக்கு அவமானம் ஏற்படுவதை நாங்கள் சகிக்க மாட்டோம்" என்று கந்ததேவன் கர்ஜித்து மோகனாவைப் பற்றி இழுத்துச் செல்வதற்காக அவளை நோக்கிப் பாய்ந்தான். ரங்கமாதேவிக்கு ஒரு கணம் என்ன செய்வது என்று தோன்றவில்லை. அடுத்த கணம் அவள் கந்ததேவன் செய்வதுதான் சரி என்ற முடிவுக்கு வந்து, "நீ நில் கந்ததேவா. நான் இந்தச் சண்டி மாட்டைப் பணிய வைக்கிறேன்" என்று கூறி மோகனாவை இழுத்துக் கொண்டு சுரங்கப்பாதை இருக்கும் இடம் நோக்கி ஓடினாள். அந்தச் சமயம் மதிலின் மேல் ஆபத்தை அறிவிக்கும் முரசும் முழங்கியது. கோட்டைக் கதவுகள் பெரும் சப்தத்துடன் மூடப்படும் ஓசை கேட்டது. வெளியே எங்கேயோ படபட என்று துப்பாக்கி வெடிகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. மோகனா ரங்கமாதேவியிடமிருந்து ஓடப் பார்த்தாள்

திமிறிக்கொண்டு. ஆனால், கந்ததேவனோ அவளை அழுத்திப் பிடித்துக் கொண்டு தள்ளிக் கொண்டு போனதால் அப்படி முடியவில்லை. மோகனாவுக்குத் தன்னை பிற ஆடவன் தொட்டதால் உயிரே போய் விட்டது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. கந்ததேவனைப் போன்ற ஒரு குணக் கேடன் தன்னைத் தொடுவதை அவள் துளிக்கூட விரும்பவில்லை. இனி இந்த உலகத்தில் வாழ்ந்துதான் என்ன பிரயோசனம்? கந்ததேவனின் பிடியில் - தன்னைக் காப்பாற்றிச் செல்லும் ஒரு தன்மையில் வேடனிடமிருந்துத் தப்பிய புறா பாழும் கிணற்றிற்குள் வீழ்ந்தது போல், அவள் மிக வேதனை நிலையை அடைந்தாள். அவள் துவண்டாள். சோர்ந்து போனாள். ஒரு கற்புக்கரசியின் உள்ளம் உடைந்தவுடன் ஏற்படும் நிலைதான் அவளுக்கும் உண்டாகியது. மயங்கி வீழ்ந்தாள். ஒரு பக்கம் கந்ததேவனும் மறுபக்கம் ரங்கமாதேவியுமாகத் தூக்கிக் கொள்ள முயன்றனர். ஆனால் ரங்கமாதேவிக்கு அந்தச் சிரமத்தை வைக்காமல் கந்ததேவனே அவளைத் தூக்கித் தன் தோளின் மீது சாய்த்துக் கொண்டான். உண்மையில் அவளைத் தப்பிக்கவைத்து அழைத்துச் செல்வதற்காகத்தான் வந்தானா? மோகனாங்கியை எப்படியாவது அங்கிருந்து கடத்திக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தான்.

கங்கை கொண்ட சோழபுரத்துக் காட்டில் சந்தனத்தேவன் இருந்தான். அவன் முதுகிலே பட்ட அழகான கத்திக் காயம் இப்போது ஆறியிருந்தது. அந்தப் புண் ஆறுவதற்குள் அவன் மனம் களிப்படையச் செய்ய வேண்டும். தஞ்சை இளவரசியை இங்கேயே கொண்டு வந்து திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் கந்ததேவன் திட்டமிட்டு அதை நிறைவேற்றுவதற்கும் முனைந்தான். இப்பொழுது அவன் காரியம் கை கூடியது. வல்லத்து இரகசிய வழி எங்குச் சென்று முடிகிறது என்று அவனுக்குத் தெரியும்.

அந்த இரகசிய வழியின் மூலம் மோகனாங்கியைத் தூக்கிக் கொண்டு விரைந்து சென்று விடலாம் எனும் பெரும் களிப்பு இந்தச் சமயத்தில் அவன் உள்ளத்திலே ததும்பி நின்றது. ரங்கமாதேவி அதை எதிர்க்க மாட்டாள் என்ற எண்ணமும் அவனுக்குப் பக்கபலமாக இருந்தது. அதனால் அவன் இருள் நிறைந்த அந்தச் சுரங்க வழி மூலம் தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருந்தான். சுரங்கப் பாதையின் முடிவை அடைந்து பூமியின் வெளியே வரும் இடம் நெருங்கியதும் ரங்கமாதேவி அவனை எச்சரித்தாள். "நாம் இங்கிருந்து வெளியே போகும் பொழுது சிறிது ஜாக்கிரதையாகப் போக வேண்டும். இப்படியே மோகனாங்கியைக் கிடத்திவிட்டு, மெல்ல வெளியே எட்டிப் பார்த்து ஆள் அரவம் இல்லாமல் இருக்கிறதா என்ற நிலையைக் கண்டு வா!"

என்று ரங்கம்மாதேவி எச்சரித்தாள். அதன்படி கந்ததேவன் இரகசிய வழியின் கதவைத் திறந்து கொண்டு வெளியே மெல்ல வந்தான். சுரங்கப் பாதையின் கதவுக்கு அருகே காத்திருந்த ரங்கமாதேவி நிலை கொள்ளாமல் தவித்தாள். வெளியே சென்ற கந்ததேவன் என்ன ஆனான் என்றே அவளுக்குத் தெரியவில்லை. நேரம் ஆக ஆக அவளுக்குத் திகில் பிறந்தது. அவள் மெல்லக் கதவைத் திறந்து வெளியே சென்று நிலைமையைக் கவனிப்பதற்காகச் சுற்றிப் பார்த்தாள். பிறகு இரண்டு மூன்று அடி வைத்து நடந்தாள். மறுகணம் அவள் திகைத்துப் பயத்தால் கூவினாள். அவளைச் சுற்றி நான்கு ஐந்து வீரர்கள் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

# 49. மகனுக்கு விடுதலை

மந்திராலோசனைக் கூடத்தில் அரசர் விஜயராகவர் கவலையே உருவாக அமர்ந்து மந்திரிப் பிரதானிகள் கூறும் யோசனைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர்கள் சொல்லும் யோசனைகள் ஏதும் அவர் மனத்தில் ஏறவில்லை. சமாதானம் செய்து கொள்ளலாம் என்று ஓர் அமைச்சரும் மதுரை மன்னருக்கு மோகனாங்கியை மணம் புரிவித்துக் கொடுத்துவிடலாம் என்று ஒருவரும், இல்லை தொடர்ந்துப் போரை நடத்தலாம் என்று ஒருவருமாகத் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். விஜயராகவரோ அவை ஏதும் தன் காதுகளில் விழுந்தாலும் மனத்தில் படாததுபோல் வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அவர் உறுதியாக ஒரு முடிவுக்குகு வந்து விட்டார். தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கும் படைகளை முழு பலத்துடன் எதிர்க்க வேண்டுமென்ற திடமான முடிவு அவரைவிட்டு அசைக்க முடியாததாக இருந்தது. தஞ்சையை நோக்கி வரும் படைகளை வழியிலேயே முறியடிப்பதற்காக ஒரு பகுதிப் போர் வீரர்கள் சென்றிருந்தார்கள். அவர்கள் கொண்டு வரும் செய்தியைப் பொறுத்துத்தான் தஞ்சையின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியிருந்தது.

அப்பொழுதுதான் ஒரு தூதுவன் விரைந்து வந்து தஞ்சைப் படைகள் முறியடிக்கப்பட்ட செய்தியைக் கூறினான். இதைக் கேட்டுக் கூட விஜயராகவரின் மனம் மாறவில்லை. தன் மகள் வல்லம் கோட்டையிலே இருப்பதால் பத்திரமாகவே அவள் இருப்பாள் என்னும் நம்பிக்கையுடன் தஞ்சையை நோக்கி வரும் மதுரைப் படைகள் ஒரு வேளைப் போரில் வென்றால்கூட மோகனாவை அடைய முடியாமல் திரும்பிச் செல்லும், அல்லது வல்லம் கோட்டையைத்

தாக்க முனையும். இரண்டு கோட்டைகளையும் ஒரே சமயத்தில் தாக்க இயலாமல் அவை அவதிப்படும் போது மீண்டும் படைகளைத் திரட்டிக் கொண்டு மதுரைப் படைகளை வெகு எளிதில் முறியடித்து விடலாம் என்னும் திட்டத்துடன் விஜயராகவர் தொடர்ந்து போரை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் நேரத்திற்கு நேரம் வந்து கொண்டிருந்த செய்தி மற்றவர்களுக்குக் கவலையை அளிப்பனவாகவே இருந்தன. படைகள் அனைத்தையும் திரட்டுவதற்கு உத்தரவு போயிற்று. நகரச் சுற்றுபுறங்களிலிருந்தும் அதிவிரைவில் படைக்கு ஆட்களைக் கொண்டு வருமாறு அதிகாரிகள் முற்பட்டனர்.

அந்த முயற்சியில் ஓரளவுக்கு வெற்றியும் கிடைத்தது. ஆனால், மிகவும் யுத்த தந்திரங்களில் பழக்கப்பட்டிருந்த மதுரைப் படைகளின் எதிரே எண்ணிக்கையில் அதிகமாகக் கொண்டு வரப்பட்ட தஞ்சைப் படைகள் ஈடுகொடுக்க முடியாமல் திணறின. படைக்குத் தலைமை வகித்து நடத்துவதற்குக்கூட தக்கவர் ஒருவர் இல்லாமல் போகும் நிலைமை ஏற்பட்டது. அரசியும் மிகக் கவலையுடன் விஜயராகவருக்கு யோசனைகள் சொல்லிக் கொண்டிருந்தாள். படைக்கு அப்பொழுதே அரசர் தலைமை வகித்து நடத்திச் செல்வதை அவள் விரும்பவில்லை. அவள் மனத்தில் ஏதோ ஒருவித பயம் குடிக் கொண்டிருந்தது. அவள் காதுகளில் வேங்கடமகி இட்ட சாபம் ஒலித்துக் கொண்டிருந்தது. அதனால் படைகளுக்குத் தலைமை வகித்து மன்னர் செல்ல அவள் அனுமதிக்கவில்லை. அதற்கு மாறாக அவள் ஒரு யோசனை சொன்னாள்: "சிறையிலே வாடும் மன்னார் தாசை விடுதலை செய்து அவனிடம் போரின் பொறுப்பை ஒப்படைக்கலாம்" என்று. மன்னார்தாஸ் போர்ப் பயிற்சிகளில் வல்லவன். திறமையுடன் படைகளை நடத்திச் செல்லக்கூடிய வல்லமை பெற்றவன். விஜயராகவர் அதை அறிவார். ஆனால் அவர் மனம் என்னவோ சிறையில் இருக்கும் மன்னாரை விடுவிக்க ஒப்பவில்லை. அவன் இல்லாமலேயே யுத்தத்தில் வெற்றி அடைய முடியாதா என்னும் ஒரு வீம்பு அவர் உள்ளத்திலே சூழ்ந்து கொண்டிருந்தது.

அன்றைய இரவு கழிந்து மறுநாள் பொழுது மிகவும் பயங்கரமான செய்தியுடன் விடிந்தது. தஞ்சைக் கோட்டைக் கதவுகள் மளமளவென்று அடைக்கப்பட்டன. நாற்புறமும் ஏராளமான மதுரைப் படைகள் அகழிக்கு அப்புறம் அணிவகுத்து நின்றன. கோட்டைக்குள்ளே பண்டங்கள் ஏதும் செல்ல முடியாமல் அவர்கள் முற்றுகை இட்டிருந்தார்கள். கையால் வீசப்படும் எரிகுண்டுகள் திடீர் திடீர் என்று அவர்களிடமிருந்து கோட்டைக்குள்ளே வந்து விழுந்து கொண்டிருந்தன. பலமான அம்புகளும், கூர்மையான கவண்கற்களும் பாய்ந்து வந்தன. கோட்டைக்குள்ளே உள்ள தஞ்சை வீரர்களும்

சளைக்காமல் பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கோட்டைக் கதவை முறியடிக்க முடியாமல் பலத்த அடைப்புகள் போடப் பட்டிருந்தன. ஆனால் உள்ளேயிருந்து வெளியேயும் வெளியேயிருந்து உள்ளேயும் பண்டங்கள் போக முடியாத நிலை ஏற்பட்டவுடன் தஞ்சை மக்களுக்குப் பீதி அதிகமாகியது. அவர்கள் பயத்தால் கலங்கியதுமல்லாமல் ஒருவருக்கொருவர் பீதியைக் கிளப்பிக் கொண்டு போருக்கும் தங்களுக்கும் சம்பந்தம் ஏதும் இல்லாதது போல் அவர்கள் கூடிக்கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். தஞ்சை நகரமே கலகலத்துக் காட்சி அளித்தது. நாள் தோறும் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று தரிசனம் செய்து வரும் அரசரும் கடந்த சில நாட்களாக அவ்வாறு செய்ய முடியாத காரணத்தால் மன வேதனைக்குட்பட்டு ஏதோ குழப்ப நிலையில் செய்வது என்னவென்று அறியாமல் மாளிகையிலுள்ள கோயிலில் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்வதிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டு இருந்தார்.

திடீர் என்று ஒரு செய்தி வந்தது. வடக்குப் பக்கமிருந்த அகழியைத் தூர்த்து படைகள் மதில் சுவரைப் பிளந்துகொண்டு உள்ளே நுழைய முயன்று கொண்டிருக்கிறார்கள் என்று. சேனைகள் எல்லாம் அவர்களை எதிர்த்து நிறுத்துவதற்காக அனுப்பப்பட்டன. ஆனால் திட்டமிட்டு அவர்களை நடத்திச் செல்வதற்கான திறமையுள்ள தளபதி இல்லாததால் அவர்கள் ஒழுங்கற்ற முறையில் தாக்குதலை நிறுத்த முயன்று அதில் தோல்வி அடைந்தனர். மதுரைப் படைகள் மளமள என்று கிடைத்த வழியின் மூலம் நுழைந்து கொண்டிருந்தனர். அவர்களை எதிர்க்க முடியாமல் தஞ்சைப் படைகள் பின்னடைந்து வீதிகளில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களைத் துரத்திக்கொண்டு வருபவர்களைக் கண்டு நாலாப் பக்கமுடம் சிதறி ஓடிய பொது மக்களின் கூச்சலும் குழந்தைகளின் ஓலமும் பெண்களின் அலறலும் அழகான தஞ்சையை அலங்கோலமான நிலைக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தன. அப்பொழுதும் விஜயராகவர் மனம் மாற வில்லை. கண்ணீரே விட்டு அறியாத அரசி கண்ணீருக் கிடையே மன்னரை வேண்டி மன்னார்தாசை உடனே விடுதலை செய்து நகரத்திற்குள் நுழைந்து விட்ட வீரர்களை விரட்டி ஓட்டும் பொறுப்பை ஏற்கச் செய்யுமாறு வற்புறுத்திய பிறகு ஒருவாறாக விஜயராகவர் சம்மதித்தார்.

உடல் நலிந்து தனது வாழ்க்கையின் முடிவை எண்ணி வேதனையுடன் இருட்டறையில் குடிகொண்டுள்ள மன்னார்தாஸ் சிறைச்சாலையின் பெரும் கதவு கிரீச்சிட்டுத் திறக்கும் ஒலியைக்கூட காதால் கேட்பதற்கும் சக்தியற்றவனாக இருட்டறையில் வாடிக் கொண்டிருந்தான்.

அவன் எதிரே மிகவும் மரியாதையுடன் வந்து நின்ற காவலர்கள் தனக்கு விடுதலை என்று சொன்னபோது கூட அவன் நம்பிக்கை கொள்ளவில்லை. தான் செய்த பெரும் தவறுக்குத் தஞ்சை மன்னர் அளித்த தண்டனை சரிதான் என்னும் ஒரு பக்குவமான மனநிலையை அவன் இவ்வளவு நாட்களில் அடைந்து விட்டான். பெண் பாவம் பொல்லாதது என்பதை அவன் உணர்ந்து விட்டான். இந் நாட்டை ஆள்வதற்கு ஏற்ற உழைப்பும் திறமையும் கொண்டு இருக்கவேண்டிய தான் ஸ்திரீலோலனாக இவ்வளவு நாள் அலைந்ததற்குத் தண்டனையைச் சிறையிலே அனுபவிப்பது சரிதான் எனும் மன நிலையை அவன் அடைந்தான். இனி வெளிச்சம் நிறைந்த உலகையே பார்க்க முடியாது என்ற எண்ணத்தால் அவன் என்ன செய்வது என்னும் சிந்தனையில் பல நாட்களைக் கழித்த பிறகு இறைவனைத் துதிப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவுக்கு வந்து கண்களை மூடிக்கொண்டு இருட்டறையில் பசியும் தாகமும் அறியாமல் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தான்.

ஆண்டவனின் நினைவால் மன நலிவு ஏற்படாமல் பசியும், தாகமும் இருட்டுச் சிறையும், அவன் உடலை மெலியச் செய்துவிட்டன. தஞ்சை நாட்டுக்கே அடுத்து அரசராக வேண்டிய அந்த இளம் குமரன் மெலிந்துத் தோள் வலிமை குறைந்து கம்பீரமான புஜங்கள் துவண்டு இளமையின் துடிப்பால் சதைப் பிடிப்போடு இருக்கும் கன்னங்கள் எல்லாம் ஒட்டிப் போய்ச் சோகமயமாய்க் காட்சி அளித்தான். அவனுக்கு விடுதலை. அதுவும் மிகவும் மரியாதையான வரவேற்புடன். அரச கட்டளை என்று அவன்முன் வந்து சிறைக் காவலர்கள் பயபக்தியோடு சொன்னபோதும் மன்னார்தாஸ் சிறைக் கூடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. அவர்களை அவன் பார்த்த பார்வையில் வியப்பே கலந்திருந்தது. அவர்கள் நிஜமாகத்தான் இப்படிச் சொல்கிறார்களா ? அல்லது அவனை ஏமாற்றுவதற்காக அங்கு வந்திருக்கிறார்களா ? என்று அவனுக்குப் புரியவில்லை. விடுதலை அடைந்து மீண்டும் தஞ்சை நகரத்தில் அவன் உலவித்தான் என்ன ஆக வேண்டும் ? பொது மக்கள் ஏளனம் செய்து உற்றார் உறவினர்கள் ஒரு விதமாகத் தன்னைப் பார்க்க, அவன் மீண்டும் தஞ்சையில் நடக்க முடியுமா ? அதற்காகவே தனக்கு விடுதலை என்று கூறி ஏன் வேதனைப்படுத்துகிறார் அரசர் ? அதுவும் ஒருவிதமான தண்டனையாக இருக்குமா என்று அவன் ஆயிரம் கேள்விகளை மனத்திற்குள்ளே கேட்டுக் கொண்டு கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தான்.

ஆனால், காவலர்கள் அவனை வேண்டிக்கொள்ளும் வார்த்தைகள் மிகவும் நிஜமாகத்தான் இருந்தன. உணர்வு கலந்திருந்தது. அதிலும் உண்மை ததும்பி நின்றது. தஞ்சையைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கும்

எதிரிகளைப் பற்றியும், நகரத்தின் ஒரு பகுதிக்குள் கோட்டையைப் பிளந்து கொண்டு உள்ளே நுழைந்து கொண்டு இருக்கும் மாற்றானின் படைகளைப் பற்றியும், தக்க தலைவர் இல்லாததால் வீரர்கள் நிலை குலைந்து ஓடி ஒளிவதைப் பற்றியும், அவனை விடுவிக்க வந்த காவல்காரர்கள் கூறியபொழுது அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது. தஞ்சைக்கு இவ்வளவு ஆபத்து ஏன் வந்தது ? என்றுகூட அவனால் நினைக்க முடியவில்லை. ஏதோ ஆபத்து தஞ்சையைச் சூழ்ந்திருக்கிறது என்று மட்டும் அவன் புரிந்து கொண்டு எழுந்து நிற்க முயன்றான். 'ஆபத்துக் காலத்தில் தன்னைத் தந்தை அழைக்கிறாரே, அவருக்கு உதவி செய்யலாமா?' என்று ஒரு கணம் எண்ணினான்.

தான் செய்த சிறு குற்றத்திற்குப் பெரும் தண்டனை அளித்துத் தன் வாழ்வையே கெடுப்பதற்கு முயன்றுவிட்ட தந்தைக்கு இப்படிப்பட்ட ஒரு ஆபத்தான நிலையில் இருந்து தக்க பாடத்தைக் கற்பிக்கலாமா என்று அவன் எண்ணினான். 'ஆனால் அப்படிச் செய்தால் யாருக்கு லாபம் ? தந்தை வீழ்ந்தால் அதனால் அடையும் பலன் யாருக்கு ? சுடுகாடான இடத்திற்குத் தானா இளவரசனாகத் திகழப் போகிறேன் ? வலுவிழந்த நாட்டிலே நான் பிற்காலத்தில் அரசனாகி என்ன செய்யப் போகிறேன் ? அதனால் ஆபத்துச் சமயத்தில் தந்தைக்காக இல்லாவிடினும் தாய் நாட்டிற்காக விரோதிப் படைகளை விரட்டியடிக்க வேண்டியது தான்' என்ற எண்ணம் உள்ளத்தில் எழவே, சரிந்த தோள் பட்டையையும், நடுங்கும் உடலையும் பொருட்படுத்தாமல் சிறைக் கூடத்தை விட்டு மெல்ல வெளியே வந்தான். அவன் தந்தையைக் காணச்செல்லவில்லை. அவனை வரவேற்பதற்காக அந்தப்புரத்திலே தாய் காத்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்தவுடன் அவன் கோலத்தைக் கண்டவுடன் அரசி துக்கம் தாங்க முடியாமல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

அன்றும் மறுநாளும் சோர்வைப் போக்கிக் கொண்டு உடலை ஒருவிதமாகத் தேற்றிக் கொண்டு மூன்றாவது நாள் காலையிலே யுத்த சன்னத்தனாய் குதிரை மீதேறி, துணிந்து கோட்டைக்கு வெளியே படைகளுடன் சென்று சூழ்ந்திருக்கும் மதுரைப் படைகளை முறியடிப்பதற்கு முனைந்தான். அவன் கொண்டு சென்றது நூறு பேர் கொண்ட படைதான். ஆனால் கோட்டை வாயிலை அவன் அவ்வளவு எளிதில் திறந்து கண்ணிமைக்கும் நேரத்திற்குள் மதுரைப் படைகளின் நடுவே புகுந்துவிடுவான் என்று எதிரிகள் யாரும் எதிர்பார்க்கவில்லை. சக்ராயுதம் கையிலே இருந்தது போல் தனது படைகளை மாற்றார்

படைகளின் நடுவே புகவிட்டு ஒவ்வொருவரும் குறைந்தது பத்து பேரையாவது மாய்க்கும்படியான நிலையை ஏற்படுத்தியவுடன் முற்றுகையிட்டுக் கொண்டிருந்த மதுரைப் படைகள் பயத்தால் சிதறி அஞ்சிப் பின்வாங்கி ஓடத் தொடங்கின.

வெற்றி முழக்கத்துடன் மன்னார்தாஸ் தஞ்சைக்குள்ளே குதூகலமாகப் பவனி வந்தான். விஜயராகவருக்கும் ஓரளவு தெம்பு பிறந்தது. பயந்தும் தோல்வியுற்றும் உற்சாகமில்லாமலும் தக்க தலைமை யோசனை இல்லாமலும் ஆங்காங்கே சிதறியிருந்த தஞ்சைப் படைகளையெல்லாம் திரட்டும் விதத்திலே மன்னார்தாஸ் முனைந்தான். மறுநாள் தஞ்சைக்குப் பெரும் வெற்றிதான். மதுரைப் படைகளைத் திருச்சியையும் தாண்டி விரட்டச் செய்ய வேண்டுமென்று மன்னார்தாஸ் திட்டமிட்டான். அவனுடைய உறுதியையும் அவன் நடந்ததையெல்லாம் மனத்திலே கொள்ளாது ஆற்றும் பணியையும் கண்ட விஜயராகவர்கூட தன் மகனுக்குத் தான் அளித்த தண்டனையை எண்ணி ஒரு கணம் வெட்கமுற்றார். தன்னுடைய திட்டங்கள் எல்லாமே இப்படித்தான் தவறாக இருந்து விடுகின்றனவோ என்ற எண்ணமும் அவருக்குத் தோன்றியது.

வல்லம் கோட்டைக்குச் சென்றிருந்த தன் மகளுடைய நிலை என்னவாக இருக்கும் என்பதை அறிவதற்காக அவர் உடனே ரகசிய வழியின் மூலமாகத் தகவலை அனுப்பினார். ஆனால் மகன் அடைந்த வெற்றிப் பெருமிதத்தில் சற்று முன்பு மகிழ்ச்சி அடைந்த அவர் வல்லத்துக்குச் சென்று திரும்பி வந்த ஒற்றர்கள் சொன்ன செய்தி கேட்டு மிகுந்த வேதனையை அடைந்தார். வல்லம் கோட்டையிலே ரங்கமாதேவியோ அல்லது மோகனாவோ காணப்படவில்லை என்றும் வல்லம் கோட்டையையும் மதுரை வீரர்கள் சூழ்ந்துகொண்டு அதைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தில் முனைந்திருக்கிறார்கள் என்பதையும் அறிந்தவுடன் அவருக்கு ஏற்பட்ட வேதனை சொல்லத்தரம் அன்று. மோகனா எங்குச் சென்றிருப்பாள் என்ற கவலை அவரைப் பெரிதும் வாட்டியது. "உடனே மோகனாவைத் தேடிக் கண்டு பிடித்துத் தஞ்சைக் கோட்டைக்குள் கொண்டு வாருங்கள்" என்று அவர் வீரர்களுக்குக் கட்டளை இட்டார்.

## 50. கந்ததேவன் கோரிக்கை

தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டு தாக்கும் வீரர்களிடமிருந்து வரும் செய்தியை அவ்வப்போது எதிர்பார்த்து மேற்கொண்டு நடக்கவேண்டியவற்றிற்குத் திட்டமிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார் மதுரைப் பிரதிநிதியும் தஞ்சைப் படை எடுப்பிற்குத்

தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவருமான வேங்கட கிருஷ்ணப்பர். கோட்டையின் ஒரு பகுதியைப் பிளந்து கொண்டு படைகள் நுழைந்து விட்டன எனும் செய்தி தூதுவர் வந்துச் சொன்னவுடன் தளபதிக்கு மகிழ்ச்சி அதிகமாகியது. சொக்கநாதர் சொல்லியிருந்தவை நன்றாக அவர் நினைவில் இருந்தன. போரின் போது மோகனாங்கிக்கு எந்தவிதத் துன்பமும் நேராமல் பாதுகாக்க வேண்டும். அத்துடன் அவளுடைய தந்தை விஜயராகவரையும் துன்பப்படுத்தாமல் சிறைப்படுத்தி கொண்டு வரவேண்டுமென்று அவரிட்டிருந்த கட்டளை அவர் நினைவில் அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

அதனால் கோட்டையைப் பிளந்து கொண்டு நுழைந்த வீரர்களுக்கு அவர் அவசர அவசரமாகச் சொல்லி அனுப்பிய செய்தி, மாளிகையைச் சூழ்ந்து கொண்டு அதைத் தாக்கும்பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென்பது. இடையிலே மன்னார்தாஸ் ஆக்ரோஷத்துடன் கோட்டை வீரர்களிடையே புகுந்து மதுரைப் படையைச் சற்றுப் பின்வாங்கி ஓடிவருமாறு செய்த செய்தி கேட்டவுடன் அவருக்குக் கோபம் அதிகமாகியது. மேலும் கடுமையாகத் தாக்குமாறு அவர் உத்தரவிட்டார். அந்தச் சமயத்தில்தான் அவர் எதிரே கந்ததேவனைப் பலத்த சங்கிலிகளால் பிணைத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

வல்லம் கோட்டையிலிருந்து இரகசிய வழியின் மூலம் அவன் வெளியே வந்தவுடன் மதுரை வீரர்கள் அவனைத் திடீரென்று சூழ்ந்து கொண்டு கைது செய்து அழைத்துச் சென்றார்கள். அவனைக் கொண்டு வந்த சற்று நேரத்திற்கு எல்லாம் ரங்கமாதேவியும் அவர் எதிரே கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள். அவர்கள் இருவரிடமிருந்து எந்தவிதச் செய்தியும் அவர்களால் அறிய முடியவில்லை. அதனால் அவர்களைத் தனித்தனியே காவலில் வைக்குமாறு உத்தரவிட்டு விட்டு அவர்கள் இருவரும் வல்லம் கோட்டையினின்று தப்பிப் போவதற்கு ஏன் முயன்றனர் என்பதை ஆராயலானார். அப்பொழுது தான் ஒரு வீரன் விரைந்து வந்து தஞ்சை இளவரசியை மயக்கமுற்ற நிலையில் கொண்டு வந்து கூடாரத்தில் கிடத்தி வைத்திருப்பதைச் சொன்னான். தளபதி அந்த இடத்திற்கு விரைந்து சென்றார்.

அவர் எதிர்பார்க்காமலே அங்கே சோர்ந்து போய்க் கண்ணைத் திறக்காமல் கிடக்கும் மோகனாங்கியைக் கண்டவுடன் அவர் திடுக்கிட்டுப் போனார். யாருக்காக இவ்வளவு தூரம் பெரும் போரில் ஈடுபட்டு நூற்றுக்கணக்கான வீரர்களைப் பலி கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ அவளையே வெகு எளிதில் கண்டுவிட்டதை அறிந்தவுடன் அவருக்கு மேற்கொண்டு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவர் நெடுநேரம் யோசனை செய்தார். மோகனாங்கியை உடனே தக்க காவலுடன் மதுரைக்கு அனுப்பி

விடலாமா? எனும் எண்ணமும் அவருக்கு உதித்தது. அப்படிச் செய்வது தவறில்லையாயினும் போரிலே வென்று விஜயராகவர் மண்டியிட்டுச் சமாதானம் செய்து கொள்வதன் மூலம் இளவரசியைப் பெறுவதுதான் சரியே தவிர இப்படி எளிதிலே, எதேச்சையாகக் கண்டுவிட்ட இளவரசியை மதுரைக்கு அனுப்பி வைப்பதன் மூலம் வீரத்தைப் புலப்படுத்துவது சரியன்று என்று முடிவுக்கு வந்தவராய் அன்றையப் பொழுது கழிந்து மறுநாள் விடிந்த பிறகு மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனிப்போம் என்றிருந்தார்.

ஆனால், பொழுது விடிந்தது. பொழுது விடிந்ததுமே வந்து கொண்டிருந்த செய்திகள் அவருக்கு உற்சாகம் ஏதும் கொடுக்கவில்லை. படைகள் தோல்வியுற்றுத் திரும்பி ஓடி வந்ததும் கந்ததேவனும் ரங்கமாதேவியும் காவலிலிருந்து தப்பி ஓடி விட்டனர் என்பதும் கேள்விப் பட்டவுடன் அவர் ஆத்திரம் மிகுந்தவராய்க் காவலுக்கு உரியவரை எல்லாம் கண்டித்துத் தண்டித்து இளவரசியாவது பத்திரமாக இருக்கிறாளோ என்று பார்ப்பதற்காக அவளிருந்த கூடாரம் நோக்கி விரைந்தார். அவர் போவதற்கு முன்பே அங்கே மிகவும் குழப்ப நிலை குடி கொண்டிருந்தது. எதிர்பாராத விதமாக நூற்றுக்கணக்கான தஞ்சை வீரர்களுடன் சேதுபதி நாட்டிலிருந்து மறவ வீரர்களும் ஒன்று சேர்ந்து மதுரை வீரர்களை முறியடித்து மோகனாங்கியைத் தஞ்சைக் கோட்டைக்கு எடுத்துச் சென்றுவிட்ட செய்தி தளபதிக்கு ஆத்திரத்தை அளித்தாலும் சொக்கநாதருக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம் என்ற அச்சமே உண்டாகியது.

மிகவும் திறமையாக கந்ததேவன் தான் தப்பித்துக் கொண்டதோடு அல்லாமல் ரங்கமாதேவியையும் மோகனாங்கி யையும் மீட்டுக் கொண்டு தஞ்சை மாளிகையை அடைந்தான். விஜயராகவர் முன்னிலையில் மிகத்துணிவுடன் தலை நிமிர்ந்து நின்று விரோதியிடமிருந்து மகளை மீட்டுக் கொண்டு வந்த செய்தியைப் பெருமிதத்துடன் கூறினான். ஆனால் விஜயராகவர் உற்சாகமிழந்தவராகத்தான் அந்தச் செய்தியை வரவேற்றார். வல்லம் கோட்டையிலிருந்து தன் மகள் ஏன் வெளியேற வேண்டும்? என்பது அவருக்குப் புரியாத புதிராக இருந்தது.

அவள் அப்படி இரகசிய வழியின் மூலமாகச் செல்லாமலிருந்தால் விரோதிகளிடம் சிக்கியிருக்கமாட்டாள். என்ன பலன்? தஞ்சை இளவரசியை மாற்றானிடம் சிக்க வைத்த பிறகு மீட்டு வந்ததால் ஏது பெருமை? பெருமை அல்லவா குன்றிவிட்டது என்று அவர் எண்ணும்போது ரங்கமாதேவியின் மீதும் கந்ததேவன் மீதும் மேலும் ஆத்திரந்தான் அதிகமாகியது. அதனால் கந்ததேவனை மிகவும் அலட்சியமாகப் பார்த்து “இப்பொழுது நாம் தலை நிமிர்ந்து

பெருமைபடுவதற்கு ஒன்றுமில்லை. ஒவ்வொரு கணமும் நாம் பெரும் ஆபத்திலிருக்கிறோம். விரோதியை விரட்டுவதற்கு ஏதாவது உன்னால் செய்ய முடியுமானால் செய். இல்லாவிட்டால் தஞ்சைக் கோட்டையை விட்டு வெளியேறி வேறு எங்காவது கண்மறைவாகப் போய் விடுவதுதான் நல்லது. ஏனென்றால் தோல்வியுற்று மாற்றாருக்கு மண்டியிடப் போகும் ஒரு நாட்டில் சுதந்திர வீரனாகிய நீ ஏன் வீணாக வாட வேண்டும்'' என்றார் விஜயராகவர்.

கந்தேவன் மிகவும் அலட்சியமாகச் சிரித்து, "ஒரு நாளும் தஞ்சை பணிந்து விடப் போவதில்லை. நான் தஞ்சைக்கு வெளியே செல்லத்தான் போகிறேன். ஆனால் திரும்பி வராமல் போவதற்கன்று. என்னுடைய சகாக்களையெல்லாம் திரட்டிக் கொண்டு மிகவும் பயங்கரமான தாக்குதலில் ஈடுபட்டு மதுரைப் படைகளை நிர்மூலமாக்கப் போகிறேன். ஆனால் ஓர் உறுதி வேண்டும்'' என்று கேட்டு அரசரை நிமிர்ந்துப் பளபளக்கும் கண்களுடன் பார்த்தான் கந்தேவன். 'என்ன?' என்று கேட்பதற்கு அறிகுறியாக அவனை நோக்கினார் அரசர். "நான் என்ன கேட்பேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். மதுரைப் படைகளைத் தோல்வியுறச் செய்து, துரத்தி அடித்த பிறகு, நானும் அப்படைகளுக்குத் தலைமை வகிக்கப் போகும் எனது மகனும் கோட்டை வாயில் வழியாக வெற்றி முழக்கத்துடன் பவனி வருவோம். எங்களை நீங்கள் வரவேற்க வேண்டும்..'' என்று அவன் கூறும்பொழுது அரசர் இடைமறித்து, "ஆஹா, வெற்றிக்கு உதவியவர்களை நான் அவ்வளவு எளிதில் மறந்துவிடமாட்டேன். குதூகலமான வரவேற்பை நகர மக்களே கொடுப்பார்கள்'' என்றார். உடனே கந்ததேவன் ஏளனமாக அவரைப் பார்த்து, "அந்த வரவேற்பை நான் சொல்லவில்லை. நான் எதிர்பார்ப்பது என்னை உங்களுடைய சம்பந்தியாக்கி எனது மகனை உங்களுக்கு மருமகனாக்கிக் கொள்ள வேண்டும். உங்களுடைய மகளை அவனுக்கு மணம் முடித்துத் தரவேண்டும்.''

உடனே விஜயராகவர் கோபம் நிறைந்த குரலில், "பேரம் பேசுவதற்குச் சரியான நேரத்தைப் பார்த்தாய் கந்ததேவா? பணயம் வைத்து எந்தக் காரியத்தையும் செய்பவன் நான் அல்லன். என் மகளை மணம் புரிந்து கொடுத்தால் மதுரையும் தஞ்சையும் காலா காலத்திற்கு ஒற்றுமையாக வாழும். இந்தப் போரும் நின்று விடும். ஆனால் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. மதுரைக்குப் பெரும் மன்னராகத் திகழும் சொக்கநாதனையே நான் வேலைக்காரன் பரம்பரை என்று கூறும்பொழுது, அரசர் குல வாசனையே அற்ற கள்வர் தொழில் செய்யும் உன்னிடமா பணிந்து போவேன்? வேண்டாம்; நீ என் முன் நிற்காதே. உன்னுடைய உதவியும் வேண்டாம். அதனால் ஏற்படும்

வெற்றியும் எனக்கு வேண்டாம். என் கையில் உள்ள வாளும் என் மகனுடைய உதவியும் இருக்கிறது. அந்த நம்பிக்கையில் கடைசி மூச்சு உள்ளவரையில் மானத்தைக் காப்பதற்காகப் போராடுவேன். அதனால் நீ ஒரு கணம் கூட நிற்காமல் போகலாம்" என்றார்.

கந்ததேவன் உடல் கோபத்தினால் குலுங்கியது. அவனால் அந்த நிலையில் ஏதும் பேச முடியவில்லை. அவரை விழுங்கி விடுபவன் போல் பார்த்து, "நான் மீண்டும் உங்கள் எதிரே வந்து நின்று மறுபடியும் இதே பேச்சைப் பேசத்தான் போகிறேன். ஆனால் அப்பொழுது நீங்கள் இதைப்போல் மரியாதைக் குறைவாகப் பேசி என்னை அலட்சியப்படுத்திவிட முடியாது. சந்தர்ப்பம் சரியாக இல்லை. நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு நான் வருகிறேன்" என்று கொக்கரித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினான். அன்று போனவன் மீண்டும் வந்தான் தஞ்சைக்கு - ஆனால் அப்பொழுது விஜயராகவரை அவனால் காண முடியவில்லை.

# 51. பயங்கர விளைவு

யுத்த மேகம் தஞ்சையை மிகவும் பலமாகக் கவிழ்ந்து கொண்டிருந்தது. மதுரையினின்று மேலும் அணி அணியாகப் படைகள் வந்து சூழ்ந்து கொண்டன. அடிபட்ட வேங்கை மீண்டும் உறுதியுடன் சீறிப்பாய்வது போல் மதுரை வீரர்கள் தங்களுடைய முழு பலத்தையும் காட்டிக் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருந்தனர். கடும் பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருந்தன. வல்லத்துக் கோட்டை மதுரைப் படைகள் வசம் சிக்கிவிட்டது. தஞ்சைக்கு உள்ளே உணவுப் பண்டங்கள் போக முடியாததால் மக்கள் கடும் பட்டினிக்கு ஆளாயினர். பதுக்கி வைத்திருப்பவர்கள் நிலைமையைப் பயன்படுத்தி அதிக விலைக்கு விற்க முயன்றனர். அதனால் மக்களிடையே அதிருப்தி அதிகமாகியது. விஜயராகவரோ தனது தினசரிக் கடமையான ஸ்ரீரங்கம் செல்லும் பழக்கம் அடியோடு நின்றுவிட்டதால் உள்ளம் வெதும்பி அதனாலேயே தனக்குச் சங்கடங்கள் நேர்ந்துவிட்டன என்னும் வேதனையில் மூழ்கி இருந்தார்.

அரண்மனை அந்தப்புரம் களையிழந்து கிடந்தது. மோகனாங்கியின் உள்ளத்திலே உற்சாகமே இல்லை. தனக்காக இத்தகைய கடும்போர் நடப்பது அவளுக்கு வேதனையாய் இருந்தது. இனி வெற்றியும் தோல்வியும் அவளைப் பொறுத்தவரையில் ஒன்றுதான். மதுரை மன்னர் வெற்றி அடைந்து அவரை மணக்கக் கூடியநிலை தனக்கு ஏற்பட்டாலும் அவள் உள்ளம் சந்தோஷப்படப் போவதில்லை.

தந்தையையும் தாயையும் மறந்த ஒரு கசப்பான அனுபவத்திற்குப் பிறகு அவள் விரும்பிய மணாளனை மணந்து கொள்வதில் என்ன சந்தோஷம் இருக்கப் போகிறது? மதுரை மன்னர் தோல்வி அடைந்தாலோ நிச்சயமாகத் தன் தந்தை வேறொருவருக்கு மணம் புரிந்து கொடுத்துவிடத்தான் போகிறார். அதனால் வெற்றியும் தோல்வியும் அவளைப் பொறுத்த வரையில் ஒன்றுதான். அதனால் அவள் எதையுமே நினைக்க முடியாமல் கடவுளை நினைத்து எதை வேண்டுவது என்றுகூடத் தெரியாமல் சித்தம் கலங்கிவிடக் கூடிய ஓர் எல்லையில் நின்றிருந்தாள்.

அவள் சரியாக உணவருந்தி பல நாட்களாகி விட்டன. அவள் இதயத்தை அறிந்துகொள்ளக் கூடிய கமலத்தைப் பற்றிய செய்தி தெரியவேயில்லை. மற்ற பணிப்பெண்கள் ஏதோ கடமைக்காக அவளிடம் பழகி வந்தார்கள். அதுவும் தஞ்சைக் கோட்டையின் முற்றுகைக்குப் பிறகு அவர்கள் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் யுத்தத்தின் முடிவு என்னவாகுமோ என்ற கவலையிலேயே இருந்தனர். அரசியும் எப்பொழுதும் அரங்கநாதர் முன்னிலையில் மண்டியிட்டு தஞ்சைக்கு நல்லது ஏற்படவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டிருப்பதிலேயே காலத்தைக் கழித்து வந்தாள்.

கலகலப்புடனிருந்த மாளிகையில் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் அடுத்து என்ன நேருமோ என்ன நடக்குமோ என்ற பீதி நிறைந்து களையிழந்து காணப்பட்டது. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு விதமான செய்தி வந்து கொண்டிருக்கும். ஒரு சமயம் தஞ்சை வீரர்கள் மதுரைப் படைகளை முறியடித்துத் துரத்திவிட்டனர் என்ற செய்தி வரும். மற்றொரு சமயம் பலத்த தாக்குதலால் ஏராளமான தஞ்சை வீரர்கள் இறந்துவிட்டனர் என்ற சோகச் செய்தியை ஒருவன் வந்து சொல்வான். திடீரென மக்கள் அஞ்சி நடுங்கும் பயங்கர ஓலமும், ஓரிடத்தில் எழும் பீரங்கி முழக்கம் பெரும் அதிர்வேட்டு போல் எழுந்து பூமி அதிர்வது போன்ற சப்தம் கேட்கும். திடீரென்று ஜனங்கள் பீதியுற்று ஓலமிட்டுக் கொண்டே வீதியிலே ஓடும் ஓசை கேட்கும்.

கோயில் மணியோசை ஒலிப்பது நின்று விட்டது. வீதியிலே இரவு விளக்கு ஏற்றப்படுவது கிடையாது. காலைக் கதிரவன் வரும்பொழுது அன்று என்ன நேருமோ எனும் அவலநிலை எல்லோர் மனத்திலும் குடி கொண்டிருந்தது. மீண்டும் மன்னார்தாஸ் திறமை வாய்ந்த படைவீரர்களைச் சேர்த்துக்கொண்டு கோட்டைக்கு வெளியே தாக்குவதற்காகப் புறப்பட்டான்.

மன்னர் விஜயராகவர் அவனைச் சொல்ல வேண்டாம் என்று தடுத்தார். இந்தச் சமயத்தில் கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போவது சரியன்று என்றும் அதற்குப் பதிலாக சிறு பீரங்கிகளை மதிலின் மீது ஏற்றி இடைவிடாமல் அவை நெருப்பைக் கக்கும் வகை செய்யுமாறும் யோசனை கூறினார். மன்னார்தாசுக்கும் அவருடைய யோசனை சரியாகப் படவில்லை என்றாலும் தந்தையின் சொல்லைத் தட்டக்கூடாது என்பதற்காக வெடி மருந்து சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான். அங்கு சென்ற பிறகுதான் அவன் உள்ளத்தில் புதிய உற்சாகம் பிறந்தது. ஏராளமாக சேமித்து வைக்கப் பட்டிருக்கும் வெடி மருந்தைக் கண்டவுடன் அவன் மீண்டும் தந்தையிடம் விரைந்து வந்தான். "அங்கிருக்கும் மருந்துகளை வைத்துக் கொண்டே போரிலே வென்று விடலாம்" என்று கூறி அதற்கான ஒரு திட்டத்தையும் சொன்னான்.

இரவோடு இரவாக ஏராளமாக கையால் வீசி எறியக்கூடிய குண்டுகளைத் தயாரித்துக் கோட்டை மதிலின் மீது இருந்து கொண்டு குறிபார்த்து மதுரைப் படைகள் மீது வீசி எறிவது என்று ஒரு யோசனை. அடுத்தது: வெடி மருந்ததை நிறைய நிரப்பிக் கொண்டு நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியைத் தயார் செய்து கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு வேகமாக ஓட்டி அவை மதுரைப் படைகளின் மத்தியில் போகும்பொழுது, அவ்வண்டி யிலிருக்கும் தஞ்சை வீரன் ஒருவன் படை வீரர்களை நோக்கிக் கைக்குண்டை வீசி வம்புக்கு இழுத்தால் அவர்களும் பதிலுக்கு அந்த வண்டியைத் துரத்துவதற்கு முனைந்துச் சூழ்ந்து கொள்ளும் சமயத்தில், அந்த வண்டிக்குத் தீயை வைத்துவிட்டால் வண்டியிலுள்ள வெடி மருந்துகள் வெடித்து ஏராளமான மதுரை வீரர்கள் சின்னாபின்னமாகி இறந்து விடுவார்கள் என்பது. மன்னார்தாஸ் சொன்ன இந்தத் திட்டம் விஜயராகவருக்குச் சரியெனப்பட்டது.

பீப்பாய்களில் வெடி மருந்தை நிறைய அடைத்து அவைகளைப் பல வண்டிகளில் ஏற்றி பொழுது சாய்ந்தவுடன் அவ்வண்டிகளைக் கோட்டைக்கு வெளியே செல்லுமாறு விடுத்து மதுரைப் படைகள் தங்கியிருக்கும் இடம் வந்தவுடன் வெடி மருந்தைக் கொளுத்தி அவற்றை வெடிக்குமாறு செய்வதற்கான திட்டங்களை உடனே விஜயராகவர் வகுக்கலானார். மளமளவென்று பீப்பாய்களில் வெடி மருந்து அடைக்கப்பட்டது. இனி இதற்கிடையில் மன்னார்தாஸ் கோட்டை மதிலின் மீது ஏறிக்கொண்டு சூழ்ந்து கொண்டிருக்கும் மதுரை வீரர்களை முடிந்தமட்டும் துரத்துவதற்கு அனுமதி அளித்தார்.

மன்னார்தாஸ் தகுந்த வீரர்களை அழைத்து நான்குக் கோட்டை வாயிலின் மீதும் அவர்களை ஏற்றி மறைந்திருந்து கைக்குண்டுகளை வீசி

எறிவதற்கான வழி வகுத்தான். திடீர் என்று தஞ்சைக் கோட்டையின் மீது இருந்து சரமாரியாகக் குண்டுகள் வந்து விழ்ந்தவுடன் மதுரைப் படைகள் சற்றுக் கலகலத்துப் போயின. ஆனால் விதி சதி செய்துவிட்டது. இன்னும் சற்று நேரம் அதே போன்று தாக்குதல் நடந்திருந்தால் மதுரைப் படைகள் புறங்காட்டி ஓடியிருக்கும். ஆனால் அதற்குள் கோட்டை வாயிலின் மீது நின்று கொண்டு தனது வீரர்களுக்கு யோசனைகளை மன்னார்தாஸ் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது எங்கிருந்தோ துள்ளி வந்த அம்பு ஒன்று அவன் மார்பின் மீது பாய்ந்தது. அந்தக் கணமே அவன் அங்கே சாய்ந்து விழ்ந்தான்.

அவன் உடலை மாளிகைக்குள் விரைந்து எடுத்து வந்தபொழுது விஜயராகவர் உயிரற்ற பிணத்தைத்தான் காண முடிந்தது. விஜயராகவரின் இதயமே வெடித்துச் சுக்கு நூறாகி விடும் நிலையடைந்தது. அவர் ஆக்ரோஷத்தோடு எழுந்தார். அப்பொழுது வெளியே பல நூறு குதிரைகள் பூட்டிய வண்டிகளில் வெடி மருந்துப் பீப்பாய்கள் நிரப்பப்பட்டு இருப்பதைக் கண்டார். அவர் உள்ளம் எரிமலையாகி மதுரையையே விழுங்கிவிடும் அளவுக்கு ஆக்ரோஷத்துடன் திகழ்ந்தது. கடைசியாக தனது வீரத்தைக் காட்டி எப்படியாவது மதுரைப் படைகளைப் புறங்காட்டி ஓடச் செய்ய வேண்டுமென்ற ஒரு கோபாவேசத்துடன் வெடி மருந்து நிறைந்த குதிரை வண்டிகளை வெளியே ஓட்டிச் செல்வதற்கான வழி வகைகளைக் கூறுவதற்காக அதன் தலைவர்களிடம் அணுகினார்.

மன்னார்தாஸ் இறந்துவிட்ட செய்தி தஞ்சை முழுவதிலும் ஒரு நொடியில் பரவியதால் மக்கள் எல்லோரும் பீதியுற்றுக் கலங்கி ஒன்றும் புரியாமல் திகைத்தபொழுது வெடி மருந்துப் பீப்பாய்களை ஓட்டிச் செல்வதற்குத் தலைமை வகித்து நின்ற வண்டி ஓட்டி வண்டியை உடனே ஓட்டிச் சென்றான், பயங்கர விளைவையும் எதிர்பாராமல்.

# 52. விஜயராகவர் போர்க்கோலம்

சொக்கநாத நாயக்கருக்கு மதுரையில் இருப்பே கொள்ளவில்லை. படைவீரர்களை அணி அணியாகத் தஞ்சைக்கு அனுப்பிக் கொண்டிருந்தாரே ஒழிய, அவருக்கு எண்ணமெல்லாம் தஞ்சையில்தான் இருந்தது. தானும் படைவீரர்களுடன் ஒருவனாகச் சேர்ந்து தஞ்சைக்குள் சென்று போராட வேண்டுமெனும் அவா துள்ளிக் கொண்டிருந்தது. உண்மையில் போராடும் திட்டம் அவருக்கு இல்லையென்றாலும் தஞ்சைக்குச் சென்றால் எப்படியும் மோகனாங்கியைச் சந்திக்கலாம் என்ற ஓர் எண்ணத்தில் படைகளுடன் செல்ல வேண்டுமென்று அவர் எண்ணினார். ஆனால்,

மந்திரி மண்டலத்தாரின் கண்டிப்பான உத்தரவு மதுரையை விட்டு அவர் செல்லக் கூடாது என்பது. தஞ்சையை வெகு எளிதாகக் கைப்பற்றி வந்து விடலாம் என்று வேங்கட கிருஷ்ணப்பர் தளபதி பதவியைத் தாங்கிச் சில படைகளுடன் மிகவும் அலட்சியமாகத் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டார்.

தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்த பிறகு படையெடுப்பு அவ்வளவு எளிதல்ல எனும் முடிவுக்கு அவர் வந்தார். அதனால் அவசரமாக மதுரைக்கு ஓலை அனுப்பி மேலும் படைகளை வரவழைத்தார். மன்னார்தாஸ் ஆக்ரோஷமாகப் போரிட்ட பொழுது மதுரைப் படைகள் பின்வாங்கி ஓடிவந்ததால் மேலும் ஆயுதபாணிகளுடன் படைகள் வேண்டுமென்று மீண்டும் செய்தி அனுப்பினார்கள். முதல்நாள் செய்தி வந்தபொழுது இளவரசி மோகனாங்கியைச் சிறைபிடித்து வைத்திருப்பதாக சொக்கநாதர் அறிந்து குதூகலமடைந்தார். உடனே மோகனாங்கியைத் தக்க பாதுகாப்பில் அரச மரியாதையுடன் மதுரைக்கு அனுப்புமாறு உத்தரவு அனுப்பினார்.

ஆனால் என்ன நினைத்தாரோ என்னவோ மறு உத்தரவில் வேண்டாம் என்று சொல்லி விட்டார். இரண்டு உத்தரவுகளும் போவதற்கு முன்னமே ரங்கமாதேவியும் சுந்ததேவனும் மோகனாங்கியும் தஞ்சைக்குத் தப்பிச் சென்று விட்டனர். அதைச் சொக்கநாதர் கேள்விப்பட்ட பொழுது தஞ்சைப் பலத்தின் அளவை அறிந்து கொண்டார். அதனால் கிருஷ்ணப்பர் கேட்காமலேயே பீரங்கிப் படைகளுடன் மேலும் திறமை வாய்ந்த வீரர்களைத் தஞ்சைக்கு அனுப்பினார். அனுப்பிய பிறகு தஞ்சையிலிருந்து செய்தியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

தஞ்சைக் கோட்டையின் ஒரு பகுதி வீழ்த்தப்பட்டு வீரர்கள் உள்ளே நுழைந்து விட்டனர் என்ற செய்தி ஒரு நாள் கிடைத்தது. சொக்கநாதரால் மதுரையில் அமைதியாக வீற்றிருக்க முடியவில்லை. தஞ்சைக் கோட்டை வீழ்ந்தது என்றால் அடுத்த கணம் விஜயராகவர் சமாதானம் செய்து கொள்வார்; தன் மகளைக் கல்யாணம் செய்து கொடுப்பதை விட வேறு எந்தவித சமாதான உடன்படிக்கைக்கும் வேங்கட கிருஷ்ணப்பர் ஒப்புக் கொள்ள மாட்டார் என்பது சொக்கநாதருக்குத் தெரியும். அதனால் திருச்சி வரையில் சென்று அங்கே தங்கியிருப்பது எனும் முடிவுக்கு வந்து உடனே திருச்சிராப்பள்ளியை நோக்கிப் புறப்பட்டார்.

திருச்சி வந்து சேர்ந்த பிறகுதான் வெடிமருந்தைப் பயன்படுத்திப் போர் நடக்கும் செய்தியும் விஜயராகவரின் மகன் மன்னார்தாஸ் போர்க்களத்தில் இறந்து விட்ட செய்தியும் சொக்கநாதருக்குக் கிடைத்தது. அப்படியும் விஜயராகவர் பணிந்து விடாமல் போரிட்டுக்

கொண்டே இருப்பது சொக்கநாதருக்கு வியப்பை அளித்தது. தன்னுடைய படைகளின் பலக்குறைவா அல்லது உண்மையிலேயே விஜயராகவர் பலத்த படைகளுடன் கோட்டைக்குள்ளே பதுக்கி வைத்து இருக்கிறரா என்பது புரியாமல் சொக்கநாதர் திருச்சியில் அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

போர் மேலும் கடுமையாகிக் கொண்டிருக்கும் செய்தி கேட்டவுடன் மதுரைப் படைகள் ஆக்ரோஷத்துடன் கோட்டையைத் தவிடுபொடியாக்குவதே தம்முடைய இலட்சியம் என்று மூர்க்கமாகப் போரிட்டுக் கொண்டிருக்கும் செய்தி கிடைத்தவுடன் எப்படியும் இரண்டு நாள்களுக்குள் தஞ்சைக் கோட்டை வீழ்ந்து விடும். விஜயராகவர் ஒன்று அடிபணிவார் அல்லது களத்திலே உயிரை மாய்த்துக் கொள்வார் என்று சொக்கநாதருக்குச் சந்தேகமறத் தெரிந்துவிட்டது, அப்படி ஏதாவது நேர்ந்தால் மாளிகை பழுதுபடாமல் மாளிகையில் உள்ளவர்களுக்கு எந்தவிதத் துன்பமும் நேராமல் குறிப்பாக இளவரசி மோகனாங்கிக்கு எவ்விதக் கஷ்டமும் நேராமல் பாதுகாக்க வேண்டுமென்று கடும் உத்தரவைச் சொக்கநாதர் அனுப்பினார். சொக்கநாதர் எதிர்பார்த்தது போலவே நடந்தது.

நள்ளிரவில் கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு வெடிமருந்து நிறைந்த குதிரை வண்டி பயணப்பட்ட பொழுது விஜயராகவர் திட்டமிட்டபடி மதுரைப் படைகள் அந்த வண்டியின் அருகே வந்து சூழ்ந்து கொள்ளவில்லை. ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று அறிந்ததனால் அவர்கள் அவ்வண்டிக்கு அருகே வராமல் தொலைவிலிருந்துகொண்டே இரண்டு மூன்று தீப்பந்தங்களை வண்டியை நோக்கி வீசினர். விஜயராகவர் போட்ட திட்டம் வேறு; அங்கே நடந்தது வேறு. அந்தத் தீப்பந்தங்கள் வெடி மருந்துப் பீப்பாயின் மீது விழுந்தவுடன் அவை பெரும் பூகம்பம் ஏற்பட்டது போலும், ஆயிரக்கணக்கான மின்னல் மின்னி இடியோசை ஏற்பட்டது போலும். சப்தத்தை எழுப்பி வெடித்து அந்தப் பகுதி பூராவும் சின்னாபின்னமாகுமாறு ஆக்கிவிட்டன.

வண்டிக்காரர்கள் உருத்தெரியாமல் மண்ணோடு மண்ணாகி விட்டனர். கோட்டைக்கு வெகு அருகாமையிலே அந்த வெடிச் சப்தம் ஏற்பட்டதால் கோட்டையின் மதில் சுவரில் பெரும்பகுதி சிதைந்தது. என்ன நடந்தது என்று பார்ப்பதற்குக் கூட ஒருவருக்கும் துணிவில்லாமல் இருளோடு இருளாக நகரமே பயந்து அடங்கி ஒடுங்கிக் கிடந்தது. மேல் மாளிகையின் ஒதுக்குப்புறமாக விஜயராகவர் நின்று கொண்டு தொலைவிலே கொழுந்துவிட்டு எரியும் தீ நாக்குகளைப் பார்த்துக் கண்ணீர் வடித்து கொண்டிருந்தார். அவர்

உறுதியான ஒரு திட்டத்திற்கு வந்து விட்டார். மளமளவென்று அவர் மாடத்திலிருந்து இறங்கி மேலும் வெடிமருந்துகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குச் சென்றார். கடமை நிறைந்த ஊழியர்கள் கவனமாக வெடிமருந்துச் சாலையைக் காவல் புரிந்து கொண்டு நின்றார்கள். அவர்களிடம் ஏதோ தெரிவித்தார். பிறகு அந்தப்புரத்திற்கு விரைந்து வந்தார்.

அரசி கவலையே உருவாக நின்று கொண்டிருந்தாள். அரசிக்கு ஆறுதல் சொல்லி நாளைக்குப் பொழுது புலர்ந்து இரண்டுமணி நேரங்களுக்குள் நம்முடைய சங்கடங்கள் எல்லாம் விலகி விடும் என்று மட்டும் அவர் கூறிவிட்டு பொக்கிஷ அறையை நோக்கி விரைந்து சென்றார். விசுவாசமுள்ள ஓரிரு ஊழியர்களை மட்டும் அழைத்துக் கொண்டு பொக்கிஷத்திலுள்ள பொன்னையும் மணியையும் மற்றும் காலகாலமாக இருந்து வரும் ஆபரணங்களையெல்லாம் பெட்டிகளிலே போடச் சொல்லி அவற்றைத் தூக்கி வரச் செய்தார்.

அந்தப்புரத்தின் கீழ்ப்பகுதிக்கு அவற்றைக் கொண்டு வந்து பெரும் பள்ளம் வெட்டச் செய்து அப்பள்ளத்திற்குள் பொக்கிஷம் முழுவதையும் போட்டு மூடினார். மூடப்பட்ட இடம் தெரியாமல் இருக்கவும் ஏற்பாடு செய்தார். எதற்காக அவர் அப்படிச் செய்கிறார் என்பது மற்றவர்களுக்குப் புரியவில்லை. ஒருவேளை வெற்றியுடன் மதுரை அரசர் வந்தால் அவர் கையில் அவை சிக்கிவிடக் கூடாது என்பதற்காக அப்படிச் செய்கிறாரோ என்ற எண்ணத்தில் அவர்கள் மௌனமாக இருந்தனர். பிறகு வெடி மருந்துச் சாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட வெடி மருந்துகள் அனைத்தையும் பீப்பாயில் நிரப்பி அந்தப்புரத்துக் கீழ்த்தளம் முழுவதிலும் நிரப்பிவிட்டார். பொக்கிஷமும் வெடிமருந்தும் ஒரே இடத்தில் தங்கியிருந்தன.

மேல் மாடத்தில் அந்தபுரப் பெண்கள் எல்லோரும் நாளை நடப்பது என்னவாய் இருக்குமோ என்ற கவலையுடன் அன்ன ஆகாரமின்றி பேய் அறைந்தவர்கள் போல் சோர்வுற்றிருந்தனர். மோகனாங்கிக்கு இந்த உலகத்திலேயே இருப்பது போல் நினைவில்லை. அவள் உள்ளம் இறைவனையே துதித்துக் கொண்டிருந்தது. அவள் என்றோ அந்த முடிவுக்கு வந்து விட்டாள். வெற்றியும் தோல்வியும் ஒரே விதமான முடிவைத்தான் தனக்குக் கொடுக்கும் என்பதால் அவளுக்கு மனத்திலே குழப்பம் ஏற்படவில்லை. எங்கும் சூன்யமும் இருளும் நிறைந்த அரண்மனையை நோக்கி அவள் சென்று கொண்டிருப்பது போன்ற பிரமைதான் ஏற்பட்டது.

விஜயராகவர் அந்த நிசிவேளையில் அவள் அருகே வந்தார். தந்தையைக் கண்டவுடன் உணர்ச்சியற்ற மரக்கட்டையைப் போல்தான்

இருந்தாள் மோகனா. விஜயராகவர் கண்களில் அவரை அறியாமலே ஏனோ நீர் வடிந்து கொண்டிருந்தது.

நெஞ்சு தழுதழுக்க அவர் மோகனாவை நோக்கி, "மோகனா! என் அருமைக் குழந்தாய்! உன் உள்ளத்திலே என்னை நீ சபித்துக் கொண்டிருப்பாய் என்பது எனக்குத் தெரியும். இவ்வளவு பெரிய துன்பம் என்னால்தான் ஏற்படுகிறது என்று நீ கூறுவாய். உயிரிழந்த நூற்றுக்கணக்கான போர் வீரர்களுக்குக் காரணம் நான்தான் என்று நீ முடிவு செய்திருப்பாய். யாரும் அழிக்க முடியாத கோட்டை மதில் சின்னா பின்னமாகியது என்னுடைய நடவடிக்கையினால் தான் என்று நீ உறுதி கொண்டிருப்பாய். நீ இதயத்திலே வைத்து பூஜை செய்து கொணடிருக்கும் மதுரை மன்னருக்கு உன்னைத் திருமணம் செய்து வைத்திருந்தால் இவ்வளவு தொல்லைகளும் வந்திருக்க முடியுமா? வந்திருக்காது. இப்பொழுதுகூட நான் சரியென்று சொல்லிவிட்டால் எல்லாம் சுலபமாக முடிந்து விடும் என்று நீ நினைக்கலாம். மகளே, நான் செய்வது எல்லாம் நல்லதோ கெட்டதோ எனக்குத் தெரியாது. ஆனால் அரங்கநாதர் எனக்குத் தவறான வழியை ஒரு நாளும் காட்டமாட்டார். நான் பூஜித்து வணங்கும் ரங்கமன்னார் ஒரு நாளும் என்னுடைய நடவடிக்கை தவறாகப் போகுமாறு செய்யமாட்டார். அதனால் இந்தக் கடைசி நிமிஷத்தில் நான் எடுத்துக் கொண்டிருக்கும் முடிவு நிச்சயம் தஞ்சையின் பெருமையைக் குலைத்து விடாது என்று எனக்குத் தெரியும். உயர்தரமான பரம்பரையில் வந்த என் பெயருக்கு மாசு ஏற்பட்டுவிட்டது என்பது எனக்குத் தெரியும். நான் உறுதியினின்று ஒரு நாளும் பிறமாட்டேன். சொன்ன சொல்லினின்றும் தவறவும் மாட்டேன். அதனால் என்ன? மோகனா, உன் தந்தை மீது நீ எவ்வளவு பழியைச் சுமத்தினாலும் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் இந்த நாட்டின் நன்மைக்காக நான் செய்ததெல்லாம் சரி என்று நீ ஒரு நாள் நினைக்கும்படி நேரிடலாம். அப்பொழுதாவது தந்தையின் செய்கையை நீ பாராட்டுவாய். உனக்குத் திருவரங்கத்து எம்பிரான் சகல சௌபாக்கியங்களையும் அளிக்கட்டும். உறுதி மட்டும் குலையாமல் நீ இங்கேயே வீற்றிரு" என்று சொல்லிவிட்டு மேலும் ஏதோ சொல்ல முனைந்தார்.

ஆனால் தன் மகள் உணர்ச்சி ஏதும் காட்டிக் கொள்ளாத வெறும் சிலை போல் இருப்பதைப் பார்த்தவுடன் அவருக்குத் தான் எடுத்துள்ள முடிவை அப்பொழுது சொல்லத் தோன்றவில்லை. விதிப்படி எல்லாம் நடக்கட்டும் என்று எண்ணியவராய் அங்கிருந்து சென்றார்.

மறுநாள் பொழுது விடிந்ததும், அவர் தலைமை வகித்து மதுரைப் படைகளை எதிர்க்கப் போகிறார். அந்த யுத்தத்தில் வெற்றியும்

ஏற்படலாம். தோல்வியும் நேரலாம். நிச்சயம் விஜயராகவருடைய எண்ணத்திற்கும் உறுதிக்கும் தோல்வியே கிட்டாது.

அந்த ஓர் உள்ளத் திண்மையுடன் அவர் பொழுது விடிவதற்காகக் காத்திருந்தார்.

பொழுது விடிந்தது. ஆனால் அதில் உற்சாகமில்லை. கோவில் மணிகள் கதிரவனை வரவேற்பதற்காக ஒலிக்கவில்லை. ஏனோ பட்சிஜாலங்கள் கூட கட்டியங் கூறி இளம் பரிதியை வரவேற்க வில்லை. கலகலப்பு மிகுந்த தஞ்சை நகரின் வீதியிலே காக்கை கூட கரையவில்லை. ஆனால், முரசு மட்டும் அதிர்ந்தது. எக்காளமும் முழங்கியது. அரசி கலங்கிய கண்களுடன் ஆரத்திச் சுற்றி நடுங்கும் கரங்களுடன் அவர் நெற்றியில் திலகமிட்டு வழியனுப்பினாள். வெண்புரவி மீது விஜயராகவர் ஏறிக்கொள்ள, அவரைத் தொடர்ந்து அவருடைய மெய்க்காவலர்கள் சொற்பப்படைகளுடன் உறுதியுடன் கோட்டைவாயிலை நோக்கி முன்னேறிச் சென்றனர்.

மதுரை வீரர்கள் தந்திரம் மிக்கவர்கள். முதல்நாள் இரவு வெடிமருந்தினால் இடிபட்டு வீழ்ந்திருந்த கோட்டைச் சுவர்களின் இடைவெளியின் வழியாக நகருக்குள் புகுந்திருக்கலாம். ஆனால் அவர்கள் ஏனோ மதிலின் அருகில்கூட வரவில்லை. விஜயராகவர் கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு உருவிய கத்தியுடன் விரைந்துப் பாய்ந்தார். இவ்வளவு நாள் இல்லாத வானம் அன்று இருண்டது; ஆனால் மழையைப் பொழிவதற்காக அன்று.

போர்க் களத்திலே எழுந்த தூசிகள் ஆகாயத்திலே சென்று வெளிச்சத்தை மறைத்தன. இவ்வளவு நாள் இல்லாத மின்னல் 'பளீர் பளீர்' என்று மின்னியது. ஆனால் மேகங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் ஏற்பட்டதன்று; இருபுறத்து பீரங்கிகளின் வெளிச்சம் தான் அது. மழை பெய்யவில்லை. ஆனால் ஒவ்வொரு வீரர்களின் இதயத்திலிருந்தும் குருதி பீரிட்டு வீசியது. மண் மழையால் நனையவில்லை. இரு தரப்பு வீரர்களின் சாய்ந்த உடலினின்று பொங்கி வழிந்த ரத்தத்தால் நனைந்தது. தஞ்சைப் படைகளில் பெயருக்குக் கூட ஒருவரைத் தேடிப்பிடிக்க முடியாமல் தஞ்சை மண்ணிலேயே வீழ்ந்து இறந்தனர். படைகள் நிர்மூலமானதைக் கண்ட விஜயராகவர் விரைந்து கோட்டைக்குள்ளே திரும்பினார்.

கோட்டைக் கதவைச் சாத்தவில்லை. கோட்டை வாயிலுள்ள வீரர்களை உடனே நீங்கள் தப்பிப் பிழைத்துப்போங்கள் என்று உத்தரவிட்டார். அவர் நேராக அந்தப்புரத்தை நோக்கி விரைந்தார். போர்க்களத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடிவரும் ஒரு மன்னர் வீரம் உடையவரா? ஆனால் உயிர் பிழைத்துக் கொள்ள விஜயராகவர் ஓடி

வரவில்லை. அவர் முதல் நாளே தீட்டி வைத்திருந்த திட்டத்தின் மறுபகுதியை நிறைவேற்றுவதற்காகத் தான் அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் உள்ளத்திலே தோல்வி இல்லை. ஆனால் அதற்கு மாறாகத் திடமான உறுதியிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் அவர் மிகப்பெரிய வெற்றி வீரராகத் திகழப் போகிறார். தோற்றுப்போன விஜயராகவர் என்று அவரைச் சரித்திரம் இகழ்ந்து கூறப் போவதில்லை.

# 53. மதுரை மன்னர் திருமணம்

தஞ்சைக் கோட்டை வீழ்ந்து விட்டது எனும் செய்தி சொக்கநாதருக்கு எட்டியது. அவர் அந்தச் செய்தியை எதிர்பார்த்துப் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தார். ஒரே மூச்சில் செல்லக்கூடிய குதிரைகள் இரண்டு ஆயத்தமாக இருந்தன. தஞ்சையை அடைந்து, விரைந்து மாளிகைக்குச் சென்று, மோகனாவைக் காணவேண்டுமெனும் பேரார்வம் அவரை அணைத்துக் கொண்டது - அவரை உந்தியது.

தஞ்சைக் கோட்டையை அவர் அடையும்போது போரினால் ஏற்பட்ட இடிபாடுகளைக் கண்டார். மிகவும் உக்கிரமாகத்தான் யுத்தம் நடந்திருக்க வேண்டுமென்பதை அவை புலப்படுத்தின. மதில் சுவர்கள் இடிந்துச் சிதைந்து கிடந்தன. நகரம் வெறிச்சோடிக் கிடந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் எதற்காக விரைந்து ஓடி வந்தாரோ - எந்த இடத்தில் சென்று யாரைக் காண வேண்டுமென்பதற்கு விரைந்து வந்தாரோ - அந்த இடத்தை அடைந்த பொழுது அவர் திடுக்கிட்டுச் சில நிமிடங்கள் ஒன்றும் பேச முடியாமல் விக்கித்துப் போய் நின்றார்.

தோற்று ஓடிவந்த விஜயராகவர் அந்தப்புரத்திற்கு விரைந்து சென்று ராஜகுலத்துப் பெண்களையும் ராணியையும் மேலும் அரச குலத் தொடர்பு உடையவர்களையும் மேல் மாடத்திற்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். பணிப்பெண்கள் அனைவரையும் அழைத்து அவரவர்களை விரைந்துத் தத்தம் சொந்த ஊர்களுக்குச் செல்லுமாறு கூறி கைநிறையப் பொற்காசுகளை அவர்களிடம் கொடுத்தனுப்பினார். அவர்கள் திகைத்து 'ஏன் இப்படி அரசர் செய்கிறார்' என்று புரியாமல் நின்றபோது அவர்களை நோக்கி, "அரச கட்டளை இது! உடனே இங்கிருந்து வெளியேறிச் செல்லுங்கள். அப்படி யாராவது என் உத்தரவுக்குப் பணியாதிருந்தால் அவர்களுக்குத் தக்க தண்டனை நான் அளிக்கத் தயங்க மாட்டேன்" என்று கர்ஜித்தார் அரசர்.

அரசருடைய போக்கு அவர்களுக்குப் பிடிபடவில்லை. இருந்தாலும் அரச கட்டளையைத் தட்ட முடியாமல் அங்கிருந்து அவர்கள் சோர்ந்த உள்ளத்துடன் பிரிய முடியாத வேதனையுடன் அகன்றனர். அந்தச்

சமயம் பார்த்து எங்கிருந்தோ கமலம் ஓடிவந்து சேர்ந்தாள். அவள் தொலைவில் வருவதைப் பார்த்த அரசர் உடனே திரும்பிச் செல்லுமாறு அவளுக்குக் கட்டளை இட்டார். ஆனால், அவள் பிடிவாதமாக மோகனாவைச் சந்தித்துத்தான் ஆகவேண்டுமென்று கூறவும். அவளுடைய மன நிலையையும் அவள் தோற்றத்தையும் கண்டு மோகனாவின் உயிர்த் தோழியாதலால் அவளைத் தடுக்காமல் மோகனாவிடம் செல்ல அனுமதித்தார். அத்துடன் மோகனாவை அழைத்துக் கொண்டு மேல் மாடத்திற்குச் செல்லுமாறும் பணித்தார்.

வெளியே மதுரைப் படைகள் பயங்கரக் கூச்சலிட்டுக் கொண்டு மாளிகையைச் சூழ்ந்து கொள்வது அவருக்குத் தெரிந்தது. கடைசி நிமிடம் வரைஅவர்களைத் தடுத்து நிறுத்திப் போராடுமாறு தன் மெய்க் காவல் படைகளுக்கு அவர் கட்டளையிட்டிருந்தார். அங்குப் பலத்த தாக்குதலும் எதிர்த்தாக்குதலுமாக நடந்து கொண்டிருக்கும் பொழுது விஜயராகவர் கடைசி முறையாக மோகனாவைக் காண வேண்டுமென்ற எண்ணத்துடன் மேல்மாடத்திற்குச் சென்றார்.

மோகனாவை பார்த்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்த கமலத்தை அங்கிருந்துச் சற்று விலகிப் போகுமாறு சைகைக் காட்டிவிட்டு மோகனாவை தன் அருகே அழைத்த அவருக்கு எங்கிருந்தோ இவ்வளவு நாள் இல்லாத வாஞ்சை பொங்கி வந்தது. கண்ணீர் விட்டு அறியாத அவர் கண்கள் தாரை தாரையாக நீரைப் பொழிந்தன.

ஆனால், சலனமற்றிருந்த மோகனாவின் முகத்தில் அப்பொழுது ஒருவிதப் பிரகாசமே ஏற்பட்டது. "நமது படைகள் என்னவாயின அப்பா?" என்று அவள் கேட்டாள். விஜயராகவர் சோர்ந்த குரலில், "என்னுடைய கோபாவேசத்திற்கு இரையாகித் தங்களது முடிவை வெகு சீக்கிரத்திலேயே அவை தேடிக் கொண்டன. அடுத்த பிறவியில் அவர்களுடைய ஆவிகள் வந்து என்னைப் பழி தீர்த்துக் கொள்ளத் தயங்கமாட்டா" என்று அரசர் சோகம் நெஞ்சை அடைக்கப் பேசினார்.

"நமது படைகள் தோற்றுவிட்டால் மதுரைப் படைகள் இப்பொழுது உள்ளே வந்துவிடும் அல்லவா?" என்று மோகனா கேட்டாள். விஜயராகவர் அதற்குப் பதில் சொல்லாமல் தொலைவிலே நேருக்கு நேர் வாளோடு வாள் மோதிக் கொண்டு போரிடும் படைகளை அவளுக்குக் காட்டினார். அதை எட்டிப் பார்த்து கை தட்டிச் சிறுகுழந்தை போல் குதித்த மோகனா, "அப்படியானால் மதுரைப் படைகள் இன்னும் சீக்கிரத்தில் இங்கே மாளிகைக்கு அருகே வந்துவிடும் அல்லவா?" என்று கேட்டாள்.

சோக நிலையிலும் விஜயராகவருக்குச் சற்றுக் கோபம் இழைகாட்டியது. மேலும் மோகனா தொடர்ந்து, "மதுரைப்

படைகளுடன் மதுரை மன்னரும் வருவார் அல்லவா?" என்று கேட்டவுடன், விஜயராகவருக்கு அந்த நிலையிலும் ஆத்திரம் பொங்கியது.

அவர் அங்கு வந்ததோ வேறு காரியத்திற்காக, தனது மகளைக் கண்டு கடைசியாக ஆறுதல் கூறிவிட்டு அவளுடைய அபிலாஷையை நிறைவேற்ற முடியாமல் மனம் உடைந்து, நொந்து போகச் செய்ததற்கு வருத்தம் தெரிவித்தும் தனது பிடிவாதத்தால் நகரமே பாழடைந்து போகுமாறு செய்ததற்குத் தன்னை மன்னிக்குமாறு வேண்டிப் பேசிவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தார். மகளுடைய மனோநிலை அவருக்கு மீண்டும் ஒருவிதக் கோபத்தை அளித்தது.

"ஆம், அதோ வருகிறான் மதுரை மன்னன். வேலைக்காரன் பரம்பரையில் உதித்து, பாண்டிய சிங்காதனத்தில் அமர்ந்துள்ளவன். தஞ்சை அரசன் மகளை மணந்து, பெரும் சக்கரவர்த்தியாக உலகுக்குப் பறைசாற்றிக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு அதோ வருகிறான்" என்று கேலி நிறைந்த குரலில் அவர் கூறினார்.

மோகனா இன்னும் சிறு குழந்தையாகிவிட்டாற் போல் தோன்றுகிறது.

"அப்பா, மன்னர் வருகிறாரா? அப்படியென்றால் அவருக்கு என்னை மணம் செய்து கொடுத்து விடுவீர்கள் அல்லவா? அவர் தோல்வியுற்ற அரசரை சிறையில் அடைக்கமாட்டார். நல்ல குணம் படைத்தவர். என்னை அவருக்கு மணம் செய்து கொடுத்தால், அவர் மீண்டும் தஞ்சை அரசை உங்களுக்கே கொடுத்து விடுவார் இல்லையா?" என்று கூறியவுடன், விஜயராகவர் மகளுடைய மனநிலை மீது அவநம்பிக்கை கொண்டு மேலும் அவளை இதே போல் பேசவிட்டால் தன்னுடைய கோபம் உச்சநிலையை அடைந்து வேறு விதமாகக் காரியம் முடிந்தாலும் முடிந்துவிடும் என்ற பயத்தால் அங்கே அதற்கு மேல் நிற்க விரும்பாமல், "ஆமாம்; மதுரை மன்னர் இங்கு வருவார், உன்னை அவர் மணம் செய்து கொள்வார். நீங்கள் இருவரும் காலாகாலத்திற்கு இந்த உலகத்தில் நிம்மதியாக வாழ்ந்து ராஜாவாகவும் ராணியாகவும் காலத்தை கழிக்கப் போகிறீர்கள். என் ஆசீர்வாதங்கள்" என்று ஆத்திரமாகக் கூறிவிட்டு மகளுடைய முகத்தைக் கூடத் திரும்பிப் பார்க்காமல் மளமளவென்று கீழே இறங்கி ஓடினார்.

அவர் உடலிலே புதுவிதத் தெம்பு நிறைந்திருந்தது. அவர் காதுகளில் எந்தவித ஒலியும் விழவில்லை; தன்னைத் தொடர்ந்து ஓடிவரும் ராணி அழைக்கும் குரல் கேட்கவில்லை; தன் சகோதரன் ஏதோ விபரீதமான செயல் புரியப் போகிறான் என்பதை அறிந்து அவனைத் தடுக்க ரங்கமாதேவி கூவியவாறு வருவது கேட்கவில்லை; மாளிகைக்குள்ளே நுழைந்து ஓடிவரும் மதுரை படைகளின் அட்டகாசச்

சிரிப்பு கேட்கவில்லை. குற்றுயிராய்க் கிடக்கும் படைவீரர்களின் மரண ஓலம் அவர் செவிகளில் விழவில்லை. அவர் குறிப்பிட்ட இடத்தை நோக்கி விரைந்தார். அந்த மாளிகையின் நடுக்கூடத்தில் இருபது அடி நீள அகலத்திற்கு ஒரு சுரங்கப்பாதை தெரிந்தது. அதனுடைய மேல் கதவு திறக்கப்பட்டிருந்தது. விஜயராகவர் அதற்குள்ளே இறங்கினார்.

சிறிது நேரம் கழித்து அவர் வெளியே வரும்பொழுது கையில் நீண்டதொரு திரி இருந்தது. அது பூமிக்கு அடியிலிருந்து சுரங்கப்பாதை வழியாக மேலே வந்து நடுக்கூடத்தில் சிங்காதனத்துக்கு அருகே வந்து முடிந்தது. இப்பொழுது விஜயராகவர் வேறு எங்கோ ஓடினார். அவர் திரும்பி வரும்பொழுது கையிலே அகல் விளக்கு ஒன்று இருந்தது. அந்தத் திரிக்கு அருகில் அந்த அகல் விளக்கை வைத்துக் கொண்டு சிறிது நேரம் கண்ணை மூடி ரங்கநாதரையும் மன்னார் குடியில் இருக்கும் ராஜகோபாலனையும் தியானித்துக் கொண்டு அந்தத் திரியின் அருகே விளக்கை வைத்தார். விளக்கிலிருந்து நெருப்பு திரியின் வழியாக மெல்ல நர்த்தனமாடிக் கொண்டே சென்றது. சுறுசுறு என்று அது எழுப்பும் ஒலி விஜயராகவருக்குப் பெரும் ஆனந்தமாக இருந்தது.

விஜயராகவர் அந்தத் திரி பற்றி எரிந்து ஓடும் வழியுடனே சென்றார். அது சுரங்கப் பாதைக்குள் சென்றது. சில வினாடிகள் கழிந்திருக்கும், அவ்வளவுதான். பிறகு அங்கே என்ன நடந்தது என்று சொல்வதற்கு அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. பூமி தேவியே மிகக் கோபம் கொண்டு அந்த மாளிகையைச் சுக்கல் சுக்கலாகப் பிளந்து போகுமாறு செய்தாளா? கோடிக்கணக்கான மின்னல் சுரங்கப் பாதையின் வழியாக வெளியே வந்துத் தாக்கி அந்த மாளிகையைச் சின்னாபின்னமாக்கியதா? அந்த மாளிகையில் அரச குலத்து வேந்தர்கள் இருந்தனர் என்பது அந்த மின்னலுக்கும் பூமிதேவிக்கும் தெரியாதா? தஞ்சை நாட்டின் அரசி இங்கே இருக்கிறாள் என்பது அந்த அகோரமான சம்பவத்தை ஏற்படுத்திய அந்த விதி அரக்கனுக்குத் தெரியாதா? தஞ்சையின் மன்னர் விஜயராகவர் சுரங்கவாயிலில் கைகட்டி கண்ணை மூடிக்கொண்டு நின்றிருக்கிறார் என்பதும் தெரியாமல் போய்விட்டதா? மேல் மாடத்தில் பச்சைக் குழந்தைபோல் சிரித்துக் கொண்டு தனக்குத்தானே ஏதேதோ பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் தன்னை மறந்த நிலையில் இருக்கும் வல்லத்து இளவரசி மோகனாங்கி நின்றிருப்பது தெரியாமலா போயிருக்கும்? பளிங்கு களினால் ஆன பெரும் தூண்களும் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய விதானங்களும் உருக்கினால் வார்த்து மேல்கூரை தாங்குவதற்காக அமைக்கப்பட்ட சட்டங்களும், லஸ்தர் விளக்குகளும், உயரமான கம்பங்களும், மேல்மாடத்திலே கம்பீரமாக விளங்கிய கலசங்களும், ஏன் - அந்த அழகான மாளிகையே சில நிமிடங்களில் தவிடுபொடியாகி விட்டது.

பேரிடி இடித்து மின்னல்போல் வெளிச்சம் உண்டானதுதான் மற்றவர்களுக்குத் தெரியும். பிறகு நேர்ந்ததோ சர்வநாசம். யாரும் எதிர்பாராத அளவு நாசம். அந்தப் பூமிக்கு அடியிலே வைக்கப் பட்டிருந்த ஏராளமான வெடி மருந்து தனது பசியை நொடியிலே தீர்த்துக் கொண்டது. அழகிய வேந்தர் என்று பார்க்கவில்லை. அரசி என்று பார்க்கவில்லை. மதுரை மன்னருக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மோகனாங்கி என்றும் அது காணவில்லை. தனது பிடிவாத குணத்தை மாற்றாமல் தனது உறுதியை நிலைநாட்டிய பெரும் அரசர் விஜயராகவர் அந்த மாளிகையிலே இருக்கிறார் என்றுகூடப் பார்க்காமல் மண்ணோடு மண்ணாக அவர்கள் அனைவரும் கலந்து போகுமாறு வெடிமருந்து செய்துவிட்டது.

எல்லாம் முடிந்துவிட்டது. அது முடிந்த பிறகே கந்ததேவன் ஆக்ரோஷத்துடன் சிறு படையை - நல்ல பலம் பொருந்திய படையை திரட்டிக் கொண்டு ஓடி வந்திருந்தான். ஆனால், விதி அவனை முந்திக் கொண்டுவிட்டது. இன்னும் சிறிது நேரத்திற்கு முன்பு வந்திருந்தால் அவன் படைகள் மதுரைப் படைகளை முறியடிப்பதில் முனைந்திருக்கும். கந்ததேவன் ஓடிச் சென்று விஜயராகவர் மனத்தை மாற்ற முனைந்திருக்கலாம். பெரும் வெடிவிபத்து ஏற்பட்டு சர்வநாசமாகாதபடி செய்திருக்கலாம். அப்படி இல்லாவிடில் மோகனாங்கியையாவது விபத்திலிருந்து மீட்டு அவளைத் தப்பித்து வெளியே கொண்டு சென்றிருக்கலாம்.

ஒருவேளை விதியின் கோரப்பிடி வேறுவிதமாக இருந்திருந்தால் அவனது அபிமான பெண்ணான ரங்கமாதேவி வருவதற்குச் சற்று முன்பு அந்த மாளிகைக்கு வந்திருந்தால் அந்த வெடிவிபத்தில் உயிரிழந்த ரங்கமாதேவியோடு சேர்ந்து அவன் உயிரிழந்து இருக்கலாம். அது இந்த உலகத்தில் ஒருவேளை பொருத்தமாகக் கூட இருந்திருக்கும். அவன் உயிருக்கு உயிராக நேசித்த ரங்கமாதேவி அந்தப் பெரும் இடிபாடுகளுக்கிடையே எங்கே கிடக்கிறாளோ? கந்ததேவனால் அந்தக் கோரக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நிற்க முடியவில்லை. அவனுடன் வந்திருந்த வீரர்கள் வடிவிலிருந்த கள்வர் படையினரும் அந்த மாபெரும் பயங்கர வெடி விபத்தைக் கேட்டு கண்டு மூர்ச்சை அடைந்தவர்களாகவும் நடுநடுங்கியவர்களாகவும், சோர்வுற்ற வர்களாகவும், திகைத்தவர்களாகவும், பீதியடைந்தவர்களாகவும், ஒன்றும் புரியாது, தங்களுடைய வீரமும் வீழ்ந்து போய்விட்டதோ என்றும் புரியாது நின்று கொண்டு இருந்தார்கள். ஆனால், அவர்களையெல்லாம் விட உடைந்த இதயத்துடன் ஒருவரும் அங்கு நின்றிருந்தார்.

அந்தக் கோரக் காட்சியைப் பார்த்துத்தான் மதுரை மன்னர் தன் நிலை மறந்து ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்தார். கோபுரம் போல் கிடக்கும் இடிபாடுகளுக்கிடையே அவர் யாரைத் தேட முடியும்? யாருக்காக அவர் இவ்வளவு பெரும் யுத்தத்தை நடத்தினாரோ அந்த மாதரசி அங்கே அந்தப் பெரும் மட்குவியலுக்கு இடையில் உடல் நசுங்கி - உருக்குலைந்து கிடக்கிறாளோ? சொக்கநாதரால் எதுவுமே செய்ய முடியவில்லை. அவர் உடல் குலுங்கியது.

கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. சற்று முன்பு அந்த மாளிகையிலிருந்த அனைவரது விழிகளிலிருந்தும் பெருகிய நீரைவிட அது ஒன்றும் முக்கியமானதல்ல. தனது சுயநிலையை அடைந்த சொக்கநாதர் மேற்கொண்டு இதயம் வெடித்து நிய நினைவுகொண்டு மனம் பேதலித்துப் போக விரும்பாமல் அங்கிருந்துப் புறப்பட்டார். அவரைத் தொடர்ந்த வெற்றிப் பெருமிதத்துடன் தளபதி வெங்கடகிருஷ்ணப்பர் வந்தார். அவரை நெருங்கிய பொழுது வெங்கடகிருஷ்ணப்பர், "நகரத்தை யாரிடம் ஒப்படைப்பது?" என்று கேட்டார். சொக்கநாதர் மிகவும் சோர்வு நிறைந்த குரலில், "எவ்வளவோ கஷ்டங்கள் பட்டு எதைப்பெற விரும்பி வந்தோமோ அதை அடைய முடியாமல் நாம் போய் விட்டோம். அதனால் இந்தத் தோல்வி பூமி நமக்கு வேண்டாம். மதுரைக்குப் போன பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு மௌனமாகக் குதிரையைத் தட்டினார்.

தஞ்சையிலிருந்து வல்லம் செல்லும் சாலையிலிருந்துப் பார்த்தால் ஒரு காலத்தில் தஞ்சையின் அழகிய மாளிகை கம்பீரமாகக் காட்சி அளிப்பது தெரியும். ஆனால், ஒரு முறை அப்பொழுது திரும்பிப் பார்த்த சொக்கநாதர் கரும்புகை வானத்தை ஓட்டிச் செல்வதையும் சோக நகரமாக அந்த அழகிய பட்டணம் காட்சி அளிப்பதையும் பார்த்துப் பெரு மூச்சுவிட்டார். எழுந்த புகைமண்டலத்தினிடையே அழகிய வடிவுடன் - வானுக்கும் பூமிக்கும் எட்டும்படியான தோற்றத்துடன் - மோகனாங்கி தஞ்சை நகரத்திலிருந்து மெல்ல மெல்ல மேலே போய்க் கொண்டிருக்கும் காட்சி அவர் கண்ணுக்குத் தெரிந்தது. அவரால் குதிரை மீது அமர்ந்து இருக்க முடியவில்லை. 'மோகனா, மோகனா' என்று உரத்த குரலில் கூவினார்.

குதிரையிலிருந்து கீழே குதித்தார். ஏதோ வெறி பிடித்தவர் போல் வந்த வழியே திரும்பி தஞ்சை மாளிகை இருக்கும் இடம் நோக்கி ஓடினார். ஆனால், அருகிலிருந்த மற்றவர்கள் அவரை அவ்வளவு இலேசில் விட்டு விடுவார்களா? அவர் எதிர்பார்த்த லட்சியம் கைகூடாமல் போனாலும் அதோ கண்ணெதிரே தோன்றும் கன்னிமலர் மோகனாவின் அழகிய வடிவத்துடன் கைகோத்துக்கொண்டு

மேலுலகத்தை அடைந்து அவளை மணம்புரிந்து வாழ எண்ணும் சொக்கநாதருடைய எண்ணத்தை அவர்கள் அவ்வளவு எளிதில் நிறைவேற்ற விடுவார்களா? அவர் மதுரையில் இனி செய்யவேண்டிய கடமைகள் ஏராளமாக உள்ளனவே, வேங்கடகிருஷ்ணப்பரும் மற்றவர்களும் அவரோடு தொடர்ந்து சென்று அவரது இரு கரங்களையும் அழுத்தமாகப் பிடித்து நிறுத்தினார்கள். வெகு நேரம் வரையிலும் மோகனாவின் அழகிய வடிவம் மேலே மேலே சென்று கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றார். அந்த உருவம் வானுலகத்தை எட்டிப் பிடிக்கும் வரையில் அவர் பார்த்தாரோ, என்னவோ! நீண்டநேரம் கழித்து நிமிர்ந்த தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு பெருமூச்சு விட்ட வண்ணம் திரும்பினார்.

தஞ்சையில் தான் பெற்ற வெற்றி, வெற்றியாகவே சொக்கநாத நாயக்கருக்குத் தோன்றவில்லை. அவர் கண்ணெதிரே வானுலகை நோக்கிச் சென்ற கன்னிமலர் மோகனாவின் வடிவமே பல நாட்கள் வரையில் தோன்றிக் கொண்டிருந்தது. வேறு எந்தவித வேலைகளிலும் அவர் கவனத்தைச் செலுத்தாமல் அவள் நினைவாகவே இருந்தார்.

தஞ்சை வெற்றி முத்துக்குமரன் செவிகளிலும் விழுந்தது. அவன் படுத்த படுக்கையாக இருந்தான். அவன் அருகே அவன் தாயார் அல்லும் பகலும் கண் விழித்திருந்து அவன் உயிர் பிழைப்பதற்காக மீனாட்சி சுந்தரேச்வரரை வேண்டிக் கொண்டிருந்தாள். குடந்தை யிலிருந்து பூக்காரரும், அவருடைய மகளும் மதுரைக்கு வந்துவிட்டனர். அவளும் அங்கே கவலையுடன் இருந்தாள். சோதிடர் மகளோ வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் அன்றாடச் செய்தியை மட்டும் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

சில நாட்களில் முத்துக்குமரனுக்கு உடல் பூரணமாகக் குணமடைந்தது. அவன் அரசர் சொக்கநாதரைக் காணச் சென்றான். செவ்வந்தியும், அவனுடைய காதலியும் அரசனைக் காண வந்திருந்தனர். முத்துக்குமரன், செவ்வந்தி, குறத்தி வேடம் பூண்டு தஞ்சை சென்று தப்பி வந்த அவன் காதலி அனைவருடைய சேவைகளையும் அரசர் மிகவும் பாராட்டினார். குறிப்பாக முத்துக்குமரனுடைய வீரத்தையும், சேவையையும் பாராட்டினார். அவனைச் சீக்கிரமாகத் திருமணம் புரிந்து கொள்ளுமாறும் கூறினார்.

செவ்வந்தியுடன் வீட்டிற்கு வர, முத்துக்குமரன், தன் தாயிடம் நடந்தவற்றைக் கூறினான். பூக்காரர் மகள் வடிவும் சோதிடர் மகளும் அப்போது அங்கு வந்திருந்தனர்.

முத்துக்குமரனை மணம் புரிந்து கொள்ளுமாறு அரசர் கூறிய செய்தியை செவ்வந்தி அங்கே விவரித்தாள். முத்துக்குமரன் தாயும் சோதிடர் மகளும், பூக்காரர் மகளும் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

முத்துக்குமரன் சொன்னான்: "எங்கள் மன்னர், கன்னி மலராகவே காய்ந்துக் கருகிப் போன வல்லத்து இளவரசி மோகனாவை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறார். அவர் என்று திருமண நினைவை அடைந்து மணம் புரிந்து கொள்கிறாரோ அன்றுதான் நான் திருமணத்தைப் பற்றி நினைப்பேன்."

இதைக் கேட்டு அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். சோதிடர் மகள் ஏமாற்றமடைந்த உள்ளத்தோடு வீட்டிற்குப் போய்விட்டாள்.

ஆனால், வடிவோ நிறைந்த உள்ளத்துடன், "மதுரை மன்னர் சொக்கநாத நாயகர் விரைவில் திருமணம் செய்து கொள்ள மதுரைக் கோயிலில் வீற்றிருக்கும் தேவி அங்கயற்கண்ணி சொக்கநாதா அருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்.

(முற்றும்)

# விக்கிரமன்



[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

[illegible]